# சோலைக் குயில்

## கோகிலா மகேந்திரன்
## மணிவிழாச் சிறப்பு மலர்



தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் வெளியீடு

2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோலைக் குயில்

எழுத்தாளர், சீர்மியர், இலக்கிய கலாவித்தகர்
நாடக கலாவித்தகர், கலைச்சுடர்
திருமதி.கோகிலா மகேந்திரன் அவர்களின்

## மணிவிழாச் சிறப்பு மலர்

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் கள வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | சோலைக் குயில்<br>கோகிலா மகேந்திரன் மணிவிழாச் சிறப்பு மலர் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - 2010 ஒக்டோபர் |
| அச்சு | : | குளோபல் கிறெபிக்ஸ்<br># 14. 57வது ஒழுங்கை<br>வெள்ளவத்தை,<br>கொழும்பு - 6 |
| வெளியீடு | : | தெல்லிப் பழைக் கலை இலக்கியக் களம் |
| உரிமை | : | கலாநிதி.ம.பிரவீணன் |
| பக்கங்கள் | : | 235 + VII |
| விலை | : | 600/= |

| | | |
|---|---|---|
| Title | - | *Solaik Kuyil*<br>*Kohila Mahendran's Manivizha Special Volume* |
| Edition | - | *1st Edition - October 2010* |
| Printing | - | *Global Graphics*<br>*# 14, 57th Lane, Wellawatta,*<br>*Colombo - 6.* |
| Publishers | - | *Lyceum of Literary and Aesthetic studies, Tellippalai* |
| Copy rights | - | *Dr.M.Piraveenan* |
| Pages | - | 235 + VII |
| Prize | - | *600/=* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## பகுதி - I - குயிலின் பார்வையில் சோலை


| | | |
|---|---|---|
| அணிந்துரை | ..... | VI |
| சிறுகதை | ..... | 3 |
| கவர்ந்த எழுத்தாளர் | ..... | 7 |
| கவிதை | ..... | 10 |
| பயணக் கட்டுரை | ..... | 12 |
| விஞ்ஞானக்கதை | ..... | 20 |
| குழந்தைக் கவிதை | ..... | 22 |
| மாணவருக்கான விஞ்ஞானக் கட்டுரை | ..... | 23 |
| மருத்துவக் கட்டுரை | ..... | 25 |
| பேட்டிகளில் பதில்கள் | ..... | 28 |
| உருவகம் | ..... | 36 |
| கண்ணீர அஞ்சலி | ..... | 37 |
| வரவேற்புரை | ..... | 38 |
| நடைச்சித்திரம் | ..... | 40 |
| நூல் விமர்சனம் | ..... | 42 |
| உளவியல் கட்டுரை | ..... | 45 |
| மல்லிகை அட்டைப்படக் கட்டுரை | ..... | 48 |
| பதிப்புரை | ..... | 51 |
| அணிந்துரை | ..... | 53 |
| தினகரன் தொடர் | ..... | 56 |
| ஆய்வுக் கட்டுரை வாசிப்பு - (விஞ்ஞானம்) | ..... | 58 |
| ஆய்வுக் கட்டுரை வாசிப்பு - (இலக்கியவிழா) | ..... | 62 |
| கவிதை அனுபவநிலை | ..... | 67 |
| வானொலி சைவ நற்சிந்தனை | ..... | 69 |
| சீர்மியக் கட்டுரை | ..... | 71 |
| ஆசிரியர் பற்றிய மனப்பதிவு | ..... | 74 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நாடகம் | ..... | 84 |
| ஓர் இழவிரக்கம் | ..... | 92 |
| சுய சரிதையின் பகுதி - அப்பா | ..... | 94 |
| சுய சரிதையின் பகுதி - அம்மா | ..... | 101 |
| பின்னுரை | ..... | 103 |
| தெருக் கூத்து விமர்சனம் | ..... | 105 |
| பெண்கள் பற்றிய ஒரு தொடர் | ..... | 107 |
| குறுநாவலின் ஒருபகுதி | ..... | 109 |
| வரலாறு | ..... | 113 |
| வாழ்த்துரை | ..... | 115 |
| சமயக் கட்டுரை | ..... | 118 |
| கற்பனைச் செவ்வி | ..... | 123 |
| மகனுக்கான பேச்சு | ..... | 125 |
| உரைச்சித்திரம் | ..... | 127 |
| விமர்சனத்துக்கு ஒரு விமர்சனம் | ..... | 132 |
| பாடக் குறிப்பு | ..... | 135 |


## பகுதி - II - சோலையின் பார்வையில் குயில்


| | | |
|---|---|---|
| புலவர். ம.பார்வதி நாதசிவம் | ..... | 139 |
| செல்வி.சற்சொருபவதி நாதன் | ..... | 140 |
| மாணவி K.V | ..... | 142 |
| கவிஞர்.செ.கதிரேசர்பிள்ளை | ..... | 143 |
| பண்டிதர்.க.சச்சிதானந்தன் | ..... | 144 |
| பேராசிரியர். தயாசோமசுந்தரம் | ..... | 147 |
| பேராசிரியர். எஸ்.சிவலிங்கராஜா | ..... | 150 |
| திருமதி.சிவமலர் சுந்தரபாரதி | ..... | 153 |
| திரு.த.சிவகுமாரன் | ..... | 157 |
| முரசொலி.சிவராஜா | ..... | 160 |
| தெ.து.ஜெயரத்தினம் | ..... | 161 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ.சுந்தரலிங்கம் ..... 162

எஸ்.சண்முகராஜா ..... 163

வைத்திய கலாநிதி எஸ்.சிவசங்கர் ..... 164

ஆ.கமலநாதன் ..... 165

பேராசிரியர்.அ.சண்முகதாஸ் ..... 166

வைத்தியகலாநிதி. சீ.எஸ்.நச்சினார்க்கினியன் ..... 167

வ.கந்தையா ..... 168

செல்வி.கயல்விழி ..... 169

வடமராட்சி வலய உளவளத்துணையாளர் ..... 170

செங்கை ஆழியான் ..... 171

கே.எஸ்.சிவகுமாரன் ..... 172

லெ.முருகபூபதி ..... 174

பேராசிரியர்.நா.சுப்பிரமணியன் ..... 175

பகீரதி ஜீவேஸ்வரா ..... 178

எஸ்.இராஜநாயகன் ..... 181

ராஜி கெங்காதரன் ..... 183

எஸ்.ஸ்ரீரஞ்சினி ..... 191

சீரமியநாடி ..... 193

பேராசிரியர்.சபா ஜெயராசா ..... 194

உளமருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் ..... 196

பத்மா சோமகாந்தன் ..... 198

புலோலியூர்.ஆ.இரத்தினவேலோன் ..... 204

கவிஞர்.சோ.ப. ..... 210

K.S.Sivakumaran ..... 211

வாசகர் பொ.கோ ..... 214

மனோகரி தனராஜ் ..... 216

கலாநிதி.ம.பிரவீணன் ..... 219



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## சோலைக்குயில் - புதுமையான ஆவண இலக்கியம்

கலாபூஷணம், சைவப்புலவர்.சு.செல்லத்துரை
தலைவர், கலை இலக்கியக்களம்

குயில் ஒன்று பறந்து வருகிறது. வசந்தகாலச் சோலை அதன் மனதைக் கொள்ளை கொள்கிறது. அங்கு பச்சைப்பசேலென மரங்களும் செடிகளும் கொடிகளும் பலவர்ண மலர்களுமாய்ப் பூத்துக் குலுங்குகிறது. காய்களும் கனிகளும் விருந்துதருகின்றன. குயில் அங்கும் இங்கும் தத்தித் தத்திப், பறந்து பறந்து இன்பலாகிரியில் தன்னை மறந்து பாடுகிறது. குயிலின் ஆனந்தத்துக்கு அளவேயில்லை. குயிலின் குரலோசை உச்ச ஸ்தாயியில் விதவிதமான மெட்டுக்களில் ஒலிக்கிறது.

குயில் சோலை அழகில் சொக்கி நின்று இன்ப ஓசை எழுப்ப, குயிலின் அற்புதக் குரலோசை கேட்டுச் சோலையும் குயிலைப் பார்க்கிறது. அதன் குரலோசையை மட்டுமல்ல அதன் ஒவ்வொரு அசைவையும் சோலை ஊடுருவிப் பார்க்கிறது. குயிலின் ஆத்ம ஞானத்தையும் அது புரிந்துகொள்கிறது. இப்போது சோலை அசைகிறது. அதன் அசைவில் குயிலின் மகத்துவம் தெரிகிறது.

இப்படி ஒரு புதுமையான உருவகச் சித்திரமான கோகிலாவின் சோலைக்குயில், எங்களுக்கு விருந்து வைக்கிறது.

கோகிலா எதைச் செய்தாலும் அது புதுமையாகத்தான் இருக்கும் என்பதில் என்ன சந்தேகம்? இந்தச் சோலைக் குயில் புதுமையிலும் புதுமை.

கோகிலா என்ற மூன்றெழுத்து உருவுக்குள் எத்தனை எத்தனை திறன்கள் கொட்டிக்கிடக்கின்றன என்பதை அவரை நன்கறிந்தவர்கள் தான் அறிவார்கள். மற்றவர்கள் அவரின் ஒவ்வொரு துறையைத் தான் அறிந்திருப்பார்கள். கல்வி, நிர்வாகம், இலக்கியம், உளநலம், மருத்துவம், ஆன்மிகம், கலைகள், பின் நவீனத்துவம், அறிவியல் என்று அவர் துறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இப்பொழுது கோகிலாவுக்கு அகவை அறுபது நிறைகிறது. மணிவிழாக்காலம். அவர் அதை விரும்பாவிட்டாலும், இந்த அகவை அறுபதில் அவருடைய பல்துறைச் சாதனைகளையும் ஆவணப்படுத்தி ஒருமுகமாகப் பார்க்க வேண்டும் என்பது கலை இலக்கியக் களத்தின் விருப்பம். முக்கியமான காரணம் களத்தின் ஆரம்பகாலம் தொடக்கம் (1986 - 2010) இற்றை வரை ஒரு தலைமுறைகாலம் செயலாளராயிருந்து களத்தின் உயிர்ப்பாகச் செயற்படுபவர் இவர். இவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகளை ஒருமுகமாகப் பலரும் அறியச் செய்வது எங்கள் கடமை. இது களத்திற்கும் பெருமை. எங்கள் விருப்பம் இப்போது நிறைவேறியிருக்கிறது.

இது வழமையான வெறும் பட்டியற்படுத்தப்பட்ட வரலாற்று ஆவணம் அல்ல. இதுவரை நாம் காணாத ஒருபுதுவித இலக்கியப் படைப்பு. இதற்குள் ஒரு பூரணத்துவம் பொலிகிறது. இது மணிவிழா மலர் அல்ல, எனினும் மணியான புதுமையான ஆவண இலக்கியப் படைப்பாக மலர்ந்திருக்கிறது.

முதல் பகுதியான குயிலின் பார்வையில் சோலை எனும் பகுதியில் கோகிலாவின் படைப்புக்கள் என்கிற சோலையில் அவரின் விதவிதமான கட்டுரைகள், கதைகள், தொடர்கதைகள், கவிதைகள், உரைகள், நாடகங்கள், உரைச் சித்திரங்கள் நற்சிந்தனைகள், விமர்சனங்கள், வழிகாட்டல்கள், வரலாற்றுத் தொகுப்புகள் என்ற அடுக்கிக் கொண்டே போகக்கூடிய அத்தனை துறைக்கும் வகைக் கொருபடைப்பாகக் காலக்குறிப்புடன் தரப்படுகின்றன.

இவற்றின் ஊடே இடைவெளி நிரப்பிகளாக (Fillers) இவர்பெற்ற கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள், தொழில் அனுபவங்கள், படைப்புகள், பெற்ற பரிசுகளும், விருதுகளும், பாராட்டுக்களும் காலக்குறிப்புடன் தரப்பட்டுள்ளன. இவை பசுஞ்சோலையூடே பலவண்ண மலர்கள் பளிச்செனக் கண்சிமிட்டுவது போல மனதைக் கவர்கின்றன இவ்வளவு படைப்புக்களையும் இவர்படைக்க இவருக்கு எவ்வளவு ஆற்றல் இருந்திருக்கிறது என வியப்பு ஏற்படுகிறது.

சோலையின் பார்வையில் குயில் எனும் இரண்டாவது பகுதியில் இந்தக்குயில் வாழ்கின்ற சோலையாகிய சமூகத்தில் உள்ள படைப்பாளிகள், அறிஞர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், இரசிகர்கள் ஊடகங்கள் முதலான சமூகப்பிரதி நிதிகள், இவரின் ஆற்றலைப் பற்றி, இவரின் படைப்புகள் பற்றி வெவ்வேறு காலகட்டங்களில் எழுதிய பார்வைகள் வகைக்குச் சிலவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் ஊடும் இடைவெளி நிரப்பிகளாக (Fillers) இவர் ஆற்றிய பேச்சுக்கள், எழுதிய கட்டுரைகள், நிகழ்த்திய கலை நிகழ்வுகள் பற்றிய தகவல்கள் தரப்பட்டுள்ளன.

மொத்தத்தில் சொல்வதானால் இங்கு பதிவு செய்யப்பட்டுள்ள பார்வைகள் எதுவும் மணிவிழாவுக்காகவோ அல்லது இந்த நூலுக்காகவோ எழுதப்பட்டவையல்ல. அத்தனையும் கோகிலா நடந்து வந்த வாழ்க்கைச் சோலையில் அவ்வப்போது சந்தித்தவர்களது பார்வைப்பதிவுகள் என்பது முழுவதும் உண்மை. இதுவே சோலைக்குயிலின் தனித்துவம், புதுமை, இனிமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 1

## குயிலின் பார்வையில்
## சோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# காற்றுக்கு மூச்சு நிண்டு போச்சு!

எனக்கு எப்பவுமே முகமும் வாயும் ஏன் உடம்பு முழுவதுமே கடுகடு, சிடுசிடு எண்டுதான் இருக்கும்: உள்ளுக்குள்ளை ஒரு பூச்சி இருந்து அரிச்சு, அரிச்சு, நெஞ்சுச் சுவர் எல்லாம் பிளக்கிற மாதிரி வலி!

அடி வானத்திலை நெருப்புப் பிடிச்ச மாதிரிச் சிவத்தை ஒளி படந்திருந்த ஒரு பின் னேரத்திலைதான் அவன் எனக்குத் தாலி கட்டினவன். தாலி கட்டேக்கை என்ன கண்ணை மூடிக் கொண்டே கட்டினவன்? என்னைப் பிடிக்கேல்லை எண்டா அந்த நேரமே தாலியைக் கொண்டு எழும்பிப் போயிருக்கலாம். முது கெலும்புள்ள ஆம்பிளையாப் பிறந்தவன் ஒருத்தன் அப்பிடித்தான் செய்திருப்பான். அப்ப, என்ரை அண்ணாக்கள் குடுத்த காசைக் கண்டிட்டுப் பல்லை இழிச்சுக் கொண்டு தாலியைக் கட்டினான். நான் எவ்வளவு கனவுகளோடை காத்திருந்தன்? என்ரை உணர்வுகள் என்ன மாதிரி நார் நாராக் கிழிபட்டுப் போச் செண்டு உங்கள் ஒருத்தருக்கும் விளங்காது.

கொஞ்சம் பொறுங்கோ. . . ஐஞ்சி நிமிஷம் அழுது முடிச்சிட்டு மிச்சக் கதையைச் சொல்லிறன். (விழிச் சிமிழ் நிறைஞ்சு. . . கன்னங்களிலை வழிஞ்சு. . . மௌனம் ஒரு அற்புதமான சக்திதான். இல்லை, மௌனம் ஒரு அதியற்புதமான அங்கி. . . போர்த்துக் கொள்கிறேன்)

எதை நினைச்சாலும் மனசுக்குள்ளை கசக்குது. யாருக்கும் சொல்லித் தீர்க்கா விட்டால் இதயம் உள்ளாலை வீங்கி வெடிக்கும் போலை இருக்கு. எனக்குள்ளை முறிஞ்சு கொட்டிண்டு போய்க் கிடக்கிற மனத்துண்டுகளைப் பொறுக்கி எடுத்துத் தர உங்கள் ஒருத்தராலையும் ஏலாது, எந்தப் பெரிய கொம்பன் கவுன்சிலராலையும் ஏலாது.

ஏன்? எனக்கென்ன வெக்கம்? மனதைத் திறந்து உள்ளதைச் சொல்லுறன். கலியாணம் செய்து மூண்டு வரியம். நான் ஒரு நாளும் ஒரு சந்தோஷத்தையும் அனுபவிக்கேல்லை. அவனுக்கு ஆண்மையே இல்லை. அதைச் சொல்லாமல் ஒழிச்சு என்னைக் கட்டி ஏமாத்தினதைக் கூட மன்னிக்கலாம். நான் அவனுக்கு ஒரு நல்ல சகோதரியாகவே காலம் முழுவதும் இருந்திருப்பன். ஆனால் அவன் என்ன சொல்றான் தெரியுமா? நான் கறுப்பாம், வடிவில்லையாம். முகமெல்லாம் பருவாம். கட்டையாம். அதைப் பார்க்கத் தனக்கு வாற வெறுப்பிலை தானாம் தனக்கு ஒண்டும் விருப்பமில்லாமல் இருக்காம். இல்லாட்டித் தான் திறமான ஆம்பிளையாம். இப்பிடி அவன் சொல்றதைக் கேக்க. . . . எனக்குச் சும்மா பத்திக் கொண்டு வருது. . . . கண்ணுக்குத் தெரியாத வடக் கயித்தாலை ஆரோ பளீர், பளீர் எண்டு அடிக்கிற மாதிரிக் கிடக்கு. நான் கிராமத்துப் பொம்பிளை தான். என்ரை அப்பன் தோட்டக் காரன் தான். ஆனால் நான் கொஞ்சம் படிச்சனான். எனக்கும் விசயங்கள் விளங்கும். அதுதான் கேட்டனான் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் எனக்குத் தாலி கட்டேக்கை ஏன் கண்ணை மூடிக் கொண்டு கட்டினவன் எண்டு.

முத்தத்திலை நிக்கிற மரங்கள் எல்லாம் என்னை நெருங்கிக் கொண்டு வாற மாதிரிக் கிடக்கு! வீட்டுக்கு வெளிலை போனால் யுத்தம்! வீட்டுக்குள்ளை வந்தால் அதை விடப் பெரிய யுத்தம்! என்ரை மனதுக்குள்ளை பாரத யுத்தம்.

அவன்ரை மீசை - மசுக்குட்டி மயிர் போலை என்ரை மேல் எல்லாம் சுணைக்குது. அவனைப் பாத்தா அவன்ரை கண் என்ரை கண்ணுக்குள்ளை எரியுது. எத்தினையோ காட்சியள் என்ரை மனதிலை ஒரே நேரத்திலை வருது. அல்லது ஒரே காட்சி பல மணித்தியாலங்களா நீடிச்சிருக்கு. ஒண்டு எனக்கு விசராய் இருக்க வேணும் அல்லது நான் ஞானியாய் இருக்க வேணும் எண்டு நினைக்கிறன்.

(சூனியத்தை வெறிக்க வெறிக்கப் பார்த்து அந்தச் சூனியத்துள் ஆயிரம் விடயங்களைத் தேடுவதில் ஒரு இன்பம் இருக்கத்தான் செய்கிறது) இப்ப கொஞ்ச நேரம் நான் ஒண்டும் கதைக்காமல் சூனியத்தையே வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டு இருந்தன் தானே! அப்ப என்னைச் சுத்தி ஒரு நிசப்தம் தானே இருந்தது! அந்த நிசப்தமே பெரிய ஒலியாகி என்ரை காதை உடைக்கிற மாதிரிக் கிடக்கு. . . இயற்கையின்ரை ஒவ்வொரு கூறும் தனக்குத் தானே இரக்கம் பாக்க முடியாமல் திணறேக்கை எனக்கு யார் இரக்கம் காட்டப் போயினம்?

மனைவி எண்ட முறையிலை எனக்கு ஒரு சந்தோஷமும் தராத அவன் என்னை ஒரு வேலைக்காறி மாதிரித்தான் வைச்சிருந்தான். அவன் வேலைக்குப் போய்வர நான் நேரத்துக்கு நேரம் சமைச்சுப் போட வேணும். அந்தச் சமையலையாவது அவன் சந்தோஷமாய்ச் சாப்பிட்டிருக்கலாம். நல்லாயிருக்கு எண்டு ஒருவார்த்தை சொல்லியிருக்கலாம். ஆளைப் பார்க்கத்தான் அருவருக்குது எண்டால், சாப்பாட்டையாவது சுவைச்சுச் சாப்பிட்டிருக்கலாம். ஒரு நாள் "உப்பில்லை" எண்டான். மற்ற நாள் உறைப்புக் கூடிப் போய்ச் செண்டான். தன்ரை குறையை மறைக்க எத்தினையோ உள விளையாட்டுக்களை விளையாடத் தொடங்கினான். தொட்டதெல்லாத்துக்கும் என்னிலை குறை பிடிக்கிறதை என்னாலை தாங்க முடியேல்லை. நானும் அவனும் வீட்டிலை சாதாரண தொனியிலை கதைக்கிறதேயில்லை, எண்ட அளவுக்கு நிலைமை முத்திப் போச்சு.

கனவுத் தண்ணி எல்லாம் வெளிலை வழிஞ்சு இறுகிப்போன என்ரை மனத்திலை இனிய சொல்லுகள் எப்பிடி வரும்? நான் ஒரு வீட்டுக்கு வெறும் வேலைக்காறியாப் போற தெண்டா, எனக்குச் சம்பளம் தரவேணும் அவை. அவன்ரை ஒரு சேல்ஸ்மன் உத்தியோகத்துக்கு இரண்டு லட்சம் சீதனம் குடுத்து. . . அதுக்கு வட்டியா நான் வேலையும் செய்ய வேணுமோ? எனக்குள்ளை சரியான கோபம். சரியான கவலை. சொல்ல முடியாத விரக்தி.

இரவிலை சுவரோடை ஒட்டிப் படுத்துக் கொள்ளுவன். நான் சுருண்டு படுத்திருக்கும் முறை சுவருக்குள்ளை போக முயலுவது போலை இருக்குதெண்டு நானே நினைப்பன். என்ரை தொண்டைக்குள்ளை உட்சுவர் ஓட்டியிடும். நான் எவ்வளவு சோகித்துப் போயிருக்கிறன் எண்டு அம்மாவுக்கு ஒரு நாள் சொல்லி அழுதன்.

''கல்லெண்டாலும் கணவன் தான். புல்லெண்டாலும் புருஷன் தான். தொட்டுத் தாலி கட்டின மனுஷனை விட்டிட்டு ஒண்டும் செய்ய ஏலாது. நீ ஒரு மாதிரிச் சரிக்கட்டி நட" எண்டு அவ சொல்லிட்டா. என்ரை பயங்கரத் தனிமையிலை, என்ரை ஏக்கங்களும் அவமானங்களும் துக்கங்களும் தான் எனக்குத் துணையாய் இருக்கும். அம்மா ஆறு பிள்ளைப் பெத்தவ. இப்பவும் அப்பரோடை அரை அங்குல இடைவெளியிலை கோயிலுக்குப் போறவ. அவவுக்கு எப்பிடி நான் சொல்லுறது விளங்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கொஞ்சம் தண்ணி தாறீங்களா? குடிப்பம்) அரணை ஒன்று என் காலில் விழுந்து, விழுந்தடித்து ஓடினால் கூட, ஓர் உயிர் என்னைத் தொடுகிறது என்று மகிழ்வடையும் நிலை ஏற்பட்டிருந்தது. நான் நிக்கிற இடமெல்லாம், நடக்கிற இடமெல்லாம், படுக்கிற இடமெல்லாம் நெருஞ்சி முள் தைக்கிற மாதிரி எனக்குள்ளை ஒரு உணர்வு. என்ரை மனதின்ரை உட்சுவரிலை இருந்து கல்லுகள் எல்லாம் ஒண்டொண்டா விழத் தொடங்கின நேரம்தான், நான் அந்த நாய்க் குட்டியைப் பக்கத்து வீட்டிலை வாங்கி வளத்தன். இருள் மரணத்தைத் தழுவத் தொடங்கிற விடியப்பற நேரத்திலை தான், அந்த வெள்ளை நாய்க்குட்டி எங்கடை வீட்டை வந்திது. வந்த உடனேயே இருளைப் பிளந்து கொண்டு ஒற்றையாய் ஒரு அழுகை ஓலம் போட்டிது.

நான் பால் கரைச்சுக் கொணந்து வைச்சன். இரக்கம் தேடுற ஒரு பார்வையாலை என்னைப் பாத்திது. பிறகு வாலை ஆட்டிச்சுது. அது பால் குடிக்கிறதைப் பாக்க எனக்கும் இதயம் நனைஞ்சு போச்சு. அந்தக் கணத்திலை இருந்து அது என்ரை பிள்ளை போலை வந்திட்டுது. ஒரு மனிசக் குழந்தைக்குத் தாயா இருக்க முடியாட்டியும், ஒரு நாய்க் குழந்தைக்கு வளர்ப்புத் தாயா இருக்கிறது, மன எழுச்சிகளைத் தாங்க முடியாமல் இருந்த என்ரை உள் மனப் புகைச்சலை எவ்வளவோ ஆறுதல் படுத்திச்சுது.

ஒரு வெறியோடை வந்து முகத்திலை குளிர் காற்று அறையிற மார்கழி மாதத்து முன்னிரவு நேரங்களிலை ஷெல் வீழ்ந்து வெடிக்கும் பயங்களுக்கு நடுவிலை, நானும் ஜிம்மியும், அதுதான் என்ரை பிள்ளையும், போட்டிக்கோக் கட்டிலிலை படுத்திருப்பம். அது என்ரை தலை மயிரைச் செல்லமாப் பிடிச்சு இழுக்கும்.

(என்ரை மயிர் பச்சையாய் இருக்கா? வாழ்க்கை தான் நரைச்சுப் போச்சு)

ஜிம்மி நல்ல வெள்ளை. பால் போலை நிறம் நான் நல்ல கறுப்பு. அடுப்புக்கரி மாதிரி. ஆனாலும் அது என்னை வெறுக்கேல்லை. நான் எங்கையும் வெளிலை போயிட்டு வந்தா, என்னைச் சுத்திச் சுத்தி ஓடி, முகம் நிறைஞ்சு சிரிச்சு, காதை உயர்த்தி, காலை நக்கு நக்கெண்டு நக்கி வால் ஓடியும் வரை ஆட்டி அது போடுற அட்டாகாசத்திலை நான் அப்பிடியே திகைச்சுப் போய் நிண்டிடுவன். என்னர குரலை நானே கேட்டுக் கொண்டு இருந்த எனக்கு இப்ப சரியான ஆறுதல்.

நான் இந்த நாய்க்குட்டிக்கு ஒரு சதமும் சீதனம் குடுக்கேல்லை. நான் சாப்பிட்ட மிச்சச் சாப்பாடுதான் குடுக்கிறன். அப்படியிருந்தும் அது எவ்வளவு அன்பு காட்டிது எனக்கு மேலை? அது சுயநலமான அன்பு எண்டு நினைக்கிறியளா? இல்லை.

நான் ஒரு நாள், ஒரு அமாவாசை அண்டு, காய்ச்சல் வந்து படுத்திட்டன். பகல் முழுதும் அந்தப் போட்டிக்கோக்கட்டில்லை படுத்துக் கிடந்தன். இருண்டது நேரமா? கண்களா? ஜிம்மியும் என்னோடையே கிடந்திது. நான் எழும்பி பாத்றூம் போக, நான் விழுந்திடுவனோ எண்டு பயந்து. . . ஏதோ தான் தூக்கி விட்டிடுவன் எண்டமாதிரி என்ரை காலோடையே நடந்து என்னோடை உரசி, உரசி வந்து திரும்பி வந்திது. அண்டைக்கு நானும் சாப்பிடேல்லை. அதுகும் சாப்பிடேல்லை. இரவு பத்து மணிக்கு மேலைதான் அவன் வீட்டை வந்தவன்.

"ஏன் சமைக்கேல்லை?" எண்டான்.

"எனக்குச் சுகமில்லை. காய்ச்சல்" எண்டன்

"எளிய நாய்க்கு - உந்தச் சொறி நாயோடை படுக்கிறதுக்கு மட்டும் வருத்தம் இல்லை" எண்டு சொல்லி, ஒரு பெரிய பொல்லுக்கொணந்து நாய்க்கு மேலை ஒரு போடு போட்டான். அது எக்கச் சக்கமான இடத்திலை விழுந்திட்டுது போலை"

ஜிம்மி குழறி அழுது, கொஞ்சம் அனுங்கி, அப்பிடியே செத்துப் போச்சு. உண்மையிலை அது எனக்கு விழுந்திருக்க வேண்டிய அடி! நான் வாயை இறுக்கி மூடிக் கொண்டன். அன்பு, சந்தோஷம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி இதெல்லாம் அடையாளம் கூடக் காண முடியாத அபூர்வப் பொருளாகிப் போன என்ரை வாழ்க்கையிலை ஒரே ஒரு சின்ன ஒளியாய் இருந்த ஜிம்மி. . . அந்த மறைவை என்னாலை ஏற்றுக் கொள்ள முடியேல்லை.

"துலைஞ்சுது சனியன்" எண்டு முணுமுணுத்துக் கொண்டு அவன் உள்ளை போனான். அந்த வீட்டிலை ஏற்கனவே இருந்த அசுத்தமான காற்று, இந்தக் குரலாலை இன்னும் கேவலமான அசுத்தமாய் போறதா நான் உணர்ந்தன். காற்று இலைகளின்ரை இடைவெளியளுக்குள்ளாலை கத்திக் கத்தித் தன்ரை காமத்தைத் தீர்த்துக் கொண்டது.

பஞ்சு போலை மயிரோடை செத்துப் போய்க் கிடந்த ஜிம்மியைப் பார்க்க எனக்கு ஒரு பயம் வந்திட்டுது. காத்துக்கு மட்டும் கேட்கத் தக்கதா ஒரு சபதம் செய்தன். "துலைஞ்சது சனியன்" எண்டதுக்குத் "துலைஞ்சு போ சனியன்" எண்டது தான் அர்த்தம் எண்டு எனக்குள்ளை புரிஞ்சுது. போட்டிக்கோ முழுதும் ஒரு விபரிக்க முடியாத பயத்திலை உறைஞ்சிருக்க, நான் வெளிக்கிட்டன். எங்கை போறதெண்டு எனக்கே தெரியாது. உலகமெல்லாம் ஆத்மாவிலை கறுப்பான ஆக்கள் தான் இருக்கினம் எண்டது போலை எனக்குள்ளை ஒரு நினைவு. என்ரை எதிரிலை ஒரு ஒற்றையடிப் பாதை வெறிச்சாய் ஓடுது. கால் போன வழி வழி போகுது. ஒரு பட்சி ஏதோ வைது கொண்டு மரத்தை விட்டுக் கிளம்பிப் பறக்குது.

என்ரை தழும்பை மனதாலை அடிக்கடி தொட்டுப் பார்த்துத் தடவிக் கொண்டு நான் நடந்த போது தான், இந்த மற்றவன் முன்னாலை வந்தான். இவன் என்ரை சின்ன வயசிலை என்னைக் காதலிப்பதாய்ச் சொன்னவன். நான் வீட்டிலை போய்ச் சொல்ல, அண்ணாக்கள் அவனை வெருட்டி அதோடை விசயம் முடிஞ்சு போய் இருந்திது. அவன் வேறை ஆள். கலியாணம் செய்ய ஏலாதெண்டு அண்ணாக்கள் சொன்ன தோடை நானும் சரியெண்டு விட்டிட்டன். இப்ப என்ரை ஜிம்மியும் இல்லாத நேரத்திலை, எனக்கு என்ரை கதையைக் கேட்க ஓராள் வேணும் போலை இருந்திது. என்னோடை கூட இருக்க ஓராள் வேணும் போலை இருந்திது. நடந்து நடந்து என்ரை கதையைச் சொல்லிக் கொண்டு வந்தன். வழியெங்கும் சோகங்கள் மண்ணிலை கொட்டினது போலை மர நிழல்கள் விழுந்து கிடந்திது. அவன் இந்த இரண்டாவது ஆள் என்ரை கதையைக் கேட்டுக் கொண்டு வந்தான். என்ரை மனதுக்கு இதமான ஒத்துணர்வுப் பதில்களைத் தந்தான். நான் என்ரை மனதையே விறாண்டி அவனுக்கு முன்னாலை கொட்டிப் போட்டன்.

"போனதெல்லாம் போகட்டும். நான் அந்த இளமையிலை காதலிச்ச மாதிரியே இன்னும் உன்னைக் காதலிக்கிறன். இல்லாட்டி ஏன் இன்னும் கலியாணம் செய்யாமல் இருக்கிறன்" எண்டு கேட்டான்.

நொந்து போய்க் கிடந்த மனம் இரண்டாம் முறையும் ஏமாந்து போச்சு.

அம்மாவோ அண்ணாக்களோ இதை ஏற்றுக் கொள்ள மாட்டினம் எண்டதாலை நான் அவைட்டை ஒண்டும் சொல்லேல்லை. என்னத்தைத்தான் சொல்றது? மார்கழி மாதத்திலை தாலி கட்டப்பிடாது. "நீ அவன்ரை எழுத்தைத் தள்ளிப் போட்டுவா. நான் பிறகு தாலி கட்டி உன்னை ஏற்றுக் கொள்ளிறன்" எண்டான்.

கதை தான்!

எல்லாமே வெறும் வாய்ச் சொல் தான்!

இப்ப. . . . . .! கர்ப்பமுற்ற மேகங்களைக் கொண்ட வானம் மீண்டும் கண்ணீர் சிந்துகிறது. நான் ஜிம்மியைப் போலை இன்னொரு நாய்க் குட்டியைத் தேடிக் கொண்டிருக்கிறன்.

கடித்த பற்களிடையே, சொல்லத் தகாத வார்த்தைகள் எனக்குத் தவிக்கின்றன. நான் பற்றி எரிகிறேனா? எரிநீரில் முழுகுகிறேனா?

ஒரு வண்ணத்துப் பூச்சி வழியை விட்டிட்டு, எங்கெங்கோ அலைஞ்சு கொண்டிருக்குது. அதன் அன்ரெனா அசைவில் ஏக்கம் மட்டும்!

காற்றுக்கு மூச்சு நிண்டு போச்சு. ஏனெண்டால் இலையள் ஒண்டும் அசையேல்லை.

பனி மூட்டம் இருக்கிற காலை வேளை எண்டால் என்ன, இளம் மஞ்சள் ஒளி விழுகிற மாலை வேளை எண்டால் என்ன, வசந்தம் எண்டாலும் சரி. . . இலையுதிர் ஆனாலும் சரி.. எந்த நேரமும் அழ முடியும் என்னாலை!

(தினக்குரல் 29.11.98)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் எம்மை அழைத்து அறிவுரையும் கூறினார். ஊரோடு ஒத்து நடக்க வேண்டும் என்றார். மு.வ சொல்கிறார் என்று நகைகளைக் கழற்றி விட்டால், சமுதாயம் 'விசர்' என்று பழிக்குமென்றார். எமக்குள் மீண்டும் போராட்டம்!

இதற்குள் பல்கலைக் கழகப் புகுமுகப் பரீட்சையில் நாங்கள் தேறியிருந்தோம். அங்கு போய் எமது "உணவுக் கட்டுப்பாடு" போன்றவற்றை எப்படி நிறை வேற்றுவது? தீயவர்களோடு எப்படிப் பழகாமல் இருப்பது? மனம் மிகக் குழம்பிய நிலையில், மு.வ அவர்களுக்கு இங்கிருந்தே ஒரு கடிதம் எழுதினோம். அவர் உடனே அதற்குப் பதில் எழுதினார். இக்கடிதத் தொடர்பு சில காலம் நீடித்துப் பின்னர் நின்று விட்டது.

'தீயவர்களை வெறுக்கக் கூடாது. தீமையை மட்டும் வெறுக்க வேண்டும்' 'ஒழுக்கமில்லா தவர்களோடு நெருங்கிப் பழகக் கூடாது. ஆனால் உள்ளத்தில் அன்பு கொண்டு, அவர்களைப் பழிக்காமல், குறை கூறாமல் இருக்க வேண்டும்.' என்பன அவரது கடிதமொன்றில் என்னை மிகவும் ஆகர்ஷித்த வரிகள். முடிந்தவரை எனது வாழ்வில் இவற்றைப் பின்பற்ற இன்றும் நான் முயன்று வருகிறேன். தீயவர்களால் எமக்கு யதார்த்தமாகப் பாதிப்பு வரும்போது இது மிகக் கஷ்டம் என்பதையும் உணர்ந்திருக்கிறேன். பின்னாளில் Dale Carnegie யைப் படித்தபோது "Instead of hating our enemies, let's pity them and thank God that life has not made us what they are. Instead of heaping condemnation and revenge upon our enemies, let's give them our understanding, our sympathy, our help, our forgiveness and our prayers" என்ற அவரது சிந்தனை மு.வ வின் சிந்தனையோடு ஒத்திருந்தது கண்டு நான் வியந்ததுண்டு.

நாலு நாவல் எழுதியவுடன் தங்களைப் பெரிய 'கொம்பர்' எழுத்தாளர் என்று நினைத்துக் "கடிதம் எழுத நேரமில்லை" "விழாவுக்கு வர நேரமில்லை" என்று பெருமையடிக்கும் எழுத்தாளர் எம்மத்தியில் பலர் உண்டு. கூட்டத்துக்கு வருவதாகச் சொல்லிப் பெயரையும் போடச் செய்து விட்டு மூச்சுப் பேச்சில்லாமல் நின்று விடுகிற பிரமுகர்களும் பலர் உள்ளனர். வெறும் கல்லூரி மாணவிகள் - முன்பின் தெரியாதவர்கள் எழுதிய கடிதத்திற்கு மதிப்புத் தந்து, நேரம் ஒதுக்கிப் பதில் எழுதிய மு.வ வின் பண்பு என்னைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

மு.வ ஒரு துணை வேந்தர். பல வகைப்பட்ட துறைகளில் எண்பதிற்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். முப்பத்தைந்து நீண்ட வருடங்கள் சிறந்த தமிழ்ச் சேவை புரிந்தார். அருமையான ஆய்வாளன். சிறந்த தமிழ்ப் பெயர்களைத் தமது பாத்திரப் பெயர்களாகக் கொண்டதுடன், "வேண்டா", 'இட்டலி' போன்ற நல்ல பிரயோ கங்களைத் தமது நூல்களில் கையாண்டவர். திருக்குறள் போன்ற நீதி நூல்களைச் சிறந்த முறையில் பொது வாசகனிடம் அறிமுகப் படுத்தியவர். ஆனால் இவை எல்லாம் மு.வ என்னைக் கவருவதற்கான காரணங்களாய் அமையவில்லை.

கலை, கலைக்காகவே என்பதிலிருந்து மிக உயர்ந்து, கலை வாழ்வுக்காகவே என்பதை உறுதியாக நம்பிய அவரது எழுத்தே என்னைக் கவர்ந்தது. சிறந்த எழுத்தாளன் பல மைல் களுக்கப்பால் உள்ளவரோடும் நெருங்கிய உறவு கொண்டு, அவர்களின் பிரச்சினைகளில் உதவி, அவர்களின் வாழ்க்கைப் போக்கில் மாற்றங்களைச் செய்து விடுகிறான் என்பதற்கு மு.வ சிறந்த சான்று. இன்றும் கூட, எனது அகப் போராட்டங்கள் பலவற்றை நான் மு.வ வுடன் கற்பனையில் விவாதிப்பதுண்டு. அது ஒரு இனிமை தான்!

ஒருவரது எழுத்து எம்மைக் கவரும் போது, அவரது வாழ்வையும் பார்த்தல் தவிர்க்க முடியாதது. சிறந்த கலைத்துவத்துடன் எழுதக் கூடிய பல எழுத்தாளர் வாழ்வில், அறச் சார்பின்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்த எழுத்தாளர்

## மு.வரதராசனார்

எனக்கு அப்போது பதினேழு வயது. எங்கள் வீட்டிலே, எனது சிறிய தாயாருக்குத் திருமணம். மனமெல்லாம் சிறகுகளின் குருத்துக்கள். நண்பர்கள், உறவினர் நிறைந்த வீடெங்கும் ஒரே கொண்டாட்டம்.

திருமணப் பரிசாக வந்திருந்த பொட்டலங்களை எல்லாம் உடைத்துப் பார்த்து, ஒவ்வொன்றாக ஒரு அலுமாரியில் அடுக்குகிறார் சிறிய தாயார். நானும் அருகில் குந்திக் கொள்கிறேன். பொட்டலங்களில் ஒன்றில் ஒரு நூல்! விரித்துப் பார்க்கிறேன். "நெஞ்சில் ஓர் முள்" நாவல்! "இதை நான் வாசித்து விட்டுத் தருகிறேன்" என்று அவரிடம் பெற்றுக் கொள்கிறேன். அதற்கு முன் நான் கல்கி, அகிலன், சாண்டில்யன் போன்ற பலரைப் படித்திருந்தேன். ஆனாலும் இந்த நாவலிலே இருந்த ஏதோ ஒன்று. . . என்னைப் பெரிதும் கவர்ந்தது, கல்கியை விட. . . அகிலனை விட . . . இன்னும் பலரை விட. . . .

அடுத்த வாரத்தில் இருந்து மு.வ வின் ஏனைய நூல்களைத் தேடி வாசிக்க ஆரம்பித்தேன். மகாஜனக் கல்லூரியின் நூல் நிலையத்தில். . . யாழ்.பொது நூல் நிலையத்தில். . . இன்னும் பல இடங்களில் இருந்து கிடைக்கக்கூடிய எல்லா நூல்களையும் வாசித்தேன். அவரது எழுத்தில் என்னைக் கவர்ந்த பல பகுதிகளைக் குறித்து வைப்பேன். எனது சிநேகிதிகள் பலருக்கு நான் பெற்ற இன்ப அநுபவத்தைச் சொல்லி அவர்களையும் வாசிக்குமாறு தூண்டுவேன். எல்லாரும் வாசித்த பின், கல்லூரியில் அந்தச் சிந்தனைகள் பற்றி விவாதிப்போம். சிறிது காலத்தின் பின்னர், அவரது வழிகாட்டலின் படி நடக்கவும் ஆரம்பித்தோம்.

பௌதிகமும், இரசாயனமும், தாவரவியலும், விலங்கியலும் கற்பிக்கும் கல்லூரியில், "வாழ்வது எப்படி?" என்று ஏன் கற்பிப்பதில்லை என்று சிந்திப்போம். இவர்கள் கற்பிக்காவிட்டால் போகட்டும். நாங்கள் மு.வ வை ஆசிரியராகக் கொண்டு கற்போம் என்று தெளிவோம். இதன் பேறாக எமது நடத்தையிலே பல மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன.

எப்போதும் எளிமையான பருத்தி ஆடைகளை அணிதல், கூடியவரை நகை அணியாது விடுதல், நாள்தோறும் உள்ளத்து உணர்வுகளைக் குறித்து வைத்து, மனதை ஆள முயலுதல் போன்றவை அவற்றில் சில.

வெளிப்படையாக எம்மில் தெரிந்த சில மாற்றங்களினால் வீட்டில் பெற்றார் கவலையுற்றனர். அப்போது ஆசிரியராக இருந்த எனது சிநேகிதி கலாவின் (கலா இப்போது அவுஸ்திரேலியாவில் இருக்கிறார். பல் வைத்தியத் துறையில் பட்டம் பெற்றவர்) தந்தையார் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்றெனத் தெரியும். ஒருவன் எவ்வளவு தான் சிறப்பாய் எழுதினாலும் அவனது சொந்த வாழ்வில் நெறி இல்லை எனில், அந்த எழுத்து எனது மனதில் "Minus Marks" ஐப் பெற்று விடும். இந்த வகையிலும் அதிகம் "Plus points" பெற்றவர் மு.வ தான். வள்ளுவர், காந்தி போன்றவர்களின் அறப் பாரம்பரியத்தைச் சொன்னதும், எழுதியதும் மட்டுமில்லை வாழ்ந்தும் காட்டியவர் அவர். அவரது உள்ளத்திலே ஒளி இருந்தமையாற்றான் எழுத்தில் தெளிவும், திருத்தமும் அமைந்தன.

தனது திருமணத்தின்போது மாமனார் கொடுத்த ஐம்பது ரூபாவில், முப்பது ரூபாவுக்குக் கதராடை வாங்கிவிட்டு, மீதி இருபது ரூபாவை அவரிடமே திருப்பிக் கொடுத்தார் மு.வ. அவரது மாணவர் பலர் அவருக்கு மணிவிழாக் கொண்டாட முனைந்த போது, அதை உறுதியாகத் தடுத்தார். தாம் யாரையாவது சந்திக்கச் சம்மதித்திருக்கும் போது வேறு அவசிய வேலை வந்து விட்டால், அவர்களை, "வரவேண்டாம்" என்று அறிவிக்க எப்போதும் மறந்து போகாதவர். பண்டிதர்களாகவும் அறிஞர்களாகவும் ஆக முயன்று தோற்றவர்களே நாவல் எழுதுவர் என்ற எண்ணம் தமிழ் நாட்டில் இருந்தபோது, நாவல் எழுதி, நாவல் எழுதுபவருக்கு மதிப்பைக் கொடுத்தவர். நாவல் எழுதிய பின், விமர்சகர் அது பற்றிச் சொல்பவை குறித்து அலட்டிக் கொள்ளாமல் செயற்பட்டார்.

அவரது சமகாலக் கல்வியாளர்களில் இருந்து பெரிதும் வேறுபட்டுச் சுவையான போதனையாளனாகவும், புதிய பார்வையாளனாகவும் திகழ்ந்தார்.

"மு.வ சிறந்த நாவலாசிரியர் என்று சொல்ல முடியாது. அவரது நாவல்களில் கலைத்துவம் இல்லை. அவரது போதனைகள் கதை யோட்டத்தைத் தடுத்து வாசகர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்துவன" என்று சில திறனாய்வாளர்கள் கூறக் கூடும். அது பற்றி நான் அக்கறைப்படவில்லை. ஏனெனில் மு.வ சிறந்த நாவலாசிரியர் என்று நிருபிப்பதல்ல எனது நோக்கம்.

1960களில் மு.வ வின் நூல்களைப் படிக்காத கல்லூரி மாணவர்களே இல்லை என்ற நிலை தமிழ் நாட்டில் இருந்தது.

மு.வ அவர்களிடம் தமிழ் படிக்கும் பேறு, மு.வ அவர்களை நேரில் கண்டு உரையாடும் பேறு வாய்க்கலில்லையே என்பதே எனக்குள்ள மனக்குறை.

(ஈழநாடு 22.3.87)

**மாணவராக.........**

- பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை தரம் 1 – தரம் 4 – 1.1.1955 – 31.12.1958
- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தரம் 5 – க.பொ. உ/த. 1.1.1959 – 31.12.1968
- பேராதனைப் பல்கலைக்கழகம் – மருத்துவ பீடம் 1970 – 1974 (நிறைவு செய்யவில்லை)
- பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி – விஞ்ஞானத்துறை 1.7.1979 – 31.12.1981
- சாந்திகம் உளவளத்துணைப் பயிற்சி (வார இறுதி நாட்கள்) – 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை

# நெருஞ்சி

அம்மா அடுப்படியில் இருட்டில் புகை நடுவில்
ஆனால் அவளின் ஆழமான கட்குழியில்
எண்ணெய் விட்டுத் திரியும் ஏற்றலாம்
புண்ணியம் தானே செய்ததாய்ப் புலம்புவாள்
மயிர் தான் கொஞ்சம் நரைத்துப் போனாலும்
பயிர் போல் தன் வாழ்வு பச்சைதான் என்கிறாள்
உயிரோடு இருக்கிறார் அப்பா என்பதால்!

அம்மா அடுப்படியில் இருட்டில் புகை நடுவில்
அப்பா வெளியில் நிலவில் ஈசிச் செயரில்,
அயல் வீட்டுப் பரமசிவம் படியில்
மயிலு நடுவில் மறுபக்கம் மகாதேவன்
வைத்து நன்றாய் ஊர்வம்பும் அரசியலும் – சும்மா
பிய்த்து எறியும் பெரிய்ய கருத்தரங்கம்!

"சாப்பிடுங்கோவன்"........ அம்மாவின் குரல்,
"போட்டுவை வாறன்"....... இதுதான் அப்பா.
"வேறென்ன வேலை? சமையல் மட்டுந்தான்"
மாறின்றித் தீர்மானம் கருத்தரங்கில் நிறைவேறும்
இன்றும் நாளையும் இறந்து பிறக்கும்
இரவும் பகலும் புரண்டு சரியும்
மஞ்சளும் சிவப்புமாய் (மன்னிக்கவும்
குங்குமமுமாய்) அம்மா மிளிர்வாள்
கொஞ்ச நேரம் மறந்து விடுங்கள்
குருதியின் நிறமும் சிவப்பு என்பதை!

அம்மாவைப் பார்த்து அழகென்று அழலாம்!
மனதை ஜிவ்வும் எடுப்பான மூக்கு!
பாடம் அவளெனக்குச் சொல்லித் தருவாள்
வீட்டுக்கு விலக்காய் இருந்தவோர் நாளில்
வீட்டுப் பாடம் விளங்கலை என்று
அப்பாவைக் கேட்டேன். அவரது குரலில்
உலோகத் தன்மை எப்படி வந்தது?
'கொம்மாவுக் கிங்கே என்ன வேலை?
பாடம் சொல்லித் தருவது மட்டும்!....."
பாய்ந்து விட்டுப் போனார் அவரும்,
மனதை ஜிவ்வும் எடுப்பான மூக்கு,
அசடு கலந்த அந்த இளிப்பு,
அம்மாவின் மேல் ஆத்திரம் எனக்கு,
பின்னே என்ன? 'பிசு' தான் இவள்!

இரவு நேரக் காற்று வந்து
வளைந்து வளைந்து வீசிப் போனது
"தோய்த்துப் போட்ட உடுப்பை ஒருக்கால்,
பார்த்துக் கொஞ்சம் எடுத்து வாங்கோ"
தோல் போர்த்த விறகு வேண்டு கோள் விட்டது.
ஈசிச் செயரோ அசையவே இல்லை!
எனக்கு எவ்வளவு வேலை இங்கை?
உனக்கு என்ன வேலை அப்பா?
உடுப்புத் தோய்ப்பது மட்டுந் தானே!
கொதிநிலை இன்னும் உயர்ந்தது எனக்குள்
மனம் ஒரு பள்ளத் தாக்குத் தானே!
ஆழம் இருட்டு அடர்த்தி இன்னும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ந்த சுருதியில் ஒரு தனியான மெதுமை,
"சூழ்ந்த இடமும் துப்பரவாய் இருக்கட்டன்,
ஒளிந்த இடத்திலை பேப்பரைப் போடுங்கோ,
எத்தனை தரந்தான் கூட்டிறது நானும்?"
"ஐயோ உனக்கு வேறென்ன வேலை?
கொய்யா தந்த சீதனக் காசிலை,
மெய்யாப் பத்து வேலைக்காரி வைப்பம்"

உயர்விலை ஆடைதான் உடுத்திருந்தாள் அம்மா
உயர்விலை ஆடையுள் உருளும் புழுப்போல்,
இப்போது அவளே எனக்குத் தெரிந்தாள்.
அன்பு கொட்டும் அம்மாவின் குரலிப்போ
VIBGYOR ஆகவே உடைந்து போய் நின்றது.

மனிதனைத் தவிர மற்றெந்தப் பிராணியும்
சோலி இன்றி இருந்ததே இல்லை
அப்பா இன்னும் ஈஸிச் செயரில்,
பேப்பர் படிக்கிறார் கொஞ்சம் பொறுங்கள்!
அம்மாவுக்கு மூச்சு வாங்குது,
சந்தை தூரம் சாமான் வாங்க,
கந்தையா அண்ணை கடைக்குப் போக,
கால்கள் அவளைத் தூக்கிச் செல்லும்.

"சைக்கிளில் நீங்கள் ஒரு மிதி மிதித்தால்
சுறுக்காய் வரலாம்" என்று நான் சொன்னேன்
"அம்மா போகட்டும் பார்த்து வாங்குவாள்
சந்தைக்குப் போவது மட்டுந் தானே!
மிகுதி எல்லாம் நானே செய்வேன்"
அப்பா போட்ட முகமூடி மிக நீளம்
அப்பாவின் முகமுடி நீளம்

அண்ட வெளியின் பெரிய சங்கீதம்,
அதுதான் அம்மா, அதுதான் அம்மா
அந்தத் துளசி அதன்மீது கவியும்
இருளில் என்ன பெற்றுக் கொள்ளும்?
விலக்க வில்லை இருளை அதுவும்
விடியுந் தானே என்ற நினைவோ?
என்ன நினைவு? இனிய நினைவு?
எண்ணி எண்ணி மார்பு புண்ணாகும்.
இலைகள் ஏன்தான் அசைய வில்லை?
அம்மா உண்மையில் அழகிய புஷ்பம்
மாண்டில் திரிபோல் என்று வைப்பம்.

(1993)

**ஆசிரியராக. . . . . . .**
**முதல் நியமனம் – 22.04.1974**

விஞ்ஞானம், கணிதம், சுகாதாரமும் உடற்கல்வியும், மனைப்பொருளியல் ஆகிய பாடங்களின் ஆசிரியராக. . . . .

- ♣ பொலிகண்டி இ.த.க. பாடசாலை – 22.04.1974 – 26.05.1976
- ♣ கீரிமலை நகுலேஸ்வர ம.வி. – 27.05.1976 – 31.06.1979

விஞ்ஞானம், நாடகமும் அரங்கியலும், சுகாதாரமும் உடற்கல்வியும் ஆகிய பாடங்களின் ஆசிரியராக. . . . .

- ♣ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி – 1.1.1982 – 3.5.1993
- ♣ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி – 4.5.1993 – 30.4.1994



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணக் கட்டுரை

# சீனத்து நினைவுகள்

நான்காவது அனைத்துலக மகளிர் மகாநாட்டின் முதல் நாள்! 30.08.1995!

ஆகாயத்தையும் மண்ணையும் இணைத்துத் தண்ணீர்ச் சரங்கள் கோடு போட்டுக் கொண்டிருந்த வேளை! விடி காலத்தின் 'சில்' காற்று, சீனத்து வீதியைத் தொட்டுக் கொண்டு ஓடியது!

சீனத் தலைநகர் பீஜிங்கில் இருந்து சுமார் ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ள 'ஹெய்ரு' நகரின் அந்த நெடு வீதியை நான் கவனமாக அவதானித்தேன். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு பிரதான வீதியைப் போலச் சுமார் நாலு மடங்கு அகலமான வீதி! வீதியின் நடுப்பகுதியில் வாகனங்களுக்கான ஒரு வழிப்பாதை. ஒரு பக்கம் செல்லுகிற பஸ்கள், கார்கள், டாக்சிகள் எல்லாம் ஒரு பாதையில் வேகமாகச் சென்று கொண்டிருந்தன. அதற்கு அருகில் அதே போல மறுபக்கம் போகின்ற வாகனங்கள் பறந்து கொண்டிருந்தன. இந்த "வாகன வீதிக்கு" இருபக்கத்திலும் ஒடுக்கமான பாத்திகள் அமைக்கப்பட்டு, அதில் ரோஜாச் செடிகள் பூத்துக் குலுங்கின. தெரு நீளத்திற்கும் இந்த ரோஜாச் செடிகள் ஏராளமாய்ப் பூத்திருந்த தாலோ, அல்லது சீன மக்களுக்குச் சிறு வயதில் இருந்தே கற்பிக்கப்படும் ஒழுக்கக் கோட்பாட்டு உறுதியினாலோ யாரும் அந்தப் பூக்களில் ஒன்றையாவது பறித்துச் சொந்த மாக்கியதாய்த் தெரியவில்லை.

ரோஜாப் பாத்திகளின் மறுபக்கத்தில் சைக்கிள்கள் செல்லுவதற்கான வீதி! அதுவும் ஒரு வழிப் பாதைதான். அதற்கு அருகே, ஓரமாகப் பாதசாரிகள் செல்லும் ஒடுக்கமான வீதி! எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் வாகனமும் சைக்கிளும் பாதசாரியும் சைக்கிளும் அல்லது வாகனமும் பாதசாரியும் ஒரே இடத்தில் சந்திக்க வேண்டிய தேவையே வராது! சந்திகளில் காவல் துறையினர் நின்று இந்தச் சந்திப்புக்களைச் செம்மைப் படுத்துகின்றனர். விபத்து ஒன்று நேர வேண்டும் என்று யாரும் கடவுளை வேண்டினாலும் கூட, அது நேர வாய்ப்பில்லையே. பாதசாரிகள் தெருவைக் கடக்கக் கூடிய இடங்களில் அதற்கான தெருக்குறி இடப்பட்டிருக்கிறது. வாகனங்கள் அந்த இடங்களில் நின்று செல்லுகின்றன.

கண்ணுக் கெட்டிய தூரம் வரை நான் தெருவிலே ஒரு பொருளைத் தேடினேன் - மிகப் பொறுமையுடன் சலிப்படையாது தேடித் தேடிப் பார்த்தேன். எங்கள் வீதிகளில் மிகத் தாராளமாய்க் கிடைக்கிற பொருள் அது. அங்கு மருந்துக்கும் காணப்படவில்லை. என்ன பொருள் என்று நினைக்கிறீர்கள்? ஆம்! கஞ்சல் குப்பை, கழிவு, துப்பல் ஒன்றும் வேண்டாம். ஒரு கடதாசித் துண்டு அல்லது ஒரு இலை! ம் ஹீம். . . இல்லையே இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கையில் கிடைத்த சீனப் பெண்கள் பற்றிய ஒரு துண்டுப் பிரசுரத்தைப் பிரித்துப் பார்க்கிறேன். யார் இந்தப் பெண் விவசாயி? சப்பை மூக்கும், சிரித்த வாயும், மண் வெட்டி பிடித்த கையுமாய்?

ஜிங் பியான் பிரதேசத்தைச் சேர்ந்த, 'நியூயுகின்!" இவர் தனது பிரதேசத்தில் 1333 ஹெக்ரயர் வனாந்தரப் பரப்பை நல்ல காடாக மாற்றியுள்ளார். சீன அரசு இவரை நாட்டின் "முதல் பத்துப் பெண்களில்" ஒருவராகக் கருதி விருது கொடுத்துள்ளது! கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் "சமைத்துப் போடுவது" மட்டுமே தமது தலையாய கடமையாகக் கருதும் எமது நாட்டுப் பெண்கள் மனக் கண்ணில் ஒரு கணம் தோன்றி மறைந்தனர்.

தெருவிலே இடையிடை துப்புரவாக்குநர் காணப்படுகிறார்கள். அவர்கள் தங்கள் தொழிலுக்குரிய சீருடை அணிந்திருக்கிறார்கள். காலையில் சைக்கிளில் வேலைக்குச் சென்று கொண்டிருக்கிற எல்லாருமே ஏதோ ஒரு சீருடையில் தான் செல்லுகிறார்கள். பணச் செருக்கு மிக்க தோற்றத்துடன் யாரும் காணப்படவில்லை. பிச்சைக் காரர்களும் காணப்படவில்லை.

கூட்டுநர் கையில் விளக்குமாறுடன் ஒரு சிறிய உலோகப் பாத்திரமும் வைத்திருக்கிறார். மரத்தில் இருந்து ஒரு இலை விழுந்தாலும், விழுந்தவுடன் அதை இந்தப் பாத்திரத்தினுள் தள்ளி விடுகிறார். தெரு எந்த நேரமும் நூறு வீதம் துப்பரவாகக் காட்சி தருகிறது. மனித உடற் கழிவுகளை விட்டுச் செல்வதற்கு எந்த விதத் தயக்கமும் இன்றித் தெரு ஓரங்களைப் பயன்படுத்துகிற, எங்கள் சொந்தங்களுக்கு இந்த வார்த்தை சமர்ப்பணம்.

ஒரு பக்கம் செல்லுகிற பாத சாரிகள், சைக்கிள்கள், வாககனங்கள்! பிறகு, மறுபக்கம் செல்லுகிற வாகனங்கள். சைக்கிள்கள், பாதசாரிகள். இந்த ஒழுங்கில் தெரு இயங்கிக் கொண்டிருக்கத் தெருவின் இரு பக்கத்திலும் அதன் எல்லைகளாக ஒழுங்காக வளர்க்கப்பட்டிருக்கும் யூகலிப்டஸ் மரங்கள்! அவை கூடக் குறித்த இடைவெளி தூரங்களில் அளந்து பயிரிடப் பட்டுள்ளன. அடியில் இருந்து ஏறத்தாழ நாலடி உயரத்திற்கு வெள்ளை நிறப் பெயின்றும் அடிக்கப்பட்டு அவை மிக அழகாகக் காட்சி தருகின்றன. பாதசாரிகள் நடந்து போகும் பாதைக்கு அருகில் நின்று அசைந்து ஆடி, அவர்களை வரவேற்று, அவர்களின் வழிக்குப் போதிய நிழலும் தருகின்றன அவை.

சைக்கிள் எத்தனை பேர் பயணம் செய்வதற்கான வாகனம்? ஆம். . ஒரு ஆள் பயணம் செய்வதற்கானது தான். சீனாவில் சைக்கிளில் யாரும் 'டபிள்' போவதைப் பார்க்க முடியவில்லை. மிக அருமையான சந்தர்ப்பங்களில் சைக்கிளின் பின்புறம் பொருத்தப்பட்டுள்ள கூடைகளில் சிறு குழந்தைகள் அமர்த்தப்பட்டிருந்தார்கள்!

மகாநாடு முடிந்து விட்ட மறுநாள்! நாங்கள் பீஜிங் விமான நிலையத்திற்கு வந்து விட்டோம். விமான நிலையம் பனிப்புகாரால் தன்னைப் போர்த்துக் கொண்டு, பச்சைக் குழந்தை போலப் படுத்துக் கிடந்தது. மிகச் சோம்பேறித் தனமாய் விடிந்து கொண்டிருந்த ஒரு காலைப் பொழுது! எங்களுடைய பொதிகள் தனியாக வேறொரு பஸ்ஸில் எங்களுக்குப் பின்னால் வந்தன. எங்கள் பொதிகளை எல்லாம் பஸ்ஸில் ஏற்றி உதவிய ஒரு சீனத்துத் தொண்டர் விமான நிலையத்தில் பொதிகள் இறக்கப்பட்டு எம்மிடம் ஒப்படைக் கப்பட்ட பின்னர் எனக்கு அருகில் வந்தார். தன்னுடைய 'சேட் பொக்கற்'றில் இருந்த சீனத்து நாணயம் ஒன்றை எடுத்துக் காட்டி, மறு கையை நீட்டினார். "மொழி" என்பதும், ஒரு மனிதன் இன்னொரு மனிதனோடு தொடர்பு கொள்வது என்பதும் இவ்வளவு பிரச்சினையானது என்பதும் இதற்கு முன்னர் என்னால் சரியாக உணரப்பட்டிருக்கவில்லை. மகாநாட்டுத் திடல் தவிர்ந்த வேறு இடம் எதிலும் "ஆங்கிலம்" உதவவேயில்லை. சாதாரண சீனப் பிரஜைக்குச் சிறிய சிறிய ஆங்கிலச் சொற்கள் கூடத் தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பஸ்' என்றாலும் விளங்காது. "பாங்க்" என்றாலும் புரியாது. நான் படித்த 'நாடக ஊமம்' உண்மையில் உதவி செய்தது சீனாவில் தான். எதையும் நடித்தே புரிய வைக்க வேண்டி இருந்தது. நடிப்புகளைப் புரிந்து கொள்ளவும் வேண்டி இருந்தது!

சரி, இப்போது இவர் என்ன கேட்கிறார்? காசு கேட்கிறார்! பஸ்ஸில் எங்கள் பைகளைத் தூக்கி வைத்தமைக்கும், பிறகு இறக்கிக் கீழே வைத்தமைக்கும், நாங்கள் தங்கியிருந்த ஹோட்டல்களில் சிலரின் பைகளை 6ம், 5ம், 4ம் மாடிகளில் இருந்தெல்லாம் இறக்கி உதவியமைக்குக் கூலியா? அல்லது லஞ்சமா? அப்படி இருக்காதே! பொதுவாகச் சீனர் லஞ்சம் பெறுவதில்லையே! ஒரு வேளை விதி விலக்கும் இருக்கலாம். என்னிடம் சீனத்துப் பணம் என்று இங்கு கொண்டு வருவதற்காக எடுத்து வைத்த பத்து யுவான் இருந்தது. அதை எடுத்து அவரிடம் நீட்டினேன். அவர் உடனே இரண்டு கைகளையும் நெஞ்சுக்குக் குறுக்கே அசைத்து "நோ, நோ" என்று மறுத்தார். மறுபடி என்னைச் சுட்டிக் காட்டினார். பிறகும் கையை நீட்டினார்.

என்ன இது? ஓகோ! புரிந்து விட்டது. எங்கள் நாட்டுப் பணம் கேட்கிறார். அது தானே பார்த்தேன். பல நாட்டு நாணயங்களையும் சேர்த்து வைக்கிறவராக இருக்கும். எனது 'பேர்சை'த் துழாவி எங்கள் நாட்டு இரண்டு ரூபாக் குற்றி ஒன்றை எடுத்து நீட்டினேன். சிரித்துக் கொண்டு வாங்கி, "சை, சை" என்றார். சை, சை என்றால் 'நன்றி' என்பது இந்தப் பத்து நாளில் ஒருவாறு புரிந்துவிட்டது. இன்னுமொரு ஐந்து ரூபாக் குற்றியும், ஐம்பது சத நாணயமும் கொடுத்து அவரிடம் விடை பெற்றேன்.

ஆம். என்னுடைய கணிப்பில் பிழை இல்லை. சீனத்து மக்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்கிறார்கள். ஒரு போதும் லஞ்சம் பெற்றுக் கொள்வதில்லை.

கொழும்பு விமான நிலையத்தில் 'துரலி'யில் இருந்து இறக்கி நானே காவிக் கொண்டு வந்து வெளியே வைத்த இரண்டு பைகளைத் தூக்கி (நானே காவியது என்றால் அவ்வளவு பாரமற்றது என்பது பொருள்) ஓட்டோவில் வைத்து விட்டு என்னிடம் முப்பது ரூபா வாங்கி விட்டான் ஒரு 'போர்ட்டர்'. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும்வரை, புகையிரதம், பஸ், டிராக்டர், வள்ளம் - இந்தப் பை என்னிடம் பறித்துக் கொண்ட பணம் அதிகம்! சீனாவில் இந்தப் பை எவ்வளவு தூரம் பயணம் செய்தது! ஐந்து சதமும் அது எனக்குச் செலவு வைக்கவில்லை!

சீனத்து மகாநாட்டுத் திடலுக்கு அருகில் அந்தச் 'சுப்பர் மார்க்கட்" இருந்தது. மாடிக்கு மாடி அசைந்து கொண்டிருக்கும் படிகளும், சுற்றிவரக் கண்ணாடிச் சுவர்களுமாய், அது ஒரு பூலோக சுவர்க்கம் போல அழகாய் இருந்தது. கடைசி நாள் கையில் மீதமாயிருந்த ஒரு சிறு தொகையில் சீனத்துப் பொருள்கள் சில வாங்கலாம் என்று சுப்பர் மார்க்கட்டுக்குப் போயிருந்தேன். பொருட்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு பணத்தைக் கொடுக்கப் 'பேர்ஸை'த் திறந்த போது, ஒரு நூறு யுவான் நோட்டுங் கிழிந்து போயிருந்தது தெரிந்தது. அதை அந்த விற்பனைப் பெண் ஏற்றுக் கொள்வாளோ என்று எனக்குச் சந்தேகம். எதற்கும் கொடுத்துப் பார்ப்போம் என்று கொடுத்தேன். சிரித்துக் கொண்டே எற்றுக் கொண்டாள்.

அந்தப் பெண்ணின் அழகான (சப்பை தான்) முகம் இப்போது என் மனக் கண்ணில் வருகிறது. எது அழகானது? முகமா? மனமா?...... பார்த்தீர்களா? காலநிலையும் கூட எங்களில் சிலரைப் போலத்தான். திடீர் கோபம், திடீர் அழுகை, திடீர் மூக்கைச் சிந்திப் போடுதல், உடனேயே சிரித்தல்!

அன்று காலை மழை தூறிக் கொண்டே யிருந்தது. மத்தியானம் எங்கள் வாடிக்கைச் சைவ உணவு வியாபாரியிடம் சோறும் அவித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறிகளும் வாங்கிச் சாப்பிடும்போது கூடச் சிணுங்கிக் கொண்டிருந்தது. இரண்டு யுவானுக்கு ஐஸ்கிறீம் வாங்கிச் சாப்பிட்டபோது, முனகல் நின்று, (ஐஸ்கிரீம் பச்சைத் தண்ணீரை விட மலிவு பாருங்கள். உண்மையே தான் - தண்ணீர் அரைப் போத்தல் 3 யுவான்) இப்போது சிறு வெயிலாகச் சிரிக்கத் தொடங்கிவிட்டது.

மாலை மூன்று மணிக்கு (2-9-95) கலை, கலாசார நிகழ்வுக் கருப் பொருளுக்குக் கீழே, "ஸ்பிறிற் டான்ஸ்" (Sprit Dance) என்ற விடயத்தைப் பார்த்து, இரவு கோடிட்டு வைத்துக் கொண்ட நினைவு வந்தது. தலைப்புக்குக் கீழே, "ஆபிரிக்க நடனம் ஒலிகள், அசைவு, சுவாசம், பிரக்ஞை ஆகியவற்றுக் கூடாக ஒரு மனிதன் அகச் சமநிலை பெறுதல்" என்று குறிப்பிடப் பட்டிருந்ததைப் பார்த்தபோதே, இந்த வேலைப் பட்டறையைத் தவற விடுவதில்லை என்று தீர்மானித்தாயிற்று!

இப்போது 4M - 12 என்று இலக்கமிடப்பட்ட நிகழ்விடத்தை இந்தப் பெரிய பிரதேசத்தில் தேடிப் பிடிக்க வேண்டும்! முதல் நாள் இந்தக் கருத்தரங்கச் சூழலில் சுயாதீனமாய் விடப்பட்டபோது, கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல உணர்ந்தது மெய்! இப்போது ஒன்று தெரியும்! இதோ இந்த மஞ்சள் பிளவுஸ் அணிந்திருக்கும் சீனத்துக் கல்லூரி மாணவிகளைத் (தொண்டர் படைப்பிரிவு) கேட்டால், தேடிப் பிடிக்கக் கூடிய அளவு உதவி கிடைக்கும்!

ஒரு மஞ்சள் பிளவுஸ் காட்டிய திசையில் போய், இரண்டாம் மாடி வரை ஏறித் திரும்பி இறங்கி, முதலாம் மாடிக்கு வந்து, ஒவ்வொரு கதவாய்ப் பார்த்து. . . அப்பாடா! இதோ 4M - 12. சுமார் எண்பது பேர் கொள்ளக் கூடிய பட்டறை அறை, ஏறத்தாழ நிரம்பியிருந்தது. பட்டறையை நடத்துகிற செல்வி. நானா கொறன்ரீமா (Nana Korantemma) ஏற்கெனவே முன்னுக்கு நின்று கொண்டிருந்தார். கறுப்பு இனப் பெண்ணாக இருந்த போதிலும், முகத்தில் ஒரு சிரிப்பும் தேஜஸ்ஸும் நிரம்பியிருந்தன. ஏனோ தெரியவில்லை, (முற்பிறப்பில் பக்கத்து வீட்டில் இருந்திருப் போமோ!) எனக்கு நானாவைப் பார்த்த உடனேயே, மிகவும் பிடித்துப் போய்விட்டது, நிஜம்! எங்களையே பார்த்திருந்தது போல நானும், புஷ்பா கணேசலிங்கமும், அன்னலட்சுமி இராஜதுரையும் உள்ளே நுழைந்தவுடனேயே கதவு மூடப்பட்டு விட்டது.

முன்னுக்கு நின்ற நானா, "வாழ்வே ஒரு லயந்தான். இல்லையா?" என்று கேட்டார். நாங்கள் சிரித்து வைத்தோம். தானும் சிரித்து விட்டு, மேடையின் உள்ளே சென்றார். ஒரு பெரிய சுரைக்காய் வடிவத் தாளக் கருவியில் மணிகள் கட்டி, அதைத் தட்டிய படியே வந்து, இரண்டு நிமிடம் அருமையான ஆட்டம் ஒன்று ஆடி நிறுத்தினார். அந்தச் சத்தம் காதில் விழுந்து, மனதை நிரப்பி, இரண்டொரு சொட்டு வெளியிலும் வழிந்தது. இவ்வளவும் அவர் அணிந்திருந்த அரைப் பாவாடை சட்டையுடனேயே நிகழ்ந்தது. ஆட்டம் முடிந்ததா இல்லையா என்று நாங்கள் தீர்மானிக்க முதலே, "ஒருக்கா எனக்குக் கை தட்டுங்கோவன்" என்று கேட்டுச் சிரித்தார். பிரமித்துப் போய் இருந்த நாங்கள் அதிலிருந்து விடுபட்டு, இறுக்கமாக ஒரு முறை கைதட்டி ஓய்ந்தோம்.

"சரி, இப்ப எல்லாரும் தளர்வாய் இருப்பம். நல்ல ஆழமாய் மூச்சை உள்ளுக்கு எடுப்பம். கண்களை மூடுவம்" என்றார். அவரது முகத்துக்கு மட்டுமில்லை வார்த்தைகளுக்கும் ஒரு ஹிப்னோடிக் ஆற்றல் இருந்திருக்க வேண்டும். விதி விலக்கில்லாமல் எல்லாருமே தளர்ந்தோம். (சீனாவில் தளர் நிலைக்கு வருவதில் என்ன பிரச்சினை? ஷெல் விழும் என்ற பயமா? சுப்பர் சோனிக் அடிக்கும் என்ற பதற்றமா? ஒன்றும் இல்லைத் தானே!) எம்மைச் சுற்றியுள்ள எல்லாப் பொருள்களிலும், எல்லா உயிர்களிலும், எல்லா நிகழ்வுகளிலும் ஒரு லயம் சார்ந்த அதிர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பது பற்றி மிகச் சுருக்கமான ஒரு விளக்கம் தந்தார். வானவில்லைப் பந்தாடிச் செல்வும் வார்த்தைகள். பின்னர் தான் எழுப்பும் ஒலிகளை எம்மை மீள ஒலிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

ஹா, ஹா, ஹா, ஹா
ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீ, ஸ்ரீ
ஹெய், ஹெய், ஹெய், ஹெய்
ஹொ, ஹொ, ஹொ, ஹொ
ஹூ, ஹூ, ஹூ, ஹூ

போன்ற ஒலிகளை அவர் ஒலித்த அதே சுருதி, உரப்பில் அதே இராகத்தில் நாங்கள் மீள ஒலித்தோம். ஒலிகளைச் சில சமயம் மிக நகைச் சுவையாக ஒலிப்பார். பின்னர் தானும் சேர்ந்து சிரிப்பார். "சிரிப்பது உடலுக்கும் மனதுக்கும் ரொம்ப நல்லது. இல்லையே!" என்று கேட்பார்.

மிக மெதுவாக இந்த ஒலிகளுக்கு ஏற்ற அசைவுகளைத் தான் செய்தார். பூப்போட்ட மண்ணிற அரைப்பாவாடையும், வெள்ளை பிளவுஸூம் போட்ட அந்த இளம் உயிரின் அசைவில் ஒரு அதீத அழகு தெரிந்தது. "இவர் ஒரு அரங்க நடிகையாக இருக்க வேண்டும்" என்று நான் அன்னலட்சுமியின் காதில் முணுமுணுத்தேன்.

"சரியான சுகமான ஆட்டம் இல்லையா? விருப்பமான ஆட்கள் என்னோடை சேரலாமே" என்றார்.

சில கதிரைகள் வெறுமையாகின. அவரது தலையைப் போல, இப்போது பத்துத் தலைகள் அசைந்தன.

"மற்ற ஆக்கள் உங்களைப் பார்த்துப் பெருமைப்படினம். இப்ப அவையும் வரப் போயினம்" என்றார். மீண்டும் சிரித்தார். இருபது சோடித் தோள்கள் நானாவைப் போல அசையத் தொடங்கின.

"எழும்பியவர்களுக்காக இருக்கிறவை கைதட்டுங்கோவன்" என்றார். கை தட்டல் பெரிது. மீண்டும் சிரிப்பு!

லய வாத்தியம் வேகமாய் ஒலிக்கத் தொடங்கியது. சபையில் அரைவாசிப்பேர் நானாவைப் போல இடது பக்கம் போய், வலது பக்கம் போய் ஆடத் தொடங்கிவிட்டனர்.

"இந்த ஆட்டம் எமது பிரதேசத்தில் ஆயிரக் கணக்காகன நோயாளிகளைக் குணப்படுத்தி உள்ளது. உங்களுக்கு இதைப் பயில விருப்பமில்லையா?" என்று கேட்டார். மீண்டும் சிரித்தார். ஏறத் தாழ எல்லோரும் எழுந்து விட்டார்கள்.

'டிரம்' ஒலித்துக் கொண்டிருக்க எண்பது பேரும் ஆடி முடித்தோம்.

"இந்தத் தாள ஒலி, சில மூலிகைகள், மதச் சடங்குகள், ஆட்டம், பிரார்த்தனை இவற்றின் கூட்டினால் பல வேறு விதமான நோய்களை நாங்கள் மாற்றி விடுகிறோம்" என்று நானா விளக்கம் கூறி முடித்தார். நேரம் ஐந்து மணியை அண்மித்துக் கொண்டிருந்தது. அடுத்த பட்டறைக்குரிய நிகழ்விடத்தைத் தேடிப் பிடிக்க அரை மணி நேரம் தேவைப்படும். பலர் நானாவுக்கு அருகில் சென்று கதைத்துக் கொண்டிருந்தனர். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்திற்குக் காத்திருக்க முடியாத மன அவஸ்தையோடு நாங்கள் எங்களுக்குள் விமர்சித்தபடி அடுத்த நிகழ்வுக்குப் போய் விட்டோம்.

அடுத்த நாள் (3 - 9 - 95) அதே மூன்று மணிக்கு, 4M - 11 இல் நடைபெறும் Sweet Honey பட்டறையில் நானாவைச் சந்திப்போம் என்று யாருக்குத் தெரியும்? நாங்கள் கொஞ்சம் நேரத்தோடு போய்ப் பக்கத்து அறையில் காத்திருந்த போது, நானா அங்கே வந்தார். எங்களைக் கண்டவுடனேயே, "ஹலோ, ஸ்ரீ லங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேடீஸ்!" என்று சிரித்தபடி அருகில் வந்தார். நேற்று எங்களுடன் கதைக்காமலே எங்கள். கழுத்தில் தொங்கிய இலக்கத் தகடுகளில் இருந்து எங்கள் நாட்டை அவதானித்து வைத்திருக்கிறார். (இந்த இலக்கத் தகடு, சொறி, அறிமுக அட்டை, கழுத்தில் தொங்காமல் மகாநாட்டு மண்ட பத்துக்குள் மட்டுமில்லை, மகாநாட்டுக்குச் செல்லும் பஸ்ஸுக்குள் கூட ஏற முடியாது போங்கள்!) ஒரு அரை மணி நேரம் நாங்கள் மனம் விட்டு மிக நெருக்கமாக உரையாடினோம்.

அட, யார் சொன்னது நானா ஒரு அரங்க நடிகை என்று! என்னுடைய மூளையைச் செருப்பால் அடிக்க வேண்டும். அவர் அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்றில் விரிவுரையாளராக இருக்கிறார். டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். ஆபிரிக்கக் கலாசாரம் அவரது பாடம். நானாவின் 'அம்மம்மா' கானாவில் இருக்கிறார். அவர்தான் இந்த நடனத்தின் வேர். அமெரிக்காவில் பல்கலைக் கழகப் படிப்பை முடித்துக் கொண்ட பிறகு, நானா தனது தாய் நாட்டுக்குச் சென்று ஒரு வருடம் தங்கியிருந்து இந்த நடனம், தாளம், மருத்துவம், சடங்கு எல்லாவற்றையும் பயின்று தனது கல்வித் தரத்துக்கு ஏற்றபடி சில மாற்றங்களைச் செய்து இப்போது அமெரிக்காவில் பயன்படுத்துகிறார். இவரது Asona Aberade Shrine சபையில், பல நூற்றுக் கணக்கானோர் நன்மை பெறுகிறார்கள்.

நானா சொன்னார், "நான் அமெரிக்காவில் தான் முழுமையாகப் படித்தேன். அப்போதெல்லாம் அவர்கள் ஆபிரிக்காவைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அங்கே ஒன்றும் இல்லை என்பது போலத்தான் கற்பித்தார்கள். ஆனால் எனது டாக்டர் பட்டமும் முடிந்த பிறகுதான் எனக்குத் தெரிகிறது, 'ஆபிரிக்கக் கலை கலாசாரத்தில் எவ்வளவு விடயங்கள் இருக்கின்றன' என்று"! திடீரென்று நிறுத்தினார்.

'ஏன் உங்களிடம் இப்படி ஒரு தியேட்டர் இல்லையா? மரபு வழி வடிவம்? பக்தி கலந்த வடிவம்? நம்பிக்கை சேர்ந்த ஆட்டம்?'

"இருக்கிறதே - காத்தவராயன் போல காமன் கூத்துப்போல்!" நான் புஷ்பாவையும் அன்ன லட்சுமியையும் பார்த்தேன். அவர்கள் தலை அசைத்து ஒப்புதல் தெரிவித்தார்கள். "அதில் ஒரு பகுதியை எனக்குப் பாடி ஆடிக் காட்டுங்கோவன்!" நானா மிக உற்சாக மாகிவிட்டார்.

"கோகிலா ஆடுவா" புஷ்பா என்னைக் காட்டிவிட்டார்." சரி. இது சீனாதானே? யார் விமர்சனம் செய்யப் போகிறார்கள்?' என்ற தைரியத்துடன் நானும், "ஆதி சிவன் மைந்தனல்லோ, நானும் ஆதி காத்தான் ஓடி வாறேன் சபையோரே!" என்று இரண்டு வரிபாடி ஆடிக் காட்டினேன். நானா கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தார்.

"இதோ, இருக்கிறதே!" என்று சிரித்தார். அதே காந்த சக்திச் சிரிப்பு. இதற்கு நாங்கள் பாவிக்கும் தாள வாத்தியம் பற்றி விளக்கமாகக் கேட்டறிந்தார். இதன் அடியில் உள்ள சமய நம்பிக்கை பற்றிக் கேட்டார். பிறகு சொன்னார்,

"நிச்சயமாக இதை நீங்கள் உங்கள் யுத்தப் பிரதேசத்தில் குணப்படுத்தலுக்குப் பாவிக்க முடியும்! எல்லாவற்றுக்கும் நாங்கள் அமெரிக் காவையும் ஐரோப்பாவையும் எதிர்பார்ப்பது பிழை" என்றார். அவரது தன்னம்பிக்கை என்னை அதிசயிக்க வைத்தது.

"நான் அடுத்த ஓரிரு வருடங்களில் உலகச் சுற்றுப் பயணம் ஒன்று செய்ய இருக்கின்றேன். அப்போது இலங்கைக்கும் வருகிறேன். உங்கள் தமிழ்க் கூத்துக்களையும், எங்கள் ஸ்பிரிற் டான்சையும் பரிமாறிக் கொள்வோம்" என்றார்.

"எங்கள் நாட்டின் போர் நிலை உங்கள் வருகையை அனுமதிக்குமாயின் உங்களை நாங்கள் யாழ்ப்பாணத்தில் வரவேற்போம்" என்று சொன்னேன். நம்பிக்கை தானே வாழ்வின் உயிர் மூச்சு? நம்பிக்கையுடன் நாங்கள் விலாசங்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிமாறிக் கொண்டோம். (எங்களுக்கு ஃபோன் நம்பர் எதுவும் கிடையாது என்பதை வெட்கமின்றிச் சொல்லி வைத்தோம். விலாசம் கூட மாதத்துக்கு மாதம் மாறும் என்பதைச் சொல்லவில்லை)

* * * * *

"நானா" என்ற ஃபிலடெல்பிய விரிவுரையாளரின் முகம் இன்னும் என் கண்முன்னால் மிக வலுவுடன் சிரிக்கிறது. (ஆயினும் எமது நாட்டின் நிலை அவரை இங்கு பின்னர் வர அனுமதிக்கவில்லை!)

முகம் திரும்பிய இடமெல்லாம் கடலாய்க் கண் குளிரப் பசேல்! *சீனப்* பெருஞ்சுவர் காணப்பட்ட மலை உச்சியில் நாங்கள்!

சுவர் இரட்டையானது; இரண்டு சுவருக்கும் நடுவில் வீதி போன்ற ஒரு பாதை! அந்தப் பாதையில் நின்று சுவருக்கூடாக வெளியே பார்க்கக் கூடியவாறு சுவரில் துவாரங்கள் உள்ளன. சுவர் எழுப்பப்பட்ட காலத்தில், அதற்குள் நின்று கடமை புரிந்த போர் வீரரை நினைவு படுத்தும் வகையில், ஓரிரு *சீன* இளைஞர் அந்தக் கால உடை, ஒப்பனையுடன் உல்லாசப் பயணிகளுக்காகக் காட்சி தருகிறார்கள். ஏனைய உல்லாசப் பயணிகள் செய்தது போலவே நாங்களும் அந்தச் சிவப்பு உடைப் போர் வீரர் வேட நடிகருடன் நின்று ஒரு படம் எடுத்துக் கொண்டோம். (பிற்காலத்தில் ஒரு வேளை 'பிள்ளை குட்டி' எல்லாம் வெளிநாடு போன பிறகு, நரை தட்டிய கிழமாக வீட்டில் தனித்திருக்கையில், நினைவுச் சுகங்களை மீட்க, இந்தப் படங்கள் உதவக் கூடும் அல்லவா?)

இந்தப் பெரும் சுவரைக் கட்டி முடிப்பதற்கு எவ்வளவு மனித உழைப்புத் தேவைப்பட்டிருக்கும் என்பதே, என் மனதில் தோன்றிக் கொண்டிருந்த, அந்தக் கணத்துக்குரிய கேள்வியாகும். *சீனரின்* உழைப்பின் சிறப்பு வியக்கத்தக்கதே!

நியூ யுகின் என்ற பெண் விவசாயியின் உழைப்பை நான் இச்சுவருடன் பொருத்திப் பார்த்துக் கொண்டேன். ஆனால் *சீனாவிலும்* கூட Ph.D எடுக்கும் பெண்களின் நூற்றுவீதம் (1993 இல்) 12% மட்டுமே என்று அவர்கள் கவலைப்படுகிறார்கள். பெண்கள் இன்னும் நெடுந்தூரம் செல்ல வேண்டி இருக்கிறது என்று கூறி இன்னும் கடுமையாக உழைக்கிறார்கள்.

பக்கத்து வீட்டின் குந்தில் அமர்ந்து, அரட்டை அடிப்பதையும், ஊர் வம்பு பேசுவதையுமே தமது முழு நேரத் தொழிலாகக் கொண்ட எமது சகோதரிகளுக்கு இந்தவிடயம் சமர்ப்பணம்.

முதலாவது சர்வதேசப் பெண்கள் மகாநாடு 1975ம் ஆண்டு மெக்சிக்கோவில் நடைபெற்ற போது, அதில் 6000 பெண்கள் பங்கு பற்றினர். இரண்டாவது மகாநாடு 1980இல் டென்மார்க் நாட்டின் கோப்பன் ஹேகன் நகரில் இடம் பெற்ற போது, அதில் கலந்து கொண்ட பேராளர்களின் எண்ணிக்கை 10,000 ஆக உயர்ந்தது. மூன்றாவது புகழ் மிக்க மகாநாடு 1985இல் கென்யா நாட்டின் நைரோபி நகரில் நடைபெற்றபோது, பேராளர் எண்ணிக்கை 15,000 ஆக அதிகரித்திருந்தது. பத்து வருடங்களின் பின் 1995 இல், பீஜிங் நகரில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹெய்ரு நகரின் 40 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டிருந்த மகாநாட்டுத் திடலில் சுமார் 30,000 பெண்கள் உலகின் 187 நாடுகளில் இருந்து கூடி, வரலாற்றில் அதிக எண்ணிக்கையான பெண்கள் கலந்து கொண்ட கீர்த்தி மிக்க மகாநாடு இது வென்றாக்கினர்.

மகாநாட்டின் சின்னம், எட்டுப் பெண்கள் (எட்டுத் திக்கிலுமிருந்து) ஒன்று கூடி உலகத்தை இயக்குவது போன்று அமைந்திருந்தது. சமத்துவம், வளர்ச்சி, சமாதானம் ஆகியவற்றின் அடிப்படையில், மிகப் பரந்து பட்ட விடயத் தலைப்புகளில் மகாநாட்டின் பேச்சுக்கள், கலந்துரையாடல்கள், வேலைப் பட்டறைகள், கலாசார நிகழ்வுகள், ஊர்வலங்கள், கண் காட்சிகள் போன்ற பல நிகழ்வுகள் இடம் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிஸ்தானின் அப்போதைய பிரதமர் பெனாசிர் பூட்டோ அவர்கள் மகாநாட்டில் கலந்து உரையாற்றும் போது, "பெண்கள் மிக நீண்ட யுகங்களாக மௌனமாக இருந்து விட்டார்கள். இம் மகாநாட்டில் அவர்கள் மனம் திறந்து தமது கருத்துக்களையும் கோரிக்கைகளையும் முன் வைத்துள்ளார்கள்" என்று சொன்னார்.

மகாநாட்டில் சிறப்புரை ஆற்றிய திருமதி.ஹிலாரி கிளிங்டன் அவர்கள், 'இந்தக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் பெண்களாகிய உங்களின் முகங்களுக்கூடாக, உலகப் பெண்கள் அனைவரையும் பார்க்க முடிகின்றது. உங்களின் மொழிகளுக் கூடாக, உலகப் பெண்களின் ஒரு மித்த குரலைக் கேட்க முடிகின்றது. உங்களுடைய சக்தியும், உங்களுடைய எண்ணங்களும், உங்கள் கருத்துக்களும், காரிய மாற்றும் திறனும் உலக நாடுகளின் அரசுகளின் கண்களைத் திறக்கச் செய்யும்" என்று சொன்னார். 30.08.95 மாலை 5.00 மணிக்குத் தேசிய ஒலிம்பிக் மைதானத்தில் மகாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்டபோது, மகாநாட்டு வாசகத்தை ஆங்கிலத்திலும், சீன மொழியிலும் கொண்ட பெரிய காற்றுக் கப்பல் ஆகாயத்தில் பறக்க விடப்பட்டிருந்தது. உலகப் பெண்களின் சமாதானத்துக்கும் ஒற்றுமைக்குமான 20,000 புறாக்களும் பலூன்களும் பறக்க விடப்பட்ட காட்சி கண் கொள்ளாக் காட்சியேயாகும்.

ஆபிரிக்கப் பெண்களின் சமாதானக் குழு, சமாதானச் சூளை, உலகப் பெண்களின் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் குன்யிங் சுபத்திரா மாஸ்டிற்றிடம் கையளித்தமை ஒரு வரலாற்று நிகழ்வாகும்.

மகா நாட்டுத் திடலின் ஒரு பகுதியில் நாள்தோறும் காலை 9.00 மணி முதல் 11.000 மணிவரை, சமகால உலக நிகழ்வுகள், அவற்றின் பின்னணியில் உள்ள விசைகள், அவற்றின் விளைவுகள் போன்றவை காத்திரமான விமர்சன நிலையில் முன்வைக்கப்படும் பேச்சுக்கள் இடம் பெற்றன. இது பெண்கள் 21ம் நூற்றாண்டுக்கான திட்டங்களைத் தீட்டப் பெரிதும் உதவியாக இருந்தது.

இதே சமயத்தில் திடலின் பல வேறு இடங்களில் அமைக்கப்பட்ட சுமார் 125 கூடாரங்களில் அல்லது மண்டபங்களில் பல்வேறு துறை சார்ந்த பட்டறைகள், கலந்துரையாடல்கள். ஒவ்வொன்றும் இரு மணித்தியாலங்கள் கொண்டவை. யாங்சி லேக்கிலும், கும்பா ஸ்டேஜிலும் மாலை 7.30 முதல் இரவு 10.30 வரை வெவ்வேறு தரமான, வெவ்வேறு வகையான உலகளாவிய கலாசார அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன. மகா நாட்டிற்கு வந்திருந்த பேராளர் தாம் விரும்பிய நிகழ்வில் பங்கு பெறும் சுதந்திரம் பெற்றிருந்தனர். இது 30,000 பேராளர்களையும் நல்ல முறையில் அணைத்துப் பங்கு பற்ற வைக்கும் சிறந்த உத்தி முறையாக அமைந்த தாயினும், ஒரு தனி நபரின் கோணத்தில் இருந்து பார்க்கும்போது, அவர் 124 விடயங்களைத் தவற விட்டே, ஒன்றில் கலந்து கொள்ளும் 'கொடுமை' காணப்பட்டது. இதனால் மகாநாட்டில் கலந்து கொண்ட எந்த ஒரு பெண்ணும், மகாநாட்டின் நிகழ்வுகளை முழுவதுமாக உள் வாங்கிய திருப்தியைப் பெற முடியாமல் போனது.

மகாநாட்டுக்கு வந்திருந்த பெண்களின் வயது 17 இல் இருந்து 80 வரை பரவியிருந்தது. உலகில் எத்தனை வகையான உடைகள் இருக்குமோ, எத்தனை வகையான தலை அலங்காரங்கள் இருக்குமோ, எத்தனை வகையான தொப்பிகள், காலணிகள், கைப்பைகள் இருக்குமோ அத்தனையையும் ஒரே நேரத்தில் காண முடிந்தது ஒரு அபூர்வமேயாயினும், மொத்தத்தில் மகா நாட்டுப் பெண்கள் அனைவரும் பகட்டுகள் இன்றி எளிமையாகக் காட்சி அளித்தமை அவர்களின் ஆளுமை முதிர்வைச் சுட்டுவதாக இருந்தது.

(தூண்டி தை 97, புரட்டாதி 97)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானக் கதை

# முருகைக் கற்பாறை

கடலில் நீர் சுழித்துச் சுழித்து ஓடுவதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த முருகைக் கல் திடீரென்று கூறியது,

"இந்தக் கடல் எவ்வளவு ஆழம் என்று பார்க்க எனக்குச் சரியான ஆசை"

முன்னிரவு நேரம். முழு நிலவு தலைக்கு மேல் நிற்பதை முருகைக் கல்லுக்குள் இருந்தபடி பார்த்து இரசித்துக் கொண்டிருந்த. டைனோ பிளாஜெல்லேற்,

"நாங்கள் இருக்கிற கடலுக்கு என்ன பேர் முருகைக் கல் அண்ணா?" என்று கேட்டது.

"இது இந்து சமுத்திரம். இலங்கைத் தீவின் காலிமுகக் கடல். இது இன்னும் தெரியாதே உனக்கு? நாங்கள் இந்து சமுத்திரம், தென் கிழக்காசியக் கரைகள், தென் பசுபிக், மேற்கிந்தியக் கரைகள் ஆகிய இடங்களில், கடற்கரையில் இருந்து கால் மைல் தூரம் உள்ளே பரவி இருக்கிறோம். இந்த நாட்டுத் தமிழர் மாதிரி நாங்களும் உலகம் முழுவதும் இருக்கிறோம்" என்று சிரித்தது முருகைக்கல்.

"அண்ணா, நீ சிரிக்கும் போது வடிவாகத்தான் இருக்கிறது. உனக்கு உயிர் இருக்கிறதா?"

"எனக்கு உயிரில்லை என்றுதான் கனபேர் நினைக்கிறார்கள். என்னுடைய பெயர் 'கல்' என்று முடிவதால் அப்படி ஒரு சந்தேகம். ஒரு காலத்தில் நான் இறந்து போகலாம். இப்போது எனக்கு உயிர் இருக்கிறது."

"சரி, அப்படியானால் நாங்கள் கீழே போய்ப் பார்ப்பமா?"

"நான், போவேன். உன்னால் தானே போக முடியாமல் இருக்கிறேன்!"

"என்னால் உனக்குக் கஷ்டம் என்று சொல்லுகிறாயா? நான் உனக்குள் இருந்து உணவு தயாரிப்பதால் உனக்கும் லாபம். மறந்து விட வேண்டாம்."

"சரியப்பா. நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் சூரிய ஒளி ஊடுருவாத தூரத்துக்குப் போனால் நீ செத்துப் போய்விடுவாய். அதுதான் நான் 90 மீற்றர் தூரத்திற்குக் கீழே போவதில்லை. அதையும் மறந்துவிடாதே!"

"அது என்ன 90 மீற்றர் கதை?"

"கடலில் 90 மீற்றர் தூரம் வரைதான் போதிய சூரிய ஒளி வரும். அதுதான் நான் அந்த எல்லைக்குள் வசிக்கிறேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவரும் சுவாரசியமான உரையாடலில் இருந்தபோது, தூரத்தில் மனிதர்களின் அரவம் தெரிந்தது. இருவருக்கும் நடுக்கந்தான்.

"இரண்டு பேர் வருகிறார்கள். இங்கேதான் வருகிறார்கள். . ."

"ஐயோ, எங்களை அள்ளிக் கொண்டு போகப் போகிறார்கள். சுண்ணாம்புச் சூளையில் போட்டு எரிக்கப் போகிறார்கள்"

டைனோ பிளாஜெல்லேற் கத்திக் கத்தி அழுது கொண்டிருக்கும் போது, அவர்கள் அண்மையில் வந்துவிட்டார்கள். இருவருக்கும் கோணலான இரட்டை மண்டை! முகங்கள் சிவப்புத் தோலாக இருந்தும் எடுபடவில்லை. இருவரும் சகோதரராக இருக்கலாம்.

"அவர்கள் அந்தப் பக்கம் தள்ளிப் போகிறார்கள். நீ பயப்படாதே" என்று தேற்றியது முருகைக்கல்.

"அவர்களுக்கு உன்னைத்தான் தேவை உன்னால் நானும் சாக வேண்டியதாக இருக்கிறது."

"என்னையும் தேவையில்லை. நான் சுரக்கிற கல்சியம் காபனேற்றுத்தான் அவர்களுக்குத் தேவை"

"உன்னை இந்தக் கடற்கரையில் இருக்கவிட்டால், நீ கடலரிப்பைத் தடுப்பாய் என்று அவர்களுக்குத் தெரியவில்லை"

"பெரிய பெரிய படித்த மனிதர்களுக்கே விளங்கவில்லை. அங்கே பார்"

முருகைக் கல் காட்டிய திசையில் ஒரு அழகான உல்லாசப் பயணிகள் ஹோட்டல் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

"வடிவாகத் தானே இருக்கிறது. . ."

"வடிவாகத்தான் இருக்கிறது. உங்கு வருபவர்கள் பாவிக்கும் கழிவு நீர் சாம்பு, சவர்க்காரம் எல்லாம் இங்கு வர, நாங்கள் செத்துப் போவம்"

"அப்படியே? செத்துப் போவோமே? அப்படியானால் வெளி நாட்டுக்குப் போவோம் வா"

"நான் வரவில்லை என்ன? நீயும் இலங்கைத் தமிழர் மாதிரி வெளியேறுகிறாய்?" என்று கேட்டுச் சிரித்தது முருகைக் கல்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இல்லை. எனக்குக் கவிஞர் சோ.ப. அரவ்களின் கவிதை வரி ஒன்று நினைவு வருகிறது. அது தான்."

"ம். . . சொல்லு பார்ப்போம். . ."

"செத்துப் போவம் ஆதலாலே ஓடுறம் கிளம்புறார்"

"ஓடினால் ஒரு போதும் சாக மாட்டார்களோ"

"அதுதானே! எல்லாரும் ஒரு நாள் சாவது நிச்சயந்தானே!"

"நாங்கள் ஓடாமல் இருப்போம். இருந்து எங்கள் நாட்டுக் கடற்கரைகளைக் கட்டுவோம். பேணுவோம்"

திடீரென்று தலையைச் சிலுப்பி, மேற்கே பார்த்த டைனோ, "இதென்ன? பக்கத்திலே வெளிச்சம்? நேவி வருகிறதோ?" என்று கேட்டது.

"சீ. . . சீ. . . அது உன்னுடைய நண்பன் நொக்டிலியூக்கா. அவன் தன்னுடைய உடம்பில் இருந்து உயிரியல் முறையில் வெளிச்சம் விடுகிறான். கடல் நல்ல வெளிச்சமாய் இருக்கிறது." என்றது முருகைக் கல்.

"தேன் நிலவு மாதிரி இருக்கிறது. எங்கே ஒரு பாட்டுப்பாடு. கேட்போம்"

இருவரும் உல்லாசமாய்ப் பாடிக் கொண்டே உறங்கிப் போயினர்.

(23.4.89 முரசொலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைக் கவிதை

# குரும்பைத் தேர்

நான் குரும்பை ஐந்து நண்பா கொண்டு வந்தேன்
நல்ல ஈர்க்கு எட்டுக் கொண்டு வாரும்
ஏனெனில் இன்றைக்குத் தேரொன்று செய்துமே
இழுத்து விளையாடி இன்புறுவோம்.

பூக்கள் கொண்டு வாரும் பொலிவாகச் சூட்டுவோம்
பூதனும் நாதனும் மேள தாளம்
பாக்குடன் வெற்றிலை பழவகை வைத்துமே
பண்பாகப் பூசனை செய்திடுவோம்.

வெள்ளை சிவப்பு நிறக் கடதாசிகள்
விளங்கிட ஒட்டி அமைத்துள தேர்
கொள்ளை அழகு கொடுக்குது பாருங்கள்
பிள்ளைகளே ஓடி வாருங்களே.

பாலனும் வேலனும் பாட்டுக்கள் பாடுங்கள்
பசுபதி ஆனந்தக் கூத்தை ஆடும்
பாலரே சாமியைப் பார்த்து வணங்கிடப்
பாய்ந்து வாரும் தேர் போய்விடுமே.

(05.02.89 முரசொலி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவருக்கான விஞ்ஞானக் கட்டுரை

# வௌவால்கள்

"வௌவால் ஒரு பறவையோ மிருகமோ?" என்பது சிறுபிள்ளைகளிடம் பெரியவர்கள் கேட்கிற பிரபலமான கேள்விகளில் ஒன்று.

முலையூட்டிகள் எனப்படும் விலங்குகள் அநேகமாய்ப் பறப்பதில்லை. பறவைகள் முட்டையிடுமே தவிரக் குட்டியீன்று பால் கொடுப்பதில்லை. வௌவால் பறக்கும்; அதே நேரம் குட்டியீன்று பால் கொடுக்கும். இதனால் ஏற்பட்ட சிக்கல் தான் முதலில் வந்த கேள்வியின் அடிப்படை.

இந்தச் சிக்கல் பலகாலம் பல மனிதர்களின் மூளையில் இருந்து வந்ததால் சில மனிதர்களுக்கும் "வௌவால்' எனப் பட்டம் வைக்கும் நிலை இருந்தது. இப்போதும் இருக்கிறது. "இங்காலும் பாடி, அங்காலும் பாடும்" மனிதர்கள் பொதுவாக இந்தப் பட்டத்துக்கு அருகதை உடையவர்கள். தொழிலாளரோடு இருக்கும் போது, தொழிலாளர் பக்கம் சாய்ந்து கதைத்து, முதலாளியின் அறைக்குப் போனவுடன் முதலாளி சொல்வதெல்லாம் சரி என்று தலை அசைக்கிற ஒரு மனிதருக்குச் சக தொழிலாளர், "வௌவால்" என்று கௌரவப் பட்டம் சூட்டி அழைப்பது எனக்குத் தெரியும்.

வெளிச்சம் குறைவான இடங்களில் கூரைகளில் தலை கீழாகத் தொங்கிக் கொண்டு கூட்டமாகக் காணப்படும் வௌவால்கள் முலையூட்டிகளே என்பதில் விஞ்ஞானிகளுக்குச் சந்தேகமில்லை. சில சமயங்களில் இரு நூறுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் இவை கூட்டமாகக் காணப்படும்.

இரவு ஏழு மணியளவில் பெரியவர்கள் எல்லாம் சத்தமிட்டுக் கொண்டே இரை தேடப் புறப்படும் போது 'குட்டிகள்' வீட்டிலே தங்கி விடும். 'வேட்டையாடல்' முடிந்து, அதிகாலையில் இவை, தமது இருண்ட முகாமுக்குத் திரும்பும் போது, மீண்டும் ஒரு 'அமளி துமளி' ஏற்படும். வீடு திரும்பியவர்கள் தத்தமது பிள்ளைகளை இனம் கண்டு, அவர்களுக்குப் பக்கத்தில் இடம் எடுத்துக் கொண்டு, பகல் தூக்கம் போட ஆரம்பிக்க, ஏறத்தாழ ஒரு மணி நேரம் செல்லும்.

குளிர் காலத்தில் 'குடி பெயரும்' பழக்கமும் வௌவால்களுக்கு உண்டு. ஆறுமாத காலம் இவை பெயர் தெரியாத இடங்களில் சென்று ஒளித்து விடும். இந்தக் காலம் முடிந்து, பழைய வீட்டுக்குத் திரும்பி வரும் போது, இவை அமைதி இழந்து, பதற்றமடைந்து காணப்படும். குட்டிகள் பல புதிதாய்ப் பிறந்துவிடும்.

கூட்டமாகப் பகலில் தொங்கும்போது, ஒரு குறிப்பிட்ட வௌவால் அநேகமாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் தூங்கும். கூட்டத்தைச் சேராத ஒரு புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வௌவால் தற்செயலாய்ப் புதிய இடத்துக்கு வந்து விடுமாயின், மற்றைய வௌவால்கள் எல்லாம் சேர்ந்து கத்தி அதைக் கலைத்து விடும்.

பறப்பதற்கு அதிக சக்தி தேவை என்பதால் வௌவால்கள் அதிக சக்தியை வழங்கும் உணவுகளை உட்கொள்ளுகின்றன.

"மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூறி இரந் தழைப்பார் யாவருமங்கில்லை" என்று பாடிய ஔவையார், வௌவால் பழம் தின்னுவதை அவதானித்திருக்கிறார். ஆனால் எல்லா வௌவால்களும் 'சைவம்' என்று கூற முடியாது. உருவத்திற் சிறிய வௌவால்கள் சில பூச்சி உண்பவை. வேறு முலையூட்டிகளின் இரத்தத்தைக் குடிக்கும் வௌவால்களும் உள்ளன. இவை Vampire bats எனப்படும். சில சமயங்களில் இவை சிறு குழந்தைகளைத் தாக்கி இரத்தம் உறிஞ்சுவதும் உண்டு. தமது கூரான வேட்டைப் பல்லினால் குருதிக் குழாய்களைக் குத்தி இவை குருதியை உறிஞ்சிவிடும். 'ரேடார்' முறை மூலம் தனது இருப்பிடத்தை அறியக் கூடிய ஒரே ஒரு நிலம் வாழ் முலையூட்டி வௌவால்தான். இவை உருவாக்கும் உயர் சுருதி ஒலி (75,500 - 12500 Hz) மனிதனால் கேட்க முடியாத ஒலி. இந்த ஒலியின் தெறிப்பைக் கொண்டு வௌவால்கள் தமது இருப்பிடத்தை மட்டுமல்ல, பூச்சிகளின் இருப்பிடத்தையும், தமது பறக்கும் பாதையில் உள்ள தடைகளையும் கண்டறிகின்றன.

உலகம் பூராவும் பரந்து காணப்படும் வௌவால்கள் பெரும்பாலான இடங்களில் அதிக எண்ணிக்கையில் வாழ்வதுடன் வெற்றிகரமாயும் வாழ்கின்றன.

இரவு நேரப் பார்வைக்கு இசைவாக்க மடைந்துள்ள வௌவால்களின் கண்களுக்குப் பகல் நேரப் பார்வை இல்லை. அதாவது பல விடயங்களில் இவை 'குருடாக' இருந்து விடும்.

என்ன இருந்தாலும் வௌவால் தனது சொந்தக் குட்டிகளில் வெகு கவனம். வாற் சவ்வினால் ஒரு பொக்கற் அமைத்து, புதிதாய்ப் பிறந்த குட்டியை இந்தப் பொக்கற் தொட்டிலில் வைத்துக் கொள்ளும். அம்மா வௌவால் கூரையில் தலைகீழாகத் தொங்கிய படியே தனது ஒரு செட்டையால் குட்டியை அணைத்துக் கொண்டு, அதற்குப் பாலூட்டும் காட்சி அற்புதமானது.

"குட்டி" பிறந்து முதல் ஐந்து நாள்களில் அம்மா இரவு வேலைக்குப் போகும்போது, குட்டியையும் தன்னுடன் அழைத்துச் சென்றுவிடும். அதற்குப் பிறகு குட்டிக்குக் கண் திறந்து விடும். ஆகவே அது தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை வந்துவிடுவதால், குட்டியை வீட்டிலே விட்டுச் செல்லும். இவ்வாறு விடப்படும் குட்டிகள் இரவு முழுவதும் ஓடிஓடிச் சத்தம் போட்டு, கலைத்துக் கலைபட்டு விளையாடிப் பெரிய குளப்படி எல்லாம் செய்யும்.

குட்டிக்கு 23 நாள் வயது வந்தவுடன். அது பறக்க ஆரம்பித்து விடும். பழக்கமற்ற புதிய இடமாயினும், நூறு மைல் தூரத்திலிருந்து கூட, வௌவால் தன் வீட்டுக்கு வழி கண்டு பிடித்து விடும். சிலவேளை மணித்திலாயத்திற்கு 45 மைல் கூடப் பறந்து தீர்த்து விடும்.

மனிதர்களுடன் வௌவால்கள் சிநேகம் கொள்ளக் கூடியவை. பழக்கமான மனிதன் கையில் பூச்சிகளை வைத்திருந்தால் மிக லாவகமாக வந்து மனிதனின் கையைக் காயப் படுத்தாமல் பூச்சிகளை அப்பிக் கொண்டு சென்று விடும்.

யார் யாருக்கு 'வௌவால்' என்று பட்டம் வழங்கலாம் என்று இப்போது ஒரு முறை மீள் சிந்தனை செய்து பாருங்கள்!

(முரசொலி 29.11.1990)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவக் கட்டுரை

# மறைந்திருந்தே பெண்களைத் தாக்கும் மார்புப் புற்று நோய்

உலகில் வாழும் பெண்களில் ஒவ்வொரு பதினொரு பேரில் ஒருவர் மார்புப் புற்று நோயினால் பீடிக்கப்படுகிறார்கள் என மருத்துவப் புள்ளியியலாளர்கள் தெரிவிக்கிறார்கள். இப்பயங்கர நோயானது பொதுவாக நீண்டகாலம் ஒளித்திருப்பதே இதன் கொடூரத் தன்மையாகும். புற்று நோய்த்திரட்டு ஒன்று கண்டு பிடிக்கப்படாமலே உறங்கு நிலையில் நோ ஏதும் இல்லாமலே, பல வருடங்கள் கூட இருந்து விடுகிறது. ஆனால் அது ஆரம்ப நிலையில் கண்டு பிடிக்கப்படலாம், கண்டு பிடிக்கப் படவேண்டும் என்பது முக்கியமானது.

மேற்கு நாடுகளில் பெண்கள் அடிக்கடி தமது உடலை முற்றாக மருத்துவச் சோதனைக்கு உட்படுத்திக் கொள்கிறார்கள். இந்த நிலை எமது நாட்டில் முற்றாக இல்லை என்றே கூறலாம். தாங்க முடியாத வேதனை தோன்றிய பிறகே பொதுவாக எமது நாட்டுப் பெண்கள் மருத்துவர் ஒரு வரை நாடுகின்றனர்.

கவனிக்க வேண்டிய விடயங்கள் :-

1. முலைக் காம்பின் திசை.
   திடீரென்று உள்ளே தள்ளப்பட்ட அல்லது திசை மாறிய முலைக் காம்பு, உள்ளே வளரும் ஒரு கட்டியைச் சுட்டலாம்.

2. மார்பின் சுரப்புகள்.
   முலைக் காம்பின் ஒரு குறிப்பிட்ட துவாரத்தினூடான, அது அழுத்தப்படாத நிலையிலும் வெளியேறும் சுரப்பு ஒரு அபாய அறிவிப்பாகும்.

3. முலைக் காம்பைச் சுற்றியுள்ள பிரதேசம்
   இப்பிரதேசத்தில் ஏற்படும் வீக்கம் அல்லது நிறமாற்றம் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியது.

4. அக்குளில் தோன்றும் கட்டி :-
   நிறை கூடிய பெண்களில் பொதுவாகத் தோன்றும் இத்தகைய மென்மையான தீங்கற்ற கட்டிகளின் பருமன் அல்லது வடிவம் மாறினால்.... கவனம்!

5. தடிப்படையும் இழையங்கள் :-
   மார்பகங்களின் மேற்பகுதியில் தோன்றும் தடிப்பான நார் இழையங்களின் பருமனில் மாற்றம் தோன்றினால், எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

6. வீக்கம் :-
   மார்பகத்தின் மேற்பரப்பில் தோன்றும் ஒரு வீக்கம், குறிப்பாக அக்குளுக்கு அண்மையான திசையில் இருக்குமாயின், அது ஒரு புற்று நோயின் அறிகுறியாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தோலில் மாற்றம் :-
முலைக் காம்புத் துவாரங்கள் திடீரெனப் பருத்தல் அல்லது தோல் கரகரப்பாக மாறுதல், அவதானம் எடுக்க வேண்டிய விடயமாகும்.

8. குழிந்த பிரதேசம் :-
குவிவாக இருக்கும் மார்பின் எப்பகுதியாவது குழிந்து வர ஆரம்பித்தால், வைத்திய ஆலோசனை அவசியம் என்பதை மறந்து விட முடியாது.

ஒரு மாபிளின் அளவை விடச் சிறிதாக இருக்கும் போது, மார்புப் புற்று நோய்க் கட்டி பெரும்பாலும் உடலின் ஏனைய பகுதிகளுக்குப் பரவி இருக்காது. அந்த நிலையில் மார்புப் புற்று நோய் 90% மாற்றப்படக் கூடியது. ஆயினும் அந்த நிலையில் அது இனம் காணப்படுவது குறைவு. எமது சனத்தொகையின் தேவைகளை ஈடு செய்யக் கூடிய மருத்துவர்கள் எண்ணிக்கை ரீதியில் இங்கு குறைவாகக் காணப்படுவது மாத்திரமல்லாமல், எமது பெண்களின் கல்வித்தரம் குறைவாக இருப்பதும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

எவ்வளவு அதிகமான காலத்துக்கு இக்கட்டி அறியப் படாமல் மறைந்திருந்து விடுகிறதோ, அவ்வளவுக்கு அது வேறு இடங்களுக்குப் பரவி, குணப்படுத்த முடியாத நிலையையும் அடைந்து விடுகிறது.

ஆகவே தமது தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு ஒவ்வொரு பெண்ணிடமுமே இருக்கிறது. பத்து நிமிடம் செலவு செய்து தமது மார்பைப் பரிசோதிக்கும் பொறுப்பை ஒவ்வொரு பெண்ணும் தனக்காகத் தானே எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு தளவாடியுடன் இந்தத் தற்சோதனையை இலகுவாகச் செய்யலாம்.

மாதம் ஒரு முறை இச் சோதனை செய்யப்படுவது உகந்தது. மாதவிடாய் வட்டத்துக்கு உட்படும் பெண்கள், ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் வந்து, குருதி ஒழுக்கு நின்றுவிட்ட ஓரிரு தினங்களுக்குள் செய்யலாம். மாதவிடாய் வராத பெண்கள் (வயதினால், கர்ப்பத்தினால் அல்லது பாலூட்டலினால்) ஒவ்வொரு மாதமும் முதல் திகதியில் செய்யலாம்.

தளவாடிக்கு முன்னால் நின்று கொண்டு முதலில் வெறும் பார்வைக்கு ஏதும் மாற்றம் தெரிகிறதா என்று கவனிக்க வேண்டும். வெளிச்சம் பக்கப் பாட்டில் இருந்து வரும்படி அறையை ஒழுங்கு செய்வது நல்லது.

கைகளை இடுப்பில் வைத்துக் கொண்டு முன்பக்கம் குனிந்து முதலில் பார்க்க வேண்டும். பின்னர் கைகளைத் தலையின் பின் புறம் கட்டிக்கொண்டு உடலைப் பக்கமாக அசைத்து மார்பின் கீழ்ப் புறத்தில் தெரியும் மாற்றங்களைப் பார்க்க வேண்டும். பின்னர் கைகளை நெற்றியின் முன் கும்பிடுவது போலப் பிடித்துக் கொண்டு, உடலை அசைத்துப் பார்க்கலாம். இறுதியாகக் கைகளை வயிற்றின் மேல் வைத்துக் கொண்டு பார்த்து விட்டால், "பார்வைச் சோதனை" முடிந்து விடும்.

இனித் தொடுகைச் சோதனை செய்ய வேண்டும். முலைக் காம்புகளை மெதுவாக அழுத்திப் பார்த்தல் இதன் முதற்படி. கர்ப்பமான அல்லது பாலூட்டும் தாய் தவிர்ந்த ஏனைய பெண்கள், அதிக அழுத்த மின்றி ஒரு மார்பின் ஒரு குறிப்பிட்ட துவாரத்திலிருந்து திரவம் வெளியேறினால், உடனே வைத்தியர் ஒருவரை அணுக வேண்டும்.

இதன் பின் வலது கையின் விரல் நுனிகளை மார்பில் வைத்துச் சிறுசிறு வட்ட ஒழுங்கில், முலைக் காம்பிலிருந்து வெளிப்பக்கமாகத் தடவிப் பார்க்க வேண்டும். படிப்படியாகப் பெரிய வட்டங்களில் கை செல்லும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, இடது தோளின் கீழ் தலையணை ஒன்றை வைத்துக் கொண்டு படுக்க வேண்டும். இடது கையைத் தலைக்குக் கீழே வைத்துக் கொண்டு, வலது கையினால் இடது மார்பைச் சோதிக்கலாம். இதே போல மறுபக்கத்திற்கும் செய்ய வேண்டும்.

இந்தத் தொடுகைச் சோதனை உருவாகும் கட்டிகளைக் கண்டு பிடிக்க உதவும். ஆனால், இவ்வாறான சோதனை ஒன்றில் ஒரு கட்டியைக் கண்டு பிடித்து விட்டால் பெரும் பதற்ற மடையத் தேவையில்லை. ஏனெனில் இவ்வாறு தோன்றும் கட்டிகளில் 60 - 80% ஆனவை தீங்கற்றவை யாகவே இருக்கும். ஆயினும் உடனே ஒரு வைத்திய நிபுணரைச் சந்திப்பது நல்லது. அது ஒரு புற்றுக் கட்டியாக இருந்தால், தாமதிக்கும் சில வாரங்கள் எமனை வரவழைத்து விடக்கூடும். மார்புப் புற்று பொதுவாக வேகமாய்ப் பரவும். சில சமயம் நாலு வாரங்களில் இரு மடங்கு பருமனை அடைந்து விடும்.

மாதாந்த மார்புச் சோதனையை எமது வழக்க மாக்குவோம். புற்று நோயால் இறப்பை எதிர் கொள்ளும் நிகழ் தகவைக் குறைப்போம்.

(14.9.1988 வீரகேசரி)

**ரியூசன் ஆசிரியராக. . . . . . .**

- விஞ்ஞானம், ஆங்கிலம், பௌதிகம், இரசாயனம், உயிரியல் ஆகிய பாடங்களின் ரியூசன் ஆசிரியராகத் தெல்லிப்பழையில்
  1975 முதல் 1990 வரை
- விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் ரியூசன் ஆசிரியராகக் கரவெட்டியில்
  1995 இடப்பெயர்வில்
- விஞ்ஞானம், ஆங்கிலம், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களின் ரியூசன் ஆசிரியராகக் கொழும்பில்
  2007 – 2010 வரை

---

*சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக.......*

*பண்டத்தரிப்புக் கோட்டத்தில் விஞ்ஞான பாடத்திற்கு.....*

*04.06.1991 - 30.06.1992 வரை*

---

அழகியற் கல்விக்கான (நாடகமும் அரங்கியலும்)

தொலைக் கல்விப் போதனாசிரியராக. . . . .

புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி நிலையத்தில்

26.08.1991 - 1995 வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேட்டிகளில் பதில்கள்

❒ **உங்கள் குடும்பச் சூழல், மற்றும் இலக்கிய ஈடுபாட்டின் பின்னணி பற்றிக் கூறுங்கள்?**

☆ எனது கிராமம் விழிசிட்டி. தெல்லிப்பழையின் தென் மேற்குப் பகுதியில் அமைந்த, வாழையும் கமுகும் வெற்றிலையும் நிறைந்த அழகிய சிறு கிராமம். மழை கால அருணோதயம் போன்ற வாழ்வு.

கிராமத்தவர் அநேகம் பேர் சைவ உணவுக்காரர். மென்மையான கலை உள்ளம் படைத்தவர்கள். தேவாரங்களைப் பண்ணோடு இசைப்பதில் புகழ் பெற்றவர்கள். நான் சிறுமியாக இருக்கும் போது வாழ்ந்த பண்டிதர். சி.கதிரிப்பிள்ளை, பண்டிதர். வே.சங்கரப்பிள்ளை போன்றோர் ஏனையோரின் மரபு இலக்கிய ஈடுபாட்டிற்கு வழிகாட்டிகள். எனது தந்தையார் பண்டிதர் கதிரிப்பிள்ளையின் மாணவர். அதிபராகப்பணி புரிந்தவர். பாரம்பரிய இலக்கியங்களில், புராணங்களில் அறிவு மிகுந்தவர். சத்தியவான் சாவித்திரி இசை நாடகத்தில் சாவித்திரியாக நடித்தவர்.

சிறுவயதில், நாள்தோறும் அவருடன் காலையில் கிணற்றடியில் குளிக்கும் போது எனக்குத் 'திருக்குறள்' பாடம் நடக்கும். துலா மிதித்து இறைக்கும் போது, அவரும் சிறிய தந்தையாரும் பாடும் தேவாரங்களும், இசை நாடகப் பாடல்களும் காதில் விழும்.

இயல்பாக வந்த இந்தப் பாரம்பரியப் பின்னணிக்கு, 'மகாஜனா' உரம் போட்டு வளர்த்தது. கவிஞர். செ.கதிரேசர் பிள்ளையிடம் தமிழ் படித்த போது அதன் வளர்ச்சி சிறப்பாய் அமைந்தது. அவரது நாடகங்களில் நடித்து அகில இலங்கை ரீதியாக முதற் பரிசுகளைப் பெற்ற போது, கலை ஈடுபாட்டின் மகிழ்வு பிடிபட்டது. உலக சௌந்தர்யங்கள் யாவும் எங்களுக்குள் நிறைந்து விட்ட திருப்தி.

தரம் எட்டில் நான் படித்தபோது, எனது தமிழ் விடைத் தாளைத் திருத்திய ஒரு புதிய ஆசிரியை, "இந்தப் பிள்ளை ஒரு எழுத்துப் பிழை கூட விடவில்லை. கட்டுரையும் மிகச் சிறப்பாய் உள்ளது. நூறு புள்ளி போடலாமா?" எனக் கவிஞரிடம் கேட்டபோது,

"அவருக்கு நீங்கள் நூறு புள்ளி போட்டிருக்காவிட்டால் தான், நான் ஏன் என்று கேட்டிருப்பேன்!" என்று அவர் சொன்னாராம்.

நல்ல சூழல், வீட்டிலும், கல்லூரியிலும் வாய்த்தது நான் பெற்ற அதிர்ஷ்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❒ **தங்கள் எழுத்துலக ஆரம்பம் பற்றி. . . .?**

☆ எனது எழுத்துலக வாழ்வு 1972இல் ஆரம்பமானது. அன்பிற்கு முன்னால் என்ற எனது முதற்கதை, 'குயில்' சஞ்சிகையில் பிரசுரமானது. அப்போது நான் பல்கலைக் கழக 2ம் வருட மாணவி. மருத்துவராக வேண்டுமென்று கனவு கண்டேன். எழுத்தாளராக வந்தேன்.

❒ **சிறந்த எழுத்தாளனை உருவாக்குவது. . ?**

☆ திறமை மட்டுமில்லை. திறமைக்குப் பின்னே இருந்து தொழிற்படும் மனிதத்துவமே சிறந்த எழுத்தாளனை உருவாக்குகிறது.

❒ **சிறந்த சிறுகதை எப்படி இருக்க வேண்டும் என்று கருதுகிறீர்கள்?**

☆ புதிய அனுபவம் ஒன்றை வாசகனுக்குத் தொற்ற வைக்கக் கூடிய மின் வெட்டுப் பார்வையாக இருக்க வேண்டும்.

❒ **ஒருவன் எழுத்தாளனாக வர விரும்பின் அவன் செய்யவேண்டிய ஆரம்ப முயற்சி என்ன?**

☆ Vigorous reading. மிக ஏராளமாய் வாசித்தல். வாசிப்பவற்றில் பயன் நிறைந்தவற்றைக் குறித்து வைத்தல். குறித்து வைப்பவற்றை மீண்டும் பல முறை வாசித்தல். பின்னர் அவை பற்றி ஆழ்ந்து சிந்தித்தல், சமூகத்தைக் கருத்தூன்றி நோக்குதல்.

❒ **இன்றைய இலக்கிய உலகில் விரும்பத்தகாத நிகழ்வு என்ன?**

☆ சில படைப்பாளிகள் அல்லது விமர்சகர்கள், பல்வேறு புனை பெயர்களுக்குள் மறைந்து கொண்டு (ஏன்?) சகோதர படைப்பாளிகள் விமர்சகர்களைப் புண்படுத்தப் பத்திரிகைகளைப் பயன்படுத்தல். இவர்கள் ஏன் தமது சொந்தப் பெயர்களில் எழுதத் தயங்குகிறார்கள்? அந்தத் தயக்கமே பிழை செய்வதன் அடையாளம்!

❒ **நீங்கள் இதுவரை எழுதிய சுமார் எழுபது சிறுகதைகளில் உங்களுக்கு மிகவும் பிடித்தது எது?**

☆ எனக்கு மிகவும் பிடித்த சிறுகதை அல்லது குறுநாவலை நான் இன்னும் எழுதவில்லை.

❒ **ஒரு முறை எழுதிய கதையை மீண்டும் எழுதுவது பற்றி. . .?**

☆ எந்த ஒரு படைப்பையும் ஒரே முறையில் எழுதி விடுகிற திறமை (?) என்னிடம் இல்லை. நான் எழுத நினைப்பதைப் பலமுறை மனதில் எழுதிப் பார்ப்பேன். இது சிலவேளை இரண்டு மூன்று மாதங்களுக்கும் நடக்கும். பின்னர் ஒரு நாள் அதன் சுருக்கத்தை மட்டும் எழுதிப் பார்ப்பேன். அதில் இக் கதைக்குப் பொருந்தி வரக் கூடிய விடயங்களை அடையாளமிடுவேன். இதன் பின்னர் அதை விரித்து எழுதுவேன். எழுதியதை நானே வாசித்துப் பார்ப்பேன். எனக்குப் பிடிக்காத சொற்களை மாற்றுவேன். இப்படி எழுதி முடிந்ததை எனக்கு நம்பிக்கையுள்ள ஒரு வாசகர் அல்லது விமர்சகரிடம் கொடுப்பேன். அவருடைய அபிப்பிராயம் சரியென்று தோன்றினால் மீண்டும் மாற்றி எழுதுவேன். பத்திரிகை அல்லது சஞ்சிகைக்கு அனுப்ப முதல் எனது கதையைக் குறைந்தது மூன்று பேர் வாசித்திருப்பார்கள்.

❒ **எழுத்துலகில் தங்களுக்கு உந்து சக்திகளாக இருப்போர். . . இருந்தோர். . ?**

☆ கவிஞர் செ.கதிரேசர் பிள்ளை, பி.எஸ்.பெருமாள், டொமினிக் ஜீவா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்.நா.சுப்பிரமணியன், ஏ.ரி.பொ, புலவர்.ம.பார்வதி நாதசிவம், எனது தந்தையார், கணவர், மகன், பண்டிதர்.க.உமா மகேஸ்வரன், கவிஞர்.சோ.பத்மநாதன், புலோலியூர், ஆ.இரத்தின வேலோன், சைவப் புலவர்.சு.செல்வத்துரை, பண்டிதர்.சி.அப்புத்துரை, பட்டியல் மிக நீளமானது.

❒ **இலக்கிய வாழ்வில் நீங்கள் அதிகம் மகிழ்ந்த கணங்கள். . .?**

☆ எனக்கு அதிகம் அப்போது அறிமுகமில்லாத கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள், "Perhaps as the most successful woman writer in this country writing in Tamil, Kohila Mahandran has on many occasions proved her....." என்று 'Island' பத்திரிகையில் எழுதிய போதும், 'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்' நூலுக்கான அரச சாகித்திய விருதினை, பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் பெற்றுக் கொண்டபோதும்.

❒ **உங்களுக்கும் ஈழநாடு பத்திரிகைக்கும் உள்ள தொடர்பு எப்படியானது?**

☆ மிக நெருக்கமானது. கோகிலா மகேந்திரன் என்ற எழுத்தாளர் பற்றி ஒருவருக்கும் தெரியாமல் இருந்த ஆரம்ப காலத்தில் எனது கதைகளைப் பிரசுரித்து, என்னை ஊக்கப்படுத்தியது ஈழநாடு. அப்போது வாரமலர் ஆசிரியராக இருந்த திரு.பி.எஸ்.பெருமாள் அவர்கள் மறக்கப்பட முடியாதவர். ஈழநாட்டிற்கான எனது நன்றி வெறும், வார்த்தைகளால் சொல்லப்பட முடியாதது.

❒ **பல பெண்கள் கலை இலக்கிய முயற்சிகளிலும், பெண்ணியச் செயற்பாட்டிலும் ஆரம்பத்தில் முனைப்புடன் ஈடுபடுவார்கள். ஆனால் திருமணத்தின் பின்னர், இவர்களின் செயற்பாடுகள் அநேகமாக இல்லாமல் போவதைக் காணக் கூடியதாக உள்ளது. இந்தப் பின் வாங்கலின் காரணம் என்ன?**

☆ இதன் விடை கேள்விக்கு உள்ளேயே உண்டே! திருமணத்தின் பின்னர் ஒரு மாற்றம் ஏற்படுகிறதென்றால், அதற்குக் காரணம் திருமணமாகத்தானே இருக்க முடியும்? வேலைத் தலத்தில் இருந்து கணவன் களைத்து வருவதை எதிர்பார்த்துக் கையில் மணம் மிகுந்த கோப்பியும் தலையில் பூவுமாகக் காத்திருக்கும் பெண்ணைத்தான் இலட்சியக் கதாநாயகியாக, ஆண்கள் மட்டுமில்லைப் பெண்களும் காட்டினார்கள். கணவனைத் திருப்திப் படுத்துவதும், அவன் சொற்படி நடப்பதும் அவனது வெற்றிக்கு உறுதுணையாக இருப்பதுமே, ஒரு பெண்ணின் கடமை என்று பெண்ணும் நம்புகிறாள். அதனால் தனது சொந்தத் திறமைகளையும், ஆளுமையையும் 'தியாகம்' என்ற குழியில் போட்டு மூடி விடுகிறாள். பல நூற்றாண்டு காலமாக எமது இலக்கியங்களும், பாரம்பரியப் பாதைகளும் அழுத்தி வந்த விடயம் இது. இலகுவில் மாறிவிடாது.

உலகத்தில் பெண்களே அதிக அளவு மனச்சோர்வு நோய்க்கு (Depression) உட்படுகிறார்கள் என்று உளவியல் நிபுணர்கள் கூறுகிறார்கள். அதைப் பற்றிய விழிப்புணர்வும் இவர்களிடம் இல்லை.

கட்டிளமைப் பருவத்தில் இருக்கின்ற முனைப்பான செயற்பாடுகளும், சிந்தனையும் அந்தக் காலம் முடியக் கூர்மங்கிப் போவதும் ஒரு காரணமாக இருக்கலாம். இந்தக் கருத்தை மையப்படுத்தி 'இருட்டுக்குள் சுருட்டி' என்றொரு நாடகத்தை நாங்கள் தயாரித்தோம்.

ஆனால், என்னைப் பொறுத்த வரை திருமணம் எனது ஆளுமை வளர்ச்சிக்கு மிக வசதியாய் அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❐ **இன்று பெண்களின் ஆற்றல், ஆளுமை, வாழ்க்கை முறை என்பன நமது மண்ணில் நிறைய வளர்ச்சி கண்டிருக்கிறது. எனினும் சராசரியான மரபு வழியான பணிதல் நிலையும் இன்னொரு பக்கத்தில் ஒரு பேணுகையாக இன்னும் உண்டு. இந்தப் பிரச்சினையில் உங்கள் அவதானிப்பு என்ன?**

✰ தேவை வரும்போது நடத்தை மாற்றம் வருவது இயல்பு. இன்று எம்மைப் பாதுகாக்க வேண்டிய தேவை கொண்டு வந்த பல மாற்றங்களில் பெண்களின் மனப் பாங்கு மாற்றமும் ஒன்று. ஆனால் எல்லாரும் மாறிவிடவில்லை. கண்ணகியும் நளாயினியுமே இன்றும் எமது இலட்சியப் பெண்களாக எடுத்துப் பேசப்படுகிறார்கள். தமது சொந்தக் காலில் நின்று தாமே தீர்மானம் எடுத்து, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளை நிகழ்த்திக் காட்டும் பெண்கள் பற்றிக் காவியங்கள் எழுதப்படவேண்டும். அவை பற்றிச் சமுதாயத்தில் எடுத்துப் பேசப்பட வேண்டும். மாற்றம் தொடரும். ஆயினும் ஒரு இரவுக்குள் எல்லாவற்றையும் மாற்றிவிட முடியாது.

❐ **ஈழத்தில் கலை இலக்கியத் துறையில் ஈடுபட்ட பெண் எழுத்தாளர்கள் மிகக் குறைவு என்றும், இவ்வாறு எழுதப் புறப்பட்டவர்களில் ஒரு சிலர் தவிர ஏனையோர் ஜனரஞ்சகப் படைப் புக்களையே தந்து சென்றுள்ளனர் என்றும் கூறப்படுகிறது. இது எந்த அளவுக்கு நியாயமானது?**

✰ இந்தப் பிரச்சினை இங்கு மட்டுமில்லை. தமிழகத்திலும் பேசப்படுவதுண்டு. 'பெண் எழுத்தாளர்களிடம் அறிவு பூர்வமான சிந்தனைகளையோ, தர்க்க ரீதியான கருத்து ஆராய்வுகளையோ எதிர்பார்ப்பதற்கில்லை என்று நமது தமிழ் நாட்டின் புகழ் பெற்ற இலக்கிய விமர்சக மேதைகள் சிலர் தீர்த்திருக்கிறார்கள்" என்று ராஜம் கிருஷ்ணன் சொல்லுகிறார். ஈழத்தில் இலக்கியத்துறையில் ஈடுபட்ட பெண் எழுத்தாளர்கள் மிகவும் குறைவு என்பது உண்மைதான். ஒரு இலக்கியக் கூட்டத்திற்கு எத்தனை பெண்கள் வருகின்றார்கள்? சங்கீதம், நடனம் போன்ற கலைகளில் ஓரளவு ஈடுபடுகிறார்கள். அதிலும் புத்தாக்கத் திறன் குறைவு. நாடகக்கலையில் ஈடுபடுபவர்கள் எண்ணிக்கை இப்போதுதான் ஓரளவு அதிகரித்து வருகிறது.

ஆண் ஆதிக்க சமுதாயக் கட்டமைப்பு இன்னும் பேணப்படுவதுதான் எல்லாவற்றிற்கும் காரணம். ஒரு சமுதாயத்தில் நூற்றுக் கணக்கான பெண் எழுத்தாளர்கள் தோன்றும் போது தான் ஒரு சிலர் மிகத் தரமாக எழுதும் நிகழ் தகவு ஏற்படும். ஆயிரக் கணக்கான ஆண் கவிஞர்கள் தோன்றிய பிறகுதான், இங்கு 'மகாகவி' போன்ற ஒரு தரமான கவிஞனை நாங்கள் தரிசித்தோம். எடுத்த எடுப்பில் மிகத் தரமான ஒரு பெண் எழுத்தாளர் தோன்ற முடியாது. அதற்குப் பல ஆரம்பப் படிகள் தேவை.

அதே சமயத்தில், ஜனரஞ்சகப் படைப் புக்களைப் பெண்கள் மட்டுந்தான் எழுதினார்கள் என்று குற்றம் சுமத்த முடியாது. அவ்வாறு விட்டுச் சென்ற ஆண்களும் நிறைய உள்ளனர். அதே சமயத்தில், தமிழ் நாட்டுடன் ஒப்பிடுகையில் ஜனரஞ்சகப் படைப்புகள் வரும் வேகம் இங்கு குறைவு என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

❐ **அரசியல் பொருளாதாரக் கட்டமைவில் எமது மண்ணில் பெண்களின் ஆளுமை விருத்தியும், பங்கும் இன்று முன்னேற்றமாக இருக்கிறது. ஆனால் இந்த முன்னேற்றச் செயற்பாடுகள் சார்ந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கிய வெளிப்பாடுகள் குறிப்பிடக் கூடிய அளவுக்கு வரவில்லை. என்ன காரணம்.?**

☆ அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பில் எந்தப் பெண்கள் பங்கு கொள்கிறார்களோ, அவர்கள் மத்தியில் இருந்து ஆயிரக் கணக்கான எழுத்தாளர்கள் தோன்ற வேண்டும். ஆனால் எமது சமூகம் பொருள் மையச் சமூகம். பணம் ஈட்டுவதிலும் அதைச் சேர்த்து வைப்பதிலும் அதிக நாட்டமுள்ள இனம். பணத்துக்கு அதிக முக்கியத்துவம் தருகின்ற மனப்பாங்கு கொண்ட சாதி. ஸ்பிராங்கர் என்ற உளவியலாளர் மனிதர்களை ஆறு பெரிய ஆளுமை வகுப்பினுள் அடக்குவார். அதில் நாங்கள், தமிழர் பலர் பொருளாதார ஆளுமை கொண்டவர்களே (The Economic type) என்று நான் நினைப்பதுண்டு. பொருள் சம்பாதிக்கும் பெண்களை அநுமதிக்கும் சமூகம் அவர்கள் கலை, இலக்கியங்களில் ஈடுபடுவதை விரும்புவதில்லை. அவர்கள் (Aesthetic type) ஆக மாறுவதை அனுமதிப்ப தில்லை. அது தேவையில்லாத ஆட்டம் என்பது தான் சமூகத்தின் கணிப்பு.

ஆகவே இந்த மனப்பாங்கு மாற்றப் படவேண்டும்.

❒ **உங்கள் அண்மைக் கால எழுத்துக்களில் உளவியல் பார்வை உளவியல் கருத்துக்கள் விரவிக் காணப்படுகின்றன. உளவியல் கருத்துக்களை நேரடியாகக் கூறுகின்ற இடங்களில் விவரணப் பாங்கு மேலோங்கும் சாத்தியம் தெரிகிறது. இது பற்றி உங்களின் கருத்து என்ன?**

☆ அண்மையில் 'நான்சி பரன்' என்ற அமெரிக்க உளவியல் பேராசிரியை இங்கு வந்திருந்தார். அவர் 'குட்டியானை துணிவு பெறுகிறது' என்று ஒரு உளவியல் புனைகதை எழுதி (Psychological fiction) அந்தக் கதையைச் சொல்வதன் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு உளச் சிகிச்சையைச் செய்ய விரும்புகிறார். எங்கள் நாட்டில் இவ்வாறு உளவியல் புனைகதை எழுதும் எழுத்தாளர்கள் யாரும் இல்லை. இன்று இது எமக்கு ஒரு கட்டாயத் தேவை. இத்தகைய கதைகளோடு நாங்கள் பலர் எங்களைப் பொருத்தி இனம் காண்போம். இதன் மூலம் ஒரு உளச் சமநிலை பேணப்படும். என்னுடைய கதைகளில் விவரணப் பாங்கு மேலோங்குகிறதோ இல்லையோ என்பதை விமர்சகர்கள் கூறட்டும். ஆனால் எமது சமூகத்திற்குப் பயனுள்ள ஒன்றைச் செய்கிறேன் என்ற திருப்தி எனக்கு இருக்கிறது. எல்லாரும் அரைத்த மாவை அதே போலத் திருப்பி அரைப்பதில் என்ன இருக்கிறது?

❒ **அதாவது படைப்பாளி தன் நியாயத்திற்கு உரிய வகையில் தன் மனதுள் திரண்டுள்ள தீவிரமான எண்ணங்களை வெளிப்படுத்துவதுடன் பணி நிறைவடை கின்றது, என்பது தானே பொருள்?**

☆ படைப்பாளி தன் நியாயத்துக்கு உரிய வகையில் தன் மனதுள் திரண்டுள்ள எண்ணங்களைச் சமூக மேம்பாட்டுக்கு ஊறு செய்யாத வகையில் வெளிப்படுத்த வேண்டும். அதன் கலைத்துவச் சிறப்பு அதன் தரத்துக்கு நேர் விகித சமனாகும்.

❒ **இன்று உங்கள் வீடும் கிராமமும் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளன. ஒரு படைப்பிலக்கிய வாதியின் உணர்வு, பிரச்சினை என்பவற்றினூடாக இந்த இழப்பைப் பற்றிக் கூறுங்கள்?**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ எங்கள் கவிஞர் சோ.ப அவர்களின் வார்த்தையதில் சொல்வதானால், "எவ்வாறிது ஆறும்? என் சொல்லித் தேறும்?" என்று கூறினால் போதும்.

எல்லாத் தோற்றங்களும் திடீரென்று ஒரு சமயத்தில் இல்லாது விட்ட ஒரு தோற்றம்.

கிராமத்தின் வடக்கு எல்லையில் அமைதியாய்க் குந்தியிருந்த வீடு! மனத்திரையில் நினைவுப் பம்பரம் படுவேகமாய்ச் சுற்றுகிறது. வீட்டின் தெற்கு எல்லையில் உள்ள மாஞ்சோலை. அங்கே வரும் அழகழகான குருவிகளை நானும் அப்போது சிறு பாலனாய் இருந்த என் மகனும் பார்த்து அவற்றுக்குப் பின்னே ஓடித்திரியும் நினைவுகள். வீட்டின் மேற்கு எல்லையில் அமைந்த பொற்கலந்தம்மை வைரவர் ஆலயம்! அதன் சூழலில் மிகப் பெரிய அரசுகள்! ஆல மரங்கள்! வீட்டில் இருந்து ஒரு கால்மைல் தூரத்தில் நாங்கள் புல்லுக்கும் விறகுக்கும் போகின்ற 'நிறையப் புலம்'. மழை காலத்தில் அங்கே நெஞ்சைத் தொட்டு நிற்கும் 'குதிரை வாலி'ப்புல்லு. அங்கே பறக்கும் பல வகைப்பட்டங்கள். கிழக்கே ஒரு காணி தள்ளி ஒரு வாழைத் தோட்டம். கிராமத்தில் அனைவரும் உறவினர் என்பதால், இரவு பகல் பாராமல் திறந்து விரித்த படியே கிடக்கும் படலைகளும், கதவுகளும்!

யார் எப்போது வந்தாலும் சாப்பாடு கொடுத்தே அனுப்புகிற அம்மாவின் வழக்கம். எல்லாம் இழந்து ஆத்மாவின் ஒரு பொறி இன்னும் அழியாமல் கனன்று கொண்டிருக்கிறது. இப்போது இருக்கு மிடத்தில், (1994) யாராவது விருத்தினர் வந்தால், 'அமருங்கள்' என்று சொல்ல முடியாமல், அவர்களை வெளியே முற்றத்தில் அமர வைக்க வேண்டிய நிலை! 'எழுத்தாளர்' எனக்கு ஒரு மேசை போட முடியாத 'இடவசதி!' விழிசிட்டியில் விடப்பட்டவை போக, மீதியாக உள்ள பொருள்களிலும், தளபாடங்கள் சில சுது மலையில், புத்தகங்கள் பல கரவெட்டியில். நாங்கள் இணுவிலில்!

இந்த இழப்பின் தாக்கம் மிகப் பெரிது. "குருவி கூவ மறந்ததோ?" நாடகத்தின் மூலமும், 'முகாமுக்குப் போகாத அகதிகள்', 'மனதையே கழுவி' போன்ற சிறுகதைகள் மூலமும் ஒரு சிறு பகுதி முட்டைத் தீர்த்துள்ளேன். ஆனால் பெரும்பகுதி, ஆழ் மனதில் புதைக்கப்பட்டுள்ளது. எப்போது எப்படி வெளிவரும் என்று சொல்ல முடியாது.

❒ **நமது இன்றைய சிறுகதை, நாவல் இலக்கியத்தின் போக்குப் பற்றிக் கூறுங்கள்?**

☆ வாழ்வும் யுத்தமும் பிரிக்க முடியாமல் இணைந்து போனதால், பெரும்பாலான சிறுகதைகள் இப் போராட்ட வாழ்வைப் பற்றி ஏதோ ஒரு கோணத்தில் கூறுகின்றன. சில கதைகள் சிறப்பான கலையம்சத்துடன் வருகின்றன. பெரும்பாலானவை யுத்தத்தைப் பற்றி எழுத வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் கொண்ட கதைகள் ஆகிவிடுகின்றன. அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் சிக்கல் கொண்ட, அமைதியற்ற, அந்தரமும் பதற்றமும் நிறைந்த வாழ்வு நாவல் எழுத உகந்த சூழ்நிலையாக இல்லாத தாலோ என்னவோ, வெளிவரும் நாவல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

ஆழமான மன எழுச்சிகளைத் தருகின்ற துன்பமே எப்போதும் அற்புதமான இலக்கியங்களின் தோற்றத்திற்குக் காரணமாய் இருந்துள்ளது. இரண்டாம் உலகப் போரின் பின் எழுந்த இலக்கியங்கள் இதற்கு நல்ல சான்று. இந்த வகையில் இந்த மண்ணிலும் இந்தச் சூழல் மிகச் சிறந்த இலக்கியங்களைத் தோற்றுவிக்கும். அத்தகைய ஒரு காலம்

தானாகக் கனிந்து வரும். என்னைப் பொறுத்த வரையில் இடம் பெயர்ந்த நிலையும் எனது குடும்பத்தின் பொருளாதாரத் தாக்கமும், நாவல் எழுதும் எனது ஆவலைத் தற்காலிகமாக மழுங்கடித்துள்ளன.

1982ம் ஆண்டு முதல் வருடம் ஒரு நூல் வெளியிடுவது என்று ஒழுங்கான திட்டத்தின் கீழ் செயற்பட்டு வந்த நான், 1987இல் போர்ச் சூழலின் மிக இறுக்கமான நிலை ஆரம்பித்ததுடன், எல்லாவற்றையும் கைவிட வேண்டியதாயிற்று.

❒ **நீங்கள் நாடகத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர். சிறுவர் அரங்கில் உங்கள் கவனம் அதிகமாக இருக்கிறது. இன்றைய நமது சூழலையும், சிறுவருக்கான பிரச்சினைகளையும் நமது சிறுவர் நாடகங்கள் கருப்பொருளாக்குவது பற்றி என்ன கூறுகிறீர்கள்?**

☆ சிறுவர் நாடகங்களின் கருப்பொருள் அவர்களின் சிந்தனைக்கு எட்டக் கூடியதாகவும் அவர்களிடத்தில் நல்லதோர் மனப்பாங்கைத் தோற்றுவிக்கக் கூடியதாகவும் இருத்தல் மிக அவசியம். சிறுவரின் பிரச்சினைகள் நாடக மாக்கப்படலாம். அரங்கில் சிறுவர் மிக விரும்பும் ஆட்டம் பாட்டு, விளையாட்டு என்பன விரவி இருத்தல் வேண்டும் எனவும் அரங்கு சிறுவர் விரும்பும் விடயங்களைக் கொண்டு கவர்ச்சி யாக்கப்பட வேண்டும் என்றும் விடயம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், யுத்தச் சூழலில் சிறுவர் பெற்றுள்ள உளப் பாதிப்புக்களை அவர்களின் மன இறுக்கங்களைக் குறைவடையச் செய்யும் ஒரே ஒரு நோக்கத்துக்காகவே நாடகங்களைச் செய்கிறேன். எனது பாடசாலையில் (தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை) சுமார் நூற்றைம்பது பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை, உறையுள், பாதுகாப்பு, அன்பு என்ற அடிப்படைத் தேவைகளே முழுமையாகப் பூர்த்தியாக்கப்படாத நிலை. இந்தப் பிள்ளைகள் வீட்டு வேலை செய்யவில்லை என்று அல்லது பரீட்சையில் அதிக புள்ளி எடுக்கவில்லை என்று நாங்கள் அவர்களைத் தண்டிப்போமாயின் எங்களைவிட முட்டாள்கள் வேறு இருக்க முடியாது. அவர்களது உணர்வுகளுக்கு வடிகால் தேவைப்படுகிறது. டி.வி,சினிமா வானொலி போன்ற பொழுது போக்குகள் எதுவும் அற்ற இறுக்கமான இந்தச் சூழலில் கலை மூலமாவது அவர்களைக் கொஞ்ச நேரம் தளர்வாக இருக்கச் செய்கிறேன். இதுவே இன்று ஒரு கலைஞன் செய்யக் கூடிய மிகப் பெரிய பணி என்பது எனது கருத்து.

❒ **நவீன நாடகம் பற்றிய விழிப்புணர்ச்சி எந்த அளவுக்கு நமது பார்வையாளரிடம் சென்றுள்ளது? உங்கள் நாடகங்கள் இதில் எந்த வகையான பங்காற்றி யிருக்கின்றன?**

☆ நவீன நாடகம் பற்றிய விழிப்புணர்வு எமது பார்வையாளரிடம் போதாது என்பது உண்மைதான். அதைப் படிப்படியாக வளர்த்தெடுக்க வேண்டியது நாடக அறிஞர்களின் கடமை. உலக நாடக அரங்கு எங்கோ வெகு தொலைவுக்கு வளர்ந்து விட்டது. நாங்கள் நிமிர்ந்தாவது பார்க்கத்தான் வேண்டும். என்னைப் பொறுத்த வரையில், கலை, இலக்கியத் துறையில் விமர்சகர்கள் பாராட்டும் படி பெரிதாக எதையும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் 1987க்கு முன் இருந்தது உண்மைதான். இன்று என்னைச் சுற்றி நிறைந்துள்ள துன்பமே என்னை வதைக்கிறது. Self-Actualization என்பது எங்கோ எட்டாமல் செல்வது போலிருக்கிறது. எனது நண்பர்கள் உறவினர்கள், மாணவர்களின் துன்பத்தையும் எனது துன்பத்தையும் குறைக்கும் ஒரு ஊடகமாக மட்டுமே நான் நாடகத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்துகிறேன். இதனால் நடிகர், பார்வையாளர் இரு பகுதியினரும் நன்மை பெறுகிறார்கள். மனதுக்குப் பெரிய அமைதி தருகின்ற பணி இது!

❐ **சாதாரண பெண் என்ற நிலையில் இருந்து உங்களை ஒரு சுய பொருளாதாரச் சார்புள்ள பெண்ணாக மாற்றிய காரணிகள் எவை?**

☆ சாதாரண பெண் என்பதும், சுய பொருளாதாரச் சார்புள்ள பெண் என்பதும் இரு வேறு கருத்துள்ள சொற்றொடர்களாக இருப்பது எமது நாட்டின் சாபக் கேடு. ஒவ்வொரு மனிதப் பிறவியும் ஒரு சுயாதீன தனிப் பிறவி என்ற வகையில் சுய பொருளாதார நிறைவுள்ள உயிரியாக இருக்கின்ற பொழுது தான், அந்த உயிரின் சுதந்திரம் பேணப்படுகின்றது. ஆகவே ஏனைய பல பெண்களைப் போல, நான் சுதந்திரமான பெண்ணாக இருக்க விரும்புகிறேன் என்பது தான், என்பது மட்டுந்தான் காரணி.

❐ **வளர்ந்து வரும் பெண்களுக்கு நீங்கள் கூற விரும்பும் அறிவுரைகள் எவை?**

☆ யாருக்கும் அறிவுரை கூறுவதில் எனக்கு விருப்பமில்லை. அதற்குரிய தகுதியும் எனக்கில்லை, அவர்களுடைய பிரச்சினைகளை அவர்களில் ஒருத்தியாக இருந்து பகிர்ந்து கொள்ள விருப்பம். அவர்கள் தங்கள் சுய ஆளுமையை முழுமையாக வளர்த்துக் கொள்ளவும், எமது சமுதாயத்தில் நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும், தன்னம்பிக்கைத் தெளிவும் உள்ளவர்களாக வளரவும் உதவ விரும்பம்.

(ஈழநாடு, மெய்யொளி போன்ற சஞ்சிகைகளில் 1987, 1995, 1995 ஆண்டுகளில் வெளிவந்த பேட்டிகளில் இருந்து! பேட்டி கண்டவர்கள் பாலமுரளி, கருணாகரன், கவிதா)

SLPS பரீட்சையில் சித்தி யெய்திய பின்

பகுதித்தலைவராக. . . . . .

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி - 1.6.1989 - 3.5.1993

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி - 4.5.1993 - 30.4.1994

---

அதிபராக. . . . .

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை

1.5.1994 - 8.4.1999

---

SLEAS பரீட்சையில் சித்தி யெய்தியபின்

பிரதிக் கல்விப் பணிப்பாளராக. . . .

வலிகாமம் கல்வி வலயத்தில். . . கல்வி முகாமைத்துவப் பிரதிப்பணிப்பாளர்

9.4.1999 - 30.6.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகம்

# மின்னுவதெல்லாம்

அந்தப் பச்சைப் பசேலென்ற புற்றரையில், அழகாக நெடிதுயர்ந்து நிமிர்ந்து நிற்கும் தென்னை மரங்கள்! மரங்கொத்தி ஒன்று ஒரு தென்னையில் பறந்து வந்து உட்கார்ந்த நேரத்தில், பிறந்து மூன்றே நாள் ஆகியிருந்த தவளைக் குஞ்சு ஒன்றும் தனியாக மரத்தடிக்கு உலாவ வந்தது. தூரத்தில் ஒரு அழகான காட்சியைக் கண்டு அப்படியே பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டது தவளைக் குஞ்சு.

"ஆகா! என்ன மென்மையான பளபளப்பான மேனி! மென் மஞ்சள் நிறத்தில் கரிய புள்ளிகள்! பழைய உடையை - அந்த வெள்ளை 'நெற்' உடையைக் கழற்றி எறிந்து விட்டு, உள்ளே இருந்த புத்தம் புது ஆடையுடன் அந்தப் பிராணி, மெதுவாக அமைதியாக, வளைந்து, வளைந்து செல்வது, பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கிறது!

தோலைக் கழற்றி விட்டு ஊர்ந்து செல்லும் பாம்பைப் பார்த்து விட்ட தவளைக் குஞ்சுக்கு ஒரே உற்சாகம்! அருகில் போய் அதன் தோளில் ஏறி விளையாடினால் என்ன என்று எண்ணுமளவிற்கு ஒரே உற்சாகம். திடீரென்று, ஹி, ஹி. . .ஹிக். . ஹீக். . என்று ஒரு சத்தம். பயந்து போய்த் திரும்பிப் பார்த்தது தவளைக் குஞ்சு.

முதுகில் மூன்று வாள். கரிய வாள் வைத்துக் கொண்டு, சடைபோன்ற வாலை உயர்த்தி, அசைத்துப் பெரிதாகச் சத்தம் போட்டபடி ஓடிவரும் அந்த அணிலைக் கண்டதும், பெரிதும் பயந்து போய், இதயம் 'பக் பக்' என்று அடித்துக் கொள்ள, ஒரே வேகமாக ஓடத் தொடங்கியது குஞ்சு. மெதுவாக ஓசையின்றிச் சாதுபோல் ஊர்ந்து செல்லும் பாம்பின் பக்கம் ஒரு தாவில் எட்டிப் பாய்ந்து உதவி கேட்க நினைத்தது. 'லபக்!' ஒரே பாய்ச்சலில் பாம்பின் வாயினுள் முழுதாகச் சென்றுவிட்டது தவளைக் குஞ்சு. . . பாவம்!

இந்த நிகழ்வுகளை எல்லாம் பார்த்துக் கொண்டு மரத்தின் மேல் அமர்ந்திருந்த மரங்கொத்தி, மனம் மிக நொந்து போய், எதிர்காலச் சந்ததியினரின் நன்மைக்காக, அந்த மரத்தில் இரண்டு வாக்கியங்களைப் பொறித்து விட்டுப் பறந்து போனது.

'புறத் தோற்றத்தைப் பார்த்து ஏமாந்து விடாதே!'
'மின்னுவதெல்லாம் பொன்னல்ல!'

(ஈழநாடு - 4.5.86)

5ம் தரப் பரீட்சை

NPTA நடத்திய தரம் 5 பரீட்சையில் 'A' பிரிவு சித்தி - 1959



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

## பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் மறைந்த போது

திடீரென!
"போய் வருகிறேன்" என்கிறார் பேராசிரியர்.
திகைத்துப் போகிறோம் நாங்கள்,
"மறுபடி வருவீர்களா?
களத்தின் காவலராய் இருந்தீர்கள்,
கனமான ஆலோசனை தந்தீர்கள்,
கருத்திலே கவனமாய் நின்றீர்கள்,
மறுபடி வருவீர்கள் தானே!"
மலை போன்ற எதிர்பார்ப்பில் நாங்கள்!

"மறுபடியுமா? நானெப்படி மறுபடியும் வரமுடியும்?"
சிரிக்கிறார் அவர்! அதே சிரிப்பு!
தமிழ் கற்பிக்கும் போது வருகிற அதே
தனித்துவமான சிரிப்பு!
"தமிழ் விழாக்களுக்குத் தலைமை தாங்க?"
இறுதி வேண்டுதலாய்,
ஈனஸ்வரத்தில் எமது குரல்!

"நான் நானாக வரவேண்டும் என்பதில்லையே!
எனக்குப் பதிலாக இன்னொரு பூ
நான் உதிர்ந்த இடத்தில் மற்றொரு மலர்
எனது நினைவுகள் ஜனித்துக்
கொண்டேயிருக்கட்டும்
நினைவுகள் நிரந்தரமானவை...!"
மீண்டும் அதே சிரிப்பு!
தாங்க முடியவில்லை!
குமுறலைத் தாங்க முடியாமல்
கொட்டத் தொடங்குகிறோம்!
"வேண்டாம், வாருங்கள், போக வேண்டாம்!"
'இறைவனைப் பார்த்துப் பேசிவிட்டு வருகிறேன்.'
போகிறார் அவர்.
இறைவன் அவரை ஆசீர்வதிப்பார்
அதிலென்ன சந்தேகம்?
நாங்கள் தான் பாவம்.

(28.01.1989)

பரீட்சை மூலம் கிடைத்த பட்டங்கள்

1. வட இலங்கைச் சங்கீத சபை – நாடக கலாவித்தகர் – 1991
2. யாழ் பல்கலைக் கழகப் புறநிலைப் படிப்புகள் அலகும் சாந்திகமும் இணைந்து நடத்திய பயிற்சியும் பரீட்சையும் – சீரமியர் – 1994 – 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்புரை
As senior prefect Mahajana College, Tellippalai.

# Warm Welcome

President Sir, The Hon.Minister, Madam Tiruchelvam, Mr.Vairamuttu, Ladies and Gentle men,

Once again we have met together to do honour to the memory of Mr.T.A.Thuraiappa pillai, the founder of our college. Mahajana was started 58 years ago in a very humble building, and two years later was transplanted to this spot. Placed in the midst of vast stretches of green paddy fields and far removed from the distractions of urban life, it was ideally suited to be a nursery of young minds. The poet and philosopher in the founder could not have thought of a better site for the school. In its very early stage, the institution underwent great hard ships as the Government was rather indifferent to its needs. The impetious fighter that he was, our founder fought against heavy odds and paved the way for the enviable position the school occupies at present. The founder would not have even in his wildest flight of fancy imagined the school would in half a century rise to be one of the island's best.

It is a matter of pride, that the college attained this stature under the founder's own son, the present principal. He and the college have come to be identified together so closely, that they have become inseparable, Nay, our Principal is the very personification of Mahajana College. Indeed the students of the college owe him a great debt of gratitude.

At a function of this nature it may not be improper to animadvert on the pathetic plight of those of us who are ever trying and trying very hard to gain year admission to the University of Ceylon. About thirty years ago it was open to any student, who passed the London Matriculation Examination or was exempted from it to join the highest seat of learning. But today all our strenuous intellectual exertions do not take us very far. The portals of the university of Ceylon are for ever a tantalising vision. In dire desperation many of us seek the assistance of private tutors and in fact most of our spare time, which should be spent on serious self study is wasted in rushing from one tutory to another. We spend long sleepless nights and ruin our health. At the end we meet with frustration and perhaps what doctors call a nervous condition According to



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

statistics only 10 percent of these who sit A/L examination can ever hope to enter the portals of the university. Could anything be done to stop this harrowing pursuit after higher studies, I wonder. Now, it is my pleasant duty to welcome you all to our Founder's day and Prize giving. On behalf of the school and its larger community outside, I heartily welcome the Hon.Minister of Local government to this function. The visit of a minister of state is a very rare but notable event in the life of a school. We are therefore very much beholden to you, sir, for your kind presence. Your erudition in law and your political acumen have at all levels evoked warm and spontaneous admiration. We welcome Mrs.Tiruchelvam with kind thoughts and profound affection. We thank you Madam from the bottom of our hearts for having so kindly consented to distribute the prizes at this function.

To Mr.Vairamuttu who has so readily accepted our invitation to deliver the Founder Memorial Address to night, we tender a very warm welcome. Sir, you are engaged in diverse activities for the welfare and progress of the Tamils. It is our prayer that God should spare you for many more years to continue your good work. Finally we thank our parents, well wishers, friends and old students, who have responded to our invitation in such large numbers.

**Thank You.**

**(1968 June 24th)**

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில். . . . . . . . .**

- பன்னாலை சேர் கனக சபை வித்தியாலய மாணவியாய் – திருக்குறள் மனனப் போட்டி, தடகளப் போட்டி, இசை, விநோத உடைப் போட்டி.
- மகாஜனக் கல்லூரி மாணவியாய் – தமிழ்ச் பேச்சு, ஆங்கிலப் பேச்சு, நாடக நடிப்பு, இசை, நடனம், சிறுகதை, கவிதை, பெரிய புராணப் போட்டி, உடற் பயிற்சிக் குழு.
- பல்கலைக் கழக மாணவியாய். . . . – நாடக நடிப்பு.
- பலாலி ஆசிரியர் கல்லூரி மாணவியாய். . – விவாதம், நடனம், நாடகம், வேக நடை, சிறுகதை, கவிதை.
- பொலி கண்டி இ.த.க.பாடசாலை ஆசிரியராய். . . . – நாடக நெறியாள்கை.
- கீரிமலை நகுலேஸ்வர ம.வி ஆசிரியராய், வலைப்பந்துக் குழுவின் பயிற்றுவிப்பாளர், நாடக நெறியாளர்.
- மகாஜனக் கல்லூரி ஆசிரியராய். . . . – நாடக நெறியாள்கை, இல்லப் போட்டிகள் அனைத்திற்கும் பொறுப்பாசிரியர், ஆசிரியர் நேர சூசிகை தயாரிப்பு.
- யூனியன் கல்லூரி ஆசிரியராய் . . .– நாடக நெறியாள்கை.
- தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபராய். . . . – நாடக நெறியாள்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரியைத் தொண்டு செய்த படலம்

முருக புரத்தில் பெரிய கோபுரத்துடன் உயர்ந்து நிற்கும் முருக மூர்த்தி ஆலயத்திற்குச் சுக்கிர வாரந்தோறும் தவறாது செல்வார் பட்டாளம் பாட்டா.

கோயிலுக்குப் போகும் போது மட்டும் அவருடைய சீருடை மாறிவிடும். காற்சட்டை, வெள்ளைச் சட்டை, சப்பாத்து எல்லாவற்றையும் கழற்றி எறிந்து விட்டுத் தோய்த்துலர்ந்த வேட்டி உடுத்துக் கொள்வார். உடம்பைத் திறந்தால் மார்பு பளபளவென்று மின்னும். எண்ணெய் தேய்த்த மார்பு!

கோயிலுக்குப் போனால் சும்மா இருக்க மாட்டார். உள் வீதியைக் கூட்டுவார், கழுவுவார், கோலம் போடுவார், மனதிலே ஒரு 'குஷி' வந்துவிட்டால், குருக்கள் வீட்டிலே போய்ப் பழைய பிழிந்த தேய்காய்ப்பூ எல்லாம் தூக்கிக் கொண்டு வந்து குங்குமம், மஞ்சள் முதலியவற்றைக் கலந்து நிறமாக்கி அழகான தேங்காய்ப்பூக் கோலங்கள் போடுவார்.

சட்ட விளக்குகள் எல்லாம் ஏற்றுவார். விளக்கு ஏற்றும் போது பெரும்பாலும் கையைச் சுட்டுக் கொள்வார். வெளித் தோற்றத்தில் இரும்பு மனிதர் போல இருந்தாலும், சிறிதளவு வேதனையையும் தாங்க மாட்டார். கையைச் சுட்டு விட்டால், "முருகா, உனக்குப் பணி செய்ய வந்த பாட்டாவுக்கு இதுவோ தண்டனை?" என்று கேட்டுக் கொண்டே, சுட்டுக் கொண்ட விரலைச் சூப்பிக் கொண்டு திரிவார்.

விசேட அபிஷேகம் இருக்கும் காலங்களில் இளநீர் கொத்திக் கொடுப்பார், சந்தனம் அரைத்துக் கொடுப்பார். பூக் கொய்து கொடுப்பார், திருவிழா நடக்கும் போது குடைபிடிப்பார், தீ வர்த்தி பிடிப்பார்.

கோயிலில் அவர் செய்யாத திருப்பணிகள் இல்லை என்று சொல்லி விடலாமாயினும், திரு விழாவுக்குத் தீவர்த்தி பிடிப்பதில் அவருக்குத் தனி விருப்பம்.

ஒரு கார்த்திகை மாதத்துக் கார்த்திகைத் திருவிழா. மழை பெய்து நிலம் ஈரமாக இருந்தது. பகல் திருவிழாவுக்குப் பட்டாளம் பாட்டா தீவர்த்தி பிடித்துக் கொண்டு வந்தார். வெளி வீதியில் வைத்து வேல்குத்தி விநாயகத்தைக் கண்டார்.

"என்ன விநாயகம்? நீ முன்பு சிலைகளை நம்புவதில்லை. இன்று கோயிலுக்கு வந்து விட்டாய்?" என்று கேட்டார். விநாயகம் சிரித்தான். பின்னர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியார் சிலை உடைத்தார். இன்று அவரை மக்கள் சிலை வடிவில்தான் போற்றுகிறார்கள்" என்றான்.

"நல்ல மறுமொழி" என்றார் பாட்டா. சிறிது பொறுத்துக், "காய்கட்டிக் கந்தையாவுடனான உன் பிரச்சினைகள் எப்படி?" என்று கேட்டார்.

"நீங்கள் வந்து தீர்த்த பின்னர் ஒரு தகராறும் இல்லை" என்றான் விநாயகம்.

மேற்கு வீதியில் வைத்து மாடன் சின்னத்தம்பியைக் கண்டார். "சின்னத்தம்பி, பெண்சாதியை விட்டுவிட்டு வேறு வீட்டில் இருப்பதாய்க் கேள்வி அப்படியா?"

"ஓம். பாட்டா எனக்கு அவளைப் பற்றிய எண்ணங்கள் மாறி விட்டன"

'தாலிக்கொடி,' மோதிரங்கள் எல்லாம் உன்னிடமாம். திருப்பிக் கொடுத்து விட்டாயா?

'இல்லைப் பாட்டா. அவற்றைப் பற்றிய எண்ணங்கள் இன்னும் மாறவில்லை" என்றான் சின்னத்தம்பி.

பாட்டா பெரிதாகச் சிரித்தார். பின்னர், சுவாமிக்குக் காட்டப்பட்ட பஞ்சாரத்தியைக் கும்பிட்டுக் கொண்டே பின்பக்கமாய் நடந்தார். வீதி நிறையச் சனம்! ஒரு கல் தடுக்கி விட்டது. ஈரத்தரை! கால் வழுக்கி விட்டது. முதுகு அடிபடத் தடாரென்று விழுந்தார் பாட்டா. மலை சரிந்த மாதிரி இருந்தது. பாட்டா கீழே, தீவர்த்தி மேலே! வேட்டியில் நெருப்புப் பிடித்துக் கொண்டது.

"முருகா. . சரணம் தீவர்த்தி பிடித்துக் கொண்டு கதைத்ததற்குத் தண்டனையா?" என்று முனகிக் கொண்டே ஈரத்தரையில் புரண்டார்.

நெருப்பு அணைந்து விட்டது. சின்னத்தம்பி அருகில் வந்து, "என்ன பாட்டா! சுட்டுப் போட்டுதா?" என்று கேட்டான்.

"நான் தேருக்கு முருகனுக்கு அங்கப் பிரதிஷ்டை செய்யவில்லை. அதுதான் முருகன் இன்று என்னைக் கொண்டு செய்வித்திருக்கிறான்" என்று கூறிக் கொண்டே காலைப் பார்த்தார். முழங்காலுக்குக் கீழே இரண்டு மூன்று எரிகாயங்கள்!

"என்ன பாட்டா செய்ய வேண்டும்?" என்று ஓடி வந்தான் விநாயகம்.

"கொஞ்சம் தண்ணீரும் சுத்தமான பழந்துணியும் கொண்டுவா" என்று கேட்டார் பாட்டா.

அவன் குருக்கள் வீட்டிலிருந்து கொண்டு வந்து கொடுத்தான்.

காலைத் தூக்கித் தூய நீரில் சிறிது நேரம் அமிழ்த்தி வைத்திருந்தார். பிறகு அதைச் சுத்தமான பழந்துணியால் சுற்றிக் கட்டினார்.

"வாகன, உதவி எதுவும் எனக்கு வேண்டாம்" என்று தானே சொல்லிக் கொண்டார்.

"நான் வைத்திய சாலைக்குப் போகிறேன் முருகா. அடுத்த வெள்ளிக் கிழமை உன்னிடம் வருவேன்"

என்று கூறிவிட்டு நடந்தார் பாட்டா.

(ஆசிரியர் தமிழருவி த.சண்முகசுந்தரம் அவர்கள் சஞ்சீவி வார இதழில் இத்தொடரை எழுதி வந்தபோது இறைபதம் அடைந்தார். விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்து கோகிலா மகேந்திரன் எழுதினார் - 1987-10-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விமர்சனம்

# நீண்ட சிந்தனைக்காகக் 'கியூ'வில் நிற்கும் வி.பி.கருத்துக்கள்

| | |
|---|---|
| நூல் | :- 80இல் இருந்து 88 வரை |
| ஆசிரியர் | :- வி.பி |
| வெளியீடு | :- நான் |
| விலை | :- ரூபா 15/= |

1915 இல் பம்பாயில் காங்கிரஸ் மகாநாடு. காந்தி மார்வாடி வித்தியாலயத்தில் தங்கி இருந்தார். ஒரு நாள் மிகுந்த கவலையுடன் எதையோ தேடிக் கொண்டிருந்தார். அவருடன் இருந்த, காலேல்கர், "பாபுஜி, என்ன தேடுகிறீர்களர்?" என்றார். "பென்சில் ஒன்று. சிறியது" என்றார் காந்தி. தன்னிடம் இருந்த பென்சில் ஒன்றைக் கொடுத்தார் காலேல்கார்.

"உனக்குத் தெரியாது அந்தப் பென்சில் எனக்கு மதராஸில் நடேசனுடைய சிறிய பையன் கொடுத்தது. அவன் எவ்வளவு அன்புடன் கொடுத்தது தெரியுமா? அதை நான் தொலைப்பதாவது. . ." என்றார் காந்தி. பிறகு இருவரும் சேர்ந்து அந்தப் பென்சிலைத் தேடிக் கண்டு பிடித்தார்கள். அது ஒரு அங்குல நீளத்திலும் குறைவாக இருந்தது.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன் பாற்கண்
வற்றல் மரந் தளிர்த் தற்று"

என்பான் வள்ளுவன்.

வி.பியின் நூலில், "அன்பு செய்யுங்கள்" என்ற பக்கத்தை வாசித்து விட்டு (ப - 46) ஆழ்ந்த சிந்தனையில் இருந்த எனக்கு, நினைவு வந்த பல விடயங்களில் சில இவை.

வி.பி (வின்சன்ற் பற்றிக் அடிகளார்) நான் சஞ்சிகைக்காகவும், பாதுகாவலன் இதழ்களுக் காகவும் 1980முதல் 1988 வரை எழுதிய பல்வேறு ஆசிரியத் தலையங்கங்களின் தொகுப்பு அல்லது இளம் உள்ளங்களுக்கு அவர் அவ்வப்போது எழுதிய கடிதங்களின் தொகுப்புத்தான் இந்த நூல்.

"சமயம் போதனைகளைச் சமூகப் பார்வையுடன் அணுகும் இவரது புதிய அணுகு முறைகள்" என்று யாழ்.அ.ம.தி முதல்வர் லூயி பொன்னையா அவர்கள் இந்நூலின் ஆசியுரையில் கூறுவது அர்த்தமுள்ள கூற்றுத்தான் என்பதை நான் இந்நூலுக்குள்ளே நுழைந்த போது உணர்ந்தேன்.

"பழிக்குப் பழி வாங்கின் பயங்கரம் தொடரும்
பகைவனை மன்னிப்பின் அமைதி நிலவும்"

என்று 1985 பங்குனியில் எழுதியிருக்கிறார் வி.பி. கடிகாரம் இரவு நேரத்தில் 'டிக் டிக் டிக் டிக்' என்று ஒலிப்பதைக் கேட்டுக் கொண்டே நாம் உறங்கிப் போவது போலல்லாமல், இந்த வரிகள் எமது நாட்டு மக்கள் ஒவ்வொருவரின் காதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஒலித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று நான் நினைத்தேன்.

பைபிளில் இருந்து மட்டும் கோட்பாடுகளை எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் இவரது அறவுரைகள் அமைந்திருந்தால் ஆச்சரியப் படுவதற்கொன்றுமில்லை. ஆனால் அவர் கண்ணதாசனையும் காண்கிறார். கவிஞர் பட்டுக் கோட்டை கல்யாண சுந்தரத்தையும் காட்டுகிறார். திருமூலரில் இருந்தும் உதாரணம் வருகிறது. விபுலானந்தரையும் உதவிக்கு அழைக்கிறார். சுவீடன் நடிகை இங்கிரிட் பொக்மனின் வாழ்வையும் பார்க்கிறார். உளவியல் அறிஞர் 'அட்லர்' சொல்வதையும் கேட்கிறார்.

சில சமயங்களில் அறவுரையை ஒரு கவிதையாக எழுதிப் பார்க்கிறார் (ப - 66) சில சமயங்களில் ஒருவரின் பழக்க வழக்கம் மூலம் அவரது இயல்பைக் காட்ட முனைகிறார். (ஆடை கழற்றுதல் ப - 63) கண்டிக்க வேண்டியதைத் துணிச்சலுடன் கண்டிக்கிறார் (15,000 கத் தோலிக்கர் ஊர்வலம் போனமை ப - 62) பாராட்ட வேண்டியதை மனம் திறந்து பாராட்டுகிறார். (அந்தரிக்கும் ஆன்மாக்கள் ப -55) ஒரு வேளை சூழலின் அரசியல் நிலையால் பாதிக்கப்பட்டு எழுதுகிறார், இன்னொரு வேளை தனது தலையங்கம், 'காலத்தின் டயரி' ஆகுமாறு கவனிக்கிறார். (குரும்பசிட்டி கொள்ளை. மன்னார் கொலரா) மற்றொரு சமயம் தனக்கு வந்த சில கருத்துக்களுக்குப் பதிற் கடிதம் போல எழுதுகிறார். (தனித்துவம்) அருமையாக மருத்துவக் குறிப்பும் எழுதி விடுகிறார் (தடிமன்). இந்தப் பல் வகைமை (variety) இந்த நூலுக்கு ஒரு தனி அழகைத் தருகிறது.

"உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட மனிதனை மற்றவர்களில் காண முற்படுதல் முறையன்று"

"ஒருவனது மாறுபட்ட செயற்பாடுகளைக் கொண்டு அவனைப் புறக்கணியா திருப்போம்"

"குறைகளை நிறைவுபடுத்தும் தைரியம் எம்மிடம் இல்லை என்றால், குறைகளைப் பற்றிய பேச்சே வேண்டாம்."

"வார்த்தை + வாழ்க்கை = மனிதன்."

போன்ற அவரது கருத்துக்கள் நீண்ட சிந்தனைக்காக எமது மனதில் 'கியூ'வில் நிற்கின்றன.

"போலியான வேலிகள் காலியாகட்டும்"

'சோதனையிலும் சாதனை புரிந்து, வேதனை யிலும் தீததனை வென்று நாதனை வேண்டி நல்வினை செய்வோம்." போன்ற இடங்கள் மொழி அவரிடம் கைகட்டிச் சேவகம் செய்வதைக் காட்டுகின்றன.

இந்த நூலில் வருகின்ற பல விடயங்களில், "அவசியந்தானா?" "நல்ல நண்பன் யார்?" போன்ற பல கடிதங்கள், கருத்தைக் கவருபவையாக இருந்த போதிலும், இத்தொகுப்பின் உச்சம் என்று சொல்லத்தக்க கடிதம் இறுதியாக அமைந்துள்ள 'மகிழ்வின் மலர்வு' என்பதுதான். ஒரு சம்பவத்தைக் குறிப்பாகச் சொல்லி, அவர் தரும் அச்செய்தி அச்சொட்டாக மனதிலே பதிகிறது. அந்த வகையில் 1980 முதல் 1988 வரையிலான அடிகளாரின் தனிப்பட்ட வளர்ச்சியையும் இது காட்டுவது போல எனக்குப் படுகிறது.

சில கடிதங்களில் மட்டும் 'இந்த இதழில், இன்னார் இதை இப்படி எழுதுகிறார்' போன்ற விடயங்கள் வருகின்றன. அவை அந்த இதழுக்குத் தலையங்கம் எழுதும்போது எழுதப்பட்டது சரி. தொகுப்பிலே அவை கருத்தற்றவையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றன. அக் கடிதங்களை முற்றாக நீக்கியிருக்கலாம் அல்லது குறிப்பிட்ட வசனங்களை நீக்கி 'எடிற்' பண்ணியிருக்கலாம். அச்சு அரக்கனைப் பற்றி ஆசிரியர் மிக விழிப்பாக இருக்கிற போதிலும் ஒரு சில இடங்களில் (ப - 33 வரி 17, ப - 39 வரி 10) அவன் தன் கொடுமையைக் காட்டப் பார்க்கிறான்.

அட்டைப் படத்தை ஆற்றலுள்ள ஓவியர் ரமணி வரைந்திருக்கிறார். ஆனால் ரமணியின் திறமை முழுமையாக இங்கு வெளிப்படவில்லை.

"நான்" சஞ்சிகையைச் சில வருடங்களுக்கு முன் எனக்கு அறிமுகம் செய்தவர், என்னைவிடப் பத்து வயது குறைந்த எனது மாணவி ஒருவர் என்ற உண்மை, இளைஞர் மத்தியில் சமய வேறு பாடின்றி இச் சஞ்சிகைக்கு உள்ள வரவேற்பை உறுதி செய்யப் போதுமானது.

இந்நூலிற் கூறப்பட்ட விடயங்களை இதை விட அழகாகக் கூறமுடியாது என்று சொல்லா விட்டாலும், சமுதாயத்திற்குச் சொல்ல வேண்டிய பல விடயங்கள் இங்கு இரத்தினச் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளன என்ற உண்மை மறுக்கப்பட முடியாதது.

வாசிப்பவனுக்கு ஐந்து சதத்திற்கும் பயனற்ற நூல்கள் பல இருபத்தைந்து ரூபா என்றும், முப்பது ரூபாவென்றும் விலை போகும் காலத்தில், தொண்ணூற்றிரண்டு பக்கங்களில் நல்ல கருத்துக்களைக் கொண்ட பயன்மிக்க இந்த நூலைக் கட்டாயம் பதினைந்து ரூபாவுக்கு வாங்கலாம். மாணவருக்குப் பிறந்த நாட்பரிசாகவும் கொடுக்கலாம்.

(முரசொலி 16-7-1989)

**பரீட்சைப் பெறு பேறுகள் :-**

Junior School Certificate - 1st Division

| | | |
|---|---|---|
| English | - | Distinction |
| Arithmetic | - | Distinction |
| Tamil | - | Distinction |
| Mathematics | - | Distinction |
| Elementary Science | - | Distinction |
| Social Studies | - | Distinction |
| Hinduism | - | Distinction |
| Home Science | - | Pass |

Merit Certificate for Obtaining an Aggregate of 77.7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல் கட்டுரை

# நீங்கள் உள முதிர்ச்சி அடைந்தவரா?

சூரியனைத் தொலைத்து விட்ட வானத்தி லிருந்து சூனிய இருள் பூமியின் மேற்பரப்பைக் கௌவியது.

நீங்கள் உங்கள் நண்பருடன் கதைத்துக் கொண்டிருக்கிறீர்கள். சம்பாஷிணை ஏதோ ஒரு விடயத்தைத் தொட்டவுடன் விவாதமாகி இறுதியில் பெரிய சர்ச்சையாகி விட்டது. உங்கள் நண்பரோ தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால் தான் என்று நிற்கிறார். உங்களுக்கும் விட்டுக் கொடுக்க முடியவில்லை.

கொதி நிலை உயர்ந்தது.

“நான் கதைக்கிறது என்னெண்டு எனக்குத் தெரியும். நீ வாயை மூடிக் கொண்டு எழும்பிப்போ” என்று கூறி அந்தச் சர்ச்சையைத் திடீரென ஒரு முடிவுக்குக் கொண்டு வருவீர்களா?

* * * * *

உங்கள் மனைவி, உங்கள் பிள்ளைகள், உங்கள் நண்பர்கள், உங்கள் வேலைத் தளத்தில் உங்களுக்குக் கீழே பணிபுரியும் ஊழியர்கள். பொதுவாக மக்கள் எல்லாரும் எப்போதும் தவறாகவே நடந்து கொள்கிறார்கள். அவர்களுக்கு எந்த நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்று தெரியவில்லை. எங்கே எப்படிக் கதைக்க வேண்டும் என்று தெரியவில்லை. நீங்களே அடிக்கடி, “இப்படிச் செய். அப்படிச் செய்” என்று சொல்லிக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அப்படித்தானே?

* * * * *

அந்த நெரிந்த புருவங்களில் ஒரு போதும் சுளிப்பு மாறுவதில்லை. அந்த இருண்ட வஞ்சகமான முகத்தைப் பார்க்கும் போதே மனதில் ஏதோ ஒன்று விபரீதமாய்ப் புரிவது போலிருக்கும். சுருக்கமாய்ச் சொல்வதானால் உங்களுக்கு அவரைப் பிடிக்கவே பிடிக்காது. உருட்டுச் சட்டிப் பொம்மை மாதிரித் தலையும் ஆளும்! சரி, இப்போது அவரோடு கதைக்க வேண்டியிருக்கிறது. உங்கள் மேலதிகாரி அவரோடு போய்க் கதைத்து அந்த விடயத்தைச் செய்யுமாறு கூறுகிறார். அவரோடு எந்த விதமான தொடர்பும் கொள்வதற்கு நீங்கள் மறுத்து விடுவீர்களா?

* * * * *

அழகிய ஓவியம் ஒன்று கறைபட்டுப் போனது போல, அந்த நட்பு முறிந்து விட்டது.

சீ. . . எவ்வளவு நெருக்கமான நண்பனாக இருந்தான்! அவனது பிறந்த நாள் ஒவ்வொன் றுக்கும் நீங்கள் அவனுக்குப் பெறுமதியான பரிசுகள் கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பரிசுகளுக்காக அவன் உங்களுக்கு நெருங்கிய நண்பனாய் இருந்திருக்க வேண்டும்.

அந்த இரகசியத்தை அவன் உங்களுக்குச் சொல்லவில்லை. நீங்கள் கொடுத்த அன்பளிப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்கள் உங்களுக்குள் ஓர் அத்தியந்த நட்பை உருவாக்கும் என்று நீங்கள் எதிர்பார்த்தீர்கள்! அவன் உங்களுக்கு நன்றி உள்ளவனாக இருப்பான் என்று நினைத்தீர்கள்! எல்லாம் ஏமாற்றமாகப் போய்விட்டது. இல்லையா?

* * * * *

உங்களது முகம் ஒரு சிலையின் முகம் போல உணர்ச்சியற்றிருக்கிறது.

நீங்கள் தவறு செய்து விட்டதாகவே எல்லாரும் சொல்கிறார்கள். எதிரொலி ஒன்றை எதிர்பார்த்துக் காத்திருக்கும் போது, மனச் சாட்சியின் குரல் ஒலிப்பது போல, தனிமையில் இருந்து சிந்தித்தால், . . நீங்கள் செய்து விட்டது பிழைதானே என்று தோன்றுகிறது.

உங்கள் அப்பா, அம்மா, சகோதரர்கள், நண்பர்கள் எல்லாரும் நீங்கள் செய்தது பிழைதான் என்கிறார்கள். ஆனாலும் அது பிழைதான் என்பதைப் பகிரங்கமாக ஒப்புக் கொள்ளவது உங்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இல்லையா?

* * * * *

உங்கள் கண்களில் கொப்பளித்துச் சுரந்த கண்ணீர்த் திரவத்தில் அந்தக் கடிதத்தின் எழுத்துக்கள் மறைந்து போகின்றன. நீங்கள் அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டுமாம்.

செய்யாத பிழைக்காக உங்கள் மனச் சாட்சிப்படி ஒருவரிடம் மன்னிப்புக் கேட்பது என்பது உங்களால் ஒரு போதும் முடியாது. சரிதானே?

* * * * *

அந்த நாளை - அந்த நிகழ்ச்சியை ஒரு சித்திரத் தொகுதியைப் புரட்டுவது போல, மனத்திரையில் காட்சி காட்சியாய்க் காணுகிறீர்கள். அதை இப்போது நினைத்தாலும், கண்கள் சிவந்து, நெஞ்சு விம்மி. . . கோபம் உச்ச நிலைக்கு ஏறுகிறது.

ஏனோ தெரியவில்லை, இப்போதெல்லாம் உங்களுக்கு அடிக்கடி கோபம் வருகிறது. உலகமே தலை கீழாக நடந்து கொண்டிருந்தால், கோபம் வரத்தானே செய்யும்? அலுவலகத்தில் தான் தலையிடி என்றால் வீட்டில் அதற்கு மேல்!

ஒரு பொருளும் வைத்தால், வைத்த இடத்தில் இல்லை. அந்தப் பொருள் அந்த இடத்தில் இல்லை என்றால், . . யாரையும் கேட்க மனம் வராது. உங்களுக்குச் சும்மா ஏறிக் கொண்டு வரும் கோபம். இல்லையா?

* * * * *

உங்கள் மனைவி (அல்லது கணவர்) உங்களுக்குப் பொருத்தமாக அமையவே இல்லை. சிந்தனைகள், இலட்சியங்கள், உணவில் விருப்பு வெறுப்புகள், பொழுது போக்குகள் எல்லாம் எதிரும் புதிருமாய் இருக்கின்றன. நீங்கள் கோயிலுக்குப் போக நினைத்தால், அவள் சினிமா என்கிறாள். நீங்கள் ஒரு பொருளை வாங்க நினைத்தால், அவள்வேறு ஒன்று வாங்கி விடுகிறாள். உங்கள் நண்பரை அவளுக்குப் பிடிக்க வில்லை. அவளது தோழிகளைக் கண்டால், உங்களுக்கு எரிச்சல்தான் வருகிறது. நீங்கள் விரும்பித் தேர்ந்தெடுக்கும் நிறங்களை அவள் தூக்கி எறிந்து விடுகிறாள்.

எல்லையும் முடிவுமற்ற இந்தக் குழப்பத்தில் சிக்கிச் சீர்குலைந்து, அழிந்து கரைந்து போவது தான் முடிவா?

நீங்கள் மட்டும் இன்னொருவரை மணந்திருந்தால். . . எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். இல்லையா?

* * * * *

அவருக்கு உங்களை நன்றாகவே தெரியும். உங்கள் பெயர் கூடத் தெரியும். ஒருநாள் உங்களோடு நீண்ட நேரம் கதைத்தவர், இப்போது வழியில் உங்களைக் கடந்து செல்லும் போது. . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று சிரித்துக் கதைப்பார் என்று எதிர்பார்த்தீர்கள்.

அவர் சிரிக்கவே இல்லை. ஏன்?

ஆழ்ந்த மௌனத்தில் அவர் தலை குனிந்திருக்கிறது. நீங்களாகச் சிரித்து நிறுத்தி, "என்ன மறந்து விட்டீர்களா?" என்று கேட்டீர்கள், அவர் விழியைப் புரட்டுகிறார். உங்களை அவருக்குத் தெரியவே இல்லை.

உங்களுக்குப் பெரிய ஏமாற்றமும் கவலையுமாகப் போய்விட்டது. ஏன் கேட்டோம் என்றாகி விட்டது. இல்லையா?

* * * * *

இன்றைக்கு ஒரு விருந்துக்குப் போகிறீர்கள். நாளை ஒரு திருவிழாவுக்குப் போகப் போகிறீர்கள். அடுத்த வாரம் ஒரு கூட்டம் இருக்கிறது.

எங்கு போனாலும் அங்கே எல்லாருடைய கவனத்தையும் ஈர்ப்பவராக நீங்களே இருக்க வேண்டும் என்பதில் நீங்கள் தனி அக்கறை எடுத்துக் கொள்வீர்களா?

* * * * *

மேலே தரப்பட்ட கேள்விகளுக்கு நீங்கள் 'ஆம்' என்ற சொல்லி வந்த ஒவ்வொரு முறையும் உங்களுக்குப் போதிய உளமுதிர்ச்சி ஏற்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஒவ்வொரு 'இல்லை'க்கும் ஒவ்வொரு பிளஸ் போயிண்ட்!

(1989 புரட்டாதி - ஐப்பசி - நான் சஞ்சிகை)

**பரீட்சைப் பெறு பேறுகள் :-**

## G.C.E. O/L

| | | |
|---|---|---|
| English Language | - | Pass |
| Tamil Language | - | Credit |
| Hinduism | - | Distinction |
| Pure Mathematics | - | Distinction |
| Geography | - | Credit |
| Physics | - | Distinction |
| Chemistry | - | Credit |
| Biology | - | Pass |

## G.C.E. A/L

| | | |
|---|---|---|
| Physics | - | C |
| Chemistry | - | B |
| Botany | - | C |
| Zoology | - | C |
| Organic Chemistry | - | (Practicals) - A |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை அட்டைப்படக் கட்டுரை

## வாழ்வில் வெற்றி பெற்ற மனிதர் கலாநிதி நா.சுப்பிரமணியன்

தனக்குள் ஒரு நேர்மை, ஜோடனை இன்றிய பேச்சு, யாரையும் இலகுவில் நம்புகிற ஒரு தன்மை, இயல்பாய் இருக்கிற பண்பு, எங்கும் எவரையும் ஈர்க்கும் இன்சொல், நிலவு உதித்ததைப் போன்ற நிறைவுள்ள ஒரு முகம் - இவற்றின் மொத்த வடிவந்தான் கலாநிதி.நா.சுப்பிரமணியன்.

வாழ்வில் சிலர் அதிர்ஷ்டத்தினால் வெற்றி பெறுகின்றார்கள். சிலர் திட்டமிட்டுச் செயலாற்றி வெற்றி பெறுகின்றார்கள். 1942 இல் முள்ளியவளைக் கிராமத்தில் பிறந்தவர் சுப்பிரமணியன். வன்னிப் பிரதேசத்திலேயே பாரம் பரியக் கலைகளின் வளம் நிறைந்த மண் முள்ளியவளை. அதிலே கோயில் சார்ந்த, புராணபடன பாராயண மரபுகள் மலிந்த இளமைச் சூழலில் வளர்ந்த இவர் மேற்சுட்டிய இரண்டாவது வகையை.... திட்டமிட்டுச் செயலாற்றி வெற்றி பெறுகிற வகையைச் சேர்ந்தவர்.

பேசுகிறவன் தான் மனிதன். நல்லதைப் பேசுவதுதான் பேச்சு. ஆகையால் நல்லதைப் பேசுபவன் தான் மனிதன் என்றாகிறது. "சொல்லுக சொல்லிற் பயனுடைய" என்பது குறள். எந்த ஒரு இலக்கியக் கூட்டத்திலும், எந்த ஒரு அறிஞர் குழுவிலும் பயனுள்ளவற்றை மட்டும் - சபை அறிந்து, சமயமறிந்து பேசுகின்ற கலாநிதி.நா.சுப்பிரமணியன், மரபு நிலைப்பட்ட அறிவுத் துறைகளோடு நவீன இலக்கியத் துறைகளிலும் ஆழ்ந்த புலமை உடையவர்.

'ஈழத்துத் தமிழ் நாவல்கள்' என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வுக்காக முதுகலைமாணிப் பட்டத்தையும், "தமிழ் யாப்பு வளர்ச்சி" என்ற தலைப்பில் மேற்கொண்ட ஆய்வுக்காகக் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றவர் இவர். இவ்விரு ஆய்வுகளிலும் இவருக்கு வழிகாட்டியாக அமைந்தவர் காலஞ் சென்ற முதுபெரும் பேராசிரியர் கலாநிதி.சு.வித்தியானந்தன் அவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கலாநிதி. சுப்பிரமணியன் தமிழ் இலக்கியத் துறையில் சிறந்த விமர்சகர் என்ற கணிப்புப் பெற்றவர். கத்தி பழத்தையும் நறுக்கும். கழுத்தையும் அறுக்கும். அது பிடித்திருப்போரைப் பொறுத்தது. அது போலத்தான் விமர்சனமும், மிகக் கவனமாகக் கையாள வேண்டிய துறை. அதைத் தெரிந்து பாவிப்பவர் இவர்.

புயலும் பூகம்பமும் நிறைந்த கட்டிளமைப் பருவத்தில் ஒரு மாணவன் பல்கலைக் கழகம் வரு கின்றான். அங்குள்ள விரிவுரையாளர்களின் மனோ நிலையே அவனது வானிலையாகிறது. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளம் பெறுவதும், வழி தவறுவதும் அவர்களின் ஆளுமையில் தங்கியுள்ளது என்பதைப் புரிந்து கொண்ட ஒரு சில விரிவுரையாளர்களில் கலாநிதி அவர்களும் ஒருவர் என்று கூறலாம். சிறப்பாகத் துலங்கும் மாணவனின் கழுத்தில் கைபோட்டு அவனை இவர் பாராட்டுவதைப் பார்த்தவர்கள், அவன் இவரது ஆளுமையால் ஈர்க்கப்படுவதன் இரகசியத்தை எளிதில் அறிந்து கொள்வர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலே, தமிழ்த் துறையின் முதுநிலை விரிவுரையாளராகத் திகழும் இவர் மரவு இலக்கியத்தை மட்டுமல்ல, நவீன இலக்கியத்தையும் இலக்கணத்துறைகளையும் கூட அதே அளவு ஆழ அகலங்களுடன் அணுகி விரிவுரை நிகழ்த்தும் ஒரு பூரணத்துவமான ஆளுமை கொண்டவராகத் திகழ்கிறார். அண்மைக் காலங்களில் தமிழ் நாட்டிலும் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், காந்தி கிராமப் பல்கலைக்கழகம் முதலியவற்றில், விரிவுரைகள் கருத்தரங்குகள் என்பவற்றில் பங்கு கொண்டதன் மூலம், அங்கேயும் தன்னைச் சுற்றி ஒரு அறிஞர் வட்டத்தையும், ரசிகர் வட்டத்தையும், மாணவர் வட்டத்தையும் உருவாக்கியுள்ளார்.

'ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்' 'இந்தியச் சிந்தனை மரபு' ஆகிய இரு நூல்களின் ஆசிரியர் இவர். இவர் தமது துணைவியார் கௌசல்யாவுடன் இணைந்து எழுதிய 'இந்தியச் சிந்தனை மரபு" நூல் வரலாற்று முக்கியத்துவமுடைய ஒரு ஆக்கமாக ஆய்வாளர்களால் கருதப்படுகிறது. 'இந்தியத் தத்துவ ஞானம்' என்ற நூலை எழுதிய காலஞ் சென்ற அறிஞர்.கி.லஷ்மணன் அவர்களின் நெருங்கிய உறவினராகக் கலாநிதி அவர்கள் திகழ்கின்றார் என்பதும் இத் தொடர்பில் சுட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

கலாநிதி அவர்கள் சோர்வோ, தலையிடியோ ஒரு துளியும் அணுகாத ஒரு பிறவி. மனம் எப்பொழுதும் பொய்கையாகிக் குளிர்ந்திருக்க மிகச் சுறுசுறுப்பாய் ஓடித் திரிவார்.

உயர்ந்த தரத்தில் ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதியும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள், அனைத்துலக இந்து மாநாடு போன்றவற்றில் கலந்து கொண்டும் தனது உயர் ஆய்வுத் திறனை நிரூபித்துள்ள இவர், 'மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்' என்பதைப் புரிந்து கொண்டு யாரோடும் மிக எளிமையாகப் பழகக் கூடியவர்.

ஒருவன் தான் ஆர்வம் கொள்ளும் துறைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது, அத்துறைகளில் அவனது புலமை அதிகரிப்பது மட்டுமன்றி, அவனுக்குத் தன்னைப் பற்றிய சுயமதிப்பீடு உயர்வதனால் அவனது உளநலமும் விருத்தியடைகிறது. கலாநிதி அவர்கள் எழுத்து, பேச்சு ஆகிய இரண்டையும் தமது முக்கிய வெளிப்பாட்டு வடிவங்களாகக் கொண்டிருந்த போதிலும், நாடகம், கவிதை போன்ற துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர். மாவையாதீனம், நல்லையாதீனம் ஆகியன இவரது சொற்பொழிவுத் திறனைப் பாராட்டியுள்ளன. நல்லையாதீனம் இவருக்கு 'வித்தியா பூஷணம்' என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது. பேராதனையில் பயின்ற காலத்தில், குறிஞ்சிச் குமரன் பேரில் ஆற்றுப் படை பாடித் தங்கப் பதக்கப் பரிசினைப் பெற்றமை இவரது கவித்துவச் சிறப்புக்குத் தக்க சான்றாகும். "திறமைகள் மட்டும் ஒருவரைச் சிறந்த இலக்கிய வாதி ஆக்குவதில்லை. திறமைகளுக்குப் பின்னே ஒரு மனிதன் காணப்படவேண்டும்." என்று ஒரு கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு. விமர்சன மேடைகளில் கலாநிதி. சுப்பிரமணியன் அவர்கள் சில சமயங்களில் மிகக் கடுமையானவர் போலக் காணப்படுவார். நண்பன் எதிரி என்ற வேறுபாடு பாராமல் இவரது விமர்சனக் கோல் யாரையும் செம்மையாக, அளந்து விடும். 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று முழங்குவார். ஆனால் அந்த ஆழ்ந்த விமர்சனத்தின் பின்னே ஒரு மனிதத் தன்மை இருக்கும். இந்த மனிதம் காரணமாகவே பொருள் விளங்க முதலே மனதைத் தொடும் கவிதை போல, இவர் பல இலக்கிய நெஞ்சங்களைத் தொட்டவர் ஆனார்.

கடந்த ஏழு எட்டு வருடங்களாக எமது பிரதேசத்தில் கலைஞர்களையும் திறனாய் வாளர்களையும் ஒன்றிணைக்கும் பணியைக் 'கலை இலக்கியக்களம்' செய்து வருகிறது. எமது மண்ணில் உயர்மட்ட ரசிகர் கூட்டத்தை உருவாக்கும் பணியை இது சிறப்பாகச் செய்து வந்தது. செய்து வருகிறது. கவிதை, சிறுகதை ஆகிய இலக்கிய வகைகளுக்கு முழுமையான ஆய்வரங்குகளை நடத்திய சிறப்பும், நாடகத் துறையில் பல மாணவர்களை முறையாகப் பயிற்று வித்து, ஆசிரியர் தரம் வரை வளர்த்த பெருமையும் கொண்டது களம். பல்கலைக் கழகம் போன்ற, நிறுவன மயப்படுத்தப்பட்ட அமைப்பு ஒன்றினால், பெருந்தொகைப் பணச் செலவில் செய்ய வேண்டிய ஒரு காரியத்தை, ஆர்வத்தையும் நல்லெண்ண த்தையும் மட்டும் மூலதனமாகக் கொண்டு நடத்திய இக்களம் கலாநிதி.நா.சுப்பிரமணியன் அவர்களிடமிருந்து பிரிக்கப்பட முடியாத ஒரு அமைப்பாகும். அது நிறுவப்பட்ட காலத்திலிருந்து அதன் தலைவராக அமைந்து வழி நடத்திச் செல்பவர் இவர்.

இவ்வாறு பன்முக ஈடுபாடு கொண்ட இவரது ஆளுமைப் பண்பைப் பார்த்தால், யுங்கின் பிரிப்பில் ஒரு அகமுகி, ஷெல்டனின் பாகுபாட்டில் என்டோ மோ.ஃப்.ஸ்பிராங்கரின் வகைப்படுத்தலில் அழகியல் வகை!

ஒரு மல்லிகைப் பந்தலின் கீழ் இவரை நிறுத்தினால், அந்த மல்லிகை எப்போது நாட்டப்பட்டது என்றோ, அல்லது அந்த மல்லிகையின் இலைகள் ஏன் பசுமை குறைந்துள்ளன என்றோ ஆராய முற்படுபவராக இவர் இருக்கமாட்டார். அந்த நிலையில் மல்லிகையைப் பாடிய கவிஞனுடன் கைகோத்துச் செல்பவராகவே நிற்பார்.

எப்போதும் சிரித்து மகிழ்வாய் இருப்பதனாலும், அறிஞர்களின் மதிப்பையும் குழந்தைகளின் அன்பையும் பெற்றிருப்பதனாலும், நேர்மையான விமர்சகர்களின் பாராட்டைப் பெற்றவராக இருப்பதனாலும், அழகை ரசிக்கக் கூடியவராய் இருப்பதாலும், மற்றவர்களின் நல்ல பண்புகளைக் காண்பவராய் இருப்பதாலும் சமுதாயத்தில் தான் ஏற்படுத்தக் கூடிய ஒரு சிறு மாற்றத்தினால் உலகை முன்னே கூட்டிச் செல்லக் கூடியவராய் இருப்பதாலும், இவர் வாழ்வதால் இவ்வுலகில் பல மானிட உயிர்கள் பயனும் நிறைவும் பெற்றன என்ற யதார்த்த நிலை இருப்பதனாலும் ஒரு பிரபலமான ஆங்கில வரைவிலக்கணத்தின் படி கலாநிதி.நா.சுப்பிரமணியன் அவர்கள் வெற்றிகரமான வாழ்வு வாழ்கிறார் என்று நாம் முடிவு செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை
பண்டிதர்.சி.அப்புத்துரை அவர்களின் நூலுக்கானது

# வண்ண வண்ணச் செந்தமிழில். . .

'எழுத்து எனக்கு ஒரு குளியலைப்போன்றது. ஏனெனில் குளியலில் நான் மூழ்கி எழும்போது தூய்மையாக, ஆரோக்கியமாக, நலமாக, சுதந்திரமாக இருப்பதாக உணர்கிறேன்' என்றார் பழம்பெரும் நாடகாசிரியர் இப்சன்.

இனிமேல் ஒன்றும் செய்யமுடியாது என்று மனச்சோர்வுடன் பிள்ளைகளுக்குப் பாரமாக வாழும் வயது எண்பது. அந்த வயதிலும் கலாபூஷணம் பண்டிதர் சி.அப்புத்துரை போன்றவர்கள் சிலர் பயனுள்ள நூல்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள் எனும் போது இப்சனின் வார்த்தை எனக்கு நினைவு வந்தது. ஆம். பண்டிதர் அவர்களுக்கு எழுத்து என்பது ஒரு பூக்குளியல்.

யாழ்ப்பாணத்தில் சாந்திகத்தினூடாக வெளிவந்த முதுமை என்ற நூல் ஆரோக்கியமான முதுமை பற்றிய பல விடயங்களை அறிவு ரீதியாகத் தருகிறது. ஆரோக்கியமான முதுமையுடன் வாழ்பவர்களை வாழ்வில் எங்கே பார்க்கலாம் எனும் போது எம்மை அறியாமலே எமது விரல் பண்டிதர் சி.அப்புத்துரை போன்றவர்களைச் சுட்டுகிறது.

பண்டிதர் அவர்கள் இன்று எம்மிடை வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் அறிஞர், தமிழ்ச் சான்றோர். எழுத்தில் மட்டுமல்ல, பேச்சிலும் கூட முடிந்தவரை செம்மொழியைக் கையாளும் வியத்தகு ஆளுமை கொண்டவர் அவர் என்பதை அவரோடு பழகுவோர் அறிவர்.

மயிலிட்டிக் கலைமகள் மகாவித்தியாலயத்தின் பொற்காலத்தில் அதன் அதிபராகத் திகழ்ந்த பண்டிதர் அவர்கள் சிறந்த நிர்வாகி. நிறைந்த கல்விமான். கல்வி மனிதர்களின் அறிவுக் கண்ணைத் திறப்பது. இலக்கியம் உணர்வு சார்ந்து நின்று மனிதர்களின் உள்ளத்தைப் பண்படுத்துவது. அதனால் கல்வியாளராகவும், இலக்கிய வாதிகளாகவும் இருப்போர் பலர் சமநிலை ஆளுமையுடன் சமூகத்தில் மேன்மை பெறுவது இலகுவாகிறது. சிறந்த மரபுக் கவிஞரான பண்டிதர் அவர்கள் தான் வாழும் சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கலை இலக்கியத் துறையில் முதல் தரமான இரசனையைப் பேணுதல், திறனாய்வுப் பார்வையை வளர்த்தெடுத்தல், தகுதி வாய்ந்த கலை இலக்கியவாதிகளைக் கௌரவித்தல், இளந்தலை முறைக் கலைஞர்களுக்கு வலுவூட்டல் போன்ற நோக்கங்களை முன்வைத்து 05.09.1986இல் தெல்லிப்பழையில் தோற்றுவிக்கப்பட்டது, கலை இலக்கியக் களம் என்ற நிறுவனம். அது பன்னிரு மத்திய குழு உறுப்பினர்களை நிரந்தரமாகக் கொண்டிருந்தது. அவர்களில் ஒருவராகப் பண்டிதர் அவர்கள் அமைந்து, களத்தின் இயற்றுறையைப் பொறுப்பேற்று நீண்டகாலம் அதனைச் சிறப்புற வழிநடத்தி வந்தார். கலையரங்குகள், கருத்தரங்குகள், பட்டறைகள், நாடக மேடையேற்றங்கள், நூல் வெளியீடுகள் எனக் களத்தின் பணி விரிந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தின் தமிழ்ச் சமூகத்தை நொருக்கி எறிந்த போர் அனர்த்தம் எமது நிறுவனத்தையும் பாதித்தது. நிழல் சொரியும் மரமெல்லாம் நெருப்பள்ளிச் சொரிய நேர்ந்ததால், களத்தின் அங்கத்தவர்கள் பலர் இடம்பெயர்ந்தனர். சிலர் புலம் பெயர்ந்தனர், சிலர் இறைவனோடு இணைந்து கொண்டனர். இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் எமது மத்திய குழு உறுப்பினர்கள் யாரும் இல்லை. இந்த நிலையிலும் களம் தன் பணிகளைத் தொடருகிறது.

1988 இல் களம் தனது முதலாவது நூல் வெளியீட்டைத் தொடங்கியதில் இருந்து 2006 நவம்பரில் புலவர். ம.பார்வதிநாதசிவம் அவர்களின் மானம் காத்த மறக்குடி வேந்தன் என்ற கவிதைத் தொகுதிவரை அது கோத்த நூல் மாலை பெரியது. இன்று அம்மாலையின் மற்றொரு பூவாகப் பண்டிதர் அவர்களின் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு முதலாம் பாகம் எனும் நூல் இணைந்து கொள்கிறது.

நூலாசிரியர் அவர்கள் தனது முகவுரையில் கூறுவது போல, சரித்திரத்தைச் சரியாக எழுதிவைத்தல் என்ற விடயத்தில் மோசமான நிலையில் இருப்பவர்கள் நாங்கள். கிரேக்கம் போன்ற நாடுகள் கி.மு.5ம் நூற்றாண்டின் கலைஞர்கள், புலவர்களைப் பற்றிய தகவல் களைக்கூட இன்று உலகுக்கு முன்வைக்கும் நிலையில் உள்ளன. நாங்கள் கி.பி.20ம் நூற்றாண்டின் புலவர்களைப் பற்றியாவது பதிவுகளைச் செய்யாதிருத்தல் மன்னிக்கமுடியாத குற்றமாகிவிடும்.

தமிழ் இன்று பல்வேறு நாடுகளில் பல்வேறு விதமாக மாறிக்கொண்டிருக்கிறது. அந்த மாற்றம் வளர்ச்சி சார்ந்து, புதிய கலைச் சொற்களை உள்வாங்கி, புதிய பரிணாமம் அடைவதாக இருந்தால் நல்லது. அதை வரவேற்கலாம். ஆனால் பெரும்பாலும் இந்த மாறுதல்கள் தமிழின் அழிவுக்கே வழிதேடுகின்றன. ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் புலம்பெயர் தமிழர்களின் பிள்ளைகள் தமிழை ஆங்கிலத்தில் எழுதி வைத்து உச்சரிக்கிறார்கள். நாகரிகம் என்ற போர்வைக்குள் அகப்பட்டுக் கொழும்பிலேயே தமிழ் உச்சரிப்பு மாறிவருகிறது.

எழுதும் தமிழைப் பார்த்தால் தமிழர் வாழும் இடங்களிலேயே ஏன் பல சமயங்களில் தமிழ் எழுத்தாளர் தம் நூல்களிலேயே அது கொலை செய்யப்படுவதைப் பார்த்து இரத்தக் கண்ணீர் சொரிய வேண்டியிருக்கிறது. தமிழ் இனமும் துன்பப்படுகிறது. தமிழ் அன்னையும் வேதனைப்படுகிறாள். இத்தகைய ஒரு நேரத்தில் தமிழைத் தமிழாகப் பேணுவதில் பெரும் பங்களிப்பைச் செய்த தமிழ்ப் புலவர்கள் பற்றிய இந்த நூல் வருகிறது. இது மிகவும் பாராட்டப்படக் கூடிய விடயம்.

அறிஞர்கள் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை மனதில் நிறுத்திப் பண்டிதர் அவர்களின் எண்பதாவது பிறந்த தினத்தை அண்மித்து இந்த நூலை வெளியிடுவதில் கலை இலக்கியக் களம் பெருமை கொள்கிறது.

'வண்ண வண்ணச் செந்தமிழில் வகை வகையாய்க் கட்டுரைகளை' இந்த நூல் கொண்டிருக்கிறது.

ஏபிரகாம் லிங்கன் தனது மகனின் ஆசிரியருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அதில் ஒரு வரி 'அவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை வரக் கற்றுக்கொடுங்கள்' என்பது. பண்டிதர் அவர்களின் ஆசிரியர்கள் அந்த நம்பிக்கையை அவருள் விதைத்துள்ளனர். அதனால் இன்னும் பல நூல்கள் அவரிடமிருந்து வரும்.

இனி 'வாசிப்பு என்பது இரு மனங்களிடை யேயான மேம்பட்ட உரையாடல்' என்பர். குறுக்கே மூன்றாவது மனிதர்கள் ஏன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணிந்துரை

மனநல மருத்துவ நிபுணர் டாக்டர். எஸ்.சிவதாஸ் அவர்களின் 'மகிழ்வுடன்' என்ற நூலுக்கு

# இன்பம் எங்கே?

**'இன்பம் எங்கே இன்பம் எங்கே என்று தேடு**

**எங்கிருந்த போதும் அதை நாடி ஓடு'**

என்ற ஒரு பழைய சினிமாப் பாடல் காதில் ஒலிக்கிறது.

உயிர்கள் எல்லாம் வாழ விரும்புகின்றன. தமது இனத்தை இப்பூமியில் தொடர்ந்து நிலை நிறுத்த விரும்புகின்றன. ஆயினும் கூர்ப்பின் எந்த இடத்திலிருந்து, 'மகிழ்ச்சியாக வாழ விரும்புகின்றன' என்று கூறலாமா? தெரியவில்லை. நிச்சயமாக மனிதன் தோன்றிய காலத்திலிருந்து மகிழ்வைத் தேடித் தேடி அலைகிறான். இன்னும் அலையத்தான் போகிறான்.

இன்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, 'ஆராத இன்பம் அருளும் மலை போற்றி' என்று பாடிய மாணிக்கவாசகர் இறைவனால் மட்டும் தான் இன்பத்தைத் தர முடியும் என்பதில் தெளிவாக இருந்தார். குதிரை வாங்கக் கொண்டு சென்ற பொருள், மந்திரிப் பதவி எல்லாம் மறந்து குருந்த மர நிழலில் அமர்ந்து விட்டது அதனால் தான்.

அரண்மனையில் மகிழ்வைத் தேடிக் காணாமல் தானே புத்தர் காவி உடுத்து வெளியே வந்தார்? ஆயினும் எந்தச் சமயத்தைப் பின்பற்றினாலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் பணத்திற்கும் அதிகாரத்திற்கும் பின்னாலேயே இன்பம் இருப்பதாக இன்னும் நம்பத்தான் செய்கின்றனர். அது உண்மைதானா?

வாழ்வு திருப்தியாக இருக்கும் போது ஒரு சந்தோசம் வருகிறது. சந்தோசம் என்பது ஓர் உணர்ச்சியா, மனநிலையா என்று விவாதிக்க வேண்டியதில்லை, ஏனென்றால் உணர்ச்சிகளே மனநிலையைக் கொண்டு வருகின்றன.

சந்தோஷத்தை அளப்பது எப்படி? உடல், தொழில் ரீதியான முறை எதுவும் அதற்கு இல்லை. ஒருவர் சந்தோஷமாக இருக்கிறாரா இல்லையா என்பதை அவரது நடத்தையை மட்டும் கொண்டு அளக்க முடியுமா? தொடர்ந்து சிரித்துக் கொண்டு தெருவில் ஓடுகிறவர் மகிழ்ச்சியாக இருப்பவரா? அல்லது பித்துநோய் நிலை உள்ளவரா?

மகிழ்ச்சி பற்றி ஒருவர் கூறுவதை எந்த அளவு ஒப்பீட்டு ரீதியில் சரியெனக் கொள்ள முடியும்? முள்ளுக் குத்தியவர் 'வலிக்குது' என்று நொண்டுகிறார். துப்பாக்கிக் குண்டு பாய்ந்தவர் 'எனக்கு வலி தெரியவில்லை. இரத்தத்தைக் கண்ட பிறகு தான் ஏதோ நடந்து விட்டது என நினைத்தேன்' என்கிறார். இப்படிக் கூறப் பட்டதனால், முள்ளுக் குத்தும் வலி, துப்பாக்கிக் குண்டு பாயும் வலியை விடப் பெரியது என்று கொள்ளலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு வகையில் மகிழ்ச்சி என்பது ஒரு தனிப் பரிமாணம் கொண்ட விடயம் போலத் தோன்றினாலும் அது அப்படி இருப்பதில்லை. வாழ்வின் பல்வேறு கூறுகள் எங்கள் மொத்த மகிழ்ச்சியில் எத்தனை வீதம் பங்களிக்கின்றன என்று நாமே எமக்குள் கேட்டுப் பார்க்கலாம். குடும்ப அங்கத்தவருடனான உறவு, வேலை, பொழுது போக்கு, நண்பர்களின் தொடர்பாடல், உடற்பயிற்சி, சமூக வேலைகள், இவை ஒவ்வொன்றும் மொத்த மகிழ்ச்சியில் எத்தனை வீதத்தைத் தருகின்றன என்று பார்த்தால் அது ஆளுக்காள் வேறுபடலாம். ஆகவே மொத்த மகிழ்வை அளப்பது என்பது பெரிய சிக்கலான விடயம்.

மகிழ்வு, கோபம், கவலை போன்ற உணர்வுகள் எல்லோருக்கும் தான் வருகின்றன. எந்நாளும் சிலர் கடந்த காலத்தின் மகிழ்வான கணங்களை அதிகம் நினைவில் வைத்திருக்கின்றனர். அதற்காக அவர்கள் அதிகம் மகிழ்வாக இருந்தார்கள் என்று கூறமுடியுமா?

அதிகளவு சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடும் தன்மை, உற்சாகமான மனப்பாங்கு ஆகியவற்றோடு குறைந்தளவு பதட்டம், குறைந்தளவு பகைமை உணர்வு, உணர்வுகளை விரைவில் சமநிலைக்குக் கொண்டு வரும் திறமை உள்ளவர்கள் பொதுவில் மகிழ்வாக இருப்பர் என்று சில உளவியலாளர்கள் கருதுவர்.

ஆண்களை விடப் பெண்கள், திருமணம் ஆகாதோரை விடத் திருணம் ஆனோர், பிரிந்து வாழும் தம்பதியை விடச் சேர்ந்து வாழும் தம்பதியினர், அதிகாரிகளின் கீழ் தொழில் செய்பவர்களை விடச் சுயதொழில் செய்வோர், வேறு தொழில்களை விட ஆன்மிகம் சார்ந்த தொழில்களைச் செய்வோர் அதிக மகிழ்வுடன் இருப்பதாகச் சில உதிரி ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்**
**இன்பமே எந்நாளும் துன்பமில்லை'**

என்று அப்பர் பெருமான் கூறும் போது, கொய் மலர்ச்சேவடி இணையை மனதில் கொள்ளும் தியானத்தையே குறிப்பிடுகிறார். தியானமும் மற்றைய தளர்வுப் பயிற்சிகளும் இன்பத்தைக் கொண்டு வரும் என்று உளவியல் விஞ்ஞானம் இன்று முழுமையாக நம்புகிறது.

சிறுவயது முதல் புலன்கள் ஊடாக இன்பத்தை அநுபவிப்பது தாம் எமது முதல் அநுபவம். அழகான இயற்கைக் காட்சிகளில் ஆனந்தம் அடையாதவர் யார்?

**'கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே'** என்பது திருவாதவூரரின் கருத்து.

**மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று,**
**கண்ணில் ஆனந்த அருவி நீர் சொரிய'**

என்று சேக்கிழார் கூறும் போது இப்பிறவியே ஒரு வரப்பிரசாதம் என்கிறார். வாழ்வின் வரப்பிர சாதங்களை நினைத்து மகிழ்ச்சி கொள்ளுங்கள் என்றுதான் உளவியலாளரும் கூறுவர்.

**'ஆனந்த சாகரத்தில் அமரர் முன்னே**
**அழகலையே ஊர்வசி நீ ஆடும் போது...'**

என்று பாடும் தாகூர் ஆடுதலின் இன்பம் பற்றிப் பேசுகிறார்.

**'பல்லவி பத்மநாதன் ஊதுகையில்**
**பரவசம் ஏற்படும் உடம்பு**
**புல்லரித் தின்ப வெறி தலைக் கேற**
**புலனெலாம் செவி கொள நிற்போம்'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கவிஞர் சோ.ப பாடும் போது இசை தரும் மகிழ்வை எடுத்துரைக்கிறார்.

"Happy the man and happy he alone
He who call today his own"

என்ற ஆங்கிலக் கவிதை எதிர்காலத்தையும், கடந்த காலத்தையும் பற்றிப் பெரியளவு கருத்தில் எடுக்காது அன்றன்று தம் காரியங்களைக் கருத்தூன்றிச் செய்வோர் சந்தோஷமாய் இருப்பதைக் கூறுகிறது.

'கருணையைக் கொடுப்பது பெருந்தன்மை. அதைப் பெறுவது இழிவு' என்று தத்துவஞானி அரிஸ்டோட்டில் கூறியபோது கருணையினுள் ஒரு இன்பம் ஒழித்திருப்பதை எடுத்துரைத்தார்.

'சந்தோஷம் உங்களை விட்டுப் போய் விட்டதென்றால், சந்தோஷமாய் எழுந்து உட்கார்ந்து, சந்தோஷமாய்ப் பேசி, சந்தோஷமாய் இருப்பதாக நடிப்பதே, சந்தோஷத்தை மீளப் பெறும் வழி' என்று டேயில் கானேகி தனது நூல் ஒன்றில் குறிப்பிடுகிறார்.

மிகச் சிக்கலான இந்த விடயத்தை உளமருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ் அவர்கள் பார்க்கும் பார்வை மிக வித்தியாசமாய் இருக்கிறது. அவர் இவ்விடயம் பற்றிப் பல்வேறு கருத்தரங்குகளிலும் பேசிய போது நான் கேட்டிருக்கிறேன். அதிலும் யாழ்ப்பாணத்தில் அரச வைத்தியசாலையில் அவர் பேசிய பேச்சு மிக உன்னதமானது.

தனக்குத் தெரிந்த, தான் அறிந்த, தான் வாசித்த பல விடயங்களையும் மிக எளிமையான மொழியில் எங்கள் முன் படையல் செய்கிறார். அவரது கேள்விகள் ஒவ்வொன்றும் எங்களை மிக ஆழமாய்ச் சிந்திக்க வைக்கின்றன. சோலைக்குயில் ஆற்றுப் படுத்தல் மையத்திற்கான வருகை நிலை உள மருத்துவ நிபுணரின் நூல் என்ற வகையிலும் இந்த நூலின் வருகை எம்மை இரட்டிப்பு மகிழ்வு கொள்ள வைக்கிறது.

பொது மக்கள் கையில் இது மிகப் பயனுள்ள நூலாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. டாக்டர்.எஸ்.சிவதாஸ் அவர்களிடமிருந்து இன்னும் பல அரிய நூல்களை நாம் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறோம்.


## Guru Vidyalaya Final Exam

1. Professional
   - I) Principle of Education
   - II) Educational Psychology
   - III) Health and Physical Education

   } - B

2. Academic
   Science - B

3. I) Teaching Practice - A
   II) General Subjects .....
   Project work and religion - A




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் வார மஞ்சரித் தொடரில் இருந்து - 2010

# கோகிலாவைக் கேளுங்கள்

**அக்கா எனக்கு 14 வயது. நான் எனது பதினோராவது வயதில் பூப்படைந்தேன். பூப்புனித நீராட்டு விழாவினை மிகவும் விமரிசையாக எனது பெற்றோர் நடத்தியிருந்தனர். அது எனக்குப் பிடிக்கவில்லையாயினும் வேறு வழியின்றி ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று. இப்போது எனது சகோதரியும் பூப்படைந்திருக்கின்றார். எனது சகோதரிக்கும் அவ்வாறான தொரு சடங்கு நடத்தப் படுவதை நாங்கள் இருவரும் எதிர்க்கின்றோம். இதனால் எமக்கும் பெற்றோருக்குமிடையில் நீண்ட நாட்களாகக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. நாங்கள் என்ன செய்யலாம்?**

அகிலா, மட்டக்களப்பு

பதில் : மனித வாழ்நாளில் வளர்ச்சியும் விருத்தியும் தொடர்ந்து நடந்து கொண்டிருக் கின்றன. நாள்தோறும் நடைபெறும் வளர்ச்சியின் மைல் கற்கள் போல விருத்தி நிலைகள் வெளித் தெரிகின்றன. பல நாள் தொடர்ச்சியாக நடைபெற்ற வளர்ச்சியின் பின் ஒரு நாள் குழந்தை நடக்கத் தொடங்குகிறது. அதேபோல ஓமோன்களோடு சம்பந்தப்பட்ட ஒரு விருத்தி நிலைதான் பூப்படைதல். ஒரு வகையில் உடற்றொழிலியல் செயற்பாட்டின் இயற்கையான ஒரு கட்டம். தனது வாழ்நாளில் எது விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும். எந்த அளவிற்குக் கொண்டாடப்பட வேண்டும் என்பதை அவரவர் தீர்மானிப்பதே சிறந்தது. பல் முளைப்பது, சோறு சாப்பிடுவது, எழுதத் தொடங்குவது, பிறந்த தினம், திருமணம், என்று எந்த நிகழ்வையும் கொண்டாடுவதும் கொண்டாடாமல் இருப்பதும் அவரவர் பார்வையைப் பொறுத்தது. ஒரு பெண் பூப்படைதலில் அவளுக்கு ஒரு சிறு நெருக்கீடு இருக்கலாம். சிலருக்குக் கொண்டாட்டம் அந்த நெருக்கீட்டைக் குறைக் கலாம். சிலர் எமது வீட்டில் ஒரு பெண் இனப்பெருக்கத் தகைமையை அடைந்துவிட்டாள் என்பதைப் பகிரங்க அறிவிப்புச் செய்ய வேண்டியதில்லை என்று நினைக்கலாம். ஆணுக்கு அத்தகைய அறிவிப்பு நடப்பதில்லை. உங்கள் வாழ்வின் தீர்மானங்களை நீங்களே தான் எடுக்க வேண்டும். உறுதியாக எடுத்துச் சொல்லுங்கள் உங்கள் பெற்றோருக்கு. அவர்கள் ஏன் அதை விரும்புகிறார்கள் என்பது பற்றி மனம் திறந்து கலந்துரையாடுங்கள்.

**அக்கா, எனக்கு 14 வயது. சிறுவயது முதலே குறும்புத்தனம் அதிகம். எனது சகோதரி என்னைவிட 2 வயது மூத்தவள். படிப்பு, விளையாட்டு எல்லாவற்றிலும் அவள்தான் முதலாவதாக வருவாள். இதனாலேயே என்னை எந்நேரமும் அம்மா அவளுடன் ஒப்பிட்டுத் திட்டுவாள். அக்கா மீதும், அம்மா மீதும் பல சமயங்களில் எனக்கு ஒரே வெறுப்பாக இருக்கிறது. அது சரியல்ல என்றும் விளங்குகிறது. எனது இந்தக் குழப்ப நிலையை எவ்வாறு மாற்றலாம்?**

நளீரா, கெக்கிராவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் : மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். யாரையும் யாருடனும் ஒப்பிட வேண்டியதில்லை. ஒப்பிட முடியாது. ஒப்பிடக் கூடாது. உங்களிடத்தில் இருக்கும் திறமைகளை நீங்கள் அடையாளம் காணுங்கள். அவற்றை வளர்த்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். அம்மா வேண்டுமென்று செய்யவில்லை. தெரியாமல் செய்கிறா என்று புரிந்துகொண்டால் அவ மீதுள்ள வெறுப்பும் கோபமும் குறையும். நீங்கள் அவர்கள் மீது அன்பு செலுத்தத் தொடங்கினால் அவர்களுக்கும் உங்கள் மீது அன்று செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

**அக்கா நான் உயர்தரத்தில் படிக்கிறேன். எனக்குப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் நிறைய இருக்கிறது. ஆனால் ஒரு மணி நேரத்துக்கு மேல் ஓரிடத்தில் இருந்து படிக்க முடியவில்லை. நீண்ட நேரம் மனதை ஒருமுகப்படுத்த என்ன செய்யலாம்?**

பரீனா, அக்கரைப்பற்று.

பதில் : ஒரு விடயம் எமக்கு மகிழ்வைத் தருகிற போது அவ்விடயத்தில் நீண்ட நேரம் மனதை ஒருமுகப்படுத்த முடியும். தியானத்தில் ஏற்படும் மகிழ்வை அனுபவித்த ஞானிகள் பல மணி நேரம் உலகை மறந்து அமர்ந்திருக்கிறார்கள். கற்றல் மகிழ்வானது. எனக்கு முன்னர் தெரியாத ஒரு புது விடயம் இப்போது தெரிகிறது. முன்னர் கைவராத ஒரு ஆற்றல் இப்போது வருகிறது. முன்னர் இல்லாத மனப்பாங்கு இப்போது வருகிறது என்று உணர்ந்து மகிழ்ந்து படித்தால் எவ்வளவு நேரமும் படிக்கலாம். சோதனைக்கு மட்டும் படித்தால், கஷ்டந்தான்.

(2.5.2010 தினகரன்)

## TACEP Intermediate Level Exam

## - A Grade

**வட இலங்கைச் சங்கீத சபை நாடகமும் அரங்கியலும்**
**ஆசிரியர் தரம் – உப பாடம் – பண்ணிசை**
**இரண்டாம் பிரிவுச் சித்தி**
**நாடக கலா வித்தகர் – சித்தி**

**சமூகத்தால் வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்கள்**

1. இந்து சமய தமிழ் கலாசார இராஜாங்க அமைச்சு – இலக்கிய கலாவித்தகர் – 1986
2. வலிகாமம் வடக்குக் கலாசாரப் பேரவை – கலைச் சுடர் – 2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Cultural Welfare

What is culture? you can get a large number of definitions for it.

An early definition is that, "a particular society at a particular time and place"

It was also said that "The taste in art and manners that are favoured by a social group or all the knowledge and values shared by a society."

In biology culture means, "The raising of micro organisms, plants and animals" If we say "The culture of oysters" for example, you know all of them are alike in many features.

Here itself a question arises. Are we Srilankan Tamils alike in many features where ever we live in this earth?

We may try to define culture as follows, "Culture is the accumulated habits, attitudes, beliefs, customs, tradition, values, way of 'dealing with their' problems, goals, art, literature, religion, philosophy, food, clothing, buildings, tools, machines, roads and canals and everything of a group of people that define for them the general behavior and way of life – that is the total set of learnt and shared activities of a group of people and transmitted from one generation to the other. Some scientist view culture very broadly as the beliefs and values; tastes and interests, knowledge, behavior and even the very ways the individual conceive of their selves. Culture in short has come to be seen as the fabric out of which the social is made.

In another way you could also say that culture is the equivalent and complementary meaning approximately shared by members of a society. Feelings and behavior related to sexuality are also a part of a larger system of culture.

So, culture in the sum total of the ways of life of people includes norms, learned behavior, patterns and artifacts, how people feel and interact - the means by which they order and interpret the world - ways of perceiving, relating and interpreting events based on established social norms – a system of standards for perceiving, believing, evaluating and acting.

People learn culture and that is cultures essential feature. Many qualities of human life are transmitted genetically - an infants desire for food



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

is triggered by physiological characterestics determined

- Within the human genetic code, an adults specific desire for milk and 'Thosai' in the morning on the other hand cannot be explained genetically rather it is a learned response to morning hunger.

Culture as a body learned behaviours common to a given human society, acts rather like a template. That means it has predictable form and content, shaping behaviour and consciousness within a human society from generation to generation. So culture resides in all learned behaviours and in some shaping template or consciousness prior to behaviour as well. That is a culture template can be in place prior to the birth of an individual person.

The primary concept of a shaping template might be further broken down.

i) Systems of meaning of which language is primary.
ii) Ways of organising society from kinship groups to states and multinational co-operations.
iii) The distinctive techniques of group and their characteristic products.

Because the relationship between what is taught and what is learned in not absolute, some of what is taught is lost while new discoveries are constantly being made – culture exists in a constant state of change.

Meaning systems consists of negotiated agreements – members of a human society must agree to relationships between a word behaviour or other symbol and its corresponding significance or meaning. To the extent that culture consists of systems of meaning it also consists of negotiated agreements and process of negotiations.

So we have the sense that there is much disagreement about the word and concept of culture and we realize that any definition is part of an ongoing conversation about what we should take culture to mean.

Mathew Arnold – a pre eminent poet of the Victorian era saw culture "Contact with the best which has been thought and said in the world". His view of culture as involving such characteristic as 'beauty' "intelligence" and 'perfection' is a ' Neoplatonic' one. These values exist in the abstract and are the same for all human societies. But the common idea is that values, behaviours and idiologies are different from people to people.

There is a view in which all the love of our neighbour, the impulse towards action, help and beneficience, the desire for removing human error, clearing human confusion, and diminishing human misery, the noble aspiration to leave the world better and happier than we found it come in as part of the grounds of culture and the main and pre eminent part. Culture is then properly described not as having its origin in curiosity but as having its origin in the love of perfection. It is a study of perfection.

The Greek idea of a finely tempered nature gives exactly the notion of perfection as culture brings us to conceive it a harmonious perfection – a perfection in which the characters of beauty and intelligence are both present.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At the same time culture is ordinary. Every human society has its own shape, its own purpose and its own meanings.

So a culture has two aspects.

1. The known meanings and directions which its members are trained to
2. The new observations and meanings which are offered and tested.

So, culture is always both traditional and creative.

The Greek culture and the ancient Roman culture are famous in the world. If we come to the Tamil culture, the external manifestation of Tamil culture may be found in our folk songs, and dance, in the food and dress forms. But as always, the external go with the internal.

In 1996, a series of article written by C.Kumarabarathy of Wellington, New Zealand looked at Tamil culture from the stand point of an expatriate Tamil in an emerging post modern world. His reflection provided food for our thought.

If culture is the distilled essence of the way of life of people, then in the case of Tamil People, the distillation process has covered a time span of more than 2000 years and today the Tamil people living in many lands across distinct seas acquire strength from the richness of their own cultural heritage not only because that culture has something to do with their own roots and their way of life, but also because they believe that culture has a significant contribution to make the world.

As the Czech prof. Dr.K.V.Zvelebil said, "There is no doubt that the culture of the Tamil belongs to the great and immortal treasure of the world civilization".

So, now it is the main task of the academics of Tamil culture to acquaint the world's cultural public with the most important contribution of Tamil Culture to the worlds civilization because most of the population are not aware of it.

As far as literary works are concerned, it is necessary before all to make them accessible to a wide public of readers by means of artistic translation into the world great languages.

With regards to the works of art architecture it is necessary to make them a common treasure of the world with the help of publications giving detailed and perfect reproductions. This may be achieved through the UNESCO as well as through the work of individual scholars and local institutions.

The following works should be made familiar to the whole world.

i) The ancient Tamil lyrical poetry
ii) The Thinakkural
iii) The epical poem "Silappathikaram"
iv) The school of Bakthi, both vaishnave and Saiva, specially the works of Manivasagar, Sampanthar, Nammalvar and Andal.
v) The philosophic system of Saiva Sidhandha.
vi) The Dravidian temple Architecture of which the chief representation are from the temples of Thanjavoor, Chithamparam and Madurai.

With all the classical dance of the Ancient Tamils, both Sri lankan and Indian, The poetic works of Barathy should be taken care of.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

And today the internets and the world wide webs have render that task hopefully less difficult.

So far we have thought about something that we have to preserve. Are there anything that we have to change? yes – a lot.

As I said in the very beginning we the Sri lankan Tamil – or the Tamils in common – should try to maintain many features alike, where ever we live in the world. Otherwise culture may loose its meaning in our future generation.

And as we said earlier, culture is a system of meaning of which language is primary. We all know the fact that the language skills of our society is falling fast even in our own try. In the other countries, we are in doubt whether the next generation would know to read and write the language. So we have to put a 'stop loss' order at some point.

Another important thing to observe is that we are gradually changing to an aggressive culture. There is a common opinion in the world that Srilankan Tamil are very aggressive and without manners. We have to observe closely this criticism and develop ourselves. The way of dealing with problems is a part of culture. We have to study a bit about it from other cultures.

We still belief in Ghosts and offering animal blood to God. We have a custom of dowry. We have a tradition of listening to the voice of lizard. We believe in caste system even now at least in marriages. We perceive things more negatively when compared to the other cultures. We don't trust people and we don't behave in a way so that others would trust us also. We belief money and power are the only important factors to live happily in this world. So. these are some of the many things where we need changes.

We should not allow other culture to mix in our rituals. For example our way of doing a funeral is very healthy. Psychologists are of opinion that we give a lot of chances to grief and mourn. The chances are less to become depressed after a loss if we go through our cultural process. We have to keep them up.

We said that culture exists in a constant state of change. So the changes in food, clothing, buildings, tools, machines, roads and canals - I hope that we may have to accept the changes because there is no harm in accepting this changes in these parts.

We have to try and add some good aspects of other cultures to ours. For example the sitting method on the floor while doing some work at home in Japan is something we could take in into our culture. In European culture people get together for dinners in the week ends. We may follow it.

I wish to finish this talk by saying, "Culture consists in the way certain thoughts are used to think others". So thank you very much for this opportunity for giving some of my thoughts to arouse your thoughts.

Thank You.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை வாசிப்பு - இலக்கிய விழா

## தமிழ் இலக்கியச் செல்நெறியில் விஞ்ஞான வளர்ச்சியின் பங்கு

"மழை மேகம் வந்து புரள்கின்ற வேங்க
மலை மீது வந்த மகவே,
வரும் ஆழி சூழ மகிழ் தென் குமரி
மடியில் தவழ்ந்த மலரே.
குழைகின்ற தென்றல் தவழ்கின்ற பொதியைக்
குறு மாமுனி தன் மகளே
கொடை, காதல், வீரம் நிறைகின்ற தென்னர்
கொடையாக வந்த கொடியே
தமிழென்ற பெயர் கொண்ட அமிழ்தே"

என்று தமிழ் அன்னையை மனதிலே இருத்தி மேற்குறிப்பிட்ட தலைப்பிலான எனது கட்டுரையை இந்த அறிஞர் அவையிலே சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

'கல்லடுக்கி மேலே கனத்த உருளைகளைச் செல்லவிட்டுச் செல்லவிட்டு செப்பனிட்ட நல்லதொரு வீதி. ஒரு புல் இருகைத் தளிர் நீட்டி நின்றாள்' என்பது மகாகவி து.உருத்திரமூர்த்தி அவர்களின் கவிதை வரிகள்.

20வருட கால உள்நாட்டு யுத்தம் என்ற கல் அடுக்கி, மனவடுவுக்குரிய நெருக்கீட்டுச் சம்பவங்கள் என்ற கனத்த உருளைகளைச் செல்லவிட்டுச் செல்லவிட்டு உலகம் முழுவதையும் நோக்கிக் கைநீட்டி உதவி கோரும் சமூகமாகச் செப்பனிடப்பட்ட நல்லதொரு இலங்கைத் தமிழ்ச் சமூக வீதியில் இருந்து இரு கைத்தளிர் நீட்டி வந்த ஒரு புல்லாய் உங்கள் முன் நிற்பதில் ஒரு நிறைவும், சமநேரத்தில் ஒரு கவலையும் எனக்குள் விரிகின்றன.

"மனித வாழ்வின் இலக்கு எதுவாக அமைதல் வேண்டும்? அல்லது வெற்றிகரமான வாழ்வு என்றால் என்ன?" விடை காண்பதற்குக் கடினமாக கேள்விகள் இவை. என்றாலும் ஒரு வரை விலக்கணம் இவ்வாறு சுட்டுகின்றது.

அதிகமான நேரங்களில் மகிழ்வான மனநிலையுடன் காணப்படுதல், குழந்தைகளின் அன்பையும் சான்றோர்களின் மதிப்பையும் பெற்றுக் கொள்ளல், நேர்மையான விமர்சகர்களால் பாராட்டப்படுதல், ஆரோக்கியம் குறைந்த மனிதர்களின் கருத்துக்களையும் ஜீரணித்துக் கொள்ளல், அழகை ரசித்தல், மனிதர்களின் நல்ல பக்கங்களைப் பார்த்தல், ஆரோக்கியமான பிள்ளைகள் அழகிய பூஞ்சோலைகள், மாற்றியமைக்கப்பட்ட சமூக அமைப்பு போன்றவை மூலம் உலகை இன்னும் சிறந்ததாக விட்டுச் செல்லல், நாம் வாழ்ந்ததால் எத்தனை மனிதர்கள் சந்தோஷமாக மூச்சுவிட்டார்கள் என்று அறிதல் ஆகியவை வெற்றிகரமான வாழ்வின் சுட்டிகளாகும்.

இத்தகையதொரு வெற்றிகரமான வாழ்வுக்கு விஞ்ஞானம், இலக்கியம் ஆகிய இரண்டும் சம அளவில் பங்களிப்புச் செய்கின்றன.

விஞ்ஞானம் இன்று அபரிமித வேகத்தில் வளர்ந்து வரும் ஒரு துறை. பொருள் விளங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலே குழந்தையைத் தொட்டுத் தழுவிக் கொள்கிறது விஞ்ஞானம்.

விஞ்ஞான அறிவு குறைந்தவர்கள் 'முகத்திரண்டு புண்ணுடையர்' என்பதாகவே கருதப்படும் காலம் இது.

ஆயினும் விஞ்ஞானத்திற்கும் இலக்கியத்திற்கு மிடையே சில முக்கிய வேறுபாடுகள் உள்ளன என்பதையும் இந்த இடத்திலே நாம் கருத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்

விஞ்ஞானத்திலே அறிவும் ஆராய்ச்சியும் முக்கிய இடம் வகிக்கின்ற அதே நேரத்திலே இலக்கியத்தில் உணர்வும் கற்பனையும் பிரதான விடயங்கள் ஆகின்றன. "ஊன்றி நின்று நடப்பது போன்றது அறிவியல் என்றால், தாவிப் பறப்பது போன்றது கலை" என்று கூறுகிறார் மு.வ.அவர்கள்.

ஒரு பூவைப் பார்த்து, "இது வெள்ளை நிறமானது. மாலை 6.00 மணிக்கு மலர்கிறது. இதனுடைய புல்லிகள் பச்சை நிறமானவை. இதன் நிறை 01 mg. க்கும் 02 mg. க்கும் இடையில் வேறுபடுகிறது" என்று விஞ்ஞான விளக்கம் தரும்போது, "அழகான இந்த மலர் தனது வாசனையூடாக மனித மனங்களைத் தொட்டுத் தடவுகிறது" என்று இலக்கியம் பேசுகிறது.

ஆகவேதான் புதிய விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் தோன்றும்போது பழைய சில அழிந்து போகின்றன. 'எடிசன்' மின்குமிழைக் கண்டு பிடித்த காரணத்தால் இன்று அவுஸ்திரேலியாவில் 'சிட்டி' விளக்கைக் கண்டுபிடித்தவர் பற்றி யாரும் பேசு வதில்லை. ஆனால் இலக்கியம் அழிவதில்லை. மனித உணர்வுகள் எப்போதும் ஒன்றாக இருப்பதால் நல்ல கலைஞன் எப்போதும் போற்றப்படுகிறான். கி.மு.5ம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க நாடகாசிரியர்கள் இன்றும் போற்றப் படுகிறார்கள். 25 நூற்றாண்டுகள் முடிந்த பிறகும் "சோபோகிளிஸ்" (Sophocles) போன்றவர்களின் நாடகங்கள் இன்றும் நடிக்கப்படுகின்றன.

ஆயினும் மனிதர்கள் கற்க விரும்புகிறார்கள். கற்றல் மகிழ்வானது. கற்றல் நடைபெறும்போது "செறாரோனின்" (Seratonin) போன்ற பதார்த்தங்கள் நரம்புத் தொகுதியில் சுரக்கப்படுதல் இந்த மகிழ்வை உயிரியல் ரீதியாக விளங்க வைக்கிறது. புதிய விஞ்ஞான விடயங்களைக் கண்டுபிடிப்பதும் அவற்றைப்பற்றி அறிந்து கொள்வதும் மனித மனங்களில் ஒரு பசியாக இருக்கிறது. இதனைப் புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள் அழகாகத் தன் கவிதையிலே பின்வருமாறு சொல்லியுள்ளார்:-

மன்னுயிர்க்குப் புவியினிலே பசி ஒன்றாகும்
மானிடர்க்கோ என்றென்றும் பசி இரண்டாம்
துன்னுமுயர் கல்வியினைப் பெறுவோமென்று
துடிக்கின்ற அறிவென்னும் பசியதாகும்.

ஆயினும் விஞ்ஞானக் கல்வி என்பது வெறுமனே பெரிய அறிவு மூட்டைகளைச் சுமப்பது அல்ல. பண்போடும் அமைதியோடும் மனிதன் வாழ்வதற்கு அது உதவ வேண்டும். ஏனெனில் வெற்றிகரமான வாழ்வு என்பது அப்போதுதான் சாத்தியப்படும்.

சாகும்வரை ஒருவர் விஞ்ஞான அறிவைப் பெறலாம். கற்றலுக்குக் கற்றல் (Learn to learn) என்ற எண்ணக்கரு 1999 முதல் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்திலும் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது.

புதிது புதிதாக விடயங்களைக் கற்றுக்கொள்ள முடியாதபடி 'எந்தக் காலத்திலும் என் வயது அதிகமாகிவிடவில்லை' என்று அந்தக் காலத்திலேயே மகாத்மா காந்தி சொன்னார்.

ஆயினும் மனித மனம் மறை உணர்வுகளுக்குள் சிக்கித் தனது கருத்தூன்றல் நிலையில் தாழ்ந்து போகும்போது இந்த விஞ்ஞானக் கல்வி கடினமான விடயமாகிவிடும். எமது இலங்கைத் தீவுபோல நீண்டகாலப் போர் அனர்த்தங்களில் சிக்கி அல்லல்படும் இடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களின் விஞ்ஞானக் கல்வியில் பாரிய வீழ்ச்சி தென்படுவதை அவதானிக்கலாம். இந்த இடங்களில் இலக்கியம் நிறையவே கைகொடுத்து உதவலாம். அதனால்தான், "எங்கே அறிவியல் விளங்காமல் நிற்கிறதோ அங்கே கலை தொடங்குகிறது. அங்கிருந்து அறிவியலால் உணர்த்த முடியாத உண்மைகளை உணர்த்துகிறது" என்று லீ கன்ற் (Leigh Hunt) என்ற அறிஞர் குறிப்பிட்டார்.

ஆகவே இலங்கை போன்ற நாடுகளில் மனிதர், பொருள், இடம், பணம், நேரம் ஆகியவற்றை முதலிட்டு விஞ்ஞானக் கல்வி முறைமை என்ற பாதையூடு பயணம் செய்து அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் கொண்ட பிள்ளைகளை உருவாக்க முடியாது திணறும் போது இலக்கியம் கைகொடுத்து உதவ வேண்டும். விஞ்ஞானச் செய்திகளை அழகுணர்வுடன் சித்திரிக்கும் கவிதைகள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியங்கள் போன்றன மாணவர்களை எளிதில் ஈர்த்து அவர்கள் பெறவேண்டிய அறிவைப் பெறுவதில் உதவும். அவை மிக மிக அரிதாக எமது மொழியில் செய்யப்பட்டிருந்தாலும் அவற்றின் தேவை மிகப் பெரிய அளவில் உள்ளது.

அவுஸ்திரேலியா போன்ற புலம் பெயர்ந்த தமிழர்களை நிறைய அளவில் கொண்ட வளர்ச்சி அடைந்த நாடுகளில் இந்த விஞ்ஞான வளர்ச்சிக்கும் இலக்கியத்துக்குமான தொடர்பை வேறு ஒரு வகையிலும் பார்க்கலாம். ஏனெனில் இங்கு விஞ்ஞானக் கல்விக்குத் தமிழ் இலக்கியம் உதவ வேண்டிய தேவை அதிகம் இல்லை. அப்படி இருப்பினும் அதைச் செய்யக்கூடிய இலக்கியங்கள் ஆங்கில மொழியில் தாராளமாக வந்து கொண்டிருக்கின்றன. பிள்ளைகள் அவற்றை இலகுவில் வாசித்து அறிந்து கொள்வர். ஆகவே இங்கு எழுத்தாளர்கள் 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற பாரதியாரின் பாடலை மனதிலே எடுத்துச் சமகால விஞ்ஞான வாழ்வு முறையை இலக்கியங்களிலே பதிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் ஒரு காலத்தின் இலக்கியம் என்பது அக்கால வாழ்வு முறையின் கண்ணாடி. நாடகம் தொடர்பாகக் கருத்துக் கூறும், 'பேர்டோல்ட் பிறெச்ட்' (Bertold Brecht) "நாடகம் என்பது உலகத்தைக் கலை அழகுடன் மேடையில் எறிவது" என்கிறார். அந்தக் கருத்தை இலக்கியத்துடனும் தொடர்பு படுத்தலாம். ஏனெனில் அடிப்படையில் கலைகள் எல்லாம் - குறிப்பாக நுண்கலைகள் எல்லாம் - ஒத்த பல பண்புகளைக் கொண்டவை. ஆகவே இலக்கியம் என்பது ஒருவகையில் வாழ்வைக் கலை அழகுடன் மொழியில் எறிவது எனலாம். இலக்கியத்தை ஒருபோதும் வாழ்வில் இருந்து பிரிக்க முடியாது. உயிரோட்டமுள்ள ஒரு வாழ்க்கைத் தரிசனம் தான் இலக்கியம்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது, "இதைத் தானே நாங்கள் எல்லோரும் செய்கிறோம்" என்று எமக்குத் தோன்றலாம். ஆனால் உண்மையில் 21ம் நூற்றாண்டின் விஞ்ஞான வாழ்வு முறையைக் கலை அழகுடன் மொழியில் எறிவது அவ்வளவு சுலபம் இல்லை. அதைச் செய்வதற்கு எழுத்தாளன் மொழி ஆற்றல் மிக்கவனாக இருக்க வேண்டிய தேவை இருக்கிறது. அடிப்படையில் ஒரு வசனத்தைச் சரியாக அமைக்க முடியாத பலர் தமிழ்க் கவிதை (கவிதையா?) எழுதுபவர்களாயும் சிறுகதை எழுதுபவர்களாயும் ஆகியுள்ள அவலத்தை உலகம் முழுவதிலும் பரந்துபடக் காணமுடிகிறது. இது அவர்களது தவறு இல்லை. அவர்களிடம் உணர்வுகள் (emotions) கொப்பளித்து வருகின்றன. அவற்றை அவர்கள் தமக்கு முடியுமான தமிழில் எழுதுகிறார்கள். அவர்களின் உணர்வுச் சமநிலைக்கு அது உதவலாம். உதவும், ஆனால் ஏனைய வாசகர்களை அது சென்றடையும்போது தான் பிரச்சினை ஏற்படுகிறது. எழுத்தாளரால் எழுதப்படுவதால் அல்லது பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதால் அது சரியான மொழிப்பிரயோகம் என்று வேறு பலர் எடுத்துக் கொள்கிறார்கள். அந்தப் பிழையை அவர்களும் பின்பற்றத் தொடங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் மொழித்தூய்மை பாரிய ஆபத்தினுள் சிக்கி நிற்கிறது.

அதைவிட முக்கிய பிரச்சினையாக இருப்பது, எழுத்தாளர் தான் எழுதும் விஞ்ஞான விடயம் தொடர்பாக எவ்வளவு அறிவைப் பெற்றிருக்கிறார் என்பது. உதாரணமாக நாம் எல்லோருமே நோய்களைப் பற்றி எமது இலக்கியங்களில் எழுதுவோம். குறிப்பிட்ட நோய் பற்றிய தெளிவான ஆழ்ந்த அறிவு இல்லாத எழுத்தாளர் அதைக் கையாள முற்படும்போது பல பிழையான அறிவுசார் தகவல்கள் வாசகர்களைச் சென்றடைகின்றன. கணனிப் பொறியியலாளர் ஒருவரை ஒரு இலக்கியத்தின் பாத்திரமாக்கும்போது எழுத்தாளர் அத்துறையை ஆழக் கற்க வேண்டியவர் ஆகின்றார். இது ஒரு சவாலாக இருக்கிறது. அதே நேரம் இன்றைய தேவையாகவும் இருக்கிறது.

லட்சுமி அல்லது டாக்டர். எம்.கே.முருகானந்தன் படைக்கும் ஒரு மருத்துவப் பாத்திரம்போல, சுஜாதா உருவாக்கும் ஒரு விஞ்ஞானி பாத்திரம் போல, அ.முத்துலிங்கத்தின் கம்பியூட்டர் பாவனையாளர் போல மற்றொரு எழுத்தாளரால் எழுத முடியாதிருப்பதை உற்றுக் கவனித்தல் வேண்டும். ஆக எழுத்தாளன் விஞ்ஞானத்தின் ஏதோ ஒரு பிரிவிலாவது சிறப்பாற்றல் பெறவேண்டியவன் ஆகின்றான். அல்லது தான் எழுதப்போகும் களம் தொடர்பான விஞ்ஞான அறிவை அத்துறை சார்ந்த நிபுணர் ஒருவரிடம் கேட்டாவது தெரிந்து கொள்ளவேண்டியவன் ஆகின்றான். தான் உள்வாங்கிக் கொண்ட அந்த விடயங்களை தனது இலக்கியங்களில் அழகுடன் ஆழ எறிய வேண்டியவன் ஆகின்றான். அப்போதுதான் எதிர்காலத்தில் அது 21ம் நூற்றாண்டின் தமிழ் இலக்கியம் என்ற சிறப்பு முத்திரையைப் பெறத் தகுதி உடையதாகும்.

'ஆர்ரியூறோ பெறிஸ் றிவேற்றி' (Arturo Perez Reverte) என்ற ஸ்பானிய எழுத்தாளரைப் பாருங்கள். தனது ஃபிளான்டேர்ஸ் பனல்' (Flander's Panel) என்ற நாவலில் 'செஸ்' (Chess) விளையாட்டைப் பற்றி மிக ஆழமாக எழுதுகிறார். நல்லபடி 'செஸ்' விளையாட்டைக் கற்றுத் தானும் விளையாடி ஒரு உணர்வுபூர்வமானதும் அறிவுபூர்வமானதுமான அநுபவத்தைப் பெறாமல் கதிரையில் இருந்து கற்பனை செய்து அவ்வாறு எழுத முடியாது. 'ஃபிளான்டேர்ஸ் பனல்' நாவல் அவர்களது நாட்டின் விருதைப் பெற்றதில் ஆச்சரியமில்லை.

ஆர்தர்.சீ.கிளார்க்கின் விஞ்ஞான இலக்கியங்கள் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். உதாரணமாக 'பி.ஃபார் ஏடன்' (Before Aden) என்ற அவரது கதையை எடுத்துக் கொள்வோம். அது அவரது கதைகளில் மிகச் சிறந்தது என்று சொல்ல முடியாது. ஆயினும் அந்தக் கதை எப்படி ஒரு நல்ல விஞ்ஞான இலக்கியமாகிறது என்று பார்க்கலாம். அது வெள்ளிக்கிரகத்தில் (Venus) மனிதன் இறங்குவது பற்றிப் பேசுகிறது. விஞ்ஞான வளர்ச்சியில் இன்னும் நடைபெறாத விடயம் இது. ஒருவேளை இப்போதைக்கு நடைபெற முடியாத விடயமாகவும் இருக்கலாம். அந்த வகையில் அது ஒரு முன்னோக்கிய கற்பனை. யதார்த்த விரோதமாயினும் (Anti realism) விண்வெளி ஆய்வு பற்றிய ஆழமான அறிவு இன்றி அதுபோல அழகான ஒரு கதை எழுதுதல் ஒருபோதும் சாத்தியமில்லை. எதிர்கால விஞ்ஞான ஆய்வுகளுக்கு ஒருவேளை இந்தக் கதை பயன் படவும் கூடும். இங்கே கலைஞன் விஞ்ஞானியை முன்னோக்கி அழைத்துச் செல்பவன் ஆகின்றான். இக்கதையைப் படிக்கின்ற மாணவர்கள் விஞ்ஞானியாக வருவது பற்றிக் கனவு காண்கிறார்கள். பலர் கனவு காணும்போதுதான் ஒரு சிலரிலாவது அது நனவாகின்றது. அந்தச் சிறுகதையில் வரும் 'கிரகாம் கச்சின்ஸ்' (Graham Hutchins) என்ற பாத்திரத்தைச் சூரியக் குடும்பத்தில் மிக மகிழ்வுடன் காணப்படும் விஞ்ஞானி (The happiest biologist in the solar system) என்று அவர் வர்ணிக்கிறார். இது மாணவர்களிடம் பெரிய ஆர்வத்தைத் (Motivation) தூண்டவல்ல ஒரு வசனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு காண முடியாத பருவத்தினர் வாசிக்கும்போது ஒரு சிறுகதையின் இலக்கிய மகிழ்வைத் தருகின்ற அதே நேரத்தில் அறிவுசார் தகவல்கள் பலவற்றையும் பட்டும் படாமல் தந்து 21ம் நூற்றாண்டின் விஞ்ஞான வாழ்வு பற்றிய இலக்கியம் என்ற முத்திரையைப் பெற்றுக் கொள்கிறது. Under Jet பற்றி, Radar பற்றி, மிக உயர் வெப்ப நிலைகளில் வாழும் அல்காக்கள் பற்றி, refrigerated thermo suit பற்றி Scout car பற்றி எல்லாம் எம்மை அறிவூட்டுகிறது இக்கதை.

இப்படியான இலக்கியங்கள் தமிழில் மிக அரிதாக இருக்கின்றன என்பதுதான் இக்கட்டுரை ஆராய முற்பட்ட விடயம். இலங்கையின் கல்விமுறையும் தமிழ் இலக்கியங்களும் 'ஆய்வாளர்களையும் விஞ்ஞானிகளையும்' உருவாக்குவதில் தவறிவிட்டன என்பது ஒரு பொதுவான குற்றச்சாட்டாகும். எமது இனமும் மொழியும் சர்வதேச தரத்துக்கு உயர்ந்து இன்னும் பல நூற்றாண்டுகள் வாழ வேண்டுமாயின் எமது மொழியில் இலக்கியம் விஞ்ஞான வளர்ச்சியைக் பிரதிபலிக்கும் முறையில் எழுத நாம் அனைவரும் பெருமுயற்சி எடுப்போம் என்ற பிரதிக்ஞையை இந்தத் தமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடலில் எடுத்துக் கொள்வோமா?

22.1.2005

ஷோம்புஷ் ஆண்கள் உயர்தரக் கல்லூரியில் நடைபெற்ற அவுஸ்திரேலிய எழுத்தாளர் விழாவில் வாசிக்கப்பட்டது.

*எழுதிய நூல்கள்....*

சிறுகதைத் தொகுதிகள் :-

* மனித சொரூபங்கள்.... 1982
* முரண்பாடுகளின் அறுவடை.... 1983
* அறிமுக விழா. . . . 1984 (புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் சிறுகதைகளும் விமர்சனங்களும் சேர்த்து)
* பிரசவங்கள் .... 1986
* வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்.... 1997
* முகங்களும் மூடிகளும்.... 2003
* மனதைக் கழுவும் மகாசமர்த்தர்கள் (தொகுப்பாசிரியர்) ~ 2008

நாவல்கள் :-

* தயிலும் ஒரு நாள் கலையும்.... 1986 (தகவம் பரிசு)
* தூவானம் கவனம்.... 1989.

நாடகங்கள் :-

* குயில்கள்.... 2001 (இரண்டாம் பதிப்பு 2005)
* கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு.... 1997
* அரங்கக் கலையில் ஐம்பதாண்டு.... 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை - அநுபவநிலை

# நீலாவணனின் 'பாவம் வாத்தியார்'

"தாமின்புறுவது உலகின்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்பது குறள்.

இந்தக் கவிதையைப் படிக்கின்றபோது நீங்கள் பெறும் அநுபவமும் நான் பெறும் அநுபவமும் - ஒன்றாக இருக்கும் போது எனது பேச்சை நீங்கள் விரும்பக் கூடும். அவை பெருமளவு வேறுபடும்போது நீங்கள் கோபம் கொள்ளவும் கூடும். உண்மையில் இந்த அநுபவத்தை அவரவர் அநுபவிப்பதே சிறந்தது - அதைப்பற்றிப் பேசுவதை விட! ஆனால் எங்களுக்குச் சில தேவைகள் இருக்கின்றன. அறிவு ரீதியாக - ஆகவேதான் பேசவேண்டிய நிர்ப்பந்தம்.

இலக்கிய அநுபவத்தில் - அதைக்காணும் ஆய்வில் - ஏன் வேறுபாடுகள் தோன்றுகின்றன?

நீலாவணன் தனது அநுபவத்தில் ஒரு பகுதி யைத்தான் சொற்களில் வடிக்க முடியும். அதைக் கற்கும் நான் - அவனது சொற்களைக் கடந்து பார்க்கும் போது - எனது சொந்த அநுபவத்தை வழிகாட்டியாக அழைத்துச் செல்கிறேன். உங்கள் அநுபவம் வேறாக இருக்கும் போது நீங்கள் செல்லும் வழியும் வேறாக இருக்கலாம்.

வாழத் தெரியாமல் வாழ்ந்து - இடமாற்ற உத்தரவு பெற்று - கையிலே மூட்டை முடிச்சுடன் - பஸ்ஸு"க்குக் காத்து நிற்கும் இந்த ஏழை ஆசிரியர் என் கண்களில் தெரிகிறார். யார் இந்த ஆசிரியர்? இது வேறுயாரும் இல்லை. இது நான்தான் என்று எனக்குள் ஓர் உணர்வு. சில குறிப்பிட்ட பண்புகளிலாவது இது நான்தான். (நீலாவணன் என்னைக் கண்டதில்லை. நானும் அவனைக் கண்டதில்லை) சமூகத்திலே ஆசிரியர்களுக் கிடையே நிலவும் சிறப்பு நிலை வேறுபாடுகளை உற்று நோக்கிய கவிஞர் - அதன் பெறுமதியை நன்கு உணர்ந்து - அவர்களில் எம் மனதில் நீங்காது இடம்பெறும் சிறு குழுவினரைப் பொதுமைப்படுத்திப் பாத்திரமாக்கினார். அந்தப் பாத்திரம் ஒரு சிறு கவிதை மூலம் 'காவிய நாயகனுக்குரிய' விசேடத்தைப் பெற்றது.

அந்த ஊர் மனிதன் ஒருவன் பஸ்ஸு"க்குக் காத்து நிற்கும் உபாத்தியாயரோடு உரை யாடுகிறான். அந்த நீண்ட Monologue அதன் கிராமியத் தன்மையுடன் எமது காதுகளில் கேட்கிறது. கவிஞன் பாவிக்கும் குறியீடுகளாகிய சொற்களின் அமைப்பையும் வடிவையும் பண்பையும் பார்க்கிறோம். கனிவு, வலிமை, கரகரப்பு, மடமடப்பு முதலிய பல்வேறு ஒலிப்பண்புகளைக் கவனிக்கிறோம். எதுகை, மோனை முதலிய ஒழுங்கமைதிகளை அவதானிக்கிறோம். ஆயினும் இவை எல்லாவற்றுக்கும் மேலே இந்தச் சொற்கள் எழுப்பும் நினைவு மண்டலம் - உணர்வுச்செறிவு - ஈடுபாடு - இறுதியாக அந்த அநுபவம்.

ஓர் அறிவியலாளன், இந்த ஆசிரியரின் சம்பளம் எவ்வளவு? இவர் கற்பித்த மாணவர்களில் எத்தனை வீதமானோர் சித்தியடைந்தனர். இவர் எத்தனை நாள் லீவு எடுத்தார்? போன்ற விபரங்களைத் தேடித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுத்துத் தரக்கூடும். நீலாவணன் இவரது உணர்வுகளை மிக இறுக்கமாக எம்மிடம் தொற்ற வைத்தார். 'இங்கிலீசில்' இந்த ஊரார் எழுதிய பெட்டிசமும், இந்த ஆசிரியர் கண்ணில் துளிர்க்கும் நீரும் எமக்குள்ளே தரிசனமாகவில்லையா?

நான் நீலாவணனைப் படித்தேன் என்றா சொன்னேன்? இல்லை நான் நீலாவணனைப் படிக்கவில்லை, நான் அவனது கவிதையைக் கேட்கவில்லை. நான் அவனை உணர்ந்தேன். அதனால்தான் என்னை இந்த ஆசிரியரோடு இனங் கண்டேன் (Identification). எனது காயங் களுக்கான ஒத்தடமாக இது அமைந்தது. என்னை எனக்கே புரியாதபோது நான் தெளிகிற அன்பான அகராதியாக இது அமைந்தது. எல்லாரும் சேர்ந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளிய பின்னரும், 'ஆளுமே அன்றி, அறியாமைக் கீழ்ப்படிந்து ஆளப்படுமோ அறிவு?" என்று 'பொசிட்டிவ்' ஆக (Positive) முடிக்கிறான் - பாருங்கள்! அதுவே எம்மைத் தெளிய வைக்கிறது. அதனாலேயே அது பலமான படைப்பாகவும் ஆகிவிடுகிறது.

இது ஒரு ஜீவனுள்ள கவிதை! என்ன ஆதாரம்? இதனை நான் எத்தனை முறை படித்தேன் என எண்ண முனைவது, நான் எத்தனை முறை சுவாசித்தேன், என எண்ண முனைவதற்குச் சமானமானது. கண்களில் ரஸம் ஊறிட, மனதின் அலைகள் ஆர்ப்பரிக்கும் ஓசையோடு ஒன்றி, இதனைப் படிப்பேன். படித்து முடிக்கிறபோது மனதில் யாரோ புல்லாங்குழல் வாசிக்கும் ஒலி கேட்கும். (இது Auditary hallucination என்று சொல்லி விடாதீர்கள்!) அப்படி ஒரு பரவசம். இந்த வித்தகக் கலைஞருடைய கையிலே ஏழை ஆசிரியர் என்ற விறகுக்கட்டை வீணையாகிறது; புல்லாங்குழலுமாகிறது.

படைப்பாளியின் பார்வைக்கோணம், ஆசிரியர் பக்கம் நின்று, சமுதாயத்தைக் கேலி செய்கிறது. நீதிக்காகப் போரிடும் 'வாத்தியார்' போன்றவர்கள் பாராட்டப்பட வேண்டும் என்பதே படைப்பின் நோக்கமாகிறது. இதை நிறைவேற்றக் கவிஞர் கையாளும் முறை எமக்கு ஒர் அநுபவம் ஆகிறது.

கவிஞர் கேள்வி கேட்கிறார், கேலி செய்கிறார். கிள்ளுகிறார். கீறுகிறார், கோபிக்கிறார், குமுறுகிறார். அந்த உட்தொனிகள் எமக்குக் கேட்கின்றன. சாதாரண மனிதனுக்குக் கோபம் வந்தால் அழிவு நேரும். கவிஞனின் கோபம் அழகிய கலைப் படைப்பாகியுள்ளது. சமுதாயத்தைத் தொட்டுக் கேட்கும் ஆயுதம் ஆகியுள்ளது.

இக்கவிதையின் வடிவத்தைப் பாருங்கள். தனக்குச் சௌகரியமான ஒரு வடிவத்தில் அது ஆனந்தமாய் அமர்ந்திருக்கிறது, ஒரு பிசிறுமின்றி.

இப்போதெல்லாம் விளங்காமல் எழுதுவதுதான் கவிதை என்று பல கவிஞர்கள் எண்ணிக் கொண்டிருக்கும் போது, இந்தக் கவிதையின் தெளிவும் விளக்கமும் என்னை இது முற்றாக ஈர்த்துக்கொண்டமைக்கு மற்றொரு காரணம்.

மனிதகுலம் முழுமைக்குமான ஒரு மகிழ்ச்சித் தேடல் இதற்குள் இருக்கிறது. அந்த மகிழ்ச்சியின் சாயலை மறைக்கவும் மறுக்கவும் துணிகிற மனித விரோத சக்திகளுக்கு எதிராக ஏந்திய ஆயுதமே இது. மனதை நெகிழவைப்பது அந்த மனிதாபிமானமே.

"வாழத் தெரியாமல் வம்புகளில் போய் மாட்டும் ஏழைப் புலவன்"

"கவலைகள் ஓர் பையிலுமாய் நிற்கிறீர்"

"வீட்டுக்கு வீடு பிள்ளை வீசிப் பிடித்தீரே"

"நீதியைப் பற்றி நினைவார்க்கு நேர்வதிதே!" போன்ற தொடர்கள் புதிய ஆயுதமாய், கத்தியாய், கம்பாய், குத்தீட்டியாய் எமது நெஞ்சைக் கிழிக்கின்றன அல்லவா?

மனித வாழ்வே போராட்டந்தான். நீதிக்கும், அநீதிக்குமான போராட்டம். வைரமுத்து சொன்னதுபோல, சமூக வீணையில் சரிந்து கிடக்கும் நரம்புகளை அவிழ்த்துக் கட்டுவோம். அவசியமெனில் அறுத்தும் கட்டுவோம். அதன் பிறகு அதில் 'பிரகடன ராகம்' பிறப்பிப்போம்.

**(யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை 10.2.98இல் நிகழ்த்திய கவிதைக்களத்தில் கோகிலாமகேந்திரன் அவர்களால் நிகழ்த்தப்பட்ட கருத்துரை இது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வானொலி - சைவ நற்சிந்தனை

# இசை

இறைவனைப் பாடுதலும் பரவுதலும் எமது சமயத்தில் மிக முக்கியமானதாகக் கொள்ளப்படும் விடயம். முத்தமிழிலே இசைத்தமிழே நடு நாயமாக வைக்கப்பட்டுள்ளது. பாடல்களினால் ஆக்கப்பட்ட இயற்றமிழுக்கும் நாடகத் தமிழுக்கும் கூட இசை தேவைப்படுகிறது. இசையினால் கற்றவர்களையும் கல்லாதவரையும் விலங்குகள் தாவரங்கள் போன்ற எல்லா உயிரிகளையும் இசைவிக்கலாம். பரிக்கோல், குத்துக் கோல் முதலிய ஆயுதங்களால் அடக்க முடியாத ஒரு மதம் கொண்ட யானை வீணை இசைக்கு அடங்கிவிடுவதை.

"காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்கு"

எனக் கலித் தொகை கூறும். பசுக்களைப் பல்வேறு இடங்களிலும் மேயவிட்டுத் தன் பாட்டில் விளையாடிக் கொண்டிருக்கும் மாயக் கண்ணன் மாலைக் காலமானதும் அவற்றை ஆயர் பாடிக்கு ஓட்டிச் செல்ல வேறு ஏதும் செய்வதில்லை. வேய்ங்குழலை எடுத்து இனிமையாக ஊதுவார். பல திசைகளிலுமிருந்து பசுக்களெல்லாம். திரண்டு அவர் பால் வந்து சேரும். அன்னையரின் இனிய தாலாட்டுப் பாடல்களைக் கேட்டு, அழுகை ஓய்ந்து குழந்தைகள் உறங்கிப் போவது எல்லாருக்கும் தெரியும். தமது சூழலிலே ஏற்படுகின்ற 'இசை' என்ற தூண்டலுக்குத் தாவரங்களும், தூண்டற்பேறு காட்டுவதை விஞ்ஞான ஆராய்ச்சிகளும் இப்போது நிருபித்துள்ளன.

எமது இறைவனும் இசை வடிவினனாய் இருப்பதோடு இசையில் பிரியம் உடையவனாயும் இருக்கிறான்.

'ஏழிசையாய் இசைப்பயனாய்' என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரமாகும். இசையில் தமக்கு உள்ள விருப்பத்தினால் எப்போதும் இசையைக் கேட்டு ஆனந்திக்கும் பொருட்டு இசையில் வல்ல இரண்டு கந்தருவர்களைச் சிவபெருமான் தமது காதில் குழையாக வைத்தருளி உள்ளான் என நூல்கள் கூறும். ஈசுவரன் தமது கையிலே வீணையை வைத்து வாசித்து, இன்புறுவதாய்ப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

"எம்மிறை வீணை வாசிக்குமே" என்பது தேவாரப் பகுதி ஒன்று. ஆனாய நாயனார் மாலையைப் போல் நீண்ட பூங்கொத்துக்களைத் தாங்கிக் கொண்டு புறத்திலே தாழ்கின்ற சடையினை உடைய பரமசிவனைப் போல் நிற்கின்ற ஒரு பெரிய கொன்றை மரத்தடியில் வேய்ங்குழலினாலே ஸ்ரீ பஞ்சாட்சரத்தை முறைப்படி வாசித்த போது அந்தக் காட்டிலுள்ள சகல சீவராசிகளும் மெய் சிலிர்த்து மயங்கி அவர் பக்கம் ஓடி வந்தமையையும் இறைவன் அவர் மீது அக்கணத்தில் திருவருள் நோக்கம் செய்தமையையும் திருத் தொண்டர் புராணம் வெகு அழகாய்க் கூறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எமக்கு மிகவும் விருப்பமான அர்ச்சனை பாட்டேயாகும்" என்று இறைவன் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நேரடியாய்க் கூறி அருளினார்.

பாடுவது ஒரு சிறந்த வெளிப்பாட்டுச் சிகிச்சை என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இறைவனை நோக்கிப் பாடத் தொடங்கும் போது எமது மனதில் மறை எண்ணங்கள் தோன்றுவது தவிர்க்கப்படுகிறது. ஒரு நேரத்தில் இரண்டு விடயங்களைச் செய்ய முடியாதது எமது மனம். பாடலின் பொருள், இசை, தாளம் இந்த மூன்றையும் கவனிக்கும் போது வேறு பொருத்தமற்ற சிந்தனைக்குள் மனம் செல்ல முடியாது. அப்படிச் சிறிது நேரம் தொடர்ந்து செய்யும்போது இயல்பாக மனம் உற்சாகமடைந்து நேர் உணர்வுகளுக்குள் செல்லும். எம்மால் நன்றாகப் பாட முடிகிறது என்ற நேரான சுய கணிப்புக்கு மேலாக, இறைவன் அருள் செய்வான் என்ற நம்பிக்கை தோன்றுகிறது. சும்மா இருக்கும் வேளைகளில் மனதின் ஆழத்தில் நல்ல பாடல்களின் அடிகள் ஓடிக் கொண்டிருக்கும். இவை அனைத்தும் உள நலத்துக்கு உதவுகின்றன. ஆகவே கோயில் வழிபாட்டின் போது மட்டுமல்ல, வீட்டில் நாள் தோறும் காலை மாலையில் இறைவனைப் பாடிப் பரவிப் பயன் பெறுவோம்.

(2010)

*எழுதிய நூல்கள்....*

**விஞ்ஞானப் புனைகதை :-**

* விஞ்ஞானக் கதைகள்.... 2000

**தனிமனித ஆளுமை :-**

* தங்கத் தலைவி – (கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி பற்றியது)
* விழிமுத்து – (தாயார் பற்றியது) – 1999
* விழிசைச் சிவம் (தந்தையார் பற்றியது) – 2009
* கனக சபைக்குச் சென்ற கனக சபை (பதிப்பாசிரியர்)

**உளவியல் :-**

* சிறுவர் உளநலம் – பதிப்பாசிரியரில் ஒருவர் – 2002, மறுபதிப்பு – 2005(ஆங்கில, சிங்கள மொழியாக்கம் – 2003)
* மகிழ்வுடன் வாழ்தல்.... (பதிப்பாசிரியரில் ஒருவர் – 2003)
* சின்னச் சின்னப் பிள்ளைகள்.... பதிப்பாசிரியரில் ஒருவர் – 2005
* உள்ளக் கமலம்.... பதிப்பாசிரியர் – 2006
* முற்றத்தில் சிந்திய முத்துக்கள் – பதிப்பாசிரியர் – 2006
* சுனாமியில் சிதறிய சித்திரங்கள் – பதிப்பாசிரியர் – 2006
* எங்கே நிம்மதி? – 2000
* மனச் சோர்வு – 2006
* மனமெனும் தோணி – 2008
* உள்ளப் பெருங்கோயில் – 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்மியக் கட்டுரை

# கருத்தூன்றும் நிலை

கருத்தூன்றும் நிலையை ஒரு உளச்சிகிச்சையாகப் பாவிக்கும் நிலை இன்று உலகின் பல பாகங்களில் தோன்றியுள்ளது. இது சீர்மிய நாடிகளின் நெருக்கீட்டைப் பெருமளவு குறைப்பதாக அறியப்பட்டுள்ளது. ஆயினும் கருத்தூன்றும் நிலையைப் பலரும் பல்வேறு விதமாக விளங்கிக் கொள்ளும் நிலையும் அது கற்பிக்கப்படும் பல்வேறு முறைகளும் அதன் பிரயோகப் பாதையின் பல்வேறு வழிகளும் அதன் முழுமையான ஆற்றலை உளவியல் இன்னும் செம்மையாகப் பயன்படுத்தத் தொடங்கவில்லை என்பதையே காட்டுகிறது. கருத்தூன்றும் நிலை பற்றி ஆய்வு செய்வதற்கு இன்னும் பல விடயங்கள் இருக்கத்தான் செய்கின்றன.

பௌத்த மதத் தத்துவம் இந்தக் கருத்தூன்றல் நிலைக்கு மிக அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றது. வேறு எதுவித எண்ணங்களுமின்றி ஒரு விடயத்தை மிகுந்த உணர்வுடன் ஏற்றுக் கொள்ளும் நிலையே கருத்தூன்றும் நிலை எனலாம். ஒவ்வொரு சிற விடயத்தையுமே முதன் முதலாகத் தரிசிப்பது போன்ற அனுபவத்துடன் எதிர்கொள்ளும் நிலையே கருத்தூன்றும் நிலை என்று வேறு சிலர் கூறுவர். சமகால யதார்த்தத்தில் ஒருவருடைய பிரக்ஞையை உயிருடன் வைத்திருப்பதே கருத்தூன்றும் நிலை என்றும் வேறொரு வரைவிலக்கணம் கூறும்.

தீர்ப்பிடல் எதுவுமின்றி குறித்த கணத்துடன் இணைந்திருத்தல் என்று கூறினாலும் தவறில்லை.

கருத்தூன்றும் நிலை என்பது மிகச் சாதாரணமானதும் இயல்பானதும் என்று தோன்றினாலும் கூட மனதின் வழக்கமான பழக்கத்திற்கு அது எதிரிடையானது என்றே கூறலாம். ஒருவர் ஒரு விடயத்தில் கருத்தூன்றி இருக்கும் போது ஏனைய பல விடயங்கள் முற்றாக அறியப்படாமலே போகும். அநேகமான மனிதர்கள் குறகிய காலக் கருத்தூன்றல் நிலைக்குப் பழக்கப்பட்டவர்களாய் இருக்கக்கூடும். பயிற்சி மூலமாக இதை வளர்த்தெடுக்க முடியும். வளர்த்தெடுக்கும்போது அது ஒரு இயல்பான உளச்சிகிச்சையாக மாற்றம் பெறுகிறது.

கருத்தூன்றல் நிலையில் ஒருவர் அப்போது கையில் இருக்கும் விடயத்தில் முழுமையான விழிப்புணர்வுடன் இருக்கிறார் என்பதற்கு மேலாக சுயவிழிப்புணர்வு மற்றும் சுயபிரக்ஞை நிலைகளிலும் மேம்பட்டு இருக்கிறார் என்பது சிகிச்சை நிலையில் முக்கியம் பெறுவதாகும். ஒருவர் தனது அக உணர்வு நிலை பற்றி விழிப்புணர்வு பெறுவதற்காக, 'நான் இப்போது பல்துலக்கிக் கொண்டிருக்கிறேன்' 'நான் இப்போது கவலையாக உணர்கிறேன்' என்று வாய் மொழியாகச் சொல்லிப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற பௌத்த மதத்தத்துவம் கூறும் 'நான்' ஐ மையப்படுத்திய சுயதேடல் நவீன உளவியல் சிகிச்சைகளின் மையப் பகுதியாகக் கொள்ளப் படாவிடினும் அது சில அடிப்படை விடயங்களைக் கூறுகிறது. அறிகை நடத்தைக் கோலச் சிகிச்சையிலும் கூட ஒருவர் முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அகத்தில் ஓடும் வசனங்களை அடையாளம் காணுமாறு கேட்கப்படுகிறார். அத்துடன் கருத்தூன்றும் நிலை என்பதும் மன அமைப்புக்கு விழிப்புணர்வாகும் நிலை என்பதும் இரு வேறு விடயங்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

நெருக்கீட்டைத் தளர்த்துவதற்கான வழி முறையாக ஒருவர் மனதைத் தளரவிட்டு அதை மீளவும் புதுப்பித்து ஏற்றம் பெறச் செய்வதற்குத் மேலாக, விழிப்புணர்வில் கருத்தூன்றும் நிலைக்கு ஏன் மாற வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வது சிலவேளை கடினமாக இருக்கலாம். இதற்கான பதில்களில் ஒன்று என்னவென்றால் கருத்தூன்றல் நிலையைப் பயிற்சிப்படுத்தும் போது மனம் நிபந்தனைப்படுத்தல் நிலைகளில் இருந்து படிப்படியாக விடுதலை பெற்றுச் சுதந்திரம் பெறுகிறது என்பதாகும்.

கருத்தூன்றல் நிலை ஒருவரது உள ஆரோக்கியத்தில் எவ்வாறு மாற்றங்களை ஏற்படுத்தும் என்பது தொடர்பான ஆய்வுகள் சில மேற்கொள்ளப்பட்டுள்ளன. விடயங்களை உள்வாங்கல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அதை நிலை நிறுத்துவதிலும் எல்லா அநுவங்களையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை ஏற்படுத்துவதிலும் அது செல்வாக்குச் செலுத்துகிறது என்பது ஆரம்ப ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கருத்தூன்றல் நிலையில் சில நன்மைகள் நீண்டகால அநுபவத்தின் பின்னரே ஏற்படு மென்பதால் ஆய்வுகளிலும் ஆய்வுக்குட் படுபவரின் அநுபவம் கருத்தில் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

கருத்தூன்றல் நிலையுடன் கூடிய தியானத்தின் போது மூளையின் மின் இயக்க அலைகளில் (ECG) வேறுபாடு காணப்படுகிறது.

கருத்தூன்றும் நிலையைப் பயின்று கொள்வதற்குப் பலவழிகள் உள்ளன. இவ்வாறான பயிற்சிகளை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது வகையை முறைமைசார் பயிற்சிகள் எனலாம். இவற்றை மெதுமெதுவாக நீண்ட நேரம் பயின்று கொள்வதற்காக வாழ்வின் ஏனைய நாளாந்தச் செயற்பாடுகளில் இருந்து விலகியிருக்க நேரலாம். இரண்டாவது வகை முறையில் பயிற்சிகள் எனப்படும் இவற்றை அன்றாடம் ஏனைய சாதாரண நடைமுறைச் செயற்பாடுகளுடே பயின்று கொள்ளலாம்.

சுவாசம் நடைபெறும் முறை உடல் உணர்வுகள், குறிப்பிட்டதோர் சத்தம், மனதில் ஓடும் எண்ணங்கள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொண்டு தியானத்தில் அமருதல் முறைசார் பயிற்சிகளில் முதன்மையானதாகும். நடப்பதில் மட்டும் கவனத்தில் வைத்துக் கொ்ணடு நடப்பது, குறிப்பிட்ட யோகாசனப் பயிற்சியில் மட்டும் கவனத்தை வைத்துக்கொண்டு அப்பயிற்சியில் ஈடுபடுவது போன்றவை அசையும் தியானப் பயிற்சிகள் எனப்படும். அவையும் முறைமைசார் பயிற்சிகளில் அடங்கும். ஒருவரால் வழிப்படுத்தப்படும் உடல், உளம்சார் பயிற்சிகள், வழிப்படுத்தப்படும் அனுபவம் சார் கலந்து ரையாடல்கள் போன்ற குழுப் பரிமாற்றங்கள் ஆகியவற்றையும் முறைமைசார் பயிற்சிகளில் உள்ளடக்கிக் கொள்ளலாம்.

நாங்கள் செய்கின்ற நாளாந்தச் செயற்பாடுகளையே மனம் ஒன்றித்துச் செய்து கொள்ளுதல் ஒருவகையில் முறைமையில் பயிற்சியில் முதன்மையானதாகும். சாப்பிடும் போது முழுமையாக அந்தச் சாப்பாட்டின் தோற்றம், அழகு, மணம், சுவை ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு நாம் எப்படி அதை எடுத்தோம் எப்படி வாயில் போட்டோம், எப்படி விழுங்கினோம் என்பதை முழுமையாகக் கவனித்துச் சாப்பிடலாம். பாத்திரங்கள், உடைகள் போன்றவற்றைத் துப்பரவு செய்யும் போதும் வாகனங்களை ஓட்டுகிற போதும் அப்படியே வேறு சிந்தனைகளை உட்புகவிடாது அந்த விடயத்தில் மட்டுமே கவனம் செலுத்திச் செய்து பார்க்கலாம். தனது எண்ணங்கள், உணர்வுகள், நடத்தை ஆகியவற்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதானித்துக் கொள்வது பிரச்சினை ஒன்றை எடுத்து அதனை ஒழுங்காக விஞ்ஞான முறைப்படி தீர்த்துப் பழகுவது; கவிதை போன்ற நன்கு ரசித்துப் படிக்கக் கூடிய ஒரு இலக்கியத்தை அதிலேயே மூழ்கிப் படிப்பது, மூன்று நிமிடம் சுவாசத்தைக் கவனிப்பது போன்ற சிறுதியானப் பயிற்சிகள் போன்றவையும் முறைமையில் பயிற்சிகளில் அடங்கும்.

இப்போது சுவாசத்தில் கருத்தூன்றும் நிலை பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போம். அமைதியான ஒரு அறையில், நிலத்தில் அல்லது கதிரையில் வசதியான இருக்கை முறை ஒன்றில் சமநிலையில் அமர்ந்துகொள்ளுங்கள். முள்ளந்தண்டு நேராக இருக்கட்டும். கண்களை மெதுவாக மூடிக் கொள்ளுங்கள். உங்கள் இருத்தலைத் தாங்கியிருக்கும் இடத்தோடு உங்கள் உடலின் தொடுகையைக் கவனியுங்க்ள. அந்த உணர்வு எவ்வாறு இருக்கிறது என்பது பற்றி ஒரு தேடலைத் தொடங்குங்கள். சுவாசம் நடைபெறும் போது உங்கள் உடல் எப்படி அசைகிறது என்பதைக் கவனியுங்கள். குறிப்பாக நெஞ்சறையையும் வயிற்றறையையும் அவதானியுங்கள். காற்று உள்ளே செல்லும்போதும் வெளியே வரும்போதும் வயிற்றறையிலும் நெஞ்சறைச் சுவர்களிலும் அது ஏற்படுத்துகின்ற உணர்வைக் கூர்ந்து கவனியுங்கள். ஒவ்வொரு சுவாசத்தின் போதும் இந்த விழிப்புணர்வுக்கு வாருங்கள். முதலாவது சுவாசத்திற்கும் அடுத்த சுவாசத்திற்கும் இடையில் ஏதாவது வேறுபாடு தெரிகிறதா என்று அவதானியுங்கள். ஒரு சுவாசத்திற்கும் மறு சுவாசத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி நேரத்தில் என்ன நடைபெறுகிறது என்று அவதானியுங்கள். சுவாசத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்த வேண்டாம். அதைக் கட்டுப்படுத்த முயல வேண்டாம். அந்த உணர்வை அப்படியே பார்த்துக் கொண்டிருங்கள். இடையில் மனம் வேறு எங்காவது அலை பாயத் தொடங்கினால் மெதுவாக மீண்டும் இழுத்து வந்து சுவாசத்தில் நிறுத்துங்கள். இதையே திரும்பத் திரும்பச் செய்யுங்கள். ஒவ்வொரு முறையும் செய்யும் போது கருத்தூன்றல் நிலை அதிகரிப்பதை அவதானியுங்கள். பொறுமையாக இருங்கள். சுமார் பதினைந்து நிமிடங்களின் பின் கவனத்தை முழு உடலுக்குமாக விரிவடையச் செய்யுங்கள். அதன்பின் கண்களைத் திறந்து அடுத்த விடயத்திற்குத் தயாராகுங்கள்.

உளவியல் சிகிச்சை முறைகளில் முக்கிய இடத்தைக் 'கருத்தூன்றல் நிலை' எடுக்கும் காலம் நெருங்கி வருகிறது.

(தினக்குரல் 29.11.2009)

***சமூகச் செயற்பாடுகள்***

1) **தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களச் செயலர் – 1986 இல் இருந்து இன்றுவரை**

2) **சோலைக்குயில் அவைக் காற்றுக் களத் தலைவர் – 1988 இல் இருந்து 2006 வரை**

3) **சோலைக் குயில் ஆற்றுப் படுத்தல் மையம் – கொழும்பு அமைப்பாளர் 2006 முதல் இன்றுவரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் ஆசிரியர் பற்றிய மனப்பதிவு

# கதிரேசர் என்றொரு காவியம்

வானத்திரையில் சூரியனின் ஒளித்தடம் வீச்சுடன் இருக்கிறது. 1966ம் ஆண்டில் ஒரு கோடைகாலப் பகல் நேரம். 11.30 என்பது மகாஜனாக் கல்லூரியின் Short interval நேரம்!

சிவனேஸ், மங்கை, நான், கமலா.. இன்னும் ஓரிருவர்... (யார் என்று கூற ஞாபகத்தின் recall பகுதி சம்மதிக்கவில்லை) கல்லூரியின் கிழக்குப் புறமாக மூன்றாவது gateக்கு வடக்கே நீளமாக மாட்டப்பட்டிருந்த 10 - 12 நீர்க் குழாய்கள். தகரத்தால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்த கிணற்றுக்கு அருகில் தண்ணீர்த் தொட்டி! தண்ணீர் குடிக்க வந்தோம். (காட்டில் நீர் தேடி வந்த இளவரசன் கிணற்றில் விழுந்து தவிக்கும் என்னைக் காப்பாற்றுவான் என்று அப்போது யாருக்குத் தெரியும்?)

“இந்தக் கிணத்தை ஒருக்கா எட்டிப்பாப்பம். இதுக்கை ஏதோ அல்கா இருக்கெண்டு வகுப்பிலை கதைச்சவை” - இது கமலா - பெரிய இலட்சியங்களைத் துரத்திக் கொண்டிருப்பதில் எப்போதும் திருப்தி காணும் சிறிய உருவம்.

“ஒண்டும் வேண்டாம்... வந்தமா, தண்ணி குடிச்சமா. ஒழுங்கா வகுப்புக்குப் போனமா எண்டு இருப்பம், டான்ஸ் றூமுக்கை கதிரேசர் சேரும் இருக்கிறார்.” - சிரிக்கும் சிவனேஸ். தனது அழுத்தி மினுக்கப்பட்ட பச்சை boarder வெள்ளை sareeயில் தண்ணீரோ, மண்ணோ, சேறோ படாதிருப்பதில் மிகுந்த அக்கறை கொண்ட குரல்.

Zoology lab இல் கனகசபாபதி சேர் இருப்பார். அவதானிப்பார் என்பது தெரியும். எங்கள் நெஞ்சில் எப்போதுமே சங்கமமான அவர் பற்றிப் பயம் இல்லை. கேட்டால் அல்கா பார்த்தோம் என்று கூறலாம். “உங்களைப் போல முழுசிக் கொண்டு ஒரு டொல்பின் இருந்ததே பாக்கேல்லையா” என்று பகிடி விடுவார். சிரித்து விட்டுப் போய் விடலாம்.

“கதிரேசர் சேர், interval நேரம் முழுதும் உங்கை தானே இருக்கிறார். தண்ணி குடிக்க வாற girls ஐப் பாக்கவாம்” - மங்கை தனது நீண்ட தலை மயிரைத் தூக்கிப் பின்னால் போட்டுக் கொண்டார். “girls ஐப் பார்க்கவோ? ஏன்?” கலைந்தும், காற்றில் அலைந்தும் நிற்கும் கூந்தலைக் கையால் தடவியபடி நான். “உமக்குத் தெரியாதே கோகிலா, girls எப்பிடி நடந்து வரினம், எப்பிடித் தண்ணி குடிக்கினம், எப்பிடிச் சிரிக்கினம், கதைக்கினம்.... இதுக் கெல்லாம் marks..... அவற்றை அடுத்த நாடக நடிகை தெரிவுக்கு....”

“My God குரல் தேர்வு, பேச்சுப் போட்டியில்! உடல் தேர்வு இப்படியா?”.

காதுகளுக்குச் சாணை பிடித்து அவரும் டான்ஸ் மாஸ்டரும் கதைப்பதை உற்றுக் கேட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தேன். ஒன்றும் புரியவில்லை. நதி ஒன்று நடந்து வருவது போன்ற நடையில் டான்ஸ் மாஸ்டர் எட்டிப் பார்க்கிறார். அதற்குப் பிறகு Pipe அடிக்கு வரும்போது பிரக்ஞை பூர்வமாக என்னில் நான் கவனம் செலுத்தத் தொடங்கியது நிஜம். கவனம் உதவியது. 1967 இல் அம்பையின் வஞ்சினம் நாடகத்தில் தோழி பாத்திரமும், 1968இல் கோமகளும் குருமகளும் நாடகத்தில் 'குருமகள்' என்ற பிரதான பாத்திரமும் அடியேனுக்கு!

* * * * *

கதிரேசர் இருந்ததால் எங்கள் உலகம் ரியூசன், றேடியோ, சினிமா, வம்பளப்பு என்று விரியாமல் கல்லூரி, வீடு என்று சுருங்கியிருந்தது. ஒத்திகை நடைபெறும் ஒவ்வொரு நாளும் ஒரு கவிதை. எந்தத்தனி நபருக்கும் பிரத்தியோகத் தளங்கள் கிடையாது. மேடையில் நாடக வசனம் தவிர வேறு எதுவும் கதைத்தறியோம் பராபரமே! கட்டளைகள் தண்ணீர்த் தெறிப்பாக இருக்கும். அப்படி ஏதும் சிறு சலசலப்பு என்றாலும் ஒரு முறைப்பால் அடக்கி விடுவார். பாத்திரங்களை உயிர்ப்பிப்பதற்கான நித்தியத் துடிப்புடன் ஒத்திகைகள் மாதக் கணக்கில் நீளும். மேடை அசைவில் கந்தசாமியின் 'திரும்பலை'ப் பார்த்து 'எங்களுக்கு வருகுதில்லையே' என்று மனம் ஏங்கும்.

* * * * *

'அம்பையின் வஞ்சினம்' தேசிய மட்டத்தில் முதலிடம்! மனத்தின் ஒரு கூறு தெரியாத ராகம் ஒன்றை இசைத்து மகிழ்ந்து கொண்டிருக்கிறது. அதிபர் அறிக்கை வாசிக்கப்படுகிறது. இதோ! மகாஜனாவின் மாபெரும் சிற்பி ஜெயரத்தினம் அவர்களின் குரல் காதில் விழுகிறது.

"At the interschool Tamil Drama Competitions, organized by the Tamil Drama panel of the art council in October last, we secured the 1st place, for the 3rd year in succession and won outright the much coveted challenge shield. I think this constitutes a record in school drama competitions and is not likey to be equalled or excelled in the future. Our play entitled the "wrath of Ambai" was written and produced by Mr.C.Catheresarpillai of our staff who was responsible for our earlier victories as well. He as well as the boys and girls who took part in it deserve our heartiest commendations"

அதிபர் ஜெயரத்தினம் பாராட்டத்தக்கவர்களை, பாராட்டத்தக்க இடத்தில், பாராட்டத்தக்க முறையில் பாராட்டுவார். கதிரேசர் பிள்ளையின் வெற்றிக்குப் பின்னால் அந்தப் பாராட்டுச் செய்த வேலை பற்றிப் பின்னாளில் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தில் என்னோடு பல வருடங்கள் இணைச் செயலாளராகப் பணிபுரிந்த கலைப் பேரரசு. ஏ.ரி.பி அவர்கள் பல முறை கூறியதுண்டு. "ஜெயரட்ணம் மாதிரி ஒரு அதிபரின்ரை ஊக்கமும் பின்புலமும் கிடைச்சிருந்தால் சில வேளை எனது நாடகங்களும் தேசிய மட்டத்துக்கு வந்திருக்கும்". வந்திருக்கலாம்!

* * * * *

கோமகளும் குருமகளும் நாடகத்தில் நான் தேவயாணியாக நடிக்கிறேன். அந் நாடகத்தில் இறைவனைப் பாடிப் பரவும் ஒருசிறு காட்சிக்காக, சண்முகப் பிரியா ராகத்தில், "சரவண பவ எனும்" என்ற பாடல் எனக்குச் சொல்லித் தரப்படுகிறது. நான் நன்றாகப் பாடுகிறேன் என்பது நெறியாளர் கதிரேசர் பிள்ளையின் கருத்து. என்றாலும் இன்னும் செம்மைப் படுத்துவதற்காகச் செல்வி. நாகம்மா கதிர்காமரை அழைத்து வருகிறார். அவரும் சொல்லிக் கொடுத்தார். பாடினேன். வெள்ளுடுப்பு ஒத்திகைக்கு முதல்நாள்! "போதஸ்வரூபன் போல் பாதம் தனைப்பணிந்து - சா...." என்று பாடும் போது ஒரு 'கமகம்' சரிவரவில்லை என்று நாகம்மா ரீச்சர் அந்தப் பாடலை நீக்கி விடுமாறு அபிப்பிராயப் பட்டார். Perfection! சங்கீதம் தொடர்பாகச் சங்கீத ஆசிரியரின் முடிவை ஏற்றுக் கொண்டார் கதிரேசர். "பாடல் இல்லா விட்டாலும் நாங்கள் வெற்றி பெறுவோம்" என்று என்னிடம் கூறினார். அதுதான் அவர்!

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்பையின் வஞ்சினம்' நாடகத்தில் அம்பை பாத்திரம் ஏற்ற நாகேஸ் அடுத்த வருடம் வேம்படி மகளிர் கல்லூரிக்குப் போய்விட்டார். காரிய மில்லை. வேம்படி போடும் நாடகத்தில் நாகேஸ்தானாம் பிரதான பாத்திரம்!

"வேம்படி நாடகத்திலை ஒரு சொர்க்க லோகக் காட்சி வருதாம். மேடை அமைப்பு நினைச்சுப்பாக்க ஏலாதாம். அவ்வளவு செலவழிக்கினமாம்" கதைகள் காதை எட்டுகின்றன. கவலை, கோபம், பயம், எரிச்சல் என்று பல நிறங்களைக் காட்டும் எமது மனங்கள்.

கதிரேசர் எமக்குச் சொல்கிறார், "பிள்ளையள், நாகேஸ் நல்லா நடிப்பாள். அவள் எங்கடை பிள்ளை. நல்லா நடிக்க வேணும். மேடை அமைப்புக்கு எவ்வளவு காசு செலவு எண்டு பாத்துப் பயப்பிடத் தேவையில்லை. நடுவர்கள் அவ்வளவு முட்டாள்களா இருக்க மாட்டினம். நீங்கள் ஒவ்வொருத்தரும் கவனம் சிதைய விடாமல் நடியுங்கோ... வாறதை ஏற்பம்...."

"ஐயையோ கோகிலா....!" என்று கையை உதறிக் கொண்டு அப்பால் செல்லும் தெய்வானைப் பிள்ளை அக்காவிடம் பதற்றம் தெரிகிறது.

எங்கள் மேடை அமைப்புக்குப் பொறுப்பான கலாசேகரி ஆ.தம்பித்துரை (Art Master) லேசுப்பட்டவரில்லை. கனகேஸ்வரி ரீச்சருக்குச் சொந்தமான Coir work room இல் வைக்கோல், கொண்டு செய்யப்பட்ட குடிசை, அரண்மனைக் காட்சிக்குத் தேவையான அழகுத்தூண்கள், கிணற்றுக் கட்டைச் சுட்டும் காட்போர்ட், பின்திரைகள் எல்லாம் Paint அடித்துக் காய விட்டிருப்பதைக் காண நம்பிக்கை degree உயர்கிறது.

மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் கல்லூரியில் "கோமகளும் குருமகளும்" இறுதிப் போட்டிக்காக அரங்கேறுகிறது. எமது கல்லூரியில் நடைபெற்ற வெள்ளுடுப்பு ஒத்திகையின் போது அதிபருடன் அமர்ந்து பார்த்த கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஆலோசனைக் குறிப்புகளை ஒரு தடவை ஞாபகம் கொள்கிறோம்.

எனது தந்தை சுக்கிராச்சாரியாராக நடிக்கும் கந்தசாமியை இருபதாயிரம் வருஷ முதுமை தட்டியது போல Make up செய்தது யார்? தெய்வானைப் பிள்ளையின் தலை அந்தக் காலத்தில் கல்கியில் வந்த பொன்னியின் செல்வன் நாவலில் குந்தவைப் பிராட்டியாரின் தலை அலங்காரம் மாதிரியே - அசல்! அதில் திருமதி.ச.கனகேஸ்வரனின் பங்கு அதிகம்!

நாடகம் தொடங்குகிறது. எல்லா மின் விசிறிகளும் சுழன்றும் புழுக்கம் அசைய மறுத்து அழுத்தமாய் மண்டிக் கிடக்கிறது. பதற்றம்! பதற்றம்! வேம்படி நாடகம் குறைவில்லை. 'விடாதே பிடி' என்றுதான் நிற்கிறது.

போட்டி முடிவு அறிவிக்கப்படுகிறதா? இதயத் துடிப்பு வீதம் 120க்குப் போய் இருக்குமா? தேசிய மட்ட முதலிடம் பெற்றுவரும் எல்லா நாடகங்களுக்கும் நாடக ஆசிரியர் ஒருவரே! நெறியாளர் ஒருவரே! பிரதான ஆண் பாத்திரம் கந்தசாமியே! மேடை அமைப்பு ஒருவரே! பிரதான பெண் பாத்திரம் தான் வருடம் வருடம் மாறுகிறது. இம்முறை நாங்கள் முதலாவதாக வரவில்லை என்றால் கோகிலாவின் நடிப்பில் யாரும் குறை சொன்னால் அது நியாயந்தானே! கடவுளே! நீதான் துணை!

அப்பாடா! நாங்கள் தான் முதலாம்! மிஸ் சங்கரப் பிள்ளையின் சிரிப்பைப் பார்த்தால் ஏழு பிறப்புக்கும் அந்த ஆனந்தம் தொற்றிக் கொள்ளும். முடிவு அறிவிக்கப்படும் போது வரும் மகிழ்ச்சிதான் தனி! Tension release! பின்னர் கல்லூரியில் பரிசளிப்பு நாளில் அது மேடையேற்றப்பட்ட போதோ, அல்லது நாடகக் குழுவுக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டாக எங்களை எல்லாம் வளலாய் beach க்கு அழைத்துச் சென்ற போதோ.... அது ஒரு திருப்தியே தவிரப் பேரானந்தம் என்ற சொல்ல முடியாது.

கதிரேசரின் கடின உழைப்புக்கான பரிசை நாங்கள் வென்று கொடுத்துவிட்டோம். மீன் பாடும் தேன் நாட்டின் குளிர்ச்சி எங்கள் எல்லோருக் குள்ளும் இறங்கியது அந்தக் கணத்தில்தான்.

The height by great men reached and kept
Were not attained by sudden flight
But they while their companions slept
Were toiloring upward in the night
என்று Long fellow கூறுவாரா?

இரவிரவாய் விழித்திருந்து பாரதம் படித்து அதன் சிறு சிறு கிளைக் கதைகளைக் கவின் மிகு நாடகமாய் அழகு தமிழில் எழுதி அந்தப் பாத்திரங்களாக எங்களை மாறவைக்க அல்லது மாறியதாகப் பார்வையாளர்களை நம்ப வைக்க, மூன்று மாத மாலை வேளைகளை முழுவதுமாய் அர்ப்பணித்த சேருக்கு இது போதும்!

* * * * *

மட்டக்களப்பைச் சேர்ந்த பண்டிதர் ஆ.சபாபதிப்பிள்ளை எங்கள் நாடகத்திற்கு ஒரு விமர்சனம் எழுதினார், "இந்நாள் எழுத்தாளர் சிலரும் சினிமாக்காரரும் இப்பழம் முறைகளிலும் வேறுபட்டுக் காமச்சுவை, விரகதாபம் என்பவற்றைப் பச்சை பச்சையாக எழுதியும் பேசியும் நடித்தும் தமிழர் பண்பாட்டை அழித்து விடுகின்றனர். மகாஜனக் கல்லூரி அதிபர் நாடகாசிரியர் ஆகியவர்களுடைய பண்பாடும் திறமையும் கலைக் கண்கொண்டு நோக்குவோருக்கு அவர்கள் பால் உயரிய மதிப்பைக் கொடுத்து விட்டது.

உயர்தர வகுப்பிலே பயிலுகிற வயது நிறைந்த மாணவர்களும் மாணவிகளும் கலந்து நடித்த போதிலும் அவர்கள் தங்களுடைய உயரிய பண்பாட்டை மேடையரங்கிலும் வெளியிலும் பாதுகாத்து ஒழுகினர். இவ்வொழுக்கம் பெற்றோரிடமிருந்து மாத்திரமல்லாது அவர்கள் படிக்கும் பாடசாலை ஆசிரியர்களுடைய முன் மாதிரியாலும் நடத்தையாலும் உபதேசத்தினாலும் வந்தது என்பது சொல்லாமலே விளங்கும்." இவ்வாறு அவர் குறிப்பிட்டதை இன்று வாசித்துப் பார்க்கிற போது மனம் திடீரென்று குளிர்ந்து இலேசாகி விடும் உணர்வு தோன்றுகிறது.

* * * * *

எமது நிறுவுநர் பாவலர் துரையப்பா பிள்ளை அவர்கள் எழுதிய சகல குண சம்பன்னனையே மகாஜனாவின் முதல் நாடகம் எனலாம். இது 1905 இல் மேடை ஏறியது. நவீன நாடகமரபின் மூலவர் என்று ஏன் பாவலரைக் கொள்ளக் கூடாது? 1948இல் வித்துவான். நா.சிவபாத சுந்தரனார் 'எது உறுதி?' என்ற நாடகத்தை எழுதி நெறிப்படுத்தியுள்ளார். திரு.சி.நாகலிங்கம் அவர்கள் எழுதிய 'அணையாத சுடர்' 1951இலும், திரு.த.சண்முகசுந்தரம் எழுதிய இறுதி மூச்சு 1960இலும், வாழ்வு பெற்றவல்லி 1962இலும் மேடையேறின.

இவற்றைத் தவிர இயற்பண்பு நாடகங்களாக திரு.வி.செல்லத்துரை நெறிப்படுத்திய 'துரோகி யார்?' (1950) சபாஷ் முதலியார் (1951), தியாகி யார்? (1959) திரு.த.சண்முகசுந்தரத்தின் "குலமகன்" (1951) திரு.சி.நாகலிங்கம் நெறிப்படுத்திய வாழ்க்கைப்படகு (1950), உத்தமன் யார்? (1963) ஆகியவற்றையும் மகாஜனா கண்டது. ஆயினும் இவர்கள் ஊடாக வளர்ந்து வந்த நாடக மரபில் ஏணியின் உச்சியில் ஏறி அமர்ந்து கொண்டவர் கதிரேசர் பிள்ளை அவர்களே! ஈழத்தின் தமிழ் நாடக வளர்ச்சியை ஆய்வு செய்கிறவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு வெளியேயும் தம் பார்வையை விரித்தால், அந்த வரலாற்றில் கதிரேசர் பிள்ளை கட்டாயம் இடம் பெறுவார்.

* * * * *

1982 இல் மீண்டும் அம்பனைப் பல்கலைக் கழகத்தினுள் ஆசிரியராக நுழைகிறேன். அவ்வாண்டிலேயே எனது முதலாவது சிறுகதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதி 'மனித சொரூபங்கள்' கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்படுகிறது. அந் நூலுக்கான முதல் வாழ்த்து - எனது முதல் நூலின் முதல் வாழ்த்து - கவிஞர் அவர்களிடமிருந்து வரவேண்டுமென விரும்புகிறேன். அளவெட்டி வடக்குக் கூத்தன் சீமாச் சந்தைக் கருகில் றோட்டோரமாக அவர் வீடு. ஒரு கருக்கல் நேரம். கணவருடன் நான் சைக்கிளில் போய் இறங்கும் போது, விறாந்தையில் ஓய்வாக அமர்ந்திருக்கிறார். புறக்கண் பார்வை முழுமையாகப் போய் விட்டது. "சேர்" என்று கூப்பிடுகிறேன். துணைவியார் வந்து "வாருங்கள் அமருங்கள்" என்று கூறிவிட்டு "ஆர் வந்திருக்கினம், தெரிதே" என்று கேட்கிறார். "நதி தீரத்திற்குப் போயிருந்தேன் அப்பா. விரைவாக வந்து விடலாமென்றால் முடிந்தால் தானே என்று சொல்லும் குரலை எனக்குத் தெரியாதா?" என்று கேட்டுப் பலமாகச் சிரிக்கிறார். (கோமகளும் குருமகளும் நாடகத்தில் காட்சி 3இல் சுக்கிராச் சாரியாருக்குத் தேவயாணி கூறும் வசனம்) அந்தச் சிரிப்பு மிக அழகானது. மறை முகமாகத் தன்னை அப்பாவாகவும் என்னை மகளாகவும் உருவகிக்கும் அந்தக் குறியீடு, கைகளைத் தூக்கிக் கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போல இருந்தது. அகத்தடை அதைச் செய்யவிடவில்லை.

அறிவின் பட்டொளி பிரகாசமாய் வீசும் அந்த முகத்தை நோக்கி நான் வந்த விடயத்தைக் கூறுகிறேன். "வாழ்த்துப் பாட்டை நான் சொல்லச் சொல்லத் தேனு எழுதுவா" என்று உடனேயே கூறியவர் ஓரிரு நாளில் பாடலைத் தந்துதவினார்.

"வண்ண வண்ணச் செந்தமிழில் வகை வகையாய்க் கட்டுரைகள்
எண்ண எண்ணத் தித்திக்கும் இனிய சுவைச் சொற்பெருக்கு
உண்மை நிலைத் தெளிவு தரும் உயர்வான உரைப்பாங்கு
திண்மைநிலை காட்டுகிற திடமான நெஞ்சுறுதி
இன்ன பல பண்புகளால் எனை வியப்பில் ஆழத்தி நின்று
சின்ன வயது முதல் சீராய் வளர்ந்த ஒரு
கோகிலா நாமத்திற் குலவு திரு மடந்தை...."

என்று தொடங்குகிறது கவிதை. வெளியீட்டு விழாவிற்குத் தனது இயலாமைக் கிடையிலும் நேரில் வந்திருந்து வாழ்த்தியது தான் இருக்கட்டும். நான் அணு அணுவாய்ப் பார்த்து வியந்த ஒரு ஆளுமை மிக்க ஆசிரியர் "எனை வியப்பில் ஆழத்தி நின்று" என்று என்னையா சொல்கிறார்? நம்ப முடியவில்லை. இதைவிடப் பெரிய பேறு என்ன வேண்டும் பூமியில்? அவர் விட்ட இடத்தில் இருந்து மகாஜனாவின் நாடக ஆற்றலை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் மெல்ல மனதில் துளிர் விடுகிறது.

* * * * *

1968 முதல் 1982 வரையான காலப்பகுதிக்கு ஒரு flash back போடுவோம். அந்த இடைக் காலத்திலும் நான் ஏதோ நாடகத்தோடு தொடர்பு பட்டிருந்தேன் தான். அது, சும்மா பொழுது போவதற்காகச் செய்தவேலை என்றுதான் இப்போது தோன்றுகிறது. 1973 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில், விடுதிகளுக்கிடையே நடைபெற்ற நாடகப் போட்டியில் ஒரு இயற்பண்பு நாடகம் செய்து பேராசிரியர். சு.வித்தியானந்தனின் கையெழுத்தோடு, "சிறந்த நடிகை"க்குரிய அவ்வருட விருதை விஜயவர்த்தனா விடுதி சார்பில் பெற்றுக் கொண்டதும், எனது ஆசிரிய முதல் நியமனம் கிடைத்த மிகவும் பின்தங்கிய பிரதேசப் பாடசாலையான பொலிகண்டி இ.த.க. பாடசாலையில் 1975 இல் நவராத்திரி விழாவிற்காகப் "பட்டர் பெருமான்" என்று ஒரு நாடகம் எழுதி நெறியாள்கை செய்ததும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நவராத்திரி விழாவிற்காக ஆங்கில விரிவுரையாளர் திரு.கே.சோமசுந்தரம் எழுதி நெறியாள்கை செய்த "காலனை வென்ற காலன்" என்ற நாடகத்தில் 'நாரதர்' வேடம் தாங்கியதும், கீரிமலை நகுலேஸ்வர ம.வி வெள்ளி விழாவின் போது அதே "காலனை வென்ற காலன்" நாடகத்தை நான் சற்று வித்தியாசமாக நெறியாள்கை செய்து மேடை யேற்றியதும், கற்றுக் குட்டிவேலைகள் தான்!

* * * * *

ஆயினும் 1982 ஜனவரியில் மகாஜனாவில் நுழைந்தவுடன் மீண்டும் எனது மனம் உற்சாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறக்கை கட்டிக் கொண்டு பறக்க ஆரம்பிக்கிறது. இல்ல நாடகப் போட்டிகளை கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு என்று இரு பிரிவாகப் பிரிப்போம் என்ற எனது ஆலோசனை ஏற்றுக் கொள்ளப்படுகிற போது, "நானின்" மிகுந்த பிரகடனம் பிரசன்னமாகிறது. வருடந்தோறும் பத்து இல்ல நாடகங்கள் மகாஜனா வளவினுள்! அதை விடத் தனி நடிப்புப் போட்டிகள்! அவ்வருடமே கோமகளும் குருமகளும் நாடகத்தின் ஒரு காட்சி எனது நெறியாள்கையில் இல்ல நாடகப் போட்டியில் முதலிடம் பெறுகிறது. கதிரேசரின் கவின் மிகு வசனங்கள் மகாஜனா மண்டபங்களில் மீண்டும் எதிரொலிக்கத் தொடங்குகின்றன. என் மனதிற்குள் மகத்தான யன்னல்கள் பல திறக் கப்படுகின்றன.

* * * * *

எந்த ஆண்டு என்பது சரியாக நினைவில்லை. எங்கள் கல்லூரி தமிழ்த்தினப் போட்டிகளில் நாடகப் போட்டியில் பங்கு பெறாத ஒரு நிலையில் கோட்ட மட்டப் போட்டிகள் துரையப்பா மண்டபத்தில் நடைபெறுகின்றன. P.A.C ஆனந்தராஜா அவர்களின நெறியாள்கையில் வந்த இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதலிடம் பெறுகிறது. இப்போது நாடகங்கள் மோடிப்படுத்தப்பட்ட ஒரு முறையில இருக்கும் போதே வெற்றி பெறுவதை நான் பிரக்ஞை பூர்வமாக உணர்கிறேன். மகாஜனா மீண்டும் நாடகத் துறையில் கொடி கட்டிப்பறக்க வேண்டுமானால், இந்த அளிக்கை முறைகள் தொடர்பாக முறையாகக் கற்க வேண்டும் என்ற பரவசம் மிக்க பதற்றம் மனதில் தோன்றுகிறது.

* * * * *

பகலும் இரவும் கால் மாறி நடக்கின்றன. எனது பரிசோதனைகள் (விஞ்ஞான வகுப்பில் செய்வது இருக்கட்டும்) ஆரம்பமாயின. ஏலவே வெளிவந்த எனது சிறுகதைகளைக் கருவாகக் கொண்டு, 'தரிசனங்கள்', 'பட்டங்கள் மீண்டும் பறக்கும்' ஆகிய நாடகங்களை எழுதி ஒன்றை மேற்பிரிவுக்கான இல்ல நாடகப் போட்டிக்கும் (1982) மற்றதை, ஜெயரத்தினம் நினைவு தினத்திற்கும்(1985) மேடையேற்றுகிறேன். 1986 இல் நிறுவியவர் நினைவு நாளுக்காக 'முரண்பாடுகள்' என்ற இசை நடன நாடகத்தை இசை நடன ஆசிரியர்களின் உதவியோடு நெறியாள்கை செய்கிறேன். இவற்றைப் பார்த்தவர்கள் பாராட்டினர். ஆயினும் என் மனவெளியில் இன்னும் வீரியம் மிக்க காற்று வீசத் தொடங்கவில்லை.

* * * * *

1986 இல் பேராசிரியர் கலாநிதி. நா.சுப்பிரமணியன் தலைமையில் 'தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம்' என்ற அமைப்பு ஆரம்பிக்கப்படுகிறது. அதன் இணைச் செயலரில் ஒருவராக நான்! அதன் நாடகப் பிரிவு 'நாடகம்' சார் கருத்தரங்குகளை நடத்துவதும், வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார் செய்வதும் ஆரம்பமாகிறது. 1987 முதல் தொடர்ந்த எம்மைத் துரத்தும் யுத்தம் எங்களைப் பல வழிகளிலும் நெருக்குகிறது. எனினும் எடுத்த முயற்சிகள் தொடர்கின்றன.

1987 - 1988 இல் யாழ் பல்கலைக் கழகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய ஒரு வருட நாடக டிப்ளோமா பயிற்சி நெறியில் இணைந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன் பேராசிரியர் கா.சிவத்தம்பி, குழந்தை ம.சண்முகலிங்கம், பேராசிரியர் சி.மௌனகுரு, வி.வி.வைரமுத்து போன்றோரிடம் முறையாக நாடகம் பயின்று கொள்கிறேன். அந்தப் பயிற்சி, நாடகம் பற்றிய மிக விரிவாக ஒரு பார்வையை எனக்குள் ஏற்படுத்துகிறது. ஆயினும் அப்பயிற்சியில் ஈழத்து நாடக வரலாறு பற்றிக் கற்பித்தவர்கள் யாருமே கதிரேசர் பிள்ளையின் பங்களிப்புப் பற்றி உயர்வாகக் கூறவில்லை என்பது மனதில் ஒரு கீறாகப் பதிகிறது. ஒரு கால கட்ட நாடகப் போக்கின் தேசிய மட்ட உச்சமாக இருந்த அவர் எப்படி வரலாற்றிலிருந்து விலகிப் போக முடியும்? அந்த விடயத்தை மனக் கூடையின் மூலையில் சென்று பதுங்கிக் கொள்ள விட்டு விட்டேன்.

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்கள் அலை அலையாய் வட இலங்கைச் சங்கீத சபையின் நாடகப் பரீட்சைக்குத் தோற்றும் காலம்! உணர்ச்சிகளின் அலை உயர்கிறது. அவர்களின் ஆசிரியனரான நானும் அவர்களோடு சேர்ந்து பரீட்சைக்குத் தோற்றுகிறேன். என்னிடம் நாடகம் பயிலும் மாணவி நளாயினி சோமசுந்தரம் தரம் 4 இல் தோற்றும் போது நான் தரம் 3 க்குத் தோற்றுகிறேன். இதில் வெட்கப்பட என்ன இருக்கிறது? கற்றல் எந்த வயதிலும் நிகழலாம்! அந்தப் பரீட்சைகளின் போது மகாகவியின் கவிதைகள் பலவற்றை (தேரும் திங்களும் முதல் மீண்டும் தொடங்கும் மிடுக்கு வரை) நாங்கள் தனி நடிப்பாகச் செய்து காட்டுவதும், பரீட்சகராக இருக்கும் குழந்தை. ம.சண்முகலிங்கம் அவர்கள் கொடுப்பில் ஒரு சிரிப்புடன், 'மகாகவி உங்கடை ஆளெல்லே... அது தான் தூக்கிப் பிடிக்கிறியள்' என்று கூறும் போது ஒரு பாராட்டும் இழையோடுவதும் மறக்க முடியாத கணங்கள். பல மாணவர்கள் முதல் பிரிவில் சித்தி அடையும் பெறு பேறு வரும் போது கால் பூமியில் பாவாது நடந்து திரியலாம்.

* * * * *

மலைப் பாதைத் திருப்பம் போல் எண்ணங்கள் மின்னலாய் வெட்டிமாறுகின்றன. 1989 இல் ஜெயரத்தினம் நினைவு நாளுக்கு நான் எழுதி நெறியாள்கை செய்த 'தன்வினை தன்னைச்சுடும்' என்ற சிறுவர் நாடகம் முற்றிலும் நவீன நாடக எண்ணக் கருக்களை உள்வாங்கித் தயாரிக் கப்பட்டது. எனக்குகள் ஒரு புதிய ஊற்றுக்கண் திறப்பதை உணர்கிறன். அந்த ஊற்றின் நாயகனாகவும் கதிரேசரே இருக்கிறார்.

1991ம் ஆண்டு வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர்தரத்தில் நான் சித்தியடைகிற போது அதற்காகத் தயாரித்த 'பௌர்ணமி நாள்' என்ற நாடகத்தில் கல்லூரிப் பிள்ளைகள் என்னுடன் நடிக்கிறார்கள்.

அதே ஆண்டில் முதல் தடவையாக ஆசிரியர் தினம் பெரும் எடுப்பில் பாடசாலைகள் தோறும் கொண்டாடப்படுகிறது. அதற்காக நான் எழுதித் தயாரித்த 'மீண்டும் நிலவு பொழியும்' என்ற நாடகத்தில் கல்லூரி ஆசிரியர்கள் நடிக்கிறார்கள். செல்வி.த.சம்பந்தர், திருமதி.பா.கணேசதுரை ஆகியோர் பாடுவது இன்னும் இனிக்கிறதே! திரு.காராளசிங்கம், திரு.சு.சரவணபவன், திருமதி.ச.இரத்தினம், திருமதி.அ.ஞானேஸ்வரன், திருமதி.இ.கெங்காதரன், திரு.ஜெயமனோகரன், திரு.கா.சுப்பிரமணியம், திரு.அ.முத்துலிங்கம் ஆகியோரில் யாருடைய நடிப்பைக் குறைத்துக் கூற முடியும்? ஆசிரியர் குழு துரையப்பா மண்டபத்தின் பின்புறமிருந்து மாணவர் ஊடாக ஆடிக் கொண்டு வந்து மேடையில் ஏறியபோது கிடைத்த கைதட்டல் இருக்கிறதே, ஏழு ஜன்மத்திற்கு மறக்க முடியாது. தமது ஆசிரியர்களை, வேறொரு பாத்திரமாக மேடையில் பார்ப்பதற்கு மாணவர்கள் எவ்வளவு விரும்புகிறார்கள் என்பதை அன்றுதான் புரிய முடிந்தது.

இப்படித் தான் 1960 இல்! நெரிசல் என்கிற வார்த்தைக்கு மறுபெயர் மகாஜனாப் பொன்விழா மைதானம். மேலே துரையப்பா மண்டபத்தில் ஒவ்வொரு நாளும் ஒரு கலை நிகழ்வு இருக்கும். அதிலும் ஒரு நாள் 'ஆசிரியர்கள்' நடித்த நாடகம் இருந்தது. கதிரேசர் பிள்ளையும் அதில் நடிகர்! நான் பத்து வயதுச் சிறுமியாக மேடைக்கு அண்மையில் நிலத்தில் இருந்து கழுத்து நோக நோக நிமிர்ந்து பார்த்துக் கைதட்டியது... இப்போது நான் ஆசிரியராக மேடையில் நிற்கும் போது பொறி தட்டுகிறது.

1992ம் ஆண்டு கொத்தணிப் போட்டியில் முதலிடம் பெற்ற எனது நாடகம் ஒன்றைப் பண்டத்தரிப்புக் கோட்ட மட்டக் போட்டிக்குக் கொண்டு செல்கிறேன். க.பொ.த.உ/த வகுப்பில் என்னிடம் நாடகமும் அரங்கியலும் பாடத்தைப் பரீட்சைக்குக் கற்கும் மாணவர்களே பெரும்பாலும் நடிக்கிறார்கள். பகீரதி ஜீவேஸ்வரா மிக நன்றாகவே நடிக்கிறார். போட்டி முடிந்து, எல்லாரும் பாராட்டி, நாடகம் முதலிடம் பெறுவதாக அறிவிக்கப் பட்டும் விட்டது. இனியென்ன? cycle



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எடுத்துக் கொண்டு, மாவட்ட மட்டப் போட்டிக்கு ஆயத்தமாகும் திட்டங்களைக் கதைத்தவாறு தெல்லிப்பழை நோக்கி வருகிறோம். உச்சி வெயிலின் நீளம் கண்ணைப் பறித்தாலும் மனதின் மகிழ்வு cycle களைத் தள்ளிக் கொண்டு வருகிறது.

அடுத்த நாள் கோட்ட மட்டப் போட்டி முடிவுகள் ரைப் செய்யப்பட்டு பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அதில் மகாஜனா இரண்டாம் இடம் பெறுவதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது. முதலிடத்தில் வேறொரு பாடசாலையின் பெயர்! அதிபரிடம் செல்கிறேன். "இதென்ன? சின்ன விடயம் விட்டு விடுங்கள்" என்கிறார். பிள்ளைகள் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள். என்னாலும் தான் இந்த அநீதியை ஏற்க முடியவில்லை. தோல்விகளை ஏற்கலாம். ஏமாற்று வேலைகளை ஏற்க முடியாது "நான் போய்க் கேட்கப் போகிறேன்" என்று உறுதியாக நிற்க, அதிபர் அனுமதிக்கிறார். யாரோ இரண்டு பிள்ளைகள் என்னை cycle இல்.... வைத்து உழக்கிக் கொண்டு போகிறார்கள் (வசந்தாவும், வினோவுமா?) பண்டத்தரிப்புக் கோட்டத்தின் இரண்டாம் நிலை அதிகாரியிடம், "நேற்று அறிவிக்கப்பட்ட முடிவு இன்று எப்படி மாறியது?" என்று கேட்கிறேன். அவர் சொல்கிறார், அந்தப் பாடசாலை நாடகத்திற்காக 10,000/= செலவு செய்ததாம், நீங்கள் அந்த அளவு செலவழிக்கவில்லைத்தானே! ஆகவே விட்டு விடுங்கள்" ஓகோ! நேர்மை, நீதி, மனச்சாட்சி எல்லாம் வாய்ப் பேச்சு என்ற போர்வைக்குள் புகுந்து கொண்ட காலமா? சரி, நான் சொல்கிறேன், "விட்டு விடுகிறேன். நிரந்தரமாகவே! மகாஜனாவில் நான் நாடக ஆசிரியராக இருக்கும் வரை பண்டத்தரிப்புக் கோட்டத்திற்கு எங்கள் நாடகம் வராது."

மகிழ்வு வெள்ளம் மனக்கரைகளை உடைத்துப் புரண்டு வழிந்த மற்றொரு சந்தர்ப்பம் 1990 இல் நிகழ்ந்தது. இலங்கையின் சுதந்திரதினத்தை ஒட்டி நடத்தப்பட்ட விசேட நாடகப் போட்டியில் நாங்கள் "வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம்" என்ற நாடகத்தை மேடையேற்றினோம். சிவரதி சிவபாலன், நளாயினி சோமசுந்தரம், பகீரதி ஜீவேஸ்வரா, சாந்தரூபி ஏரம்பமூர்த்தி, வினோதினி விஜயரத்தினம், கௌசீதகி சண்முகநாதன், சுபாஜினி கனகரத்தினம். சுகிர்தா இராமசாமி, பிரவீணன் மகேந்திரராஜா, சதீஸ்பால முருகன் முருகையா, தில்லானா சபாரத்தினம், தமயந்தி நடராஜா, பிரமிளா குணரத்தினம், சஜீதா சண்முகராஜா, லதாங்கி மகாலிங்கசிவம், பவானி தவராஜா ஆகிய இந்நாடக நடிகர்கள் அனைவரும் முறையான களப்பயிற்சியூடாக வந்தவர்கள். நாடகத்தை முறையாகப் பயின்று பரீட்சைக்குத் தோற்றிக் கொண்டிருந்தவர்கள். (இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் மிக நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்)

இந்நாடகத்தின் பாடல்கள் பலவும் கவிஞர். சோ.ப.வினால் இயற்றப்பட்டன. 'நாகபாம்பே' என்ற பாடலுக்கு ரதி ஆடும் பாம்பு நடனமும், 'தினையும் நெல்லின் மணியும்' என்ற பாடிக் கொண்டு "குறுக் குறுக் குறுக்' என்று குறு குறுத்துக் கொண்டு சோடிப் புறாக்களாக நளாயினியும் தமயந்தியும் செய்யும் மேடை அசைவும் இன்றும் எனது கண்ணுக்குள் இனிமை சேர்க்கும் காட்சிகள். நடிகர்கள் அனைவரும் ஆடுவார்கள், பாடுவார்கள், உடல் தேவைப்படி வளையும், குரல் விரும்பியபடி ஏறும் இறங்கும். உச்சரிப்புச் சுத்தமாக இருக்கும்

மாவட்ட மட்டத்தில் இந்நாடகம் முதலிடம் பெற்றது. நடுவர்களில் ஒருவராக இருந்த திரு.நா.சுந்தலிங்கம் அவர்களை இது பெரிதும் கவர்ந்ததால், பின்னர் 07.08.1991இல் வட இலங்கைச் சங்கீத சபை யாழ்-இந்து மகளிர் கல்லூரியில் தனது வைரவிழாவைக் கொண்டாடியபோது இந்த நாடகத்தையே மேடை ஏற்றும்படி கேட்டுக் கொண்டார். அன்று மண்டபத்தின் கடைசி வரிசையில் அமர்ந்திருந்து பார்த்த சுந்தரலிங்கம் அவர்கள் "எனக்கும் நாடகம் தெளிவாக இருக்கிறதா? என்று பார்த்தேன். வெற்றி பெற்று விட்டீர்கள்" என்றார். 14.01.1990 இல் கலை இலக்கியக் களம் நடத்திய பொங்கல் விழாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நாடகம் மேடையேற்றப்பட்டபோது குழந்தை ம.சண்முகலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராய் வந்திருந்து நாடகத்தைப் பார்த்துப் பெரிதும் பாராட்டினார். அது ஒரு நிலாக்காலம் தான்!

* * * * *

(மகாஜனா நாடகம் வராது என்று தானே சொன்னேன்? 1993 இல் நான் யூனியன் கல்லூரிக்கு இட மாற்றம் பெற்ற போது, அங்கிருந்து கொண்டு சென்ற 'குருவி கூவ மறந்ததோ?' என்ற நாடகம் பண்டத்தரிப்புக் கோட்டமட்டப் போட்டியில் முதலிடம் பெற்றது. அது பின்னர் பலதடவை மேடை யேற்றப்பட்ட புகழ் பெற்ற நாடகம் ஆயிற்று. ஆயினும் மகாஜனாவோடு சம்பந்தப் படாதபடியால் அடைப்புக்குள் தானே எழுத வேண்டும்?)

மகாஜனாவின் பழைய மாணவர்கள் மூவர் பிற்காலத்தில் ஈழத்தின் தமிழ் நாடக உலகிற்குப் பெரும் பங்களிப்புச் செய்தார்கள் என்பதைக் குறிக்காவிட்டால் இதன் முழுமை பாதிக்கப்படும் என்று நினைக்கிறேன். அ.ந.கந்தசாமி, மகாகவி, சானா ஆகியோர் பற்றித் தனித்தனி ஆராய நிறைய்ய விடயம் இருக்கிறது.

* * * * *

1970களுக்குப் பிறகு மகாஜனவின் பழைய மாணவர்களாகிய இளவாலை விஜயேந்திரன், மாவை நித்தியானந்தன், பாலசூரியன், அ.ரவி, உ.சேரன், நா.சபேசன், க.ஆதவன் ஆகியோரின் நாடக முயற்சிகளும் கல்லூரிக்குப் பெருமை சேர்ப்பவையே. அவை பற்றித் தெரிந்தவர்கள் கூற வேண்டும்.

1993க்குப்பின் நீண்ட காலம் கல்லூரியில் ஒரு நாடக ஆசிரியர் இருக்கவில்லை. க.பொ.த உ/த இல் அப்பாடத்திற்குத் தோற்றும் மாணவர்கள் வசதிக்கட்டண ஆசிரியர்களை நம்பியே படித்து வந்தார்கள். இன்று என்னிடம் வட.இல. சங்கீத சபை பரீட்சைக்காக நாடகம் பயின்று ஆசிரியர் தரம் சித்தியடைந்த திருமதி.பா.கணேசதுரை செல்வி.த.சம்பந்தர் ஆகியோரும், நாடக ஆற்றல் நிறைந்த திரு.க.செந்தில்வேலும் அங்கு ஆசிரியர்களாய் உள்ளனர். திரு.க.செந்தில்வேல் நெறியாள்கை செய்த 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகம் 2007 இல் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றது இனிப்பான விடயம். மகாஜன மீண்டும் நாடகத்துறையில் சிறகு விரிக்கும் என்ற எதிர்பார்ப்பைத் தரும் விடயம்.

* * * * *

மூளைக்கப்பல் எப்போது ஆழ் கடலில் பயணிக்கும், எப்போது தரைதட்டி நிற்கும் என்று தெரியாது. அது திரும்பி 1991க்குப் போகிறது. யூன்மாதம்! கும்மிருட்டு ஆவேசத்துடன் வலி வடக்கின் பல பிரதேசங்களை மூடிக் கவிழ்ந்து நிற்கிறது. கட்டாய இடப் பெயர்வு எங்களைத் தெற்கு அளவெட்டிக்குத் தள்ளி விழுத்தியிருந்தது. கதிரேசர் சேர் சுகயீனமாய் இருப்பதாய் அறிந்து அவரைப் பார்க்கச் செல்வது ஒரு செக்கல் நேரத்தில் தான். இடையில் பல தடவை அவரைச் சென்று தரிசித்ததும் மகாஜனாவின் நாடக முயற்சிகள் பற்றிப் பேசி மகிழ்ந்ததும் விபரிப்பின் எல்லையற்று விரியும் விடயங்கள். இது முக்கியமான தரிசிப்பு. சேர் வீட்டின் பின் விறாந்தையில் படுத்திருக்கிறார். "கோகிலா வந்திருக்கிறா" என்று அம்மா சொல்லும் போது குளிர்ந்த இரும்பாய் இறுகிக் கிடந்த முகத்தில் ஒரு சிறு மலர்ச்சி. எழுந்திருக்க முனைகிறார். முடியவில்லை. "பிள்ளை ஒரு உதவி" என்கிறார். குரல் மெலிந்து சோர்கிறது. கட்டாயம் செய்யலாம், சொல்லுங்கோ சேர்" என்கிறேன். "ஏதோ மருந்து வாங்கித் தரும்படி கேட்கப் போகிறாராக்கும்... அல்லது யாராவது Doctor ஐ வந்து பார்க்கும்படி சொல்லி அனுப்ப....?" அவர் அவற்றைக் கேட்கவில்லை. "யயாதி கிணத்திலை இருந்து தூக்கிவிட்ட பிறகு விதி பற்றி ஒரு வசனம் சொல்லுவியே! அதை ஒருக்காச் சொல்லம்மா" என்கிறார். "சேர் இப்ப உங்கடை உடல்நலத்தைப் பற்றிக் கதைப்பம்" என்கிறேன். "நான் எப்பவும் நலம்தான். நீ சொல்லு" என்கிறார். "அதுவா? அது என் விதி வேந்தரே, விதி! உருத்து நிற்கும் ஊழ்வினை ஊடெ நின்று அதன் வலியைத் தடுத்து நிறுத்த இயலுமா?" நான் பேசுகிறேன் "நீ மேடையில் இப்படியா சொல்வாய்? குரலில் உணர்வை நிரப்பிச் சொல்லுவியே?" அவருக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்தியில்லை. ஆயினும் அதனுள் தொனிக்கும் அன்புப் பிரவகிப்பில் என் உடலும் உள்ளமும் நனைகின்றன. நான் அந்த வசனத்தைத் திரும்பவும் சொல்கிறேன். மேடையில் நடிப்புக்காக அழுத நான், இப்போது உண்மையாகவே அழுகிறேன். அவரது கண்களில் ஈரப்பொலிவு. இது நடைபெற்று இரண்டு மூன்று தினங்களில் அவரது உயிர்ப்பறவை கூண்டைவிட்டுப் போய்விட்டது. அதைக் கேள்விப்பட்ட போது என்னால் அழ முடியவில்லை. வானத்தின் மேகங்கள் மழை பெய்யலாமா வேண்டாமா என்று கலந்து ரையாடுகின்றன. அந்தச்சத்தம் மெல்லிய இடி ஒலியாய் எனக்குள் கேட்கத் தொடங்குகிறது.

* * * * *

பி.கு:- சேர்! ஒரு 'மொடல்' ஆசிரியரைப் பார்க்க வேண்டுமானால், திரு.செ.கதிரேசர் பிள்ளை, திரு.பொ.கனகசபாபதி, திரு.வி.சிவசுப்பிரமணியம் (பார் மாஸ்டர்) போன்றவர்களை இழுத்துக் கொண்டு வந்து உங்கள் முன்னே காட்ட வேண்டும் என்று எத்தனை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கில் கூறியிருப்பேன், எத்தனை மேடைகளின் 'மைக்' உங்கள் பெயரை உள் வாங்கியிருக்கும் என்று நீங்கள் எண்ணவே மாட்டீர்கள் சேர்! அது மனதின் ஆழத்தில் இருந்து வரும் உண்மையின் குரல் சேர்!.

********************************************************************************

## பங்கு பற்றிய தொலைக் காட்சி சார் நிகழ்வுகள்

1) சக்தி – புத்துணர்ச்சி உரைகள் – 2008, 2009
2) சக்தி, ரூபவாஹினி, நேத்ரா – பல பேட்டிகள், கலந்துரையாடல்கள்

## பங்கு பற்றிய வானொலி சார் நிகழ்வுகள்

1) பூவும் பொட்டும் – 1970களில்
2) இசையும் கதையும் – 1970களில்
3) நவசக்தி – 2008, 2009, 2010
4) கலைக் கோலம் – 2009, 2010
5) இளவேனில் – 1970களில்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

கலைக் கோலம் நிகழ்வில். . . .

* சிறுவர் நாடகத் தயாரிப்பு

* தமிழ் இலக்கியச் செல் நெறியில் விஞ்ஞான வளர்ச்சியின் பங்கு

* பிரயோக அரங்கு

* கலைகள் சிகிச்சையாதல்

போன்ற பல தலைப்புகளில் உரை

********************************************************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி முழக்கம்

(மேடை திறக்கும்போது சிவரஞ்சனி ராகம் இசைக்கப்படும். மேடையின் பல வேறு உறை நிலைகளில் "கேள்விகள்" நிற்கும், சூரியன் உயரமான ஒரு இடத்தில் நிற்கும். உரைஞர்கள் இருவர் படிகளில் நிற்பர்)

**கோமளா + சிவரதன் :-**

சபையோர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம். (தன் குரலுடன் இன்னொரு குரல் ஒலிப்பதை அறிந்து, அதிர்ந்து ஒருவரை ஒருவர் பார்த்து விட்டு மீண்டும்)

வணக்கம். நான் தான் இந்த நாடகத்தின் உரைஞர்.

ரதி :- (சபையில் இருந்து) அட இதென்ன வேதனை? எங்கையடாப்பா இந்த நாடகத்தின்ரை டிரக்டர் (Director) ஒரே நேரத்திலை இரண்டு பேரைச் பேச வைச்சிருக்கினம். முதலிலை ஆர் பேசிறதெண்டு முடிவு செய்யுங்கோ... ஓய்... ஸ்டேஜ் மனேச்சர்.... கூப்பிடும் டிரக்ரரை.

**கோமளா + சிவரதன் :-**

ஐயா, பெரியோர்களே, நடுவர்களே, தாய்மார்களே, இந்த நாடகத்தின்ரை டிரக்டரும் நான்தான்.

ரதி :- இது நல்ல வேடிக்கை. இரண்டு பேரும் தாங்கள் தான் உரைஞர் எண்டினம். இப்ப இரண்டு பேரும் தாங்கள் தான் டிரக்டர் எண்ணினம். ஒரே குழப்பமா இருக்கு. இண்டைக்கு நாடகம் நடக்காது போலை இருக்கு.

மதினி :- ஆராவது ஒராள் ஒரு நேரத்திலை பேசுங்கோவன்.

**கோமளா + சிவரதன் :-**

யாருக்குக் கதிரை எண்டு எப்பிடித் தீர்மானிக்கிறது?

ரதி :- உது நல்ல கேள்வி.

நடிகர் அனைவரும் :-

கேள்வி : கேள்வி கேள்வி : கேள்வி கேள்வி கேள்வி : கேள்வி கேள்வி கேள்வி கேள்வி : (சொல்லும் போது குரல்கள் வர வர உயரும்)

ரதி :- கயிறு இழுத்துப் பாருங்கோ.

(இருவரும் கயிறு ஒன்றை இழுப்பதான ஊமம், கயிறு சிவரதன் பக்கம் நகர கோமளா வேண்டாம் என மறுத்தல்)

கோமளா:- இது பிழையான வழி.

மதினி :- பூவா தலையா போடுங்கோ.

(இருவரும் சுண்டிப் பார்க்க, சிவரதன் அதைக் குழப்புதல்)

சிவரதன் :- உது சரியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதி :- வோற்றுக்கு விடுங்கோவன்

(இருவரும் தமக்குச் சார்பான தலைகளைச் சபைக்குள் தேடி எண்ணிப் பார்த்தல். பிறகு இருவரும் அதை மறுத்தல்)

இருவர் :- உந்த முறை வேண்டாம்.

சிவரதன் :- சரி, நீர் முதலிலை பேசும். நான் விட்டுத்தாறன்.

கோமளா :- பொம்பிளைக்கு வெற்றி. அப்பிடி எண்டா நாடகத்தை ஆரம்பிப்பம்.

சிவரதன் :- நாடகத்தின்ரை பேர் என்ன?

கோமளா :- நல்ல கேள்விதான்

சிவரதன் :- அட நாடகத்தின்ரை பேர் என்னப்பா?

கோமளா :- நல்ல கேள்விதான் (அழுத்தமாக)

சிவரதன் :- அதுதான் நாடகத்தின்ரை பேரோ?

கோமளா :- சில வேளை அப்பிடியும் இருக்கலாம் தானே.

சிவரதன் :- சரி, சரி, அப்ப தொடங்குவம்.

கோமளா :- தொடங்குவம்.

விழித்துப் பார்த்த நான் வியந்து போனேன். சந்திரனை ஒரு கேள்வி சுற்றிக் கொண்டிருந்தது. (ஒரு நடிகர் சந்திரனாக நிற்க, மற்றவர் கேள்வி போன்ற வடிவுடன் சுற்றி ஆடுவார். மற்றவர்களும் எழுந்து தம்மைத் தாமே சுற்றிக் கொள்வர்)

சிவரதன் :- யன்னல் வழியே உற்றுப் பார்த்தபோது பச்சைப் பசேல் என்ற வயல் வெளிகளில் பயிர்களுக்குப் பதிலாய்க் கேள்விகளே படுத்துக் கிடந்தன.

(நடிகர்கள் அனைவரும் கேள்வி போல் வளைந்து மேடையில் பரந்து படுத்திருப்பர்)

ரதி :- திரும்பிப் பார்த்தால் கோயில் குளங்களிலும் உருண்டும் பிரண்டும் ஆயிரக்கணக்கான கேள்விகள் அசைந்து கொண்டிருக்கின்றன. (நடிகர்கள் எல்லோரும் அசைவர்)

செந்தில் :- எங்கு பார்த்தாலும் கேள்விகளின் கூட்டம்.

சங்கர் :- சில கேள்விகள் நேற்றுப் பிறந்தவை.

ரதி :- பிறந்த மேனியுடனா நிற்கின்றன?

கிருபா :- சில கேள்விகளின் வயது ஆயிரம் ஆண்டுகளுக்கும் அப்பால் இருக்கும்.

(செந்தில், சங்கர், கிருபா மூவரும் முக்கோண வடிவில் எதிர்த்திசைகளைப் பார்த்து CR இல் நிற்பர்)

மனோ :- (DL இல் அமர்ந்து) சில கேள்விகளுக்குக் குழந்தை முகம்.

சௌந்தரா :- சில கேள்விகளின் முகத்தில் நூறாண்டு கண்ட சுருக்கம்.

கணேஸ் :- (DR இல் கொட்டாவி விட்டபடி) பல கேள்விகள் அலுத்துப் போய்க் கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கின்றன.

தேவா :- (DC இல் நித்திரை தூங்கியபடி) சில கேள்விகள் எழுப்ப ஆளில்லாமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கின்றன. இப்போதைக்கு ஆரும் எழுப்பமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன்.

(கிருபாவும் சங்கரும் CR இல் ஒருவரில் ஒருவர் தொங்கியபடி நிற்கச் சிவரதன் அவர்களின் அருகில் சென்று பார்த்து)

சிவரதன் :- சில கேள்விகள் மற்றக் கேள்விகளின் கழுத்தில் தூக்கு மாட்டித் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

(அவர் அழ, அழுகை எல்லோரிடமும் தொற்றும்)

**பாடகர் + நடிகர்** :- (சோகமாக)

யாருக்குச் சுகபோகம்? யாருக்குச் சுமைகள்? யாருக்கு மண்குடிசை? யாருக்கு மாடம்? யாருக்குச் சமபாடு குறைவு? பசி யார்க்கு? யாருக்கு மோகனம்? யார் யாருக்கு முகாரி? (இது கவிஞர், சோ.ப வின் பாடல்)

(ரதி மனோவுக்கு அருகில் செல்வார்)

ரதி :- ஏன் அழுகிறியள்?

மனோ :- போன இடத்திலை எல்லாம் அடியும் உதையுந்தான் விழுது. எத்தனை காலத்துக்குத்தான் நாங்கள் பிறந்த மேனியாய் அலையிறது? வெளியிலை தலை காட்டவே வெட்கமாய் இருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில் எண்ட ஆடை கிடைச்சால் நாங்களும் பத்துப் பேருக்கு மத்தியிலை தலை நிமிர்ந்து நடப்பமெல்லே?

சிவரதன் :- (செந்திலுக்கு அருகில் வந்து) ஐயா கேள்வி, உம்மடை பேர் என்ன?

செந்தில் :- "உலகத்திலை அடக்கு முறை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நிலைக்கும்?" அதுதான் என்ரை பேர்.
(செந்தில் DCயில் நிற்பார். தொடர்ந்து கதைக்கும் ஐவரும் செந்திலைச் சுட்டியபடி நிற்பர்)

கிருபா :- கேள்வி கேக்கப்படாது.

சங்கர் :- கேள்வி கேக்கலாம். இப்ப இல்லை. அதுக்கு ஒருநேர காலம் இருக்கு.

சௌந்தரா:-கேள்வி கேக்கலாம். நீ கேக்கப்பிடாது.

ரதி :- சீ... கேள்வி என்னத்துக்கு? அது தேவையில்லை.

ராஜன் :- நான் இதிலை இருக்கேக்கை கேக்கப்பிடாது. வேணுமெண்டால் நான் போனாப் பிறகு கேளன்.

சிவரதன் :- (கையை மேலே உயர்த்தி) எட, தம்பீ... நான் இருக்கிறன். நீ பயப்பிடாமல் கேள். (சிவரதன் கையை உயர்த்த, சுட்டிய ஐவரும் கையைக் கீழே விடுவர்) (செந்தில், சிவரதனுக்குப் பின் ஓடி, அவரின் துறவு மனநிலையைக் கண்டு திரும்பியும் அழுதபடி ஓடி வருவர். அவரது அழுகை எல்லாருக்கும் தொற்றும். எல்லாரும் வட்டமாகக் கூடி இருந்து ஒப்பாரி வைத்து அழுவர்)

கோமளா :- ஏன் இப்படி எல்லாரும் அழுகிறீர்கள்? இப்போது தான் உலக நாடுகள் எல்லாமே படிப்படியாக ஜனநாயக நாடுகளாக மாறி வருகின்றனவே. பாராளுமன்றங்களில் கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்கென்று விசேடமாக ஒரு நேரம் ஒதுக்குவார்கள். கேள்வி நேரம் தானே அங்கு கீர்த்தி மிக்க நேரம்? நீங்கள் எதற்காக இப்பிடித் தொடர்ந்து அழுது கொண்டிருக் கிறீர்கள்?

செந்தில் :- நான் போனனான். எங்கடை பாராளுமன்றத்துக்கு. மற்றது அமெரிக் காவின்ரை கொங்கிரசுக்கு!

கோமளா :- போயிருந்தால்...

ராஜன் :- (எழுந்து வந்து) போயிருந்தால் பல பதில் வந்திருக்குமே.

செந்தில் :- பதிலுகளே அதுகள்? அங்கை சொல்லப்பட்ட பதிலுகளை நீங்களும் பரிசீலிச்சுப் பாக்க வேணும். பத்திரமா வைச்சிருக்கிறம். அந்தா... அந்தக் குப்பைக் கூடையைக் கொட்டிப் பாருங்கோ. (UL மூலையைச் சுட்டுகிறார்)
(எல்லாரும் அந்த மூலையைப் பார்ப்பர். கேள்விகள் அந்த மூலையில் போய்க் குவியும்)

ரதி :- அதுக்குள்ளாலை பதில் வருமோ?

செந்தில் :- ஓ... உள்ளேயிருந்து உழுத்துப் போன ஏக்கங்களும் உடைந்து போன ஏமாற்றங்களும் உதிர்ந்து உதிர்ந்து வரும்.
(நடிகர்கள் அதற்குள்ளிருந்து மெது மெதுவான Slow motion இல் நெளிந்து வளைந்து அசைந்து விரக்தியும் வேதனையும் மிக்க பாத்திரங்களாய் வெளி வந்து மேடையின் பல்வேறு பகுதிகளுக்கும் பரந்து செல்வர். அப்போது இப்பாடல் பாடப்படும்)

பாடகர் :- *சீனி விற்கிறீர் அரிசி விற்கிறீர்*
*தேயிலை விற்கிறீர் பொயிலை விற்கிறீர்*
*ஏணி வைப்பினும் எட்டொணா விலை*
*ஏற்றி எங்களைச் சாகடிக்கிறீர்*
*(இது கவிஞர் சோ.ப வின் பாடல்)*

*மனித விழுமியம் காற்றில் பறக்குது*
*மானிட நேயம் செத்துத் தொலையுது.*
*(நடிகர்கள் உறை நிலைக்கு வருவர்).*

சிவரதன் :- (மனோவுக்கு அருகில் வந்து) எடி, பிள்ளை உன்ரை பேர் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ :- எங்கடை நாட்டிலை எப்பிடி இந்தக் கலாசாரச் சீரழிவு தோன்றி வளருது? இதுதான் அம்மா எனக்குவைச்ச பேர். பேர் எப்பிடி வடிவோ?

சிவரதன் :- பிள்ளை, உது உன்ரை கொப்பன் கேட்டவன். கொப்பன்ரை கொப்பனும் கேட்டவன். பிள்ளை ஒண்டு செய்... உன்ரை பிள்ளையையும் தவறாமல் உதைக் கேட்கப் பழக்கிப் போடு.

மனோ :- ம்....ம்...
(திடீரென்று மேடையில் பரபரப்பு ஏற்படுதல், எல்லோரும் எட்டு வடிவில் ஓடி வருதல்)

ராஜன் :- திடீரென்று என்ன திருவிழா வந்திட்டுதே எல்லாரும் ஓடுப் பட்டுத் திரியிறியள்?

எல்லாரும்:- வருதாம் வருதாம்

ராஜன் :- என்ன வருதாம்

எல்லாரும்:- பதில், பதில், வருதாம்.

சங்கர் :- அப்ப, பதிலைப் பாக்க நீங்கள் போகேல்லையோ?

கவிதா :- பதிலை வரவேற்க உலகத் தலைவர்கள் எல்லாம் தலைப்பாகை கட்டிக் கொண்டு போயிருக்கினம்.

சங்கர் :- பதிலைக் கண்டால் நீங்கள் போயிடுவீங்களோ?

செந்தில் :- தேவையில்லாமல் வீதியிலை நிக்கிற துக்கு என்ன விதியே எங்களுக்கு?

மனோ :- கவலைப்படாதேங்கோ. எங்களுக்குச் சோடியான பதில்கள் வந்தால் நாங்கள் போயிடுவம்.
(கவிதா, சங்கர், மனோ, செந்தில் ஆகியோர் முன் மேடையில் ஒரு வரிசையும் அமைப்பர்.

கிருபா :- (ஓடி வந்து உயரமான ஆசனத்தில் DCயில் ஏறிப் பார்வையாளர் பக்கம் பார்த்து) அந்தா பதில் வந்து மதிலோடை நிக்குது.
(கிருபாவைச் சுற்றி ஏனையை நடிகர்கள் பல levels இல் நின்று எட்டி எட்டிப் பார்ப்பர்)

செந்தில் :- (கிருபாவின் கைக்குக் கீழே நின்று) மதிலுக்கு மேலாலை ஒரு தலை தெரிந்தாலும் போதும் எங்களுக்கு.

சுஜி :- (எட்டிப் பார்த்து) என்ன காரணம்? தலைப்பாகை கட்டிக் கொண்டு போன எங்கடை தலைவர்கள் எல்லாம் ஏன் இப்படித் தலையைக் கீழே போட்டுக் கொண்டு தளர்ந்து போய் வரினம்? பதில் வரேல்லையே?

ரதி :- கேள்வியளுக்குப் பதில் வந்திருக்காம் ஆனால்...

எல்லாரும்:- ஆனால்...
(எல்லா நடிகர்களும் ரதிக்கும் ராஜனுக்குப் பின்னால் ப படிவில் நிற்பர்)

ராஜன் :- அதுவும் கேள்வியாவே இருக்காம்.
(எல்லாரும் சிரித்துக் கொண்டு பின்புறம் திரும்புவர்)

மதினி :- அதனால்தான் வரவேற்கப் போனவர்கள் எல்லாம் வாட்டத்தோடு திரும்பியிருக் கிறார்கள்.

ரதி :- இல்லை, இல்லை, பதில் வந்திருக்காம். அதுகள் இவைன்ரை கண்ணுக் குப்படாம வேறை இடத்திலை நிக்குதாம்.

செந்தில் :- (சங்கரை அழைத்துக் கொண்டு CCக்கு வந்து) இஞ்சை பாருங்கோவன். எனக்கு வந்து வாய்ச்ச சோடியை. இதை வைச்சு நான் என்ன செய்யிறது?

கோமளா :- (எல்லா நடிகர்களையும் திரும்பிப் பார்த்து) கேள்வியளே, உங்களுக்கு வந்த பதிலுகளோடை சோடி சோடியா நில்லுங்கோ பாப்பம்.

ரதி :- (கேள்விகளைப் பார்த்து உங்களுக்குச் சரியான சோடி வாய்ச்சால் இணைஞ்சு பிணைஞ்சு நல்லா வாழுவியள். இல்லாட்டிக் கிடந்து பிணைபடுவியள்.

சிவரதன் :- (மேடையில் பிணைபட்டுக் கொண் டிருக்கிற எல்லாச் சோடியையும் பார்த்து விட்டு, செந்தில் சங்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோடிக்கு அருகில் வந்து அமர்கிறார். பௌராணிகர் போல அவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கிறார்) ஆனானாம் புத்திரீம்... ஆனானாம் பௌத்திரீம்... பொம்பிளையின்ரை பேர் என்ன?

செந்தில் :- உலகத்திலை அடக்கு முறை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நிலைக்கும்?

சிவரதன் :- ஆ.... உலகத்திலை அடக்கு முறை இன்னும் எவ்வளவு காலத்துக்கு நிலைக்கும்? ஆனானாம்... மாப் பிளையின் பெயர் என்ன?

சங்கர் :- உலகத்திலை அடக்கு முறை இருக்கெண்டு யார் சொன்னது?

சிவரதன் :- ஆ... உலகத்திலை அடக்கு முறை இருக் கெண்டு யார் சொன்னது? கெட்டி மேளம்... கெட்டி மேளம்... தாலியைக் கட்டுங்கோ.. (மேள ஒலி, சங்கர் செந்திலுக்குத் தாலி கட்டும் ஊமம்)

சபையில் இருந்த ரதி :-
உது ஆம்பிளை பொம்பிளை திருமணம் இல்லை. தன்னினச் சேர்க்கை.. நிப்பாட்டுங்கோ.

கோமளா :- தன்னினச் சேர்க்கைத் திருமணத்தை உலகத்திலை பல நாடுகள் அங்கீகரிச்சிருக்கு... நீங்கள் ஏன் அம்மா கவலைப்படுறியள்.. அது ஒரு கேள்வி இன்னொரு கேள்வியைக் கலியாணம் கட்டலாம். நீங்கள் இருங்கோ.
(மேடையில் இருந்த மற்றொரு சோடியை நோக்கிச் சென்று) பிள்ளைகளே இப்படி வாருங்கள். நீங்கள் இருவரும் சரியான குறும்பு. உமது பெயர் யாது?
(மிகக் கோபமாக அதட்டுகிறார்)

சுஜி :- நான் உண்மையைச் சொல்லுறன். என்னை ஏதும் செய்து போடாதேங்கோ அம்மா!

கோமளா :- (பொலிஸ்காரன் அதட்டுவது போல)ம். உன்ரை பேர்?

சுஜி :- பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் உலகில் ஏன் தொடருகின்றன?

கோமளா :- இது உன்ரை தகப்பன் வைச்ச பேரோ? அல்லது கள்ளப் பேரோ?

சுஜி :- இல்லை... இல்லை (நடுங்கியபடி) இதுதான் என்னர பேர்த் சேட்டிபிகற் பெயர்.

கோமளா :- உனக்கு வேறை பேரும் இருக்கோ?

சுஜி :- சத்தியமா இல்லை.

கோமளா :- அப்ப ஏன் இப்பிடி நடுங்கிறா?

சுஜி :- அது, இவரோடை எனக்கு முந்தியே தொடர்பு அதுதான்...

கோமளா :- கள்ளக் காதல்.? Premarital relationship? அவருக்கு என்ன பேர்?

சுஜி :- ஆண்களுக்கு எதிரான பாலியல் சுரண்டல்கள் உலகில் இல்லையா?

கோமளா :- ம்... ம்... குழப்படி செய்து கொண்டு திரியுங்கோ இரண்டு பேரும்... போங்கோ

சிவரதன் :- (வேறு ஒரு சோடியிடம் வந்து) உங்களைப் பாத்தா இரட்டைப் பிள்ளையள் மாதிரி இருக்கு. உம்மடை பேர் என்ன?

சௌந்தரா:-முதலாளி முதலைகள் தொழி லாளரைச் சுரண்டுவது எத்தனை மே முதலாம் திகதிக்குப் பிறகு நிற்கும்?

சிவரதன் :- மற்றாள், உம்மடை பேர்?

சிவானுஜா:- நாடுகளின் பொருளாதாரத்தைத் தொழிலாளர் உயர்த்தா விட்டால் வேறு என்ன தண்டனை கொடுப்பது அவர்களுக்கு?

சிவரதன் :- நீங்கள்தான் சரியான ஒத்த இரட்டையர்.

கோமளா :- (மற்றொரு சோடியிடம் சென்று) உங்களைப் பாத்தால் பூவும் மணமும் போல நல்ல சோடி. ஐயா உங்கள் பெயர் யாதோ?

ராஜன் :- வெள்ளையர்கள் கறுப்பின மக்களைக் குறைவாகப் பார்ப்பது நின்று விட்டதுதானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமளா :- நல்ல பெயர் தான். அம்மா உங்கடைபேர்?

கருணா :- ஏபிரகாம் லிங்கனோடு அது எல்லாம் முடிந்து தானே இருக்க வேண்டும்?

சிவரதன் :- அந்த மூலைக்கை நிண்டு பினைபடுற ஆக்கள் சொல்லுங்கோ உங்கடை பேர்?

ரமணி :- மத ரீதியான அடக்கு முறைகள் எப்போது தொடங்கின?

சிவரதன் :- ம்.... மற்றாள்?

கவிதா :- மதங்கள் எப்போது தொடங்கின?

கோமளா :- (எல்லாச் சோடிகளையும் பார்த்து) எல்லாமே.... நல்ல.... நல்...ல்...ல கேள்விகள். உங்களுக்கு வந்து வாய்த்த பதில்களோ அதை விடத்திறமான கேள்விகள்.
(எல்லோரும் திடீரென மேடையின் CCயை உற்று நோக்குதல்)

சிவரதன் :- என்ன? எல்லோரும் குவிஞ்சு போய் நிண்டு குனிஞ்சு பாக்கிறியள்?

கருணா :- கேள்வி ஒன்டு புதிசாய்ப் பிறந்திருக்கு. இப்பதான் பிறந்தது.

கிருபா :- (பிறந்த கேள்வியைத் தூக்கித் தாலாட்டுகிறார்)
(நீலாம்பரி இராகம்)
மானிப்பாய் இருந்து
மடகாஸ்கர் தொங்கல்வரை
கூனிக் கழுத்து வரை
அடக்கு முறைதான் சுமந்து
ஆணிக்கால் கொதிக்க
ஆருயிரும் குலை நடுங்க
தோணிக் கரை கடந்து
தொல்லை பல நீ சுமந்து
வாழ வேணும் கண்ணே
கண்ணுறங்கு கண்ணுறங்கு
குஞ்சுக் கேள்வியே நீ
விழி மூடு விழி மூடு...
(ஏனைய நடிகர்கள் பலவடிவத்தில் நின்றும் இருந்தும் பிள்ளையைத் தாலாட்டுவர்)

கிருபா :- பிள்ளையைத் தொட்டிலிலை போட்டு ஆட்டுவம்.

பாடகர் :- (ஊமத்துடன்)
ஆராரோ ஆரீவரோ - கண்ணே
தாலாலோ தாலேலலோ - ஆரோ
ஆராரோ ஆரீவரோ
ஆராரோ ஆரீவரோ...
(நடிகர்கள், இரு வரிசையில் நின்று ஊஞ்சலை ஆட்டிக் குழந்தையைத் தூங்கச் செய்வர்.)

மனோ :- எங்கடை குஞ்சுக் குட்டிக்கு என்ன பேர் வைப்பம்?

ராஜன் :- புதுப்பேரா.. நல்ல modern பேரா வைக்க வேணும்?

செந்தில் :- (குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டபடி)
"சமத்துவம் எண்டசொல்லு எப்பசாகும்" எண்டுவைப்பம்.

மனோ :- நல்ல வடிவான பேர். புதுப்பேர்...

சிவரதன் :- இந்தக் குழந்தைக்கு ஆயுள்வலு கெட்டி... ஏனெண்டா அந்தச் சொல்லு மனிசன் இருக்கும் வரைக்கும் இருக்கும் (பெரிதாகச் சிரிக்கிறார்)

சௌந்தரா:-தபால் வருது... தபால் வருது...
(ரதி தபாலைக் கொண்டு வர, நடிகர்கள் எல்லாம் UR மூலைக்கு ஓடுவர்)

ரதி :- Registered Post. உனக்குத்தான் வந்திருக்கு. (மனோவிடம் கொடுத்தல்)
(மனோ உடைத்து வாசிக்க ஏனையோர் ஏமாற்ற மடைதல், பின் மனோவைப் பூராயம் பார்த்தல்)

மனோ :- எனக்கு ஒரு முக்கியமான தகவல் வந்திருக்கு.

ரதி :- என்ன?

மனோ :- எங்களைப் போல இன்னும் கொஞ்சப்பேர் வந்திருக்கினம்.

ரதி :- ஆர்? ஆர்?

மனோ :- யார் செய்த வேளாண்மை?
யார் வெட்டுவோர்கள்?
யார் நட்ட பனை வடலி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் தறிக்கின்றார்கள்?
யார் வயலை உழுகிறவன்?
யார் விளைச்சல் பெறுவோன்?
யார் தறியில் நெய்யிறவன்?
யார் உடுத்து மகிழ்வோர்?
யார் சிவிகை ஊருவது?
யார் சுமக்கும் ஆட்கள்?
யாருக்கு நந்தவனம்?
யாருக்குக் காடு?
யாருக்கு மலர் மஞ்சம்?
யாருக்கு முட்கள்?
யாருக்குக் குளிரூட்டும் அறை?
வெயில் யார்க்கு?
யாருக்குத் தாவாரம்?
யாருக்குப் பரிகை?

(இது கவிஞர் சோ.பவின் பாடல்)

(இந்தக் கவிதையை மனோ சொல்லத் தொடங்கப் பின் பாடகர் குழுவால் இசைக்கப்படும். நடிகர்கள் பொருத்தமான ஊமம் அல்லது அசைவு நிகழ்த்துவர்)

கோமளா :- (ஒரு அழகான பெண்ணை CCயில் நிற்க வைத்து அவளைச் சுட்டி)

*அற்புத ஓவியம் தீட்டியதார்?- அதை*
*அடுப்படிப் புகைபட மாட்டியதார்?*
*சித்திர கூடத்தில் ஆயிரம் பேர்- இதைத்*
*திரும்பியும் பார்த்தவர் யாருமில்லை.*
*திருமண வாணிபம் செழிக்குதடா-இங்கு*
*சீதனமே அரசாளுதடா*
*உரிமைகள் எல்லாம் ஏட்டளவில்-கையில்*
*ஒன்றும் இல்லாதவர் வீட்டளவில்.*

(இது கவிஞர் சோ.பவின் பாடல்)

(ஏனைய நடிகர்கள் பல வேறு நிலைகளில் அடிமையாய் உறையும் ஊமம் / படிமங்கள்

மனோ :- உலகத்தின் சராசரி இதயமே, உனது உலகம் மிகவும் சிறிது. உனக்கு அதிக விடயங்கள் புரிவதில்லை. அல்லது நீ புரிந்து கொள்ள விரும்புவதில்லை.

(மேடையில் ஒரு புதிய காட்சி விரிகிறது)

(யேசுநாதர் போல உடை உடுத்த ஒருவர் பல மனிதர்களுக்கு உதவுதல், அவர்களோடு பேசுதல், அவர்களுக்கு நோய் தீர்த்தல், போதித்தல் - மக்கள் கூட்டமாய் அவர் பின்னே போதல்)

கொடியவன் :- ஏ! யார் நீ? என்ன செய்கிறாய்?

யேசு போன்றவர் :-
மக்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்கிறேன்.

கொடியவன்:- இல்லை மக்களிடம் இருந்த கருத்தை மாற்றப் பார்க்கிறாய்.

யேசு போன்றவர் : நான் அவர்கள் சுகம்பட உதவுகிறேன்.

கொடியவன் :- நான் யார் தெரியுமா? உலகத்தலைவன். என் கருத்தே எல்லாருடைய கருத்தாகவும் இருக்க வேண்டும். நீ வேறு புதிய கருத்தைச் சொன்னால் அது பெரிய குற்றம்.

யேசு போன்றவர் :- நான் குற்றம் ஏதும் செய்யவில்லை.

கொடியவர்:- வேறு கருத்தைக் கொண்டிருப்பதுதான் குற்றங்களில் மிகப் பெரிய குற்றம். ஏ! யார் அங்கே! அவனைப் பிடித்து... அடியுங்கள்.... உதையுங்கள்.. சித்திரவதை செய்யுங்கள்....
அவன் எனது கருத்துக்கு மாறும் வரை.
(யேசுநாதர் துன்புறுத்தப்படும் ஊமம்)

பாடகர் :- (முகாரி இசைப்பர்)
(யேசு நாதரின் துன்பம் தாங்க முடியாத எல்லைக்குச் செல்லும்)

பாடகர் :- உங்கள் உலகம் மிகவும் சிறிது
உங்கள் விளக்கம் மிகவும் சிறிது
உங்கள் புரிதல் மிகமிகச் சிறிது.
(பாடல் முடிய மேடை நிசப்தமாகும்)
(கோமளா இறங்கி வந்து பார்வையாளருடன் உரையாடுவார். இந்த அரங்கை இந்நிலையில் வைத்துக் கலந்துரையாடல் அரங்காக மாற்றுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Protogonist பாத்திரம் ஏற்றுத் தொடர்ந்து நடிக்க விரும்புபவர்களை மேடைக்கு அழைப்பர். அவர்களின் உணர்வுகள் பற்றி ஒரு facilitator ஆக இருந்து உரையாடுவார்.)

(திரும்ப நடிகர்கள் அனைவரும் மேடைக்கு வருவர்)

(நடிகர்கள் அனைவரும் பெரிய கேள்வி வடிவில் மேடையில் ஒழுங்குபடுவர்.)

மனோ :- இவ்வளவு நேரமும் சின்னக் கேள்வியாய் இருந்த நான் இப்பதான் பெரிய கேள்வியாய் வந்திருக்கிறன்.

சிவரதன் :- (எல்லாக் கேள்விகளையும் உற்றுப் பார்த்துவிட்டு) கேள்விகளின் முழக்கம் காதைப் பிளக்குதெணோய்!

(எல்லாரும் இறுக்கிக் காதுகளைப் பொத்துவர்)

கோமளா :- எல்லா முழக்கத்திற்குள்ளும் ஒரு மின்னல் கீற்று இருக்கும். புத்தி சாலிகள் அதைப் புரிந்து கொள்வர்.

(நடிகர்கள் தளர்ந்து மெலிதாக ஆடி மகிழ்வர்)

**கோமளா + சிவரதன் :-**

இவ்வளவு நேரமும் கேள்விகளின் முழக்கம் என்ற நாடகத்தை Direct பண்ணினனான். இப்ப நாடகத்தை மட்டும் நிறைவு செய்யப் போறன். வணக்கம்.

ரதி :- இப்பவுந்தான் ஆர் Director எண்டு தெரியாது?... ம்.... (நடிகர்கள் அனைவரும் கை கூப்பி மெலிதாக ஆடியபடி மேடையை விட்டு அகல்வர்).

**[நிறைவு]**

**பிற்குறிப்பு**

கோமளா :- பச்சை நிறத்தில் பெண் உடை

சிவரதன் :- பச்சை நிறத்தில் ஆண் உடை

ரதி :- சாதாரண பார்வையாளர் உடை

மதினி, மனோ, சௌந்தரா, கவிதா, சுஜி, சிவானுஜா, கருணா, ரமணி பெண்களுக்குரிய ஒரே மாதிரியான கோல உடை.

செந்தில், சங்கர், கிருபா, ராஜன், தேவா ஆகியோர் ஆண்களுக்குரிய கோல உடை. யேசுநாதர் போன்றவர் ஏறத்தாழ அது போன்ற உடை

கொடியவர்:- அரக்கர் போன்ற உடை

பாடகர் :- விசேட அழகான கோல உடை

(ஞானம், செப் - 2008)

*************************************************************

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சைவ நற்சிந்தனையில். . . .

1. விருந்து
2. பண்புடையாளர் தொடர்பு
3. அன்பு
4. இசை
5. விதி
6. இறைவன் எங்கே?

போன்ற பல தலைப்புகளில் உரை

*************************************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இழவிரக்கம் பண்டிதர் க.சச்சிதானந்தன் மறைவில். . . .

# எளிமைப் பனி போர்த்திய இமயம்

அன்றும் வழக்கம் போலக் காலையில் கடைக்குச் சென்று பத்திரிகை வாங்கி வந்தேன். எங்கள் பெருமதிப்புக்குரிய ஆசிரியர் பண்டிதர் க.சச்சிதானந்தன் அவர்களைப்பற்றிய அந்தச் செய்தி கண்களில் உள்வாங்கப்படுகிறது. அவர் சுகயீனமுற்றிருந்தார் என்று கூட யாரும் சொல்லவில்லையே! யாழ்ப்பாணத்தில் - காற்றுக்குள் யானை புகுந்த புயல் நாள் ஒன்றில் - காலன் அவரைக் கவர்ந்து சென்றுவிட்டான் என்ற உண்மையை இதயம் ஏற்க மறுத்துப் போராடுகிறது. காலையில் ஈரக் குரலெடுத்துப் பாடும் பறவைகள் யாவும் அன்று ஈனக்குரலெடுத்துப் பாடுவதாய் ஒரு பிரமை. யாழ்ப்பாணத் தோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு விடயம் உண்மைதான் என்று அறிந்த பிறகும் மனம் மறுத்தல் என்ற பாதுகாப்பு கவசத்தை அணிந்திருக்கவே விரும்புகிறது.

வடக்கில் இன்று நாள்தோறும் பலர் இறந்து கொண்டிருக்கிறார்கள். அது ஒரு புள்ளி விபரமாய்ப் போய்விட்டது. அதனிடையில் பண்டிதர் ஐயாவை நாம் இழந்தோம் - மாவைப் பண்டிதர் என்ற இலக்கிய மாமலை சரிந்தது. - சச்சி 'சேர்' என்ற சரித்திரம் முடிந்தது என்ற விடயம் ஒரு மாபெரும் துயர சம்பவமாய் மனதில் நிலைகொள்ளுகிறது.

1979ம் அண்டு பலாலி ஆசிரியர் கலாசாலை நேரசூசி விஞ்ஞான ஆசிரிய மாணவர்களுக்குப் பண்டிதர் தமிழ் கற்பிப்பார் என்றுதான் சொல்லுகிறது. நளவெண்பாவில் பல பாடல்களை அவர் சிரித்துச் சிரித்து, ரசித்து ரசித்துக் கற்பித்த காட்சி இன்னும் உயிர் விம்பமாய் என் உள் மனதில் தெரிந்து கொண்டே இருக்கிறது. ஆனால் அதற்கும் அப்பால் பல விடயங்கள் நடந்தன. எங்கள் வகுப்புக்கு அருகில் கிழக்கு மேற்காய்ச் செல்லும் பாதையில் அவர் நடந்து செல்லும் போது, எங்கள் வகுப்பில் விரிவுரையாளர்கள் எவரும் இல்லையாயின் ஐயா உள்ளே நுழைந்து விடுவார். 'உங்களுக்கு இப்ப என்ன பாடம்?' என்று சிறு சிரிப்புடன் கேட்பார். நாங்கள் ஒருநாள் 'மற்ஸ்' என்போம், மறுநாள் 'சமயம்' என்போம், இன்னொரு நாள் 'சைக்கோலொஜி' என்போம், பிறிதொரு நாள் 'எடுகேஷன்' என்று சொல்லிப் பார்ப்போம். எதைச் சொன்னால் இவர் திரும்பிப் போவார் என்ற தேடலில் நிரந்தரமாய்த் தோற்றோம் நாங்கள். நாங்கள் எதைச் சொன்னாலும் அந்தப் பாடம் அவரால் கற்பிக்கப்படும்.

ஆசிரியர் கலாசாலை மட்டத்தில் அந்தத் தரத்தில் எல்லாப்பாடங்களையும் - சிலவேளை அதற்கெனப் போடப்பட்ட விரிவுரையாளரைவிடச் சிறப்பாய் - கற்பிக்கும் ஒரு ஆளுமை என்னை அதிர வைத்தது. இது இவரால் எப்படி முடிகிறது? என்ற கேள்வியும் தேடலும் எனக்குள் எழுந்தன. நான் அவரை நுணுக்கமாய் அவதானிக்கத் தொடங்கினேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக எளிமையான தோற்றம். 'மடிப்புக் கலையாத' அப்படி இப்படி எல்லாம் சொல்ல முடியாத சாதாரண வேட்டி - ஒரு 'கோட்'. மனது போலவே மிகச் சுகந்திரமாய் இருக்கும் தலை முடி, கையில் ஓரிரு புத்தகங்கள் - ஒரு குடை - உள்ளே பார்த்தால் - தலை நிறைய விஷயம். எந்தச் சந்தேகத்தையும் துணிந்து கேட்கலாம். கலா சாலையில் பண்டிதர் ஐயாவைக் காணவில்லை என்றால் நேரே நூலகத்திற்குப் போகலாம். எங்கோ ஒரு மூலையில் ஏதாவது ஒன்றை ஆழ்ந்து படித்தபடி இருப்பார்.

கலாசாலையில் நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு விடயத்தையும் அவதானிப்பார். ஆரோக்கிய விமர்சனம் தருவார். 'எழில் சஞ்சிகையிலை கோகிலாவின்ரை சிறுகதை நல்லாயிருக்கு' என்று ஒருநாள் சொல்வார். விஜயதசமி விழாவில் நாங்கள் ஆடிய நடனத்தைப் பார்த்துவிட்டு மறுநாள் காலையில் 'உங்களுக் கெல்லாம் நேற்றுப் பதினாறு வயது ஆகிட்டுது' என்று சிரித்தார். அந்த தூண்டலும் வழிகாட்டலும் கலாசலையுடன் முற்றுப் பெற்று விடவில்லை.

20.12.1992 இல் மாவைப் பண்டிதர் க.சச்சிதானந்தன் இலக்கியப் பணி என்ற சிறு நூலைத் தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் வெளியிட்டது. இருக்கும் போதே அவர் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற உள் நோக்கம் எமக்குள் இருந்தது.

'பண்டிதர் மாவை சச்சிதானந்தன் அவர்கள் இன்று எம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் பேரறிஞர். 14வது வயதில் கவிதை புனையும் ஆற்றலைப் பெற்றிருந்த இவர், கணிதத் துறையிலும் நிறைந்த வல்லமை உடையவராகித் தம் முன்னோர் வழி 16 வயதில் பஞ்சாங்கக் கணிப்பில் தேர்ந்தவரானார்' என்று இக்கையேடு ஆரம்பிக்கிறது. இடையில் அவரது கலை இலக்கியப் பணிகளை நிரற்படுத்திவிட்டு, 'ஈழத்துப் பேனா மன்னர்கள் எனும் தொடர் கட்டுரையில் கரவைக் கவி கந்தப்பனார் எனும் புனை பெயரில் இரசிகமணி கனகசெந்திநாதன் எழுதிய இவரது ஆக்கங்களைப் பற்றிய விமர்சனக் கட்டுரை ஈழ கேசரியில் 14.08.55 இல் வெளி வந்தது" என்ற செய்தியோடு நிறைவடைகிறது.

எனது நூல் வெளியீடு ஒவ்வொன்றிலும் எனது மதிப்புக்குரிய ஆசிரியர்கள் ஒவ்வொருவரை வணங்கி ஆசி பெறும் வழக்கத்தைக் கடந்த பல வருடங்களாக நான் கொண்டிருந்தேன். அவ்வகையில் பண்டிதர் ஐயாவின் காலில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெறும் பாக்கியம் எனக்கு ஒருநாள் கிடைத்தது. ஆயினும் எந்த விழாவிலும் தனக்கு மாலை அணிவிக்கப்படுவதை அவர் விரும்புவதில்லை.

"எந்த வீட்டில் புத்தகங்கள் இருக்கின்றனவோ அந்த வீட்டில் ஆன்மா இருக்கிறது" என்று பிளேட்டோ சொன்னார். ஆயிரக் கணக்கான நூல்களை வாசித்தும் பல நூல்களை எழுதியும் தன் வாழ்வைக் கோலமிட்டுக் கொண்ட பண்டிதர் ஐயா தனது நூல்கள் ஒவ்வொன்றும் எனக்குக் கிடைப்பதை உறுதி செய்து கொண்டார் என்பது அவர் எனக்குத் தந்த பெரிய மதிப்பு என்று நினைக்கிறேன்.

அவரது படைப்பாக்கத் திறன் பற்றி விரிக்க இது நேரமில்லை. அது ஆய்வாளர்களால் செய்யப்பட வேண்டியது. அவரது கவிதைகளின் உள் ஒலிப்பு மிகச் சிறப்பானது. வெறும் சொல்லாய்க் கிடக்கும் கவிவரிகள் அவர் பேனா தொட்டதும் உயிர்த்தெழுந்து நடமாடுவது எப்படி என்று பேராசிரியர்கள் எடுத்துச் சொல்லட்டும். ஈழத்தின் முன்னோடிச் சிறுகதை ஆசிரியர்களில் ஒருவராயும் அவர் வைத்தெண்ணப்படத் தக்கவர் என்ற கருத்து வலிமை பெற்றுவருவது நாம் அறிந்ததே.

அவரது ஆன்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுவது தவிரச் செய்யத் தக்கது என்ன?

(4.5.2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயசரிதையின் ஒரு பகுதி

# அப்பாவின் குடும்ப வாழ்வு

1933ம் ஆண்டு தைமாதம் எனது பெற்றோர் திருமணம் செய்து கொண்டனர். அப்போது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் பதினெட்டு வயது மட்டுமே என்பதைக் கவனிக்க வேண்டும்.

அம்மாவின் பெயர் செல்லமுத்து, அவரும் விழிசிட்டிச் சிவஞான வித்தியாசாலையிலேயே படித்தார். திறமைசாலி ஆயினும் ஆரம்பக் கல்வியுடன் தனது படிப்பை நிறுத்திக் கொண்டு தம்பி, தங்கையரைப் பார்க்கும் பொறுப்பை ஏற்க வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டவர்.

அம்மாவின் தந்தையார் தாமர் - விசுவரின் மகனாகிய சுப்பிரமணியம், விவசாயம் செய்தவர். கடுமையான உழைப்பாளி என்று சொல்ல முடியாது. அம்மாவின் தாயார் பண்டிதர் கதிரிப்பிள்ளை அவர்களின் ஒரு சகோதரியாகிய சின்னாச்சிப்பிள்ளை. அம்மாதான் அக்குடும்பத்தின் மூத்த மகள். குடும்பம் வறுமைக் கோட்டின் கீழேயே வாழ்ந்து வந்தது. அம்மாவின் கீழ் பிறந்த ஐந்து ஆண்பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையும் காலத்துக்குக் காலம் நோய் வாய்ப்பட்டு இறந்து போயினர். அம்மாவின் தாயார் கடும் உழைப்பாளி. பகல் வேளைகளில் தோட்ட வேலைகளுக்குப் போய்விடுவார். அதனால் அம்மாவே இளைய சகோதரர்களைப் பார்க்க நேர்ந்தது. கேள்வி முறையால் பெற்ற கல்வி அம்மாவிடம் நிறைய இருந்தது.

அம்மாவுக்கு முறை மாப்பிள்ளையாக இருந்த திரு.க.சிற்றம்பலம் அவர்களைத் திருமணம் செய்து வைக்க அம்மாவின் தந்தையார் எண்ணியிருந்தார். 1932ம் ஆண்டின் பிற்பகுதியில், தான் அந்த விவாகம் செய்ய மாட்டேன் என்று திரு.சிற்றம்பலம் அவர்கள் கதை ஒன்றை ஊரில் பரப்பிவிட்டாராம். அதனால் அம்மாவின் தந்தையார் மனம் சோர்ந்து போனார். அது பற்றித் தனது ஒன்றுவிட்ட சகோதரரும் ஊரில் செல்வாக்குடையவருமாகிய திரு.சி.பொன்னம்பலம் என்பவரிடம் முறையிட்டுக் கவலைப்பட்டுள்ளார். அப்போது அப்பா கொல்லங்கலட்டிச் சைவ வித்தியாசாலையில் ஆசிரியராய் இருந்தார். திரு.சி.பொன்னம்பலம் அவர்களின் கவனம் பெற்றோர் இன்றி இருந்த அப்பாவின் மேல் திரும்பியது. அப்பாவின் தாய் மாமனாகிய பண்டிதர்.வே.பொன்னம்பலம் அவர்களுடன் பேசினார். "சாதிக்காரப் பெண் என அவருக்கும், உத்தியோக மாப்பிள்ளை என இவருக்கும் கூறி உடன்பட வைத்துவிட்டனர்" என்று அம்மா பிற்காலத்தில் தமது திருமணம் பற்றிக் கூறுவதுண்டு. வெளித்தோற்ற அழகு, கல்வி, ஆளுமை என்று அனைத்திலுமே அப்பா அம்மாவை விட மிக உயரத்தில் இருந்தார். அம்மா கொடுத்து வைத்திருக்க வேண்டும். நீண்டகாலம் பெற்றோரின் அன்பும் கவனிப்பும் இன்றி வாழ்ந்த அப்பாவுக்குப் போதிய அன்பும் கவனிப்பும் அம்மாவிடமிருந்து கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் அப்பாவின் உறவினருக்கும் அம்மாவின் உறவினருக்கும் இடையில் நல்ல ஒற்றுமை நிலவியதாகக் கூற முடியாது. திருமணத்திற்கான "பொன்னுருக்குதல்" அப்பா வீட்டில் நடைபெற்ற போது அம்மாவின் தகப்பனார் அந்நிகழ்வில் கலந்து கொண்டு சாப்பிட்டபோதும் அம்மாவின் தாயாரைச் சாப்பிட அனுமதிக்க வில்லையாம். இது அம்மாவின் தகப்பனாருடைய குறுகிய மனப்பாங்கையே காட்டுகிறது. இதனால் ஒரு சிறு மனக் கசப்பு ஆரம்பமாகிவிட்டது.

திருமணம் முடிந்த பின்னர் பொருளாதாரப் பிரச்சினைகளும் ஏற்பட்டனவாம். அப்பா தனது மனச்சாட்சிப்படி தன்னைக் கவனித்த பேரனாருக்கு மாதவீதம் ஒரு தொகைப்பணம் கொடுத்து வந்தார். தாய் மாமனாருக்கு அப்பாவின் தாயாரின் சீதனக் காணியாக இருந்த நாலு பரப்பையும் கூட எழுதிக் கொடுத்துவிட்டார். இது அவரது நன்றியுணர்வையும் விரிந்த மனப்பாங்கையும் காட்டுவன. ஆயினும் அவர்கள் அப்பாவுக்கு நெருக்கீடு கொடுத்தும் பணம் பெற்றுக் கொள்கின்றனர் என்ற கருத்து அம்மாவுக்கு இருந்தது. இதனால் அம்மா அவர்களுடன் நல்லுறவு கொள்ளவில்லை.

பொருளாதாரம் தொடர்பாக அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இருவேறு கருத்துக்களே எப்போதும் இருந்தன. அப்பாவிடம் மது, சிகரெட், புகையிலை, பாக்கு என்று எந்தப் பொருத்தமற்ற பழக்கமும் இருந்ததில்லை. ஆயினும் அவர் சம்பளம் முழுவதையும் செலவழிக்கும் இயல்புள்ளவராகவே இருந்தார். கேட்கிற உறவினர்களுக்குக் கொடுத்து விடுவார். கோயிலுக்குக் கொடுப்பார். பொது விடயங்களுக்குத் தாராளமாகக் கொடுப்பார். அவரிடம் செல்வம் இருந்ததில்லை. ஆனால் ஒரு செல்வப் பிரக்ஞை இருந்தது. வீட்டு நிர்வாகத் திற்கான பணத்தையும் முழுமையாக அம்மாவிடம் கொடுத்து விட்டுப் பின்னர் கடைக்குச் செல்லும் போது அம்மாவிடம் பணம் கேட்டு வாங்கிச் செல்வார். அம்மாவுக்குப் பணம் சேமிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. அது ஒரு போதுமே பெரிதாக நிறைவேறவில்லை. அப்பா வீடு கட்டும் போதும் கடன்பட்டே கட்டிப் பின்னர் அதைச் சிறுகச் சிறுகக் கொடுத்து வந்தார். 1954 இல் 10,000/=க்கு அந்த ஐந்து அறை வீடு கட்டப்பட்டது. அதில் முதலாவது அறை சுவாமி அறையாகவும் அப்பாவின் நூலக அறையாகவும் இருந்தது. இரண்டாவது அறை சின்னம்மாவிற்கும் பிற்காலத்தில் அவவின் குடும்பத்திற்குமாக இருந்தது. மூன்றாவது அறை இத்தாவிற்கும் அதே நேரம் சேமிப்பறையாகவும் பாவிக்கப்பட்டது. இத்தாவின் கட்டில் அந்த அறையிலேயே இருந்தது. பெண்கள் மாத விலக்கு நேரங்களில் தங்கும் அறையாகவும் இந்த மூன்றாவது அறை பாவிக்கப்பட்டது. நான்காவது அறை அம்மாவின் அறை, அதே நேரம் சமையலறை. அம்மா பெரும்பாலான நேரம் அந்த அறையிலேயே காணப்படுவார். ஐந்தாவது அறை சாப்பாட்டு அறை. "வருவிருந்து ஓம்புதல்" அந்த அறையில் நடக்கும்.

திருமணமாகும் வரை எனக் கென்று எந்த அறையும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே நான் வீடு முழுவதும் எனது பொருள்களை வைத்துக் கொண்டு எல்லா இடமும் சுதந்திரமாகப் போய்வருவேன். ஐந்தாம் அறைக்கு முன்னே இருந்த விறாந்தையில் எனது படிப்பு மேசை இருந்தது. உடுப்புகள் முதலியவை அப்பாவின் அறையில் இருந்த அலுமாரியில் இருந்தன. உடுப்பு மாற்றுமிடம் இத்தாவின் அறையாக இருக்கும். படுக்கும் கட்டில் இரண்டாம் அறைக்கு முன்புறம் இருந்த விறாந்தையில் இருந்தது.

எனது திருமணத்திற்குச் சற்று முன்னதாக இந்த வீடு இன்னொரு அறையும் ஹோலுமாக விஸ்தரிக்கப்பட்டது. எனது திருமணத்திற்குத் தேவைப்பட்ட சீதனத்தையும் அப்பா கடன்பட்டே கொடுத்தார். பின்னர் சிறுகச் சிறுக அக்கடனை அடைத்தார்.

எனது பெற்றோர் 1933ம் ஆண்டு திருமணம் செய்து கொண்ட போதும் மிக நீண்ட காலத்தின் பின்னரே 'மகப்பேறு' கிடைத்தது. அவ்விடயம் தொடர்பாக அப்பா எழுதி வைத்துள்ள ஒரு குறிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கூறுகிறது. "1933ம் ஆண்டு திருமணம் நடைபெற்றதாயினும் நான்கு, ஐந்து ஆண்டுகள் சென்றும் புத்திரோற்பத்திற்குரிய அடையாளம் எதுவும் காணப்படவில்லை. அதனால் மனம் தளர்ந்த நாம் கீரிமலை சிவன் கோயிலுக்குச் சென்று அக்காலத்தில் அங்கே பிரதம குருவாய் இருந்த பிரமஸ்ரீ.தி.குமாரசாமிக் குருக்களிடம் எமது மனத்துன்பத்தைக் கூறினோம்." பூக்கட்டி வைத்துப் பார்ப்போமா?" என்று கேட்டோம். அவர், "இறை அருளில் சந்தேகம் கொள்ள வேண்டாம். மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமைகளில் கோயிலுக்கு வந்து பூஜை செய்வித்துக் கும்பிட்டுப் போங்கள். பெருமான் அருள் செய்வார்" எனக் கூறி, மனைவிக்கு ஒரு அட்சரக் கூடும் பூஜையில் வைத்துக் கட்டி விட்டார். அவ்வாறே தொடர்ந்து முதல் ஞாயிற்றுக்கிழமைப் பூஜை செய்வித்து வந்தோம். 1950ம் ஆண்டு ஒரே ஒரு மகளைப் பெருமான் கிடைக்கச் செய்தார்."

அப்பாவோ அம்மாவோ எந்த வைத்திய நிபுணரையும் பார்க்கவில்லை. ஆயினும் பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக அந்த முதல் ஞாயிற்றுக்கிழமைப் பூஜையை மிகுந்த நம்பிக்கையுடன் செய்து வந்தனர். நான் பிறந்த பிறகும் அது தொடர்ந்தது. நானும் அப் பூஜைக்குக் கட்டாயம் செல்வேன். கீரிமலை, மக்கள் செல்ல முடியாத இடமாக மாறும்வரை அந்த முதல் ஞாயிற்றுக்கிழமையும் பூஜையும் தொடரவே செய்தன. எனக்கு இரண்டு, மூன்று, நாலு வயதாக இருந்த காலங்களில் நான் இடையிடை நடந்து செல்வதும் பின்னர், "கால் உழையுது அப்பா" என்று கூறி அவரைத் தூக்கிச் செல்ல வைப்பதும் நல்ல நினைவாக உள்ளன. மாரி காலத்தில் "நிறையப்புலம்" "கொப்பிலாவடை" போன்ற சுண்ணாம்புக் கற்பாறை கொண்ட காணிகளை ஊடறுத்துக் கீரிமலைக்கு நடந்து செல்லும் போது, வீட்டிலிருந்து கோயில் வரை வழியில் வரும் 'கம்பளிப் பூச்சிகளை' எண்ணிக் கொண்டு வரும்படி அப்பா கூறுவார். நல்ல மிளகாய்ப்பழச் சிவப்பு நிறத்தில் பட்டுப் போன்ற மயிருடன் ஓடித்திரியும் பூச்சி தரும் மகிழ்வுடன் எண்ணத் தொடங்கிவிடுவேன். நான் "இருபத்து மூன்று" என்று சத்தமாக எண்ணும்போது அப்பா சொல்லுவார், "அந்தப்பக்கம் கார்த்திகைப்பூச் செடிக்கு முன்னாலை நாலு பூச்சி போகுது. அப்ப எத்தனை?" என்று. நான் "இருபத்தேழு" என்பேன். இப்படியாகக் கணக்குப் பாடம் மூன்று, நாலு வயதில் மிகச் சந்தோஷமாக, மிகச் சுதந்திரமாக நடக்கும். அதைத் தவிர அந்த வறள் நிலக் காட்டுப் பகுதியில் உள்ள ஒவ்வொரு தாவரங்களின் பெயர்களையும் அப்பா கூறிக்கொண்டு வருவார்." இது நாகதாளி, அதுதான் சதுரக்கள்ளி, ஒமோம் அது கொடிக்கள்ளி, இது பிள்ளைக் கற்றாளை, முறித்தால் சளியம் மாதிரி நீர் வரும்" என்று தாவரவியல் பாடமும் தொடரும். இடை நேரங்களில் அப்பா பாடிக் கொண்டே நடப்பார். அது தேவார திருவாசகமாகவோ திருப்புகழாகவோ இருக்கும். பின்னாளில் சமய பாடப் புத்தகத்தில் இருந்த எந்தத் தேவாரத்தையும் நான் கஷ்டப்பட்டு மனனம் செய்ததில்லை. ஏனெனில் அவை எல்லாம் எனக்கு முன்னரே பாடமான விடயங்களாக இருந்தன. நாங்கள் நடந்து போகும் வழியில் சூத்திரக் கிணறு ஒன்று வரும். அங்கு எப்படி மாடுகள் சுற்றி நடக்கும் போது நீர் இறைக்கப்படுகிறது என்பதையும் ஒருகதை போல அப்பா கூறுவார். இந்த ஞாயிற்றுக் கிழமைப் பூஜை எனக்குக் கற்பித்த விடயங்கள் ஏராளம்.

அம்மாவை முதலில் திருமணம் செய்ய மறுத்த மைத்துனர் திரு.க.சிற்றம்பலம் அவர்கள் பின்னர் அம்மாவின் தங்கையை மணம் செய்து கொண்டார். எங்கள் வளவு இறைப்பு நேரங்களில் எல்லாம் இறைப்புத் தோழராக ஆசையப்பு (திரு.க.சிற்றம்பலம்)வே அமைந்தார். வீட்டிலே வேலி அடைப்பது, வளவுக்கு இறைப்பது, மாங்காய், பலாக்காய் பிடுங்குவது, கிணறு வற்ற இறைப்பது, வீடு கூட்டுவது, முற்றம் கூட்டுவது, பாத்திகட்டுவது போன்ற வேலைகளை அப்பா விருப்பத்துடன் செய்வார். வேலி அடைப்பதற்கு உதவி தேவைப்பட்டால் சின்னவனைக் கூப்பிடுவார். சில சமயம் ஆசையப்புவும் ஒத்தாசையாக நின்று வேலை செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் மூன்றாம் வகுப்புப் படித்த போது விவேகானந்த சபை நடத்திய திருக்குறள் போட்டிக்கு அப்பாவின் பாடசாலையில் இருந்து பல மாணவர்கள் தோற்றினர். அப்பா எனக்கும் ஒரு விண்ணப்பம் போட்டார். அதன் பின் ஒவ்வொரு நாளும் அப்பா கிணற்றில் நீர் அள்ளிக் குளிக்கும் நேரத்தில் என்னைக் கூப்பிட்டுத் திருக்குறள் சொல்லித் தருவார். உச்சரிப்பு மிகத் திருத்தமாக இருக்கும். அதை நான் மனனம் செய்து அடுத்த நாள் ஒப்புவிக்க வேண்டும். இவ்வாறாக ஏறக்குறைய இருபது அதிகாரங்கள் நான் மனனம் செய்து விட்டேன். ஆரம்பப் பிரிவில் தோற்றி மிகக்குறைந்த வயதில் அதிகூடிய குறள் மனனம் செய்தமைக்காக எனக்குத் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது. அது தொடர்பாக எனது புகைப்படம் வீரகேசரி பத்திரிகையில் வெளியானது. அப்பா அந்தப் பேப்பரை வாங்கி, வந்து, "இங்கே பார் உனது படம் வந்திருக்கு" என்று காட்டியபோது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தமை நினைவிருக்கிறது. சிறு வயதிலேயே வெற்றிகளைக் காட்டிச் சுய கணிப்பை உயர்த்திவிட்ட அந்தத் திறமையை நினைத்துப் பார்க்கிறேன். அவருக்கு மகளாகப் பிறந்ததற்கு நான் என்ன புண்ணியம் செய்தேனோ என்று வியந்து போகிறேன்.

வீட்டிலே படிப்பது விளையாடுவது தொடர்பாக எனக்குப்பூரண சுதந்திரம் இருந்தது. நான் படிப்பது தொடர்பாக ஒரு அறிவுறுத்தலும் கூட அப்பா வழங்கியது கிடையாது. நான் விரும்பினால் படிப்பேன் அல்லது விளையாடுவேன். நண்பர் குழாம் வந்தால் மாபிள் அடிப்போம். மாங்கொட்டை போடுவோம். வார் விளையாடுவோம். றைற் ஓ றோங் விளையாடுவோம். கிளித்தட்டு மறிப்போம். ஒழித்துப் பிடிப்போம். கொக்கான் வெட்டுவோம். கால் பந்தும் விளையாடுவோம். அதை விடத் தேர்த்திருவிழா, விஜயதசமி வாழை வெட்டு போன்றன எல்லாம் நடிபாக மேற்று விளையாடப்படும். தோழர்கள் யாரும் இல்லாவிட்டால் நான் எனது கற்பனையில் தனியாக இருந்து பல விளையாட்டுகள் விளையாடுவேன். அவை பெரும்பாலும் நானே உருவாக்கிய விளையாட்டுகளாக இருக்கும். அப்பா அவை எதிலுமே குறைப்படமாட்டார். பாடசாலைப் பெறுபேற்று அறிக்கைக்குக் கையெழுத்திடும் போது கூடக்குறை ஒன்றும் சொல்லமாட்டார். அப்பா இறக்கும் போது எனக்கு நாற்பத்தொன்பது வயது. அந்த நாற்பத்தொன்பது வருடங்களில் ஒரு நாள் கூட அப்பா என்னைத் தண்டித்தது கிடையாது. வாயால் ஏசியது கூடக்கிடையாது. சிறு வயதில் - பூப்படைய முதல் வளவில் உள்ள தென்னை, கொய்யா, மா மரங்களில் ஏறி உட்கார்ந்திருப்பேன். அப்போது கூட அப்பா "கவனம் விழுந்திடக் கூடாது" என்றுதான் சொல்லிவிட்டுப் போவார். அம்மா வந்தால் ஏச்சு விழும். "பொம்பிளைப் பிள்ளை விளையாடுற விளையாட்டைப்பார்" என்று சத்தம் போடுவா. அப்பாவுக்கு யாரையும் புண்படுத்தத் தெரியாது. கிராமத்தில் எல்லாரும் சொல்வார்கள், "வாத்தியார் நடந்தால் நடந்த இடத்துப் புல்லும் சாகாது' என்று.

அப்பா ஏதாவது அலுவலாகச் சுன்னாகம் போனால் திருமகள் புத்தக சாலையில் இருந்து எனக்குக் கதைப்புத்தகம் வாங்கி வருவார். அப்படி அவர் முதலில் வாங்கித் தந்தது கண்ணகி கதை. அப்போது நான் மூன்றாம் வகுப்பாக இருக்க வேண்டும். அதை மூன்று நாலு நாளில் வாசித்து முடித்துவிட்டேன். "அப்பா வேறை கதைப்புத்தகம் வாங்கித் தாங்கோ" என்று கேட்டேன் "சுன்னாகப் போனால் வாங்கி வருவேன்" என்பார். சொன்னால் சொன்னதைக் கட்டாயம் செய்வார். "மறந்து போய் விட்டேன்" "காசு இல்லை" என்று சாட்டெல்லாம் சொல்ல மாட்டார். அவர் வாழ்ந்த இறுதி வருடங்களில் கூட எனக்கு எங்காவது 'பேச்சு' இருந்தால் நான் வேலைக்குப் போகும் போது, "அப்பா எனக்கு நாளைக்கு இந்த இடத்தில் இந்தத் தலைப்பில் பேச வேண்டி இருக்கிறது' என்று சொல்லி விட்டுப் போனால், மாலையில் நான் வரும் போது அந்தப் பேச்சுக்கு உதவக் கூடிய நூல்கள் தேடி எடுத்துப் பொருத்தமான பக்கங்களில் "புக்மாக்" வைத்து என்னிடம் தருவார். இன்றும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை யாராவது பேசுவதற்கு அழைக்கின்ற சந்தர்ப்பங்களில் எல்லாம், "ஐயோ அப்பா இருந்திருந்தால்....!" என்று நான் ஏங்கத்தான் செய்கிறேன். இன்னொருவரால் இட்டு நிரப்பக் கூடிய பாத்திரமாக அவர் வாழவில்லையே!

1980களின் ஆரம்பமாக இருக்கும் என்று நினைக்கிறேன். பாடசாலையில், பல்கலைக்கழக மேடையில், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மேடையில் என்று பேசிய பல அனுபவங்கள் இருந்தாலும், பரந்துபட்ட ஒரு கூட்டத்தின் முன் பேசுவதற்கு எனக்கு ஒரு அழைப்பு வருகிறது. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மண்டபம். திருவிழாக் காலத்தில் பேசப்படும் சமயச் சொற்பொழிவுக்கு நான் அழைக்கப்படுகிறேன். அப்பா வழக்கம் போலப் பல கருத்துகள் எடுத்துத் தந்தார். பல பாடல்களுக்கு விளக்கவுரை சொன்னார். நிறைவாக அவர் சொன்ன வார்த்தை இன்றும் என் காதில் ஒலிக்கிறது. 'பேச்சை ஆயத்தம் செய்யும் போது சமய விஷயங்கள் எல்லாம் கரைகண்ட முதியோர்கள் சபையில் இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு நன்கு ஆயத்தம் செய்ய வேண்டும். ஒலி வாங்கிக்கு முன்னே எழுந்து நின்று விட்டால் எனக்கு முன்னே இருப்பவர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று நினைத்துக் கொண்டு பொழிந்து தள்ளிவிட வேண்டும்.' அந்த ஆலோசனையை இன்று வரை நான் கடைப்பிடித்து வருகிறேன்.

க.பொ.த உ/த வகுப்பில் நான் மகாஜனவில் கற்கத் தொடங்கிய காலத்தில் தான் திரு.கதிரேசர்பிள்ளை அவர்கள் அம்பையின் வஞ்சினம் நாடகத்தில் நடிக்க என்னை அழைத்தார். மகாஜனா ஓர் கலவன் பாடசாலை. அக்காலத்தில் பெண்கள் நாடகத்தில் நடிப்பது பற்றிச் சமூகத்தில் நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. அதிலும் கட்டிளமைப் பருவத்தில் ஆண்பிள்ளைகளோடு நடிப்பது பற்றி இன்னும் அதிக விமர்சனங்கள் வரலாம். அத்தகைய ஒரு முயற்சியில் முதன் முதலில் துணிந்து இறங்கிய பாடசாலைகளில் மகாஜனக் கல்லூரி குறிப்பிடத்தக்கது. கதிரேசர்பிள்ளை என்னை இது பற்றி அப்பாவிடம் கூறி அனுமதி பெற்று வருமாறு கூறியிருந்தார். நான் அன்று மாலையே அப்பாவிடம் கேட்டேன். எனக்கு நடிப்பதற்கு நல்ல விருப்பம். அப்பா ஒரு கேள்வி மட்டும் கேட்டார், "இந்த நாடகத்திற்குப் பொறுப்பாக இருக்கப் போகிற ஆசிரியர் யார்?" என்பதே அக்கேள்வி. "கதிரேசர்பிள்ளை" என்று நான் சொன்னேன். "நீ நடிக்கலாம்" என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிட்டார். அவர் மனிதர்களை நன்கு அறிந்து அளந்து வைத்திருந்தார். நம்பக்கூடிய மனிதர்களை முழுமையாக நம்பினார் என்பது அவதானிக் கத்தக்க விடயம். அப்பாவின் கணிப்புப் பிழைக்க வில்லை. நான் மகாஜனாவில் பல நாடகங்கள் நடித்தேன். எப்போதுமே எந்தப் பிரச்சினையும் அதனால் வரவில்லை.

க.பொ.த உ/த பரீட்சைக்கு நான் முதல் முறை தோற்றிய போது மருத்துவத் துறைக்குத் தெரிவு செய்யப்படுவேன் என்றே எல்லோரும் எதிர் பார்த்தனர். ஆயினும் விலங்கியல் செய்முறைப் பரீட்சையில் நான் சித்தியடையவில்லை. அதனால் விஞ்ஞானமாணி கற்பதற்கே தெரிவானேன். ஆயினும் என்னை இரண்டாம் முறை பரீட்சைக்குத் தோற்றும்படியே ஆசிரியர்கள் ஆலோசனை கூறினர். குறிப்பாக - பார்மாஸ்டர் - மிக உறுதியாகக் கூறிவிட்டார். ஆயினும் வீட்டில் அப்பா சொன்னார், 'பொம்பிளைப் பிள்ளைக்கு ஆசிரியர் வேலை நல்லது. மருத்துவத் தொழில் கஷ்டம். கிடைப்பதற்குப் போவதே நல்லது" அப்போது என்னால் அந்த ஆலோசனையை ஏற்க முடியவில்லை. வீட்டில் அம்மா, சின்னம்மா ஆகியோரும் நான் மீண்டும் பரீட்சை எடுக்க வேண்டும் என்றே விரும்பினர். பின்னர் மருத்துவக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டு அங்கு படித்து, நானாகவே அதைவிட்டு விட்டு ஆசிரியர் தொழிலுக்கு வந்து அதிபராய், பிரதிக் கல்விப் பணிப்பாளராய் உயர்ந்து இளைப்பாறிவிட்ட பிறகு இப்போது பின்னோக்கிப் பார்க்கிறேன். அப்பா அன்று சொன்னது எவ்வளவு சரியான,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமான வார்த்தை! அது அப்போது புரியவில்லையே!

எமது கூட்டுக் குடும்பத்தில் எல்லோருடைய பிறந்த தினங்களையும் அப்பா எழுதி வைத்திருப்பார். அன்று அவர்களுக்கு ஒரு பிஸ்கட் பக்கட் அல்லது சொக்கலேற் போன்ற சிறு பரிசுடன் வாழ்த்துப்பாடல் ஒன்று கட்டாயம் கிடைக்கும். 1997ம் ஆண்டு அப்பா காலமாவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன் எனது பிறந்த தினத்தன்று தரப்பட்ட பாடல் இப்படி இருந்தது.

அன்புக்குரிய அருமை மகளே
இன்று போல் என்றும் இன்பமாய் வாழ்க
நல்லன செய்து நன்மைகள் பெறுக
அல்லவை ஒழிக அறநெறி நிற்க
அரனடி தன்னை அனுதினம் நினைக
ஏழைகட்குதவுக இன்சொற் பகருக
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை
இறைவன் எல்லாம் இனிதே யருளுவான்
அறிஞர்கள் தம்மை அன்புடன் போற்றுக
தமிழைப் போற்றுக தாயரைப் போற்றுக
அமிழ்தினு மினிய தமிழென நினைக
பாலர்களிடத்துப் பரமனைக் காண்க
கடமையைக் கண்ணும் கருத்துமாய்ப் புரிக
எல்லா மினிதே நிகழ
வல்லோன் பாதம் வழுத்துகின்றேனே

இங்ஙனம்
அத்தன்
(விழிசைச் சிவம்)

அப்பா எனக்குக் கற்பித்ததை விட எனது மகனுக்குக் கற்பித்தது அதிகம். அவன் மூன்று நாலு வயதுச் சிறு பிள்ளையாக இருக்கும் போது அப்பா கிடுகு பின்னும் வேளைகளில் தனக்குப் பக்கத்தில் ஒரு பலகை போட்டு அவனை இருத்தி வைத்துக் கொண்டு கதை சொல்லத் தொடங்குவார். மகனுக்கும் கதை கேட்பதில் மிகுந்த ஆர்வம். அந்த வயதிலேயே அவனுக்கு இராமாயணம், பாரதம், பெரியபுராணம் கந்த புராணம் என்று எல்லாக் கதைகளும் இடையிடை பாடல்களுடன் சொல்லப்பட்டு விட்டன.

முன்பள்ளிக்கும் அநேகமாக அப்பாவே அவனை அழைத்துச் சென்று முடிந்த பின்னர் கூட்டி வருவார். அவன் மகாஜனக் கல்லூரியில் சேர்ந்த பிறகும் மூன்றாம் வகுப்பு வரை அவர்களுக்கு வகுப்பு நேரத்தோடு முடிந்துவிடும் என்பதால் அப்பா வந்து அழைத்துப் போவார். மகாஜனாவில் இருந்து வீடு வரை இருவரும் நடந்து நடந்து வரும் போது கற்றல் தாராளமாகவே நடக்கும். அவனது தமிழ் சமய அறிவுக்கான முதல் வேராக அப்பாவே இருந்தார்.

நான் ஆசிரியராக முதல் நியமனம் பெற்றபோது அப்பாவே என்னைக் கூட்டிக் கொண்டு பொலிகண்டி. இ.த.க.பாடசாலைக்குச் சென்றார். அங்கு அதிபராக இருந்த திரு.சேவற் கொடியோன் அவர்களைச் சந்தித்து என்னை அறிமுகம் செய்து கடமை ஏற்கச் செய்தார். அப்பாடசாலைக்குச் செல்வதற்கு நான் காலை 6.25க்கு 795 பஸ் எடுத்துக் கீரிமலைக்குப் போய் அங்கிருந்து 6.45க்குப் புறப்படும் 763 பஸ் எடுக்க வேண்டும். அது 8.00மணியளவில் பொலிகண்டிக்குச் செல்லும். பஸ் தரிப்பு நிலையத்தில் இருந்து பத்து நிமிடம் வரை நடந்து பாடசாலை செல்ல வேண்டும். மாலையில் வீடு வந்து சேர 4.30க்கு மேலாகும். இவ்வாறு நான் சிரமப்படுவதைப் பார்த்து அப்போது கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலய அதிபராக இருந்த திரு.வ.கந்தையா அவர்களின் உதவியோடு எனக்குக் கீரிமலை நகுலேஸ்வர ம.விக்கு இடமாற்றம் வர உதவினார். ஏறத்தாழ இரண்டு வருடங்களில் நான் கீரிமலைக்கு இடமாற்றம் பெற்று விட்டேன்.

எங்கள் குடும்பம் கூட்டுக் குடும்பமாக இருந்தமை பற்றி நான் முன்னர் குறிப்பிட்டுள்ளேன். 1970களின் ஆரம்பத்தில் சின்னம்மாவும் சித்தப்பாவும் கண்டியில் வேலை செய்தனர். அப்போது சிறுபிள்ளையாக இருந்த தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனார்த்தனனைக் கவனித்துக் கொள்வதற்காக அப்பா சிறிது காலம் கண்டியில் வசித்தார். பின்னர் அவர்களின் மகளாகிய கௌசீதகி சிறு பிள்ளையாக இருந்தபோது அவள் எங்களுடனேயே வளர்ந்தாள். பெற்றோர் சிறிது காலம் கண்டியில் வேலை செய்தனர். அக்காலப்பகுதியில் பாப்பாவுக்கு உணவூட்டுவதும், அவளை ஊஞ்சலில் வைத்து ஆட்டி நித்திரையாக்குவதும் கூட அப்பா செய்வார்.

எப்போதுமே அப்பாவுக்கு எளிமையான இனிமையான உணவுகளே விருப்பமானவை. இடியப்பமும் சொதியும் என்றால் அவருக்குப் பிடிக்கும். பாடசாலைக் காலங்களில் எல்லாம் இடியப்பம், மிளகாய் குறைந்த சம்பல், மோர், வாழைப்பழம் ஆகியவற்றையே மதிய உணவாக அம்மா கொடுத்து விடுவார்.

பிஸ்கற், கல்பணிஸ், பொழிச்சி ஆகியவற்றை விருப்புடன் வாங்கி ஒரு ரின்னில் போட்டி மூடி வைத்துக் கொள்வார். இடையிடை அவற்றைச் சிறு குழந்தைகளுக்கு விநியோகித்துத் தானும் சாப்பிடுவார். வீட்டில் நிற்கும் நாய்க்கும் அது கிடைக்கும்.

வீட்டுப் பிராணிகள் வளர்ப்பது அப்பாவுக்குப் பிடிக்கும். விழிசிட்டியில் இருக்கும் வரை பசு, ஆடு போன்றவை வீட்டில் இருந்தன. அவற்றுக்குத் தேவையான புல்பிடுங்குவது, குழை வெட்டுவது போன்றவற்றையும் அப்பா செய்வார். பசுவின் பாலில் இருந்து வீட்டுக்குத் தேவையான தயிர், மோர், நெய் எல்லாம் கிடைக்கும். விழிசிட்டியை விட்டுக் கிளம்பிய பின் நாய் மட்டுமே வளர்க்க முடிந்தது. கோழி வளர்ப்பு அப்பாவுக்குப் பிடிக்காது. "அது கண்ட இடமெல்லாம் எச்சம் போடும்" என்று சொல்வார்.

அப்பா தன் இளமைக் காலத்தில் - திருமணம் செய்த பின் - இசை நாடகங்களிலும் நடித்துள்ளார். சத்தியவான் சாவித்திரி நாடகத்தில் தான் முன் சாவித்திரியாக நடித்த கதையை அடிக்கடி கூறுவார். பெரும்பாலான இசை நாடகப் பிரதிகள் அவரிடம் இருந்தன. இவ்வாறு எமது குடும்பத்தில் அவரது வகி பங்கு சொல்லி முடியாத ஒன்றாகவே அமைந்தது.

(2009)

****************************************

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நவசக்தி நிகழ்ச்சியில் பின்வரும் தலைப்புகளில் செல்வி.சற்சொரூபவதி நாதனுடன் கலந்துரையாடல்.

(2008, 2009, 2010)

1. ஒற்றைப் பெற்றோர் குடும்பம்
2. கட்டிளமைப்பருவம்
3. வெகுமதி
4. அரங்கு சிகிச்சையாதல்
5. நித்திரை
6. இழப்புத்துயர்
7. கோபம்
8. நெருக்கீடுகள்
9. துன்பங்களை வெல்லுதல்
10. உன்னத ஆளுமை
11. அக அமைதி
12. தன்னம்பிக்கை
13. நடத்தை மாற்றம்
14. இலக்கு நிர்ணயம்
15. முன்வைத்தல் திறன்
16. கூட்டத்தை முகாமை செய்தல்
17. முதுமையை எதிர் கொள்ளல்
18. வாழ்வின் வெற்றி
19. சிறுவர்களின் உள ஆரோக்கியம்
20. திருமண உறவு
21. விழிப்புல வலுவிழந்தோருக்கு உதவி
22. மனச் சோர்வு
23. தலைமைத்துவம்
24. மத்திய வயதினரின் பிரச்சினைகள்
25. பதற்றம்
26. மனவடு

****************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயசரிதையின் மறு பகுதி

# அம்மாவின் சீரமியம்

நான் ஒரு சீரமியர், அதற்கென்று ஒரு வருடம் சாந்திகத்தில் பயின்று பட்டம் பெற்றேன். என்னிடம் பலர் தங்கள் பிரச்சினைகளைக் கூற வருவதுண்டு.

அம்மாவுக்குச் 'சீரமியம்' என்ற சொல்லே தெரியாது. அவ உளவியல் நூல்கள் எதையும் நிச்சயமாக வாசித்ததில்லை. ஆனால் எங்கள் கிராமத்தின் பெண்கள் பலரும் சில சமயங்களில் ஆண்களும் கூடத் தங்கள் பிரச்சினைகளைக் கொண்டு அம்மாவிடம் வருவர். அம்மா அவர்களை உள்ளே அழைத்து வரமாட்டா. எங்கள் விழிசிட்டி வீட்டில் தெற்குப் புறமாக ஒரு அகலமான படிக்கட்டு - வீட்டு நீளத்திற்குப் - போகும். அந்தப் படிக்கட்டில் அம்மா அவர்களைத் தனிமையாக அமர்த்தித் தானும் அமர்ந்து கொள்வா. அம்மாவுடன் கதைத்து முடிந்து எழும்பும் போது மனதெல்லாம் சாரலடித்தது மாதிரி ஒரு தெளிவு அவர்கள் முகத்தில் தோன்றுவதை நான் அவதானித்துள்ளேன். அம்மா நிச்சயமாக என்னை விடச் சிறந்த சீரமியர் என்றே இப்போதும் நான் கருதுகிறேன். அந்தப் பண்பு அவவின் ஆளுமையில் மிக இயல்பான ஒரு கூறாக இருந்தது.

கிழக்கு மாமா அநேகமாக ஒவ்வொரு நாள் மாலையிலும் வருவார். மகள் தேவியுடன் தனக்கு ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகளையும் விஸ்தாரமாகக் கூறுவார். அம்மா எல்லாவற்றையும் "......ஓ.....ஓ......ஓ" என்று சொல்லிக் கேட்பா. இடையிடை ஒத்துணர்வுப் பதில்கள் கொடுப்பா.

"உங்களுக்கும் இந்தப் பிள்ளையாலை சரியான மனக் கஷ்டம் தான்."

என்பது போல அம்மாவின் பதில்கள் அமையும். மாமா மணிக் கணக்கில் கதைத்து விட்டுச் சுருட்டையும் பத்திக் கொண்டு எழுந்து போவார்.

அடுத்த நாள் காலையில் தேவிவருவா. "மாமி நான் சொல்லுறதைக் கேளுங்கோவன்" என்று தொடங்குவா. அம்மா சமையலில் ஈடுபட்டிருக்கும் போதே தேவி குசினிக்கு முன் உள்ள சிறு 'ஹொறி டோரில்' இருந்து கதைப்பா. அம்மா அதையும் "ஓ.....ஓ.....ஓ....." என்று கேட்பா.

"அவர் விட்ட பிழையளாலை உங்கள் எல்லாருக்கும் துன்பம்" என்று சொல்வா.

இப்படியான நேரங்களில் இரு தரப்பினரும் வாக்கு மூலமளித்துச் சென்றபின் நான் அம்மாவிடம் கேட்பேன்.

'இதென்னம்மா உங்கடை நடிப்பு. அவர் சொல்லேக்கை அதுவும் சரி. இவ சொல்லேக்கை இதுவும் சரி....."

"பிள்ளை இதிலை சரி, பிழை முக்கியமில்லை. அதுகள் என்ன நீதவான் எண்டே என்னட்டை வாறது? ஒரு மன ஆறுதலுக்குத் தானே வருதுகள். அப்ப அதைச் சரியெண்டு தானே கேக்க வேணும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அம்மாவின் கூற்று எனக்கு விளங்கியதில்லை. இப்போது எண்ணிப் பார்க்கிறேன். ஒரு படியாத மனுஷியின் வாயில் இருந்து வந்த எவ்வளவு ஆழமான கருத்துள்ள கூற்று!

ஆம். உடனிருத்தலும், உற்றுக் கேட்டலும், ஒத்துணர்வுப் பதில்களைக் கூறுதலும் அம்மாவிடம் வெகு இயல்பாக வாய்க்கப் பெற்றிருந்தன.

சில சமயங்களில் இப்படியும் நிகழும். சௌந்தரம் மச்சாள் எங்கள் வீட்டுக்கு வருவா. அவவேறு ஏதும் கதைத்துக் கொண்டிருந்தாலும்,

"உங்களுக்கு ஒருநாளும் மாறாத கவலையைத் தந்திட்டு அவன் போட்டான்"

என்று அம்மா மகாலிங்கண்ணா இறந்த இடத்தைத் தொடுவா. மச்சாள் பிறகு கதைக்கத் தொடங்கி அழுது தீர்க்க, இவ இறுதியில் ஆறுதல் சொல்லி அனுப்புவா.

"இவவுக்கேன் இந்த வேலை?" என்று நான் ஆத்திரப்பட்ட துண்டு.

"மறந்து போனவர்களையும் மறக்க விடமாட்டா இவ" என்று எனக்குள் ஏசியதும் உண்டு.

ஆனால் அது ஒரு ஆழ்ந்த அதி ஒத்துணர்வு (advanced empathy) என்று இப்போது புரிகிறது.

மக்களை நேசிக்கும் மானிடத்தைத் தேடுவதில் திக்கெல்லாம் ஒரு பயணம் மௌனமாய் நடந்து கொண்டிருக்கையில், அம்மா ஒரு நட்சத்திரமாய் மினுங்கினா.

(1999)

****************************************************************

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

நவசக்தி நிகழ்ச்சியில் பின்வரும் தலைப்புகளில் செல்வி.சற்சொரூபவதி நாதனுடன் கலந்துரையாடல்.

(2008, 2009, 2010)

27. விடயங்களை உள்வாங்குதல்
28. எண்ணங்களை முகாமை செய்தல்
29. தற்கொலை
30. விமர்சனம் என்ன செய்யும்?
31. வெளிப்பாட்டுச் சிகிச்சை
32. தொடர்பாடல்
33. நச்சுவட்டங்களை உடைத்தல்
34. உளவிருத்திக் குறைபாடு
35. போதை தரும் பொருள் பாவனை
36. கருத்தூன்றிச் செயற்படுதல்
37. பரீட்சைகளை எதிர் கொள்ளல்
38. பெண்களின் உளப்பிரச்சினைகள்
39. பிள்ளைப் பருவ விருத்தி
40. நேரத்தை முகாமை செய்தல்
41. பாதுகாப்புக் கவசம்
42. அன்பு
43. ஞாபகமும் மறதியும்
44. முழுமையான தரிசனம்
45. வாழ்வுக்கான அர்த்தம்
46. தொடு பயம்
47. பிளவுபடும் மனம்
48. பாடசாலை அடைவு மட்டம் குறைதல்
49. ஆளுமைக் குழப்பங்கள்
50. சீர்மியம்

****************************************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னுரை
அண்ணா பொன்னேட்டில் இருந்து

# இந்நூல் வருநாள் பொன்னாள்

அண்ணா தொழிலகம் ஆரம்பித் தைம்பதாண்டு
விண்தொட, நிமிர்ந்த விரிகதையை
செல்லத்துரை ஐயா செழுமையுடன் பகர
மெல்ல ஒரு பொன்னேடு மினுக்கி ஒளிர்கிறது.
முன்புற அட்டையின் யதார்த்தப் படங்கள்
பின்புற அட்டையின் நவீன ஓவியம்
எது சிறப்பென்றாராயின் எழுபிறப்பும் போதாது
மதுகுடித்த வண்டாகி மகிழலாம் உள்ளே.
உள்ளே பிரித்தால் ஏடுகள் அவிழும்
உன்னதமான அமைப்புச் செம்மை
ஏடு ஒன்றில் ஆசியும் வாழ்த்தும்
ஆயிரம் பிறை கண்ட ஆசான் முதலாய்
அதிவண கலாநிதி ஜெபநேசன் ஈறாக
எல்லாரும் நினைகிறார் ஏழையின் உழைப்பை
(உயர்வை)
ஏடு இரண்டு வரலாற்றில் நனைகிறது.
ஈசன் அடியை இதயத் திருத்து மன்பும்
ஒன்றாலும் குறையாத நெஞ்சுறுதி நிலையும்
நேசிக்க வைக்கிற நீண்ட நெடும் பாதையும்....
ஆய்வறிவாளர் ஏடு மூன்றை நிறைப்பர்.
இத்தனைபேர் சொல்லுவது எப்படிப் பொய்யாகும்
ஊடகப் பார்வையை ஏடு நான்கு காட்டுதப்பா
தினக்குரல் உதயன் மட்டுமா இல்லையே?
டெய்லி நியூசும் ரைம்சும் தம்மொழியில்
ஏடு ஐந்தோ எதிர்காலத்திற் குதவும்
எறும்புகள் சிறந்த குடிகள் ஏனென்றால்
தங்கள் இன நலனைத் தலைபோல் பேணுவதால்
தான்தொழில் தேடித் தோற்றவோர் ஏழை
பலருக்குத் தொழில் தந்த பணிபறையும் நூலிது
போதனையால் அல்ல புதுமைகள் படைப்பது நம்
சாதனையால் என்று வாழ்ந்து காட்டிய வரலாறு
இந்நூலைப் படிக்கும் வரை தெரியவில்லைத்
தெளிவாக
கஷ்டங்களே வெற்றியின் படிக்கற்கள் என்று
மாதச்சம்பளம் பெறுதல் மகிழ்வுதான்
சுயதொழில் இன்பம் அதைவிடப் பெரிதென்பர்
போரும் அமைதியும் நாவல் எழுத
எடுத்த காலம் ஏழு ஆண்டுகள்
அண்ணா தொழில்வளம் அரங்கில் ஏற
எடுத்த காலம் ஐம்பது ஆண்டுகள்
விரைவில் வெல்லுவது முடியாது தம்பி!
உழைப்பு உழைப்பு நெடுநாள் உழைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியின் ரகசியத் திறவுகோல் அதுவே
கவனமாய்ச் சிந்தித்து அமைதியாய்ச் செயலாற்றி
ஒழுங்கொடு வாழ்பவர் மிகப்பெரிய அறிவாளி
இடமும் செல்ல வேண்டாம் வலமும் செல்ல
வேண்டும்
இலக்கை நோக்கிச் செல்லென்றார்
விவேகானந்தர்
சென்ற ஒருவரின் வாழ்வுக் கதை இது
உள்ளமென்ற கண்ணாடியில் கறைபட்டு விட்டால்
உண்மையாய்த் தெரியாது விம்பம் என்று
உள்ளதை உள்ளபடி சொல்லிவரும் இந்நூல்
எதிர்கால ஏழைகளின் இதயத்தின் கைந்நூல்
சிறுசிறு விடயங்களை இப்போது நீ செய்

பெரிய விடயங்கள் உனை வந்து தேடும்
தங்களை நிறைவேற்றி வைக்கும்படி என்பது
பழைய பாரசீகப் பழமொழி அப்பனே
அடியெடுத்து வைக்கமுதல் எதிரே பார்த்து
செயற்பாடு செய்ய முதல் திட்டமிட்டு
செல்நெறியின் விளைவு மணம் நூலில் கேட்கும்
பொன்னேடு படிப்போரில் பரவசம் துயில்
கொள்ளும்
ஆங்காங்கு அதன் அழகின் சாயல் கண்டு
அசைவற்று வீற்றிருப்பர் பலமணி நேரம்
சிறுகைத் தொழில் தொடங்கும் மனிதர் தங்கள்
மூச்சில் வாழப்போகும் வரிகள் கொண்ட
இந்நூல் வருநாளே பொன்னாளாகும்.

(23.4.2009)

## Seminar Participation at International Level

1. Forth international women's conference
   Beijing - China - 1995.

2. Sixth international LVEP train the trainer programme on living values at Oxford U.K
   July 2002

3. Seminar on psychological consequences of organized violence and terror with narrative exposure therapy conducted by VIVO in cupramontana, Italy - September, October 2003.

Academic and professional training in counselling psychology by the association for health and counselling.
- Counsellor Certificate - 1994 - 1995



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருக்கூத்து விமர்சனம் :-

# காக்கைகள் - தெருக்கூத்து

காக்கைகளின் சமூகம் ஒற்றுமையான சமூகம். காக்கைகளின் சமூகத்திற்கென்று சில விதிமுறைகள் உண்டு. அந்த விதிக்கு அமைந்துதான் காக்கைகள் எல்லாம் ஒழுகவேண்டும். ஒழுகுகின்றன. ஆகவே மனிதனுக்கு - எந்த விதிமுறைக்கும் அமையாது தான் நினைத் தவாறெல்லாம் வாழ விரும்புகிற வாழ்ந்து கொண்டிருக்கிற மனிதனுக்கு விஷயங்களை எடுத்துச் சொல்லக் காக்கைகளுக்குத் தகுதி உண்டு. இங்கே தெருக்கூத்து என்ற வலிமையான ஊடகத்தின் மூலம் சில செய்திகளை எடுத்துக் கூறுகின்றன இந்த மனிதக் காக்கைகள்!

பூமியைப் பொசுக்கிவிடுவது போல் எரியும் சூரியன் - உள்ளத் தோலைக் கருக்குமாறு எரியும் சிந்தனைகள்! மக்களின் உடலில் மிச்சமாய் இருப்பது பயமும் பசியுமாய் இருக்கையில், ''அது சுப்பற்றை வளவுக்குள்ளானே விழுந்தது! எனக்கென்ன?'' என்று நினைக்கும் எமது மக்களின் மனப்பாங்கினைத் தெளிவாய் எடுத்துக் காட்டும் தெருக்கூத்து!

பத்து முறைக்கு மேல் மேடை ஏறிவிட்ட நிலையிலும் நடிகர்களிடம் இடையிடை ஏற்படும் தடு மாற்றமும், பிரதான நடிகராகவும் நெறியாளராகவும் இருக்கும் ஒருவரின் 'சிக்னலை''ப் பெறக் காத்து நிற்கும் தன்மையும் இத் தெருக்கூத்துக்கு ஒரு முறையான எழுத்துரு இல்லையோ என்று சந்தேகம் கொள்ள வைக்கின்ற போதிலும்,

"எது சரி? எது பிழை? இப்ப எல்லாம் பிழை தாண்டா....டேய்...' என்பது போன்ற ஆழமான வசனங்கள்... நல்ல திறமை மிகுந்த நாடகாசிரியர் ஒருவரின் பின்னணி - இத் தெருக்கூத்துக்கு உண்டு என்றும் சிந்திக்க வைக்கிறது.

கூத்து முழுவதும் விரவி வரும் பாடல்கள் பல எமது பாரம்பரியக் கூத்து மெட்டுக்களில் அமைந்திருப்பது ஒரு 'பிளஸ் பொயிண்ட்'! ஆனாலும் பாட்டுக்கள் பல இடங்களிலும் 'இசைய' மறுத்து 'நெருடுவதை'க் கவனித்திருக்கலாம்!

'Drama' என்ற சொல் 'Dramenon' என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பிறந்தது. Dramenon என்றால் செய்யப்படும் ஒன்று. அல்லது நிகழ்த்தப்படும் ஒன்று என்பதை மறந்திடாமல் மோட்டார்ச் சைக்கிள் ஓடுவது முதல் 'காட்ஸ்' விளையாடுவது வரை நிகழும் ஊமங்கள் அற்புதமாக அமைகின்றன. 'மேடை' இன்றித் தெருவில் நடிக்கப்படும் கூத்து என்பதால் நடிகர்கள் படுத்து நடிப்பதைக் குறைத்திருக்கலாமாயினும், நடிகர்களில் யாருமே சோடை போய்விடவில்லை. அதிலும் உரைஞர்களாய் அமைகின்ற இருவரும், 'சிங்களத்தமிழ்' பேசுகின்ற நடிகரும் அதிகமாய்ப் பார்வையாளரை ஈர்க்கின்றனர்.

"எலும்பு (எழும்பு என்பதன் சிங்களத்தமிழ்!) மாத்தயோ!" அருமையான இடம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரைஞர்கள் ஓரிருவர் வசனங்களை ஆறுதலாகப் பேச வேண்டும் என்ற நினைப்பில் தமது வசனங்களுக்கு ஒரு வித 'மெட்டை' அமைத்துக் கொள்வதைக் கவனிக்க வேண்டும்!

"முருகன்ரை மூத்த பெட்டை......!" தாளலய பெட்டில் ஒரு பாடல் தொடங்குகிறது.

"அவருக்கு என்ன நடந்திருக்கும்?" என்று நாம் சிந்திக்கிறோம். "முருகன்ரை மூத்த பெட்டை.... *சீசீசீ... சீசீசீ....'* என்று பாடல் தொடரும்போது அவளுக்கு.... அருவருப்பானவிடயம் ஏதோ நிகழ்ந்து விட்டது என்று நினைக்கிறோம். என்னவாயிருக்கும்? கற்பழிப்போ? அதுதான் மிகச் சாதாரணமாயிற்றே இப்போது!

இறுதியாக விஷயம் அம்பலத்துக்கு வருகிறது.

"முருகன்ரை மூத்த பெட்டை கமக்காரன் ஒருத்தனோடை ஓடிட்டாளாம்" - பார்வையாளரின் பலத்த சிரிப்போடு புஷ்வாணமாய்ப் போகிறது விஷயம்! ஆனால்... கமக்காரனைக் கலியாணம் செய்வதை அருவருக்கத் தக்க விடயமாய் இன்றும் கருதுகிற சமுதாயம் பற்றி ஓர் ஆழ்ந்த மீட்டல் மனதுள் வருகிறது.

இந்த இடத்தில் சபை சிரிப்பது எதிர் பார்க்கத் தக்கது தான். ஆனால் எதிர் பாராத பல இடங்களில் நடிகர்கள் மிகச் சீரியஸ் ஆக நடிக்கும் போது சபை சிரிக்கிறதே! ஏன்? நடிகர்களின் நடிப்புப் பாணியில் மாற்றம் தேவை!

"வருகுது வருகுது ஆமி வருகுது...." பாடலின் மெட்டும், நடிப்பும் மனதில் நிலைக்கிறது.

இக்கூத்து, தான் சொல்ல வந்த மையக் கருத்தைச் சுற்றி ஒழுங்காக வளர்த்துச் செல்லப்படாமல், பல்வேறு விடயங்களையும் சிதறலாக அள்ளித் தெளிப்பது ஒரு குறைபாடு போல் தோன்றினாலும் தெளிக்கப்படும் கருத்துக்கள் பல ஆழ்ந்து சிந்திக்க வைப்பவை.

"அரசு எமக்கு இலவச உணவு தருவது எதற்காக?" என்ற சிந்தனை அவற்றில் ஒன்று.

நாடகம் வட்டக்களரி அமைப்பில் இடம் பெறுவதால் தமது வசனங்களை மூன்று திசைகளில் மூன்று முறை திருப்பிக் கூறுகின்றனர். சில வேளைகளில் - முக்கியமாகக் கூட்டமும் குறைவாக இருக்கும் போது - இது சலிப்பைத் தருகிறது. ஆட்ட வடிவங்களில் பல்வேறு கோலங்களை அமைத்துக் கூத்து முழுவதிலும் தெரியும் ஒரு Monotonous தனத்தைக் குறைக்கலாம்.

'எல்லாளன் துட்டகைமுனு' யுத்தக் காட்சியை அதன் காட்சி அமைப்பை இன்னும் செம்மைப்படுத்தலாம்.

எல்லாக் காக்கைகளும் கறுப்பு உடை தரித்து கறுப்பு முக மூடி அணிந்து நடிப்பது ஒரு வித அழகைத் தந்தாலும், நடிகர்களின் முக பாவங்களைப் பார்க்க முடியாது போவது ஒரு இழப்புத்தான்.

பின்னணி வாத்தியக் காரர்களில் 'மிருதங்கப் பையன்' சபாஷ் பெறுகிறார். அவரது கைகள் மிக லாவகமாய் அசைகின்றன.

நாடகம் - தான் சொல்ல விரும்பிய விடயத்தை நேரடியாகப் பிரசாரம் செய்யாமல் கலை அழகுடன் தந்திருக்கலாம். அப்போது 'தொற்றல்' அதிகமாக இருக்கும். நாடகம் பார்த்து முடிய இரகசிய சிந்தனை மனதில் உருவாகியிருக்கும்.

மிகத் திறமை வாய்ந்த நெறியாளர் தானும் ஒரு நடிகராய் இருப்பதைத் தவிர்த்திருந்தால். கூத்து இன்னும் சிறப்புப் பெற்றிருக்கும்.

எப்படி இருப்பினும் பிரதி ஆக்கம் முதல் நெறியாள்கை வரை அனைத்தும் அளவெட்டி வாழ் மாணவர் மட்ட முயற்சியே என்பதை மறந்திடாமல் நோக்கும் போது, காக்கைகளுக்கு ஒரு "பலமான கைதட்டல்" அவசியமாகின்றது. (1991)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் பற்றி ஒரு தொடர்

# பெண்ணாகி வந்த பூங்காற்று

**பெண்களுக்கு ஏற்படும் உளவியல் தாக்கங்கள்** பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள், உடல் ரீதியான வன்முறைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்றவை பெண்களுக்குப் பெரும் மனச்சோர்வை ஏற்படுத்துகின்றன. உலகின் மொத்தப் பெண்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கினர் தமது வாழ்வில் ஒருமுறையாவது பாலியல் வன்முறைக் குள்ளாகின்றனர் (குடும்ப அங்கத்தவராலோ அல்லது வெளியாராலோ) என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அநேக சிறிய குழந்தைகள் வீட்டிலிருத்தல், சமூக அந்தஸ்து குறைவாக இருத்தல், வேலைக்குச் செல்ல முடியாதநிலை, தாயின் அன்பையும், பாதுகாப்பையும் சிறிய வயதிலேயே இழந்துவிடல், சமூகப் பாகுபாடுகளினால் பாதிக்கப்படல், சுயகணிப்புக் குறைவாக இருத்தல், தேவைகள் குறைவாக இருத்தல் போன்ற விடயங்களும் பெண்களை மன அழுத்தத்திற்கு உட்படுத்தி மனச்சோர்வுக்கும், விரக்திக்கும் இட்டுச் செல்லலாம்.

கடந்த இருபது வருடகாலப் போர்ச்சூழலில் எமது வாழ்வில் இடப்பெயர்வு, இழப்பு, எதிர்கால நிச்சயமின்மை, அழிவுகள், காயங்கள், சித்திரவதைகள், கொலைகள், கொள்ளைகள் போன்ற விடயங்கள் மிக முக்கிய கூறுகளாகிவிட்டன. பெண்களும், குழந்தைகளும், முதியோர்களுமே இத்தகைய நிலைமைகளால் அதிகம் மனத்தாக்கத்துக்கு உட்படுவோராக உள்ளனர். அதிலும் போரினால் கணவனை இழந்த விதவைகள், காணமற்போனோரின் குடும்ப அங்கத்தவராயுள்ள பெண்கள் ஆகியோர் அதிகளவு பாதிக்கப்பட்டவர்களாக இருக்கக்கூடும்.

பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் பருவத்திலும், குழந்தைப் பேற்றின்போதும் ஏற்படும் ஓமோன் சுரப்பு மாற்றங்களும் அவர்களைத் தாக்குகின்றன. இக்காலத்தில் அவர்கள் இலகுவில் உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகச் சந்தர்ப்பம் ஏற்படுகிறது.

அதீத மனச்சோர்வுக்கு உட்படும் பெண்கள் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். எமது நாட்டில் அலரிவிதைப் பாவனை வேகமாக அதிகரித்து வருகிறது. உலகம் முழுவதையும் எடுத்துநோக்கினால் தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை ஆண்களிலே அதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் தற்கொலை முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் கூடுதலாகப் பெண்களாகவே உள்ளனர். தமது நேரான உணர்வுகளையும், மறையான உணர்வுகளையும் ஏற்றுக் கொண்டு வெளிப்படுத்தும் பண்பும் பெண்களிடமே அதிகம் காணப்படுகிறது.

உலகம் முழுவதிலும் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார நிலைமைகளில் ஆண்களுக்குச் சமமாக உயர்ந்தெழப் பெண்கள் கடும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். தமக்கான அந்த உரிமையை அவர்கள் தேடுகிறார்கள். இந்தக் கோரிக்கை மிகநியாயமானது என்பதை இன்று உலகநாடுகள் பலவும் ஏற்றுக்கொண்டுள்ளன. இதனை அக்கறையுடன் கவனிக்கவேண்டிய பொறுப்பு எமக்கும் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்களின் ஆளுமை விருத்தி

பெண்களின் நிலை சமூகத்தில் உயர வேண்டுமானால், அவர்களது ஆளுமையை முழுமையாக வளர்த்தெடுக்க வேண்டிய தேவை முதன்மைப்படுகிறது.

ஆளுமை என்றால் என்ன? இது மிகக் கடுமையான வினா! தமக்கிடையே சிலசில பொதுப் பண்புகளைக் கொண்டிருந்தாலும் கூட, இதுவரையில் ஏறத்தாழ, இருபத்து நான்கு வெவ்வேறு ஆளுமைக் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. உளவியலில் இது இன்று ஒரு தனிப்பட்ட துறையாகவே வளர்ந்து வருகிறது. ஆளுமை பற்றி ஏற்கனவே அறியப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களைக் கற்கவே ஒருவருக்கு நீண்டகாலம் தேவைப்படும். அதே சமயத்தில் அதுபற்றி இன்னும் அறியப்படாத அல்லது தெளிவு படுத்தப்படாத பகுதிகள் நிறைய இருக்கின்றன.

ஆளுமை பற்றிய உளவியலின் பிரிவு - ஆளுமையியல் என அழைக்கப்படுகிறது. இது மனிதவாழ்வு பற்றியும், வாழ்வின் பாதையைப் பாதிக்கும் காரணிகள் பற்றியும் மற்றும் தனிமனித ஆளுமை வேறுபாடுகள், ஆளுமை வகைகள் பற்றியும் ஆய்வு செய்கிறது.

பொதுவான ஆளுமை என்பது ஒருவரின் ஆற்றல்கள், நம்பிக்கைகள், மனப்பாங்குகள், கொள்கைகள், பழக்கவழக்கங்கள், உணர்ச்சித் தூண்டற்பேறுகள், மனநிலைகள், அவரிடத்திற் செயற்படும் சக்தி மட்டங்கள் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கும்.

"பேர்சனாலிற்றி" என்ற ஆங்கிலச் சொல்லின் மொழிக்குரிய அடிவேரை "கோர்டன் ஆல்போர்ட்" என்ற விஞ்ஞானி தேடினார். புராதன லத்தீன் மொழியில் "பேர்சோனா" என்ற சொல் பல அர்த்தங்களைத் தரும் சொல்லாகப் பாவிக்கப்பட்டு வந்தது.

1) ஒருவர் மற்றவர் முன்னே தோன்றும் நிலை.
2) ஒருவர் தமது வாழ்வில் எடுக்கும் பாத்திரம்.
3) ஒருவரை அவரது தொழிலுக்குப் பொருத்த முடையவராக்கும் அவரது தகைமைகளின் கூட்டு மொத்தம்.
4) ஒருவரது தனிப்பட்ட முத்திரைகள்.

ஆகவே ஒரு தனிமனிதனுடைய உண்மைத் தன்மைக்கும், அவனது வெளித்தோற்றத்துக்கு மிடையேயுள்ள - இரண்டகத் தன்மையைக் குறிப்பதாகவே இச்சொல் மெதுவாக வளர்ந்து வந்துள்ளநிலையைப் பார்க்கிறோம். உண்மையில் வெளியே தோற்றமளிக்கின்ற, இந்த ஒவ்வொரு மனிதருக்கும் உள்ளே வெளியே தெரியாத - தனிப்பட்ட சில சமயங்களில் முற்றிலும் வித்தியாசமான - ஒரு மனிதர் இருக்கிறார். இந்த அகமனிதர், வெளியே தெரியும் மனிதரைவிட அதிகளவு உண்மையானவர், அதிகளவு நேர்மையானவர். பெண்கள் அனைவரும் தமக்குள்ளேயுள்ள இந்த அக மனுஷியைக் கண்டுகொள்ள வேண்டும்.

ஆளுமைக் கொள்கைகள் அனைத்தையும் மூன்று பெரிய பிரிவுகளில் அடக்கலாம்.

1) நடத்தைக் கொள்கைகள்
2) உளப்பகுப்பாய்வுக் கொள்கைகள்
3) மனிதம்சார் கொள்கைகள்.

அக, புற யதார்த்த நிலைமைகளே மனித ஆளுமையை உருவாக்குகின்றன என்று 'சிக்மண்ட் புரோயிட்' என்ற உளவியல் அறிஞர் கருதினார். பாலியல் உந்தல், வன்முறை உந்தல், இறுக்கம் கலைதல் ஆகிய மனிதத் தேவைகளே மனித ஆளுமையைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகளாக இருப்பதை அவர் பார்த்தார். மனித ஆளுமையைத் தீர்மானிக்கும் முக்கிய உந்தல் எதுவென்ற கருத்தில் உளவியல் அறிஞர்கள் ஆளுக்காள் வேறுபட்டனர். பாலியல் உந்தல், வன்முறை உந்தல் ஆகியவற்றோடு, நல்ல முறையில் அமையும் மனித உறவுத்தேவையும் மனித ஆளுமையை நிர்ணயிப்பதாக 'அன்னா புரொயிட்' கூறினார்.

(தொடரும்)

(நமது ஈழநாடு 2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுநாவலின் ஒரு பகுதி

# வைகறை உணர்வுகள்

யாழ்ப்பாணம் நோக்கி வர இருக்கும் பஸ்ஸில் ரஞ்சனி ஏறி அமர்ந்து விட்டாள். அம்மா, சகோதர, சகோதரிகள் எல்லோரும் ஏறிக் கொண்டு விட்டார்கள்.

அப்பா, அண்ணா.......?

திடும்மென இருவரின் நினைவும் அவள் மனக்கண் முன் எழுந்து மனதினை அலைக்கழிக் கிறது. அவளையுமறியாமல் விழிக்குள் நீரானது குளங்கட்டிக்கொள்ள, மெல்லத் துடைத்து விடுகிறாள் ரஞ்சனி.

தேடுதல் என்ற போர்வையில் இவர்களை மட்டுமா அவர்கள் இழந்தார்கள்? உற்றவன், பெற்றவன் உயிர்கள், உடைமைகள், உயிர்க்குயிரான கற்பு அத்தனையையும் இழந்து வெறுமை ஒன்றே பெரும் சொத்தான நிலையில், வாழ்ந்த ஊரை விட்டுப் பிறந்த இடம் நாடி அவர்கள் புறப்பட்டு விட்டார்கள்.

முன் சீற்றில் அமர்ந்திருந்த அம்மா பஸ்ஸின் யன்னலினூடாக அந்த அண்ட வெளியைப் பார்வையால் வெறிக்கிறாள். இதுதான் என்ற நிதானிப்பு அவள் பார்வையில் இல்லை என்பது ரஞ்சனிக்குப் புரிந்தது.

'அம்மா!'

அவளுக்காக, அந்த ஜீவனுக்காக எல்லா இழப்புக்களையும் தாங்கி இன்னமும் உயிர் தரித்திருக்கிறாளே. மிச்சம் மீதியாய் இருக்கின்ற உயிர்களுக்காக, அவர்களையும் அநாதைகள் ஆக்கிவிடக் கூடாதே என்பதற்காக, எப்படி எல்லாம் வாதிட்டாள்.

இழக்கக் கூடாததை, உயிரினும் மேலான ஒன்றை இழந்த பின்னால் வாழத்தான் வேண்டுமா என ரஞ்சனி துடித்த துடிப்பு அந்த ஆண்டவன் ஒருவனுக்கு மட்டும்தான் தெரியும்.

'ஆண்டவன், அப்படி ஒருவன் இருப்பது உண்மையெனில் இப்படி ஒரு நிலைக்குத் தள்ளியிருப்பானா?'

விரக்தி, வேதனையின் விளிம்பில் நின்று வெம்பி, 'இனி நான் வாழவே கூடாது' என்று கத்திக் கதறித் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு,

'நானும் உன்னோடு வருகிறேன்' என்ற அம்மாவின் கசிந்துருகலில் மனம் தேறிய போதும், இப்போதும் அவளின் இதயத்தின் அடித்தளத்தில் முள்ளாய் ஏதோ ஒன்று தைத்துக் கொண்டே இருந்தது.

"அக்கா பஸ் எப்பக்கா வெளிக்கிடும்?"

"கொஞ்ச நேரத்திலை வெளிக்கிடும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வயதுத் தங்கையான சுஜிக்குப் பதிலிறுக்கிறாள் ரஞ்சனி. இவளைப்போல இதே பத்து வயதுக்குட்பட்ட ஜீவனாய் நான் இருந்திருக்கக் கூடாதா என்ற ஏக்கம் அவளையும் அறியாமல் அவளுக்குள் குடிபுகுந்தது.

'நீயும் செத்துப் போற தாய் இருந்தால் உன்ரை முடிவைத்தான் நானும் எடுப்பனடி'

'ஐயோ அம்மா நானினி இருந்தென்னத்துக்கு?'

'கட்டின கணவன், மலைக்கு மலையாய் இருந்த ஆம்பிள்ளைப் பிள்ளை, கண்ணுக்கு கண்ணாய் வளர்க்கப்பட்ட நீ... உங்களை எல்லாம் இழந்துபோட்டுப் பிறகு என்னை என்னத்துக்கு? நானும் சாகப் போறன்'

முரண்டுபண்ணிய அம்மாவை வலுக் கட்டாயமாய் அடக்குவதற்கிடையில் ரஞ்சனிக்குப் போதும் போதும் என்றாகிப் போய் விட்டது.

கண்ணீரிற் கரைந்துருகும் அம்மா.... நண்டும் சிண்டுமாய்ப் பின்னால் இருக்கின்ற தம்பி, தங்கைகள் ஒன்றுமே தெரியாத இவ்விருள் சூழுலகில் அவர்களை அநாதைகளாக்கத் தோன்றாதவளாய் எல்லாவேதனைகளும் ரஞ்சனியின் மனத்தைப் பெரும் பாறையாய் அமுக்குகின்றன.

இதுவரை காலமும் வாழ்ந்து எதையும் சாதிக்கா விட்டாலும், இனிமேல் வாழப் போவதால் அம்மா, தம்பி, தங்கைகள் இவர்களுக்கொரு அத்திபாரமாய் தான் அமையப் போவதில் அவளுக்குக் கடுகளவு நிம்மதி.

சுஜி, ராஜன், லதா, மனோ என உடன் பிறப்புக்கள் எல்லோரினது முகங்களும் அடுக்கடுக்காய் அவள் மனக்கண் முன் எழுந்து மறைந்ததில் அவளுக்குள் வித்திட்டிருந்த 'சாகவேண்டும்' என்ற பலம் அத்தனையும் பலவீனப்பட்டுப் போனது.

தன் கண்ணீரையும் மனச் சோகங்களையும் துடைத்தெறிய லாயக்கில்லாத தன் கரங்கள் பிறரைத் தாங்கப் போகின்றனவே என்று நினைக்கையில் ரஞ்சனிக்கு ஒரு புறம் வேதனையாகவும் மறுபுறம் சிரிப்பாகவும் இருந்தது.

உணர்வு, உடைமை எல்லாவற்றையும் இழந்து இனியும் இங்கிருப்பதால் பிரயோசனமில்லை என்ற நிலையில் யாழ்ப்பாணத்திலுள்ள அப்பாவின் சகோதரியின் வீட்டுக்குப் புறப்பட்டுப் போவதாய் அம்மா சொன்ன பொழுது 'சடக்' கென ஒருகணம் திடுக்குற்றுப் போனாலும் இதைத் தவிர இப்போதைக்கு வேறெந்த முடிவையும் எடுக்க இயலாது என்ற நினைவில் அதுபற்றி ரஞ்சனி எந்த அபிப்பிராயத்தையுமே வெளியிடவில்லை.

சிறுவயதிலிருந்து உள்ளத்தின் அடித்தளத்தில் கோடிக் கணக்காய் அவள் வளர்த்து வைத்திருந்த அத்தனை கற்பனைகளும் சிதைக்கப்பட்டு உணர்வினை இழந்த வெறுங்கூடாய், சாவியில் ஆடும் பொம்மையாய் அம்மா காட்டிய வழியில் நடந்து வருகிறாள்.

ஒரு குலுக்கலோடு பஸ் புறப்பட்ட அசைவில் நிஜத்துக்கு வருகிறாள் ரஞ்சனி.

இந்த ஊருக்கு அப்பா மாற்றலாகி வரும்பொழுது ஒரு இளஞ்சிட்டாய் எத்தனை சந்தோஷத்தோடு வந்தாள்; வாழ்ந்தாள். அப்பொழுது, இத்தனை இழப்புகள், இன்னல்களைச் சுமந்து கொண்டே திரும்பப் போகிறேன் என்று அவள் கிஞ்சித்தும் நினைத் திருப்பாளா?

பத்து வருஷங்கள்!

பாலர் பருவந்தொட்டு, கன்னியாகி, தன் வயதுத் தோழிகளோடு விளையாடியது, படித்தது, எதிர்காலத்தைப் பற்றி என்னென்ன வெல்லாமோ நிறையக் கற்பனை பண்ணியது, அத்தனையும் மளமளவென அவள் மனக்கண் முன் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணத்தில் வந்து போனதில் கண்ணில் நீர் குளங்கட்டிக் கொள்கிறது.

"ஏனக்கா அழுறீங்கள்?"
"........?"

எதுவுமே சொல்லத் தோன்றாமல் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள். அம்மாவும் திரும்பிப் பார்க்கிறாள். அந்த வதனமும் இருண்டு, கறுத்துப் போய்க் கிடக்கிறது.

அயல் வீடு, பக்கத்து வீடு, பள்ளித் தோழமை என்று எத்தனை சிநேகிதிகள் ரஞ்சனிக்கு. குருவிக் கூடொன்றைக் குரங்கானது குலைத்தது போலத் தன்னைப் போல எல்லோரும் எதையெதை எல்லாம் இழந்து அவதிப்படுகிறார்களோ என்று வேதனைப்பட்டாள் ரஞ்சனி. தன் வேதனையினூடே, பிறரைப் பற்றிய ஏக்கங்கள் அவள் மனதை அரித்தன.

"அக்கா, சுஜி நித்திரையாப் போனாள்."

லதாவின் குரலில் மீள்கிறாள் ரஞ்சனி. அவளைத்தூக்கித் தன்னோடு சாய்த்துக் கொள்கிறாள் ரஞ்சனி. எந்தச் சலனமும் இல்லாமல் புறச்சூழலின் தாக்கம் எதுவுமே இல்லாமல் உறங்குகின்ற சுஜியையே ஆழ்ந்து நோக்குகிறாள்.

'நான் நிம்மதியாய்த் தூங்கி எத்தனை நாள்?'

தொண்டைக் குழிக்குள் பந்தாய் வந்தடைந்த துயரத்தினை எச்சிலோடு சேர்த்து விழுங்கிக் கொள்கிறாள். புறப்படும் போது அம்மா சொன்ன அந்த வாசகம்...

"இஞ்சை நடந்ததொண்டையும் அங்கை போய்ச் சொல்லப்படாது. எங்கடை இழப்பும் வேதனையும் எங்களோடையே இருக்கட்டும். ஏனெண்டால் எல்லாற்றை மனமும் பக்குவப்பட்டதில்லை. முக்கால் வாசியும் சந்தர்ப்ப வாதிகள்."

அம்மா எதை, எதற்காக மறைக்க முற்படுகிறாள் என்பது ரஞ்சினிக்குப் புரிந்தது. மற்றவர்களைச் சந்தர்ப்பவாதி என்று குறை கூறுகின்ற அம்மா கூட ஒரு விதத்தில் தானும் அந்த வட்டத்துக்குள் தள்ளப்படுகிறாள் என்பதை ஏன் உணரவில்லை?

தன் வாய் நாற்றம் தனக்குத் தெரியாமல், பிறர் வாய் நாறுவதைப்பற்றித் தூற்றுவது தானே மனித இயல்பு.

காலத்தால் அள்ளுண்டு போன நாட்களெல்லாம் அடுக்கடுக்காய் ரஞ்சனியின் நெஞ்சுக்குள் வந்து போனதில் மனது மேலும் கனத்தது. மறக்கத் துடிக்கின்ற நினைவுகளே மீண்டும், மீண்டும் அவளுக்குள் எழுந்து சித்திரவதை செய்கின்றன.

பழைய பானை ஒன்றுக்குள் போட்டு மண்ணுக்குள் மூடி வைத்தத்தில் பறிபோகாமல் தப்பிய நகைகள், யாழ்ப்பாணத்தில் அப்பாவின் பேரில் உள்ள இரண்டு பரப்புக் காணி இவை தவிர அவர்களுக்கென்று வேறெதுவுமே இல்லை.

'போய் மாமி வீட்டிலை இருந்து கொண்டு, இருக்கிற ஒண்டிரண்டு நகைகளை வித்துப் போட்டு அந்த ரண்டு பரப்புக்கையும் ஒரு கொட்டிலைப் போட்டுக் கொண்டு இருக்க வேணும். குடிசையெண்டாலும் தனக்குத் தனக்கென்று இருக்கிறவரையில் தான் பொறுப்பு' என நீளமாய் நினைத்துக் கொண்டே போகிறது ரஞ்சனியின் மனம்.

பிறந்த இடம் என்று பாதுகாப்பாய் ஏதோ இருக்கின்ற துணிவில் நாம் புறப்பட்டு விட்டோம். எந்த நாதியுமே இல்லாத எத்தனையோ ஜீவன்கள் இருக்கின்றனவே, அவர்களுக்கு என்ன கதி என்பதனையும் ரஞ்சனி நினைத்துப் பார்க்கிறாள்.

எத்தனையோ சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து வந்த அவர்களின் பாதங்கள் யாழ்ப்பாண மண்ணை முத்தமிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நகையள் பத்திரமாய்க் கிடக்கோ எண்டு பார் ரஞ்சனி."

'பத்திரப்படுத்த வேண்டிய என்னையே பறிகொடுத்து விட்டேனாம். உயிரே இல்லாத இந்தச் சடப் பொருளுக்கொரு பக்குவம்.'

எரிச்சலாய் எழுந்தது மனதில்.

பலவந்தமாய் உறக்கம் கலைக்கப்பட்ட எரிச்சலில் சுஜி சோம்பல் முறிக்கிறாள். ஒரு கையில் ஒரு சில உடுப்புக்கள். நகைகள் அடங்கிய பெட்டியும் மறுகையில் சுஜியின் பற்றிய கரமுமாய், மாமி வீட்டுக்குப் போவதற்கான பஸ் பிடிப்பதற்காக அவர்கள் வருகிறார்கள்.

'முன்னைய பொழுதானால்.....

அப்பாவோடு வந்திறங்கிய மாத்திரத்தில் டாக்சி பிடித்து, மளமளவென ஏறிக் கொண்டு எவ்வளவு குதூகலமாய் மாமி வீட்டின் முன்னால் போய் இறங்குவோம்' ஆனால் இப்பொழுது....?

உயர்வோ தாழ்வோ எதுவுமே மனிதனுக்கு ஏற்படச் சுணங்காது. துன்பங்கள் கூட மனித மனங்களைப் பக்குவப்படுத்த வல்லன.

"அக்கா திருகோணமலை அகதியளுக்கு நிதி சேகரிக்கிறம்."

"நாங்களே அகதியள்; எங்களிட்டையிருந்து அகதிகளுக்கா" - நிதி சேகரிப்பவனை விரக்தியான புன்னகையோடு நிமிர்ந்து பார்க்கிறாள் ரஞ்சனி. கையில் உள்ளதில் எடுத்துக் கொடுத்து விட்டு அம்மாவின் பின்னால் தம்பி, தங்கைகளோடு பஸ்ஸில் ஏறிக் கொள்கிறாள் ரஞ்சனி.

(தொடரும்)

## நடித்த நாடகங்கள் :-

1. ஐயை – (மகாஜனக் கல்லூரியில் சின்னையா இல்லம் தயாரித்த நாடகம்) – 1966
2. அம்பையின் வஞ்சினம் – (தோழி பாத்திரம் – மகாஜனக்கல்லூரி) – 1967
3. கோமகளும் குருமகளும் – (குருமகள் பாத்திரம் – பாடசாலைக்களிடையே கலைக்கழகம் நடத்திய போட்டியில் தேசிய மட்ட முதலிடம் மகாஜனக் கல்லூரி) – 1968
4. அபலைக்கா ஆறுதல்? – (அபலையாக – பேராதனைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் மன்றம் நடத்திய விடுதிகளுக்கிடையான போட்டியில் விஜயவர்த்தனா விடுதி தயாரித்த நாடகம் – சிறந்த நடிகை விருது) – 1973
5. காலனை வென்ற காலன் – (பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் இந்து மன்றம் தயாரித்த நாடகம் – நாரதராக) – 1979
6. பௌர்ணமி நாள் – (வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரத் தேர்வுக்காக) – 1991
7. மீண்டும் நிலவு பொழியும் – (ஆசிரியர் தினத்துக்காக அம்பனைக் கொத்தணி ஆசிரியர்களால் மகாஜனக் கல்லூரியில் மேடையிடப்பட்டது) – 1991
8. முரண்பாடுகள் – (தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் ஆசிரியர் கல்வித் துறையினர் யூனிசெப் நிறுவனத்துடன் இணைந்து யாழ் மத்திய கல்லூரியில் நடத்திய முரண்பாட்டுத் தீர்வுக் கல்விச் செயலமர்வில் இறுதிநாள் மேடையேறியது) – 1997
9. ஞானவிளக்கு – தெல்லிப்பழை யூனியன் கல் லூரி மண்டபத்தில் ஆசிரியர் தினப் போட்டிக்காகத் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை ஆசிரியர்களால் மேடையேற்றப்பட்டு முதற்பரிசு பெற்றது. – 1997
10. கேள்விகளின் முழக்கம் – (வட இலங்கைச் சங்கீத சபையின் நாடக கலாவித்தகர் பட்டத்துக்காகத் தயாரிக்கப்பட்டது) – 2002



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு தொகுப்பு

# மல்லாகத்தின் அபிவிருத்தி

இலங்கைத் தீவின் வடபால் உள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டில் தெல்லிப்பழைக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் வடக்குத் தெற்காக ஒடுங்கிக் கிழக்கு மேற்காக நீண்ட கிராமம் மல்லாகம்.

மல்லாகம் 'பாரிஷ்' மல்லாகம், அளவெட்டி, ஏழாலை, ஈவினை, புன்னாலைக்கட்டுவன், சூராவத்தை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது.

மல்யுத்தத்தில் சிறந்து விளங்கிய வீரர்கள் பலரின் அகமாக அது இருந்திருக்கலாம் என்பது கணிப்பு. 'அகம்' என்ற முடிவைக் கொண்ட சுன்னாகம், பண்ணாகம் போன்ற கிராமங்கள் பல யாழ்ப்பாணத்தில் இருப்பது கவனத்திற்குரியது. 'அகம்' என்பது தமிழ்ச் சொல்லே என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

"இக் கிராமத்தில் "சித்தர்" என அழைக்கப்பட்ட சிற்றம்பலம் என்பவர் வாழ்ந்தார். அவர் பெரிய வலிய உடல்வாகு கொண்டவர். அக் காலத்தில் வல்லைவெளி ஊடாக வல்லிபுரக் கோயிலுக்குச் செல்வது பயங்கரமான அனுபவம். அம்மயன். கரியன் நாகன் என்ற மூன்று கொள்ளையர் அடியார்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கினர். இதனை அறிந்தார் 'சித்தர்'.

ஒரு நாள் மாலை மங்கும் நேரத்தில் வீரர்கள் சிலருடன் வல்லையை அடைந்தார் சித்தர். கொள்ளைக் கூட்டத் தலைவனான அம்மயனைத் தொண்டைத் குழியில் பிடித்துக் கொண்டனர் மல்லாகம் வீரர்கள். இது 1920களில் மல்லாகத்தில் வாழ்ந்த மூத்தோர் சொன்ன கதை. இக் கதை 'மல்லாகம்' என்ற பெயர்க் காரணத்தை உறுதி செய்யும் கதை.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் 700 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்டது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் பல கோயில்களையும் இடித்து ஒழித்த காலத்தில் இந்தப் பிள்ளையார் கோயிலையும் அணுகினர் எனவும், ஏதோ ஒரு காரணத்தினால் உட்புக முடியாது திகைத்துப் பின்வாங்கினர் எனவும் மூல விக்கிரகத்தைப் பூஜை செய்த அந்தணர் கூரையில் செருகிக் காப்பாற்றினர் என்றும் கூறப்படுகிறது.

பிள்ளையார் கோயில் அமைந்த பல ஆண்டுகளின் பின்னர் சிவஸ்ரீ சின்னையர் அவர்களின் சுற்றத்தவர் சிவஸ்ரீ சீனிஐயர் அவர்கள் திருமுருகன் கோயிலை அமைத்தார்.

பழம் பிள்ளையார் கோயிலின் பரிவார மூர்த்திகளாகத் தண்டாயுதபாணி, வைரவர், சந்தான கோபாலர் நிலையங்கள் நிறுவப் பெற்றன. நவக்கிரக பீடமும் அமைக்கப்பட்டது. 1927இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்த கும்பாபிஷேகத்துடன் அலங்காரத் திருவிழாக்களும் ஆரம்பமாகின. 1944ம் ஆண்டு நிகழ்ந்த கும்பாபிஷேகத்துடன் பழம் பிள்ளை யாருக்குக் கொடி மரம் நிறுவப்பட்டுத் தேர் தீர்த்தத்துடன் கூடிய பெருந் திருவிழாக்கள் ஆரம்பமாகித் தொடர்ந்து வருகின்றன.

சுன்னாகம், மல்லாகம் ஆகிய ஊர்களின் எல்லைப் புறத்தில் ஆல், அரசு. மருது, தாழை ஆகிய மரங்களும் குளமும் மருத நிலமும் ஒருங்கே அமையப் பெற்ற இம்புசியப்புல வயலில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார் ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் பெருமான். பல நூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வூர் மக்கள் இவ்விடத்தில் சிவ குடிசை அமைத்து வணங்கி வந்தார்கள்.

இவ்வாலயத்தைப் பற்றிய கர்ண பரம் பரைக்கதை ஒன்றுண்டு. சுன்னாகத்தைச் சேர்ந்த 'பெரியார்' என்ற விவசாயப் பெருமகன் தனது வயலை உழும் போது கலப்பைக் கொழுவில் ஏதோ ஒரு பொருள் தடக்கியது. பல முறை முயற்சித்தும் அதை நகர்த்த முடியாததால் தன் கைகளால் அவ்விடத்தை அகழ்ந்த போது ஐயப்பனின் திரு உருவ விக்கிரகம் தோன்றியது. அவர் அதைக் கொண்டு தென் திசையாகத் குடில் அமைத்து வழிபட்டு வரலானார். பின்னர் கோயில் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது, அங்கு வந்த துறவி ஒருவர் கிழக்கு முகமாக வாசலை அமைக்குமாறு பணித்தார். இதுவும் ஐயனின் திருவிளையாடல் என்று கருதிக் கோயில் கிழக்கு நோக்கிக் கட்டப்படலாயிற்று. காலப் போக்கில் மூலஸ்தானம், கொடிமரம், தேர் போன்ற திருப்பணிவேலைகளும் செய்யப்படலாயிற்று, ஐயப்பனின் ஆலயத்தில் அன்று தொட்டு இன்று வரை சனிக்கிழமை தோறும் அபிஷேக ஆராதனை நடைபெற்று அன்னதானம் வழங்கப்படுவது ஓர் சிறப்பம்சம் ஆகும்.

எமது நாட்டிலிருந்து மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குத் தொழில் புரியச் சென்ற ஐயப்பன் பக்தர்கள், இவ்வாலயத்தின் மகோற்சவ காலமாகிய பங்குனி மாதத்தில் ஊர்களுக்குத் திரும்பி விடுவார்கள்.

(தொடரும்)

(நூலின் ஒரு பகுதி இது) - 2001

## எழுத்துரு எழுதி நெறியாள்கை செய்த நாடகங்கள் :-

1. பட்டர் பெருமான் – (பொலிகண்டி இ.த.க பாடசாலை, நவராத்திரி விழா 1975)
2. தரிசனங்கள் – (மகாஜனக் கல்லூரியின் இல்ல நாடகப் போட்டிகள் 1982)
3. பாரதி மீண்டும் வருகிறான் – (மகாஜனா ஜெயரத்தினம் நினைவு நாள் 1983)
4. பட்டங்கள் மீண்டும் பறக்கும் – (மகாஜனா நிறுவியவர் நினைவு நாள் 1985)
5. முரண்பாடுகள் – (மகாஜனா நிறுவியவர் நினைவு நாள் 1986)
6. தான் கெடுபள்ளம் – (தமிழ்த்தினப் போட்டி, பண்டத்தரிப்புக் கோட்ட மட்டம் முதலிடம் 1988)
   – பலாலி ஆசிரியர் கலாசாலை 20.11.89
7. தன் வினை தன்னைச் சுடும் – (மகாஜனா, ஜெயரத்தினம் நினைவு நாள் 1989)
8. ஆலயம் –(நல்லை ஆதீனம் நடத்திய ஆலய நாடகப் போட்டி முதற்பரிசு 1990)
   – நாவலர் ஆச்சிரம மண்டபம் – 19.2.1995
   – உரும்பராய் ஞானவைரவர் தேவஸ்தானம் – 11.3.1994
9. வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம் –(இலங்கையின் சுதந்திர தினத்தை ஒட்டி நடைபெற்ற நாடகப் போட்டியில் மாவட்ட மட்ட முதற்பரிசு – 1990
10. பௌர்ணமி நாள் – (வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தரத் தேர்வுக்காக – 1991)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துரை ஒன்று

# பொற் செல்வி

1900ஆம் ஆண்டிலே உலகில் எந்த மதத்தையும் சேராத நாத்திகர்களின் நூற்றுவீதம் 0.2% ஆக இருந்தது. 2000ஆம் ஆண்டில் இது 21.3% ஆக அதிகரித்தது. 2100ஆம் ஆண்டில் மிக உயர்ந்த ஒரு வீதத்தை இது அடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இறை நம்பிக்கை குறையும் போது உள ஆரோக்கியம் சரிகிறது. உள ஆரோக்கியம் சரியும் போது சமூகச் சீரழிவுகள் தலைதூக்குகின்றன.

இலங்கை, இந்தியா போன்ற தெற்காசிய நாடுகளில் முடியுரு நாடி அடைப்புப் போன்ற இதய நோய்களின் நூற்றுவீதம் 1%இல் இருந்து இப்போது 10%க்கு மேல் அதிகரித்துள்ளது. இதய நோய்களால் வரும் மரணம் அறுபது வயதுக்கு மேற்பட்ட முதியவர்களில் காணப்பட்ட நிலை மாறி இன்று 30வயது இளையோரையும் அது தாக்குகிறது. உலக வாழ்வில் பயமும், பதட்டமும், பரபரப்பும், வேகமும் அதிகரித்திருப்பதை இது சுட்டுகிறது.

உலகம் முழுவதிலும் விழுமியங்கள் படுவேகமாகச் சரிந்து வருவதைக் கல்வியிய லாளர்கள் கவலையுடன் சுட்டிக் காட்டுவதோடு சிறு வயதில் இருந்தே கல்வியோடு சேர்த்து அவை வளர்க்கப்படாவிட்டால் மனுக்குலம் அழிந்து போகும் ஆபத்து இருப்பதை உரைக்கிறார்கள்.

மனித மனம் எப்போதுமே மிகப் பலவீனமானது. சூழல் நிலைமைகள் மேலே காட்டியவாறு மாறி வருகையில் அந்த மாற்றங்களால் பாதிக்கப்பட்டும் போகிறது. பொருளாதாரத்திலும் விஞ்ஞானத்திலும் மிகவும் வளர்ச்சி அடைந்த யுத்தம் எதுவும் நேரே பாதிக்காத ஐரோப்பிய நாடுகளிலேயே 20% ஆன மனிதர்கள் நோய் நிதானம் செய்யத்தக்க உளத்தாக்கங்களைக் கொண்டிருக்கிறார்கள். நீண்ட காலப் போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்திலே ஏறத்தாழ 20%ஆன பாடசாலை மாணவர்கள் 'மனவடு' என்ற உளப் பிரச்சினையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை விஞ்ஞான பூர்வமான முன்னோடி ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் ஆண்டவனை விட்டுத்தான் பிரிந்ததில்லை. ஆண்டவனிடமிருந்து தன்னைப் பிரிக்க முடியாது. ஆண்டவன் என்ற வடிவத்தின் மற்றொரு விம்பமே தான் என்பதை உணரும் இறைவழிபாடு ஒன்றுதான் எந்த நிலையிலும் மனிதனுக்கு அமைதி தருவதாய் இருப்பது. மனித குலத்தை இன்னும் சில காலம் அமைதியுடன் வாழ வைக்கத்தக்க ஒரே ஒரு மார்க்கம் இந்த இறை உணர்வுதான். இந்த வழியை ஊக்குவிக்கும் அனைவரும் மனித சமுதாய முன்னேற்றத்தில் பங்கு பெறுபவர்கள். அதனால் பாராட்டத்தக்கவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் இந்தப் பணியை அற்புதமாய்ச் செய்து வரும் ஒருவர் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள். நாற்பதுக்கு மேற்பட்ட உலக நாடுகளில் இன்று பரந்து வாழும் பல்லாயிரக்கணக்கான அம்பாளின் அடியார்கள் நெஞ்சுருகி அளிக்கும் அன்புக் காணிக்கைகளைப் பேணிப்பாதுகாத்து, மனுக்குலத்தின் நல்வாழ்வுக்காகவும் ஈடேற்றத்துக் காகவும் செலவிட்டு வருபவர் அவர். அந்த வகையில் அனைவராலும் சிறப்பாக வாழ்த்தத் தக்கவர் ஆகின்றார். மனிதர்கள் அன்பும் கருணையும் மிக்க செயல்களைச் செய்யும் போது அவர்கள் கடவுளின் இயல்பைப் பெறுகிறார்கள். அக்கடவுட் தன்மை துர்க்கா துரந்தரியிடம் அபரிமிதமாகவே உண்டு.

இன்று ஈழநாட்டின் வடபுல எல்லைக் கிராமமாக விளங்கும் தெல்லிப்பழையில் அமைதியுடன் அமர்ந்து பகையுள்ள இடத்தில் அன்பையும், தவறுள்ள இடத்தில் மன்னிப்பையும், பிளவுள்ள இடத்தில் ஒற்றுமையையும், ஐயம் உள்ள இடத்தில் உறுதியையும், விரக்தி உள்ள இடத்தில் நம்பிக்கையையும், இருள் உள்ள இடத்தில் ஒளியையும், மருள் உள்ள இடத்தில் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்

என்றார் வள்ளுவர்

சமூகப் பணிகளில் ஈடுபடும்போது தாமே அதிக நன்மை பெறுகிறோம் என்பதைப் புத்திசாலிகள் புரிந்து கொள்கிறார்கள். ஏனெனில் தாக்கம் ஒவ்வொன்றும் மறுதாக்கம் ஒன்றைக் கொண்டது என்பது மனிதருக்கும் பொருந்தக் கூடியது. நன்மை என்ற தாக்கத்திற்கான மறுதாக்கம் நன்மையாகவே இருக்க முடியும். ஏனைய உயிர்களுக்கு உதவி செய்யும்போது ஒருவரது சுய எண்ணம், சுய கணிப்பு, சுய கௌரவம், மகிழ்வு, வாழ்வுக்காலம் என்பன அதிகரிக்கின்றன.

இதை நன்கு உணர்ந்து 'தங்கத் தலைவி' அவர்கள் செயற்படுகிறார்.

இரண்டு கப் பொறுமை - இதயம் நிறைய அன்பு,

இரண்டு கை நிறையத் தர்மம் - தலை நிறைய விளங்கிக் கொள்ளும் பண்பு,

சிறிதளவு புன்முறுவல் - கருணை தூவி

அதிகளவு நம்பிக்கை போட்டுக் குழைத்து வாழ்நாள் என்ற பலகையில் பரவி எல்லோருக்கும் வழங்குகிறார்.

பெண்ணல்லவா? நல்ல சுவையாக இருக்கிறது. ஆரோக்கியமான முதுமை பற்றிச் சமூகவியல் அறிஞர்கள் பலரும் பேசுகிறார்கள். ஏனெனில் உலகில் பல நாடுகளிலும் மொத்தச் சனத்தொகையில் முதியோர் நூற்றுவீதம் அதிகரித்து வருகிறது. ஆரோக்கியமான முதுமைக்கு 'வாழும் மாதிரி' வேண்டுமா? தெல்லிப்பழைக்கு வந்து எங்கள் அம்மாவைப் பாருங்கள் எண்பது வயதிலும் எத்தனை அருஞ் செயல்கள்!

கூடை நிறைய மலர்களைச் சுமந்து கோயில் செல்கிறோம். சிலையின் காலடியில் மலர்களைக் கொட்ட! தங்க மலரே! உங்கள் காலடியில் எத்தனை சிலைகளைக் கொட்டலாம்?

அம்மா, ஆங்காங்கே தெரிந்த சிறு பொறிகளை இணைத்து வெளிச்சமாக்கினீர்கள். வெளிச்சங்கள் எல்லாம் உலகெங்கும் பரந்து எமது மனங்களை இன்று வெளிக்க வைக்கின்றன. சமயம், சமூக சேவை, பக்தி, தர்மம், பிரசங்கம், கோயில், அறம், திருவிழா, கல்வி, பெண்கள் பிரச்சினை, பெற்றோரியம் என்று இணைய முடியாதிருந்த புள்ளிகளை எல்லாம் இணைத்துக் கோலம் போட்டீர்கள்.

ஆயிரம் விளக்குகளால் நாள்தோறும் பொலியும் அன்னை துர்க்கா ஆலயத்தில் தூண்டா விளக்காய்ப் பொலிவது தாங்கள் தான் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கு எண்பது வயது நிறைவாகிறது என்ற செய்தி இனிப்பாக வருகிறது. வானில் இருந்து மென் பஞ்சினைக் குழைத்துத் தெய்வீக வெண்மையைச் சேர்த்து அழகைக் கூட்டி வாரி இறைக்கிறது இயற்கை. வானையும் பூமியையும் இணைக்கும் வைரச் சரங்களென அருள்மழை கொட்டுகிறது. சூழ்ந்திருக்கும் அநீதிகளால் மாசடைந்த காற்றையெல்லாம் தங்கள் அறக்கொடை வடிகட்டிவிட ஒரு சுகம் தரும் சுகந்தம் வீசுகிறது. கூட்டுணர்வும், மதிப்பும் நேர்மையுமென மின்னி மயக்கும் நட்சத்திரக் கூட்டம் நடுவே நிதானமான நிலாவாக நீங்கள். தெய்வ தச்சன் செய்தது போலச் செம்மை செதுக்கி அடுக்கிய சூழலில் தங்கள் தரிசனம்.

எங்கள் மனச் செடியில் மலர்ந்த மணம் வீசும் மல்லிகை மலர்களை உங்கள் பாதங்களில் கொட்டுவோம். மனசுக்குள்ளே ஆயிரம் மத்தளம் கொட்டி வாழ்த்துவோம்.

ஆயிரக் கணக்கான மக்களின் வாழ்வுப் பாதைக்குப் பௌர்ணமி ஆனவரே, வாழ்க இன்னும் பல நூற்றாண்டு!.

(2005)

## எழுத்துரு எழுதி நெறியாள்கை செய்த நாடகங்கள் :-

11. மீண்டும் நிலவு பொழியும் – (ஆசிரியர் தினவிழாவில் அம்பனைக் கொத்தணிக்காக – 1991)
12. விடிவெள்ளி காலிக்கும் – (இந்துமகளிர் கல்லூரி மண்டபம் வட இலங்கை சங்கீத சபை வைரவிழா – 6.8.1991)
13. மலையும் மடற்பனையும் – (ஆசிரியர் தினவிழாவுக்காக மானிப்பாய் மெமோரியல் கல்லூரி மண்டபத்தில் – 1993)
14. குரவி கூவ மறந்ததோ? – (பண்டத்தரிப்புக் கோட்டத் தமிழ்த்தினப் போட்டிக்காக யூனியன் கல்லூரி மண்டபத்தில் – 1993)
    – (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் விழா 7.4.1994)
15. ஆசிரிய வாண்மை – (ஆசிரியர் தின விழாவுக்காக மருதனார் மடத்தில் தற்காலிகமாக இயங்கிய மகாஜன மண்டபத்தில் – 1994)
16. இருட்டுக்குள் சுருட்டி – (தெல்லிப்பழை துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் 15வது ஆண்டு விழாவுக்காக இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் – 1995)
17. ஞானவிளக்கு – (ஆசிரியர் தினப் போட்டிக்காகத் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில், தெல்லிப்பழை சைவப் பிரகா வித்தியாசாலையால் தயாரிக்கப்பட்டுப் பரிசு பெற்றது – 1997)
18. முரண்பாடுகள் – (தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் ஆசிரியர் கல்வித் துறையினர் யூனி செப்புடன் நடத்திய கருத்தரங்கில் மேடையேற்றம் – 1997)
19. மல்லிகா மாப்பிள்ளை ஸ்ரோஸ் –(தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் மேடையேற்றப்பட்டது – 1998)
20. பாலாய் நிலவு பொழியும் – (இணுவில் மத்திய கல்லூரியில் கவிதை நாடகமாக மேடையேற்றப்பட்டது – 1999)
21. சந்தோஷம் – (கைதடி முதியோர் பாதுகாப்பு இல்லத்தில் முதியோரை மகிழ்வு படுத்தச் செய்யப்பட்டது – 1999)
22. இலக்குப் புள்ளி – (வடக்குக் கிழக்குக் கல்வி அமைச்சின் செயலாளரை வரவேற்கும் பொருட்டு வட இலங்கைச் சங்கீத சபை ஏற்பாடு செய்த நிகழ்வில் மேடையேற்றப்பட்டது – 1999)
23. கேள்விகளின் முழக்கம் – (வட இலங்கைச் சங்கீத சபையின் கலா வித்தகர் பட்டத் தயாரிப்பு – 2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயக் கட்டுரை

# மகளிர் வாழ்வியலில் சமயம்

சமயம் என்ற சொல்லின் பொருள் திருநெறி அல்லது செந்நெறி என்று கொள்ளலாம். மனித வாழ்வு தோன்றிய காலத்தில் இருந்தே இவ் வாழ்வை நெறிப்படுத்தல் அவசியமானது என்ற கருத்தும் சேர்ந்தே வளர்ந்து வந்துள்ளது. நேர்த்தியான வழி ஒன்றை வாழ்வில் பின்பற்றுவது அவசியம் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டவர்கள் ஏதோ ஒரு சமயத்தைப் பின்பற்றி வருகின்றனர். சம காலத்திலே சமய நம்பிக்கை எதுவும் இல்லாதோரின் (Atheist) எண்ணிக்கை உலகில் வேகமாக அதிகரித்து வருகிறதென்ற உண்மையை மனித வாழ்வில் நெறிகள் சரிந்து இன அழிவு அண்மித்து வருவதன் சுட்டியாகக் கொள்ளலாம்.

இந்து சமயம் தொன்மையான ஒரு சமயம். மகளிர் வாழ்வியலில் அதன் தாக்கத்தைப் பின்வரும் தலைப்புகளூடாகப் பார்க்கலாம்.

1) இறைவன் பெண்மையாகக் காணப்பட்ட முறை
2) சமய நூல்கள் காட்டும் பெண் பாத்திரங்கள்.
3) சமயம் தோன்றிய காலத்தில் பெண்களின் வாழ்வு முறை.

**இறைவன் பெண்மையாகக் காணப்பட்டமுறை:-**

சொல்லும் போதெல்லாம் நாவில் அமுதுறைகின்ற இனிய சொல் அம்மா, அதுவே மனித உயிர்களின் முதற் சொல். உயிர்களின் தொடர்ச்சி என்பது தாய் ஊடாகவே நிலைபெறுகிறது. XX நிற மூர்த்தங்களைக் கொண்டிருப்பதாலே உயிரியல் நிலையில் முழுமையானவள் தாய்.

இத்தகைய பின்னணியில் இறைவனைத் தாயாகவே கண்டது எங்கள் சமயம். உயிர்களைப் பக்குவப் படுத்தி முத்தி வழங்கும் நிலையில் இறைவன் முதலில் எடுப்பது தாய் வடிவம் என்று எழுதுகிறார் சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள்.

"சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்று கூறும் சைவ சித்தாந்தம் இறைவன் தாயாக நின்று ஆன்ம கோடிகளைப் பற்றறுக்கிறான் என்று கருதுகிறது.

தாயை அணுகித் தமது தேவைகளைக் கேட்பதற்குக் குழந்தைகள் ஒரு போதும் அஞ்சுவதில்லை. அதே போலவே ஆன்ம விடுதலை என்ற தமது தேவையை உயிர்கள் எப்போதும் தாய்மையாகிய இறையிடம் வேண்டலாம் என்பதால் தான்,

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்றும் "தாயாய் முலையைத் தருவானே" என்றும் "தாயாகி என்னை வளர்த்தனை போற்றி" என்றும் மணி வாசகர் உருகினார்.

"என்றாயுமாய் எனக் கெந்தையுமாய்" என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாயானைத் தவமான தன்மையானை" என்றும் அப்பர் பெருமான் ஒரு "upper" ஆன நிலையில் நின்று பேசினார்.

இதே சிந்தனையே,
"தாயாகித் தந்தையுமாகித் தாங்குகின்ற எனது தெய்வம்" என்று வள்ளலாரைப் பாட வைத்தது.

எமது சமய தத்துவத்தின்படி, தீயும் வெப்பமும் போல சிவமும் சக்தியும் வேறறக் கலந்து நிற்பவர்கள், என்பதை "சத்தன் அருள்தரின் சத்தி அருளுண்டாம். சக்தி அருள் தரின் சத்தன் அருளுண்டாம்" என்று தெளிவுபடுத்துகிறது திருமந்திரம்.

இறைவனைத் தாயாகப் பார்க்கிற இந்தப் பண்பு வாழ்வியலிலே பெண்களின் உளச் சக்தியை அசைக்க வல்லது. எம்மிடத்திலே ஒரு இறை சக்தி இருக்கிறது என்று எண்ணச் செய்து, அவர்களின் சுய மதிப்பீட்டை உயர்த்த வல்லது. இறை குணங்களைக் கொண்ட ஆளுமையோடு அவர்களை வளரத் தூண்டுவது. பெண் பிள்ளைகளுக்கு உமா, உஷா, கௌரி, சரஸ்வதி, லட்சுமி, மகேஸ்வரி என்று தேவியின் பெயரை வைத்து அவர்களைச் சுட்டி அழைக்கும் போது ஆழ்மனம் ஒரு உயர்ந்த பிம்பத்தை ஏற்படுத்தும்.

இறைவனைத் தாயாகக் கண்டவர்கள் பெற்ற பேறுகளைப் பற்றியும் இந்து சமயம் எடுத்துக்கூறியுள்ளது. சீர்காழியில் ஞான சம்பந்தர் "அம்மா" என்றழைத்து ஞானப்பால் உண்டார் .

காஞ்சி புரத்தில் 1500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சீகர் என்ற பேச்சு வலுவிழப்பைக் கொண்ட அடியவர் சக்தியை வழிபட்டுப் பேசும் திறன் பெற்றதோடன்றி "ஸ்ரீ முகபஞ்ச துதி"யையும் பாடினார்.

300 ஆண்டுகளுக்கு முன் திருக்கடவூரில் வாழ்ந்தவர் அபிராமிப்பட்டர். அபிராமி அந்தாதியில் "விழிக்கே அருளுண்டு" என்ற பாடலைப் பாடி, அமாவாசை தினத்தில் ஒளி தோன்றச் செய்த அருளாளர்.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த காளி உபாஷகர் இராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றி அறியாதார் இல்லை.

இந்துக்கள் துறவறம் பூண்ட நிலையிலும் தாயின் அன்பினால் திணறிப் போன வரலாறுகளையும் எமது சமயம் கண்டுள்ளது.

"காதற்ற ஊசியும் வாராது காண் எம் கடை வழிக்கே" என்று கூறி உலகப் பற்றை முழுமையாகத் துறந்து வாழ்ந்த பட்டினத்தார் தமது அன்னையார் இறந்த போது கதறி அழுத செய்தியை எமது சமயம் பேசுகிறது.

கேரளம் ஈந்த முனிவர் ஆதி சங்கரரும் துறவு நிலையில் இருந்தபோதும் தாயின் உடலைச் சுமந்து சென்று சிதையில் இட்டுத் தீ மூட்டிய வரலாறு எம்முடையது.

ஆகவே "தாயினும் நல்ல தலைவர்" என்று இறைவனைப் போற்றும் எமது சமயத்தை நன்கு புரிந்து கொண்டவர்கள் பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருத மாட்டார்கள்.

**(ii) சமய நூல்கள் காட்டும் பெண் பாத்திரங்கள்.**

வேத காலத்துப் பெண் பாத்திரங்களில் ஒருத்தி கேல அரசனின் மனைவி விஸ்பவா, போர்க்களத்தில் கணவனுக்கு உதவியாக நின்று செயற்படுகிறாள். எதிரிகளைத் தாக்கி அழிப்பதற்காக அவள் கடும் போர் புரிந்ததில் அவளது கால் ஒன்று இழக்கப்படுகிறது. அந்த நிலையிலும் அஸ்வினி தேவர்களின் அருளால் இரும்புக் கால் ஒன்றைப் பொருத்திக் கொள்கிறாள். மீண்டும் பகைவர் பயந்தோடும்படி போர் செய்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்கலவரின் மனைவி முத்கலானி. இவள் போர்க்களத்திலே வீரப் போர் புரிந்த முறை இவ்வாறு வர்ணிக்கப்படுகிறது "காற்றில் மேலாடை வீசிப்பறக்க, அம்புகளைச் சரமாரியாகப் பொழிந்து தோற்றோடும் பகைவர் கதிகலங்கத் துரத்திச் சென்று கொன்று குவித்தாள்."

"fight or flight" என்ற நிலையிலே, போரிட்டு வென்றால்தான் உயிர் வாழலாம் என்ற தவிர்க்கமுடியாத சந்தர்ப்பத்தில் அதனைச் செய்வதில் பெண்கள் ஆண்களுக்குக் குறைந்த வர்களாக இருக்கவில்லை என்ற செய்தி இப்பாத்திரத்தினூடு புலப்படுகிறது.

பல்லவர் காலத்துப் பாத்திரங்கள் பெண்களைச் சமயம் வளர்க்கும் நிலையில் சித்திரித்தன. சேக்கிழார் பெரிய புராணத்தில் இடம் பெறும் மங்கையர்க்கரசியார், திலகவதியார், காரைக் காலம்மையார் ஆகிய பாத்திரங்களை நாம் இந்த வகையில் நோக்கலாம்.

பொதுவாகச் சமூகத்தோடு ஒத்து இயங்குவதே ஆரோக்கியமான நிலை என்றாலும், சமூகம் நோயுற்றிருக்கும் போது தனித்தியங்குவதே ஆரோக்கியமானது என்ற சமகால உளவியல் கருத்துக்கு வலுச் சேர்த்த பாத்திரம் மங்கையர்க் கரசியார். கணவரும் நாட்டு மக்கள் அனைவரும் சென்ற பாதை தவறானது எனத் தெரிந்த போது, தான் தனித்து நின்று அவர்களை வழிப்படுத்திய உளவலுமிக்க பாத்திரம் அது. அதனால்தான் "தென்னர் குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை" ஆனார்.

தனது பாலியல் தேவை பூர்த்தி செய்யப்படாத விடத்து சமூக நெறி பிறழ்வுக்கு உட்படாமல், தனது உணர்வினைச் சிதற விடாமல், அனைவருக்கும் பயனுள்ளதொரு வாழ்வு வாழ்ந்த அப்பர் பெருமான் போன்ற ஆளுமை மனிதர்களை உருவாக்கலாம் என்ற கருத்தை எமக்கு அறிவுறுத்தும் பாத்திரம் திலகவதியார். பெற்றோர் இல்லாத நிலையில் திலகவதியாரும் கைவிட்டிருந்தால் தமது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஒரு பாலியக் குற்றவாளியாக அப்பர் பெருமான் மாறியிருக்கக் கூடும்.

ஆன்மிக ஆரோக்கியம் போதியளவு இல்லாத ஒருவர் கணவராக வாய்க்கு மிடத்து இல்லற வாழ்வு இனிமையற்றுப் போகக் கூடும். அந்த நிலையிலும் இறைவன் மீது நம்பிக்கை வைத்து தனது உணர்வுகளை பக்திப் பாடங்களிலே வெளிப்படுத்தி (வெளிப்பாட்டுச் சிகிச்சை)த் தனக்கும் சமூகத்துக்கும் பயனுள்ள அர்த்தமுள்ள வாழ்வு வாழ முடியும் என்ற செய்தி காரைக் காலம்மையார் வாழ்வின் ஊடு பெறப்படுகிறது.

''மெய்யொளிசேர் கண்டத்தான், என் நெஞ்சத்தான் என்பன் யான்'' என்று சொல்லித் தன் உணர்வுகளைச் சமப்படுத்திக் கொள்ளும் உயர்ந்த பாத்திரம் அது.

புராணங்களில் மாத்திரமல்ல இதிகாசங்களில் வந்த பாத்திரங்களும் எமக்குப் பல செய்திகளைத் தந்தன.

குந்திதேவியார் திருமணமாகு முன்னர் கட்டிளமைப் பருவத்தில் தனது உணர்வுகளுக்கு அடிமைப்பட்டுப் போனதால் (Premarital Relation ship) எத்தகைய பெரும் குழப்பம் நேர்ந்தது. கர்ணன் என்ற குழந்தை அதன் நிமித்தம் எவ்வளவு மோசமான மனவடுவைச் சுமக்க வேண்டி வந்தது? இந்தக் காலத்திலும் சரி அந்தக் காலத்திலும் சரி, கட்டிளமைப் பருவத்துப் பெண்களுக்குப் பாலியல் கல்வி ஊட்டப்பட வேண்டும். பாலியல் தொடர்பான விழிப்புணர்வு ஊட்டப்பட்டிருக்க வேண்டும் ஆகிய விடயங்கள் மிகக் காத்திரமாக எமது சமயத்தினூடு சொல்லப்படுவதாக நாம் கொள்ளலாம்.

அந்த இதிகாசத்தின் பாஞ்சாலி என்ற பெண் பாத்திரத்தினூடு மற்றொரு கருத்து முன்வைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்படுகிறது. இந்தக் காலத்தில் எயிட்ஸ் நோயில் இருந்து தப்பி வாழ்வதற்கு மட்டுமல்ல இந்தக் காலத்திலும் அந்தக் காலத்திலும் ஒருவன் ஒருத்தி வாழ்வே அமைதியான வாழ்வு. ஐவருக்கு மனைவியாக வாழ்ந்ததால் போலும், மிக இக்கட்டான சூழ்நிலையில் அவளை எல்லோருமே கைவிட்டுவிடக் கடவுள் கை கொடுத்து உதவினார். அர்த்த நாரீஸ்வர வடிவத்தில் இருந்து பாஞ்சாலியின் கதை வரை எமது சமயம் ஒன்றுக்கு ஒன்றாகும் நிலையையே அழுத்தி வந்திருக்கிறது.

மற்றொரு இதிகாசமான இராமாயணம் பெண் ஒருத்தி உறுதியான ஆளுமை இல்லாமல் (Assertive Personality) எதற்கும் பணிந்து போகும் இயல்புள்ள (Passive type) வெகுளியாக இருக்கும் போது எத்தகைய பிரச்சினைகள் நேரும் என்பதைத் தெளிவு படுத்துகிறது. உறுதியான ஆளுமை பெண்ணுக்கு இருக்கும் போது ஏற்படும் நன்மையைப் புரியவைக்கும் பாத்திரம் திருநீல கண்டர் மனைவி. கணவரின் தகாத நடத்தையை அவர் எல்லோருக்கும் சொல்லித் திரியவில்லை. அதை ஏற்றுக் கொண்டு குடும்ப ஆரோக்கியம் குலைந்து போக அனுமதிக்கவுமில்லை.

"தீண்டுவீராகில் எம்மைத் திருநீலகண்டம்" என்ற ஒரே ஒரு உறுதியான வசனத்துடன் பிரச்சினையைத் தீர்த்த புத்தி சாலிப் பெண் பாத்திரம் அது.

கணவரது செயற்பாடுகள் இல்லற மேன்மை சார்ந்து அமையும் போது அதற்கு முழு ஒத்துழைப்புக் கொடுக்கும் பாத்திரங்களும் புராணங்களில் உள்ளன. இளையான் குடி மாற நாயனார் மனைவி அதற்குச் சிறந்த உதாரணம். சொர்க்கமும் நரகமும் எமது மனத்திலேயே உண்டு என்று சொல்லப்படுவதற் கேற்ப, வறுமையிலும் ஒரு ஆரோக்கியமான பெண் செம்மையைக் காண்பாள் என்ற உண்மையைச் சிறப்புற எடுத்துக் காட்டும் காட்சியை அங்கு தரிசிக்கலாம்.

பெண்கள் நல்ல சீர்மியராய் இருந்த நிலைமையையும் இந்து சமயம் ஆங்காங்கு தொட்டுச் செல்கிறது. யாருக்கும் பணியாது, ஆக்ரோஷ நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கள்வனாக வாழ்ந்த நீலனைத் தன் ஆடல் கலையால் வென்று, திருமால் அடிகளில் சரண்புகச் செய்து திரு மங்கை யாழ்வாராக மாற்றினாள் குமுத வல்லி என்ற பெண்.

இராம்போலா என்ற பெண்ணாசை கொண்ட சாதாரண மனிதனைத் துளசி தாசர் ஆக்கியதுடன் எமக்கு "இராம சரித மானசமும்" கிடைக்கச் செய்தவர் இரத்தினா வளி என்ற மங்கை

(iii) சமயம் தோன்றிய ஆதி காலத்துப் பெண்களின் வாழ்வு முறை

எமது சமயத்தின் முதல் நுல்களில் ஒன்றாகிய வேதங்கள் தொகுக்கப்பட்ட காலத்தை கி.மு.1300 - கி.மு900 எனக் கொள்ளலாம். பண்டைய ஆரிய சமுதாயம் பற்றிய தகவல்களைக் கொடுக்கும் முதல் இலக்கியச் சான்று வேதப் பாடல்களே. அதிலும் ருக் வேதம் எமக்கு ஏராளமான சான்றுகளைத் தருகிறாது.

"ருக் வேத காலத்துப் பெண்கள்" என்ற நூலுக்கு முன்னுரை எழுதிய டாக்டர்.இராதாகிருஷ்ணன் அக்காலத் திருமணத்தை இவ்வாறு வரை விலக்கணப்படுத்துகிறார்.

"திருமணம் என்பது வெறும் இயல்பூக்க விவகாரமன்று. ஆனால் இயல் பூக்கத்தை அடிப்படையாகக் கொண்டு நிறுவப் பெற்ற ஓர் ஒழுங்கு முறை. இரு வேறு உள்ளங்களின் ஆளுமை ஆற்றல்கள் ஒருவருக் கொருவர் என்று பிணையும் அனுபவங்களின் மகிழ்ச்சியும் காதலும் துன்பமும் உடன் பாடுகளும் துயரங்களும் அடங்கியவை"

இந்தக் குறிப்பில் தற்கொண்டான் ஒருவனிடம் பெண் தன்னை முற்றிலுமாக இழந்துவிட வேண்டும் என்ற கருத்தின் இழை கூட இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகெங்கிலுமுள்ள ஆதிக்குடியினரிடையே மனித சமுதாயத்தின் இனக் குழு நாகரிகம் சார்ந்த சமயச் சடங்கினைப் பெண்களே நிறைவேற்றினர் என்பது தெளிவாகத் தெரிகிறது.

உபநயனம் என்ற சடங்குடன் கல்விப் பயிற்சி ஆரம்பமாகும் நிலை வேதகாலப் பெண்ணுக்கும் இருந்தது. உபநயனம் என்ற சொல்லுக்கு இன்னொரு கண்ணைக் கொடுத்தல் என்று பொருள். உபநயனம் என்பது ஆணுக்கு மட்டுமே உள்ளது என்பதும் முப்புரி நூல் தரிப்பதும் இடையில் வந்த வழக்குகளே. அக்காலத்தில் பொதுவாக உலகியல் கல்வி, ஆன்மிக அறிவுக்கான தேடல், போர்க்கலை ஆகிய எல்லாப் பிரிவுகளுமே பெண்ணுக்கு மறுக்கப்பட்டிருக்கவில்லை. அவளுக்கு கல்வி, கேள்வி, வாழ்க்கை இன்பம் ஆகிய உரிமைகள் பூரணமாக இருந்தன.

பெண்ணின் அறிவுக் கண்ணைப் பூவாலும் பொட்டாலும் பொன்னாலும் பட்டாலும் குருடாக்கித் திருமண பந்தத்தில் ஆணியிட்டு இறுக்கி விடும் நிலை பின்னர் வந்த ஒன்றே.

இக்காலத்தில் வழிபடப்பட்ட அதிதி என்ற தேவதை, தாயின் முழு வடிவம். அதிதி என்ற சொல்லுக்கு, எல்லையற்றவள் கட்டுப்பாடற்றவள் சுதந்திரமானவள் என்று பொருள்.

இந்த விம்பம் இக் காலப் பெண்களின் ஆரோக்கியத்திற்குப் பெருத்த உந்து சக்தியாக இருந்திருக்கிறது.

உபநிடதத்திலும் பெண்கள், மேலான நிலையில் வைத்துக் கூறப்பட்டுள்ளனர். அவர்களுக்குப் புரோகிதர்களாகும் வாய்ப்புக் கொடுக்கப்படா விட்டாலும் தவ வாழ்வு மேற்கொள்ளும் உரிமை இருந்தது.

வேதத்தைப் படிப்பதற்குப் பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்ட காலம் எமது சமய வழியில் இருண்ட காலம். அந்த இருளின் தொடர்ச்சி பல்வேறு சமயநூல்களிலும் இலக்கியங்களிலும் வெளிப்பட்டு அதன் விளைவாக இன்று எமது பெண்கள் மனச் சோர்வு, மெய்ப்பாட்டு அறிகுறிகள் போன்ற உள ஆரோக்கியமற்ற நிலையில் வாழ்வது கவலைக்குரியது. ஆயினும் இந்த நிலையில் இருந்து மீள்வதற்குரிய ஆழ்நிலைத் தியானம், பிராணாயாமம், யோகாசனம் போன்ற தளர் நிலைப் பயிற்சிகளுக்கான முக்கியத்துவமும் எமது சமயத்தில் உண்டு.

வானகத்தின் சரிபாதி பெண்கள். அவர்களது முன்னேற்றம் ஒரு சமுதாய முன்னேற்றம். ஆகவே எமது சமயம் காட்டுகிற முன்னேற்றப் பாதைகளைப் பிடித்துக் கொண்டு அல்லவற்றை விலக்குவோம்.

## எழுதப்பட்ட சிறுகதைகள்

1. அன்பிற்கு முன்னால் – 1972, குயில்
2. நாள்தோறும் அற்புதம் – 1972 மார்கழி, குயில்
3. அவன் ஏன் வாழ்கிறான் – 1975
4. ஏன் காதலித்தாய்? – 1975
5. இதுவும் சிரிப்புத் தான் – மலைக்குருவி 1975
6. உன்னத தரிசனம் – 25.5.1976 இலங்கை வானொலி
7. தண்டனை அது எனக்கு வேண்டியது தான் – 28.6.1976 இளவேனில்
8. ஒலிக்காத ஓலம் – 31.12.1978 ஈழநாடு
9. ஒரு ஏக்கம் மடிகிறது – 04.02..1979 ஈழநாடு
10. பொருத்தங்கள் – 1979 ஒக்டோபர் மல்லிகை
11. மனத்திருப்பம் – 1979 யூலை மல்லிகை
12. உறுத்தல் வருடப்படுகிறது – 1979 எழில்
13. பலியாடுகள் – 9.9.1979 ஈழநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் கண்ட ஒரு கற்பனைச் செவ்வி

## மெய்கண்ட நங்கையுடன் ஒரு செவ்வி

கோகிலா :- வட்ட விழிகள். வரம்பாய் இரு புருவம். பட்டுடலம், தேனைப்பழிக்கு மொழி, கட்டிளமைப் பருவம், கவிதை வனப்புக் கொண்ட உங்களைச் சந்திப்பது எனக்கு ஓர் இனம் புரியாத பரவச உணர்வைத் தருகிறது. வணக்கம் அம்மா!

மெய்கண்ட நங்கை :- வணக்கம் (புன் முறுவல் பூக்கிறார்) என்ன கேட்கப் போகிறீர்கள் என்னிடம்?

கோ : காவியம் போல் இனிக்கிறது உங்கள் சிரிப்பு. அந்தப் போதையில் நான் ஆயத்தமாகி வந்த கேள்விகளையே மறந்து விடுவேன் போலிருக்கிறது. உங்கள் சிரிப்பை ஒரு வார்த்தையாய்ச் சேர்த்துக் கொள்ள அகராதி ஆசைப்படும். "அந்தச் சிரிப்பின் இரகசியம் என்ன?" என்பதையே முதலாவது கேள்வியாக வைத்துக் கொள்வோமே!

மெ : நீங்களே சொன்னீர்கள் கட்டிளமைப் பருவம் என்று! மனிதர்களுக்குக் கட்டிளமைப் பருவம் ஏழு வருடங்களே நீடிக்கும். எனக்குக் கடந்த நாற்பது வருடங்களாக நீடிக்கிறது. இன்னும் தொடரப் போகிறது. அது தான் இரகசியம்!

கோ : மழை கண்ட கழனியாய்ப் பூரித்துள்ள உங்கள் வாழ்வை முழுமையாகப் பார்க்க ஆசைப்படுகிறோம். நீங்கள் எங்கே பிறந்தீர்கள்?

மெ : இளவாலையில் - இள வாலையாக அல்ல - குழந்தையாகத் தான்! அம்பலவர் வளவிலே! அந்தக் காலத்தில் (1922:) ஆஸ்பத்திரி வசதிகள் குறைவுதானே! (மீண்டும் சிரிக்கிறார்)

கோ : உங்களை ஏன் இறைவன் படைத்தான் என்று நினைக்கிறீர்கள்?

மெ : என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே!

இறைவன் யார் தெரியுமா? ஏழூர் இராசரத்தின மா மகிபன்; தமிழ் செய்தல் என்றால், தமிழில் ஏழைப்பிள்ளைகளுக்கு அறிவூட்டல் என்று கொள்ள வேண்டும்.

கோ : தமிழ் செய்தல் என்பதற்கு அன்பு செய்தல் என்றும் ஒரு பொருள் உண்டாமே!

மெ : அறிவூட்டுபவன் அன்பு செய்யத்தானே வேண்டும்! எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்பதையும் மறந்து போய் விட முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோ : மெய்கண்டான் என்ற உங்கள் பெயரின் பொருள் என்ன?

மெ : மெய்கண்டார் அருளியது சைவ சித்தாந்தப் பொக்கிஷமான சிவஞானபோதம். மெய்கண்டான் அருளுவதோ உயிருள்ள மாணவப் பொக்கிஷங்கள். பண்டைத் தமிழரது செந்நெறிக் கொள்கையாகிய சித்தாந்த ஞானத்தை உலகில் நிலை நாட்டுவான் வந்த அருட் பேராசிரியர் மெய்கண்டார். இளவாலை வாழ் ஏழைத் தமிழ்க் குடும்பங்களிற் சைவத்தமிழ் ஞானத்தை நிலைநாட்ட வந்தவள் நான்!

கோ : உங்கள் தந்தை ஏழூர் இராசரத்தினம் அவர்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்!

மெ : ஏழூரைப் போல எடுத்த கருமத்தை
வாழ்வூரச் செய்யும் வலிபடைத்தேர் - யாழூரில்
யாரையுமே காணோம் இளவாலை ஈன்றெடுத்த
தீரரிவ ரென்கை தெளிவு

என்று பண்டிதமணியே கூறியுள்ளார். பிறகு அதன் மேல் நான் என்ன சொல்ல? என்றாலும் ஒன்று சொல்வேன். என்னை உருவாக்கவேண்டி, அம்மாவின் மாங்கல யத்தைக் கூடத் தயக்கமின்றிப் பயன் படுத்திய தீரர் அவர்.

கோ : நீங்கள் அருளுவது உயிர் உள்ள நூல்கள் என்று சொன்னீர்கள்?

மெ : ஆம். காலம் சென்ற புகழ்பெற்ற சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் சு.பொன்னம்பலம் முதல், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவத்துறைப் பீடாதிபதி டாக்டர்.க.பாலசுப்பிரமணியம் வரை பல உயிருள்ள நூல்கள் இன்னும் இன்னும் வந்து கொண்டே இருக்கின்றன!

கோ : சைவ வித்தியா விருத்திச் சங்கத்தாருக்கும் உங்களுக்கும் உள்ள உறவு எத்தகையது?

மெ : அது 1926ம் ஆண்டு - சற்றுப் பொறுங்கள். நினைவுப் பூண்டு என் மனப் புழுதியில் முளைவிடுகிறது. உயர் குடும்பங்களின் உறைவிடமான இளவாலை மதமாற்றச் சிறையில் அகப்பட்டுத் தத்தளிக்கும் காலம்! இளவாலைப் பக்கம் தலையல்லக் கால் கூட வைக்க முடியாது என்று நினைத்திருந்த 'சைவ வித்தியா விருத்தியார்' எனக்காகத்தான் எங்கள் ஊருக்குள் நுழைந்தார். அவர் என்னைப் பதிவு செய்து, வளர்ப்புப் பிள்ளையாய்த் தத்தெடுத்துக் கொண்டதால், எனக்கு 'உதவி நன்கொடை' கிடைத்தது.

கோ : சாப்பாட்டுக்குப் பணம் எப்படி.....?

மெ : ஓ. . . .நான் மிக வேகமாக வளரும் பிள்ளைப் பராயம். புரத உணவு நிறையத் தேவை, இல்லையா? வீடு தோறும் 'கன்னித் திங்கள்' பாடி நிதி திரட்டினோம். மீதிப் பணத்தில் ஏழைப்பிள்ளைகளுக்கு இலவசப்புத்தகங்களும் வழங்கினோம். 'வள்ளல்' தன்மை அப்போதே இருந்தது எங்கள் குடும்பத்தில்!

கோ : சிறு பராயத்திலேயே தங்களுக்குத் திருமணம் செய்யப்பட்டதாய் அறிகிறோம். அதைப் பற்றி.......?

மெ : உண்மைதான்! உள்ளதைச் சொல்வதற்கு ஏன் வெட்கப்பட வேண்டும்? எனது முதலாவது கணவர் வல்வெட்டித்துறை வே.கனகசபாபதி அவர்கள். நல்ல மனுஷன்!

கோ : திருமணம் முடிந்தால் தனிவீடு வேண்டுமே? எங்கே வீடு கட்டினீர்கள்? (தொடரும்)

(இளவாலை மெய்கண்டான் ம.வி பவளமலர் 1997)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் ஆறாந்தரத்தில் படித்தபோது அவர் பங்கு பற்றிப் பரிசுபெற்ற பேச்சுப் போட்டிக்காக எழுதிக் கொடுத்த பேச்சு

# விஞ்ஞானத்தின் விந்தைகள்

காட்டிலே விலங்குகளுக்குள் ஒரு விலங்காக வாழ்ந்த மனிதனை விண்வெளியைக் கடக்கு மளவுக்கு உயர்த்தியது விஞ்ஞானம். தன்னால் ஆக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தையும் கணப்பொழுதில் அழித்து உலகைச் சுடு காடாக்கப் போவதாய்ப் பயமுறுத்துவதும் விஞ்ஞானம். ஆக்கத்திலும் அழிவிலும் வாழ்வோடு பிரிக்க முடியாத வகையில் பின்னிப் பிணைந்து கிடப்பது விஞ்ஞானம். "ஆத்மிகம், விஞ்ஞானம், இலக்கியம் என்னும் முத்துறைகளின் கூட்டுறவாலேயே மனித வாழ்வு முழுமை பெறுகிறது" என்கிறார் பேரறிஞர் வினோபாவே.

அறிவுசார் விஞ்ஞான உலகம் ஓர் ஆழமான சமுத்திரம். அதனுள் அடங்கிக் கிடக்கும் ஆணி முத்துக்களோ அளப்பரியவை. அவற்றை எல்லாம் எங்கோ ஒரு மூலையில் ஏதோ ஒரு காலத்தில் யாரோ ஒருவர் மனிதருள் மாமனிதராகத் தோன்றி, ஆழ மூழ்கி, அயராது தேடி உலக நன்மைக்கு ஈந்துள்ளார். மனித குலம் உலகில் முளைவிடத் தொடங்கிய நாள் முதல் இன்று வரை மனித நாகரிக வளர்ச்சியின் கதையே விஞ்ஞானத்தின் கதை எனலாம்.

20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விஞ்ஞானம் செய்த விந்தைகள் பல. எம்மைச் சுற்றியிருந்த இருள் வெளியை நாம் ஊடுருவினோம். இப்போது எங்கள் கவனம் சூரிய மண்டலத்தில் மிகத் தொலைவில் உள்ள நெப்தியூன், புளுட்டோ போன்றவற்றைச் சுற்றி உள்ளது. நாஸா நிறுவனம் புளுட்டோவை இரண்டு முனையில் இருந்து ஆய்வு செய்ய ஆயத்தமாகிறது. புளுட்டோவுக்கு 'சரன்' என்னும் துணைக்கோளை விட வேறும் துணைக் கோள்கள் இருப்பதை ஒருவேளை இது கண்டு பிடிக்கும். புளுட்டோவின் வெப்ப நிலை + 342°F இல் இருந்து - 369°F வரை உள்ளது என்று அண்மையில் திரட்டப்பட்ட தகவலுக்கு மேலாகப் புளுட்டோவைப் பற்றி இன்னும் பல தகவல்களைக் கொண்டு வரும்.

தொழு நோய் என்பது மாற்ற முடியாத நோய் என்பதே மனிதர்கள் கொண்டிருந்த நம்பிக்கை. 1873 இல் நோர்வேயைச் சேர்ந்த ஆமர் ஹென்சன் என்பவர் தொழு நோய்க்குரிய பற்றீரியாவைக் கண்டு பிடித்ததோடு தொழு நோய் மாறும் சாத்தியம் மின்னத் தொடங்கியது. 1950 இல் தொழு நோய்க்கு எதிராக DDS என்ற மருந்து கண்டு பிடிக்கப்பட்டது. மிகப் பிந்திய செய்தி என்ன தெரியுமா? 1982இல் கண்டு பிடிக்கப்பட்ட UDT என்ற மருந்து தொழு நோயை ஆறு மாதத்தில் முற்றாக மாற்றக் கூடியது. இந்த மருந்து இப்போது இலங்கையிலும் பாவனைக்கு வந்து விட்டது.

"பிள்ளை இல்லையே?" என்ற கவலையால் வாடிய ஆயிரக்கணக்கான பெற்றோர் விஞ்ஞானம் தந்த பரிசோதனைக் குழாய்க் குழந்தையைப் பார்த்து ஆச்சரிய மிகுதியால் திறந்த வாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் மூடாதிருக்கின்றனர். விஞ்ஞானம் சென்ற நூற்றாண்டில் செய்த விந்தைகளில் பரிசோதனைக் குழாய்க்குழந்தையும் லேசர் கதிர் வீச்சும் நிச்சயம் இடம் பெறும். லேசர் கதிர் முறைச் சந்திர சிகிச்சையைக் குருதி சிந்தாத, வலி தெரியாத, எளிய முறையில் செய்யப்படும் சத்திர சிகிச்சை எனலாம். இதனால் பயன் பெற்ற நோயாளிகள் அனந்தம்.

அண்ட வெளியில் பரவியிருக்கும் சங்கீதம் அனைத்தையும் பிரித்து ஒலிப்பதிவு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை இந்த இலத்திரனியல் யுகம் எமக்குத் தந்திருக்கிறது. யேசுநாதரின் மலைப் பிரசங்கத்தை அப்படியே ஒலிப்பதிவு செய்தது போலக் கேட்கும் நாள் வெகுதூரத்தில் இல்லையாமே!

நீங்கள் நினைத்த வேலைகளை நினைத்தபடி செய்து முடிக்க ஒரு உதவியாளர் தேவை என்று நினைத்தீர்கள் அல்லவா? விஞ்ஞானம் உங்களுக்கு ஒரு பரிசு தரப் போகிறதாம். இதோ! ரோபோ!! வீடு பெருக்குகிறான், வீதி சுத்தமாக்குகிறான். உடுப்புகள் தோய்க்கிறான், உங்கள் தசைகளைப் பிடித்து விடுகிறான். உங்கள் கடையையும் பார்த்துக் காசு வாங்குகிறான். இதைவிட ஒரு சிறப்பான பரிசினை விஞ்ஞானத்தை விட வேறு யார் உங்களுக்குத் தருவார்கள்?

நாட்டிலே மழை பெய்ய வில்லையா? மழை இரங்கிப் பாடல் பாடுவதும், இந்திரனுக்கு விழா எடுப்பதும், கொடும் பாவி கட்டி இழுப்பதும் இன்று வெறுமனே இலக்கியச் செய்திகள். முகில் களுக்குள்ளே சென்று பாரமான உப்புகளைத் தூவிச் செயற்கை மழையைத் தோற்றுவிக்கும் முறையை விஞ்ஞானம் எமக்கு வழங்கி விட்டதே!

பூமியை நோக்கி வேகமாக வரும் வால்வெள்ளி ஒன்று பூமியுடன் மோதிப் பூமி சிதறிப் போகப் போகிறது என்ற பயமா? வால்வெள்ளி எப்போது மோதப் போகிறது என்று சரியாகக் கணிப்பது மாத்திரமன்றி இடை வெளியிலேயே அதனைத் தடுத்துத் திருப்பி அனுப்பக் கூடிய ஏவுகணைகளையும் விஞ்ஞானிகளால் ஏவ முடியுமாம். இவ்வாறு எந்தப் பேராபத்திலிருந்தும் எம்மைக் காப்பாற்றக் கூடிய விஞ்ஞானம் எம்மை விரைவாக அழிப்பதிலும் முன்னணி வகிக்கிறது. வான வெளியில் மேடை அமைத்து அதிலிருந்து எதிரி நாடுகளை ஏவாயுதங்களால் தாக்கும் திட்டம் உலகின் முன்னணி நாடுகளிடம் மறைமுகமாக உண்டு. அப்போது உலகம் முழுவதும் அழிய எவ்வளவு நேரம் எடுக்கும் தெரியுமா? ஆறு நிமிடங்கள் மட்டுமே. அணுவைப் பிளந்து ஆற்றல் காண்பதென்பது அறிவியல் வரலாற்றிலே ஒரு அடைபேறுதான். ஆனால் அச்சாதனையை வேதனையாக்கக் கூடாது விஞ்ஞானம்.

## எழுதப்பட்ட சிறுகதைகள்

14. தலை முறைகள் முரண்படும் போது – 15.4.1979 ஈழநாடு
15. மனித சொரூபங்கள் – 1979 வைகாசி சுடர்
16. கலைகின்ற வேஷங்கள் – 1979 ஆவணி சுடர்
17. ஒரு நெருடலும் ஓர் அசைவும் – 13.04.1980 ஈழநாடு
18. குரூர ரசனைகள் – 1980 ஆனி, சுடர் பரிசுக்கதை
19. எல்லைகள் – 1980 மார்ச், மல்லிகை
20. ஒரு பிணத்தின் தரிசனம் – நீர்ப்பாசனத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகப்போட்டிப் பரிசு – 1980
21. முரண்பாடுகளின் அறுவடை – 1980, சுடர் சிறுகதைப் போட்டிப் பரிசு
22. நிமிரும் ஊனங்கள் – 8.2.1981 ஈழநாடு
23. அர்த்தமற்ற ஒரு வாழ்வு அர்த்தமுள்ளதாகிறது – யாழ்பிறை – 1981
24. சடப் பொருள் என்றுதான் நினைப்போ? 1982 யூன் மல்லிகை
    1984 – பெண்ணின் குரல் மறுபிரசுரம்
    2009 மார்ச் – செங்கதிர் மறுபிரசும்
    30.8.2009 உதயன் மறுபிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதியில் செய்யப்பட்ட உரைச் சித்திரம்

# என்ன புண்ணியம் செய்தனை?

பாடல் :-

கைத்தல நிறைகனி அப்பமோடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் என வினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள் புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா
அத்துயரது கொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மண மருள் பெருமாளே.

உரை :-

சந்நிதி முருகனின் திருவடிகளை மனதில் நிறுத்தி, சந்நிதி ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையை வழி நடத்தும் சுவாமிகளுக்கும் பேரவை உறுப்பினர்களுக்கும் முருகன் அடியார்களுக்கும் எமது பணிவான வணக்கம்.

'என்ன புண்ணியம் செய்தனை?' என்ற தலைப்பில் இந்த அருமையான வெள்ளிக்கிழமை மதிய வேளையிலே உங்கள் முன் இந்த உரைச் சித்திரத்தைப் படையல் செய்ய நாம் என்ன புண்ணியம் செய்தோமோ?

இந்த உலகத்திலே மானிடராய்ப் பிறப்பதே அரிது. அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிதினும் அரிது. இறைவனைப் பாடிப் பரவிச் சந்தோஷமாய் இருக்க மனிதரால்தான் முடியும். சந்தோஷத்தை மற்றவர்களுக்கு கொடுக்கவும் மனிதனால் தான் முடியும்.

பாடல் :-

(உச்சாடன முறையில்)
சந்தோஷமாக இருப்போம்
சந்தோஷம் கொடுப்போம்.

உரை :-

கடவுளை முழுமையாக நம்புகிறவர்கள் எப்போதும் சந்தோஷமாகவே இருக்கிறார்கள். கடவுள் தந்த கொடுப்பனவு ஒவ்வொன்றையும் நினைத்து நினைத்து இறைவனுக்கு நன்றி சொல்ல வார்த்தைகள் இன்றிப் பரவசப்பட்டு நிற்கிறார்கள். அதனால்தான் சம்பந்தப் பெருமான் இவ்வாறு பாடினார்.

பாடல் :-

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி ஆதரித்தேத்தியும் பாடியும் வழிபடும் அதனாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை :-

முருகனை வாயாரப் பன்னி, ஆதரித்து, ஏத்திப்பாடி, வழிபட ஒரு புண்ணியம் இருக்க வேண்டும். எல்லாருக்கும் கிடைப்பதில்லை. கடவுளை நம்புவதாகத் தான் நாம் எல்லோரும் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் அந்த நம்பிக்கை முழுமையானதாக இருப்பதில்லை. இந்த இடத்திலே ஒரு கதை சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

ஒருவன் ஒரு மலை உச்சிக்கு ஏறிவிட்டான். உச்சியில் நிற்கும் போது கால் சறுக்கிக் கீழே விழுந்து கொண்டிருக்கிறான். கீழே இருள் நிறைந்த பள்ளத்தாக்கு. விழுந்து விட்டால் எலும்பு கூட ஒன்றும் மிஞ்சாது. விழுந்து கொண்டிருக்கும் போது மரக்கிளை ஒன்று கையில் அகப்பட்டது. அதைப் பற்றிக் கொண்டு தொங்குகிறான். தொங்கிக் கொண்டு "அப்பனே முருகா என்னைக் காப்பாற்று. உன்னை விட்டால் வேறு கதியில்லை" என்று கதறுகிறான். முருகப் பெருமான் உண்மையாகவே மயில் வாகனத்தில் அவன் முன் தோன்றி, "அப்பனே நான் வந்து விட்டேன். உன்னைக் காப்பாற்றுவேன். பயப்படாதே மரக்கிளையில் பற்றியுள்ள கையை விட்டுவிடு" என்றார். அவன் சிறிது நேரம் யோசித்தான். பின்னர், "பக்கத்து வீட்டுக்கந்தையா அண்ணை, முன்வீட்டு முத்தையா அண்ணை ஆராவது வாருங்கோவன். என்னைக் காப்பாற்றுங்கோவன். மலையேறிப் பயிற்சி உள்ள ஆக்களைக் கூட்டிக் கொண்டு வாருங்கோவன்" என்று கத்தினான். இவ்வளவு தான் கதை. எங்கள் பலரின் நம்பிக்கை இப்படித்தான் இருக்கிறது. எமது நாட்டின் இன்றைய சூழல் மிக நெருக்கடியான சூழல்.

பாடல் :-

*நிழல் சொரியும் மரமெல்லாம் நெருப்பள்ளிச் சொரியும்*
*நினைந்து செய்த கொடுமைகளால் நெஞ்சமெல்லாம் எரியும்*
*கடல் வானம் நிலமெல்லாம் காலன் இடும் ஓலம்*
*கடை விரித்தான் பாருங்கள் மலிவு விலை உயிர்கள்.*

உரை :

இவ்வாறு இந்த நிலையைக் கவிஞர் ஒருவர் பாடுவார். நாங்கள் எல்லாருமே நெருக்கீடுகளுக்குள் வாழ்கிறோம். ஒரு புதிய சூழல் அல்லது பிரச்சினைக்கு முகம் கொடுக்கும் போது எமது உடலிலும் உள்ளத்திலும் ஏற்படுகின்ற மாற்றங்களே நெருக்கீடாக உணரப்படுகின்றன.

பாடல் :-

மைந்தனுக்குத் திருமணமாம் என்று
மணியத்தார் பதிவு செய்தார் அன்று
வந்தறிந்தார் பாஸ் கிடைத்து
கப்பலுக்காய்க் காத்திருந்து
ஐந்து நாளே பேரன் பிறந்தென்று
நாடு விட்டு நாடு சென்றான் தம்பி
நல்ல நிலை வருமென்று நம்பி
வீடு வாசல் ஈடு வைத்து
விசாவின்றி வெளிக்கிட்டான்
கோடு ஏறி எண்ணுகிறான் கம்பி

உரை :-

என்று இந்த நிலையை இன்னொரு கவிஞர் பாடுகிறார். இந்த நெருக்கீடுகள் மரத்துப் போன நிலை, ஏக்கம், பயம், வெட்கம், கவலை, குற்ற உணர்வு, கோபம், அவநம்பிக்கை போன்ற மன வெளிப்பாடுகளாக வெளிவரலாம். அல்லது பஞ்சி, இயலாமை, அலுப்புகளைப்பு, உடல் எரிவு, நித்திரைக் குறைவு, பயங்கரக் கனவு, தலையிடி, தலைச்சுற்று, தலை விறைப்பு, நெஞ்சுநோ, படபடப்பு, மூச்சுவிடக் கஷ்டம், வயிற்றெரிவு, பொருமல், ஓங்காளம், கைகால் விறைப்பு, மூட்டு நோ போன்ற உடல் முறைப்பாடுகளாக வெளிப்படலாம்.

பாடல் :-

மலை சாய்ந்து போனால் சிலை யாகலாம்
மரம் சாய்ந்து போனால் விலை யாகலாம்
மலர் சாய்ந்து போனால் சரமாகலாம் - இந்த
மனம் சாய்ந்து போனால் என்ன செய்யலாம்?

உரை :-

என்று ஒரு கவிஞர் பழைய சினிமாப் பாடல் ஒன்றில் கேட்கிறார். இந்த நெருக்கீடுகள், உறவுச் சிக்கல்கள், களவு, கொள்ளை, சமூகச் சீர்கேடுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுப்பாவனை போன்ற பல சமுதாய விளைவுகளையும் ஏற்படுத்தலாம். அல்சர், இதய நோய்கள், புற்று நோய், உயர்குருதி அமுக்கம், நீரிழிவு நோய் போன்றவை எமது நாட்டில் அதிகரிப்பதற்கும் இந்த நெருக்கீடுகளுக்கும் தொடர்பு உண்டு.

பாடல் :-

குருவி கூவ மறந்ததோ
குரு மென் காற்றும் நின்றதோ
தெருவில் எங்கும் போனமோ
தேய்ந்த தெங்கள் இதயமே.

வானை என்ன மறைத்தது
மலரை என்ன சிதைத்தது
ஆவி நின்று சிலிர்க்குது
விளக்கைக் காற்று அணைக்குது.

உரை :-

ஓ. . . . நிலைமை இப்பிடிக் கவலைக் குரியதாய் இருக்குது. அப்ப நாங்கள் என்ன செய்யலாம்?

இந்த மனத்தைப்பற்றிக் கொஞ்சம் தெரிஞ்சு கொள்ளலாம். மனம் என்பது கடலில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது. மனத்தின் மொத்தப் பகுதியில் ஏறத்தாழ 1/10 பகுதியாக இருக்கும் நனவு மனம் மட்டுந்தான் மேலே தெரியும். மிகுதி 9/10 நனவிலி மனம் கடலுக்கடியில் தெரியாமல் இருக்கிற பனிக்கட்டி மாதிரி பிரக்ஞைக்குத் தெரியாமல் மறைஞ்சிருக்கு. சிலவேளை இந்த நனவு மனம் ஆரோக்கியமா இருந்தாலும் நனவிலி மனம் பாதிப்பு அடைஞ்சு இருக்கலாம்.

'ஆடுபலி, கோழிபலி, ஐயோ அணிகலனும் வீடுகளும் பலியாய்க் கொடுத்து விதிர் விதிர்த்து நிற்க" - (இது ஒரு கவிஞர் சொன்னது) - நனவிலி மனம் எப்பிடி உறங்கும்?

இந்த மனத்தை நாங்கள் அமைதிப்படுத்த வேண்டும். உலகத்திலேயே மிகச் சிறந்த சீர்மியர் இறைவன் தான். அவரிட்டை நாங்கள் அடிக்கடி போய் எங்களுடைய உளப்பாரங்களை இறக்கி வைத்து விடவேண்டும். முக்கியமாக மந்திர உச்சாடனம் செய்யலாம்.

பாடல் :-

ஓம் பூர் புவஸ்வா
தத்ஸ விதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தீயோ யோந ப் பிரசோதயாத்
ஓம் சாந்தி சாந்தி சாந்திகே. . . .

உரை :-

ஓம் மாதா, முக்காலம், மூவுலகம், முக்குணம் ஆகியவற்றில் உறைபவளே, எனது புத்தியைக் கூர்மை அடையச் செய்து சூரியப்பிரகாசம் எல்லா இருளையும் அகற்றுவது போல எனது சகல அறியாமையையும் அகற்றி எனது புத்தியைச் சாந்த சித்த நிர்மலமானதாகப் பிரகாசிக்கச் செய்யும்படி யான் உன்னைத் துதிக்கிறேன் என்பது இதன் அர்த்தமாகும்.

இம் மந்திரம் விஸ்வாமித்திர முனிவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இம் மந்திரத்தின் ஆற்றல் எல்லையற்றது. அதன் விதிமுறை தொடர்ச் சியானது. அதற்கு அளப்பரிய சக்தி உண்டு. இச் சக்தி ஆச்சரியமானது. இது மனிதனின் ஆதியான வேதங்களில் காணப்படுவது. 'சவிதா' என்ற பரம் பொருளை விழித்துக் காயத்திரி மந்திரம் ஓதப்படுகிறது. 'சவிதா' என்பதன் அர்த்தம்,

"இதிலிருந்தே இவை யாவும் தோற்றம் பெற்றன" என்பதாகும். இது ஒரு வகையில் கூர்ப்புக் கொள்கையின் அடிப்படையை முதலே கூறியிருக்கும் கூற்று எனலாம்.

பாடல் :-

(உச்சாடனம்)
முருகா முருகா முருகா
வருவாய் மயில் மீதினிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை :-

எங்களுக்கு என்ன நடந்தாலும் எமது சுய கணிப்புக் குறைந்து போகும்படி விட்டுவிடக் கூடாது. ஒரு ஆயிரம் ரூபாத்தாள் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை ஆடாமல் அசங்காமல் வைத்து அழகு பார்த்தாலும் அது ஆயிரம் ரூபா பெறுமதி உடையதுதான். அதைக் கசக்கிப் போட்டாலும் அது ஆயிரம் ரூபா பெறுமதி வாய்ந்தது தான். எமக்குக் கஷ்டங்கள் வரும் போது மறை உணர்வுகள் வரலாம். அந்த உணர்வுகளைப் பொருத்தமான முறையில் வெளிப்படுத்த நாம் கற்றுக் கொள்வோம். ஆனால் கஷ்டம் வந்த காரணத்தால் மனிதத்துவப் பெறுமதியை நாம் இழந்து போய் நின்று விடக்கூடாது.

பாடல் :-

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்*
*ஆகுல நீர பிற.*

உரை :-

எந்தக் கஷ்டம் வந்த நேரத்திலும் மனத்துக் கண் மாசிலன் ஆக இருப்பவர்களே மனிதர்களில் மாணிக்கங்களாக நோக்கப்படுவர். ஆகவே தான் கஷ்டம் வரும் போது கடவுளை வழிபடுதல் முக்கிய தேவையாகிறது.

பாடல் :-

*இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்*
*பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்*
*மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி*
*அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.*

உரை :-

இறைவனின் அருள் வானொலி, தொலைக் காட்சி, அலைகளைப் போல எங்கும் பரந்திருக்கிறது. அதைக் கண்டு கொண்டு பயன்படுத்துவது எமது தேவை. 'கடவுளை எனக்குக் காட்டுவீர்களா?' என்று கேட்ட நரேந்திரருக்கு, 'நீ என்னைக் காண்பது போலப் பிரத்தியட்சமாக இறைவனை உனக்குக் காட்டுவேன்" என்று கூறிய பரமஹம்சர் இயற்கைக் காட்சிகளில் இறைவனைக் கண்டவர். ஒரு முறை இருண்ட வானில் வெள்ளைப் பறவைகள் பறந்த காட்சி அவரைப் பரவசப்படுத்த அவர் மயங்கி வீழ்ந்தார். அந்தக் காட்சியில் அவர் தேவியைக் கண்டார். ஆகவே எங்கனும் நின்னருள் ஆட்சி என்று நம்புகிற நாங்கள் நாள் தோறும் பிராணாயாமம், தியானம், சாந்தியாசனம் செய்து கொள்வது எமது உளநலத்துக்கு மிகச் சிறந்தது என்று இப்போது மருத்துவ விஞ்ஞானமும் அறுதியிட்டுக் கூறுகிறது.

இறைவனை நம்பி வாழ்வை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்களை நாள் என் செயும்? வினைதான் என் செயும்? நாடி வந்த கோள் என் செயும்? கூற்று என் செயும்? கஷ்டம் வந்த காலங்களில் பிறமனிதர்களிடம் உதவிக்குப் போகக் கூடாதா என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம், போகலாம். மனிதர்களை அறிந்து உதவி பெற வேண்டும்.

பாடல் :-

*உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டாம்*
*உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா*
*மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும்*
*அம்மருந்து போல் வாரும் உண்டு.*

உரை :-

எமக்குக் கஷ்டம் வருகின்ற போது குழந்தைகளோடு விளையாடலாம். அவர்களுக்குக் கற்பிக்கலாம். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்று சொல்வார்கள். செல்லப் பிராணிகள் வளர்த்து அவற்றின் மீது அன்பு செய்யலாம். எம்மை விட அதிக கஷ்டம் உடையவர்களுக்கு உதவப் போகலாம். "பசித்தோர் முகம்பார்" என்று இங்கே நடக்கிற அன்னதானப் பணியைப் பாருங்கள். எமது மனம் கவலை குறைந்து நிம்மதி பெறத் தர்மம் செய்வது பெரிதும் உதவும். எமக்கு விருப்பமான கலைகளில் ஈடுபட்டாலும் அது ஒரு வெளிப்பாட்டுச் சிகிச்சையாக அமையும்.

இவ்வளவும் சொன்ன பிறகும் பலருடைய மனங்களில் ஒரு கேள்வி எழத்தான் செய்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம் யாருக்கும் எந்தத் தீமையும் செய்யாத போது இறைவன் ஏன் எம்மை வருத்துகிறான்?" என்பதே அது. நல்ல குருநாதன் நம்மை வருத்துவது, கொல்லவல்ல, கொல்லவல்ல. உங்களிடத்திலே சில போத்தல்கள் இருக்கின்றன. சில நன்கு அழுக்கடைந்த போத்தல்கள். சில சுத்தமான போத்தல்கள். ஒரு போத்தல் உடனே வேண்டும் என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? சுத்தமான போத்தலை ஒரு முறை ஊன்றிக் கழுவிவிட்டு எடுத்துக் கொள்வீர்கள் இல்லையா? அதைப் போலவே தான் இறைவனும் நல்ல மனிதர்களை இலகுவில் தன்னோடு சேர்த்துக் கொள்கிறான்.

இந்தத் தெளிவு எமக்கு ஏற்பட்டால் நாம் அமைதியாய் இருக்கலாம்.

பாடல் :-

*பாலாய் நிலவு பொழிகிறது பௌர்ணமி நாள்*
*ஓராயிரம் நினைவு நெஞ்சில் அலை மோதப்*
*பாலாய் நிலவு பொழிகிறது.*

உரை :-

இதுவரை நேரமும் இந்த உரையை அமைதியுடன் செவிமடுத்த உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி இந்த உரையைச் செய்ய நாங்கள் என்ன புண்ணியம் செய்தோம் என்று நினைந்து விடை பெறுகிறோம். வணக்கம்.

பாடல் :-

*மூவிரு முகங்கள் போற்றி முகம் பொழி கருணை போற்றி*
*ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்போற்றி, காஞ்சி*
*மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்*
*சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி*

(2005)

(திருமதி.ப.கணேசதுரை, திரு.ச.கிருபானந்தன், திரு.சி.சிவராஜன் ஆகியோர் கோகிலா மகேந்திரனுடன் இணைந்து இச் சித்திரம் செய்தனர்)

## எழுதப்பட்ட சிறுகதைகள்

25. நாளைய உலகின் நாயகர்கள் – இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய போட்டிப் பரிசுக் கதை – 1982
26. மனிதர்கள் – 31.12.1983 இலங்கை வானொலி
27. பரிகாரம் தேடும் பரிதாபங்கள் – தாரகை நடத்திய சிறுகதைப் போட்டிப் பரிசுக்கதை – 1984
28. ஒரு மேடையில் இரு துருவங்கள் – 1984 ஆவணி, தொண்டன்
29. மனிதாபிமானம் மறு பரிசீலனைக்கு – 19.08.84 ஈழமுரசு
30. உதயத்துக்கு முன் – 1984 ஒக்டோபர் களம்
31. துன்பங்கள் சாவதில்லை – 1984க்கு முன்
32. நம்பிக்கைகள் – 1984க்கு முன்
33. ஓர் உள்ளம் பேசுகிறது – 1984க்கு முன்
34. பூக்கள் நிறம் மாறுகின்றன – 1984க்கு முன்
35. பரம்பரை இடைவெளிகள் – 1984க்கு முன்
36. உள்ளத்தால் அடிமைகள் – 1984க்கு முன்
37. கிழிந்து போன வாழ்க்கைகள் – 1985யூன் முன்
38. நாளைய ஓட்டைகள் – 14.7.1985 ஈழநாடு
39. மேல் மட்டம் – தொண்டர் – 2000க்கு முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனத்துக்கு ஒரு விமர்சனம்

# ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும்

திறனாய்வு என்பது இன்று ஐரோப்பிய மொழிகளில் பெருமளவு வளர்ந்துவிட்ட ஒரு விஷயம். திறனாய்வு நூல்கள் மூலம் இலக்கிய நூல்களை நன்கு சுவைக்க உதவும் என்ற நிலைக்கு எதிர்த்திசையில் அதற்குக் கேடு விளைவிக்குமோ என்று அஞ்சும் அளவிற்கு உலகின் பிற பகுதிகளில் திறனாய்வு நூல்கள் பெருகி விட்டன. ஆயினும் எமது நாட்டில் - எமது மொழியில் இன்றும் கூடத் திறனாய்வு நூல்கள் மிக அரிதாகவே வருகின்றன. இக்குறையைத் தீர்க்கும் முயற்சியின் ஒருபடியாக மேற்கூறிய நூல் வந்துள்ளது எனலாம்.

கடந்த ஐம்பது ஆண்டு காலமாக ஈழத்துத் தமிழ் இலக்கியம் தொடர்பான திறனாய்வைத் தொடர்ந்து செய்துவரும் ஒருவர் கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள். திறனாய்வு முக்கியமானதுதான் என்றாலும் அது படைப்பிலக்கியத்திலும் சிறிது குறைந்த நிலையில் இருப்பதே என்ற கருத்தை மத்தியூ ஆர்னோல்ட் (Mathew Arnold), ரி.எஸ்.எலியட் (T.S.Eliot) ஆகியோர் கூறியுள்ளனர். திறனாய்வு ஒரு கலை என்பது பலரின் கருத்து. ஆயினும் அதனை விஞ்ஞான முறையில் அமைந்த அறிவியலாக வளர்த்தெடுக்க வேண்டும் என்று நோத் றொப் பிறை (Northropfrye) கூறியுள்ளார். யார் எதைச் சொன்னாலும் திறனாய்வு என்பது சில முக்கிய நோக்கங்களைக் கொண்டது என்பதைத் தெளிவாப் புரிந்து கொண்டு தான் எடுத்துக் கொண்ட பணியைத் தொடர்ந்து செய்துவரும் கே.எஸ்.பாராட்டுக்குரியவர். அவரது திறனாய்வு என் போன்ற பல எழுத்தாளர்களை மிக நன்றாகவே ஊக்குவித்துள்ளது என்பது மறக்க முடியாத உண்மை.

திறனாய்வின் நோக்கம் என்ன? இலக்கியங்களுக்கு விளக்கம் தருவது, நயம் உரைப்பது, குறை நிறைகளை எடை போடுவது, ரசிகர்களை வழிப்படுத்துவது, எழுத்தாளர்களைத் தரப்படுத்துவது. நூலை வாசிக்கும் போது ஏற்படும் தனது அநுபவத்தைக் கூறுவது, நூல் தோன்றிய சூழலை ஆராய்வது, நூலாசிரியரின் ஆளுமையை ஆராய்வது என்றவாறான பல நோக்கங்களைக் கொண்டது திறனாய்வு, படைப்பிலக்கியம் பற்றி எழுதப்பட்ட எந்த நூலையும் திறனாய்வுத் துறையைச் சார்ந்தது என்றே கூறமுடியும். (தான் எழுதுவது பத்தி எழுத்து என்றே கே.எஸ்.குறிப்பிடுவார்.) திறனாய்வின் உயர்ந்த தரம் பேணப்படுவது தற்சார்பற்ற தன்மையினாலேயாகும். கே.எஸ்.தன்னை எந்த எழுத்தாளர் அணியுடனும் பொருத்திப் பார்க்காதவர் என்ற வகையில் அவர் எல்லோரையும் சார்பின்றி நோக்குவது குறிப்பிடத்தக்க விடயம்.

தமிழ் இலக்கியத் திறனாய்வு நீண்ட நெடுங்காலமாக நயமுரைத்தல் என்ற நிலையிலேயே இருந்து வந்தது. அதில் இருந்து முன்னேறி திறனாய்வுக் கோட்பாடுகளைப் பயன்படுத்தும் நிலைக்கும் உயரத் தளம் அமைத்தவர்களில் வ.வே.சு.ஐயர், எஸ்.வையாபுரிப் பிள்ளை ஆகியோர் முக்கிய மானவர்கள் எனக் கருதப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனாய்வு செய்கின்ற ஒருவரிடம் நிதானமும், நேர்மையும், தனித்து நோக்கும் திண்மையும், நெஞ்சுறுதியும் இருக்க வேண்டும். இலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம் ஆகிய இரண்டும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். தமது சொந்தக் கொள்கைக்குச் சார்பான உள்ளடக்கம் இருந்துவிட்டால் அதை 'ஓகோ' எனப் புகழ்ந்து தள்ளுவதும் இல்லை எனில் தூக்கி எறிந்து விடுவதும் (கதை மட்டுமல்ல - ஆளையுந்தான்) இன்று மிக மலிந்து போன திறனாய்வுப் போக்கு - எமது நாட்டில் கே.எஸ்.இதற்கு விதி விலக்கானவராகக் காணப்படுகின்றார்.

சில திறனாய்வாளர்கள் சமூகவியல் அணுகு முறையைப் பின்பற்றுவர். ஒப்பியல் அணுகு முறையைக் கைக் கொள்பவர்களும் உள்ளனர். கல்வித்துறையில் இருப்போர், மாணவர்களுக்குக் கற்பிக்கும் நோக்கில் வித்தியாசமான ஒரு திறனாய்வுப் போக்கைக் கொண்டிருப்பர். மணிக்கொடி இன்னொரு திறனாய்வுப் பாதையைக் காட்டியது. எமது நாட்டின் சிறந்த திறனாய்வாளர்கள் என்று போற்றப்படுகின்ற ச.கைலாசபதி, கா.சிவத்தம்பி, இ.முருகையன் போன்றோர் 'கலை கலைக்காகவே' என்பதற்கு மறுதலையாக 'கலை சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவே' என்ற கொள்கையின் அடிப்படையில் மார்க்சியத் திறனாய்வு செய்தவர்களாவே இருக்கின்றனர். கே.எஸ்.அவர் களில் இருந்து வேறுபடுகிறார்.

இந்த நூலைத் தூக்கியவுடன் எமது கண்ணில் படுகிற அட்டை திருப்தியாக இல்லை. பத்தோடு பதினொன்றாகச் செய்யப்பட்ட ஒன்றாகவே தோன்றுகிறது. நூலுக்கு உள்ளே சென்றால் நூலின் தொடக்கத்தில் இருக்கிற தமிழிற் புனைகதை என்ற கட்டுரை புனைகதை தொடர்பாகத் தமிழில் வெளிவந்த திறனாய்வு நூல்கள் பலவற்றையும் பட்டியலிடுகிறது.

அதனைத் தொடர்ந்து 1962 - 1979 காலப் பகுதியில் நூல்களை வெளியிட்ட இலங்கையர் கோன், செ.கணேசலிங்கன், வ.அ.இராசரத்தினம், டொமினிக் ஜீவா, காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், வரதர், டானியல், நாவேந்தன், பவானி ஆழ்வாப்பிள்ளை, எம்.ஏ.நு.்.மான், செ.கதிர்காமநாதன், என்.எஸ்.எம். ராமையா, செ.யோகநாதன், மு.தளையசிங்கம், மண்டூர் அசோகா, புலோலியூர் க.சதாசிவம், நெல்லை க.பேரன், அ.யேசுராசா, சாந்தன், மு.திருநாவுக்கரசு, நா.முத்தையா, யோ.பெனடிக்ற்பாலன், லெ.முருகபூபதி, சுதாராஜ், மருதூர் மஜீத், காவலூர் எஸ்.ஜெகநாதன் ஆகியோரின் சிறுகதைத் தொகுதிகள் பற்றிய கட்டுரைகள் காணப்படு கின்றன. இவை அந்தந்தத் தொகுதிகள் வந்தபோது நூலாசிரியரால் எழுதப்பட்ட கட்டுரைகள். மற்றொரு முறை இந்த எழுத்தாளர்க்ள ஒவ்வொருவரையும் முழுமையாகப் படித்து அவர்களின் மொத்தப் படைப்புகள் பற்றிக் கே.எஸ்.எழுதும் நூல் வெளிவர வேண்டும் என்பது எமது ஆசை.

இக்காலப்பகுதியில் புதிதாக எழுதத் தொடங்கிய சிலரின் கதைகள் பற்றிய பதிவுகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இந்த எழுத்தாளர்களில் ஏறத்தாழ அரைவாசிப் பேர் இன்று உயிருடன் இல்லை. இதில் குறிப்பிடப்படும் பல சிறுகதைத் தொகுதிகளும் இன்று கைக்கு அகப்படும் நிலை இல்லை. இத்தகைய ஒரு சூழலில் இந்த நூல் ஒரு முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

இனி, திறனாய்வின் எப்பகுதிகளைக் கே.எஸ்.இந்த நூலின் மூலம் செய்துள்ளார் எனப் பார்ப்போம்.

இலக்கியத்திற்கு விளக்கம் தரும் வேலையை மிக முதன்மையாகச் செய்யாவிட்டாலும், இடையிடை செய்கிறார். உதாரணமாக இலங்கையர்கோனின் ஒரு கதை பற்றிக் கூறுகையில் "மாட்டேன்" என்ற பொருள்படும் "ஒண்ணா" என்ற வார்த்தையின் பயன்பாட்டை ஆசிரியர் உரையாடலில் சரிவரப் பயன் படுத்தியுள்ளார் என்று சுட்டுகிறார்.

நிறை குறைகளை எடையிடும் வேலையை மிகச் சிறப்பாகவே செய்திருக்கிறார் என்று கூறலாம். செ.கணேசலிங்கனின் 'சங்கமம்' கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிக் கூறும்போது, "கதைப் பொருளும், உணர்ச்சி மயப்படுத்தி வாசகனை வாசிக்கச் செய்யத் தூண்டும் நாடக உணர்வும் இக்கதையில் இருக்கின்றன. ஆனால், இவற்றை வாசகனின் மனதில் உணர்வுடன் தொற்ற வைப்பதில் ஆசிரியர் வெற்றி அடையவில்லை" என்கிறார்.

நயம் உரைப்பது கே.எஸ்.சிவகுமாரனுக்குக் கைவந்த கலை எனலாம். வ.அ.இராசரத்தினத்தின் பிரபலமான 'தோணி' கதையில் உள்ள சில வரிகளைப் பற்றிக் கூறுகையில், "இந்த வரிகளில் உள்ள கவிதைப் பூச்சு, ஒலிநயம் மிக்கதாயும், கற்பனை வளமுடையதாயும் இருக்கிறது. அத்துடன் படிப்பவர் உள்ளத்தில் கதையுடன் நெருங்கிய தொடர்பு வைக்கும் ஆவலையும் கிளப்பி விடுகிறது. பாலு மகேந்திராவின் ஒளிப்பதிவுகளே என் ஞாபகத்துக்கு வருகின்றன" என்று குறித்துள்ளார்.

ரசிகர்களை நெறிப்படுத்தும் வேலையையும் இவர் திறம்படச் செய்திருக்கிறார் என்றே கூறலாம். டொமினிக் ஜீவாவின் 'பாதுகை' தொகுதி பற்றிக் கூறுகையில், "பாதுகை பல விதத்திலும் சிறந்ததொரு தொகுப்பாக விளங்குகிறது. இதில் நல்ல சிறுகதைகள் சில இடம்பெற்றிருக்கின்றன" என்று கூறுவதன் மூலம் ரசிகர்களை வாசிக்கத் தூண்டுகிறார். அதேநேரத்தில் தனிப்பட்ட ஒரு எழுத்தாளரின் தர வளர்ச்சி பற்றியும் நுனித்து நோக்கியுள்ளார். "தண்ணீரும் கண்ணீரும்" என்ற தொகுப்பில் காணப்பட்ட உருவக் குறைபாடுகளும் ஒரு தலைப்பட்சமான சித்திரிப்புகளும் பாதுகையில் இல்லை. ஜீவா வளர்ச்சி அடைந்திருக்கிறார் என்பதற்குப் பாதுகை சான்று பகருகின்றது" என்பது அவர் மொழி. நூலை வாசிக்கும் போது ஏற்படும் தனது தனிப்பட்ட உணர்வுகளையும் இவர் ஆங்காங்கே தூவிச் செல்வது கவனத்திற்குரியது. மு.திருநாவுக் கரசுவின் 'ஞானப்பால்' பற்றி எழுதுகையில், "தர்மகர்த்தா குழந்தையைச் சுவரில் மோதும் வண்ணம் வீசும் காட்சியை மனத்திரையில் பதிவு செய்யும் பொழுது உணர்வே சில்லிடுகிறது" என்று பேசுவதைக் காணலாம்.

நூலாசிரியரின் ஆளுமையைக் கே.எஸ்.ஆராய்ந் திருக்கிறாரா? செய்திருக்கிறார். "நாவேந்தன் நவீன எழுத்தாளர் மீது கொண்டுள்ள போலி வெறுப்பை அறவே அகற்ற வேண்டும்" என்ற வசனம் கவனிக்கத்தக்கது.

இவர் பாவித்திருக்கும் சில சொற்கள் புதிதாய் இருக்கின்றன. Monologue என்ற சொல்லுக்கு 'தற்பாஷிதம்'' என்று பாவிக்கிறார். (அது தவறுதலாக "தற்பாஷிம்" என்று எழுத்துப் பிழையுடன் வந்துவிட்டது.) இக் கலைச்சொல் அவருடைய சொந்த ஆக்கம் போலத் தெரிகிறது. இதற்கு முன் இவ்வாறு வேறு யாரும் பாவித்திருப்பதாகத் தெரியவில்லை....

சில எழுத்தாளர்கள் பற்றித் தான் அன்று கொண்டிருந்த பார்வை இன்று மாற்றம் பெறவேண்டியுள்ளது என்று உணரும் இடங்களில் அதையும் கூறுகிறார். பவானி ஆழ்வாப்பிள்ளை தொடர்பான அவரது கூற்று இது, 'பவானியின் கதைகள் தொடர்பாக 1960களில் நான் கொண்டிருந்த பார்வையே இது. இன்று பெண்ணிய நோக்கில் ஆராயும் பொழுது அபிப்பிராயங்கள் சில மாறுபடலாம்."

நூலைப் படித்து முடிக்கிற போது 1962 - 1979 இல் எழுதிய தமிழ் எழுத்தாளர்களில் வ.அ.இராசரத்தினத்தையே இவர் முதலிடத்தில் வைக்கிறார் என்று படுகிறது. வேறு அபிப்பிராயம் உள்ள திறனாய்வாளர்களுக்கு அதுபற்றிக் கலந்துரையாடும் உரிமை இருக்கிறது.

மொத்தத்தில் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் உள்ள தமிழ் வாசகர்களுக்கு இந்நூல் கே.எஸ்.சிவகுமாரன் என்ற திறனாய் வாளரையும் பல எழுத்தாளர்களையும் ஒருங்கே அறிமுகம் செய்கிறது. அல்லது ஞாபகமூட்டுகிறது. ஆய்வாளர்களுக்கு வேண்டிய ஏராளமான தகவல்களை அள்ளி வழங்குகிறது. எழுத்தாளர்களுக்குத் தம்மைத் தளவாடியில் பார்க்கச் செய்கிறது.

பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய நூல் இது.

(2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக் குறிப்பு

# வெப்பத்தால். . . . .

திகதி :- 25.01.1980

வகுப்பு :- 06

விடயம் :- வெப்பத்தால் ஒளி உண்டாதல், வேறு பௌதீக மாற்றங்கள்

நேரம் :- 45 நிமிடம்

நோக்கம் :-
1) வெப்பத்தினால் சில பொருள்களில் ஒளி உண்டாகும் என்ற அறிவு பெறுதல்.
2) வெப்பத்தினால் சில பொருள்களில் நிறமாற்றம் போன்ற வேறு பௌதிக மாற்றங்கள் நிகழும் என் அறிதல்.

கற்பித்தல் உபகரணங்கள் :- பேணிமூடி, விளக்கு, பூந்திரி, தீக்குச்சித்தலை, வெடிமருந்து, செப்புச் சல்பேற்று, மக்னீசியம்.

கற்பித்தல் வழிகள் :-

1) குழுக்கள் பின்வரும் செயற் பாடுகளில் ஈடுபடல்.

a) பூந்திரியை வெப்பமாக்கி ஒளி உண்டாவதை அவதானிக்கச் செய்தல்.

b) வெடி மருந்தைச் சிறிதளவில் வெப்பமாக்கி அவதானித்தல்

c) மக்னீசியம் நாடாலை எரித்துப் பார்த்தல்

d) நீலநிறத் துரிசுப் பளிங்குகளை வெப்பமாக்கி வெள்ளைத்தூளாக மாறுவதை அவதானித்தல்.

2) பரிசோதனை அவதானங்களைப் பற்றிக் கலந்துரையாடி வெப்பத்தினால் சில பொருள்கள் ஒளியைத் தருவதை அறிதல்.

3) துரிசு தொடர்பான அவதானத்தில் இருந்து சில பொருள்களில் வெப்பம் நிற மாற்றத்தை ஏற்படுத்துகிறது என அறியச் செய்தல்.

மீட்டல் :- பெறப்பட்ட முடிவுகளை மீண்டும் கலந்தரையாடி அழுத்துதல்.

மதிப்பீடு :-

1) செப்புச் சல்பேற்றுப் பளிங்கின் நிறம் என்ன?

2) வெப்பமாக்கும் போது அது என்ன நிறமாக மாறும்?

3) வெப்பத்தினால் ஒளியைத் தரும் பொருள்கள் 3 கூறுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகிலா மகேந்திரன் டயரியில் இருந்து

17.3.1990

1984 பெப்ரவரி மல்லிகை ஒரு பெண் மணியின் படத்தை அட்டையில் தாங்கி வெளிவந்துள்ளது. மல்லிகை அட்டையில் முதல் பெண் இவர்தான் போலும். அட்டைப்படக் கட்டுரையை எழுதியிருக்கும் எழுத்தாளர். "இவரது கவர்ச்சியான பேச்சுக்களோ, சிறந்த கவிதைகளோ, தரமான சிறுகதைகளோ எதுவும் நூல் உருப் பெறாதது ஈழத்து இலக்கிய உலகு செய்த பாவம்" என்று எழுதியிருக்கிறார். (அப்படி எழுதியுள்ள எழுத்தாளர் வேறு யாருமில்லை. நானேதான்!). குறமகளின் கதைகள் இன்று வெளியாகிறது என்ற செய்தி வானில் வந்து நெஞ்சமெல்லாம் நிறைகிறது.

ஓகோ? இந்நாள் உன் திருநாள் குறமகளே! நாமெல்லாம் பூரிப்படைகின்ற நன்னாள்.

19.3.1990

குறமகள் கதைகள் நூலை எடுத்துக் கொண்டு நிலா முற்றத்தில் அமர்ந்தேன். ஒருமின்னல் வந்து 'சரி பிழை' பார்த்துவிட்டுப் போனது. அட்டை அமைப்பை ரசிக்க ஐந்து நிமிடமும் 'அட்டை'க் கதையை (பீபத்ஸம்)ப் பற்றிச் சிந்திக்க அரைமணி நேரமும் செலவிட்டேன்.

'பஸ் பயணம், உரசல் படுமோசம்' என்று ஒரு நல்ல கவிஞன் குறிப்பிட்ட விடயம் பற்றிய கதை இந்த பீபத்ஸம். நல்ல தலைப்பு!. "அவளுடைய இயற்கையான அமைதித் தன்மை மீதே அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது" என்றொரு வசனம் மிக நீளமாய்ச் சிந்திக்க வைத்தது.

பெண்களுக்குக் கோபம் வரக்கூடாது என்பது சமுதாயத்தின் எதிர்பார்ப்பு. இயல்பாக வருகின்ற கோபத்தை வெளியே காட்ட முடியாமல் 'சுப்பர் ஈகோ' தடுக்கும்போது ஏற்படும் முரணில். . . . அந்த அமைதித் தன்மை மீதே ஒரு கோபம் வருமே! அதைப்பல பெண்கள் அநுபவித்திருப்பர். . . . நானுந்தான்

## எழுதப்பட்ட சிறுகதைகள்

40. சாம்பல் படர்ந்த தணல் – 1985 யூலை, தொண்டன்
41. பட்டங்கள் மீண்டும் பறக்கும் – நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப்பண்பாட்டுக் கழகப் போட்டிப் பரிசு – 1985 ஆகஸ்ட், பேராதனி.
42. பிறழும் நெறிகள் – 1985 காங்கேயன் கல்விமலர்.
43. ஒரு சோகம் இறுகும் போது – 1983 நவம்பர் மல்லிகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுதி - 2

## சோலையின் பார்வையில்
## குயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாக் காணும்
# கோகிலா வாழிய

**செந்தமிழில் எண்ணம் செயலில் தமிழ் வளர்ச்சி**
**சிந்தைதனில் வீரம் சிறந்தொளிர - சந்ததமும்**
**பாகிலாம் சொல்லெடுத்துப் பைந்தமிழ்க்குத் தொண்டு செயும்**
**கோகிலா வாழி சிறந்து**

புலவர். ம.பார்வதி நாதசிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி.சற்சொரூபவதி நாதன் கூறுவது. . . . .

## ஒலி அலை வாயிலாக உளநலத் தூது செல்லும் கோகிலம்

நான் ஒரு தொடர்பாளர் என்ற வகையில், எந்த ஒரு ஊடகம் வாயிலாகவும் மக்களுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர், எட்டுத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்று வலியுறுத்துவதுண்டு. முதலாவது அறிவு. முக்கியமாகப் பொது அறிவு. அடுத்துப் புத்திக் கூர்மை, மூன்றாவது தன்மொழி அறிவு, பிறமொழி முக்கியமாக ஆங்கில அறிவு. இனிக் கலையுணர்வு, அடுத்து தொழில்நுட்ப அறிவு, அத்துடன் பிறருடன் சுமுகமாகப் பழகுதல். கடைசியாக ஞானம் - இந்த எட்டுத் தகைமை களையும் அல்லது இவற்றில் ஒரு சில தகைமைகளையாவது கொண்டிருப்பவர்களைத் தேடிக் கண்டு வானொலி நிலையத்துக்கு அழைத்துவந்து சமூகம் பயன்பெற அவர்களின் கருத்துக்களை அறியத் தரும் பெரும்பணியை பல ஆண்டுகளாககச் செய்து வருகிறேன். அந்த வகையில் நான் குறிப்பிட்ட அனைத்து எட்டுத் தகைமைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கும் ஒருவருள் கடந்த சில ஆண்டுகளாகத் தொடர்ந்து ஒரு உரையாடல் நிகழ்ச்சியை நடத்தி வானொலியில் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில் 7.30க்கு ஒலிபரப்பும் வாய்ப்பினைப் பெற்றுப் பெருமகிழ்வு அடைகிறேன். அவர்தான் திருமதி. கோகிலா மகேந்திரன். அவருடன் இடம் பெறும் உரையாடல் "நவசக்தி" என்ற தலைப்பில் சீர்மியக் கருத்துக்கள் வெளிப்படும் சிறந்த நிகழ்ச்சியாக வானொலி ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்புப் பெற்றுள்ளது. சிறுகதைகள் மூலம் என்னைக் கவர்ந்த கோகிலா, உளவள ஆலோசகராகச் சமூக சேவை செய்வதறிந்து அவரது ஆலோசனைகள் பரந்த விரிந்த அளவில் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பட்டு உளவள ஆலோசனை நிகழ்ச்சியில் பங்குபற்ற வருமாறு அழைத்தேன்.

'ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு"

என்னும் குறளுக்கு இலக்கணமாக இலங்கும் எனது தோழி கோகிலா தொழில் ரகசியம் என்று குறுகிய வட்டத்துள் வாழாது பலரும் இலவசமாகக் கேட்டுப் பயனுறும் விதத்தில் உளவள ஆலோசனைகளை வாரந்தோறும் வானொலி மூலம் வாரி வழங்கத் தயக்கமின்றி முன்வந்தார் - உடல் நலனைப் பாதுகாக்கப் பல நிகழ்ச்சிகள். ஆனால் உளநலனைப் பாதுகாக்கப் பழகு தமிழில், இலகு தமிழில் கேட்பார் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் சொற்களால் பல்துறை நூல்களாலும் பட்டறிவாலும் உய்த்துணர்ந்து, உணர்வாலும் அனுபவ வாயிலாகவும் பெற்ற அறிவியல் கருத்துக்களை 15 நிமிட நிகழ்வில் சொல்லிப் பயன்பெறச் செய்கிறார் கோகிலா.

இன்றைய அவசர மனிதனின் அறிவுக்குள் அவனுக்கும் தெரியாமல் சில அதிசயங்களைப் பதிவு செய்து வழிகாட்டும் பணிதான் கோகிலாவின் பணியாக உள்ளது. வளர்ந்துவரும் விஞ்ஞானச் சூழலில் விரைந்து பயணம் செய்யும் வேளையிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் தொகையின் ஒரு பகுதி வானொலி யோடுதான் இன்றும் வாழ்ந்து வருகிறது - எனவே 'நவ சக்தி' காற்றோடு கலந்து வரும் ஒரு கலைக் களஞ்சியமாகப் பயன் தருகிறது. அறிவியல், பொருளியல், புவியியல் என்று தேடித் தேடிப் பொருத்தமான பொருள்களை எடுத்துத் தொகுத்து அவர் நான் தொடுக்கும் வினாக்களுக்கு பதில் சொல்லும் பாணியே புதுமையானது. பொன் மொழிகள், புதிய கண்டு பிடிப்புகள் கதைகள் எல்லாம் இவர் தரும் தகவல்களில் உள்ளன.

மனிதன் மனிதத் தன்மையுடன் வாழ நம்பிக்கையையும் காட்டி மகிழ்விக்கும் விதத்தில் அவர் இந்நிகழ்ச்சியை வழங்குகிறார். இன்றைய கால கட்டத்தில் மக்களின் தேவைகளில் முதலிடம் வகிப்பது உளநலம். அதற்கு வழிவகை சொல்லும் நிகழ்ச்சியை சிறப்புறத் தயாரித்து வழங்கும் கோகிலாவுக்கு இந் நிகழ்ச்சிக்காக ஒரு சிறப்பு விருது அவரது 60 ஆண்டு அகவை பூர்த்தி விழாவில் வழங்கப்படல் வேண்டும் என்பது என் பேரவா. வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் கோகிலா போன்ற ஒரு சிறந்த வானொலிக்கு மகுடம் சூட்டும் ஒரு ஒலிபரப்பாளருக்கு "சீர்மியச் செல்வி" என்று மகுடம் சூட்ட விளைகிறேன். 'நவில் தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு' என்பதற்கிணங்க இந்நிகழ்ச்சி வாயிலாக பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஒரு சிறந்த பெண்மணியுடன் எனக்கு கிடைத்த நட்பு மேலும் வலுவடைவது குறித்து ஆனந்தம் அடைகிறேன். திருமதி.கோகிலா மகேந்திரன் சொல்லாலும், எழுத்தாலும், செயலாலும் சிறந்து விளங்கும் ஒரு மங்கை. எனது வாழ்த்துக்கள்.

2008ம் ஆண்டு முதல் வாரந்தோறும் ஒலிபரப்பாகிவரும் நவசக்தி நிகழ்ச்சியில் கோகிலா ஐம்பதுக்கும் மேற்பட்ட தலைப்புகளில் சீர்மியக் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டுள்ளார். ஒற்றைப் பெற்றோர் குடும்பம், கட்டிளமைப் பருவம், வெகுமதி, நித்திரை, கோபம், நெருக்கீடு, தன்னம்பிக்கை, திருமண உறவு, பதற்றம், நச்சு வட்டங்களை உடைத்தல், கருத்தூன்றிச் செயற்படுதல், அன்பு, தொடுபயம், வாழ்வுக்கான அர்த்தம் என்பன இந்தத் தலைப்புகளில் சிலவாகும்.

தொடர்பாளராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பல நிகழ்ச்சிகளில் பங்கேற்பவர் கோகிலா. சைவ நற்சிந்தனை காலத்திற்கேற்ற பல ஆன்மிகக் கருத்துக்களை அவர் வளங்கக் களம் அமைத்துள்ளது. பெண்ணுலகம், இசையும் கதையும், பூவும் பொட்டும் என்று பல்வேறு நிகழ்ச்சிகள். நான் வழங்கும் கலைக் கோலம் நிகழ்ச்சியில் அவர் ஒரு இலக்கியவாதியாகப் பரிணமித்துள்ளார். அவரது திறமைகள் பன்முகப்பட்டவை. நான் அவரை ஒலிபரப்பாளராகக் கண்டு அவரது திறமையை, சேவையை மெச்சிச் சில வார்த்தைகள் எழுதியுள்ளேன். 60வது அகவையைப் பூர்த்தி செய்யும் கோகிலா இன்னும் பல ஆண்டுகள் வாழ்ந்து தனது அறிவையும், திறமையையும் தமிழுலகத்திற்கு வழங்க வேண்டும் என்பது எனது பிரார்த்தனையாகும்.

## எழுதப்பட்ட சிறுகதைகள்

42. பிரசவங்கள் – 1986 ஜனவரி – மல்லிகை
43. உச்ச அறுவடை – 1986
44. மரணிப்பிலும் உயிர்க்கும் – 1986 ஆனி மல்லிகை
45. ஒலி – 1986 புரட்டாதி அமிர்த கங்கை
46. சமுதாயம் ஒரு சறுக்குப் பாறை – 11.1.1987 ஈழநாடு
47. வாழ்வும் ஒரு வலைப்பந்தாட்டம் – 01.02.1987 வீரகேசரி (தகவம் பரிசுபெற்றது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவளத்துணைப் பயிற்சி பெறவந்தவர் ஒருவரிடமிருந்து. . . . .

## ஒரு கடிதம்

வெல்லாவெளி,
2005.10.26

என்றும் என் மனதில் நிற்கும் கோகிலா மிஸ் அவர்களுக்கு, தங்கள் நல்லாரோக்கியம் வேண்டி கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

மிஸ் நீங்கள் எழுதிய கடிதம் என் கைவரப்பெற்றேன். உங்களிடமிருந்து கடிதம் வரும் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. அனுப்புதல் முகவரியில் உங்கள் பெயரைப் பார்த்ததும் என் இதயம் வேகமாகத் துடித்ததைத் துல்லியமாய் உணர்ந்தேன். இனம்புரியாத படபடப்புடன் உங்கள் கடிதத்தை மிகப் பத்திரமாகப் பிரித்துப் படித்து மிக மிக மகிழ்ந்தேன். பல தடவைகள் படித்தேன்.

மிஸ், நான் உங்கள் கைகளால் பல தடவைகள் பரிசுகள் பெற்றுள்ளேன். அப்பொழுது ஒவ்வொரு தடவையும் நான் உள்ளூர மகிழ்ந்துள்ளேன். பெருமிதம் அடைந்துள்ளேன். ஆயினும் உங்கள் கடிதம் படித்த போது ஏற்பட்ட மகிழ்வும் பெருமிதமும் அவற்றை விடப் பல மடங்கு அதிகம்.

உண்மையில் நான் பார்த்துப் பழகிய பலருள் என்னை மிகவும் பாதித்த பாத்திரம் என்றால் கோகிலா மிஸ்தான். மட்டக்களப்பு மாவட்டத்தில் எத்தனை கல்வி அதிகாரிகளையும், கற்றவர்களையும் பார்த்துள்ளேன். ஆனால் உங்களைப் போல் ஒருவரைக் கூடப் பார்த்ததில்லை என்பது மிகையில்லாத மெய். உங்களில் எனக்குப் பல விடயங்கள் பிடிக்கும். அவற்றுள் சிலவற்றையாவது நான் எனதாக்கி வாழ முயற்சித்துக் கொண்டிருக்கின்றேன். வாழ்க்கையில் பல தோல்விகளையும், துயரங்களையும் கண்டு காயப்பட்ட மனதுடன் அங்கு வந்தேன். இன்று நான் மனவலி தீர்ந்து சந்தோசமாக இருக்கப் பழகி வருகிறேன். இதற்கு முழுதும் காரணம் யாழ்ப்பாணம். என்றும் இதை நான் மறவேன். என் நல்ல செயற்பாடுகளில் நீங்கள் வெளிப்படுவீர்கள்.

என்றென்றும் அன்புடன்
உங்கள் மாணவி
K.V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை வாழ்த்துகிறார்

(மனித சொரூபங்கள் சிறுகதைத் தொகுதியில்)

வண்ணவண்ணச் செந்தமிழில் வகைவகையாய்க் கட்டுரைகள்
எண்ணஎண்ணத் தித்திக்கும் இனியசுவைச் சொற்பெருக்கு
உண்மை நிலைத் தெளிவுதரும் உயர்வான உரைப்பாங்கு
திண்மைநிலை காட்டுகின்ற திடமான நெஞ்சுறுதி
இன்னபல பண்புகளால் எனைவியப்பில் ஆழ்த்திநின்று
சின்ன வயதுமுதல் சீராய் வளர்ந்த ஒரு
கோகிலா நாமத்திற் குலவு திருமடந்தை
ஓகை மிகுசிவசுப் பிரமணியம் தந்தமகள்
உத்தமநல் லாசிரிய உயர்பணியைத் தாங்கிநின்று
மெத்துபல பண்புகளின் விளைநிலமாய் வாழுகையில்
பாரிற் பயின்றுவரும் பல்வகைய சமூகத்துச்
சீர்கேட் டினையெல்லாம் திருத்திடுதல் வேண்டுமென்ற
உந்துதலி னாற்பிறந்த உத்வேகத் தாலின்று
செந்தமிழில் நல்ல சிறுகதைகள் தந்துவந்தாள்
மனித சொரூபங்கள் எனும் தலைப்பில் ஆறிரண்டு
புனிதச் சிறுகதைகள் புனைந்தொருநூல் வடிவாக்கி
இன்றுலகிற் கீந்தாள் இந்நூலைக் கற்பவர்கள்
என்றும் பலநலன்கள் எய்திடுவார் என்றிட்டேன்.
ஆன்ற நலன்களெல்லாம் அமைந்திருக்கும் உள்ளத்தில்
தோன்றியவை என்றதனால் துணிந்துநான் கூறுகின்றேன்
இத்தகைய நற்கதைகள் இன்னும் தருகஎன
அத்திருவைக் கேட்டுநின்றே ஆசிபல சொல்கின்றேன்
குவலயத்து மகேந்திரனின் குலவுதுணை யாய்நின்று
சுவைமிகுந்த நற்கதைகள் தொடர்ந்துதரும் நங்காய்நீ
சிறுகதையே யன்றிச் சீர்நவீன மும்நல்கி
உறுதுணையாய்ச் செந்தமிழுக் குய்ந்நெறியைக் காட்டுகெனப்
பற்றுமிக வாழ்த்துகிறேன் பரமன் திருவருளால்
எற்றைக்கும் நீவிரும்பும் இன்பமெய்தி வாழியவே.

(1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதர் க.சச்சிதானந்தன், B.A.Hons (Lond)
Dip-in-Ed. (Lond), M.Phil (Lond), F R.A.S. (Lond)

# விமர்சிக்கிறார்

(மனித சொரூபங்கள் சிறுகதைத் தொகுதியில்)

சிறுகதை என்பது எழுத்தாளர்கள் விரும்பிக் கைக்கொள்ளப்படும் இலக்கியத் துறைகளில் ஒன்று. இந்திய நாட்டிலே கதைச் சமுத்திரமென்று ஒரு சிறுகதைச் சமுத்திரமிருக்கிறது. சமுத்திர மென்பது - கதைகளின் தொகையைக் காட்ட எழுந்த கதை, விக்கிரமாதித்தன் கதை, பஞ்ச தந்திரக் கதை, இதோபதேசக் கதை. என்று இப்படியாக இந்திய நாட்டிலே சிறு கதைகளுக்குக் குறைவேயில்லை. கடந்த ஐம்பது வருடங்களாக இந்திய மண்ணிலும் இலங்கையிலும் தோன்றிய கதைகளின் தொகையோ பல்லாயிரத்திற்கும் அதிகமாகும். இன்னும் சிறுகதையை வாசிக்கும் ஆர்வம் குன்றவில்லை. சிறுகதைத் துறையின் நுண் யுக்திகள் முன்னேறிக் கொண்டே போகின்றன.

சிறுகதை என்றால் என்ன? இதற்கு விடை கூறுவது மிகவும் கடினம். ஆனால் ஒரு எழுத்தாளர் அந்த வரைவிலக்கணத்தைத் தெரியாமலே மிகச் சிறந்த கதையை எழுதி விடலாம். ஒரு விமர்சகனுக்கும் நல்ல சிறுகதையைப் பிரித்தறிவதில் அவ்வளவு சங்கடம் இருப்பதில்லை. அது ஏன் ஒரு நல்ல கதை என்று எழுதுவது தான் மிகச் சங்கடமானது.

சிறுகதை எழுத்தாளன் எதைச் சொல்ல விரும்புகிறான்? சொல்ல விரும்புவதைச் சரியாகச் சொல்வதற்கு என்ன நுண்முறையைக் கையாளு கின்றான்? இந்த இரண்டு அம்சங்களும் ஒன்றிலிருந்து மற்றது பிரியாதவை. ஒரு பொருளின் இரு நோக்குகளேயன்றி வேறல்ல.

இக் காலச் சிறுகதை எழுத்தாளர்கள் சமூகச் சீர்கேடுகளைத் தமது சிறுகதைகளின் உட் பொருளாக்கிக் கொண்டார்கள். அன்றியும் மண்வாசனை உடையனவாக இருக்க வேண்டுமென் பதிலும் அக்கறை உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். அதனால் சிறுகதைகள் தனித்துவமும் சிறப்புச் சமூகத் தன்மையும் பெற்றுப் பிராந்தியச் சிறுகதைகளாக மாறிவிடுகின்றன. பிராந்தியச் சிறப்புத்தன்மை பெறப் பிராந்தியச் சிறப்பு மொழி நடையும் சொற்களும் பிரயோகிக் கப்படுகின்றன.

கோகிலா மகேந்திரன் இன்றைய சிறுகதை எழுத்தாளரின் போக்கிலே உருவானவர். சமூகச் சீர்கேடுகளைத் தமது சிறுகதைக்கு உட் பொருளாக்கிக் கொண்டார். தங்கையைப் பார்க்கவந்து தமக்கையைக் காதலிக்கும் இலட்சிய இரசிகர், கல்வியின்றி இளமையின் சுதந் திரமுமின்றி அடுப்பங்கரைகளில் பிழியப்படும் வேலைக்காரக் குழந்தைகள், பொருத்தம் பார்க்கும் குருட்டு நம்பிக்கையுடையவர்கள், பொன்னாடை போர்த்தப்பட்டபின் மழையில் நனைந்துவரும் உபாத்தியாயரும் மனைவியும், பாடசாலையைப் பாழாக்கும் ஆசிரிய மாணவ குழாங்கள், எல்லைப் பிரச்சினையால் பகையேறும் உறவினர், கருப்பமுற்றும் கடும் உழைப்பால் வாடும் ஏழைப் பெண்கள், பிச்சைக் காரக் குருடன், செத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளில் அனுதாபமற்று நடமாடிச் சண்டையிடும் சாதிக்காரர்கள், இவர்களெல்லாம் கோகிலாவின் கண்ணில் பட்டுக் கதைக்குக் கருவாகிச் சொல்லில் வார்க்கப்பட்டு உயிர்பெற்ற ஓவியங்களாக நடமாடுகிறார்கள்.

எந்த நிகழ்ச்சியை மையமாக எடுத்துக் கொண்டால் தாம் படைக்கும் பாத்திரங்கள் தாம் கொடுக்கும் உருவத்தோடு உயிர் பெறுவார்கள் என்று உணர்வது கோகிலாவுக்குக் கைவந்த கலை. உதாரணமாக, சமுதாயத்தின் பல சீர்கேடு உடைய பாத்திரங்களை உருவாக்க ஒரு செத்தவீட்டை மைய நிகழ்ச்சியாகக் கொண்டுள்ளார். அதிலே, சேலையைப் பற்றிப் பேசும் பெண் வர்க்கம், சாதிக்காரர், நாட்டாண்மைக் காரர், சாத்திரியார், வைத்தியர்மார், ஆகியோர் யாவரையும் ஒருங்கே உயிரூட்டும் கைவண்ணம் அற்புதம்! வெங்காயம் நடும் மாங்கன்றை எங்கேயோ பார்த்தது போன்ற உணர்வு உண்டாகிறது. இரு முரண்பட்ட சமுதாய ஏற்றத் தாழ்வை ஒப்பிடுவதற்குப் பிரசவ நிகழ்ச்சியை மையமாகக் கொண்டமை நுண்டிறனின் இலாவகத்தை எட்டிப் பிடிக்கிறது. அதிலே சமுதாயத்தின் எதிர்த் துருவங்களைக் காட்டி ஏற்றத் தாழ்வைச் சித்திரிப்பது ஒன்று. இறைவனின் புரியாத புதிர் ஒன்றை எடுத்துக் காட்டுவது இன்னொன்று. சமத்துவ உணவு, உயிர்ச்சத்து, உலோகச் சத்து என்று ஊட்டமுறை தெரிந்து உண்பவர்கள் சலரோகத்தால் வாடுவதைக் காண்கிறோம். ஆனால் புளித்த கள்ளும், ஒருநேரச் சோறும் உண்பவர்கள் புயபல ஆண் அழகர்களாக நோயின்றி வாழ்வதையும் காண்கிறோம். பொக்கிளிப்பான் வந்தால் வைத்தியமின்றி ஒவ்வொரு நாளும் தலை முழுகி வெட்டவெளிக் கொட்டிலிலே உறங்குவோருக்கு 'நிமோனியா' வராமல் காக்கும் அற்புத சக்தி எங்கே உள்ளது? இது ஒரு புரியாத தத்துவம். இந்தத் தத்துவத்தை 'மணவாளன் வந்த கோலம்' என்ற என் கவிதையில் கருப்பொருளாகக் கொண்டுள்ளேன். அதே தத்துவத்தை பிரசவ நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு மங்கையாகவும், மாங்கன்றாகவும் நம்முடன் நடமாட வைக்கிறார் கோகிலா மகேந்திரன். ஒவ்வொரு கதையும் இவ்வாறு ஒரு கேந்திரமான மைய நிகழ்ச்சி கொண்டு சுழல்கிறது. இது அவர் திறமைகளில் ஒன்று.

இவர் படைக்கும் கதைகளுக்கு யாழ்ப்பாணச் சமுதாயம் பின்னணியாக அமையினும், சமுதாயச் சீர் கேடுகள், குருட்டு நம்பிக்கைகள், எல்லைத் தகராறுகள் இலங்கை முழுமைக்கும் ஏன் இந்திய நாட்டுக்குமே - பொதுமையாக அமைகின்றன. பாத்திரங்கள் யாழ்ப்பாண உயிரோவியங் களாயினும் பிராந்திய சிறு வட்டத்தைக் கடந்து பொதுமையைப் பெறுகின்றன. யாழ்ப்பாண மண்வாசனை வீசுகிறது. ஆனால் கருப்பொருளில் பொதுச் சமுதாயக் கருப்பொருள் இழை யோடுகின்றது.

பாத்திரங்களை நம்முன் உயிரோடு நடமாடச் செய்வதற்கு வெளிப்புற வருணனைகளில் அதிகம் ஈடுபடாது அவர்களின் மனப்பாங்கை வருணிப் பதற்கே அதிக கவனம் செலுத்தியுள்ளார். ஆஸ்பத்திரியின் வெளிப்புற வருணனையில் அதிகம் ஈடுபடாது சம்பாஷணைகளின் சில சொற்களால் தாதியர்களினதும், ஆஸ்பத்திரியின் மனேஜர்களினதும், மனப்பாங்கை அழகாக வெளிப்படுத்துகிறார். ஒலிக்காத ஓலத்தில், ஒப்பனை செய்யும் கலையையும் ஆண்களைக் கவரும் சம்பாஷணைக் கலையையும் அறியாத ஒரு பேதைப் பெண்ணின் மனப்பாங்கைச் சித்திரிக்கப் பல சம்பாஷணைகளையும் சம்பவங்களையும் அழகாக அடுக்குகிறார்.

"என்னைச் சுற்றியுள்ள எல்லாருமே பாஷனைப் பற்றியும் அடுத்தவனைப் பற்றியும் பேசும்போது.... என்னுடன் என்னைப் போல எனக்கு ஆர்வமுள்ள கலை, கலாசாரம், நாவல், இலக்கியம், புத்தகங்கள், இலக்கிய கர்த்தாக்கள் பற்றிக் கதைப்பதற்கு ஒருவர் வரப்போகிறார்......"

அந்தப் பேதைப் பெண்ணின் மனப் பாங்கை எடுத்துக் காட்டவே இவ்வளவு வருணையையும் வந்தது. அது பொருத்தமானதே. அத்துடன் இந்த வருணனையை ஒப்பிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அக்கா வெளியிலை வாவன் என்று குரல் கொடுக்கிறேன். அவள் நெளிந்து வளைந்து மிகவும் சங்கடப்பட்டு வெளியே வருவதைப் பார்த்து....."

நெளிந்து வளைந்து என்ற வருணனை எதற்காக என்று வாசகர்கள் உணருகிறார்கள். இப்போதே அந்த இலட்சியப் பெண்ணைப் பார்த்து "அடி பாவமே" என்று சொல்ல நமக்குத் தோன்ற வில்லையா?

காவி யோகய லோஎனும் கண்ணிணைந்
தேவி யோமலர் மங்கையிற் செவ்வியாள்
பாவி யேனையும் பார்க்குங் கொலோஎன
ஆவி தேயினும் ஆசையின் தேய்விலாள்

என்று கம்பர் சூர்ப்பனகையின் மனப்பாங்கைக் கொடுத்தார். அழகிய *சீதாதேவி* பக்கலிருக்க, பாவியேனையும் பார்க்குங்கொலோ என்று தன்னையும் *சீதையையும்* ஒப்பிட்டு ஏங்குகிறாள் அவள். இங்கும் வளைந்து நெளிந்து தலையைக் குனிந்து கொண்டு புன்முறுவல் பூக்கும் அக்காவுக்கும் காதல் சம்பாஷணைக்கு நூலகத்தையே கொண்டுவரும் தங்கைக்கும் ஒப்பீடு நடக்கிறது எம்மிடம். இதுதான் ஒலிக்காத ஓலம்.

கோகிலா புறவருணனையைக் காட்டிலும் மனப்பாங்கு வருணனைக்கே அதிகம் முக்கியம் கொடுக்கிறார் என்பதற்குக் கதைகள் எல்லா வற்றிலும் வருணனைகளும் சிறப்பு நிகழ்ச்சிகளும் உள்ளன. மேலுள்ளது ஒரு உதாரணம்.

பிராந்தியப் பேச்சு மொழியை அப்படியே எழுத்தெழுத்தாக வடித்தால் கதா பாத்திரங்கள் உயிர்பெறும் என்பது சிறுகதை எழுத்தாளரிடையே ஒரு நம்பிக்கை போலும். ஆனால், கோகிலா மகேந்திரன் எந்த இடத்தில் பேச்சுமொழி அப்படியே வந்தால் பாத்திரம் உயிர்பெறும், எந்த இடத்தில் அது வேண்டியதில்லை என்பதை அழகாக வேறுபடுத்துகிறார். அதனால் தான் அவர் கதைகள் தமிழகம் முழுவதும் இரசிக்கக்கூடியதாக அமைகின்றன.

சில ஆங்கிலப் பதங்களுக்கு அழகான தமிழ்ப்பதங்களை உபயோகிக்கிறார். ஆனாலும் பாத்திரங்கள் உயிர் பெறுகின்றன. இது அவர் தமிழ் நடையின் லாவண்யம். நடத்துநர், மார்பு காட்டி என்பவற்றை இத்தகைய சொல்லாட்சியின் உதாரணங்களாகக் காட்டலாம்.

இவருக்கு ஒழுகிச் செல்லும் தமிழ் நடை கைவந்தது என்பது விளங்குகிறது. ஒரு கதாசிரியரைப் பற்றிக் கதைகளில் இருந்தே கூறவேண்டும். இவர் கதைகள் ஆழமான கருத்துடையவை. நுட்பமான நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டவை. இவையிரண்டும் இவருடைய விவேகத்தின் மேதைத் தன்மையை எடுத்துக் காட்டுகின்றன. வெறுமனே முற்போக்கு எண்ணங்களை உட்பொருளாக மட்டும் கொண்டால் கதைகள் இலக்கியமாகி விடா. அவை அழகான முருகுணர்வு தரும் அமைப்பிலும் வடிக்கப்பட வேண்டும். இதற்குக் கோகிலா மகேந்திரனின் கதைகள் நல்ல எடுத்துக் காட்டாகும். நல்ல அமைப்பில் வார்ப்பதற்கு உயர்ந்த விவேகம் வேண்டும் போலும்!

கோகிலா மகேந்திரன் உயர்ந்த பொது விவேகமும் பல பாடங்களில் சிறப்பாற்றலும் பெற்ற ஒரு அபூர்வ பிறவி. அதனால் தான் இக்கதைகள் இவ்வளவு ஆழமானவையாய் இருக்கின்றன போலும். உண்மையில் அவரது கதாபாத்திரங்கள் இறவாவரம் பெற்றுவிட்டன.

கோகிலாவும், மகேந்திரனும் எனது அருமை மாணவர்கள். அவர்களின் அருமையையும், பெருமையையும் சிறுகதைத் தொகுதிக்கு விமர்சனவுரை எழுதும்போது ஒரு பக்கத்தில் வைத்து விட்டு நடுநிலையோடு நின்றுதான் இதனை எழுதுகிறேன். கோகிலாவின் ஆற்றல்கள் பேச விரியும். எழுத நிறையும். ஆனால், அவர் இலக்கியத் துறைக்கு அடி எடுத்து வைத்தது இலக்கியம் செய் தவமே. அவர் குரல் மேலும் ஒலிக்க வேண்டும்.

போகும் சமுதாயப் புன்மைகளைக் கண்டுநிதம்
வேகும் மனத்தாய் விவேகத் திருவிழியால்
ஆகும் கதைகட் கழகூட்டிப் பைந்தமிழால்
கோகிலமே உனதினிய குரலெடுத்துக் கூவுதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்.தயா.சோமசுந்தரம் அவர்களின்

# முன்னுரை

((முகங்களும் மூடிகளும் சிறுகதைத் தொகுதியில்)

பலவிதமான கலைப்படைப்புகளை ஆக்கி வரும் கோகிலா மகேந்திரன் அவர்கள் ஏற்கனவே வெளிவந்த தனது சிறுகதைகளிலிருந்தும் சர்வதேசமட்டத்தில் பரிசு பெற்ற கதைகளி லிருந்தும் தேர்ந்தெடுத்துத் தொகுத்தவை "முகங்களும் மூடிகளும்" என்ற நூலாக வெளிவருகின்றது. இவற்றை ஒன்று சேர்ப்பதற்கான பொதுக் காரணி - இந்நூலின் தொனிப் பொருள் - மேலாக நடக்கும் போரைப் பின்புலமாகக் கொண்டது. கதைகளின் சம்பவங்கள் அதாவது இச் சிறுகதைகளினூடாகத் தொகுக்கப்படும கருத்து யாது என்று தேடினால் அது பலவாகப் புலப்படும்.

முக்கியமாக, இப்பிரதேசத்தில் இரு தசாப்தங் களுக்கும் மேலாக நிகழும் சூழலைப் பின்னணி யமைப்பாக (Setting) அவை கொண்டிருக்கின்றன. தற்பொழுது நிலவும் போர் நிறுத்த காலத்தில் - சமாதான முயற்சி நிகழும் காலப்பகுதியில் இந்நூல் வெளிவருவது மிகப் பொருத்தமானதும் காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு செய்யப் படுவதுமாகும். ஏனெனில் நீண்டகாலமாக உள்நாட்டுப் போர்நடந்து, சமூகங்கள் சீர் குலைந்து, நொந்து போயிருக்கும் நிலையில் இருந்து மீள - சமாதான சமூக சூழ்நிலையைக் கட்டியெழுப்பப் புனர்நிர்மாண அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுக்க - அங்கு வாழும் மக்களின் உள சமூக ஆரோக்கியத்தைக் கவனிக்க வேண்டிய தேவை உலகளாவிய ரீதியில் உணரப்பட்டுள்ளது. ஞாபகங்களைக் குண மாக்குதல் (Healing of Memories) என்று தென்னாபிரிக்காவில் வர்ணிக்கப்படுவது - நடந்த கசப்பான அனுபவங்களை, அநீதிகளை, கொலைகளை, குண்டுப்பொழிவுகளை மீண்டும் நினைவுபடுத்தி - அவற்றுக்குப் பொறுப்பானவர்கள் தமது குற்றத்தை உணர்ந்து - பாதிக்கப்பட்டவரைச் சமூக மட்டத்தில் அங்கீகரித்து - இயலுமான விமோசனத்தைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற சமூக செயற்பாடுகளில் அடங்கும். நடந்தவற்றைப் பின்னோக்கிப்பார்த்து அவற்றை ஜீரணித்து, ஊடகப்படுத்தி ஏற்றுக் கொண்டால் தான் எதிர்காலத்தைப் பற்றி உடன்பாடான முறையில் சிந்திக்கலாம். புனர் நிர்மாண அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடலாம். நடந்தவற்றைப் பற்றி மக்கள் மன ஆறுதல் அடைந்தால்தான் சமாதானம் நிலைத்து நீடிக்கும். இந்நூல் இதற்கான ஆரம்ப முயற்சி என்று சொல்லலாம். போரின்பல பரிமாணங்களை - நாளாந்தம் மக்கள் அநுபவித்த பல தரப்பட்ட இடையூறுகள் கஷ்டங்கள், தாக்கங்கள், பாதிப்புகள் ஆகியவற்றை - வெவ்வேறு கோணங்களிலிருந்து கதைகளினூடாக விபரிக்கின்றது இந்நூல். நாங்கள் அனுபவித்த சம்பவங்களினுடனும் உணர்வுகளுடனும் எங்களைச் சுலபமாக அடையாளம் காணக்கூடிய விதத்தில் இக்கதைகள் விரிகின்றன "........இரவு முழுவதும் ஒரே அட்டகாசம்...... பதினாறு திக்கிலும் கேட்ட பொம்மர் குண்டு வீச்சுகள்.... ஹெலி தீர்த்துக்கட்டிய கலிபர் தாக்குதல்கள்!..... காற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு அசைவிலும் காலன் வருவதாய்க் கனவு வருகிறது...... பயம்....பயம்..... விபரிக்க முடியாத பயம்......!"

இக்கதைகள் எம்மைத் திரும்பவும் அந்தக் கொடிய காலப்பகுதிக்குக் கொண்டு செல்கின்றன. அது இடம்பெயரும் ஆசிரியரூடாகவோ தந்தை தனது கண்முன் இழுத்து, அடித்துக் கொண்டு செல்லப்படுவதைப் பார்க்கும் சிறுவன் ஊடாகவோ, அல்லது திரும்பவும் தன் ஊருக்கு வரும் போராளியின் கண்களினூடாகவோ பார்க்க - அனுபவிக்க வைக்கப்படுகிறது. இந்நிகழ்வுகள் கிளப்பிய உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் திரும்பவும் நினைக்கவும் அனுபவிக்கவும் வைக்கின்றன கதைகள். உண்மையில், நாம் நடந்தவற்றைத் திரும்பவும் வெவ்வேறு பார்வைகளில், வெவ்வேறு கோணங்களில் இருந்து பார்க்க வேண்டிய கட்டத்திற்கு வந்துவிட்டோம். இதற்குத் துணிவும் தேவை. கருத்துச் சுதந்திரமும் தேவை. எங்களில் மறைந்திருக்கும் ஆக்கத் திறன்களும் கலை வடிவங்களும் இந்த முக்கிய மீட்புப் பணிக்காக வெளிக் கொணரப்பட வேண்டும். இவ்வாறான ஒரு சமூக மீளாய்வு செய்யப்பட்டால் தான் நடந்தவற்றுக்கான அர்த்தம் சமூக மட்டத்தில் கற்பிக்கப்பட்டு எதிர் காலத்தை ஆரோக்கியமாக எதிர் கொள்ளக் கூடிய நிலை ஏற்படும்.

இச் சிறுகதைகளின் சிறப்பம்சங்களாக அவற்றில் பரவிக்கிடக்கும் உளவியற் கருத்துக்கள், செயற்பாடுகள். உதவிகள் விளக்கங்கள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு கதையிலும் வரும் கதா பாத்திரங்களின் ஆழ் மனதில் இருக்கும் உணர்வுகள், உணர்ச்சிகள், பயங்கள், கோபங்கள், வடுக்கள் போன்றவை யதார்த்த ரீதியாக வெளிக் கொணரப்படுகின்றன. மனமானது ஒரு விடயத்தை எவ்வாறு கையாளுகின்றது, எவ்வாறு ஒரு பிரச்சினைக்குள் சிக்கிக்கொள்கின்றது, எவ்வாறு அதிலிருந்து விடுபட எத்தனிக்கின்றது என்பது போன்ற மனதின் பலவிதமான செயற்பாடுகள், எங்களால் சுலபமாக விளங்கக் கூடிய முறையில் கதைகளினூடாக விளக்கப்படுகின்றன. ஆகவே இந்நூலை உளவியல் தத்துவங்களின் செய்முறை என்று சொன்னால் அது மிகையாகாது. மிக முக்கியமாக உளப்பிரச்சினைகளில் இருந்து எவ்வாறு விடுவிக்கப்படலாம் என்பதும் இங்கு கூறப்படுகின்றது. உதாரணமாக 'மெத்தென்ற மௌனம்' என்ற கதையில் நேரடியான வழிகாட்டலில் இருந்து. "பெண்பனை" "பிறழ்வின் தோற்றம்" "உயர்ந்து செல்லும் சீரழிவுமானி" "இளம் கனவு" "நெருக்கீட்டின் பின்" போன்ற வற்றில் உளவளத்துணைச் செயற்பாடுவரை தெளிவாக விளக்கப்படுகின்றது.

இவ்வாறான பல பொது அம்சங்களுடன் ஆசிரியராகிய கோகிலா மகேந்திரன் இச் சிறுகதைகளில் தனது கற்றல் - கற்பித்தல் செயற் பாடுகளையும் கைவிடவில்லை. பொருத்தமாக விஞ்ஞான அறிவு ஆங்காங்கே புகட்டப்பட்டுள்ளது. உதாரணமாக. "பெண்பனை" "தலையீடு" "புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல்" போன்றவற்றில் தாவரவியல், சூழலியல், விலங்கியல் அறிவு நன்கு வெளிப்படுகின்றது. எங்களுக்குத் தெரியாமலே வாசகராகிய நாம் இவற்றை உள் வாங்கி விடுவோம். எமது சொல் அகராதியும் பல அர்த்தமுள்ள சொற்களின் அறிமுகத்தால் வளர்க்கப்படுகின்றது. மற்றும் ஒரு சமூகவியல் நலன் விரும்பி என்ற பொறுப்பிலிருந்து ஆழமான மனித நேய, சமூக முன்னேற்றக் கருத்துக்கள் மிருகங்களினூடாகவும் தாவரங்களி னூடாகவும் கூடச் சொல்லப்படுகின்றன. George Orwell இன் Animal farm என்ற நூலின் பாணியில் "விஷம்" என்ற கதை அமைகின்றது. "பெண்பனை"யில் பெண்ணியக்கருத்துக்கள் முன் வைக்கப்படுகின்றன. தற்பொழுது அதிக சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ள சிறுவர், போராளி களாவதான பிரச்சினைக்குரிய விடை "இளம் கனவு" என்ற கதையில் கிடைக்கின்றது. சிறுவர் ஏன் போராளிகளாக, வீட்டைவிட்டு ஓடிப் போகிறார்கள் என்று ஆராய்ந்து அக்காரணங்களை நிவர்த்தி செய்தால் இப்பிரச்சினை ஏற்படாது. இயற்கைக் காட்சிகளை எவ்வாறு மனதின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்பாடுகளுக்கும் குமுறல்களுக்கும் ஒத்தவாறு பிரதிபலிக்கிறார் கையாளுகிறார் என்ற வகையில் நூலாசிரியரின் கவித்துவத்தைக் காணலாம். பல குறியீடுகளும் அங்காங்கே மறைந்திருந்து எங்கள் சிந்தனைகளைத் தூண்டிவிடுகின்றன. இன்னுமொரு போற்ற வேண்டிய பண்பு தற்காலத்தில் தென்னிந்தியாவிலும் இங்கேயும் பாணியாக வந்து விட்டகதையமைப்புக் (Plot) கொண்ட - மலிந்த காதல் கதைகள் இத் தொகுதியில் இடம் பெறாததாகும்.

ஒரு நல்ல தொகுப்பு நூல் - தொடர்ந்தும் கஷ்டமான சோதனைக்குரிய காரியங்களைக் கூறாமல் சற்று ஓய்வு கொடுக்கும் நோக்கில் மெல்லிய நகைச் சுவையுடன் சிரிக்கவைக்கும் முறையில் 'நெருஞ்சி' 'ஏ-9 பாதை' ஆகிய கதைகள் வந்து ஆறுதல் தருகின்றன.

இந்தச் சிறு கதைத் தொகுப்பில், ஒரு குறைபாட்டைக் குறிப்பிடலாம் என்றால், இச்சிறுகதைகள் மிகவும் சிறுத்துப்போயின என்பதையெ சொல்லலாம். இக்காலத்து வாசகர்கள் நீண்டகதைகளை வாசிக்கப் பொறுமை அற்றவர்களாகக் காணப்பட்டாலும், இக் கதைகளைச் சற்று விரிவாக்கம் செய்து உள, சமூக மனித நேயக் கருத்துக்களை இன்னும் ஆழமாகக் கையாண்டிருக்கலாம்.

ஒட்டு மொத்தமாக, இச்சிறுகதைத் தொகுப்பு பல முக்கிய காரியங்களை ஒரே நேரத்தில் செய்கின்றது. இவையெல்லாம் கதாசிரியர் கோகிலா மகேந்திரனின் பல்துறை சார் புலமையையும், முதிர்வையும் காட்டுகின்றன.

இந்நூல், தமிழ்ச் சமுதாய நலன் விரும்பிகள், உளவியல் ஆய்வாளர்கள் கலை இலக்கிய இரசிகர்கள் மற்றும் எம்மைப் போல் இக்காலப் பகுதியில் போரின் மத்தியில், வாழ்ந்தவர்கள் என்று எல்லோராலும் படிக்கப்பட வேண்டிய - பயன்பெறப்பட வேண்டிய - ஒன்றாகும்.

உள மருத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

மார்கழி - 2003

## எழுதப்பட்ட சிறுகதைகள்

48. நம்பிக்கைச் சிறகுள்ள பூச்சிகள் – புத்தெழில் புரட்டாதி 88
49. மனிதம் மதலைகளிடம் மட்டும் – 17.7.1988
50. ஆழ்ந்த அநுதாபங்கள் – 1989 ஆவணி மல்லிகை
51. முகங்களும் மூடிகளும் – நோர்வேத் தமிழ்ச்சங்கப் போட்டிப் பரிசு – 1989
52. இருட்டு – 27.10.1990 முரசொலி
53. மண்டையில் சுற்றும் முட்சக்கரங்கள் – 30.10.1990 முரசொலி
54. திசைமாறும் – 19.11.1990 முரசொலி
55. எரியும் – 1991 மார்கழி மல்லிகை
56. விலை – 1994
57. முகாமுக்குப் போதாத அகதி – 1994 மல்லிகை
58. மனதையே கழுவி – 1995தை மல்லிகை
59. சர்ப்ப மரணம் – 1995
60. விஷம் – 2001 தை அருள் ஒளி
61. வாழ்வுந்தலும் – 31.1.2003 வலம்புரி
62. பெண்பனை – 07.02.2003 வலம்புரி
63. நெருஞ்சி – 14.02.2003 வலம்புரி
64. தலையீடு – 28.02.2003 வலம்புரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்.கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா அவர்களின்

# அணிந்துரை

(முகங்களும் மூடிகளும் சிறுகதைத் தொகுதி)

யாழ்ப்பாணத்தின் மண்வளம் மிக்க கிராமங்களில் ஒன்றான தெல்லிப்பளை விழிசிட்டியிலே பிறந்து வளர்ந்தவர் கோகிலா மகேந்திரன். ஆக்க இலக்கிய கர்த்தாக்களுக்குக் கிராமிய வாழ்வு வெறும் அனுபவமாக மாத்திரமன்றி ஒருவித கற்கைநெறியாகவும் அமைவதுண்டு. கிராமம் வாய்திறந்து பேசும் இலக்கியங்கள் உலகப் புகழ் பெற்றவையாக அமைவதற்கு எழுத்தாளனின் இந்தக் 'கற்கைநெறியும்' ஒரு காரணமாகலாம். கோகிலாவின் படைப்புக்கள் பலவற்றிலே 'கிராமியக் கற்கைநெறி' புலப்படுவதையும் அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிராமமும் நகரமும் சங்கமித்த கல்லூரிகளிலே தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியும் ஒன்றாகும். கோகிலா கல்வி பயின்ற காலங்களில் மகாஜனக்கல்லூரியை 'அம்பனைப் பல்கலைக்கழகம்' என்று அழைத்த வரலாறு உண்டு. இக்கல்லூரிக்கென்று தனித்து வமானதோர் கலை இலக்கியப் பாரம்பரியம் இருப்பதை அனைவரும் அறிவர். ஈழத்தின் புகழ்பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்களை 'ஈன்று புறந்தந்த' பெருமை மகாஜனாவுக்கு உரியது. கோகிலா எழுத்துத் துறையிலே பிரகாசிப்பதற்கு இந்த 'மகாஜனமரபும்' வலுவான காரணியாகலாம்.

விஞ்ஞானக் கல்வி கற்ற கோகிலா பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவியாக இருந்தவர். தனிமனித நோய்க்கு வைத்தியம் செய்பவராக வரவேண்டியவர் இன்று சமூகத்தின் நோய் நொடிகளை இனங்கண்டு இலக்கிய வைத்தியம் செய்யும் எழுத்தாளராக முகிழ்த்திருக்கின்றார்.

ஆசிரியர், அதிபர், கல்வி அதிகாரி, சீர்மியர் முதலான பல்வகைப் பரிமாணங்களினூடு, தான் பெற்றவற்றைச் சிறந்த இலக்கியமாகச் செதுக்கும் திறன் கோகிலாவுக்குக் கைவந்த கலை. கந்தோர், கதிரை, மேசை, கோப்புக்கள், குடும்பம் முதலானவற்றோடு மட்டும் தன் கடமை முடிந்தது என்று நின்றுவிடாது உளவியல்சார் செயற் பாடுகளிலே ஆர்வம் கொண்டு நல்ல சீர்மியச் செயற்பாட்டாளராகவும் விளங்குகின்றார்.

நாவல், சிறுகதை, நாடகம், ஆய்வு முதலான துறைகளிலே ஆழமான சுவடுகளைப் பதித்துள்ள கோகிலா நல்ல வாசகியும் ஆவார். தமிழ், ஆங்கில இலக்கியங்களில் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் உடைய இவரது படைப்புக்கள் ஒவ்வொன்றிலும் ஒருவகை வித்தியாசமான தனித்தன்மையைத் தரிசிக்க முடியும்.

பன்மொழிப் பாண்டித்தியமுடைய வ.வே.சு. ஐயரின் ஊடாகத் 'தமிழ்மொழிப் பிரவேசம்' செய்ததெனக் கூறப்படும் சிறுகதை என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய வடிவம் முப்பதுகள் நாற்பதுகளில் வேர்விட்டு, ஐம்பது அறுபதுகளில் வளர்ச்சி கண்டு எழுபது எண்பதுகளில் கிளைபரப்பி இன்று விழுது விட்டுச் 'சடைத்த' பெருவிருட்சமாகிவிட்டது. தமிழகத்தில் சிறுகதை வேர்விட்டு வளரத் தொடங்கிய காலத்திலேயே ஈழத்திலும் சிறுகதை முளைத்து வளரத்தொடங்கிவிட்டது. ஒவ்வொரு கால கட்டத்திற்கும் உரிய சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுக் கூறுகளை ஏதோ ஒரு அளவில், ஏதோ ஒரு வகையில் உள்வாங்கிச் சிறுகதை என்னும் இலக்கிய வடிவம் 'பயணித்து'க் கொண்டிருக்கின்றது.

சிறுகதை என்ற இலக்கிய வடிவத்திற்கு வரைவிலக்கணம் கூறப்புகுந்த ஆய்வாளர்கள் முழுமையான வெற்றி பெற்றார்கள் என்று கூறுவது கடினமானது. திறனாய்வாளர்கள் கூறிய வரைவிலக்கணங்களை இங்கே விளக்கமாகக் கூறினால் இவ்வுரை 'பாடக்குறிப்பு'ப் போலாகிவிடும் ஆபத்தும் உண்டு.

கோகிலாவின் 'முகங்களும் மூடிகளும்' என்னும் சிறுகதைத் தொகுதியிலே பதினெட்டுச் சிறுகதைகள் இடம்பெற்றுள்ளன. அமைப்பிலும், அளவிலும், போக்கிலும் வேறுபட்டு இச் சிறுகதைகள் காணப்படுகின்ற போதிலும் உள்ளடக்க வகையில், அல்லது நோக்கு நிலையில் ஏதோ ஒரு உள்ளீடு, உணர்வு நரம்பாக (Spinal Cord)ச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இத்தொகுதியிற் காணப்படும் கதைகளிற் பெரும்பாலானவை மனித நடத்தையின் பின்னணியில் உளச் செயற்பாடு எவ்வாறு அமைகின்றது என்பதை நேரடியாகவோ, மறைமுகமாகவோ, குறியீடாகவோ சொல்லிச் செல்பவையாகவே காணப்படுகின்றன. தனிமனித நடத்தைகளின் பின்னணியிலேயே குடும்பம், சமூகம், அரசு வகிக்கும் பங்கினையும் இவரது கதைகளினூடு கண்டு கொள்ள முடிகின்றது.

ஆசிரியர் தான் கண்டதை, கேட்டதை, அறிந்ததை, அனுபவித்ததைச் சிறுகதையென்னும் இலக்கிய வடிவத்தினூடு சிறைப்பிடித்துள்ளார். இக்கதைகள் சொல்லுகின்ற செய்திகளுக்கும் அப்பால் சொல்லாமல் கரந்திருக்கும் பொருளே மனத்தில் பரந்து விரிந்து செல்லும் தன்மையை வாசகர்கள் அனுபவிப்பர்.

வாசகனின் நெஞ்சைத் தொடுகின்ற விடயங்கள் மாத்திரமன்றி நெஞ்சைச் சுடுகின்ற பல விடயங்களை இக்கதைகள் கொண்டுள்ளன. தனிமனித நடத்தைகளினூடு சமூகத்தை ஊடுருவிக் கதிர்ப்படமாக (X Ray) எடுத்துக் காட்டியுள்ளார் எனலாம். எல்லாக்கதைகளிலுமே இத்தன்மையைக் காணலாம் எனினும் வகை மாதிரிக்குச் சிலவற்றைச் சுட்டிக்காட்டலாம். முகாமுக்குப் போகாத அகதி, பெண்பனை, இளம் கனவு, பூக்குளிப்பு, கூறானது மனம் முதலானவை நெஞ்சைச் சுடுவதை நிதர்சனமாகவே அனுபவிக்கலாம்.

குறியீடாக இவர் கையாளும் விடயங்கள் பெரும்பாலும் அரசியற் பின்னணி கொண்டவையாகவே காணப்படுகின்றன. வாசகன் இலகுவாக இனங்காணக்கூடிய குறியீடுகளும் உண்டு. அணி இலக்கண ஆசிரியர்களின் மொழியிலே கூறுவதானால் ஒட்டணியும் உண்டு. இலேச அணியும் உண்டு. வாசகனின் உணர்திறனுக்குச் சவாலாக அமையும் கதைகளும் இல்லாமல் இல்லை. இத்தொகுதியில் இடம்பெறும் 'விஷம்', 'புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல்' முதலான கதைகள் குறியீட்டுக்கதை எழுதுவதில் ஆசிரியர் வல்லவர் என்பதைத் தெளிவாகவே புலப்படுத்துகின்றன. இக்குறியீட்டுக் கதை களுக்குள்ளே சொல்லாத சேதிகளையும் சொல்லிச் செல்லுகின்றார்.

இத்தொகுதியில் இடம்பெறும் இரண்டு கதைகள் கடித வடிவிலே அமைந்துள்ளன. கடித இலக்கியம் என்று ஒருவகை உண்டு என்று கூறுகிறார்கள். இலக்கியக் கடிதம் என்று ஒருவகை உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இதில் இடம்பெறும் கதைகள் கடித இலக்கியக்கதைகளாகவே காணப்படுகின்றன.

காற்றுவெளியில் 'கைவீசி நடக்கும்' இலாவகமான உரைநடையை இவர் கையாண்டுள்ளார். நெருஞ்சி என்ற சிறுகதையில் இப் பண்பினை நிறையவே காணலாம். புதுமைப் பித்தனின் 'ஒருநாள் கழிந்தது' என்னும் சிறுகதையை ஒரேவழி நெருஞ்சி நினைக் கவைக்கின்றது.

இவர் கதைகளை நிறைவு செய்யும் பாணி இன்னொரு சிறுகதைக்குத் தொடக்கமாக அமைவது போல அமைவதும் உண்டு. உதாரணமாக:

'இரவுச்சாப்பாட்டிற்கு வீடுபோனால் போதும்! வீடு இருந்தால் தானே!!'

'தேளா? எங்கேயிருந்தது? நான் கணேல்லை' என்றார் அவர். மூன்று நாளும் அவர் காலைக்கடன் கழித்தது நிச்சயம். அவரது வெள்ளை ஆடையை நான் உற்றுப்பார்க்கத் தொடங்கினேன்'

(புலன்களுக்கும் அப்பால் உள்வாங்குதல்)

முதலானவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

இதுவரை வெளிவந்த ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைத் தொகுதிகளிலே வித்தியாசமான போக்கிலும், நோக்கிலும் அமைந்த தொகுதியாக முகங்களும் மூடிகளும் என்னும் தொகுதியைப் பார்க்கலாம். பல்பரிமாண ஆளுமை கொண்ட கோகிலா மகேந்திரனிடமிருந்து இன்னும் பலசிறுகதைத் தொகுதிகள் வரவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ்த்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்.

25.12.2002

## எழுதப்பட்ட சிறுகதைகள்

65. இளம்கனவு – 07.02.2003 வலம்புரி
66. பூக்குளிப்பு – 14.03.2003 வலம்புரி
67. ஏ – 9 பாதை – 28.03.2003 வலம்புரி
68. மெத்தென்ற மௌனம் – 04.04.2003 வலம்புரி
69. நெருக்கீட்டின் பின் – 18.04.2003 வலம்புரி
70. கூறானது மனம் – 02.05.2003 வலம்புரி
71. மலையைச் சுமத்தல் என்பது – 09.05.2003 வலம்புரி
72. பிறழ்வின் தோற்றம் – 23.05.2003 வலம்புரி
    2009 ஆகஸ்ட், உதயம் மறுபிரசுரம்
73. உயர்ந்து செல்லும் சீரழிவு மானி – 02.06.2003 வலம்புரி
74. புலன்களுக்கு அப்பால் உள்வாங்குதல் – 15.08.2003 வலம்புரி
75. விழுதலும் எழுதலும் – 2007 மல்லிகை
76. கால் ஒப்பம் – 2007 ஒக்டோபர் தாயகம், (தகவத்தின் சிறப்புப் பரிசு)

(அட்டவணை பூரணமானதில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி சிவமலர் சுந்தரபாரதி (M.Ed) அவர்களின் கருத்து. . . .

# இணைப்பாளராக எம் கோகிலா மகேந்திரன்

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் உளவியல் சார் பயிற்சி நெறிகளின் இணைப் பாளராகக் கடமையாற்றிய பொழுதுகளில் சில மணித்துளிகளை மீட்டுப் பார்க்கிறேன். திணைக்களத்தின் பயிற்சி நெறிகள், சாந்திக நிறுவனத்தின் பயிற்சி நெறிகள், ஆசிரிய சங்கத்தின் செயலமர்வுகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலமர்வுகள், டனிஸ் செஞ்சிலுவைச் சங்கப் பயிற்சி நெறிகள் என எத்தனை நிகழ்வுகள்!

காலைவேளை மு.ப.7.55. சாந்திகத்தின் வாயிலின் முன் ஆட்டோ வந்து நிற்கிறது. சாந்திக மணல் பரப்பிய மண்டபத்தில் திடீர் அமைதி. பயிலுநர் முகங்களில் மரியாதை கொண்ட மகிழ்வின் மலர்வுகள். எளிமையான தோற்றத்தில் அந்த மெல்லிய மென்மையான உருவம் நிமிர்ந்த நன்னடையும் மென்சிரிப்புமாக மண்டப வாசலுக்கு வர, அனைவரும் குட்மோர்னிங் மிஸ், குட்மோர்னிங் மிஸ் எனத் தொடராகக் கூறும் வரவேற்பினூடே 'குட் மோர்னிங்'களை உதிர்த்தவாறே மேடை நோக்கிச் செல்ல பின்னால் ஆட்டோ தயாளன் பல கற்பித்தற் சாதனங்களைச் சுமந்து வந்து மேடையில் வைத்துச் செல்கின்றார். தொடர்ந்து "எல்லோருக்கும் வணக்கம். அகவணக்கத்துடன் எமது இன்றைய பயிற்சி நாளை ஆரம்பிப்போம்" இணைப்பாளரின் கணீரென்ற உறுதியான குரல் எழ அனைவரும் எழுந்து நிற்கின்றனர். எனது கடிகார முகப்பில் 8.00 மணி. ஒன்றா, இரண்டா எத்தனை நாள்கள் இப்படித் துல்லியமாகப் பயிற்சிகள் ஆரம்பித்தன. இணைப்பாளரின் செயற் பாடுகளினூடு 'நேரத்தை முகாமை செய்யுங்கள். சிறந்த தயார்ப்படுத்தலுடன் கற்பித்தலைத் தொடருங்கள்' என்ற செய்தி பயிலுநர்களை அடைந்தது.

பயிற்சிநெறி ஒன்று ஆரம்பிப்பதற்கு ஒரு வாரம் முன்னதாக வள ஆளணிக்கோர் அழைப்புக்கடிதம்.

"பயிற்சி நெறிக்கான திட்டமிடலுக்கான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. தங்களின் வருகை நிகழ்வைச் சிறப்பிக்கும்"

கட்டளையின்றிய ஆனால் தவிர்க்கவே முடியாத மனோநிலையைத் தோற்றுவிக்கும் எழுத்து வடிவம் அது.

அங்கே தேநீர், சிற்றுண்டியுடன் இனிய கலந்துரையாடல் தொடரும். ஒவ்வொருவராகப் பெயர் கூறி அழைத்துத் திகதி, கிழமை, நேரம் வசதியா எனக் கேட்டுத் தனது டயறியில் நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொள்வதே அவரது வழக்கம். அவரவர் விரும்பும் தலைப்பு, இணைப்பாளரால் வழங்கப்படும் தலைப்பு எனத் தொடரும். சிவமலர், 'communication' ஐ நீங்கள் எடுக்கிறீங்களா?, கிருபா 'Alcohol' ஐ நீங்கள் எடுக்கிறீங்களா என ஏற்கனவே மனதிலுள்ள திட்ட அட்டவணை வினாக்களாக வெளிப்படும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் ஒரு team ஆகத் தான் யாவரும் இணைந்து நடத்தப்போகின்றோம். எமக்குரிய நாள்களில் நாம் முழுப்பயிற்சி நேரமும் அங்கிருந்து செயற்படுவோம்" இது இனைப்பாளரின் குரல். நன்றி கூறுவதுடன் நிறைவு செய்து அந்தச் சீரிய திட்டமிடலாளர் ஆட்டோவை நோக்கிச் செல்கின்றார்.

இன்னொரு நாள் சாந்திகத்தில் பயிற்சி நெறியின் இடைவேளை நேரம். என்னுடன் கலந்துரையாட வந்த சில பயிலுநர்கள் கூறிய விடயம் 'எங்கட கோகிலா மிஸ் எங்களுடன் கதைக்கேக்க அவவின்ர கண்களுக்குள்ளயிருந்து ஒரு சக்தியோ ஒரு அலையோ எங்களுக்குள்ளே அப்படியே போறமாதிரி இருக்கு. அப்ப எங்களுக்குள்ள இருக்கிற பிரச்சினை, கவலை எல்லாம் வெளியேறிய மாதிரி உணருறம். ஒரு வேளை இதைத்தான் முந்தி நயனதீட்சை எண்டு சொல்லிச்சினமோ" உணர்வுகள் வெளிப்படப் பயிலுநர்கள் கூறியபோது இது தொடர்பான எனது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டது இன்றும் நினைவில் நிறைந்துள்ளது. கண்ணோடு கண் நோக்கிச் சீர்மிய நாடியின் ஆழ்மனதிலிருந்து அவஸ்தைகளை வெளிவரச் செய்து உரிய ஆறுதல் வழங்கும் உன்னத உளவளத் துணையாளரே இந்த இணைப்பாளர்.

இணைப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் பயிற்சியில் உளநல விடயங்களை விளக்குகையில் அவரது மாணவர்களான வள ஆளணியினரும் அதைச் செவிமடுத்துக் குறிப்புகள் எடுப்பது வழக்கமாகும். இடையிடையே வள ஆளணியினரிடமிருந்து பெருமூச்சுக்களும் எழும். இணைப்பாளர் மீது ஒரு ஆதங்கப் பார்வையும் செல்லும், இடைவேளையின் போது "என்ன மிஸ் நீங்கள் இதை எங்களுக்குப் படிப்பிக்கேல்லை கன புது விசயங்கள் சொல்லேல்லை. நல்ல காலம் இண்டைக்கு நாங்கள் இதில். புன்சிரிப்புடன் பதில் தொடர்ந்தது. 'ஒரு தலைப்பை ஆயத்தப் படுத்தினால் வாழ்நாள் முழுக்க அதையே ஒப்புவித்துக் கொண்டிருப்பது நல்லதில்லையே. காலங்கள் செல்ல அவ்விடயம் பற்றிய மேலதிக ஆய்வுகள், புதிய விடயங்கள் என்பவற்றைத் தேடி அறிந்து புதிதாகத் தொகுப்பது எனது வழக்கம்". இன்று வரை வாழ்நாள் கற்கையாளராகத் தன்னை ஆக்கிக் கொண்டிருக்கும் எமது இணைப்பாளர் அடுத்த நிகழ்வைத் தொடங்கச் செல்வார்.

எந்த ஒரு பயிற்சி நாளிலும் ஒரு விடயத்திற்குரிய வளவாளர் வராமையால் free என்ற சொல்லிற்கே இடமிருப்பதில்லை. நேரிலும் தொலைபேசி மூலமும் வளவாளர்கள் நியமிக் கப்பட்டால் அவர்கள் வராமல் விடுவதும் மிக அரிது. யாராவது வரமுடியாத நிலைமையைத் தெரிவித்தால் அவ்விடய வேளையில் இணைப் பாளரது கற்பித்தற்கடமை தொடங்கும். பயிற்சியின் தொடக்கம் முதல் நிறைவு வரை முழுதாகக் கடமையிலிருக்கும் இணைப்பாளர் ஒருநாள் வலயக் காரியாலயத்திற்குச் சென்றபோது கல்விப் பணிப்பாளர் அவரிடம் Master Counsellors Course எப்படிப் போகிறது? எத்தனை மணிவரை நடக்கிறது என்று கேட்டபோது இரவு 8.00 மணிக்கு நிறைவு பெறுகிறது என்று பதிலளித்தார். "நேற்று இரவு 7.45 மணிக்கு நான் சாந்திகத்தின் வெளியே நின்று அவதானித்துச் சென்றேன்," இது கல்விப் பணிப்பாளரின் கூற்று. சொல்வதைச் செய்கின்ற, செய்வதைச் சொல்கின்ற இணைப்பாளர் ஒரு நாளாவது பயிற்சியைப் பத்து நிமிடங்களாவது முன்னதாக முடித்ததாக நிகழ்வுகள் எதுவுமில்லை.

இடம்பெயர்ந்த மக்களிடையேயுள்ள மாண வர்கள் தொடர்பான ஆய்வுக்குச் சென்றிருந்த வேளை நண்பகல். அன்பு நிறைந்த ஒரு பெண் மணியின் குளிர்மையான குடிசை வீட்டு விறாந்தையில் பாய்களில் இணைப்பாளரும் நாமும் ஒன்றாக அமர்ந்திருக்கிறோம். அப்பெண் மணி செம்பில் நீர் கொண்டு வந்து வைக்க எல்லோரது உணவுப் பொதிகளும் விரிக்கப்படுகின்றன. எனது பொதியில் மிஸ்ஸிற்கு விருப்பமான இட்டலி. 'மிஸ் இட்டலி சாப்பிட்டுப் பாருங்களேன்' நான் கேட்டேன். 'ஓ நான் இதை வேண்டாமென்று சொல்லமாட்டேன். எனக்கு விருப்பமானதல்லவா? இந்தாங்கோ எனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியப்பம், நீங்கள் எடுங்கோ." நட்புடன் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து இணைப்பாளரதும் வள ஆளணியினரதும் உணவுப் பொருள்கள் எல்லாப் பொதிகளிலும் இடம் மாறுகின்றன. இனிமையான பகிர்ந்துண்ணல். இதமான தொடர்பாடல். உணவுண்டபின் பேச்சு ஒவ்வொருவரின் பிறந்த நாள் திகதி மீது திரும்புகிறது. மிஸ்ஸின் டயறியில் பிறந்த திகதிகள் பதியப்படுகிறது. இன்று வரை அந்த நாளில் நாம் ஒவ்வொருவரும் அந்தக் குரலினூடு வாழ்த்துப் பெறக் காத்திருக்கின்றோம். அகத்தைத் தொடுகின்ற நம்பிக்கைக்குரிய நட்பாளருடன் எமது வதிவிடங்களை நோக்கிப் பயணத்தை ஆரம்பித்தோம்.

ஒரு பயிற்சி நெறியின் போது வள ஆளணியினர் ஒருவருக்கொருவர் ஜோக்ஸ் பலவற்றைப் பரிமாறிய வண்ணம் இருந்தனர். பலமான சிரிப்பலைகள் பரவிக் கொண்டன. காரணம், அப்பயிற்சி நெறியின் திட்டமிடும் நாளில் ஒலித்த இணைப்பாளரது குரல் தான்.

"நகைச் சுவையை இரசிக்கக்கூடிய பண்பு மனிதரிடம் இருக்க வேண்டும். சிறந்த முன்வைத்தலில் அளவான நகைச்சுவை இழையோடுதல் நன்று. இம்முறை நீங்கள் ஒவ்வொருவரும் உங்கள் முன்வைத்தலில் ஒரு ஜோக்கை இணைத்துக் கொள்ளலாம் என நினைக்கின்றேன். உண்மையான நகைச்சுவைத் துணுக்கு எவர் மனதையும் புண்படுத்தாது யாவரையும் சிரிக்கவும் சிந்திக்கவும் தூண்டும் என்பதையும் நாம் மறந்து விடலாகாது."

Danish Red Cross இன் பயிற்சி நிகழ்வை முடித்துக்கொண்டு வாகனத்தில் சென்று கொண்டிருந்தோம். சிரிப்பும் கதையுமாக மகிழ்வான பயணமது. முதலில் இணைப்பாளரை அவரின் வீட்டில் இறக்கிவிட்டுப் பயணம் தொடர்ந்தது. இறுதியாக இறங்குவது பெரும்பாலும் நான் தான். வாகனச் சாரதி என்னிடம் 'மிஸ், உங்கள் கோகிலா மேடம் பகிடிவிட்டுச் சிரிப்பாரா? எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. அவர் உங்களுடன் நகைச்சுவையாகக் கதைத்துக் கொண்டு வந்ததை நான் கேட்டுத் திகைத்து விட்டேன். அவர் எப்போதும் சீரியஸ் ஆன ஒருவராகவே இருப்பார் என்று தான் எண்ணியிருந்தேன்" என்று இதமாகச் சிரிக்க வைக்கும் இணைப்பாளரைப் பற்றிப் பகிர்ந்து கொண்டதை எண்ணிக் கொள்கிறேன்.

மானிப்பாய் ஆசிரிய வள நிலைய மண்டபம் ஆசிரியர்களுக்கான உளவியற் பயிற்சிக் கருத்தரங்கில் Role Play. இடம் பெயர்ந்து மீண்டும் சொந்த இடம் சென்று வீடுகளைப் பார்த்து அழிவுகளைக் கண்டு உணர்வு சிந்தும் தமிழ் மக்களாகப் பகீரதி மிஸ் உடன் இணைந்து நடித்து எம்மைக் கண்கலங்க வைத்த அந்த நடிப்பாற்றல். இன்றும் பசுமையாக உள்ளது. பயிற்சி இணைப்பாளராக மட்டும் சேவை புரியாது பயிலுநர்களின் பல்வகை ஆளுமையை வளர்த்தெடுக்கப் பயிற்சி நெறியினூடு சிறுகதை எழுதுதல், நடனமாடுதல், வரைதல், பாடுதல், கவிதை எழுதுதல் போன்ற பயிற்சிகளை வழங்கச் சிறந்த துறைசார் வள ஆளணியினரைப் பயன்படுத்தியதில் தனது பொறுப்பான கடமைகளை உன்னதமாக நிறைவேற்றிய இணைப்பாளரைக் கண்டோம். இணைப்பாளரினூடு பல்கலைக் கலைஞரான கோகிலா மிஸ் தன்முகம் காட்டி நின்றார்.

'குழந்தை வளர்ச்சியும் விருத்தியும்' இது எனக்குத் தரப்பட்ட விடயம். முதல் நாளிரவு அழகிய குழந்தைப் படத்துடன் வர்ணத் தாள்கள், சிறிய விடய அட்டைகள் என்பவற்றுடன் நீண்ட நேரம் திட்டமிட்டு ஆயத்தப்படுத்தினேன். மறுநாள் காலை எனது கற்பித்தல் முடிவடைய நிம்மதியாக உட்கார்ந்தேன். சிறிது நேரத்தில் எனது முன்வைத்தல் பற்றிய சிறிய கருத்துக் கூறலை இணைப்பாளர் தொடர்ந்தார்.

"இக் கவர்ச்சிகரமான முன்வைத்தலுக்காக இவருக்கு இப்புத்தகம் ஒன்றைப் பரிசளித்துப் பாராட்டுவோம்" என்று என்னை அழைத்த கணம் இன்றும் பசுமையாக உள்ளது. அதனைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து சிறந்த அறிக்கையை முன்வைத்தவர், சிறந்த கவிதை எழுதியவர், கூடிய பரீட்சைப் புள்ளிகள் எடுத்தவர், சிறந்த முன்மாதிரிச் செயற்பாட்டினை மேற்கொண்டவர் எனப் பரிசு வழங்கல் தொடர்ந்தது. இவரின் சிறந்த பாராட்டுதலைத் தொடர்ந்து பெறச். சிறந்த தயார்ப்படுத்தலில் எமது குழவினர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டமைக்கு இந்த உன்னத ஊக்குவிப்பாளரான இணைப்பாளரே காரணமாக இருந்தமையை நன்றியுடன் எண்ணிக் கொள்கின்றேன்.

இணைப்பாளர் பணியினூடு நேரமுகாமையாளர், சிறந்த கற்பித்தலியலாளர், திட்டமிடலாளர், உன்னதமான உளவளத்துணையாளர், காலந் தோறும் கற்கையாளர், நம்பிக்கை நட்பாளர், நகைச் சுவையாளர், பல்துறைக் கலைஞர், ஊக்குவிப்பாளர், முன்மாதிரியாளர் எனப் பல்வகை ஆளுமைக் கூறுகளை முன்வைத்த திருமதி கோகிலா மகேந்திரனை அவர் தம் பணிகளை மீட்டிக் கொண்ட நிறைவுடன் 'யாம் பெற்ற இன்பம் யாவரும் பெற' நல்லாரோக்கியத்துடன் நலமே வாழ இறைவனை வேண்டிக் கொள்கின்றேன்.

அதிபர்,
மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை
(2009)

**எழுதப்பட்ட குறுநாவல்கள் – (நூல் வடிவம் பெறவில்லை)**

1. நிர்ப்பந்தங்கள் – ஈழநாடு – 1980
2. இருளில் ஓர் மின்மினி – மித்திரன் – 1980
3. திருப்பங்கள் – (9 பெண் எழுத்தாளர் இணைந்து) மித்திரன் – 1980
4. வைகறை உணர்வுகள் – முரசொலி நடத்திய போட்டியில் பரிசு – 1987
5. காலங்கள் காத்திருக்கும் – மித்திரன் – 1981

**பதிப்பாசிரியராக**

1. கோலங்கள் ஐந்து – 1993
2. விழிமுத்து – 1999
3. இறைமணிமாலை – 1999
4. மாறன் மணிக்கதைகள் – II – 2004
5. கனக சபைக்குச் சென்ற கனகசபை – 2006
6. திறவுகோல் – 2008
7. மனம் எங்கே போகிறது? – 2008

**எழுதப்பட்ட சிறுவர் கவிதைகள்**

1. எமது பூமி புதிது – 1985
2. கோழிச் சேவல் – 2.7.1989 முரசொலி
3. அவை காட்டும் வழி – 10.9.1989 ஈழநாடு
4. குரும்பைத்தேர் – 5.2.1989 முரசொலி
5. ஔவைப் பாட்டி – 1991
6. பூனைக்குட்டி – 1991

(அட்டவணை பூரணமானதில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த.சிவகுமாரன் (M.Ed) கூறுவது

# சகநடிகையாகத் திருமதி.கோகிலா மகேந்திரன்

நான் திருமதி.கோகிலா மகேந்திரனை முதலில் சந்தித்தது, இணுவில்கிழக்கு அண்ணமார் கோயிலுக்கு முன்னொழுங்கையில், இருக்கின்ற வீடொன்றில்தான். என்னைக் கூட்டிச்சென்று அறிமுகப்படுத்தியவர் நண்பர் ஞானசூரியவர்கள். தொண்ணூறுகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப்பணிசெய்து கொண் டிருக்கும் போது, இல்லங்களுக்கிடையேயான நாடகப்போட்டியில் வாகீசர் இல்லம் பொறுப் பாசிரியர் என்றவகையில் எனது இல்லம் சிறுவர்நாடகமொன்றை மேடையேற்றத் தீர்மானித் திருந்ததினால், சிறுவர் நாடகம் பற்றிக் கதைப் பதற்கான சந்திப்புத்தான் அது. அச்சந்திப்பு என்னை சிறுவர் நாடகத்தின்பால் பல்வேறு விடயங்கள் சார்ந்து ஆற்றுப்படுத்தியிருந்தது. அவருக்கே உரிய தோற்றம், உறுதியான பார்வை அளவறிந்த சொற்பிரயோகம், விடயத்தில் தெளிவு; தனது வேலைகளை இடைநிறுத்தி எங்களை வரவேற்று எமக்கிருந்த பிரச்சினைகளில் தனது முழுக்கவனத்தையும் செலுத்தி எங்களின் வினாக்களைத் தனது விளக்கத்தால் தணித்திருந்தார். பிறமனிதர்கள் மீது தனது சிந்தனைகளால் ஊடுருவி சமூக அக்கறைகொண்டு அவர்களை இயங்கவைக்கும் ஆளுமைகொண்டவர் அவர்.

1997இல் வேம்படி மகளிர் கல்லூரியில் இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்ட "முரண்பாடுகளின் தீர்வுகள்" என்னும் விடயம்பற்றி பன்னிரண்டுநாட்கள் நடைபெற்ற செயலமர்வில் அவருடன் இணைந்து பயிலுனராகப் பங்குபற்றும் வாய்ப்புக்கிடைத்திருந்தது. குழுவாக இயங்குதல், பாகமாடுதல் வேளைகளில் இவரால் பல்துறை ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. இவற்றுள் நடிப்புத்திறன் சிறப்பாக வெளிப் பட்டிருந்ததனைக் காணமுடிந்தது. ஒருபாத்திரத்தை விரைவாகவும் நேர்த்தியாகவும் வெளிப்படுத்துவது என்பது அவருக்கென்ற ஒரு தனித்துவமாக இருந்தது.

நடிப்புத்துறை, நாடக எழுத்துருவாக்கம், நாடக நெறியாளர்பணி போன்றவற்றில் தனக்கே உரிய கோலத்தில் பல்துறைசார் ஆற்றல்களை ஊடுகடத்தி துலங்கச் செய்யும் வல்லமை கொண்டவர். சோர்வின்றித் தன்னை அர்ப்பணித்து அக்கறையுடன் படைப்பின் மூலகங்களைத் தனித்தனியே தெளிவுறுத்தி மூலகங்களின் ஒன்றிணைவை அழகியல்வெளிப்பாட்டை நோக்கி நகர்த்துவதில் அயராது உழைப்பவர். நாடகம் ஒரு கூட்டுக்கலைப் படைப்பு. இவற்றுள் வரும் ஒவ்வொரு கலையம்சமும் கைவரப் பெற்றிருப்பது அவரின் நாடகங்களை சிறந்த படைப்புகளாக உருவாக்குவதில் பங்களிப்பைச் செய்திருந்தன.

நாடகங்களை எழுதி, நெறிப்படுத்தி, நடித்தலுடன் தன்னை இணைத்துச் செயலாற்றுதல் என்பது இவருக்கு விருப்பமானதாகும். பொதுவாக ஒரு நாடகநெறியாளர் தனது நெறியாள்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் தான் நடிப்பதால், ஆற்றுகை வெளிப் பாட்டுத்திறனில் குறைவுகள் தோன்றவாய்ப்புகள் அதிகம். ஆனால் ஸ்ரனிஸ்லவெஸ்க்கி, கலையரசு சொர்ணலிங்கம் போன்றபலர் நெறியாளர், நடிகர் என்ற இரு பணிகளையும் ஒரு ஆற்றுகைக்காக ஒன்றிணைத்துச் செய்திருக்கின்றார்கள். இவரும் இவ்விருபணிகளையும் இணைத்துச் சிறப் பானதாகச் செய்து முடித்திருக்கின்றார் என்பதனை அவருடைய ஆற்றுகைகளைப் பார்த்தவர்களுக்குத் தெரியும்.

''இலக்குப்புள்ளி'' என்ற நாடகமும், "கேள்விகளின் முழக்கம்" என்ற நாடகமும் அவருடன் நான் சக நடிகராக இணைந்து பணியாற்றிய நாடகச் செயற்பாடுகளுள் நினைவில் முன்வருகின்ற நாடகங்களாக அமைந்திருந்தன. வட இலங்கைச் சங்கீத சபையின் "கலாவித்தகர்" பட்டத்திற்காக ஆற்றுகை செய்யப்பட்ட நாடகம் "கேள்விகளின் முழக்கம்'' ஆகும்.

மனிதர்களிடையே காலச்சூழல் நிலமை களுக்கேற்ப உருவாகும், பல்நிலை சார்ந்து எழும் கேள்விகளினால் தோன்றும் உலகுபற்றிய அனுபவ த்தைதந்த நாடகம் 'கேள்விகளின் முழக்கம்". இவ்விரு நாடகங்களும் இவர் எழுதி நடித்து நெறியாள்கை செய்த நாடகங்களாகும். இவர் ஆற்றுகையின் சமநிலையறிந்து இணைந்து பரிவுறுமாறு தனது பாத்திரத்தை வெளிப்படுத்தி அதனை விழிப்புடன் கண்காணிப்புச் செய்யும் திறனுடையவர். சகநடிகர்களுக்கு அவர்கள் ஏற்றிருக்கும் பாத்திரவெளிப்பாட்டுப் படிமுறையில் குறித்த அப்பாத்திரப்பண்புகள் பற்றி விரிவாகக் கலந்துரையாடியபின் நடிகர்களைச் சுயமாகச் சிந்தித்துப் பாத்திரமாடுவதற்குச் சுதந்திரமாக விட்டுவிடுவார். பாத்திரத்தின் ஆற்றுகைப் பொருத்தப்பாடு பொருத்தமற்று மீறுகையில் மட்டும் நடிகர்களை மெல்ல அணுகி அதற்கான விளக்கத்தை வினாக்களினூடு வரவழைத்து அவர்களை அப்பாத்திரத்தின்பால் ஆற்றுப் படுத்திவிடுவார். அவருடன் சேர்ந்து ஆற்று கைக்காக உழைக்கும் பொழுது, குழு உணர்வைத் தொற்றவைக்க தான் ஒரு முன் மாதிரியாக இயங்குவார். எப்படி இந்தவிழைவுகள் ஏற்படுகின்றன என்று சிந்திக்கமுன்னர் நாம் அந்த விழையும் அனுபவத்தில் இணைக்கப் பட்டிருப்போம். ஆற்றல்கள் வெளிப்பட்டு உளசக்தியாகப் பிரவகித்து ஒரு மாயவித்தை நடப்பது போல் யாபேரும் ஒன்றிணைந்து உழைப்பது மறக்கமுடியாத அனுபவந்தான்.

''அவவிட்டை இருந்து எமக்குவரும் கட்டளைகள், நாடக ஒத்திகைவேளைகளில் மற்றும் நாடகச் செயற்பாட்டறைகள் நடக்கின்ற வேளைகளில் எம்மைச் சக்தியுடன் இயங் கவைக்கும் சொல்லோவியம் போல் இருக்கும். "ஆலயம்தொழுவது" என்ற நாடக அனுபவத்தில், உணவு, உடல்நிலை, நித்திரை என்பவற்றை மறக்கும் அளவிற்கு நாடக ஒத்திகையும் ஆற்றுகையும் அவவை ஆக்கிரமித்திருந்தன. அன்று சிவராத்திரி தினம் இரவு 1 மணி, மருந்தைப் பற்றி நினைவுபடுத்திய பின்பு தான் இயல்பு நிலைக்கு மீண்டார். சோலைக்குயில்கள் என்ற நாடக இயக்கத்தினைப் பொறுப்பேற்று முழுமையான வழிகாட்டுதலுடன் அவவினால் நடத்தப்பட்ட நாடகப்பட்டறைகளில் பங்குகொண்டு அவவின் நாடகங்களில் இணைந்து நடித்த வெளிப்பாடுகள் அனைத்தும் நீண்டகாலப் பொழுதில் நடைபெற்றுக்கொண்டிருந்த முழுநேர தனித்துவமான அனுபவங்கள்தான்'' என்று கூறிநிறைவு செய்திருந்தார் மகாஜனா கல்லூரியின் நாடகமும் அரங்கியலும் பாட ஆசிரியர் திருமதி. பகீரதி.கணேசதுரை அவர்கள். நாடக ஆற்றுகைக்கான முழுநேர உழைப்பில் இதற்கு இவர் எனப்பொருத்தப்பாடு காண்பதற்கு ஒவ்வொருவரின் திறன்களையும் அச்சொட்டாக இனங்கண்டு கொள்ளக்கூடியவர். இதுபொதுவாக சிறந்த ஆற்றுகையாளர்களிடம் இருக்கின்ற ஆற்றல் தான். இருந்தாலும் ஒருவருடனான ஆரம்பச் சந்திப்பு நிலைகளிலேயே அவரிடம் மறைந்து புதைந்து கிடக்கும் திறன்களை இனங்கண்டு வெளிப்படுத்தி வளர்த்துவிடும் அனுபவத்தைப் பலரும் பெற்றிருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன்கள் ஆற்றல்களுக்கான பொறுப்பை ஒப்படைத்து, பொறுப்பெடுத்தவருக்கான இயங்குவெளி சுதந்திரமாக வழங்கப்பட்டுவிடும்.

வெளிப்பாட்டு வேளைகளில் சிறப்பான ஆற்றல்களை வெளிப்படுத்துபவர்களின் சிறப்புகளைச் சுட்டிக்காட்டித் தட்டிவிடுவதும், பரிசில்கள் தருவதும் களத்தின் இயல்பாகக் கலந்துநிற்கும். குறைகள் ஏற்படுமிடத்து அவை சற்று வித்தியாசமான முறையில் கையாளப்படும். குறைகளுக்கு அழுத்தம் தராது நிறைவுகள் பற்றி முதலில் கலந்துரையாடிக் குறைகளுக்கான அறிவார்ந்த விளக்கந்தரப்பட்டபின் அவர்களின் இயல்புக்கு விடப்படும். குறைகளுக்கான அழுத்தம் தரப்படுவதில்லை.

மனிதர்களை, அவர்கள் மறைத்துவைத் திருக்கும் பொருத்தமில்லாத எண்ணங்கள், நடத்தைகள், உணர்வுகள் போன்றவற்றில் கவனஞ் செலுத்தி உரியமுறையில் கையாண்டு அவர்களைச் சக்திபெற்ற மனிதர்களாக மாற்று வதற்காகப் பாடுபடுவார். இச்செயல் முறையும் அதன் அனுபவமும் இணைந்து நடிப்பவர்களுக்கு தேவையான பொழுது கிடைத்துவிடும். இதனால் நடிகர்களுக்கு அவர்களின் பாத்திர உருவாக்கச் செயல்முறையில் முழுக்கவனத்தையும் செலுத்தி முன்னேற இலகுவாக இருந்திருக்கிறது.

கோகிலா மகேந்திரன் அவர்கள் ஒரு உளவளத் துணையாளராக இருப்பது, அவருக்கும் அவருடன் இணைந்து நடிப்பவர்களுக்கும் நடிப்பதற்கான படி ஒழுங்கில் முன்னேறுவதற்கு இலகுவாக இருந்திருக்கின்றது. நடித்தல் என்ற செயற்பாடு நடிகரின் உணர்வுகளுடன் வேலை செய்வதாக இருப்பதால் இலகுபடுத்தல் இவர்களுக்குச் சாத்தியமாக இருந்திருக்கின்றது.

முதன்மை உளவளத் துணையாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள், கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள 'சாந்திகம்' என்னும் உளசமூக மேம்பாட்டு நிலையத்தில் 2000 ஆண்டின் பின்னர் 5 வருடங்களாக நடைபெற்று வந்தது. ஏறத்தாள 150 ஆசிரியர்கள் இப்பயிற்சியை நிறைவுசெய்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறப்பாக தமது பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். பேராசிரியர் தயா.சோமசுந்தரத்தின் வழிபடுத்தலுடன் இப்பயிற்சியைப் பொறுப்பேற்று முதன்மை வளவாளராகவும் இருந்து நிறைவாகச் செய்து முடித்தவர் கோகிலா மகேந்திரன் அவர்கள். இப்பயிற்சி நெறியில் நாடக மூலகங்கள் நாடக முறைமைகள், உளம்சார்ந்த குணப்படுத்தும் இயல்புகளைக் கொண்ட சிறப்பு நாடகங்கள் போன்றவற்றைப் பொருத்தமாக இணைத்து பயிலுனர்களை வெளிப்படுத்துதலில் திறனுள்ளவர் களாக்கினார். இப்பயிற்சி நெறியில் நானும் ஒருவளவாளராக இருந்து 'குணப்படுத்தும் கருவியாக நாடகம்' என்ற பயன்மிகு அனுபவத்தைப் பெற்றுக்கொண்டேன். பயிற்சிநெறி முழுமையும் நடிபாகமாடும் முறைமை ஊடுகலந்திருந்தது. இவ்வேளைகளில் தனது நடிப்புத்திறனை வெளிப்படுத்தி முன்செல்பவராக அவர் இருந்ததினால் பங்குகொண்ட அனைவரும் தமது நடிப்புத்திறனை வெளிப்படுத்த முழுமையாக முயன்றிருந்தனர். அவ்வேளைகளைப் பயனுள்ள அனுபவமாக்கி ஒவ்வொருவரும் தமது நெருக்கீடுகளையும் வெளிப்படுத்தி ஆறு தலடைந்திருந்தனர்.

முகாமையாளர்,
ஆசிரியநிலையம்,
வலிகாமம் கல்வி வலயம். (2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the Managing Director, Murasoli

# OUT STANDING WRITER

Kohila Mahendran is one of our outstanding writers.

She won the second prize in the Novel Competition organized by us in 1987.

She has, to her credit, three collections of short stories and two novels.

Although Fiction is Kohila's Forte, she has written several articles on Science and stories for children under pen names viz: Vilisai Kuyil, Pasunthi, V.K.Sowmiyan and Sathayan.

With an in-depth knowledge of the stage, Kohila has also made her mark as a Drama Critic.

**M.Sivarasah**
**28.10.1990**

**எழுதப்பட்ட கவிதைகள்**

1. புதுராகம் – 10.8.1976
2. பாலமுது – 12.8.1976
3. சிங்களமும் தமிழும் – 16.7.1976
4. தேன்குடிப்போம் – 12.9.1976
5. கனவுகளின் விழிப்பினிலே – ஒக்டோபர் 1976 – சூரியகாந்தி
6. இறைவனின் பெருநுணுக்கம் – 22.11.1976 – பூவும் பொட்டும் நிகழ்வு
7. புத்தாண்டில் புதுயுகம் – 17.12.1976 – பூவும் பொட்டும் நிகழ்வு
8. பொய்யான பரிவுகள் – 9.12.1976
9. வாத்சல்யக் கரம் ஒன்று – 30.12.1976
10. சொர்க்கம் – 8.10.1976



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the Principal Mahajana College

# VERY BEST PRODUCT

This is to state that Miss.Kohiladevi Sivasubrananiam has been known to me since her infancy. She was a pupil of Mahajana college during my principal ship of the institution several years ago. She impressed me as an extreamly capable and hardworking student. She was generally at the top of her class and her academic record was very good indeed.

She excelled in the out - of - class activities of the college as well. She played Net ball for the school and also distinquished herself as an athelete of no mean repute. She participated in most of the English and Tamil plays we staged at that time. She also took part in the Inter house & Inter school Elocution competitions (Both English and Tamil) and generally came first. She is easily one of very best products of Mahajana College.

Her conduct has been exemplary through out. She bears an excellent moral character. I have pleasure in recommending her for any responsible position suited to her academic attainments.

**T.T.Jayaratnam**
**17.10.1975**

**எழுதப்பட்ட கவிதைகள்**

11. இயற்கை - 9.7.1976
12. யார் துணிவார் - 14.4.1976
13. அமைதியும் அறிவும் செத்திடாமல் வாழ்க - 20.12.1974
14. நுளம்பே இறந்துவிடு - 8.2.1977
15. மனதால் என்னை மணந்தாள் - 18.2.1979 ஈழநாடு
16. ஓவியம் கரைகிறது - 4.3.1977 பூவும் பொட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Education Office Says. . . . . .

# BEACON

Mrs.Kohila Mahendrarajah is known to me for the last five years as a Science Teacher and then as the Science Sectional Head of J/Mahajana College. During this period she had also functioned as an In service Advisor in Science for our Science teachers in the Panderterribu Division. In this capacity she has conducted numbers of seminars & classes which were highly appreciated by our science teachers and they in turn were greatly benefited. She has also given a series of lectures on scientific topics for our secondary school children and was a popular speaker in many forums.

Her contributions in the literary field as the author of novels & Science fiction is well known to the Tamil speaking public and students of Sri lanka and it is redundent for me to mention it here. At a time when publication of Scientific journals and magazines in Tamil are in dearth her contribution must be welcomed and encouraged. she is a beacon to our young and upcoming tamil writers and authors.

Her brief stint in the ceylon medical college and her involvement in the literary field along with her professional qualifications makes her an ideal person for training our young teachers.

From my observations I have found her to be a dedicated, sincere and a hard working teacher who by her word and deed has motivated our children. I take great pleasure in certi fying her excellent moral character and conduct.

**A.Suntharalingam**
**Asst Director of Education Science**
**1.2.1993**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the Divisional Education Office

# TRUST WORTHY TEACHER

This is to certify that Mrs.Kohila Mahendrarajah is a Science Asst.Teacher attached to Mahajana College. She is a hard working, punctual and trustworthy teacher. She always produces very good results in Science and Health Science at the G.C.E.(O/L) examinations. She is the Vice President of the Science Teachers Association of the Pandateruppu Division and helps a great deal in maintaining and developing the Division's Question Bank. She is also a very ardent Social worker being Secretary of the Cluster Art and Literature Club and had produced plays and children Dramas which had won awards in and outside the Division., Her name in the field of writing specially in connection with womens' Literature is well known. I have great pleasure in testifying to the excellance of her character and ability.

**S.Sanmugarajah**
**Chief Education Officer,**
**Panadateruppu.**
**09.01.1991**

**எழுதப்பட்ட கவிதைகள்**

17. உன் நினைவிலே – 8.7.1977 – பூவும் பொட்டும்
18. நிறைந்த மௌனம் – 29.1.1977
19. ஆத்ம விடுதலை – யாழ்மதி – 1979
20. சுகங்கள் அறிந்திடவேணும் – 15.7.1979 ஈழநாடு
21. அழகியவள் – 27.5.1979 ஈழநாடு
22. இதுதான் வாழ்வா – 25.3.1979 ஈழநாடு
23. விழிப்புணர்ச்சி விரிய வேண்டும் – (இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய போட்டியில் பரிசு – 1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From Shanthiham,

# LEADING LECTURER

This is to certify that Mrs.Kohila Mahendrarajah is a certified counsellor of the Association for Health and Counselling, Jaffna.

She had delivered lectures at the "Introduction to Counselling" course connected with the extra - mural studies at the University of Jaffna.

At present she is one of the leading lecturers to the short - term counselling training students. This course runs for about one year comprising different aspects in counselling. She is also one of the supervisors for group activities of trainees.

She is a talented artist and dramatist endowed with leadership qualities.

**DR.R.Sivashankar**
**Supervisor / Counselling**

**Rev.Fr.S.Damian**
**Supervisor / Counseling**

**எழுதப்பட்ட கவிதைகள்**

24. சாதிச் சுவர்கள் – காற்று – 1984 ஆகஸ்ட்
25. ஒரு மனைவியின் மதிப்பீடு – 1990
26. அருமையான கலைஞனே – நடிகமணி.வி.வி.வைரமுத்து மறைந்தபோது
27. பரமேஸ்வரி ரீச்சர் – 24.10.2002
28. பாரதத்தின் ஒளிவிளக்கு – இந்திராகாந்தி மறைந்தபோது
29. நாங்கள் பாவம் – 22.01.1989 (பேராசிரியர். வித்தியானந்தன் மறைந்த போது)
30. என் கவிதை நித்திரை – ஆசிரியர் தினம் – 1998
31. முகத்திரை அணிந்த மரணம் (ஏ.ரி.பொன்னுத்துரை காலமான போது – 2003)
32. தெய்வ சிந்தனை தேவையா? – 2004

(அட்டவணை நிறைவானதில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From Tellippalai Koddam. . . . .

# METHODICAL PERSON

This is to certify that MRS.KOHILADEVY MAHENDIRARAJAH is functioning as the Principal of J/Tellippalai Saivapragasa Vidyalayam. She has been working as a Principal since 1.6.89. She started her teaching career on 22.4.74 and excelled in the teaching of Science when she worked as a Science Trained Teacher at J/Mahajana College, Tellippalai for a period of twelve years from 1982 - 1993.

She takes a keen interest in the curricular and the co-curricular activities of the institutions where she worked.

She has written seven books out of which three are short story collections, two are nevels, one play and one research book an European History of theatre.

Mrs.M.Kohiladevi is a bilingual. She is very fluent not only in Tamil but also in English. She has written several articles in English.

Along with her work as a Principal of a School, Mrs.M.Kohiladevy is involved in Teaching at other places also. She works as a counseller at Shanthiagam, Jaffna and as a visiting Instructor in Fine Arts, Drama and Theatre at the University of Jaffna.

She is an efficient play wright and produced several plays. She is well versed in addressing in Tamil and English on Literary, Science and Drama and Theatre topics.

Mrs.M.Kohiladevi is a very efficient, systematic and methodical person. She is very popular in Sri lanka as an efficient playwright, Science Teacher and Lecturer in English and Tamil on several topics.

Her moral character is very good.

I wish her well.

**A.Kamalanathan**
**Divisional Education Officer,**
**Tellippalai**
**30.4.97**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the University. . . .

# AMENABLE TO DISCIPLINE

This is to certify that Ms.Kohiladevy Mahendirarajah is known to me well. I have come to know her as a famous author of creative and psychological writings. She is an author of seven books. I had an opportunity to review one of her collections of short stories. Her stories have reflected the social values of Sri Lankan Tamil society. She is one of the three authors who have been studied in a dissertation submitted recently to university of Jaffna for the degree of master of philosophy. She is also a talented dramatist.

Ms.Kokila is the secretary of Lyceum of Literary and Aesthetic Studies, Tellippalai and the President of Solai Kuyil Avikkattu Kalam which trains students in Dramatic Arts. At present she is a Visiting Lecturer in Drama and Theatre Arts in University of Jaffna. She Speaks, writes and reads English well. Therefore, she is able to deliver lectures on European theatre to students in the Department of fine Arts.

She is also interested in activities on feminine leadership qualities. She is courteous and amenable to discipline. She can adapt to any situation and she has all the qualities to take up any assignment that needs intelligence, hard work, leadership and pleasant manners. Ms.Kokila bears an excellent moral character.

**Professor A.Sanmugadas**
**B.A.(Cey) Ph.D.(Edu)**
**Dean/Faculty of Arts**
**University of Jaffna**
**Sri Lanka**
**30.4.1997**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the President AHC,

# LARGE HEARTED

We take great pleasure in expressing our high appreciation of your unstinted, dedicated and devoted service to the Association for Health and Counselling, during the entire period of more than one year in helping us to bring the short-term Training Course, of the 5the batch of counsellors, to a successful finish. Very meticulous planning was necessary before the commencement of the training course, in the selection of content and sequence of the lessons and subjects.

Above all, it is a matter of pride to the A.H.C. that we were able to complete the training very successfully in inspite of so many constraints especially dearth of lecturers.

We know that your professional work as the Principal of an Educational institution will require your full time attention. In the midst of your work you were so large hearted to consent to undertake the task allotted to you as a lecturer. Your assiduous contribution to the training is responsible for the tremendous success of the course.

We whole - heartedly thank you for your services.

**DR.C.S.Nachinarkinian**

**President.**

**21.02.1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிபர் ஒருவரிடமிருந்து

## முன்னேற்றத்துக்கு உழைத்தவர்

ஆசிரியை திருமதி.கோகிலாதேவி மகேந்திரராசா அவர்கள் 22.4.74 இல் யா/பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் விஞ்ஞான கணித ஆசிரியையாக நியமனம் பெற்றுமாற்றம் காரணமாக 26.2.76 தொடக்கம் இப்பாடசாலையில் மேற்படி இருபாடங்களையும் கற்பித்துவந்துள்ளார். இவ்வித்தியாலயத்தின் சூழ்நிலைக் கேற்பச் சென்ற ஆண்டில் கணித பாடத்தைக் கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர) வகுப்பிற்குக் கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் பெறுபேறாக 1978ம் ஆண்டு டிசம்பர் நடைபெற்ற பரீட்சை எடுத்தவர்கள் திறமைச் சித்தியுடனும் (C) விசேட திறமைச் சித்தியுடனும் (D) சித்தியடைந்துள்ளனர். இவர் சகல விளையாட்டுத் துறைகளிலும் திறமையுடையவர், வலைப்பந்தாட்டத்தில் விசேட திறமையுடையவர். பொதுவாக எல்லாத்துறைகளிலும் எமது பாடசாலையின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். இவர் நல்லொழுக்கமும் நற்பண்பும் நிறைந்த சிறந்த ஆசிரியையாவர்.

வ.கந்தையா, அதிபர்
யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்
29.6.1979

**********************************************************

### பரிசுகள், பாராட்டுகள்

கல்வித் துறையினர் வழங்கிய பாராட்டு

1. நல்லாசான் சான்றிதழ் யாழ் பண்டத்தரிப்புக் கோட்டம் - 5.10.1991
   i) விஞ்ஞான ஆசிரியர்
   ii) சிறுகதை ஆசிரியர்
   iii) கவிதை ஆசிரியர்

2. நல்லாசான் சான்றிதழ் - யாழ் மாவட்டம் - 6.10.1991

**********************************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவளத்துணையாளராகப் பயிற்சி பெற்ற ஆசிரியை ஒருவரின் குரல்

# என் உள்ளத்தில் நீ

எளிமையாய் வருகை தந்தாய்
இனிமையாய் கல்வி தந்தாய்
வெறுமையைப் போக்க எம்மில்
பொறுமையாய் வேலை செய்தாய்!

கண்களில் கடமை செய்தாய்
பெண்களில் பெருமை நெய்தாய்
திங்களின் குளிர்மை பெய்தாய்
எங்களில் கருமை கொய்தாய்!

நேர்மையாய் பாதைகண்டாய்
கூர்மையாய் பார்வை கொண்டாய்
வாய்மையாய் மொழி பகர்ந்தாய்
வாண்மையாய் பணி புரிந்தாய்!

கல்வி கலை கவிதையெனப்
பல்துறை ஆற்றல் கொண்டாய்
உன்னிடத்தில் என்ன இல்லை
எண்ணுகையில் வியப்பே இல்லை!

மெல்லிய உடல் வாகும்
சொல்லிய சொல் வாக்கும்
உன்னத நல்லாளுமையும்
உன்னிடத்தில் கண்டு கொண்டேன்!

உன்னை நான் பார்த்தது
நான் செய்த பாக்கியம் தான்
நிலையாக என் மனதில்
நீ வாழும் பாத்திரம் தான்!

எனக்குள்ளே களையகற்றி
என்னையே எனக்குணர்த்தி
என் மனதில் நிறைந்திருக்கும்
என்றுமுனை நான் மறவேன்!

கோகிலா எனும் நாமம்
கோயிலாய் வாழ வேண்டும்
ஆண்டவன் அருள் நிலைத்து
ஆண்டு பல நீ வாழ்க!

அன்புடன்
கயல்விழி
16.9.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி வலய உளவளத்துணையாளர்கள் கூறுவது :-

## தூய்மை உடையணிந்த விளக்கு

சீர்மியச் சிற்றுளியால் செதுக்கிச் செதுக்கியே
சிந்தைப் பாறைகளை சிற்பம் ஆக்கிய திருமகளே
தெல்லிப்பளைத்தாய் மகளே!
தென்றல் இசையமைக்க தினம் பூக்கள்
தலையசைக்கும்
தெய்வீக எழில் கமழும் வடமராட்சி மருமகளே!
உளவளத்துணைக்கு உருவங்கொடுத்த 'மொடலே'
ஐந்தாண்டு திட்டக்கருவால் வடமராட்சியை
விழிப்படையச் செய்த மனிதாபிமானத் திடலே

உளவளத்துணைக்குப் பிரம்மனாகி
கைதேர்ந்த வளவாளர்களைப்படைக்கப் பயிற்சி
தந்தாய்
நுண்ணுணர்வுகளை வெளிக்கொணர்ந்து
கலைத்தாயாய்க் காட்சி தந்து உயர்ச்சி தந்தாய்
மகிழ்ச்சிப் பூங்காவாகி, சிறுவர் உளநலம் சிகரம்
தொட
மனச்சோர்வு விட்டகலப் பாடுபொருள் தந்தாய்!
நட்புதவிக்கரத்தால் சாத்வீகம் பெறவும்
உளவளத்துணையாளரால்
மனவடுவும், மனச்சோர்வும் வெளிநடப்புச் செய்யவும்
உன்பயிற்சி பச்சையம் அளித்தது.

அதிபர்களைப் பண்படுத்தி மாணவ விளைச்சலினை
அதிகரிக்க வகை செய்தாய்!
பாதிக்கப்பட்டவர் குரலினை மீள்கூவல் புரிந்தாய்
மகிழ்ச்சி மகரந்தங்கள் இழந்த மலர்தேடி
ஆழிப்பேரலை ஆய்வினை நான்கு முறை புரிந்து
மனவடுவின் வீரியத்தை மண்ணில் பதிவு செய்தாய்.

உடன்படிக்கைக்குப் பின்னான அனர்த்த சூழலில்
ஆய்வினை நெறிப்படுத்திய வல்லரசியே!
ஆய்வாளர்களை உருவாக்கிய இன்சொல்லரசியே!
அமைப்புக்கு ஆறுதல் மொழி பெயர்த்தாய்
ஆளுமைக் குறைபாட்டை அறியும்
நுணுக்குக்காட்டியாய் தொழிற்பட்டாய்!
பாரிய உளநோயைப் பகுத்தறியும் செயல்திறனை
விருத்தி செய்தாய்
ஆழ்கடலின் மடிதனிலே மறைந்திருக்கும் திரவியம்
போல்
வெளிவராத உச்சங்களை வெகுவிரைவில்
தாராயோ?

வானம் குனிந்து வணங்குகின்ற
வீரம் விளைந்த நிலம் வடமராட்சி
வந்தாரை வாழவைக்கும்.
'முயற்சி' உரமிட்டு 'வெற்றி'ப் பயிர்வளர்க்கும்
வினோத பூமி!

எழுநூறு மில்லியன் சுவாசச்சிற்றறைகளிலும்
'நன்றி' என்னும் வார்த்தையை நிரப்பி வைத்து
நலம் வாழ வாழ்த்துகிறோம்.

உளவளத்துணையாய் ஊற்றெடுத்த நைல் நதியே
நீ எங்கள் உணர்விற்குள் ஓடிக்கொண்டிருக்கிறாய்.

(வடமராட்சி பிரதேசத்தில் ஆய்வினை நெறிப்படுத்தியமைக்காகவும் உளவளத்துணை யாளர்கள், நட்புதவியாளர்களை உருவாக்கியமைக் காகவும் வடமராட்சி வலயத்தால் வழங்கப்படுகிறது) **(2006)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாறு எனும் நூலில். . . . . .
செங்கை ஆழியான் பேசுவது,

## உளவியல் அணுகுமுறை பலமும் பண்பும்

ஈழத்துச் சிறுகதை வரலாற்றைக் கோகிலா மகேந்திரனைத் தவிர்த்து எழுதமுடியாதெனுமளவிற்கு சிறந்த படைப்பாளியாக விளங்கும் ஆசிரியை. பன்முகப்பட்ட துறைகளில் ஆற்றல் வாய்ந்தவர். ஒரு சோகம் இறுகும் போது, சடப்பொருள் என்று நினைத்தாயோ? ஒலிக்காத ஓலம், ஒரு ஏக்கம் மடிகிறது, பலியாடுகள், ஒரு நெருடலும் ஒரு அசைவும், ஓர் உள்ளம் பேசுகிறது, புதுயுகம் விடிகிறது, அன்பிற்கு முன்னால், தலைமுறைகள் முரண்படும் போது, அர்த்தமுள்ள ஒரு வாழ்வு, வதை, அர்ச்சிக்கப்பட்ட விக்கிரங்கள், உள்ளத்தால் அடிமைகள், நிமிரும் ஊனங்கள், முதலான பல நல்ல சிறுகதைகளைக் கோகிலா மகேந்திரன் எழுதியுள்ளார். அவருடைய சிறுகதை தாங்கிய மனித சொரூபங்கள், முரண்பாடுகளின் அறுவடை, ஆகியவை 1983 கால கட்டத்திற்குள் அவரால் எழுதப்பட்ட சிறுகதைகளைத் தாங்கி வெளிவந்த தொகுதிகளாம். "எனது ஆத்மதிருப்திக்காகவும், என் அனுபவ முத்திரைகளை உங்களுக்குச் சொல்வதற்காகவும், ஒரு பிரச்சினை பற்றிய என் பார்வையைக் காட்டுவதற்காகவும், மாணவர்களை நெறிப்படுத்துவதற்காகவும் மட்டுமன்றி சில சந்தர்ப்பங்களில் எதற்கென்றே தெரியாத ஒரு மன உந்துதலினாலும் எழுதுகிறேன்" என்கிறார் கோகிலா மகேந்திரன்.

கோகிலா மகேந்திரனின் சிறுகதைகளில் பெண்விடுதலை, தலைமுறை இடைவெளி, சாதியம், மூடநம்பிக்கைகள், கல்வியுலகு முதலான சமூகத்துவம் கருப்பொருளாகக் கலைவடிவம் பெற்றிருக்கும். பெண்ணியம் சம்பந்தமான சிறுகதைகளில் ஆணாதிக்கத்திற்கெதிரான அழுத்தம் பெருங்கொதிப்போடு பரிணமித்திருக்கும். உளவியலணுகுமுறை அவரது சிறுகதைகளின் ஒரு பலமும் பண்பும் ஆகவுள்ளது. சடப்பொருள் என்று தான் நினைப்போ? உள்ளத்தால் அடிமைகள் என்பன மிகத்தரமான சிறுகதைகள்.

**எழுதப்பட்ட உருவகங்கள்**

1. மின்னுவதெல்லாம் - 4.5.1986 ஈழநாடு
2. தூக்கினால் தூக்குவர் - 25.2.1979 ஈழநாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவகுமாரனின் மதிப்பீடு

# கோகிலா மகேந்திரனின் உளவியற் கதைகள்

நமது நாட்டிலே பல பெண்கள் எழுத்துத் துறையில் ஈடுபட்டு வருகின்றனர். 'நொறுங்குண்ட இதயம்' என்ற நாவலின் ஆசிரியையே ஈழத்து முதல் பெண் நாவலாசிரியர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மங்கள நாயகி போன்ற அத்தகைய பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்களை நாம் இன்னும் படிக்கச் சந்தர்ப்பம் கிடையாததனால் பாலேஸ்வரி போன்றவர்கள் எழுதியவையே நமது ஆரம்ப வாசிப்பாக அமைகிறது.

பாலேஸ்வரி, குறமகள், பத்மா சோமகாந்தன், பவானி, சாந்தினி (மகேஸ்வரி வயிரமுத்து), சசிதேவி தியாகராஜா, அன்னலட்சுமி ராஜதுரை, கமலா தம்பிராஜா போன்றவர்கள் சமூக தனி மனிதப் பிரச்சினைகளைப் பொது நோக்கிலும் தனிமனித நோக்கிலும் தீட்டியுள்ளனர்.

பின்னர், பூங்கோதை, மண்டூர் அசோகா, குந்தவை, சிதம்பரபத்தினி, யோகா பாலச்சந்திரன், ராஜம் புஷ்பவனம், கவிதா, தேவி, பூரணி, தாமரைச் செல்வி, அருண் விஜயராணி, தமிழ்ப்பிரியா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன், நயீமா பஷிர், சித்திபரீடா, பிரொஜா ஹுசைன், பரந்தன் கலைபுஷ்பா, கே.வி.பரம், சிவமலர் செல்லத்துரை, தேவமனோகரி, ஹம்சத்வனி, ஜனகமகள் சிவஞானம் போன்றோர் நமது கவனத்தை ஈர்த்து வந்துள்ளனர்.

புனை கதைத் துறை தவிர ஏனைய எழுத்து வகைகளில் திருமதி நவரத்தினம் (முன்னாள் கல்வித் திணைக்கள அதிபர்), திருமதி கங்கேஸ்வரி கந்தையா, திருமதி மீனாட்சி பொன்னுத்துரை, திருமதி பாலாம்பிகை நடராஜா, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, சற்சொரூபவதி நாதன், திருமதி சிவச்சந்திரன் போன்ற பலர் நமது கவனத்தை ஈர்த்து வருகின்றனர்.

இரண்டு சிறுகதைத் தொகுப்புகளைத் தந்துள்ள கோகிலா மகேந்திரன், தவிர்க்க முடியாத அளவிற்கு தமது முத்திரையைப் பதித்து எழுதும் ஒரு பெண் எழுத்தாளர். 'மனித சொரூபங்கள்' என்ற தொகுதியை நாம் படிக்க வாய்ப்புக் கிட்டவில்லை. 'முரண்பாடுகளின் அறுவடை' என்ற தொகுப்பைப் படித்துப் பரவசப்பட்டோம். 14 கதைகளும் ஏதோவொரு விதத்தில் முரண்பாடுகளைத் தான் தீட்டுகின்றன. எந்தவொரு கதையுமே சோடை போகவில்லை. கதையதின் ஜீவனும் வார்ப்பும் இணைவதனால், கதை உள்ளடக்கம் வேறு, உருவம் வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாதவாறு கதைகள் எழுதப்பட்டுள்ளன. கோகிலாவின் எழுத்துக்களில் உண்மைகள் பளிச்சிடுகின்றன. மனித உறவுகளை உள வியற்பாங்குடன், சமூகப் பின்னணியில் அவர் தொட்டுக் காட்டுகிறார்.

இவர் படித்த பெண்ணாகவும், யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வெளியேயுள்ள அனுபவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புகளைப் பெற்றுமிருப்பதனாலும் இவருடைய பார்வைகள் அகலமும் ஆழமும் பெறுகின்றன.

ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் பெண்ணடிமைத்தனம் செயற்படும் விதத்தையும், அதே சமயம் இச் சம்பிரதாயங்களையும் மீறி, மனித இதயங்கள் சுருதியுடன் பேசுவதையும் அலட்டிக் கொள்ளாமலே கோகிலா வெளிப்படுத்துகிறார். ஆண் - பெண் உறவுகளை உளவியல் அடிப்படையில், ஒரு முதிர்ச்சித் தன்மையுடன் விளக்கிக் காட்டுகிறார் ஆசிரியை. இதற்கு, உதாரணமாக 'அன்பிற்கு முன்னால்', 'தலைமுறைகள் முரண்படும் போது', 'அர்த்தமுள்ள ஒரு வாழ்வு', 'ஓர் உள்ளம் பேசுகிறது', 'வதை', 'அர்ச்சிக்கப்படாத விக்கிரகங்கள்', 'உள்ளத்தால் அடிமைகள்' ஆகிய கதைகளைக் குறிப்பிடலம்.

இக்கதைகளில் வரும் பெண்களுடன் சம்பந்தப்பட்ட ஆண்கள் ஏன் அப்படி இதமாக நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு உளவியற் காரணங்களையும் காட்டாமற் காட்டுகிறார் ஆசிரியை. எனவே வெறுமனே ஒரு பெண்ணின் ஒரு தலைப்பட்சமான பார்வை என்றோ, கருத்தென்றோ தட்டிக்கழிக்க முடியாதவாறு, ஆணின் சார்பிலும் நின்று கதாசிரியை எழுதுவது இவருடைய கதைகளுக்கு நம்புந்தன்மையை ஏற்படுத்துகிறது.

சாதி வேறுபாடுகள், மூட நம்பிக்கைகள், தலைமுறை இடைவெளி, வறுமையின் எல்லை, சீதனத் தொல்லை, மனிதாபிமானம், வாழ்க்கை நெறி, ஆசிரிய உலகம், சிறுவர் உளப்பாங்கு, மாற்றத்திற்கு அனுசரணையாய்ப் போதல், கலைக்கு விலைபேசல், புதியனவற்றை இனங்கண்டு சுதாகரிக்க மறுத்தல் போன்ற விஷயங்களைக் கதைகளாகப் புனைந்திருக்கும் ஆசிரியை பாராட்டுக்குரியவர்.

பெண்ணின் மனதைப் பெண்ணே அறிவாள் என்பதனாலோ என்னவோ கோகிலா மகேந்திரனின் பெண் பாத்திரங்கள் தத்ரூபமாக வார்க்கப் பட்டுள்ளன. குறிப்பாக 'அன்பிற்கு முன்னால்', 'நிமிரும் ஊனங்கள்', 'அர்ச்சிக்கப்படாத விக்கிரகங்கள்', 'உள்ளத்தால் அடிமைகள்' ஆகிய கதைகள் கலைநயமாய் அமைந்துள்ளன.

(வீரகேசரி வெளியீடு : 06.05.1984)

******************************

## பரிசுகள், பாராட்டுகள்

இலக்கியத் துறையில் தேசிய மட்டசாகித்திய விருது

1. இந்து சமய தமிழ் கலாசார இராஜாங்க அமைச்சின் சாகித்திய விருது – 1986
   'பிரசவங்கள்' சிறுகதைத் தொகுதிக்கு

2. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சாகித்தியப் பரிசு – 1997
   'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்' சிறுகதைத் தொகுதிக்கு

இலக்கியத் துறையில் சர்வதேச மட்டப்பரிசு

* நோர்வே தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டிப் பரிசு – 1986

******************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நெருடலும் ஓர் அசைவும் என்ற சிறுகதை பற்றி. . . . . .
லெ.முருகபூபதி

## நெருடலையும், அசைவையும் ஏற்படுத்தும் சிறுகதை

கலைவடிவம் ஒன்றைப் படைத்தவர், அதனைப் படைக்கும் முன்னர் அனுபவித்து வாழ்ந்த உணர்வுகளைத் தன் உள்ளத்தில் எழுப்பி, அதன் அத்தனை அம்சங்களையும் தரிசித்துப் பின்பு அதனைப் பிறரும் உணரத்தக்க விதத்தில் தனக்கே உரித்தான பாணியில் சொல்லும் பொழுதே, அது முழுமை பெறுகிறது என்று இலக்கிய அறிஞர் ஒருவர் சொன்னதாக ஞாபகம்.

நாம் வாழும் சூழல்களைப் பகைப்புலமாக வைத்துக் கதைகளைப் படைக்கவே பெரும்பாலும் எழுத்தாளர்கள் விரும்புகிறார்கள். அவ்வாறு எழுதப்படுபவை வாசகர் மத்தியில் எத்தகைய நெருடலை அசைவை ஏற்படுத்தப் போகின்றன என்பது அப்படைப்புக்களின் உருவம், உள்ளடக்கம் - பார்வை என்பவற்றைப் பொறுத்த விடயம்.

ஒரு ஏழை மாணவியின் மன நிலைகளையும் அதே சமயம் அம்மாணவி கற்கும் வகுப்பின் அனைத்து மாணவர்களாலும் ஏகோபித்து விரும்பப்படும் - வரவேற்கப்படும் - ஆசிரியையின் மன உணர்வுகளையும் உளவியல் ரீதியில் சித்திரித்துத் தன் அடிப்படையான நோக்கத்தைப் புலப்படுத்துகிறார் கோகிலா மகேந்திரன்.

மேற்சொன்ன இலக்கிய அறிஞரின் வாக்கு இச் சிறுகதையைப் படிக்கும் போது நினைவுக்கு வந்தமையால் ஆரம்பத்தில் அவ்வாறு குறிப்பிட நேர்ந்தது.

புதுவருடப்பிறப்பு வருடந்தோறும் தவறாது வந்து கொண்டுதானிருக்கிறது. மாற்றங்கள் எத்தனையோ உருவங்களில் வந்து கொண்டுதானிருக்கின்றன. ஆனால் வருடப் பிறப்புக்கள், மாற்றங்கள் எத்தனை பேரின் வாழ்வை வளப்படுத்தியிருக்கின்றன? எத்தனை பேர் சுபீட்சத்தை நோக்கிக் காலடி எடுத்து வைத்துள்ளனர் என்பது முக்கியமான கேள்வி அல்லவா?

இக்கேள்வி கோகிலா மகேந்திரனின் அடிமனதில் எழுந்து விஸ்வரூபம் எடுத்து விட்டிருக்கலாம்.

அந்த 'சயன்ஸ் ரீச்சர்' அப் பாடசாலையின் "ஸ்ராவ் மீட்டிங்" கில் சொன்ன வார்த்தைகளை அப்பாடசாலை மட்டுமன்றி இன்னும் எத்தனையோ பாடசாலைகள், அரசாங்க, பொதுசன அமைப்புகள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இக்கதை மூலம் கோகிலா மகேந்திரன் வாசகர் மத்தியில், நெருடலையும், அசைவையும் ஏற்படுத்தித் தான் விட்டார்.

(1984)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்.கலாநிதி.நா.சுப்பிரமணியன் அவர்களின்

# அணிந்துரை

(துயிலும் ஒரு நாள் கலையும் நாவலுக்கானது)

கோகிலா மகேந்திரன் அவர்களுக்கு அறிமுகம் அவசியமில்லை. கடந்த பத்தாண்டுக் காலப் பகுதியிலே எழுத்துலகப் பிரவேசம் செய்து அயராது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதன் மூலம் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமாகிவிட்டவர் அவர். பெருந்தொகையான சிறுகதைகளை எழுதியுள்ள இவர் 'விழி' என்ற புனைபெயரில் கவிதைகளும் புனைந்தவர்; துயிலும் ஒரு நாள் கலையும் என்ற இப்படைப்பின் மூலம் நாவலுலகிலும் பிரவேசிக்கிறார்.

இந்நாவல் அகமும் புறமும் ஆகிய இரு கதைகளின் இணைப்பாகும். ஒன்று கணவனின் தாழ்வுச்சிக்கலாலும் அன்பில்லாத 'செக்ஸ்' ஆலும் பாதிக்கப்பட்டு அச் சிறைவாழ்விலிருந்து விடுதலை பெறத் துடிக்கும் ஒரு மனைவியின் கதை. இன்னொன்று கல்லூரிச் சூழலின் பொய்மைகளுக்கும் பொய்ம்முகங்களுக்குமிடையில் உண்மையான நட்பையும் நல்ல உள்ளங்களையும் காண விழையும் ஒரு ஆசிரியையின் கதை. இவ்விரு கதைகளையும் இணைத்து நிற்பது நாவலின் தலைவியாக அமையும் பூரணி என்ற பாத்திரம். விஞ்ஞானக் கல்வி மூலம் 'எதையும் அறிவு பூர்வமாக அணுகும்' நோக்கும், டேல்கார்ணகி முதலிய உளவியலாளர்களின் நூற்பயிற்சி காரணமாகப் பெற்ற உளவியல் சார்ந்த அணுகுமுறையும் பூரணியின் ஆளுமைகள். இவற்றால் அவள் தன்னையும் தன்னைச் சூழவுள்ளவர்களையும் உரியவகையில் விளங்கிக் கொள்ளவும் விமர்சிக்கவும் முற்படுகிறாள். இவ்விளக்கம் விமர்சனம் என்பவற்றின் பேறாகத் தனது வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டுக் கொள்கிறாள்.

நாவலின் பிரதான கதையம்சமாகிய மனைவியின் கதை 'தமிழர் சமுதாயத்திலே திருமணம் என்ற புனிதப்பிணைப்புத் தொடர்பாக நிலவும் முக்கிய குறைபாடொன்றை அடிப்படையாகக் கொண்டது. மண வாழ்க்கை என்ற மாளிகைக்கு ஆண் பெண் இருவரதும் மனப்பொருத்தமே அத்திவாரமாக அமைய வேண்டும். ஆனால் மனப்பொருத்தம் நோக்காது பணம், அந்தஸ்து என்பவற்றை அத்திவாரமாக இட்டு மணவாழ்க்கையைக் கட்டியெழுப்ப முயல்வதே பெருவழக்கு. இவ்வாறான இணைப்பின் பின்னரும் கணவன் - மனைவி ஆகிய இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள முற்பட்டால் வாழ்க்கை ஒருவாறு தொடரப்படும்; தவறினால் அவ்வாழ்க்கை சிறையாகவும் நரகமாகவும் மாறிவிடும். தமிழ்ப் பண்பாட்டின் படி பெண்மையே இதனாற் பெரும் பாதிப்படைகிறது. இச்சிறையிலிருந்தும் நரகத்தினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளவிரும்பும் பெண்மையின் நியாயமான உணர்வுகளைச் சமூகம் பாரம்பரியமான கற்பு எனப்படும் பண்பாட்டு விழுமியம் மூலம் கட்டுப்படுத்திவிடுகிறது. இக்கட்டுப்பாட்டை உதறித் தள்ளிவிட்டுச் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முற்படும் பெண்மையுணர்வுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயப்படுத்துவதே இக்கதையின் தொனிப் பொருளாகும். மனப் பொருத்தமின்றிப் பெற்றோரது விருப்பத்திற்கேற்ப வியாபாரியொருவனுக்கு மனைவியாகிவிட்ட பூரணி கணவனை உரிய வகையிற் புரிந்துகொண்டு வாழ முயற்சிக்கிறாள். தனது நியாயபூர்வமான உணர்வுகளை அவன் புரிந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறாள். கல்வியின் ஏற்றத்தாழ்வு கணவனுக்கு ஏற்படுத்திய தாழ்வுச் சிக்கலின்முன் பூரணியின் முயற்சிகள் பலனற்றுப் போய்விடுகின்றன. பூரணியின் செயல்கள் யாவற்றிலுமே குற்றங்காணும் கணவன் அவளது ஒழுக்கத்திற்கூடக் களங்கம் காண முற்பட்டபோது அவள் துயில் ஒருநாள் கலைகிறது; கணவனைப் பிரிந்து தனித்து வாழத் தொடங்குகிறாள்.

துணைக் கதையம்சமாகிய 'ஆசிரியையின் கதை'யிலே கல்விசார் சூழலின் உளவியற் குறைபாடுகள் முக்கிய கதைப்பொருளாகின்றன. ஒழுக்கமும் வழி காட்டித் தன்மைக்குரிய உயர்பண்புகளும் பெற்றிருக்க வேண்டிய ஆசிரியர்களிற் பலர் வஞ்சகம், சூது, பொறாமை, ஏற்றத்தாழ்வுணர்வு, களவு முதலான சிறுமைத் தனங்களாற் கல்விச் சூழலைச் சீரழிப்பது இப்பகுதியிலே விமர்சிக்கப்படுகிறது. இத்தகைய சிறுமைகட்கான உளவியற் காரணிகளை ஆராய்வதிலும் அவற்றால் தனக்கு ஏற்படும் பாதிப்புக்களிலிருந்து தற்காத்துக் கொள்வதிலும் முயலும் பூரணிக்கு இந்திரன் மாஸ்டர் என்ற பண்பாளனின் நட்பு 'பாலைவனப் பசுந்தரை'யாக அமைகிறது. கல்லூரி வாழ்க்கையில் மட்டுமன்றி இல்லற வாழ்க்கையிலும் அவள் எய்தும் மனப் புண்களுக்கு இந்திரனின் நட்பு மருந்தாக அமைகின்றது. இந்த நட்பு, சூழ உள்ளவர்களால் வேறு நோக்கில் 'அர்த்தம்' செய்து கொள்ளவும்படுகிறது. எனினும் நாவலின் இறுதிவரை இருவரது தொடர்பும் தூயநட்பாகவே சித்திரிக்கப்பட்டுள்ளமை கவனத்திற்குரியது.

பூரணி - இந்திரன் நட்புக்கும் பூரணி கணவனைப் பிரிந்துவாழ மேற்கொண்ட முடிவுக்கும் காரணகாரியத் தொடர்பு காட்ட முடியாத வகையிலே நாவலை ஆசிரியர் நிறைவு செய்துள்ளார். அதாவது அன்பில்லாத கணவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் பூரணியின் முனைப்பு ஒரு சுதந்திர வேட்கை மட்டுமே என்பதை அவளது தனித்து வாழும் முடிவு புலப்படுத்துகிறது. அவளுக்குப் புதுவாழ்வு கொடுக்கும் அளவுக்கு விசாலமான தனது உளப்பாங்கினை இந்திரன் புலப்படுத்திய வேளையில் (அந்த அன்புக்கு அவள் ஏங்கியவளானாலும்) அவ்வாழ்வை ஏற்க அவள் தயாராக இல்லை என்றதன் மூலம் ஆசிரியர் அவளது சுதந்திர வேட்கைக்கு ஒழுக்கநிலை சார்ந்த அவப்பெயர் ஏற்படாமல் காப்பாற்றியுள்ளார் என்றே கொள்ளவேண்டியுளது. பூரணியின் தனித்து வாழும் முடிவு அவளே சிந்தித்துக் கொள்வதுபோல நடுநிலையான விமர்சகர்களின் பாராட்டுக்குரியதுதான்.

தமிழர் சமூகம் வாழும் பல்வேறு பிரதேசங்கட்கும் பொருந்தக்கூடிய மேற்படி நாவலின் கதையம்சம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒரு கிராமப்புறக் களத்திற் சித்திரிக்கப்பட்டுள்ளது. சமகால அரசியல் சமூகச் சூழ்நிலைகள் கதை நிகழ்ச்சிகளுக்கான பகைப்புலங்களாக அமைகின்றன. ஆயுதப் படைகளின் அட்டகாசம், தீவிரவாதிகளாக மாறிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் செயற்பாடுகள் தொடர்பான செய்திகள் என்பன இந்நாவலின் கதையம்சத்தின் சமகாலத் தன்மையைக் காட்டும் வகையில் இடம்பெற்றுள்ளன. இன்றைய விடுதலைப் போராட்டச் சூழலும் நீறுபூத்த நெருப்பாக உள்ள சாதி ஏற்றத் தாழ்வுணர்வின் சாயலும் இந்நாவலிலே புலப்படுகின்றது; அன்பில்லாத கணவனின் அடக்குமுறையிலிருந்து விடுபடத் துடிக்கும் பெண்மையுணர்வுகள் இன்று தனிக்கவனத்தினைப் பெற்றுவரும் 'பெண்நிலைவாத' உணர்வுப் பகைப்புலத்தையும் நினைவுக்கு இட்டுவருகின்றன. இன்னும் ஆழ்ந்து சிந்தித்தால் 'விடுதலை பெற்றுத் தனித்து வாழும்' நோக்கிலான இன்றைய அரசியற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலின் உருவகமாக இந்நாவலை நோக்கவும் இடமுண்டு.

சம்பவங்கள், அவற்றின் விளைவான உணர்ச்சி முனைப்புக்கள் என்பவற்றைவிட அவற்றுக்கான உளவியல் அடிப்படைகளை நுணுகி நோக்கும் பண்பு கோகிலாவின் சிறு கதைகள் பலவற்றிற் காணப்பட்ட சிறப்பியல்பாகும். அவ்வியல்பு இந்த நாவலிலே மிகுந்து காணப்படுகின்றது. கதைத் தலைவியான பூரணியின் உணர்வோட்டங்களிலும் அவள் பிற பாத்திரங்களுடன் நிகழ்த்தும் உரையாடல்களிலுமே நாவலின் பெரும்பகுதிக் கதைப்போக்கு அமைகின்றது. சிந்தனைக்கு விருந்தாக நிறையப் 'பொன்மொழிகள்' இடம்பெறுகின்றன. கதையம்சத்தை விளக்கம் செய்யும் வகையிலேயே அவை அமைவதால் கதையோட்டம் அவற்றால் தடைப்படவில்லை.

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிலே பொருத்தி நோக்கும்போது இந்நாவல் ஒரு புதுவகை முயற்சி என்றே கொள்ளவேண்டியுள்ளது. நாவலின் பிரதான கதையம்சமும் கதைகூறும் முறையும் முன்னைய நாவல்கள் பலவற்றினின்றும் வேறுபட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. கோகிலா அவர்கள் தொடர்ந்து முயன்றால் ஈழத்துத் தமிழ் நாவலிக்கியத் துறைக்குப் புதிய பரிமாணங்களை அவரால் தரமுடியும் என்ற நம்பிக்கையை இந்நாவல் தருகிறது.

தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
(1986)

****************************************

## பரிசுகள், பாராட்டுகள்

### இலக்கியத் துறையில் மாகாண மட்டப் பரிசு

1. வடக்குக் கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் இலக்கிய நூற் பரிசு – வாழ்வு ஒரு வளைப்பந்தாட்டம் – சிறுகதைத் தொகுதி – 1997

2. வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் பரிசு – "மனம் எனும் தோணி" உளவியல் கட்டுரைத் தொகுதி – 2008 (பல்துறை நூலுக்கானது)

### மாணவப் பருவத்தில் பெற்ற சில பரிசுகள்

1. பன்னாலை சேர் கனகசபை வித்தியாசலை – இல்ல விளையாட்டுப் போட்டி அப்பர் இல்லம்.
   ஊசி நூல் கோத்தல் போட்டிப் பரிசு – 1957
   விநோத உடைப் போட்டிப் பரிசு – 1957
   50 யார் ஓட்டப் பரிசு – 1958
   கிந்தி ஓடல் பரிசு – 1958

2. பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை – இசைப் போட்டிப் பரிசு – 1958

3. தமிழ் மறைக் கழகம் நடத்திய அகில இலங்கைத் திருக்குறள் மனனப் போட்டி சிறப்புப் பரிசு – 1958

****************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகை அட்டைப்படக் கட்டுரையில்
பகீரதி ஜீவேஸ்வரா

# என் மனவானில் நிலவாகப் பூத்த ஆசிரியை கோகிலா மகேந்திரன்

1986ம் ஆண்டு. கோகிலா மகேந்திரனின் 'மனித சொரூபங்கள்" சிறுகதைத் தொகுதியில் 'ஒரு ஏக்கம் மடிகிறது' என்ற சிறுகதையை வாசித்து முடித்ததும் என்னுள் ஒரு ஏக்கம் எழுந்தது. எனது உணர்வையும், அறிவையும் தூண்டிய முதல் சிறுகதை இது என்பதால் இந்த 'நோஞ்சான் குஞ்சைப்' படைப்பாக்கிய எழுத்தாளரைச் சந்திக்க வேண்டும் என்பதே அந்த ஏக்கம்.

இவ்வாறு எனக்குள் முதலில் கருத்துருவ நிலையில் மட்டும் அறிமுகமாகிய ஆசிரியை அவர்களிடம், ஆண்டு 8 முதல் ஆண்டு 11 வரை நான்கு வருடங்கள் அவரது வீட்டிலேயே சென்று விஞ்ஞானமும், ஆங்கிலமும் கற்க வாய்த்த போதுதான் பருப்பொருள் நிலையான அறிமுகம் நடந்தேறியது.

எளிமையிலும் ஒரு சீர், படைப்பாளிக்கே உரிய மென்மையான இதயம்தான் உள்ளே இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் தோற்றமும் நடத்தையும், (ஆனால் வகுப்பில் மிகக் கண்டிப்பு) அறிவில் ஒரு ஆழம். பேச்சில் Silver Tongue, எதிலும் ஒழுங்கான திட்டமிடல், ஓய்வு ஒழிச்சல் இன்றி இயந்திரம் போலத் தானும் இயங்கி மற்றவர்களையும் இயங்கவைக்கும் விருட்சம் என்பன என்னுள் படிமமாகியது.

இருபது வருடங்கள் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையில் அதிபராய் இருந்தவரும், நகுலகிரிப் புராண உரை நூலுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவருமான திரு.செ.சிவசுப்பிரமணியம் அவர்களுக்கு ஒரு தனிப்பிள்ளையாய்ப் பிறந்து வளர்ந்த சூழல் - பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை, பண்டிதர் க.உமாமகேஸ்வரன் போன்றோர் வாழ்ந்த விழிசிட்டிக் கிராமச் சூழல். - அமரர் ஜெயரத்தினம் அவர்கள் அதிபராய் இருந்த மகாஜனாவின் பொற்காலத்தில் அவரின் அறிவையும், ஆளுமையையும் நுகர ஏற்பட்ட வாய்ப்பு இவை ஆசிரியையின் உயர்வுக்கான ஆரம்ப அத்திவாரங்கள்.

ஆசிரியை அவர்கள் மகாஜனாவில் பயின்றகாலத்தில் உடன் படித்த திருமதி. சு.ஜெயதாசன், ஆசிரியை அவர்களின் மாணவப் பருவம் பற்றிக் கூறியவையை மீளுருப் போடுகிறேன். "அப்ப ஸ்கூலிலை கோகிலா ஒரு Out Standing Student தான். எங்கையெங்கை பேச்சு, கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம், விளையாட்டு எண்டு போட்டிகள் நடக்குதோ அங்கையெல்லாம் நிற்பார். Prizeகளைத் தட்டிக் கொள்ளுற அதிர்ஷ்டமும் அவரிடம் இருக்கு. உதுகளாலை சிரேஷ்ட மாணவ தலைவியாயும் தெரிவானவர்' அன்று பாடசாலை களுக்கு இடையிலான கலைக்கழக நாடகப் போட்டியில் அகில இலங்கையில் முதலிடம் பெற்ற கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை அவர்களின் நாடகமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கோமகளும் குருமகளும், நாடகத்தில் இவர் குருமகளாக நடித்த சிறப்பைப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களே பாராட்டியுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற காலத்தில் தமிழ்ச் சங்கம் நடாத்திய நாடகப் போட்டியில் (1973) சிறந்த நடிகைக்குரிய பரிசைப் பெற்றுக் கொண்டவர்.

இவரது ஆளுமையில் இனிக் கூறப்போகும் பரிமாணந்தான் இவருக்குப் பிரபலமான, உறுதியான ஒரு முத்திரையைத் தந்துள்ளது. "எழுத்தாளன் ஒருவன் தன் முட்டைத் தீர்த்துக் கொள் வதற்காகவே எழுதுகிறான்" என்றொரு கருத்துண்டு. ஒரு ஆசிரியை என்ற வகையில் இவருக்கு ஏற்பட்ட அனுபவங்களும், பிரச்சினைகளுமே இவரது பெரும்பாலான எழுத்துக் களுக்குத் தளமாக அமைந்தன. அவரிடம் ஒரு புதுமையான தனித்துவம் உண்டு. கருத்துச் செறிவுள்ள சொற்களைக் கையாண்டு பகைப்புலத்தை விளக்கிவிடும் அவரது திறன் சிறப்பானது.

ஏராளமான சிறுகதைகள், கவிதைகள், உளவியல் சார் கட்டுரைகள், நாடகங்கள், நாவல்கள், விஞ்ஞானக் கதைகள் எழுதியுள்ள இவர் இன்னும் எழுதுகிறார், எழுதுவார்.

'மனித சொரூபங்களின்' 'முரண்பாடுகளின்' அறுவடையை உள்வாங்கியதால், அதற்கான அறிமுகவிழாவை எடுத்து பல பிரசவங்களின் வேதனையை உணர்ந்து சிறுகதைகளாக நூலுருவேற்றியவர். அண்மையில் மல்லிகையில் வெளியான 'மனதையே கழுவி' என்ற சிறுகதை நல்லதொரு உளவளத்துணைச் சிறுகதை என்று விமர்சகர்கள் கூறுகிறார்கள். 'துயிலும் ஒருநாள் கலையும்' என்ற நிஜத்தையும், 'தூவானம் கவனம்' என்ற எதிர்வு கூறலையும் மிக நீளமாக ஆவணப்படுத்தியவர். இவரின் 'பிரசவங்கள்' என்ற சிறுகதைத் தொகுதிக்கு 'இலக்கிய வித்தகர்' என்ற பட்டத்துடன் கூடிய சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றமையும், நோரவேத் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசைப் பெற்றமையும் இலக்கிய உலகால் ஊன்றி அவதானிக்கப்பட்டது.

ஆசிரியை எழுதிய பல நாடகங்களில் எனக்கு நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தமையால் அவரது நாடகம் சார் ஆளுமையையும் நுணுகிப்பார்க்கும் சந்தர்ப்பம் பெருமையானது. அவராலேயே எழுதி நெறியாள்கை செய்யப்பட்ட 'பட்டங்கள் மீண்டும் பறக்கும்', 'தான் கெடுபள்ளம்', 'வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம்', 'பௌர்ணமி நாள்', 'தாகம்', 'ஆலய தரிசனம்', 'மலையும் மடற்பனையும்' 'குருவி கூவ மறந்ததோ' போன்ற நாடகங்கள் எல்லாமே நெகிழ்வுத்தன்மை கூடிய மோடிப்பாணியில் அமைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம்' அமெரிக்காவில் 'ஒன்சன் பிளேயை' நினைவு படுத்துவதாகப் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறியது நினைவில் உள்ளது. "குருவி கூவமறந்ததோ' இலக்கியப் பேரவையின் பரிசைப் பெற்ற 'கோலங்கள் ஐந்தில்' அமைந்து வேறு பல நெறியாளர்களால் மேடையேற்றப்பட்டது.

கற்பித்தலில் இவர் எப்போதும் மாணவர்களின் விருப்புக்குரியவர். ஒழுங்கான வருகை, தெளிவான விளக்கம், முடிக்கும் திறன், ஒழுங்கான மதிப்பீடு ஆகியவை என்னைக் கவர்ந்தவை. க.பொ. த.உயர்தரப் பரீட்சையில் 'நாடகமும் அரங்கியலும்' பாடத்துக்கு 'A' பெற்றுக் கொண்ட நான் வேறு ஒரு இடமும் கற்கப் போகவில்லை என்பதையும் இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். 1991ல் நடத்தப்பட்ட உலக ஆசிரியர் தின விழாவில் இவர் மாவட்ட மட்டத்தில் 'நல்லாசான் விருது' பெற்றதில் வியப்பில்லை.

ஒரு சதுரங்க ஆட்டத்தில் அரசன் எவ்வாறு அதி கூடிய சக்தியைப் பெற்றிருந்தும். அரசி பல தகைமைகள் பெற்றும், பரந்தும் தொழிற் படுகிறாளோ - அதே போன்றதொரு நிலையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரை ஆசிரியராகப் பெற்ற மகாஜனக் கல்லூரியும், யூனியன் கல்லூரியும் உணர்ந்தன. (மகாஜனவில் இருந்து இவர் இடமாற்றம் பெற்றுச் சென்றதை மாணவர்கள் மிக வன்மையாக எதிர்த்தார்கள்)

1989ல் நடைபெற்ற போட்டிப் பரீட்சை மூலம் அதிபர்தர உயர்வு பெற்ற இவருக்கு இப்போது தந்தையார் அமர்ந்த அதே கதிரையில் அமர்ந்திருக்கும் வாய்ப்பு! நிர்வாகப் பொறுப்பில் தற்போது இருப்பினும், நிலைக்களனாகிய துறை உளவியலே. நாடகம் என்பது மனிதனைத் தேட வேண்டும் என்று கற்பித்தவர். மனிதனுள் தேடலை நடத்த ஆசை கொண்டு உளவியலைப் படித்து, உளவளத் துணையாளர் பயிற்சியை முடித்து பேராசிரியர் தயா சோமசுந்தரம், அருட்திரு டேமியன் அடிகளார் போன்றோருக்கு உதவியாகப் போர்ச் சூழலில் துன்பப்படும் உள்ளங்களுக்கு ஆறுதல் தரும் அன்னையாகத் தொண்டாற்றுகிறார். யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகில் உளவளத்துறைப் பயிற்சி நெறியில் விரிவுரைகள் ஆற்றி வருகிறார். இவரிடம் இயல்பாக உள்ள நேர்மையும் இரகசியம் பேணும் தன்மையும் நேரந் தவறாமையும் இத்தொழிலுக்கு இவரைத் தகுதியாக்கியுள்ளன.

இந்த உயர்வுகள் பலவற்றுக்கும் உளரீதியாக இருந்து உடன்பட்டு உதவுபவர் அருணோதயக் கல்லூரி உப அதிபர் மகேந்திரன் அவர்கள் என்பதை மறுக்கமுடியாது.

இந்த மண்ணில் தனது ஆளுமைக் கூறுகளையும், ஆற்றல்களையும் முழுமையாக வளர்த்தக் கொள்ள முயன்று வெற்றி பெற்ற ஒரு சில பெண்களில் 'கோகிலா ரீச்சர்' முக்கியமான ஒருவர்.

ஆகஸ்ட், 1995

***

## பரிசுகள், பாராட்டுகள்

4. கொழும்பு விவேகானந்த சபை நடத்திய அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையில் ஆரம்ப பிரிவில் முதற் பிரிவுச் சித்திக்காகன பரிசு – 1958

5. மகாஜனக் கல்லூரி – இலங்கை வானொலி நடத்திய நடன நிகழ்வில் கலந்து அந்நிகழ்வு வானொலியில் ஒலிபரப்பப்பட்டமைக்கான பரிசு – 1959

6. மகாஜனக் கல்லூரி – பொன்விழா நிகழ்வில் ஜதீஸ்வரம் நடனம் ஆடியமைக்கான பரிசு – 1960

7. மகாஜனக் கல்லூரி – 100யார் ஓட்டம் – முதற்பரிசு – 1961 – சின்னையா இல்லம்
   மகாஜனக் கல்லூரி – கயிறடித்தல் – முதற்பரிசு – 1961

8. மகாஜனக் கல்லூரி – 100 யார் ஓட்டம் – முதற்பரிசு – 1963
   கயிறடித்தல் – முதற்பரிசு – 1963
   மெய்வல்லுநர் போட்டி வெற்றிக்கிண்ணம் – 1963

9. மகாஜனக் கல்லூரி – English Elocution - Intermediates - Prize - 1965
   Tamil Elocution - Intermediates - Prize - 1965

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த எழுத்தாளர் இராஜநாயகனின் பார்வை
தூவானம் கவனம் நாவலில். . . . .

# சமுதாய ஓவியம்

"ஓவியத்துக்கும் புகைப்படத்துக்கும் என்ன வித்தியாசம். . . ."

"புகைப்படம் வெளித்தோற்றத்தை மட்டும் காட்டும். ஓவியம் மனநிலையில் உள்ள உணர்வுகளையும் காட்டும்"

[விடை சொன்னவள் வீணா - "தூவானம் கவனம்" என்ற இந் நாவலின் முக்கிய பாத்திரம்.

கேள்வி கேட்டவன் வீணாவின் கணவனாக வரப்போகிற - பின்னால் ஆகிவந்த ஜீவன் - நாவலில் உக்கியபாத்திரம்.]

சிறுகதை, குறுநாவல், நாவல் என்கிற படைப்பிலக்கிய ஆக்கங்களில் பல அதி நவீன எலெக்ட்ரோனிக் சாதனங்களுடன் மிகத் துல்லியமாகப் பெறப்படும் புகைப்படம் போன்றவை; சில, ஓவியம் போன்றவை. இச் சில, வெளித் தோற்றத்தைக் காட்டுவது மட்டுமன்றி, உள்ளாந்தரங்களையும் துல்லியமாகக் காட்டி நிற்பவை.

கோகிலா மகேந்திரன் அவர்களுடைய ஆக்கங்கள் இவ் விரண்டாம் வகையைச் சார்ந்தவை.

"ஒரு நல்ல நடன இசை நாடகத்திலை இருப்பது போலை, ஒரு நல்ல ஓவியத்திலையும் ஒரு லயம் இருக்கும்" - ஜீவன். கோகிலாவின் ஆங்கங்களிலே ஒரு லயம் லயித்திருப்பதை உணர முடிகிறது.

அபூர்வ நிகழ்வுகளைக் கருத்தூன்றி நோக்குவதும், அவற்றின் தொடர்வுகளைத் தொடர்ந்து அவதானிப்பதும் மனிய இயல்பு. கடந்த சில ஆண்டுகளாகக் கோகிலா மகேந்திரனின் சிறுகதைகள், நாவல் என்பவற்றில் அபூர்வங்கள் பல கண்டு வியப்புற்றேன்.

படைப்பிலக்கியங்களில் சமுதாயப் பிரக்ஞை இருக்க வேண்டும் என்பது இன்றைய தாரக மந்திரம். சமுதாயப் பிரக்ஞை என்பது ஏழை - பணக்காரன், முதலாளி - தொழிலாளி - சாதி - சமயம் - இனம் மொழி என்பவற்றின் முரண்பாடுகளோடு எம்மிற் பலரிடம் நிறைவு பெற்று விடுகிறது. சமுதாயம் என்ற விசுவத்தை நல்ல கண்ணாடியில் விம்பமாக மேற்கண்ட அம்சங்களிற் காட்ட நாம் தவறவில்லை.

சமுதாயம் என்பது இந்த அம்சங்களில் முழுமையாக அடங்கிவிட்டதா? சமுதாயத்தை - சமுதாய வளர்ச்சியை - சமுதாய மேம்பாட்டை - சமுதாய ஆரோக்கியத்தைக் கட்டி அமைக்குங் காரணிகள் இவை மட்டுமா?

கோகிலா மகேந்திரனின் சிறுகதைகள், நாவல்களில் அவர் சமுதாயத்தைத் தம் எழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் ஆராய்ந்து தமது தரிசனங்களை எமக்கு ஓவியமாகத் தருகிறார்.

சமுதாயம், உயிரியல் - சமூகவியல் - அரசியல் - பொருளியல் - தொழினுட்பவியல் - மொழியியல் - உளவியல் - பாலியல் போன்ற பல்வேறு அறிவியல் துறை சார்ந்த காரணிகளாலும் பாதிக்கப்படுவது. கோகிலா மகேந்திரனின் ஆக்கங்களில் முன்குறித்த அம்சங்களும், இங்கு குறித்த அம்சங்களும் விரவி சமுதாயப் பிரக்ஞை என்பது நிறைவு பெறுவதைக் காணுகிறோம். இவ்வாறாக நிறைவு பெற்ற சமுதாயப் பிரக்ஞையோடு எழுதுகிற எழுத்தாளருள் கோகிலா மகேந்திரன் முதலாமவர். இரண்டாமவர் இனித்தான் வெளிவர வேண்டும் என எண்ணுகிறேன்.

"தூவானம் கவனம்" என்ற இந் நாவலின் கதை இன்றைய எமது சமுதாயத்தின் கதை. பல 'இயல்' ரீதியாகவும் சமுதாயத்தை நாம் இங்கு தரிசிக்க முடிகிறது. ஜனரஞ்சக எழுத்து எதுவும் தொட்டும் பார்க்க முடியாத அம்சங்கள் இந் நாவலில் மிகத் துணிச்சலாக - மிக லாவகமாக அமைக்கப் பட்டுள்ளன.

கதையைத் தொடங்குகிற - முடிக்கிற உத்தி அபாரம். கோகிலா மகேந்திரன் இங்கு கையாளும் நனவோடை உத்தி இறந்த காலத்துள் ஒரு கட்டத்திலும், எதிர்காலத்துள் வேறொரு கட்டத்திலும ஓடிப்பாய்கிறது. இது துணிச்சல் மிக்க புதிய ஒருபரிசோதனை.

கதையம்சங்களைக் காட்டி, நாவலில் வரும் உயிரோட்டமான இடங்களைத் தொட்டு விமரிசனம் செய்வது இங்கு நோக்கமல்ல. ஆயினும் படிப்பு, பணம், பதவி, கல்விக் கூட்டங்களில் ஓநாய்கள், மனிதநேயம், விசுவாசம் என்பது பற்றிய கோகிலா மகேந்திரனின் அணுகல் - கணிப்பீடு - காட்டுகை என்பவற்றை ஓர் அனைத்துலக எழுத்தாளருக்குரிய இலட்சணங்களாகக் காண்கிறேன் என்பதைக் கூறாமலிருக்க முடியவில்லை.

கோகிலா மகேந்திரன் ஈழத்தமிழ் இலக்கிய உலகில் தோன்றி விட்ட ஓர் ஒளிமிக்கதாரகை. அத் தாரகை அகில உலகிலும் பிரகாசிக்கும். அதற்கான காலம் பிறந்து விட்டதற்கான அறிகுறிகள் பல; இந் நாவல் அவற்றுள் ஒன்று

வாழ்த்துகிறேன்

திருநெல்வேலி
1989-02-12

## பரிசுகள், பாராட்டுகள்

9. Mahajana College -
   Tamil Essay - Prize - 1965
   NPTA Prize - Tamil Elocution - 1965 (மாகாணமட்டம்)
   VNTA Prize - English Elocution - 1965 (வலிவடக்கு மட்டம்)
   Tamil Elocution - 1965 (பாடசாலை மட்டம்)

10. மகாஜனக் கல்லூரி – NPTA Prize - Tamil Elocution – 1966

11. மகாஜனக் கல்லூரி – தேசியமட்ட முதலிடம் பெற்ற நாடகத்தில் நடித்தமைக்கான பரிசு – 1967 + 1968

12. மகாஜனக் கல்லூரி – அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் நடத்திய பெரிய புராணப் போட்டிப் பரிசு – 1968



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் அட்டைப்படக் கட்டுரை
ராஜி கெங்காதரன்

## பன்முகப் பார்வையால் மனவளம் சேர்க்கும் மங்கை கோகிலா மகேந்திரன்

வயல் வெளியினூடே தவழ்ந்து வரும் காற்றின் சுகானுபவத்தில், குதூகலிக்கும் மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழைக்கோர் மகுடம். அம்பனைப் பல்கலைக் கழகம் என்று அன்புடன் அழைக்கப்பட்டது.

அக் கல்லூரிக்குப் புதுமுகமாய்ச் சென்ற எனக்கு அறிமுகமானவர் கோகிலா மகேந்திரன். மகாஜனாவின் மாண்புறு மாணவியாய்த் திகழ்ந்தவர் - சிறுகதை எழுத்தாளர் - என்பதெல்லாம் மற்றவர் சொல்லக் கேட்டறிந்த செய்திகள்.

அவர் எழுதிய "ஒரு சோகம் இறுகும் போது" என்பது நான் வாசித்த அவரது முதல் சிறுகதையாகும். அதைப் பார்த்தபோது எனக்குள் ஏற்பட்ட அதிர்வலைகளை அகிலன் எழுதிய சிறுகதை பற்றிய கருத்துத் தெளிவுபடுத்தும்.

"எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை தன்னகத்தே கொண்டிருக்கிறதோ அதைப் படிப்பவரின் நெஞ்சில் மின்வெட்டைப்போல் பாய்ச்சும் ஆற்றல் சிறுகதைக்கு வேண்டும். படித்து முடித்தவுடன் படித்தவர் உள்ளத்தில் எது ஊற்றுப் பெருக்கைப் போல் உணர்ச்சிகளைப் பூத்துச் சொரிகிறதோ அதுவே, சிறந்த சிறுகதை எனக் கொள்ளலாம்"

எனது மனதுக்குள்ளும் அவருடைய பல கதைகள் பூக்களைச் சொரிந்திருக்கின்றன. தளர்ந்து போகும் போதெல்லாம் என் மனதுக்கு அவர் ஒரு நம்பிக்கை நட்சத்திரம். இடம் பெயர்வு என்ற சூறைக்காற்று எம்மை அள்ளிச் சென்று ஆங்காங்கே உதிர்த்து விட்டபின் - சிறிதுகால இடைவெளி. மீண்டும் கோகிலாவைச் சந்தித்தபோது நான் உயிர்த்தேன். இடைக்கால வளர்ச்சியில் விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விஸ்வரூபினியாய்த் தோற்றம் கண்டு வியந்தேன். அவருடைய வளர்ச்சிக்கும், வாழ்வுக்கும் அடிப்படையாய் அமைந்தவை எவை?

அவர் ஒரு சிறந்த விஞ்ஞான ஆசிரியர். ஆற்றல் மிக்க அதிபர், நிர்வாகத்திறமை மிக்க அதிகாரி, புகழ் பூத்த சிறுகதை - நாவல் ஆசிரியர். பாத்திரம் உணர்ந்து நடிக்கும் பண்பட்ட நடிகை. நாடக எழுத்தாளர் - நெறியாளர், உளவளத்து துறையில் ஈடுபாடு கொண்டுழைக்கும் சீர்மியர் (Counsellor) உள்ளங்கவரும் பேச்சாளர், விமர்சகர் இப்படி யெல்லாம் வரிசைப்படுத்தக் கூடிய வல்லாளர்.

இத்தனையும் அவருக்கு இயைபாகும் வண்ணம் அவரை ஆற்றுப்படுத்தியவை பற்றி நோக்கல் சாலச் சிறந்தது.

ஒருவரின் இயல்புகளும் நடத்தைக் கோலங்களும் அவர் வாழும், வளரும் சூழலால் நிர்ணயிக்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா பிறந்த ஊர் விழிசிட்டி. பன்னாலை - தையிட்டிப் புலம் என்னும் கிராமங்களிடையே அமைந்தது. கண்பார்வை இழந்தவருக்கு அருள் செய்த வைரவரால் விழிதீட்டி எனப் பெயர் வந்தது. அது மருவி விழிசிட்டி ஆயிற்று. தானிய வகைகளும், தாவர இனங்களும், தன்னிறைவு பெறும் வகையில் செழித்து வளர்வதற்கு மண்வளம் காரணமாயிற்று.

அம்பலவாண உபாத்தியாயர், பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை அவர்கள், கணபதிப்பிள்ளை உபாத்தியாயர், பௌராணிகர் கா.ஆறுமுகம், பண்டிதர் வே.பொன்னம்பலம் போன்ற - இன்னும் இங்கு குறிப்பிடப்படாத அறிஞர்கள் பலர் வாழ்ந்ததால் மனவளம் பெற்ற மக்கள் அங்கு வாழ்ந்தனர்.

பண்போடியைந்த மக்கள் மத்தியில் அறிஞராய்த் திகழ்ந்த சிவசுப்பிரமணியம் தம்பதிகளுக்கு ஏக புத்திரியாய் 17.11.1950 அன்று பிறந்தார். கோகிலா தேவி என்று நாமம் சூட்டப்பட்டார். வசந்தத்தின் வருகையை அறிவிக்கும் கோகிலம் போல பலர் வாழ்வுக்கு வசந்தம் தருவார் என அவர்கள் உணர்ந்திருந்தனர் போலும்.

தந்தையார் நீண்டகாலம் அதிபராய்க் கடமை புரிந்தவர். பண்ணிசை, புராண படனத்தில் தேர்ந்தவர். சாகித்ய மண்டலப் பரிசு பெற்ற நகுலகிரிப்புராண உரையை ஆக்கியவர். தாயார் மற்றவர் துயர் கேட்டு ஆற்றுப்படுத்தும் இயல்பு வாய்ந்தவர். பரம்பரைக் கூறுகளாய் கோகிலா விலும் இவ்வாற்றல்கள் படிந்தன.

அதிபர் ஜெயரத்தினம் அவர்கள் அதிபராய் இருந்த பொற்காலத்தின் வார்ப்பாக அமைந்தவர். ஆசிரியர் கவிஞர் செ.கதிரேசர் பிள்ளை, திரு.பொ.கனகசபாபதி போன்றவர்களின் மாணவியாக இருந்தவர். எனவே அவர்களின் ஆளுமைக் கூறுகளும் ஆற்றலும் கோகிலாவை வளர்த்தெடுத்தன.

பாடநூல்களுக்கப்பால் பல்வேறு நூல்களையும் தேடி வாசிக்கும் ஆர்வம் அவரிடமிருந்தது. நூலகங்கள் அவரது தேடலுக்குப் பெருவிருந் தாயின. பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்வி கற்றபோதும், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் கற்ற போதும் தன்னை வளர்த்துக் கொள்ள முயன்றிருக்கிறார். ஆங்கில நூல்களையும் சமமாக வாசித்ததால் அவரது எண்ணங்களிலும், சிந்தனையிலும் பெருமாற்றங்கள் நிகழ்ந்தன.

இல்லற வாழ்வில் ஈடுபட்டபின் கணவரான திரு.மகேந்திரராஜா அவர்கள் ஆசிரியராக, அருணோதயாக் கல்லூரி அதிபராக, பணியாற்றிய காலத்திலும் சோர்வின்றித் தன் மனையாளின் வளர்ச்சிக்கு உதவியிருக்கிறார். பின்னர் மகன் பிரவீணனும் அவருக்கு உறுதுணையாக இருந்திருக்கிறார். திருமதி.த.சண்முகநாதன் (சிற்றன்னை) உட்பட குடும்பத்தினரின் பங்களிப்பு மேலானது.

மேற்கூறியவற்றோடு கோகிலாவின் இயல்பான ஆற்றல், ஆர்வம், விடாமுயற்சி, நேர்மை, வாய்மை, பொய்கலவாத உள்ளம், தேடல் என்பனவும் பல்துறையில் தடம் பதிக்கும் பெண்ணாய் அவரை உருவாக்கின. கவிஞர் கதிரேசர் பிள்ளை அவர்கள் "சுற்றுப்புறச் சூழலின் அழுக்குப்படியாதவர்" என்று பாராட்டினார். எத்தனை ஆழமான வார்த்தைகள். இன்றும் அவ்வாறே வாழும் வாழ்வுதான் அவரின் உந்து சக்தியோ என எண்ணத் தோன்றுகிறது.

கல்வித்துறை - 1970 - 74ம் ஆண்டுகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பிரிவில் கற்றார். 1974ல் விஞ்ஞான ஆசிரியையாகப் பதவி ஏற்றார். பொலிகண்டி தமிழ்க் கலவன் பாடசாலை, கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை, மகாஜனாக் கல்லூரி, யூனியன் கல்லூரிகளில் 1974 முதல் 1993 வரை பணியாற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரட்சியானது எனக் கருதப்படும் விஞ்ஞானத்தைக் கலையுணர்வோடு கற்பிப்பார். அவரது மாணவி ஒருவரின் பாராட்டுரை,

"எளிமையிலும் ஒரு சீர், படைப்பாளிக்கே உரிய மென்மையான இதயம் தான் உள்ளே இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தும் தோற்றமும் நடத்தையும் (ஆனால் வகுப்பில் கண்டிப்பு) அறிவில் ஒரு ஆழம், பேச்சில் Silver Tongue எதிலும் ஒழுங்கான திட்டமிடல், ஓய்வொழிச்சல் இன்றி இயந்திரம் போலத் தானும் இயங்கி மற்றவர்களையும் இயங்க வைக்கும் விருட்சம்... என்பன என்னுள் படிமமாகின" என்கிறார் செல்வி. பகீரதி ஜீவேஸ்வரா.

1991-92ல் பண்டத்தரிப்பு கோட்டச் சேவைக் கால ஆலோசகர் பதவிவகித்தார்.1993 - 1999 வரை தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அதிபராக இருந்தார். தந்தையைப் போலத் தானும் அப்பதவியை அலங்கரித்தார். அவரது நிர்வாகத்தில் பாடசாலை சிறப்பாக இயங்கியது.

1999 முதல் 2007 வரை வலிகாமம் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றினார். போர்க்காலச் சூழ்நிலையில், பல சிரமங்களுக்கு மத்தியிலும் சிறப்பாகப் பணியாற்றினார்.

அவரது அரும் பெருங்கல்விப் பணியைப் பாராட்டி விருதுகள் வழங்கப்பட்டன.

"நல்லாசான் விருது, பண்டத்தரிப்புக் கோட்டம், (1991) யாழ் மாவட்டக் கல்வித் திணைக்களம் (1991)"

இத்தனை பணிகளுக்கும் மத்தியில் அவர் மிக மிக ஆத்மார்த்தமான ஈடுபாடுகாட்டியது இலக்கியத் துறையிலேயேயாகும். சிறுகதை, நாவல், நாடகம், கவிதை, கட்டுரை, சிறுவர் இலக்கியம், விமர்சனம் எனப் பலபடிகளில் நிலைபெற்ற போதும் சிறுகதை இலக்கியம் அவரைத் துருவ நட்சத்திரமாக இனங்காட்டியது.

**சிறுகதை** :- ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் 1914ல் 'நொறுக்குண்ட இதயம்' என்ற நாவலைத் தந்த மங்கள நாயகம் தம்பையா என்பவரைத் தொடர்ந்து பல பெண் எழுத்தாளர்கள் தோன்றினர். அவர்களுள் சிகரந் தொட்டவர்களாய் கருதப்படும் பெண் எழுத்தாளர்களுள் கோகிலாவும் ஒருவர். இதனைப் பின் வரும் பிரபல எழுத்தாளர்களின் பாராட்டுகள் விளக்குகின்றன.

"புதிய தலைமுறையின் நவீன சிந்தனையாளராக நான் கோகிலாவைக் காணுகிறேன்" - டொமினிக் ஜீவா

"இன்றைய பெண் பிரம்மாக்களுள் அதிக அளவில் இவர் வெற்றி பெற்றிருக்கிறார்" - இரத்தின வேலோன்

"ஈழத்துச் சிறுகதை வரலாற்றைக் கோகிலா மகேந்திரனைத் தவிர்த்து எழுத முடியாதெனுமளவிற்கு சிறந்த படைப்பாளி" - செங்கை ஆழியான் - 'ஈழத்துச் சிறுகதை வரலாறு'

"அலட்டிக் கொள்ளாமலே பெண்ணியக் கருத்துக்களை அவர் சிக்கனமான முறையில் தெரிவித்திருக்கிறார். உள்ளத்தில் ஒளியுண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாதல் போல் அவர் நோக்கம் தெளிவுற அமைவதனால் அவர் ஆக்கங்களும் ஓர் ஒழுங்கு முறையில் தெளிவாகச் சித்தரிக்கப்பட்டவையாக அமைகின்றன" - கே.எஸ்.சிவகுமாரன் - 'அண்மைக்கால ஈழத்துச் சிறுகதைத் தொகுப்பாளர்கள்'

"அவரது கதைகள் வெறும் வாசிப்புப் பசியைத் தீர்ப்பனவல்ல, சமூகத்திற்குச் சில கருத்துக்களைக் கொடுப்பதற்கான ஆயுதமாக எழுத்தைப் பயன்படுத்துகிறார்." Dr.எம்.கே.முருகானந்தன்.

"கருத்துக்கள் - அவை கசப்பாக இருந்த போதிலும் வெளியிடும் துணிச்சல் கொண்டவர்" - பத்மா சோமகாந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனிமனித நடத்தையினூடு சமூகத்தை ஊடுருவிக் கதிர்ப்படமாக (x-ray) எடுத்துக் காட்டியுள்ளார்" - கலாநிதி எஸ்.சிவலிங்கராசா.

"சமூக நிகழ்ச்சிகளையும் அவற்றினடியாக நிகழும் உணர்ச்சி முனைப்புக்களையும் சித்தரிப்பதைவிட அவற்றிற்கான உளவியற் காரணிகளை விமர்சிப்பதே கோகிலாவை ஏனையவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் முக்கிய அம்சமாகும்." - பேராசிரியர் சு.வித்தியாந்தன். செங்கை ஆழியான் அவர்கள் தனது "ஈழத்துச் சிறுகதை வரலாறு" என்ற நூலில் சிறுகதை வரலாற்றுக் காலத்தை நான்காக வகுத்துள்ளார். அதில் புத்தெழுச்சிக் காலம் (1961 - 1983) தமிழ்த் தேசிய உணர்வுக் காலம் (1983க்குப்பின்) என்ற இரு கால கட்டங்களில் கனதி சேர்க்கும் எழுத்தாளர் எனக் குறிப்பிடக் கூடியவர்களுள் கோகிலா மகேந்திரனையும் குறிப்பிட்டுள்ளார். புத்தெழுச்சிக் காலக் கதைகளுள் 'சடப் பொருள் என நினைத்தாயோ', 'ஒலிக்காத ஓலம்" 'ஒரு சோகம் இறுகும் போது', 'அர்ச்சிக்கப்படாத விக்கிரங்கள்', 'ஒரு நெருடலும் ஒரு அசைவும்' போன்ற கதைகளைப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

தமிழ்த் தேசிய உணர்வுக் காலப் படைப்புக்களாக 'மரணிப்பிலும் உயிர்க்கும்', 'ஒலி', 'சமுதாயம் ஒரு சறுக்குப் பாறை', 'வாழ்வு ஒரு வலைப் பந்தாட்டம்', 'மனதையே கழுவி' போன்ற சிறுகதைகள் சிறந்து விளங்குவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலக்கியத் துறையின் சிகரங்களாக விளங்கும் சிலரின் மேற்கூறிய பாராட்டுரைகள் அவரின் உயர் நிலையை விளக்குவன. கடந்த முப்பதாண்டு காலத்தில், பல்துறை வளர்ச்சியின் மூலம் அவர் பெற்ற அறிவும், அநுபவங்களும் முதல், இடை, தற்காலக் கதைகளில் சற்றே வேறுபட்ட அம்சங்களையும், அணுகுமுறை வேறுபாடு களையும் புகுத்தியுள்ளன. உயர் மட்டவாசகர் அல்லாதோரும் அவரது கதைகள் மூலம் அறிவியல், உளவியல், மருத்துவ, விஞ்ஞானக் கருத்துக்களை அறிந்து கொள்ள முடிந்தது. நாய், ஆடு, பூனை, பனை போன்றவற்றைக் கூட தன் கதைகளின் முக்கிய பாத்திரங்களாக்கிக் கதையை வளர்த்துச் சென்று சுவை தந்துள்ளார்.

பாடசாலைக் காலங்களிலே கதைகள் எழுதிப் பரிசு பெற்ற இவரது 'அன்பிற்கு முன்னால்' என்ற கதையே முதன்முதல் 'குயில்' என்ற சஞ்சிகையில் 1972ல் வெளிவந்தது. தொடர்ந்து அவர் எழுதிய கதைகளைச் சிறுகதைத் தொகுப்புகளாக வெளியிட்டுள்ளார்.

அச்சுத்துறை இன்றைய வளர்ச்சியைக் காணாத எண்பதுகளில் தனது நூல்கள் சிலவற்றைச் சுயமாக வெளியிட்டுள்ளார். இதனை ஒரு சாதனை எனப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் ஒரு வெளியீட்டு விழாவின் போது கூறியுள்ளார்.

இதுவரை அவர் எழுதிய சிறுகதைகள் ஆறு தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன.

1. மனித சொரூபங்கள் - 1982
2. முரண்பாடுகளின் அறுவடை - 1983
3. அறிமுக விழா - 1984
(புலோலியூர் இரத்தின வேலோனுடன் இணைந்து)
4. பிரசவங்கள் - 1986
5. வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் - 1997
6. முகங்களும் மூடிகளும் - 2003

சிறுவர்கள் விஞ்ஞானக் கருத்துக்களை இரசனையோடு விளங்கிக் கொள்ளும் வகையில் எழுதிய நூல் 'விஞ்ஞானக் கதைகள் - 2000'

அவரது கதைகள் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றன.

1. பிரசவங்கள் - சாகித்திய மண்டலம் பரிசு
   இலக்கிய வித்தகர் - பட்டம் 1986
2. வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்
   - சாகித்திய மண்டலப் பரிசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இத்தொகுப்பு வடக்குக் கிழக்கு மாகாண கல்விப் பண்பாட்டுத்துறை அமைச்சின் விருதையும் பெற்றது.

4. சுடர் சிறுகதைப் போட்டி - 1980

நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகச் சிறுகதை போட்டி - 1985

நோர்வே தமிழ்ச் சங்க சிறுகதைப் போட்டி - 1986

முரசொலி குறநாவல் போட்டி - 1987

என்பவற்றில் அவரது கதைகள் பரிசு பெற்றுள்ளன. 'முகங்களும் மூடிகளும்', நூலுக்கான இலக்கியப் பேரவைச் சான்றிதழ் - 2003

'தாயகம்' வெளியிட்ட 'கால் ஒப்பம்' என்ற சிறுகதை தகவத்தின் சிறப்புப் பாராட்டைப் பெற்றது. (2008)

இவ்வாறு பல்வேறு பரிசுகளைப் பெற்ற கோகிலா தனது சிறுகதை பற்றிக் கூறுவது.

என்னைப் பாதித்தவற்றை, என் மனதைத் தொட்டவற்றை, என்னிடம் கோபம் ஏற்படுத்திய வற்றை பொருத்தமான வடிவங்களில் கொண்டுவர முயன்றிருக்கிறேன். மனிதத்துவம் மறைந்து போகின்ற சந்தர்ப்பங்கள் எனது உணர்வில் மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் போது அந்த உணர்வைச் சமநிலைப் படுத்த வேண்டி நான் எழுதுகிறேன். அதே நேரம் சமூகத்திற்கும் பொருத்தமான செய்தியைத் தருகின்றதோ என்றும் பார்த்துக் கொள்கிறேன். (நேர்காணல் - வைகறை) இவ் வார்த்தைகள் கோகிலாவின் தனித்துவத்தைத் துல்லியமாகக் காட்டுகின்றன.

நாவல்கள் :- சிறுகதைகள் பலவற்றைத் தொடர்ச்சியாக எழுதிய அநுபவம், நாவல்களை உருவாக்கக் கைகொடுத்துள்ளன.

துயிலும் ஒரு நாள் கலையும் - 1986

தூவானம் கவனம் - 1989

"துயிலும் ஒரு நாள் கலையும் என்ற நாவல் ஆசிரியரது ஆரம்ப முயற்சி என்று சொல்ல முடியாத அளவுக்குத் தரமாக உள்ளது" எனப் பேராசிரிய சு.வித்தியானந்தன் கூறியுள்ளார்.

'தூவானம் கவனம்' நாவலில் நனவோடை உத்தியைப் பெரிதும் கையாண்டுள்ளார். விளையாட்டு மைதானத்தில் அறிவிப்பாளராகக் கடமையாற்றிக் கொண்டே தன் எண்ணங் களினூடே நகரும் தன்மையைச் சுவை படச் சித்தரித்துள்ளார்.

நாடகத்துறை :- மானிடப் பண்புகளை வளர்த்து மனதுக்குச் சிகிச்சையளிக்கும் நாடகத்துறையில் 1966ம் ஆண்டு கால் பதித்தார். கல்லூரி, இல்ல நாடகப் போட்டிகள் இவரது ஆற்றலை வெளிப்படுத்தின. கவிஞர் கதிரேசர் பிள்ளை என்ற சிற்பி தன் திறந்தால் செதுக்கி உயிர்ச் சிற்பமாக்கி உலவவிட்டிருக்கிறார். நடிகை, நாடக எழுத்தாளர், நெறியாளர். பயிற்சியாளர் என அத்துறை சார்ந்த வளர்ச்சி கண்டு அச்சிற்பியின் ஆத்மா சிலிர்த்துக் கொள்ளும்.

1960களில் அகில இலங்கை நாடகப் போட்டிகளில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் மகாஜனா முதலிடத்தைப் பெற்றது. அவற்றில் ஒன்றான "கோமகளும், குருமகளும்" என்ற நாடகத்தில் பிரதான பாத்திரத்தில் நடித்தார். பேராதனைப் பல்கலைக்கழகம், பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நாடக விழாக்களிலும் சிறந்த நடிகைக்கான பரிசைப் பெற்றார்.

ஆசிரியராக இருந்தபோது பாடசாலை, கோட்ட மாவட்டப் போட்டிகளில் இவர் தயாரித்தளித்த நாடகங்கள் பல பரிசுகள் பெற்றன. தொடர்ந்தும் பல அமைப்புகளின் ஊடாக இவரது நாடகங்கள் மேடையேறின.

இத்துறை சார்ந்த கற்கை நெறியில் ஈடுபட விரும்பினார். பல்கலைக்கழகமும், கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய ஒருவருட நாடக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிப்ளோமா பயிற்சி நெறியில் இணைந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர். கா.சிவத்தம்பி, குழந்தை ம.சண்முகலிங்கம், கலாநிதி சி.மௌனகுரு, திரு.வி.வி.வைரமுத்து போன்றோரிடம் நாடகம் பயின்றார்.

வட இலங்கைச் சங்கீத சபையின் ஆசிரியர் தேர்வுக்காகப் 'பௌர்ணமி நாள்' என்ற நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்து தானும் பிரதான பாத்திரத்தில் நடித்தார்.

அச்சபையின் 'நாடகமும் அரங்கியலும்' பாடத்துக்கான ஆசிரியர் தரத்தில் தோற்றிச் சித்தியடைந்தார். (1991) உப பாடமாகப் பண்ணிசை அமைந்தது. இதன் மூலம் இத்துறையில் தன்னை முழுமைப் படுத்திக் கொண்டார்.

வட இலங்கைச் சங்கீத சபையின் 'நாடகமும் அரங்கியலும்' பரீட்சையில் பரீட்சகராகப் பணி புரியும் வாய்ப்பைப் பெற்றமை (1992 முதல்) ஐந்தாம் தர ஆசிரியர் தரப்பரீட்சார்த்திகளுக்கான பயிற்சி - விரிவுரை நடத்தியமை (1992 முதல்) க.பொ.த.உயர்தரத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் தோற்றும் மாணவர்களுக்குக் கற்பித்தமை. தொலைக் கல்விப் பயிற்சி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு போதனாசிரியராகப் பணி புரிந்தமை (1991 - 1993) யாழ் பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடத்துக்கான வருகை விரிவுரையாளராகப் பணியாற்றியமை, மான்செஸ்ரர் (U.K) பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு.ஜேம்ஸ் தோம்சன் நடத்திய பிரயோக அரங்கு பயிற்சி நெறியில் கலந்து கொண்டமை, மந்திரக்கடை (Magic Shop) என்ற நாடகச் சிகிச்சை முறையைச் செயல் முறையில் யாழ்ப்பாணத்தில் அறிமுகஞ் செய்தமை (2001) தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் செயலாளராகப் பணியாற்றி அதன் வளர்ச்சியில் பங்கு கொள்ளல் - 1986 முதல் - என்பன சிறப்பம்சங்களாகும். தெல்லிப்பழை சோலைக் குயில் அவைக் காற்றுக் களம் (1990 முதல்) என்ற அமைப்பின் தலைவராகச் செயலாற்றி இந்த அவைக்காற்றுக் களத்தின் மூலம் பல நூற்றுக் கணக்கான மாணவர்களுடன் நாடக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

அவரது நாடகங்களுள் குறிப்பிடத்தக்கவை 'பட்டங்கள் மீண்டும் பறக்கும்' மகாஜனக் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது. "மீண்டும் நிலவு பொழியும்", "மலையும் மடற்பனையும்" ஆசிரியவாண்மை என்பன ஆசிரியர் தினங் களுக்காகச் செய்யப்பட்டவை. 'முரண்பாடுகள்' 1997 - தேசிய கல்வி நிறுவனத்தின் முரண்பாட்டுத்தீர்வு கல்விச் செயலமர்வுக்குச் செய்தது. "பாலாய் நிலவு பொழியும்" - 1999 - இணுவில் மத்திய கல்லூரியில் கவிதை நாடகமாகச் செய்யப்பட்டது.

"நாடக வளர்ச்சியின் வெட்டு முகத் தோற்றம்" 1998 ஆரிய திராவிடப் பரிசளிப்பு விழாவில் நிகழ்த்தப்பட்டது. இங்கு பெயரிடப்படாதவை பல உள.

இவருடைய நாடகங்கள் எட்டு அடங்கிய தொகுதி. 'குயில்கள்' - (2001 முதற்பதிப்பு 2005 மறுபதிப்பு).கிரேக்கத்தின் தொல் சீர் அரங்கு - 1997 அரங்கக் கலையில் ஐம்பதாண்டு - 2003 இவை நாடகந் தொடர்பாக அவர் ஆக்கி அளித்த நூல்களாகும். வட இலங்கைச் சங்கீத சபை இவருக்கு 'நாடக கலாவித்தகர்' என்ற பட்டமளித்துக் கௌரவித்தது.

**உளவியல் :-** பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே உளவியல் நூல்களைக் குறிப்பாக ஆங்கில நூல்களை வாசிக்கத் தொடங்கினார். தன் உளவியற் தேடலை விரிவாக்கிக் கொண்டார். இத்தகைய ஆர்வமும் தேடலுமே அவரது சிறுகதைகளிலும் உளவியல் சார்ந்த கருத்துக்கள் மேம்படக் காரணமாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1993ல்தான் முறையாக உளவியல் கல்வியை முடித்து உளநல ஆலோசகரானார். பேராசிரியர் D.J.சோமசுந்தரம் அவர்களது மேலான வழி காட்டலில் சாந்திகத்தில் பயிற்றப்பட்ட பல உளவளத்துணை அணியினருக்கும் G.T.Z இனால் பயிற்றப்பட்ட சுமார் 150 உளவளத்துணை ஆசிரியர்களுக்கும் 1500க்கு மேற்பட்ட நட்புத வியாளர்களுக்கும் பிரதம பயிற்றுனராகப் பணியாற்றியுள்ளார். G.T.Z., SCSL, Danish Red Cross, போன்ற அரசு சார்பற்ற நிறுவனங் களோடிணைந்து, துன்புற்ற மக்களின் துயர் துடைத்தார். இத்துறைசார்ந்த மேலைநாட்டு வல்லுநர்களின் வருகையின் போது, அவர்களின் கருத்தரங்குகளில் கலந்து கொண்டார். மனவடுவுக்குரிய விசேட சிகிச்சை முறையை இத்தாலி நாட்டுக்குச் சென்று கற்றுக் கொண்டார். தொடர்ந்தும் இத்துறை சார்ந்து கற்று வருகிறார்.

**உள வளத்துறை நூல்கள் :**

எங்கே நிம்மதி (பொது மக்களுக்காக)
மனச் சோர்வு (உளவளத்துறையினருக்கு)

**உளவளத்துறை சார்ந்த துணை நூல்கள்**

"சிறுவர் உள நலம்" - (பேராசிரியர் D.J.சோமசுந்தரம் உளவள மருத்துவ நிபுணர் சிவயோகன் ஆகியோருடன் இணைந்து)

"மகிழ்வுடன் வாழ்தல்" - (பேராசிரியரோடு
"சின்னச் சின்னப் பிள்ளைகள்" இணைந்த பதிப்பாசிரியராக)

"உள்ளக் கமலம்" -
'சுனாமியில் சிதறிய சித்திரங்கள்' -
'முற்றத்தில் சிந்திய முத்துக்கள்' -
(உளவளத்துறை ஆசிரியர்களோடு இணைந்து பிரதம ஆசிரியராக)

கால் நூற்றாண்டைக் கடந்து போர்ச் சூழலில் வாழும் பெரியோரும் சிறுவர்களும் உளத் தாக்கத்திற்கு உள்ளாகி இருக்கும் நிலையில், அவரால் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் பெரும் ஆதார சுருதிகளாகின்றன.

உளவளத்துறையில் வெளிப்பாட்டுச் சிகிச்சை முறை (Expressive therapy) பயன்படுத்தப் படுகின்றது. அங்கு பல்வேறு கலைகளைப் பயன்படுத்த முடியும். நாடக சிகிச்சையில், உளமறிநாடகம், கலந்துரையாடல் அரங்கு, படிம அரங்கு, மந்திரக் கடை ஆகியவற்றை உளவளத்துணையாளருக்குப் பயிற்றுவித்துள்ளார். அவரது நாடகத்துறை ஆர்வம் இதற்குக் கைகொடுத்துள்ளது. ஓவியச் சிகிச்சை முறையையும் வெளிநாட்டுப் பெண் பயிற்சியாளர் ஒருவரிடம் சாந்திகத்தில் கற்றுள்ளார். இது சிறுவர் உளப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பெரிதும் உதவுகிறது.

இத்துறை சார்ந்த நூலறிவோடு, வடபுலத்தில் பெற்ற பட்டறிவும் இவரைக் கூர்மைப்படுத்தி யுள்ளன. சனநெருக்கடி, இட நெருக்கடி மட்டுமன்றி கொழும்பில் மன நெருக்கடியும் அதிகம். வெளிப்படாது புரையோடியுள்ள மனப்புண்களோடு வாழ்பவர்கள் அநேகம். அவர்களுக்கெல்லாம் கோகிலா ஒரு அருமருந்து. அத்தகையோர் நாள்தோறும் அவரைச் சந்திக்கின்றனர். அரசபணியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளதால் உளவளத் துறை நாடிகளுக்கு நேர்முகமாக உதவ முடிகின்றது. 70, பசல்ஸ்லேன், வெள்ள வத்தையில் அவரை அணுகலாம். அவரது இச் சேவை காலத்தின் தேவை.

**பேச்சுவன்மை :-** கேட்போரைப் பிணிக்கும் வகையில் உரையாற்றும் ஆற்றல் பள்ளிப் பருவத்தில் இருந்தே இணைந்து வளர்ந்தது. அகில இலங்கை திருக்குறள் மனனப் போட்டியில் ஏழு வயதிலேயே பரிசைத் தட்டிக் கொண்டமை முதல் பேச்சுப் போட்டிகளில் பரிசைக் குவித்துக் கொண்டவர். அவரது பேச்சால் கலை விழாக்களும், கருத்தரங்குகளும், மகாநாடுகளும் சிறப்புப் பெற்றன எனலாம்.

யாழ் மகளிர் சார்பாக சீனாவின் தலைநகர் பீஜிங்கில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் (1995) கலந்து கொண்டார். இங்கிலாந்து ஒக்ஸ்பேர்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரில் 2002ல் நடந்த உலக மாணவர்களின் விழுமியங்கள் தொடர்பான மகாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புப் பெற்றார்.

**ஊடகத்துறை** :- பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி என்பவற்றிலும் இவரது பங்களிப்புண்டு. அவரது கருத்துரைகளும் நேர்காணல்களும் பல இடம் பெற்றுள்ளன. இவர் இங்கிலாந்து சென்ற போது B.B.C. தமிழோசை இவரது நேர்காணலை ஒலிப்பரப்பியது. இலங்கை வானொலி, சக்தி போன்றவையும் ஒலிபரப்பியுள்ளன. சக்தி தொலைக் காட்சியில் நேர்காணல் ஒளிப்பரப் பாகியுள்ளது. இப்பொழுது காலை புத்துணர்ச்சி நேரத்தில் இவரது உரை இடம் பெறுகின்றது. ஆன்மீகமும் உளவியலும் கலந்த அவரது கருத்துரைகள் காலைக் கதிரவனோடு சேர்ந்து உள்ளங்களுக்கு ஒளி தருகின்றன. அறுபதிற்கு மேற்பட்ட உரைகளை சக்தியில் நிகழ்த்தியுள்ளார்.

வாழ்க்கை அனுபவங்களை நேர்மையுடன் சித்தரிக்கும் கோகிலா என்ற தலைப்போடு 17.06.1979ல் ஈழநாடு பத்திரிகையில் நேர்காணல் பிரசுரமாகியது. பின் பல பத்திரிகைகளில், பேட்டிகள் வெளிவந்துள்ளன. தினக்குரல், வீரகேசரி ஆகியவை 2007 ஞாயிறு மலரில் பிரசுரித்தன. 'எழுத்தாளர்கள் மனித ஆளுமையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள்' என்ற தலைப்பில் கனடாவில் இருந்து வெளிவரும் வைகறை இவரது பேட்டியை வெளியிட்டிருந்தது.

**விமர்சனம்** :- நூல்கள் பலவற்றை விமர்சனம் செய்துள்ளார். 1987ல் நெல்லை க.பேரனின் "சத்தியங்கள்" சிறுகதைத் தொகுதி - முதலாவது விமர்சனம். 2008 - இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதரசம் தொகுதி இவ்வருடம் செய்த விமர்சனம். இடையில் ஏராளமான நூல்களுக்கு விமர்சனம் செய்துள்ளார்.

நூலுருப் பெறாதவை. 1980 - இருளில் ஓர் மின்மினி
(மித்திரன்)
(குறுநாவல்கள்) 1980 - நிர்ப்பந்தங்கள் (ஈழநாடு)
1987 - வைகறை உணர்வுகள் (முரசொலி)
- எட்டுப் பெண் எழுத்தாளர்களோடு தானும் சேர்ந்து எழுதிய 'திருப்பங்கள்' போன்றவை. சிவத்தமிழ்ச் செல்வி, அன்னை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மறைந்த துயரத்தில் ஆழ்ந்த போது அன்னாரைப் பற்றிக் கோகிலா கட்டுரை எழுதியுள்ளார் என்பது நினைவில் வந்தது. அன்னையின் தலைமைத்துவம் பற்றிய 'தங்கத்தலைவி' என்ற அந்நூல் பலருக்கும் வழி காட்டியாக அமையும்.

திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் எழுத்துலகப் பெயராக நிலைத்தது கோகிலா மகேந்திரன் என்பதாகும். விழி, விழிசைக்குயில், பசுந்தி என்ற புனை பெயர்களிலும் எழுதியுள்ளார்.

அவர் தான் தடம் பதித்த துறை சார்ந்த நூல்களாக மொத்தம் 12 நூல்களை வெளியிட்டுள்ளார். ஏனையவர்களோடு இணைந்து வெளியிட்டவை ஏழு நூல்கள். எழுத்துத் துறை மட்டுமன்றிக் கல்வி, இலக்கியம், நாடகம், உளவளத்துறைகள் மூலம் அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் அனைத்துமே மக்கள் மனத்தின் மாசகற்றி மனவளம் சேர்ப்பன.

அவருடைய வளர்ச்சிக்குத் தோள் கொடுத்த திரு.மகேந்திராஜா அவர்கள் பாராட்டுக்குரியவர். 'மகன் பிரவீணன் எனது இதயத்திற்குச் சலங்கை கட்டியவன். எனது செயற்பாடுகள் அனைத்திற்கும் மிக நேர்மையான விமர்சகன். அவனது வருகையின் பின்னரே எனது உயிர்ப்பூ விரிந்து மணம் பரப்பத் தொடங்கியது" என்று கோகிலா கூறியிருப்பது உள்ளத்தைத் தொடுகிறது. அவர்களது துணையோடும் ஆண்டவன் அருளோடும் அந்தக் கோகிலத்தின் குரல் உலகிற்கு இனிமை சேர்க்கட்டும்.

இணைச் செயலாளர் கலை இலக்கியக்களம்
ஓய்வு நிலை ஆசிரியை. (2008)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவில் இருந்து ஒரு கருத்து. . . . .
எஸ்.ஸ்ரீரஞ்சினி

# யாதுமாகி. . . .

'யாதுமாகி' என்ற சொல்லுக்கும் கோகிலா அக்காவுக்கும் எனக்கும் உள்ள உறவுக்கும் அன்று நிறையத் தொடர்பு இருந்தது.

மகாஜனாவில் அடிக்கடி நேரசூசிகையும் ஆசிரியர்களும் மாற்றப்பட்டுக் கொண்டிருந்த ஒரு காலத்தில், என் கல்வி வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த ஒரு சமயத்தில் கோகிலா ரீச்சர் எனது ரீயூசன் ரீச்சராக அப்பாவால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். ஒரு கதவு மூடினால் இன்னொன்று திறக்கும் என்ற நம்பிக்கைக்குச் சான்றாக என் வாழ்வின் துக்கமான சில அத்தியாயங்களில் ஒன்றான அந்த அத்தி யாயத்தில் வசந்தகாலத் தென்றலாய் வந்தது அந்த உறவு.

நானும் எனது தங்கை சாந்தியும் எங்கள் வீட்டிலிருந்து வெளிக்கிட்டு குருநாதர் கோவிலடி, விழிசிட்டி சங்கக்கடை எல்லாம் தாண்டி அவவின் வீட்டிற்கு ஒரு நீண்ட நடை நடந்து படிக்கப் போன அந்தக் காலம் இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கிறது.

அவ அறிமுகமாகி கொஞ்ச நாட்களுக்குள் ளேயே அவவின் மேல் நிறைந்த அபிமானமும் அன்பும் மதிப்பும் என் மனதில் வளர்ந்து விட்ட கதையை ஒரு நாள் அம்மா அவவிடம் பகிர்ந்து கொள்ள அந்த நிகழ்வு கோகிலா ரீச்சர், கோகிலா அக்காவாக மாறும் ஒரு மனதை வருடும் உறவின் ஆரம்பத்துக்கு வித்திட்டது.

பின்னர் கோகிலா அக்கா காசு வாங்காமல் பாடம் சொல்லித் தந்தது மட்டுமன்றி Readers Digest போன்ற ஆங்கிலப் புத்தகங்களையும் அறிமுகம் செய்து என் ஆங்கில அறிவுக்கும் பொது அறிவுக்கும் ஆழமாகவே வித்திட்டா. அது மட்டுமன்றி இலக்கியத்திலும் எனது ஈடுபாடு வளர அவவின் உறவு மிக உதவி செய்தது. ஈழநாடு பத்திரிகையில் கோகிலா அக்கா உட்பட பிரபல்யமான ஐந்து பேர் எழுதிய குறு நாவலில் எனக்கும் எழுதச் சந்தர்ப்பம் தந்து என் சுயமதிப்பை உயர்த்தி விட்டதுடன் இலக்கிய உலகில் காலடி எடுத்து வைக்கவும் அவவழி சமைத்து விட்டதை நான் என்றுமே மறக்க முடியாது.

பின்னர் பிரவீணன் பிறந்த போது கோகிலா அக்காவின் ரீயூசன் வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த என்னையும் ஒரு ஊதியம் பெறும் ஆசிரியை ஆக்கி கற்பித்தல் பகுதியில் எனது ஆர்வத்தை எனக்கு இனம் காட்டி விட்ட பெருமையும் அவவையே சாரும். அந்த அனுபவம் பல்கலைக்கழகத்துக்கு போகும் வரை வீட்டில் காத்திருந்த காலத்தில் கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையிலும் வசாவிளான் மத்திய கல்லூரியிலும் வசதிக்கட்டண ஆசிரியையாக வேலை செய்ய முன் அனுபவத்தைத் தந்ததுடன் தொடர்ந்து கொள்ளுப்பிட்டி மெதடிஸ்ற் கல்லூரியிலும் ஆசிரியை வேலையைப் பெற்றுக் கொள்ள உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் இருந்த போது அங்கு இருந்த விஜேந்திரா போன்ற ஒரு சிலருக்கு கோகிலா அக்காவின் முரண்பாடுகளின் அறுவடை என்ற சிறுகதைத் தொகுதியை அறிமுகம் செய்தேன். பின்னர் அவவின் அந்தச் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா கொழும்பில் நடந்த போது அதில் கலந்து கொண்ட விஜேந்திராவுக்கும் எனக்கும் இடையில் நிகழ்ந்த அந்தச் சந்திப்பு எங்கள் திருமணத்துக்கு அச்சாரம் இட்டது.

இப்படியாக என் வாழ்வின் பல பகுதிகளில் இணைந்துள்ள கோகிலா அக்கா எனக்கு சீர்மியராகவும் இருந்திருகின்றா. தற்போது சீர்மியருக்குரிய பயிற்சியைப் பெற்று சீர்மியராக தொண்டாற்றும் அவவை நல்லதொரு மன ஆற்றுப்படுத்துனராக முப்பத்து நான்கு வருடங்களின் முன்பே நான் பார்த்திருக்கிறேன். பல்கலைக் கழகத்தில் இருந்த காலங்களில் கூட விடுமுறைக்கு வீட்டுக்குப் போகும் போது அவவிடம் போய் குறைந்தது ஒரு மணி நேரமாவது கதைக்க நான் தவறுவதில்லை.

நாள் முழுக்க உணவு கிடையாமல் மிகவும் பசியுடன் இருந்து விட்டு சாப்பிடுபவருக்கு கிடைக்கும் நிறைவுக்கு ஒத்த நிறைவைத் தரும் கதைகளை எழுதும் பிரபலமான எழுத்தாளர் கோகிலா மகேந்திரனை எனக்குப் பழக்கமுண்டு என்ற நினைவே இனிப்பாக உள்ளது. அவ வெறுமனே ஒரு நல்ல எழுத்தாளர் மட்டுமல்ல, நல்ல கொள்கைகளும் வாழ்க்கைப் பெறு மானங்களும் கொண்ட ஒரு நல்ல மனிதப் பிறவியும் கூட என்பது அவவுடன் பழகிய அனைவருக்கும் தெரிந்த ஒரு உண்மை தான்.

எனது பதின்ம வயதுகளில் நல்லதொரு வழிகாட்டியாக, என் நலனில் அக்கறை கொண்ட சகோதரியாக என் மனதில் நிறைந்து எனக்கு யாதுமாகி நின்ற கோகிலா அக்காவின் மணிவிழா மலரில் என் மனவுணர்வுகளை பங்கிடச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு நான் மிகவும் மகிழ்ச் சியடைகிறேன். அவ மேலும் பல வருடங்கள் வாழ்ந்து பலரின் வாழ்வில் ஒளியூட்டவேண்டும் என இறைவனை மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.

(2010)

*****

## பரிசுகள், பாராட்டுகள்

13. இலங்கைப் பல்கலைக்கழகம் – பேராதனை – தமிழ்ச் சங்கம் வழங்கிய சிறந்த நடிகை விருது – 1973
14. தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்த நாள் அறநிதியம் நடத்திய சைவ ஆசிரியர்களுக்கான பேச்சுப்போட்டி – பெண்கள் பிரிவு – 1ம் பரிசு – 6.1.92
15. இலங்கைத் தமிழ் இலக்கியத்திற்கு அரும்பணி ஆற்றியமைக்கான கொடகே தேசிய விருது – 2009

வேறு சில பரிசுகள்

1. சுடர் பரிசுக் கதை – 1979
   "மனித சொரூபங்கள்"
2. சுடர் பரிசுக் கதை – 1980
   "குரூர ரசனைகள்"
3. பலாலி ஆசிரியர் கலாசாலை – வேகநடைப் போட்டிப் பரிசு – 1981

*****



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் கூற விரும்பாத சீர்மிய நாடி ஒருவரிடமிருந்து

## விண்ணைக் கவரும் நட்சத்திரம்

கண்ணைக் கவரும் நகைகள் கண்டேன்
பெண்ணைக் கவரும் பூக்கள் கண்டேன்
விண்ணைக் கவரும் நட்சத்திரங்களைக் கண்டேன்
என்னைக் கவர்ந்த ஒருவரைக் கண்டேன்
அவரின் பெயரில் அன்பைக் கண்டேன்
அவரின் நடையில் நளினம் கண்டேன்
அவரின் கண்ணில் என்னைக் கண்டேன்

அன்பின் எழுத்து 3
பாசத்தின் எழுத்து 3
பண்பின் எழுத்து 3
இவையனைத்தையும் இந்த 3 எழுத்துப்
பெயரைக் கொண்ட
கோகிலா மெடத்திடம் பார்த்தேன்.

********************************************************

### பரிசுகள், பாராட்டுகள்

வேறு சில பரிசுகள்

4. சுடர் மாசிகை அகில இலங்கை ரீதியல் நடத்திய சிறுகதைப் போட்டிப் பரிசு "முரண்பாடுகளின் அறுவடை" – 1980
5. நீர்ப்பாசனத் திணைக்களம் நடத்திய சிறுகதைப் போட்டிப் பரிசு – 1985 "பட்டங்கள் மீண்டும் பறக்கும்"
6. நோர்வே தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டிப் பரிசு – சர்வதேசபட்டம் – 1986

********************************************************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் பெருங்கோயில் அணிந்துரையில். . .
பேராசிரியர்.சபா.ஜெயராசா

# தனித்துவமானவர்

சீர்மிய உளவியலையும் ஆக்க மலர்ச்சிச் சிந்தனைகளையும் ஒன்றிணைத்துத் தமிழிலே வளமான எழுத்தாக்கங்களைத் தரவல்ல ஒரு சிலரில் எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் தனித்துவமானவர். அவரது "உள்ளம் பெருங் கோயில்" என்ற படைப்பு, தமிழின் சீர்மிய இலக்கிய ஆக்கத்தை மேலும் வளப்படுத்தும் புதுவரவாகின்றது.

ஆழ்ந்தும் நுண்ணிதாகியும் வளர்ந்து செல்லும் உளவியல் ஆய்வுகளின் விளைவீட்டும் முடிவுகளை எழுத்தாக்கங்கள் வழியே எடுத்துச் சென்று அறிபரவல் *(Dissemination of knowledge)* செய்தல் சமகாலச் சமூகத்தின் தேவையாகவும் எதிர்பார்ப்பாகவும் மேலெழுந்துள்ளன. அத்தகைய ஓர் அறிகைச் செயற்பாட்டை ஆழமாகவும், நிதானமாகவும், அறிவுசார்ந்த பக்குவத்துடனும், நூலாசிரியர் மேற்கொண்டுள்ளார்.

தனிமனித உளக்கோலங்களின் சமூகத் தளத்தையும் சமூக இருப்பையும் கண்டறிய முற்பட்டமை உளப் பிரச்சினைகளுக்குரிய விசை பற்றிய தரிசனத்திலே பன்மை நிலைகளை ஏற்படுத்தலாயிற்று. சமூகத்தின் பன்மை நிலைகள் பற்றிய கவன ஈர்ப்பு உலக உளவியற் புலத்திலே ஏற்படலாயிற்று. சமூகத்தின் பன்மை விசைகளும் அவற்றின் தாவல்களும் மனிதர் மீது ஏற்படுத்தும் தாக்கங்களும் பன்முகமான பிரச்சினைகளை வருவிக்கத் தொடங்கியுள்ளன.

உளப் பிரச்சினைகள் தொடர்பான அறிகைத் தெளிவை ஏற்படுத்துதல் நூலின் வினைபாட்டுப் பரிமாணமாகவுள்ளது. எமது சமூகத்தைப் பொறுத்தவரை சீர்மியம் தொடர்பான அறிகைத் தளத்திலே "தொடர்பாடல் இடைவெளிகள்" காணப்படுகின்றன. அந்நிலையிலே தெளிவான அறிகைப் புலக்காட்சியை ஏற்படுத்தும் புனைவுகளும் நூலிலே முன்னெடுக்கப்பட்டுள்ளன. "சீர்மியம் என்றால் என்ன?" என்பதும் 'சீர்மியர் எப்படி இருப்பார்?' என்பதும் மேற்கூறிய இடைவெளிகளின் தகர்ப்பாக அமைந்துள்ளது.

உளவியற் சிந்தனா கூடங்கள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய கருத்தியல் நிலைகள் தழுவிய சீர்மிய அணுகுமுறைகளையும், மீண்டெழு வதற்குரிய நுண் உபாயங்களையும், முன்வைத்துள்ளன. அறிகை உளவியல், நடத்தை உளவியல், மானிட உளவியல், உளப்பகுப்பு உளவியல் என்றவாறு அனைத்துச் சிந்தனா கூடங்களையும் உள்ளடக்கிய "உறுவிரிகை" (Comprehensive) அணுகுமுறை நூலாக்கத்திலே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனவெழுச்சி நுண்மதி பற்றிய ஆய்வுகளும் அதன் செயற்பாட்டுப் பயன்களும் அண்மைக் காலமாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. மனவெழுச்சிகளை நேர் வெளியீட்டு வாய்க் காற்படுத்தல், முகாமை செய்தல், ஆக்க மலர்ச்சிக்கு உட்படுத்துதல் முதலியவை சீர்மிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுப்பின் பரிமாணங்களாகின்றன. மன வெழுச்சிகளை 'மனச் சுகவனைதலுக்கு' உட்படுத்தும் கருத்துக்களின் களஞ்சியமாகவும் நூலாக்கம் எழுச்சி கொள்கின்றது.

நாளாந்த வாழ்வியலின் எதிர் அனுபவங் களோடும், பிரச்சினைகளோடும். அதிர்வுகளோடும், மனத்தாக்கங்களோடும் "ஊடு தலையீடு" (Intervention) செய்யும் நுட்பவியல்கள் நூற்பரப்பிலே பலநிலைகளில் இடம்பெற்றுள்ளன. தன்னிலை (Self) பற்றிய சமநிலையான வளர்ச்சிக்கும், சமூகப் புரிந்துணர்வுடன் இணைந்த முன்னேற்றத்துக்கும் தம்மைத் தாமே உளவளஞ் செய்து கொள்வதற்கும், நேர்நிலைக் கிளர்ந்தெழலை மேற்கொள்வதற்கும் வல்ல நூலாக்கமாக "உள்ளம் பெருங்கோயில்" அமைந்திருத்தல் மிகைப்படாத ஓர் உற்று நோக்கலாகும்.

01.12.2009 கொழும்பு

## பரிசுகள், பாராட்டுகள்

வேறு சில பரிசுகள்

7. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டியில் பரிசு – 1982
8. தாரகை நடத்திய சிறுகதைப் போட்டிப் பரிசு – 1984 "பரிகாரம் தேடும் பரிதாபங்கள்"
9. முரசொலி நடத்திய குறநாவல் போட்டியில் பரிசு "வைகறை உணர்வுகள்" – 1987
10. தகவம் பரிசு – "வாழ்வு ஒரு வலைப் பந்தாட்டம்" சிறுகதைக்கு – 1987
11. யாழ் இலக்கிய வட்டம் நடத்திய மதுரகவி. இ.நாகராஜன் நினைவுக் குழந்தைப் பாடல் தொகுப்புப் போட்டிப் பரிசு – 1989
12. மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம், பிரதேச சபைத் தலைவர்கள் இலக்கிய வித்தகர் பட்டப் பெற்றமைக்கான பாராட்டும் பரிசும் – 1991
13. மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் கௌரவம் – 1994
14. தெல்லிப்பழைக் கோட்டம் நடத்திய சர்வதேச ஆசிரியர் தினப்போட்டியில் கவிதைப் போட்டிப் பரிசு – 1997
15. கோலங்கள் ஐந்த என்ற நாடகநூல் தொகுப்புக்கான இலக்கியப் பேரவைச் சான்றிதழ் – 1994
16. குயில்கள் நாடகத் தொகுதிக்கு இலக்கியப் பேரவையின் சான்றிதழ் – 2000
17. தமிழ்க் கதைஞர் வட்டம் – நாலாம் காலாண்டுக்குரிய சிறப்புப் பரிசு – 2007 "கால் ஒப்பம்"
18. 'முகங்களும் மூடிகளும்' சிறுகதைத் தொகுதிக்கு இலக்கியப் பேரவைச் சான்றிதழ் – 2008
19. 'மனம் எனும் தோணி' – உளவியல் நூலுக்கு இலக்கியப் பேரவையின் சான்றிதழ் – 2009



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமெனும் தோணி நூலின் அணிந்துரையில். . . .
மன நல மருத்துவ நிபுணர் எஸ்.சிவதாஸ்

## காலத்தேவையை நிறைவு செய்பவர்

"மனமெனும் தோணி" என்ற இந்த நூல், உளவியல் பற்றிய அறிவு எம்மவர் மத்தியில் விரிவடைவதற்கு ஒரு பாதையைத் திறந்து விடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஒரு விஞ்ஞான ஆசிரியையாக வாழ்க்கையைத் தொடங்கி, அதே கல்விப் புலத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக உயர்ந்து தனது தொழிலில் உச்சநிலையை அடைந்த பெண்மணி என்ற அளவில் திருமதி.கோகிலா மகேந்திரன் குறிப் பிடத்தக்கவர். கல்வித்துறைக்குச் சமாந்தரமாக அவர் உளவியல் பற்றியும், உளவளத்துணை பற்றியும், மனவடுவுக்கு அளிக்கப்படும் உளச்சிகிச்சை பற்றியும் கற்று, அவற்றில் பயிற்சி பெற்றுத் தன்னை வளர்த்துக் கொண்டார் என்பது இங்கு முக்கியமான விடயம். உளவியல் பற்றிய விளக்கங்களைப் பலரும் பலவிதமாக முன்வைக்கும் இன்றைய சூழலில், தனது தொழில் துறையுடன் மட்டும் தன்னைச் சிறைப்படுத்திக் கொள்ளாமல் அதற்கு அப்பால் நெருக்கீடுகள் மிகுந்ததும் இடப்பெயர்வுகளை வாழ்வின் அங்கமாகக் கொண்டதுமான ஒரு சமூகத்தில் இருந்துகொண்டு உளவியலோடு தொடர்புபட்ட விடயங்களைக் கற்றுத் தேர்ச்சி பெறுவது மிக முக்கியமான விடயம்.

அதிலும் குறிப்பாகக் காலம் காலமாகப் பெண்ணை அடக்கி அடிமைப்படுத்தி வந்த ஒரு சமூகத்தில் பெண்ணியம் பற்றிய கருத்தியல் மாற்றத்தை ஏற்படுத்திய மூத்தபெண் என்ற அளவிலும் கோகிலா மகேந்திரன் முக்கியம் பெறுகிறார். பெண்ணியக் கருத்துக்களைத் தனது சிறுகதைகளிலும் நாவல்களிலும் வெளிப் படுத்துவதில் வெற்றி கண்டவர் அவர். பெண் எழுத்தாளராக அவர் செய்த ஆக்கங்கள் எமது சமூகத்தில் முக்கிய பங்கினை வகிக்கின்றன என்பது எல்லோரும் ஏற்றுக்கொண்ட விடயம். ஒரு எழுத்தாளர், நாடக கலாவித்தகர், ஆசிரியர், உளவள ஆலோசகர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் என்ற அவருடைய வெவ்வேறு ஆளுமைக் கூறுகள் இந்த நூலில் ஒருமைப்பட்டு மிகத்தெளிவாக வெளிப்பட்டிருப்பது இங்கு சிறப்பம்சமாகும்.

எமது சமூகம் எதிர்கொள்ளும் நெருக்கடி என்பது மிகப் பாரதூரமானது. தொடரும் வன்முறைகளும், மீளமுடியாத துயரமும் எம்முன் ஏற்படுத்திவிட்ட விகாரமான தன்மைகளும் பலப்பல. அத்துடன் பூகோள மயமாக்கல் தாக்கத்திலிருந்து எம்மால் விடுபட முடியாமல் போனதும் இன்றைய உலக வழக்கில் ஏற்புடையதே. எமது சமூகத்தில் குறிப்பிட்ட தொகையினர் புலம்பெயர்ந்து வேறு நாடுகளுக்குச் சென்றமையானது பூகோள மயமாக்கல் தொடர்பான தாக்கத்தினை விரைவு படுத்துவதாக அமைந்துவிட்டது.

எமது விழுமியங்கள் எல்லாம் மெல்ல மெல்ல மாறுபட்டுப் போவதற்குத் தொடர் அனர்த்தங்களும் பூகோளமயமாக்கல் விளைவுகளும் பிரதான காரணங்கள். அதே சமயத்தில், தொழில்நுட்ப வளர்ச்சியால் ஏனைய சமூகங்கள் பெற்ற நிலையை நாம் தொடர் அனர்த்தங்கள் காரணமாகப் பெறமுடியவில்லை என்று சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதிட்டாலும், திறந்த வெளிச்சிறை என வர்ணிக்கப்படுகின்ற யாழ்ப்பாணத்தில் கூட இன்னும் பலர் இந்தத் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன்களை அனுபவிக்கக் கூயடிதாய் இருப்பதற்குக் காரணமாக அமைந்தது புலப்பெயர்வு என்றால் மிகையாகாது.

அண்மையில் யாழ்ப்பாணத்து ஆசிரியர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு கலந்துரையாடலில் நான் அறிந்து கொண்ட விடயங்கள், அதிர்வைத் தருகின்றன. பல மாணவர்கள் ஒழுக்கக் குறைபாடு களுடனும், பிறழ்வு நடத்தைகளுடனும் இருப்பதாக ஆசிரியர்கள் குறிப்பிட்டார்கள். கையடக்கத் தொலைபேசியும் இன்ரநெட் வசதிகளும் அங்கு ஆரோக்கியமற்ற ஒரு சமூக மாற்றத்திற்கே வழிவிட்டிருப்பதாக அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எனவே, போர்ச்சூழல் தந்து கொண்டிருக்கும் அழிவுகள் மற்றும் புலம் பெயர்வு தந்த மாற்றங்கள் என இருவிதமான விரும்பத்தகாத மாற்றங்களை எமது சமூகம் பெறுவது கண்கூடு.

எனது முக்கியமான ஆதங்கம் என்னவென்றால், இந்த மாற்றங்களை நாம் மேலைத்தேய நாடுகளால் அறிமுகப்படுத்தப்பட்ட உளவியலுக் கூடாகப் புரிந்துகொள்ள முடியுமா என்பதே. நிச்சயமாக அதற்கான சாத்தியப்பாடுகள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவேதான் எமது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மேலைத்தேய உளவியலைக் கற்று அதனோடு தாங்கள் சமூக வாழ்வினூடு பெற்ற அறிவினையும் இணைத்து இவற்றைப் புரிந்து கொள்ளல் அவசியமாகிறது. இந்தவகையில் திருமதி.கோகிலா மகேந்தினின் இந்நூல் முக்கியத்துவம் பெறுவதாக நான் கருதுகிறேன். உளவியல் நூல்களை அழகாக மொழி பெயர்ப்பது மட்டும் எமது சமூகத்திற்கு உபயோகமாக அமைந்துவிடாது என்பது நாம் மனதில் கொள்ள வேண்டிய விடயமாகும்.

இன்னுமொரு விடயத்தையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தனியே ஒரு உளவளத்துணையாளராயும் உளச்சிகிச்சை யாளராயும் இருக்கும் ஒருவர் தன்னை நாடிவரும் துணை நாடிகளை மட்டுமே அறிந்து கொள்ளக்கூடியவராக இருப்பார். அத்தகையவர்கள் அதனை மட்டும் பொதுமைப்படுத்திப் பார்ப் பதற்குரிய ஏது நிலை அதிகம். அவர்கள் சமூகம் முழுமையாகப் பிறழ்வுற்றது என்றும் இனிச் சமூகம் மீள்வதற்கான சாத்தியங்கள் அற்றுப்போயுள் ளதாயும் பிதற்றுகின்றனர். இதுவும் ஒரு ஆபத்தான மறுபக்கம் என்றால் மிகையாகாது. எனவே, சமூகத்தில் ஒரு ஆசிரியராகவும் எழுத்தாளராகவும் மிளிருகின்ற கோகிலா மகேந்திரன் போன்றோர் இத்தகைய பிதற்றல்களில் இருந்த விடுபட்டுத் தங்களுடைய கருத்துக்களை முன்வைப்பது ஆரோக்கியமான விடயமாகும்.

சமூகச் சீர்கேடுகள், பிறழ்வுகள் என்பவற்றை மிகவும் பூதாகாரமாகக் காட்டுவதன் மூலம் நாம் எந்த முன்னேற்றத்தையும் அடைய முடியாது. அத்துடன், தனிப்பட்ட மனிதனை முதன்மைப் படுத்துகிற மேற்கத்திய உளவியலும் சிகிச்சை முறைகளும் எமக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உபயோகமாகும்.

சமூக இணைவினை முதன்மைப்படுத்துகின்ற எமது சமூக அமைப்பானது நெருக்கீடுகளைத் தாங்கி அதிர்வுகளை எல்லாம் எதிர்கொண்டு மீளக்கூடிய ஒரு பொறிமுறையாகும். ஆகவே தனிமனித சிகிச்சை முறைகளுக்கு அப்பால் சமூக மற்றும் குழுச்சிகிச்சை முறைகளை மேற்கொண்டே சிறந்ததோர் நிலையினை அடைய முடியும் என்பது கண்கூடு. இதற்காக நாம் எதனையும் பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியாது. நமக்குள்ளேயே அதற்கான தீர்வினைக் கண்டு அதனூடு நிமிர வேண்டியது காலத்தின் தேவையாகும்.

இத்தகைய ஒரு காலத்தேவையின் ஒரு சிறுபகுதியினை இந்நூல் நிறைவு செய்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். ஆனாலும் இவ்விடயங்கள் ஒரு சமூக இயக்கமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

எனவே, கோகிலா மகேந்திரன் போன்ற பன்முக ஆளமை கொண்டவர்களிடம் சமூகம் மேலும் பன்மடங்கு செயற்பாடுகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது.

12.07.2008 அங்கொடை மருத்துவமனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்து மாண்புறு மகளிர் நூலில் இருந்து. . . . . .
பத்மா சோமகாந்தன்

# பல்துறைப்படைப்பாளி

ஓர் இலக்கிய கர்த்தா தனது சொந்த ஆத்ம திருப்திக்காகவும், மன ஆறுதலுக்காகவும் மட்டுமே எழுதுபவரல்ல. அவ்வாறான நோக்கத்தில் எழுதுபவரென்றால் தான் எழுதுபவற்றைத் தாமும், அவசியமென்றால் தமது குடுத்பத்தைச் சேர்ந்தவர்களும் கையெழுத்துப் பிரதியாகவே படித்து விட்டு வீட்டுக்குள்ளேயே சுருட்டி வைத்துக் கொள்ளலாம். அதனை அச்சிட்டு, நூலுருவில் வாசகர்களிடம் பரவ விடவேண்டிய அவசியமில்லை. அச்சுருவில் வெளிவரும் இலக்கிய கர்த்தாவின் படைப்பு, வாசிப்பவர்களின் மனதில் புதிய சிந்தனைத் தோற்றம், மேம்பாட்டுக்கான எண்ணம், சமூகத் தீம்புகளை ஒழிப்பதற்கான தூண்டுதல் முதலியவற்றை ஏற்படுத்த வேண்டும். வாசித்து வெறுமனே தனக்குள் பொச்சடித்துச் சுவைக்கும் சரக்கல்ல இலக்கியம். சமுதாயத்திலுள்ள மக்களிடம் பலவித எண்ணங்கள், ஏக்கங்கள், அழுகைகள் பெருமூச்சுகள், ஆசைகள், அபிலாஷைகள், ஆனந்தங்கள், அனுபவங்கள், வாழ்க்கைப் போராட்டங்கள் என எத்தனை வகையான உணர்ச்சிகள் காணப்படுகின்றன. அவற்றையும், தனக்கேற்பட்ட பிரச்சினைகள், உணர்வுகள், அனுபவங்களையும், இலக்கிய கர்த்தா தனது படைப்புகளின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

"இன்று நாம் வாழும் சமுதாயத்தில் நாம் புன்னகையைக் காணவில்லை. துன்பமும், துயரமும், அழுகையும், ஏக்கமும், கண்ணீரும் கம்பலையுமாக நாம் வாழும் உலகம் இருக்கிறது. அசுர சக்திகளுக்கும் மனித சக்திகளுக்கும் நடக்கும் போரும் இன்று உலகையே கலங்க வைத்துக் கொண்டிருக்கின்றது. இப்போர்களினால், வாழ்வே ஒரு சோக கீதமாகி விட்டது. இப்போர்களை எவ்வளவ விரைவில் ஒழிக்க முடியுமோ, அவ்வளவு விரைவில் ஒழித்து விட வேண்டும். அதன் பின் போரொழிந்த சமத்துவ சமுதாயம் பிறக்கும். அதனைப் பூக்க வைக்கும் பணியில் எழுத்தாளன் முன்னோடியாகத் திகழ வேண்டும் என்ற கருத்தை உலகின் புகழ் பெற்ற பேனா மன்னர்கள் என் மனத்தில் தோற்றுவித்தனர்" (அ.ந.கந்தசாமி - 'மறுமலர்ச்சி' மே 1947).

எழுத்தாளனிடம் வாள் இல்லை. துப்பாக்கி இல்லை. எனினும் அவற்றிலும் பார்க்க வல்லமை கொண்ட பேனா இருக்கிறது. அதனைச் சமுதாய மேம்பாட்டுக்கெனச் சரியாகப் பயன்படுத்த வேண்டுமென்பதை, எழுத்தாளனின் சமுதாயக் கடமை எது என்பதை தெல்லிப்பழை மகாஜனா தந்த இலக்கிய மும்மணிகளில் ஒருவரான அ.ந.க. அறுபது ஆண்டுகளுக்கு முன்னரே தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.

எமது நாட்டிலுள்ள புகழ் பூத்த சில பெண் இலக்கியப் பிரம்மாக்களில் ஒருவராக விளங்கும் கோகிலா மகேந்திரனின் படைப்புகளில், அவர் வாழுகின்ற சமூகத்தில் அவர் கண்டு, கேட்டு, அனுபவித்த உணர்வுகள், பிரச்சினைகள், அவற்றின் தீர்வுக்கான திசை மார்க்கம் ஆழமாகப் பதியும் வகையில் சித்தரிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயத்தில் காணப்படும் ஏழ்மை, வறுமை, சாதிக் கொடுமை, ஏற்றத்தாழ்வுகள், சீதனப் பிரச்சினைகள், இராணுவ அட்டகாசம், இடப்பெயர்வு, அகதிவாழ்வு, ஆயுதக்கலாசாரம், பெண்களின் அசமத்துவ நிலை காரணமாக ஏற்படும் பாலியல் தொல்லை முதலியவற்றைத் தமது படைப்புகளின் பாத்திரங்களினூடாக சிறப்பாகச் சித்திரித்துள்ளார்.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்துக்கு ஏன் அப்படி ஒரு சக்தி இருக்கிறதோ தெரியாது! அந்த மண்ணின் செழிப்பினால் அங்கு உற்பத்தியாகும் உணவுப் பொருட்கள் மிகப் பிரசித்தமானவை. அதே போல அம் மண்ணில் உதித்த பல கலைஞர்களும், எழுத்தாளர்களும் புகழ் பூத்தவர்களாகத் திகழ்வது மட்டுமல்லாமல் இத்துறைகளுக்கு அளித்த பங்களிப்பு, ஈழத்துக்கலை இலக்கியங்களைச் செழிப்புறச் செய்துள்ளன. இலக்கியத்துறையில் பாவலர் துரையப்பா பிள்ளை (தெல்லிப்பழை) அ.ந.க., அ.செ.மு., மகாகவி ருத்ர மூர்த்தி (அளவெட்டி), கனக செந்திநாதன், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை (குரும்பசிட்டி) கலையருவி த.சண்முகசுந்தரம், கவிஞர் பண்டிதர். க.சச்சிதானந்தன் (மாவிட்டபுரம்) பண்ணிசைப் புலவர் செ.சிவசுப்பிரமணியம், அறிஞர் உமா மகேஸ்வரன் (விழிசிட்டி) பேராசிரியர் சு.வித்தியானந்தன் (வீமன் காமம்)... இன்னும்பலர். இவ்வாறான பல இலக்கியப் பெரியார்கள் வாழ்ந்த இலக்கியச் செழிப்பு மிக்க பகுதியின் ஒரு கிராமமாகிய தெல்லிப்பழை விழிசிட்டியில் புராண படன வித்தகர், உரையாசிரியர், பண்ணிசைப் புலவராக விளங்கிய செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும், செல்லமுத்து அம்மையாருக்கும் ஒரே வாரிசு கோகிலா. 17.11.1950 அன்று பிறந்தவர்.

கோகிலா தனது ஆரம்பக் கல்வியை அவரின் கிராமமாகிய விழிசிட்டியில் அமைந்த சிவஞான வித்தியாலயத்திலும் (அது இப்போது பன்னாலை சேர்.கனகசபை வித்தியாசாலை எனப் பெயரிடப் பட்டுள்ளது). இடைநிலைக் கல்வியிலிருந்து க.பொ.த.உயர்தரம் வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் கற்றவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத் துறையில் சில காலம் பயின்ற போதிலும், இடையில் அதனை விட்டு விட்டு, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞான ஆசிரியர் பயிற்சியையும், யாழ்ப்பாணம் சாந்திகத்தில் சீர்மியக் கல்வியையும் கற்றுத் தேறியவர். மேலும் வடஇலங்கைச் சங்கீத சபையின் 'நாடகமும் அரங்கியலும்' பாடத்தில் ஆசிரியர் தரத்தையும், தற்போது, இலங்கை பாடசாலை அதிபர்கள் தரம் 2 - 1ஐயும் எய்தியுள்ளார்.

மகாஜனக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே இலக்கியம், நடிப்பு, பேச்சு இவரிடம் துளிர்விடத் துவங்கின. அக்கல்லூரியின் சூழல் - அதனுடைய ராசி அப்படிப்பட்டது! பாவலர் துரையப்பா பிள்ளையினால் தொடங்கப்பட்டது அக்கல்லூரி. புகழ் மிக்க பல எழுத்தாளர்களையும் ஈழத்து இலக்கியத்துக்கு அளித்த கல்லூரி. அங்கு கால் வைத்த கோகிலா போன்ற இயல்பிலேயே ஆற்றலுள்ள மாணவியை, அது ஒளி விடும் வைரமாகப் பட்டை தீட்டியது ஆச்சரியப் படுவதற்குரியதல்ல. சிறந்த கவிஞரும் கலையுள்ளங் கொண்டவருமான கவிஞர். செ.கதிரேசர்பிள்ளை இவருக்கு தமிழாசிரியராக வந்தமைந்தார். இவரின் எழுத்தாற்றல், நடிப்பு, பேச்சுத் துறைகளுக்கு ஊக்கமளித்தார். ஆற்றலும் ஊக்கமும் மிகவே கோகிலா மாவட்ட மட்டத்தில் நடைபெற்ற பல போட்டிகளில் பங்கு பற்றி பரிசுகளையும் தட்டிக் கொண்டார். தான் அக்காலத்தில் எழுதிய சிறுகதைகளையும் நாவல்களையும் கையெழுத்துப் பிரதியாகப் பாடசாலை நண்பிகளுக்கு வாசிக்கக் கொடுத்து மகிழ்ந்தார்.

இலங்கை வானொலி ஏற்பாட்டில் நடைபெற்ற பொங்கல்விழா, மற்றும் மகாஜனக்கல்லூரிப் பொன்விழா நிகழ்ச்சிகளில், பரதம், கிராமிய நடனங்களில் பாடசாலை நாட்களில் பங்குபற்றிப் பாராட்டைப் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் இலக்கிய முயற்சிகள், மேடைப்பேச்சு, நாடக ஈடுபாடுகளைத் தட்டிக் கொடுத்தவர் இவரின் தந்தையார் அவர்கள். பக்தி இலக்கியத்திலும், புராணங்களிலும் மிகுந்த புலமை பெற்றிருந்தவர். சிறந்த பக்திக் கவிஞர், உரையாசிரியராக விளங்கியவர். நகுலகிரிப் புராண உரை, இறைமணிமாலை (இறைவன் மீது பாடப் பெற்ற கவிதை மலர்களின் தொகுதி) ஆகிய இருநூல்களின் ஆசிரியர்; நகுலகிரிப் புராண உரை நூல் சாகித்தியப் பரிசை வென்றது.

இசை நாடகங்களில் வல்லுனராக இவர் விளங்கியதாற் போலும், கோகிலாவிடம் நடிப்பாற்றலும் குடி கொண்டிருந்தது. இலங்கை கலைக்கழக நாடகப் போட்டியில், செ.கதிரேசர்பிள்ளை தயாரிப்பில் மேடையேறி முதற்பரிசைப் பெற்ற 'கோமகளும் குருமகளும்' நாடகத்தில் குருமகளாக நடித்துப் பாராட்டைப் பெற்றவர் கோகிலா. பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற காலத்தில் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் (1973) சிறந்த நடிகைக்குரிய பரிசு இவருக்குக் கிடைத்தது.

மென்மையான இதயம், பழகுவதற்கினிய சுபாவம், நேர்மை, கூர்மையான அவதானிப்பு, ஆழமான அறிவு, இரக்கம், தொண்டுள்ளம், அடக்கம், பணிவு, எளிமை, எடுத்ததைச் சாதிக்கும் மன உறுதி, விடாமுயற்சி, கருத்துக்களை அவை கசப்பாக இருந்த போதிலும் வெளியிடும் துணிச்சல், முதலிய பண்புகளைக் கொண்டவர் கோகிலா. வெற்றிப்படிகளில் ஏறிச்சென்று, உயர்ந்து நிற்பதற்கு இவையே காரணம். இப்போது அவர் பிரதி கல்விப்பணிப்பாளர் பதவியில் அமர்ந்திருக்கின்றார்.

சிறுகதை, நாவல், நாடகம், உளவியல், விமர்சனம், மேடைப்பேச்சு போன்ற பன்முகச் செயற்பாடுகளில் முத்திரை பதித்தவர் கோகிலா மகேந்திரன்.

"உணர்வுகளை நல்ல முறையில் வெளிப்படுத்தக் கலைகள் உதவுகின்றன. உணர்வுச் சமநிலையுள்ள உன்னத ஆளமையைப் பெறுவது கலைஞர்களுக்கு இலகுவாக இருக்கிறது. அதே வேளை, கலைகள் மானிட முன்னேற்றத்துக்கு வழிகாட்டுகின்றன. தனிமனித விருத்தியும், மானிட மேன்மையும் சாத்தியப் படுகின்றன" என்பது கோகிலாவின் ஆணித்தரமான அனுபவக் கருத்து.

குயில், ஈழநாடு, தொண்டன், வீரகேசரி, தினக்குரல், மல்லிகை, சுடர், முரசொலி, வெளிச்சம், வலம்புரி மற்றும் பல சஞ்சிகைகள், சிறப்பு மலர்களில் இவரின் ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள், விஞ்ஞானக் கதைகள், சில நாவல்கள் வெளிவந்துள்ளன.

முரசொலி குறுநாவல் போட்டி (1987) சுடர் சிறுகதைப் போட்டி (1980) நோர்வே தமிழ்ச் சங்கச் சிறுகதைப் போட்டி (1986) நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக்கழக சிறுகதைப் போட்டி (1985) இலக்கிய வட்டச் சிறுவர் கவிதைப் போட்டி (1989) என்பனவற்றில் இவரின் ஆக்கங்கள் பரிசுகளை வென்றுள்ளன.

பின்வரும் நாடகங்களை இவர் எழுதி நெறியாள்கை செய்து நாடகத்துறைக்குப் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தியுள்ளார்.

'பட்டர் பெருமான்' (1975) பொலிகண்டி அ.த.க பாடசாலையில்

'காலனை வென்ற காலன்' கீரிமலை நகுலேஸ்வர (நெறியாள்கை மட்டும்) (1980) ம.வி.யில்

'கோமகளும் குருமகளும்' 'தரிசனங்கள்' 'பட்டங்கள் மீண்டும் பறக்கும் முரண்பாடுகள் 1982 - 1992 மகாஜனக் கல்லூரியில் எழுதித் தயாரித்து நெறியாள்கை செய்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் நிலவு பொழியும்' (1991)
ஆசிரிய தினங்களுக்காக எழுதித் தயாரித்து
'மலையும் மடற்பனையும்' (1993)
நெறியாள்கை செய்து மேடை
'ஆசிரியவாண்மை' (1994) யேற்றப்பட்டவை.

'முரண்பாடுகள்' (1997)
தேசியக்கல்வி நிறுவனத்தின் முரண்பாட்டுத் தீர்வுக் கல்விச் செயலமர்வில்

முதுமை (1999) கைதடி முதியோர் இல்லத்தினரைப் பங்குபற்றச் செய்து மேடை ஏற்றிய நாடகம்.

'மல்லிகா மாப்பிள்ளை ஸ்டோர்ஸ்' (1998)
தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாசாலையில்
'பாலாய் நிலவு பொழியும்' (1999)
இணுவில் மத்திய கல்லூரி யில் கவிதை நாடகம்.

நாடக வளர்ச்சியின் வெட்டு (1998) ஆரிய திராவிட
முகத்தோற்றம் பாஷாபிவிருத்திச் சங்கப் பரிசளிப்பு விழாவில்

'இலக்குப்புள்ளி' (1999)
'கேள்விகளின் முழக்கம், (2002)
இராமநாதன் கல்லூரியில்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் கலாசாரப் பேரவையும் இணைந்து நடத்திய ஒரு வருட டிப்ளோமா பயிற்சியில் சேர்ந்து பேராசிரியர் சு.வித்தியானந்தன், பேராசிரியர் கா.சிவத்தம்பி, குழந்தை ம.சண்முகலிங்கம், கலாநிதி சி.மௌனகுரு, நடிகமணி.வி.வி.வைரமுத்து போன்ற நாடக விற்பன்னர்களிடம் நாடகம் பயின்ற கோகிலா மகேந்திரன், வட இலங்கைச் சங்கீத சபையின், நாடகமும் அரங்கியலும் பாடத்தின் பிரதம பரீட்சகர், மேற்படி பாடத்துக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான போதனாசிரியர், தொலைக்கல்விப் பயிற்சி மூலம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு நாடகத்துறை பகுதிநேரப் போதனாசிரியர் (1991 - 1993), யாழ்.பல்கலைக் கழக நுண்கலைத் துறை நாடக அரங்கியல் கற்கை நெறிக்கான வருகை விரிவுரையாளர் (1996 -1997), நாடகக் கலா வித்தகர் பட்டத்துக்கான வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையின் பிரதம பரீட்சகர் (1999 -2000), ஆசிரியர்களுக்கு சிறுவர் அரங்கு தொடர்பான பயிற்சியாளர் (2001), மெஜிக் ஷொப் நாடகச் சிகிச்சை முறையை அறிமுகப்படுத்தியவர் (2001) முதலிய பொறுப்பான பணிகளை நாடகத்துறை வளர்ச்சிக்காகப் புரிந்துள்ளார். இவரின் கலை இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வரும் இவரின் கணவர் திரு.கி.மகேந்திரராஜா, அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் அதிபராக விளங்குகிறார்; சிறந்த முற்போக்குச் சிந்தனையாளர், கோகிலா மகேந்திரன் எழுதியுள்ள ஆக்கங்களிற் பல நூலுருப் பெற்றுள்ளன.அவை:-

1. மனித சொரூபங்கள் - (சிறுகதைத் தொகுதி)
2. முரண்பாடுகளின் அறுவடைகள் - (சிறுகதைத் தொகுதி)
3. பிரசவங்கள் - (சிறுகதைத் தொகுதி)
4. வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் - (சிறுகதைத் தொகுதி)
5. அறிமுகவிழா - (இரத்தின வேலோனின் சில சிறுகதைகளுடன் வெளிவந்த சிறுகதைத் தொகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. துயிலும் ஒரு நாள் கலையும் - நாவல்

7. தூவானம் கவனம் - நாவல்

8. விஞ்ஞானக் கதைகள் - குழந்தை இலக்கியம்

9. குயில்கள் - நாடகங்களின் தொகுதி

10. எங்கே நிம்மதி? - உளவியல் கட்டுரைகள்

11. கிரேக்கத்தின் தொல்சீர் அரங்கு - நாடகக்கலை பற்றிய நூல்

12. தங்கத்தலைவி - அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் தலைமைத்துவம் பற்றிய நூல்

கலை இலக்கியம், கல்வித்துறைகளில் சுறுசுறுப்பாகச் செயலாற்றி அவற்றின் வளர்ச்சிக்குக் காத்திரமான பங்களிப்பைப் புரிந்து வரும் கோகிலா மகேந்திரன் (முழுப்பெயர் : திருமதி கோகிலாதேவி மகேந்திரராஜா) அவர்களின் பணிகளைப் பாராட்டி, பல நிறுவனங்கள் பட்டங்களும் விருதுகளும் வழங்கிக் கௌரவித்தன.

1. 'இலக்கிய வித்தகர்' பட்டமும் சாகித்திய மண்டலப் பரிசும் - 'பிரசவங்கள்' சிறுகதைத் தொகுதி(1986)

2. சாகித்திய மண்டலப் பரிசு - 'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் சிறுகதைத் தொகுதி (1997)

3. வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டுத்துறை அமைச்சின் விருது - வாழ்வு ஒரு வலைப் பந்தாட்டம். - சிறுகதைத் தொகுதிக்கு (1997)

4. 'நாடகக்கலா வித்தகர்' பட்டம் - வடஇலங்கைச் சங்கீத சபை (2002)

5. மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் பாராட்டுச் சான்றிதழ் - (1991)

6. நல்லாசான் விருது - பண்டத்தரிப்பு கல்விக்கோட்டம் (1991)

7. நல்லாசான் விருது - யாழ்.மாவட்ட கல்வித் திணைக்களம் (1991)

8. கோப்பாய்ப்பிரிவு செஞ்சிலுவைச் சங்கம். யாழ் மகளிர் அபிவிருத்தி நிலையப் பாராட்டுக்கள்.

இவரின் சிறுகதைகளைப் பற்றி ஆய்வு செய்து ஒருவர் யாழ.பல்கலைக்கழகத்தில் M.Phil பெற்றுள்ளார். மற்றொருவர் B.A.Hons (தமிழ்ச் சிறப்பு) இறுதியாண்டுக்குக் கோகிலா படைத்த பெண் பாத்திரங்களை ஆய்வு செய்துள்ளார். இவரின் நாடக முயற்சிகள் தொடர்பான ஆய்வை சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர் ஒருவர் மேற்கொண்டிருக்கிறார்.

சீனாவின் தலைநகரான பீஜிங் நகரில் நடைபெற்ற சர்வதேச மகளிர் மாநாடு (1995), இங்கிலாந்து ஒக்ஸ்போட் நகரில் நடந்த உலக மாணவர்களின் விழுமியங்கள் தொடர்பான மாநாடு (2002), இலங்கை கலைக்கழகத்தின் இலக்கிய மாநாடு (2002), பெண் எழுத்தாளர்களின் கருத்தரங்கு (கொழும்பு 1990) உட்பட இலக்கியம், நாடகம், உளவியல், கல்வி, ஆன்மிகம் தொடர்பான பல கருத்தரங்குகளில், இலக்கிய விழாக்களில் கலந்து கொண்டு உரையாற்றியுள்ள இவர், வானொலி, தொலைக்காட்சிகளிலும் உரை நிகழ்த்தி வருகிறார்.

"உலகம் பல விடயங்களில் முன்னேறி வருகிறது. அந்த ஓட்டத்தோடு ஓடுவதில் தப்பில்லை. ஆனால் நாம் செய்யும் விஷயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உடல், உள ஆரோக்கியத்துக்கும் மனித சமுதாய முன்னேற்றத்துக்கும் பொருத்தமானது தானா" என்பதை அறிந்து செயற்பட வேண்டும்.

"ஆண்கள் குடிக்கிறார்கள், நாமும் ஏன் குடிக்கக் கூடாது? ஆண்களுக்கு இரு பெண்களோடு தொடர்பு என்றால் நாம் ஏன் இரண்டு ஆண்களோடு தொடர்பு கொள்ளக்கூடாது?" என்று சிந்தித்தால் அழிவு எமக்காகக் காத்திருக்கும்.

"ஆண்கள் மனச்சோர்வுக்கு உட்படுவது குறைவாக இருக்கிறது. பெண்கள் ஏன் சலிப்புற்று விடுகிறார்கள்?" எனச் சிந்திப்பது ஆரோக்கிய மானது. ஆண்களின் நல்ல அம்சங்களை எடுத்துக் கொண்டு எமது ஆளுமையை விருத்தி செய்ய முயலுவது நன்மை பயக்கும் என்பது பண்பட்ட பல்துறைப் படைப்பாளியாக விளங்கும் திருமதி.கோகிலா மகேந்திரன், இளம் தலைமுறைப் பெண்களுக்கு கூறி வைக்கின்ற ஆலொசனைகள்; ஆணித்தரமான கருத்துக்கள்.

## As Resource Person in Seminars

1. Co-ordinator and chief resource person for the training of 150 master counselors and 1500 be frienders in NEP by BESP.
   28.10 2002 – 20.08.2006
2. Work shop on conceptualization of psychosocial programme at NIE – 6.8.2004 to 7.8.2004
3. Worked as co – facilitator, organizer and interpreter in the work shop in advanced training in Narrative exposure therapy by VIVO team, Italy.
   Sep 9-26-2003
   June 22- July 13-2004
   Aug 30 – Sep 16 - 2005
4. Worked as co-ordinator and chief resource person in the school based psycho social programme for children by Danish Red Cross Society .
   2004 - 2006
5. Worked as co-ordinator and chief resource person for the psycho social programme for the school community supported by SCF – Sri Lanka – 2006.
6. Worked as resource person for seminars conducted by WERC
   2008, 2009, 2010.

(Official Seminars Conducted for teachers ISAA and Principals not included)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டு விழாவில் ஆற்றப்பட்ட உரை

எண்பத்தியிரண்டின் இறுதிக் காலகட்டத்தில் மனித சொரூபங்கள் சிறுகதைத் தொகுதியைத் தந்த கோகிலா மகேந்திரன், குறுகிய கால இடைவெளிக்குள் தன் இரண்டாவது தொகுதியினை இன்று அறுவடையாக்குகிறார்.

சமுதாய எழுச்சிக்கும் சமுதாய அவலத் திற்கும், புதுமைக்கும் பழமைக்கும் இடையே காணப்படுகின்ற முரண்பாடுகளைக் கோடிட்டுத் தனி சமுதாயத்திற்கு இடையிலான முரண்பாடுகளை, சமூக முரண்பாடுகளை அழகாகச் சித்திரித்து; ஆசிரியையின் உள்ளக்கிடக்கையினை அழகாகப் படம்போட்டுக் காட்டியிருக்கும் நண்பர் 'பொன்னரி' அவர்களின் அருமையான அட்டைப் படத்தோடு வெளி வந்திருக்கும் பதினான்கு முரண்பாட்டுக் கதைகளின் அறுவடை இது.

எழுபத்து இரண்டிலிருந்து கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக ஆசிரியை எழுதிய பதினான்கு கதைகள் இந்தத் தொகுதியில் ஒழுங்கு படுத்தப்பட்டிருக்கின்றன. வெறுமனே கதைகளை ஒப்பு வித்துவிட்டு ஒதுங்கி விடும் தன்மை பிற்பட்ட காலங்களில் மறைந்து சமுதாயப் பிரச்சினைகளை, சமுதாய முரண்பாடுகளைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்திருப்பது கதைகளின் போக்கில் புலனாகிறது. இவரது பிற்பட்ட காலக் கதைகளைப் படிக்கும்போது, சமூக சொரூபங்களை உளவியல் ரீதியாக அணுகி அறிவியலுடன் மாறுதல்களான சிறுகதைகள் படைப்பதில் வேறுபட்டு நிற்பவர் கோகிலா மகேந்திரன் என்பது தெளிவாகப் புலனாகிறது.

ஆரம்ப காலங்களில் காதல் பிரச்சினைகளைத் தனது கருப்பொருளாக்கியவர் காலப் போக்கில்தான், சமுதாயத்தில் காணப்படுகின்ற பசிக் கொடுமையை, சாதிப்பிரச்சினைகளை, சீதனப் பிரச்சினைகளை, பெண்ணடிமைத் தனங்களைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித் திருக்கிறார். கதைகளில் வருணனைகளுக்கு இடமளிக்காது வேண்டிய இடங்களில் அறிவியலைப் புகுத்தி வெகு அற்புதமாகக் கதைகளை நகர்த்தியிருக்கிறார்.

மனித சொரூபங்கள் தொகுதியில் முரண் பாடுகளின் அறுவடை, ஓர் பிணத்தின் தரிசனம், குரூர ரசனைகள், எல்லைகள் என ஒரு நான்கைந்து கதைகளைத்தான் தரமானதாக நாம் தெரிவு செய்யக்கூடியதாக இருந்தது. ஆனால் இத் தொகுதியில் ஓரளவிற்கு ஏதோ வகையில் சகல கதைகளுமே மனதைத் தொடுமளவிற்கு இருந்தாலும்; இதுவும் சிரிப்புத்தான், நம்பிக்கைகள், நிமிரும் ஊனங்கள், ஓர் உள்ளம் பேசுகிறது, பரம்பரை இடைவெளிகள், உள்ளத்தால் அடிமைகள், முரண்பாடுகள் போன்றவை குறிப்பிட்டுக் கூறுமளவிற்கு மனநிறைவைத் தருகின்றன.

தனது முதலாவது தொகுதியைப் போல ஆசியுரை, அணிந்துரை, மதிப்புரை, பதிப்புரை என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம் அலட்டிக் கொள்ளாது இத்தொகுதியில் எடுத்த எடுப்பிலேயே சிறுகதைகளைத் தொகுத்துள்ளார்.

அன்பிற்கு முன்னால்

ஆசிரியையின் ஆரம்பகாலச் சிறுகதை இது. தனக்குப் பழக்கமான பல்கலைக் கழகத்தைக் களமாக்கிக் கால் ஊனமான ஒரு பெண்ணின் ஏக்கங்களை, எதிர்பார்ப்புகளை, கதையாக்கியிருக்கிறார். தனக்கு வாழ்வளிப்பவனும், தன்னைப் போல விதியின்ரை கைகளால் விளையாடப் பட்டவன், துன்பச் சூழலிலே சிக்கியிருக்கிறவன் என்பதை உணர்ந்து 'துன்பப்படுறவையளைப் புரிஞ்சு கொண்டு அவைக்கு உதவி செய்யும் ஆவலும் அன்புமாகிய பெரிய செல்வங்கள் உங்களிட்ட இருக்கே' என அவனுக்குத் தேறுதல் சொல்கிறாளே. . . அந்த இடத்தில். . . அந்தச் சாந்தியின் அங்கத்தில் ஓர் குறையிருந்தாலும் தரத்தில் குறையில்லை என்பது புலனாகிறது.

"நொண்டி எண்டு கேள்விப்பட்டாப் பிறகு அவளைப் பிடிக்கேல்லை! சொல்லிப் போட்டம். குழப்பலாந்தானே எண்டு அப்பா சொன்னார். நானும் அரை குறை மனத்தோடைதான் வந்தனான்." என்று மாப்பிள்ளை கூறும்போது. . . அந்தத் தங்க மாப்பிள்ளையின் தரம் குறைந்து காணப்பட்டாலும் கதையின் போக்குடனும் நோக்குடனும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அந்தக்குறை அவ்வளவாக எடுபடவில்லை.

ஆரம்பக் கதைதானே? இத்தொகுதியில் இது ஒரு சாதாரண கதைதான்.

துன்பங்கள் சாவதில்லை

ஒட்டி உலர்ந்து போன கண்கள்! கூனிப் போய்விட்ட உடம்பு! கிழவனின் தோற்றத்தைப் பார்த்தால் பெட்டி தூக்கிப் பிழைப்பவன் என்ற நம்பிக்கை யாருக்கும் வராது. வறியவன் என்றாலே கள்ளன் என்றும் நேர்மை நிதானம் அற்றவன் என்றும் அர்த்தம் செய்து கொள்கிற இந்தச் சமுதாயத்திலே எப்படியோ மும்மூன்றாக நாலு முறைகளில் பெட்டி காவியதில் கிழவனுக்கு ஆறு ரூபா கிடைக்கிறது. ஒரு ரூபாவுக்கு ஒரு றாத்தல் பாண் வாங்கிக் கொண்டால் (இது பத்து வருஷத்துக்கு முந்திய கதை) பேரப்பிள்ளைகள் இருவருக்கும் காலைச் சாப்பாட்டைச் சமாளித்துவிடலாம். மீதி ஐந்து ரூபா பருவம் அடைந்து விட்டபேத்திக்குச் சீதனம் கொடுப்பதற்காகச் சேர்க்கப்படும் உண்டியலுக்குத்தான். அவசர அவசரமாக அந்த நெரிசல் பஸ்ஸில் ஏறி ரிக்கற்றுக்காகப் பொக்கற்றுக்குள் கையை விடுகிறான் கிழவன். கிழவன் எதிர்பார்த்த அந்த நாணயம் அங்கில்லை. சத்தியம் தவறாத உழைப்பாளியின் சிறுசேமிப்பைக் கொள்ளையடித்து விட்டது இந்தச் சமூகம். சட்டென்று இறங்கி மெதுவாக இருந்திருந்து நடந்தே வீடு வந்து சேர்ந்தான் கிழவன். கதையின் முதலாம் அத்தியாயம் முடிகிறது.

வீடு சென்றபின்பு. . . .

பேரன் ஒரு கடதாசித்துண்டைக் கொண்டு வந்தான். அது. . . . யாருக்காக அந்தக் கிழவன் உடலையும் உள்ளத்தையும் வருத்திச் சேகரித்தானோ, அந்தப் பிள்ளையே நன்றி இல்லாமல் பக்கத்து வீட்டு மூர்த்தியுடன் ஓடிவிட்டாளாம் எனக் கதை இரண்டாம் அத்தியாயமாக நீளுகிறது. திரும்பத் திரும்ப. . . திரும்பத் திரும்ப. . . கிழவனின் காதுகளில் அது பேரொலி எழுப்ப இரத்தம் உறைகிறது. அழுகிப்போன சமுதாயத்திலே. . . அந்தக் கிழவனின் குரலை அனுதாபத்துடன் கேட்க ஆட்கள் இல்லை.

சமுதாயப் பார்வைமிக்க இந்தக் கதை தொகுதியில் ஒரு கனமான கதையாக மிகக் கச்சிதமாக அமைந்திருக்கிறது. இடிக்கு மேலிடியாக இரண்டு அத்தியாயங்களாக இந்தக் கதை இங்கு கூறப்பட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவும் சிரிப்புத்தான்

இரைப்பையின் தசைகள் சுருங்கும்போது அதனை மூளைக்கு எடுத்துச் செல்லும் நரம்புகளைப் பிடித்து வெட்டிவிட்டால் பசிவராதா ரீச்சர்? - நானும் தான் கோகிலா ரீச்சரைப் பார்த்துக் கேட்கிறேன்! சொல்லுங்கள் ரீச்சர்! அந்த நரம்பைத் தேடி வெட்டி விடலாமா?

இந்தக் கேள்விக்கு மட்டும் விடைகிடைத்து விட்டால். . . சமுதாயத்தில் பரந்த ஒரு பிரச்சினை. மிகவும் சுவையான கதையாக நகர்த்தியிருக்கிறார், ஆசிரியர். தனக்குப் பழகிவிட்ட அதே பள்ளிக் களத்தில் நின்று. . . பக்குவமாகக் கதையைத் தக்க பாத்திரங்களைக் கையாண்டு நெறிப்படுத் தியிருக்கிறார். தொகுதியில் குறிப்பிட்டுக் கூறக் கூடிய சகலரும் வாசித்தறிய வேண்டிய ஓர் கதை! கதையில் கதாசிரியையின் கற்பனாவாதத்தை விட உண்மைச் சம்பவங்களே நிறைந்து நின்று உயிர் கொடுக்கின்றன.

தலை முறைகள் முரண்படும் போது

ஒரு தாய்க்குப் பல பிள்ளைகள் இருக்கலாம். ஆனால் மனைவிக்கு ஒரேயொரு கணவன்தானே இருக்கிறான் என்று கூறும் மகனிற்கும், ஒரு மனுசனுக்குப் பல பெண்சாதிமார் கிடைக்கலாம். ஆனால் தாய் எப்பவும் ஒண்டுதான் என்று கூறும் கணவனுக்கும். . . . முரண்பாடு. . . இரு தலைமுறை கட்கிடையில் நின்று தத்தளிக்கும் ஒரு தாயின் கதை இது!

விரக்தி மிகுந்த ஒரு தெளிவும் துயரம் மிகுந்த ஒரு நிம்மதியும் அந்தத் தாய்மையை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விட்டிருப்பதை வாசகர்கள் வாசித்துத்தான் புரிய வேண்டும்.

நம்பிக்கைகள்

அப்பெண்டிக்ஸ் குத்தை செய்வினைக் குத்து என்று நம்பி சூனியக் காரச் சுப்பரைக் கூட்டிவந்து செய்வினை செய்தவனுக்கே திருப்புவதற்காக ஆட்டுக்கும் கோழிக்கும் என்று பணத்தைக் கொட்டி முடிவில் வெடிக்கிற நிலைக்கு வந்த பின்பு அறுவைச் சிகிச்சைக்குத் தயாராகும் எங்கடை தம்பரண்ணையின்ரை கதை. தொகுதியில் ஐந்தாவதாக இடம் பெற்ற நம்பிக்கைகள் கதை. ஆசிரியை பற்றிய ஒரு நம்பிக்கையை இக்கதை தருவது கதையின் படிப்பினையாலும், பாத்திர வார்ப்புகளாலுந்தான். குறிப்பிட்டுக் கூறக்கூடிய இன்னொரு கதை. 80 இல் மல்லிகையில் பிரசுரமானபோதே பலரையும் இது கவர்ந்திருந்தது.

நிமிரும் ஊனங்கள்

ஆசிரியை தன் இளமைக் கால வாழ்விற்குச் சற்று. . . எம்மை அழைத்துச் செல்கிறார், நிமிரும் ஊனங்கள் கதையில்! களம் ஏதோ. . . அன்பிற்கு முன்னால் கதையில் இடம் பெற்ற அதே கம்பஸ் களந்தான்.

பல்கலைக் கழகத்திற்கே உரித்தான சொற்றொடர்களோடு கதையை முடித்திருக்கிறார்.

செல்வமலர் என்ற பாத்திரம் மிகவும் எடுப்பாகவே விழுந்திருக்கிறது கதையில்.

செல்வமலர்! உன்னுடைய தோல் கறுப்பாயிருந்தாலும் உள்ளம் வெள்ளையாய் இருக்குது. பேச்சிலை ஊனம் இருந்தாலும் செயலிலை பெருந்தன்மை இருக்கு. ஆனால். . . நாங்கள் பல்கலைக் கழகம் வரை படிக்கும் அறிவு இருந்தும் கூட ஊன மனப் பான்மையை விட்டுவிட முடியாமல் சுத்திறமே. . . என இறுதியில் சாடுவது. . . கதைக்கு மிகவும் சுவை தருகிறது. சுற்றி வளைக்காது நேரடியாகச் சொல்லவந்ததைச் சொல்லிவிடும் தன்மை, கதாசிரியையின் நுண்மையான காட்சித்திறமை வாழ்க்கையைப் புரிந்து கொண்டவிதம், நடுநிலையாய் நின்று பொருளுணரும் பாங்கு யாவும் கதை முழுக்க விரவியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் உள்ளம் பேசுகிறது.

கடமை தவறாத டாக்டர் அவருக்கு ஒரு அப்பாவி மனைவி. அவர்களுக்கு ஒரே மகள்.

அவள் இப்ப அட்வான்ஸ் லெவல் படிக்கிறாள். ஒரு டொக்டரின்ரை பிள்ளை எண்டு என்ன காணி இருக்கோ, பூமி இருக்கோ, காசு இருக்கோ, நகை இருக்கோ? ஒண்டும் இல்லை. அந்த நேரம் ஒரு சதமும் சீதனம் வாங்காமல் டொக்டர் கலியாணம் செய்தார். பிறகும் அவர் ஒரு சதமும் சேகரிக்கவும் இல்லை.

ஆனால் இவரைப் போல இவற்றை தத்துவங்களுக்கமைய இன்னொருத்தன் வந்து அவரது பிள்ளையைக் கூட்டிக் கொண்டு போவன் எண்டதிலை என்ன நம்பிக்கை?

கேட்கப்பட வேண்டிய கேள்வி! அதனால். . . இவ்வளவு காலமாகக் கைநீட்டி ஒண்டும் வாங்காத டொக்டரின் அந்தப் பாமர மனைவி தன் மகளுக்காக. . . அன்பளிப்பு என்ற பெயரில் வரும் ஒரு குதிரைப்பவுணை லஞ்சமாக வாங்கக் கைநீட்டத் தடுமாறும் நிலை!

அந்த நேரம் பார்த்து டொக்டர் வந்திட்டார்! ஒரு நாளும் இந்த நேரத்திலை வராதவர் இண்டைக்கு ஏன் வந்தார்? மனைவியின் மனம் தடுமாறிப் போவதைப் பார்த்துக் கடவுள் தான் அனுப்பியிருக்க வேணும்.

வந்தவர்கள் கொண்டு வந்த அந்தக் குதிரைப் பவுணோடு திரும்பி விடுகிறார்கள். அவளுக்கு மனதுக்கை ஏதோ செய்யுது. சந்தோஷமா கவலையா, பெருமையா. . . . அது ஆற்றாமையா? கோகிலா மகேந்திரனின் குறிப்பிட்டுக் கூறக் கூடிய இன்னொரு கதை இது. எழுபதுகளில் எழுத ஆரம்பித்தாலும், எண்பதுகளின் ஆரம்பப்பகுதியில் தான் இவரது பெயர் இலக்கிய உலகில் அடிபட ஆரம்பித்தது. அதற்கு இப்பேர்ப்பட்ட கதைகள் தான் காரணமாய் இருக்குமோ?

வெறுமனே... பேச்சுத்தமிழில் மண்வாசனையுடன் கதையை நகர்த்தி இக்கதையில் வெற்றி கண்டுள்ளார்.

பூக்கள் நிறம் மாறுகின்றன

“சாத்திரியார்! உங்கடை மூத்த பெடியன் வெளிநாடு போனான். எப்பிடி இருக்கிறான்?”

“எட, இது தெரியாதே வாத்தியார்? அவன் அங்கை இஞ்சினியர் வேலை பாக்கிறான். கிட்டடியிலை தானே ஊருக்கு வந்து ஒரு லட்சம் ரூபா நன்கொடையோடை ஒரு பெரிய இடத்திலை பொம்பிளை எடுத்துக் கட்டிக் குடுத்து அனுப்பியிருக்கிறன்.” என்று சாத்திரியார் பெருமைப்பட்டுக் கொள்கிறார். ஆனால் வாத்தியார் விடுவதாக இல்லை.

அப்பிடியோ? அப்ப தம்பி எந்த வகையான எஞ்சினியர்? மெக்கானிக்கலா? எலெக்ரிக்கலா? சாத்திரியார் தான் சொல்கிறார். . .” அண்ட கிறவுண்ட் எஞ்சினியர் எண்டு சொல்லுறாங்கள்.”

“சாத்திரியர். . . அண்டக் கிறவுண்ட் எஞ்சினியர் எண்டால் என்னெண்டு தெரியுமே? சவக்கிடங்கு வெட்டிற தொழில். . .”

சாத்திரியாரின் முகம் இறுகிவிட்டது. சாத்திரியாரின் மௌனத்தைச் சாதகமாக்கி வாத்தியார் தொடர்கிறார்.

பனை சீவிற தொழில் செய்யிறவனை இஞ்சை இழிவாப்பாக்கிறியள். இழக்கமாகப் பழகிறியள். அங்கை சவக்கிடங்கு வெட்டுறவன் இங்கை வரேக்கை கோட்டும் சூட்டும் போட்டுக் கொண்டு லட்சக்கணக்கிலை பணமும் கொணந்திட்டா அவங்களுக்கு லட்சக் கணக்கிலை டொனேசனும் குடுக்கிறியள்.

கொள்கையிலையும் நெறியிலையும் உறுதி நல்லது தான். ஆனால். . . மனசரிலை உள்ள வெறுப்பு விருப்புகளிலை பிடிவாதம் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளி நாட்டிலை இருக்கிற ஏதோ நாட்டுப் பொம்பிளை வேறை நாடு, வேறை நிறம், வேறை இரத்தம், வேறை பாஷை, வேறை கடவுள். அவளை நீங்கள் உங்கடை மருமேள் எண்டு சந்தோஷமாச் சொல்லுறியள். இது உவள் உங்கடை மோள் கட்டின பொடியன் எங்கடை நாடு, எங்கடை இனம், எங்கடை மொழி, எங்கடை இரத்தம், வணங்கிறதும் ஒரே தெய்வம், இவனை உங்கடை மருமேன் எண்டு சொல்லக் கூச்சப்படுறியள். நாளைக்கு நீரோ உம்மடை மனுசியோ பாயிலை படுத்தாலும் வெளிநாட்டிலை இருக்கிற பிள்ளையாள் வராது. மருமக்கள் வராயினம், கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரக் கூடியவை. . . இதுகள் தான்!

கிடங்கு வெட்டிறதைவிட மரம் ஏறிறவேலை குறைவில்லை. பாசை தெரியாத மருமகளை விட. . அயிலிலை இருந்து உங்கடை சுகதுக்கங்களிலை கலந்து கொள்ளக்கூடிய மருமேன் குறைவில்லை.

சிறிது நேரச் சிந்தனையில் ஆழ்ந்த சாத்திரியார் திடீரென ஒரு முடிவுக்கு வந்தார்.

தடித்த மஞ்சள் நிறமாய் அரும்பியிருந்த கொன்றைப் பூக்கள் இப்போ மென் மஞ்சள் நிறத்துடன் சிரிக்கின்றன.

படிப்பினையான ஓர் கதை இது! ஆனால் நடைமுறையில் முரணானது தான்!

பரம்பரை இடைவெளிகள்

ஆசிரியைக்குக் கைவந்த பள்ளிக்களம் மீண்டும் பரம்பரை இடைவெளிகளில் வந்து மோதுகிறது. நவராத்திரிப் பூசைக் காலத்தில் நிவேதனப் பொருள்கள் தயாரிப்பதற்கு அழைக்கப்படாத கூட்டம். . . கிணற்றில் நீர் அள்ளித் தொட்டியில் நிரப்பிவிடுவதற்குத் தகுதியில்லாத கூட்டம். . . இன்று தங்கள் பிரதிநிதி வகுப்புக்கு மொனிட்டராக வரவேண்டும். நீதி கேட்கிறது. கடைசி வாங்கிலை இருந்தவை நெடுகவும் கடைசி வாங்கிலை இருக்கத் தேவையில்லை. அவையளும் முன்னுக்கு வரலாம். வரவேணும்! என நரைத்துப்போன சமூகத்திற்குப் பாடம் புகட்டும் ஓர் பள்ளிக்கதை. வெறுமனே முற்போக்கான பாத்திரத்தை வலிந்து வர வழைத்து உலவவிடாது, சமூகவியல் நீதியில் சிந்தித்துச் செயலாற்றி யிருக்கிறார் இந்த இளம் எழுத்தாளர்.

அர்ச்சிக்கப்படாத விக்கிரகங்கள்

அறிவியலைக் கதைகளுடன் புகுத்தித் தனக்கென ஒரு பாணியைக் கோகிலா மகேந்திரன் வகுத்திருப்பது அர்ச்சிக்கப்படாத விக்கிரகங்கள் கதையில் நன்குபுலனாகிறது.

போற்றப்படாத, புகழப்படாத, கணிக்கப்படாத, மதிக்கப்படாத, வளர்க்கப்படாத பல திறமைகள் எப்படியாக உள்ளுக்குள் அடைக்கப்படுகிறது என்பதை மிகவும் அற்புதமாக விளங்க வைக்கும் கதை.

உள்ளத்தால் அடிமைகள்

உண்மையில் இத் தொகுதியிலேயே என்னை மிகவும் கவர்ந்த கதை இது. "மாதர்தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்" என்று பாரதி அன்று பாடியதை நடை முறைப்படுத்தி நிற்கும் கதை.

தாய்மைப் பேறு என்ற பெரிய பொறுப்பைப் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் கடவுள் ஏன் அவர்களைப் பொறுப்பற்ற ஆண்களை நம்பி வாழும் அவல நிலைக்குக் கொண்டு வந்து வைத்திருக்கிறான்? இன்று பெண்கள் சிந்திக்க ஆரம்பித்து விட்டார்கள்.

பாரதி பாடிப்பாடி அலுத்து நூறு ஆண்டுகள் கழிந்த நிலையிலும் பெண்ணடிமைத்தனம் எமது நாட்டில் ஒரு அங்குலம் தானும் குறைந்து போகவில்லை என்பதைப் பற்றிக் கவலைப் படாதிருக்கலாம். ஆனால். . . அது இன்னோர் பிஞ்சின் உயிரை. . . பாதிக்கும் போது! கவலையற்றிருக்கப் பெண்கள் என்ன சடப் பொருள்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல கதைகளை எவரும் எழுதிவிடலாம். ஆனால் அவை சமூதாயத்திற்கு எந்த வகையில் உதவுகின்றன? எவ்வகையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன? என்பதைப் பற்றியே நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். இந்த வகையில் இந்தக் கதை ஆசிரியைக்கு மகத்தான வெற்றியைத் தேடித்தரும் என்பதே எனது நம்பிக்கை.

எப்படியாக மனித சொரூபங்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து இந்த முரண்பாடுகளின் அறுவடை நிகழ்கிறதோ அப்படியாக இந்த நூலின் குறைபாடுகளை நிவர்த்திக்க இன்னொரு சிறுகதைத் தொகுதியையும் ஆசிரியையிடமிருந்து எதிர் பார்த்துத்தான் ஆகவேண்டும்.

சிறுகதையுடன் மட்டும் நின்று விடாது - நாவல் இலக்கியத் துறையிலும் இவர் பங்களிப்புச் செலுத்த வேண்டும் என்று பகிரங்கமாக இந்த மேடையில் வேண்டிக் கொண்டு. . .

தனது நூலுக்கு அபிப்பிராயம் தருமாறு என்னை அழைத்த மதிப்பிற்குரிய சோதரி கோகிலா மகேந்திரனுக்கு என் அன்பைத் தெரிவித்து இதுவரை அமைதியாக இருந்து என் கருத்துக்களைக் கேட்ட உங்கள் அனைவருக்கும் நன்றி கூறி இத்துடன் எனது சிற்றுரையை நிறைவு செய்கிறேன். வணக்கம்.

25.2.1984

## Important Seminars in Sri Lanka

1. Training Programme for officers of the SLEAS conducted by ministry of Education, higher Education and NIE in Colombo
   16.3.1999 – 4.4.1999
2. Training work shop for master trainers on the trainer's manual Joyful learning by Ministry of Education, Cultural affairs, and sports, NEP. an GT2 – 24.01.2000 – 28.01.2000
3. Trauma and counseling work shop conducted by Dr.Rachel Tribe and Kenneth Fisher at shanthiham
   2.9.2001- 5.9.2001
4. National Integration Programme unit of University of Justice, Ethnic affairs, and national integration.
   i) Conflict resolution and negotiation work shop Nov. 11th – 14th – 2001 in Colombo
   ii) Truth and reconciliation commission work shop 2.11.2001 – 4.11.2001
5. Inter Faith Peace conference by JCPD, SLF with NPC.
   4.10.2001 – 16.12.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஞ்ஞானக் கதைகள் நூல் வெளிவந்த போது

இளம் உள்ளத்தே விஞ்ஞானம்
ஏற்கும் கருத்து எளிதாக
நுழையும் வடிவில் பொதிந்திந் நாள்
நூலொன்றியற்றி வெளியிட்டாய்
வளரும் பருவப் பிள்ளைகட்கு
வரமாய் வந்து வாய்த்ததிது
சுழலும் உலகின் சூக்குமங்கள்
தொடுமிந் நூலை வரவேற்போம்.

கவிஞர் சோ.ப

### Important Seminars in Sri Lanka

6. Work Shop on Development of Personal Resources conducted by Dr.Guus Vander Veer aided by Shanthiham.
   10.12.2001 – 16.12.2001
7. Seminar to Prepare a questionnaire to assess the mental health of children in Vanni area – Shanthiham hall. Dec. 2002
8. Work Shop on the preparation of a trainers manual on mental health of children in disadvantaged areas.
   Conducted by shanthiham on behalf of GT2 / BECA re and TIP / NEP. 14.6.2002 – 18.6.2002
9. Seminar on Sri Lanka Inter Communal dialogue and peace building conducted by Karuna Centre for peace building USA – 20.1.2003 – 23.1.2003.
10. Work Shop on speech and language therapy at shanthiham conducted by Ms.Saumya Rathnayake 14.06.2003 – 16.6.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

K.S.Sivakumaran's View

## KOHILA MAHENDRAN - bent on psychological realism

(Muranpadugalin Aruvadai - The harvest of Conflicts - : a collection of short stories by kohila Mahendran, published by Sivan Kalvi Nilayam, Viliciddy, Tellipalai, Feb 1984. Price : Rs.16/-)

Local Tamil writings in the 60s and 70s were mainly directed to awareness and consciousness of social themes with emphasis on realism. In other words, class and caste conflicts (please note not racial) were exposed and suggested solutions to problems were largely based on socialistic ideas.

A greater awareness of conditions and situations prevailing in society (not necessarily Tamilian society either here or in Tamilnadu) was felt. A national (not separatist Tamil nationalism but a Sri Lankan nationalism) and distinct characteristic of Tamil speaking people in this country was discovered and pronounced. That is to say, the life - styles of Sri Lankan Tamils (both of previous and recent Indian origins) and Muslims (for more than 98% of them, Tamil is their mother tongue) were different to the life - style and character of the Tamil - Speaking people in India - it was this point that was stressed and every writer thought of himself as a Sri Lankan. In fact all of them implied unity with the Sinhalese and thought of Sri Lanka as one country. Most writers spoke of inter-marriages between the major communities and brought in the human element in relationships. Characters in fiction included Sinhalese. The Tamil writers even stretched out their hands in bridging the gaps by translating Sinhala writers into Tamil, reporting Sinhala literary trends, even publishing the photographs of Sinhala artists and writers as cover pictures in little magazines. They even commented in films, plays produced in Sinhala both in Tamil and English. But this friendly attitude was not reciprocated enough. The Sinhala press and other media failed to appreciate this. Only bilingual observers had an opportunity to report this healthier atmosphere at least in passing, in the English press. But how many of us know the English Language? Ethnic conflicts and racial animosity are partly due to mis unders tandings. It is the business of the responsible people like the writers to educate the people in letting them know the correct position rather than indulge in sensationalism. The academics and bilingual people approach problems in a better



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

way because they can communicate with each other better. But people who know exclusively one language has also the drawback of not understanding people who know only one other language. Hence this communication barrier.

Talking of trends in local Tamil writing, we find that regional flavour (meaning special identities of people living in different parts of Tamil - speaking areas - as for instance, Amparai, Batticaloa, Trincomalee, Mullaitivu, Vavuniya, Kilinochchi, Mannar, Jaffna, Upcountry and colombo districts) surroundings and living are described. Different usage of language (dialects, nuances in speech patterns) are exploited. Social inequities are deplored. Oppression of all sorts are condemned and collective struggle to eradicate man's inhumanity to man is emphasized. These trends of the last three decades continue.

But since the latter part of the 70s, we also read writing of a different kind. Here psychological portrayals of charaters in a changing society are attempted. Understandably (if women are more emotional than men theory is correct?) most of these writers happen to be those of the fairer-sex. One of them is Kokila Mahendran.

Kohila Mahendran, a science graduate teaching at Mahajana College, Tellipalai in the north, is a mother who voices the woman's point of view via short stories written in Tamil. Her writing has appeared in local weeklies and little magazines and also broadcast over the Tamil service of the SLBC. Two collections of her stories have been published so far : "Manitha Sorupangal" (Human figures) and "Muranpadugalin Aruvadai" (Harvest of Conflicts).

In the latter collection there are 14 stories. Her statement and craft are so polished that one finds it refreshing to read her depiction of Jaffna society - particularly the relationship between people of different generations. As the title of the book indicates, she deftly brings out the conflicts in relationship based on psychological realism in larger cultural and social contexts.

Her stories are on the following lines :

physical handicaps and drawbacks in relationship both surmounted by real understanding and love;

responsibility in old age and considered rash act by young one in love;

feudal arrogance and loss of life due to dire poverty and also how the society takes everything in its stride and laughing it off; attitudes of different generations on property factor in conjugal relationship and the pathetic feelings of a woman caught in the conflict both as a wife and a mother;

residue of superstitious beliefs eating into the fabric of rural family life;

true affection between two woman undergraduates of different classes amidst precarious situation that affects their academic career.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

a deceived Muslim woman teacher stressing her viewpoint as a woman of integrity and with principles and refusing to accept the marriage offer made to her by the same person who deceived her only at a time when he needs her assistance to look after his sick wife and child;

Private and public attitudes in conjugal relationship upholding of values even during times of stress;

nemisis of a working Tamil woman on a person who demanded big dowry to marry her and the mental torture that the person undergoes;

caste and class consciousness and the facing up to changing realities;

rise of awakened generation segregated in class rooms because of caste differences;

conjugal relationship based on money capacity and the insensitivity of a husband who fails to appreciate the aesthetic talents of his wife;

even if women emancipate themselves through education and entry into the professions, they continue to be slaves at heart because of the social values placed on family bondage;

The dilemmas of teachers when confronting with the problems of controlling unruly students.

Kohila Mahendran's stories are readable and thought provoking, they are also appealing because of the psychological realism in them.

21, Murugan place,
Colombo - 06

**விஞ்ஞான ஆசிரியையாக இருந்த போது பெற்ற மாணவர்**
**அடைவு மட்டங்கள் சில**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

1984 – க.பொத.சா/த – விஞ்ஞானம்
வகுப்பில் இருந்த மாணவர் – 40
சதாரண சித்தி (S) – 05
விசேட சித்தி (C) – 30
அதிவிசேடசித்தி (D) – 05

1985 – க.பொத.சா/த – விஞ்ஞானம்
வகுப்பில் இருந்த மாணவர் – 41
சதாரண சித்தி (S) – 07
விசேட சித்தி (C) – 28
அதிவிசேடசித்தி (D) – 06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.12.1986

# ஒரு வாசகரின் கடிதம்

மதிப்புக்குரிய (கதா) ஆசிரியை அவர்களுக்கு,

என் முதல் வந்தனங்கள். தங்களின் கடிதம் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி. நான் கடிதம் எழுதி இவ்வளவு நாட்களாகியும் கடிதம் போடவில்லையே என்று நான் மனம் வருந்தவில்லை. காரணம் நீங்கள் ஒரு குடும்பப் பெண் என்ற முறையிலும் ஆசிரியை என்ற முறையிலும், அதைவிட ஒரு பிரபல எழுத்தாளர் என்ற வகையிலும் உங்களுக்கு எவ்வளவோ வேலைகள் இருக்கும். அதைவிட என் போன்ற எத்தனையோ பேர் கடிதம் எழுதுவார்கள். அவற்றுக் கெல்லாம் உங்களால் பதில் எழுதுவது கஷ்டம் என்பதை நான் நன்கு அறிவேன். இருந்தும் இவ்வளவு நாள் சென்றாலும், இத்தனை நெருக்கடியின் மத்தியிலும் என் கடிதத்தை ஞாபகத்தில் இருத்திக் கடிதம் போட்டதற்கு நான் மிகவும் கடமைப்பட்டவனாவேன்.

அதைவிட நீங்கள் எவ்வளவு பெரிய எழுத்தாளராயிருந்தும் எவ்வளவு எளிமையானவர் என்பதை நீங்கள் எழுதும் கடிதங்கள் சான்றாகச் சுட்டி நிற்கின்றன. பிரபலமான எழுத்தாளராகிய உங்களுடன் நான் கொண்டுள்ள இந்த இலக்கியத் தொடர்பை எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன். நீங்கள் எழுதிய முதல் கடிதமே என்னுள் அடங்கியிருந்த இலக்கிய உணர்வுகளைத் தட்டி எழுப்பியது. இதன் பயனாகச் சாதாரணமான கிராமத்து மட்டத்திலேயுள்ள கோயில்களிலே சாதிப்பூசல் எவ்வாறு தலைவிரித்தாடுகிறது என்பதை மையமாகக் கொண்டு, "மௌனத்தில் விளையாடும் மனச் சாட்சி" என்ற சிறுகதை ஒன்றை எழுதினேன். எனது நீண்ட நாள் ஆசை என்னுடைய முதல் சிறுகதை வீரகேசரியிலே இடம் பெறவேண்டும் என்பதே. இதனால் இக்கதையை 6.10.1986 அன்று பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தேன். ஆனால் இன்னமும் அச் சிறுகதை வெளிவரவில்லை என்பது மனவருத்தம். பின்பு சமகால நிகழ்வுகளின் அடிப்படையில் உருவான 'தியாகங்கள்' என்ற சிறுகதையை கடந்த 3ம் திகதி முரசொலி பத்திரிகைக்கு அனுப்பிவைத்துள்ளேன். என்னுடைய இந்தச் சிறுகதையாக்கத்திற்கு உற்சாகமூட்டியவர் நீங்கள்தான் என்று கருதுகிறேன்.

மேலும், தெல்லிப்பழையில் கலை இலக்கியக் களம் என்ற ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டதைப் பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டேன். ஆனால் அதில் அங்கத்தவராகச் சேர்வது பற்றிய விபரங்கள் எதுவும் எனக்குத் தெரியாது. அதில் சேர்வதற்குரிய விண்ணப்பப் படிவங்கள் மற்றும் விபரங்களை நீங்கள் அறியத்தந்தால் மிகவும் உதவியாக இருக்கும். இக்கடிதத்துடன் அங்கத்துவப் பணம் 10/= உம் இணைத்துள்ளேன். நீங்கள் எவ்வளவோ நெருக்கடிக்கிடையில் இருப்பவர்கள். நான் உங்களுடைய நெருக்கடியான வேலைகளுக்கிடையே வேலைப் பழுவைக் கூட்டுவதையிட்டுக் குறை எண்ண வேண்டாம். இக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதம் கிடைத்ததும் கலை இலக்கியக் களம் பற்றிய விபரங்களையும் விண்ணப்பப் படிவம் ஏதும் இருப்பின் அது பற்றிய விபரங்களையும் அறியத் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன். உங்களுடைய கலை இலக்கியக் களத்தில் என்னையும் ஒரு அங்கத்தவராக்கி இலக்கிய அறிவை வளர்த்துக் கொள்ள நீங்கள் எனக்குச் செய்யும் இவ்வுதவிக்கு நான் என்றும் உங்களுக்குக் கடப்பாடுடையவன்.

தற்காலத்தில் இந்திய எழுத்தாளர்கள் தங்களுடைய வருவாயைக் கருத்தில் கொண்டே நாவல்கள் படைக்கிறார்கள். அந்த வகையில் இலங்கையில் தங்களுடைய வருவாயைச் செலவழித்தே ஒரு நாவலை நூலுருப்பெற வைக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை நமது எழுத்தாளர்களுக்கு. நீங்கள் ஒரு பெண்ணாக இருந்தும் உங்களுடைய படைப்புக்களை நூலுருவில் கொண்டு வருவது ஒரு பெரும் சாதனை என்றே கருத வேண்டும். இந்த வெற்றியில் உங்கள் கணவருக்கும் பங்குண்டு. உங்களுடைய செயற்பாடுகளுக்கு இடம் கொடுத்துப் படைப்புகளை நூலுருவில் கொண்டுவருவதற்கு உறுதுணையாய் இருந்த உங்கள் கணவர் போற்றுதற்குரிய ஒருவர். இவ்வளவு நேரத்தையும் வீணடித்ததற்கு உங்களிடம் மன்னிப்புக் கோரி, உங்களுடைய படைப்புகளை மீண்டும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன்.

இவ்வண்ணம் அன்பின்
பொ.கோ.

---

**விஞ்ஞான ஆசிரியையாக இருந்த போது பெற்ற மாணவர்**

**அடைவு மட்டங்கள் சில**

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

1987 – க.பொத.சா/த – விஞ்ஞானம் (இந்திய இராணுவத் தொழிற் பாட்டுக் காலம்)
வகுப்பில் இருந்த மாணவர் – 45
சதாரண சித்தி (S) – 04
விசேட சித்தி (C) – 24
அதிவிசேடசித்தி (D) – 17

---

பாடசாலை மட்டப் போட்டிகளில் இருந்து தேசிய மட்டத்தில் அதி உயர் விருதுகளுக்கான போட்டிகள் வரை பல இடங்களில் நடுவர் பணி.

நடுவராகப் பணியாற்றிய துறைகள் – சிறுகதை, நாடகம், நாடகப் பிரதியாக்கம், பேச்சு, பட்டிமன்றம், மெய்வல்லுனர் போட்டிகள், விஞ்ஞானப் பொருட்காட்சி, விஞ்ஞான வினாடிவினா, கோலப் போட்டி, மாலை கட்டல் போட்டி, கட்டுரைப் போட்டி, மனனப் போட்டிகள்.

---

ஆரம்பகாலத்தில் பெற்றுக் கொண்ட சம்பளம்
1979 டிசம்பர் – கீரிமலை நகுலேஸ்வர ம.வி

| சம்பளம் | விசேட கொடுப்பனவு | இடைக்காலக் கொடுப்பனவு |
|---|---|---|
| 230/= | 140/= | 105.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றுப்படுத்தல் கற்றல் செயல் அமர்வுகள் - ஒரு பார்வை

மனோகரி தனராஜ்

# சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையம்

இல.70 பஸல்ஸ் ஒழுங்கை, வெள்ளவத்தையில் அமைந்திருக்கும் சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் நிலையத்தில் 07.02.2010 அன்று முதல் முதலாக ஒன்று கூடினோம். தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் அனுசரணையுடன் பதிவு செய்யப்பட்ட சுதந்திரமாக இயங்கும் ஒரு நிலையம் என்பதை அன்றைய ஒன்றுகூடலில் அறிந்து கொண்டேன். இச் சிகிச்சை நிலையத்தில் உளமருத்துவ நிபுணர் ஒருவர் வருகை தருவது இந்நிலையத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பலமும் வளமும் சேர்ப்பதாக அமைகின்றது.

எமது முதல்நாள் ஒன்றுகூடலில் 13 பேர் சமூகமளித்திருந்தனர். அவர்களில் சிலர் சீர்மியப் பயிற்சி பெற்றவர்களாகவும், சிலர் சீர்மியம் கற்றுக் கொண்டிருப்பவர்களாகவும் இருந்தனர். திருமதி.கோகிலா, திரு.செல்லத்துரை, Dr.சிவதாஸ் ஆகியோர் முதல் நாள் ஒன்று கூடலில் கலந்துகொண்டு ஆரம்ப உரையாற்றித் தொடக்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து மூவர் அடங்கிய குழு ஒன்றின் நேர் காணலின் பின்னர் செயலமர்வில் பங்கு பற்றுவோர் ஏற்றுக் கொள்ளப்பட்டனர். இரு செயலமர்வுகள் முடிந்தபின் 9 பேர் கொண்ட ஒரு கச்சிதமான குழுவாகினோம்.

முதல்நாள் சந்திப்பில் தீர்மானித்ததற்கமைய வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 இலிருந்து பகல் 12.30 வரை செயலமர்வுகள் நடத்தப்பட்டன. தியானத்துடன் ஆரம்பமாகி நற்சிந்தனை அதனைத் தொடர்ந்து கற்றல், செயல்முறை, தளர்வுப் பயிற்சிகள், சிகிச்சைப் பயிற்சிகள் என்று தொடரும். எவ்வாறு நேரம் போகிறது என்பது தெரியாமலே ஒரு மணி ஆகிவிடும்.

இக்கற்றல் செயலமர்வுகள் உளவளத்துணை என்றால் என்ன? உளவளத்துணையாளர் ஒருவரிடம் இருக்கவேண்டிய பண்புகள், உளவளத் துணையாளர் பெற்றிருக்க வேண்டிய நுண்திறன்கள், பிள்ளைகள் தொடர்பான உளவிருத்திக் குறைபாடுகள், அசாதாரண நடத்தைகள், உளநோய்கள் அதன் குணங்குறிகள், உளவள சிகிச்சைகள், கண்டறிதலுக்கான வகுதிப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கமாகக் கொண்டதாக அமைந்திருந்தன.

உளவளத்துணையாளரிடம் இருக்கவேண்டிய நுண்திறன்கள், உளவளத்துணையாளர் பெற்றிருக்க வேண்டிய நுண்திறன்கள் பற்றிய செயலமர்வுகள் எமது பிரதான பயிற்றுனரினால் மேற்கொள்ளப்பட்டது. பகுதி பகுதியாகக் கோட்பாடுகள் கற்பிக்கப்பட்டு விளக்கமளித்த பின்னர் அதனைத் தொடர்ந்து செயல்முறைப் பயிற்சி அளிக்கப்பட்டது. பயிலுனர் ஒவ்வொருவருக்கும் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. பயிற்சி நேரத்தில் ஏனையோர் அவதானித்து அது பற்றிய கருத்துக்களைக் கூற சந்தர்ப்பமளிக்கப்பட்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலுனர் தம்மை மேம்பாடடையச் செய்வதற்கு ஏதுவாக அமைந்தது.

சிறுவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளான திக்குவாய், நற்கோடல், ADHD, Nocturnal Enuresis, Tics என்பவை பற்றிய கற்றற் பரப்புகள் Dr.திருமதி சிவதாஸ் அவர்களினால் கற்பிக்கப்பட்டது. இவற்றுக்கான காரணிகள், குணங்குறிகள் சிகிச்சைகள் பற்றிய விளக்கங்கள் உதாரணங்களுடன் மிகத் தெளிவாக எமக்கு பயன்தரு வகையில் அமைந்தமை குறிப்பிடக்கூடிய தொன்றாகும்.

உளநோய்கள் அவற்றின் குணங்குறிகள் அவற்றைக் கண்டறிதலுக்கான நிபந்தனைகள் யாவும் சர்வதேசரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட DSM IV இலிருந்து கற்பிக்கப்பட்டமை விசேட அம்சம். உளநோய்களின் தன்மைகள், அடையாளங்காணும் குணங்குறிகள் யாவும் சிறந்த அனுபவ உதாரணங்களுடன் விளக்கப்பட்டமை பயிலுனருக்கு இலகுவாகக் கற்கக் கூடியதாகவும் மனதில் பதிவை ஏற்படுத்துவதாகவும் அமைந்தது. ஒவ்வொரு நோய், பிரச்சினைகள் சிகிச்சை முறைகள் போலச் செய்தல் மூலம் பயிலுனர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. அத்துடன் அந்நிலையத்துக்கு சிகிச்சைக்காக வந்தவர்களையும் சிகிச்சை நடைபெறும் போது அவதானிப்பதற்கு அவகாசம் அளிக்கப்பட்டது முக்கிய அம்சமாகும். பயிலுனர்கள் மத்தியில் 'போல'ச் செய்தல் சிகிச்சை மேற்கொண்ட பின்னர் ஏனையோர் தமது அவதானிப்புகளைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டமை சிகிச்சை பறிய தெளிவும் விளக்கமும் எல்லோர் மனதிலும் நன்கு பதிவதற்கு ஏதுவாக அமைந்ததுடன் எங்கள் சந்தேகங்களைப் போக்குவதற்கு ஏற்ற ஒரு தளமாகவும் அமைந்தது.

உளநோய்களைக் கையாளும் வெவ்வேறு வகையான சிகிச்சைகள் பற்றிப் பயிற்சி அளிக்கப்பட்டது. நடைமுறைச் சாத்தியமாகவும் பிரபல்யமாகவும் கூடுதல் பயன்தரு சிகிச்சைகளாகவும் உள்ள அறிகை நடத்தைச் சிகிச்சை, நடத்தைச் சிகிச்சை, சாந்த முறைப்பயிற்சி, வெளிப்பாட்டு முறைச்சிகிச்சை ஆகியவற்றுக்கு கூடுதலான நேரம் ஒதுக்கப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டது. பிரதான பயிற்றுநரால் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளை மேலும் எமக்குத் தெளிவும், பயிற்சியும் அளிக்கப்படவேண்டும் எனும் அவருடைய ஆதங்கம் சிறந்த வருகைதரு வளவாளர்கள் அழைக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டன. பாடல், ஆடல், கதை எழுதுதல், கதை சொல்லுதல், கவிதை எழுதுதல், விளையாட்டு, வரைதல் போன்ற பல்வேறு வெளிப்பாட்டு சிகிச்சைகளில் பயிற்சி அளிக்கப்பட்ட தோடல்லாமல் எம்மையும் இயங்க வைத்த பெருமை இந்நிலையத்தாரைச் சாரும்.

ஒவ்வொரு கற்றல் பரப்புகளும் கோட்பாடு செய்முறை என முடிந்த பின்னர் அதுதொடர்பான மதிப்பீடுகள் ஒப்படைகள், பரீட்சைகள் செய்முறைக் கணிப்பீடுகள் என தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தன. நான் ஓர் நேர் எண்ணச் சுழலுக்குள் வாழ்ந்து கொண்டிருந்ததை உணர்ந்தேன்.

வருகைதரு வளவாளர்கள் குறுகிய நேரத்தில் பயனுள்ள பல விடயங்களை அள்ளிக் கொடுத்தனர். ஒவ்வொருவரும் அவர்கள் எடுத்துக் கொண்ட விடயங்களில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தார்கள். இச்சந்தர்ப்பத்தில் குழுச்சிகிச்சை பற்றிய வகுப்பு சற்று மந்தமாக இருந்ததைச் சொல்லாமலும் விட முடியவில்லை. எப்பொழுதும் வகுப்பறைச் சூழல், வகுப்பறைக் கவிநிலை நல்ல நிலையில் அமைந்திருந்தது. பயிற்றுனர்களுக்கும் பயிலுனர்களுக்கிடையிலும், பயிலுனர் மத்தியிலும் நல்லதொரு சுமுகமான உறவும், புரிந்துணர்வும் நிலவியமை இக் கற்றல் செயலமர்வுகளில் காணப்பட்ட சிறப்பான அம்சமாகும்.

சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் நிலையத்தில் மனநலங்குன்றியோருக்கு மட்டுமன்றி மனவிருத்தி குறைந்தவர்களுக்கும் சிகிச்சையளிக்கப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. இது எத்தனையோ பெற்றோருக்கு ஆறுதலளிப்பது மட்டுமன்றி சமூகத்தில் அப்பிள்ளைகளும் ஒருவராகக் கணிக்கப்பட்டு மதிப்பு அளிக்கப்படுதல் முக்கிய அம்சமாகும். இச் சிறார்களைக் கவனிப்பதில் எமக்குக் கிடைக்கும் ஆத்ம திருப்தியும் அளவற்றது. ஒரு சீர்மியர் பல்வகை ஆளுமை உடையவராக இருக்க வேண்டும் என்பதற்கமைய பல்வேறு விடயங்கள் கவனத்திற்கெடுக்கப்பட்டு, உளவளத்துணை கற்றல் செயலமர்வுகள் பயனுள்ள வகையில் நடைபெற்றன. பல்வேறு வகையான உளச்சிக்கல் களுடனும் உளநோயுடனும்வருவோரை, நாம் முகம் கொடுத்து அவர்களை எம்மால் கையாள முடியும் எனும் தற்றுணிபை எமக்கு ஏற்படுத்தி எமது சீர்மிய ஆளுமையை மேலும் விருத்தி செய்யச் சந்தர்ப்பமளித்தமை இந்நிலையத் தாருக்கு உரியதாகும்.

மறையாக நோக்குதலன்றி, நேராக விடயங்களை நோக்கவும், சிந்திக்கவும் பயிற்சி பெற்ற மனம் இச்சீர்மியப் பயிற்சியிலும் நேரான விடயங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளது. சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் நிலையம் எம்மை மேம்படவைத்தமையை நன்றியுடன் நினைவு கூர்வோம்.

## நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள்

1. தூக்கமா? – 17.2.80 ஈழநாடு
2. கனவுகளே ஆயிரம் கனவுகளே! – 24.2.80 ஈழநாடு
3. உங்கள் உடல் நிறை உயருகிறதா? – 5.10.80 ஈழநாடு
4. உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படக் கூடிய விபத்துக்களை விலக்கிக் கொள்ளுங்கள் – 7.12.80 ஈழநாடு
5. உங்கள் குழந்தைகள் ஏன் அழுகின்றன? – 21.12.80 ஈழநாடு
6. உங்கள் குழந்தைகளுக்கு எப்படிப் பால் ஊட்டுகிறீர்கள்? – 23.11.80 ஈழநாடு
7. உங்கள் குழந்தையின் வேண்டாத பழக்கங்கள் – 4.1.81 ஈழநாடு
8. நம்பிக்கையில் வரவேற்கப்படும் ஆரோக்கியமுள்ள குழந்தை – 2.9.84 வீரகேசரி
9. சேக்கிழார் செய்த வீரகாவியம் – 25.5.85 ஈழநாடு
10. உங்கள் உள்ளம் திடகாத்திரமானதா? – 28.7.85 ஈழநாடு
11. ஆழ்ந்த உறக்கம் ஆரோக்கியத்திற்கு அவசியம் – 14.9.86 ஈழநாடு
12. குழந்தையின் கற்பனை வாய்மை இடத்ததே – 5.10.86 ஈழநாடு
13. சிறுவர் கல்வியும் உளவியல் அணுகுமுறையும் – 4.1.87 ஈழநாடு
14. மணிவிழா ஆண்டில் கலைப் பேரரசு – 10.5.87 முரசொலி
15. புலவர் ம.பார்வதிநாத சிவத்தின் "இன்னும் ஒருதிங்கள்" குறுங்காவியம் – சில ரசனைக் குறிப்புகள் – 28.8.88 முரசொலி
16. மற்றவருடைய கோணத்திலிருந்து பார்த்தல் – உள்ளம் – 1989 பங்குனி
17. இலக்கிய காரரின் இடைத் தொடர்புகள் – மல்லிகை ஆண்டுமலர் – 1989
18. உனை நீ அறி – 20.8.89 முரசொலி
19. குறமகள் கதைகள் ஒரு பார்வை – நங்கை – 1990 மே யூன்
20. முற்றுப்புள்ளி இல்லை – மல்லிகை வெள்ளி விழாமலர் – 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகன் ம.பிரவீணனிடமிருந்து. . . . .

# உறவு தொடர வேண்டும்

பொதுவாகத் தமிழ் மொழியிலோ அல்லது ஆங்கில மொழியிலோ விடயங்களை எடுத்துச் சொல்வது எனக்குப் பிரச்சினையாக இருப்பதில்லை.

ஆனால் அம்மாவைப் பற்றி எழுதுவது என்பது ஒரு வித்தியாசமான விடயமாக இருக்கிறது. வார்த்தைகள் வர மறுக்கின்றன என்பதை விட வார்த்தைகளால் அம்மாவை மலினப்படுத்த விரும்பவில்லை என்று சொல்வது பொருந்தும். அலங்கார வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட உறவு அது.

அவரைப் பற்றி நிறைய எழுதினேன். அதை விட நிறைய எழுத நினைத்தேன். ஆனால், சுருக்கமாக முடிப்பது தான் சரி என்று தோன்றுகிறது.

அவர் அன்பின் தெய்வம். நான் பிறந்ததில் இருந்து எனது நன்மையை விட முக்கியமாக எதையும் அவர் கருதியதில்லை. அவருக்கு நான் என்ன செய்தாலும் எதைக் கொடுத்தாலும் அவரது அன்பின் ஒரு சிறு பகுதிக்குக் கூட ஈடாகி விடாது.

அவர் உலகில் எவ்வளவோ பேருக்கு உதவி இருக்கிறார். எத்தனையோ பேர் அவரைத் தெய்வம் எனவே மதிக்கின்றனர். அவ்வாறான ஒரு தாயின் பரிபூரண அன்பைப் பெற்றுக் கொள்வதற்கு நான் ஏழேழு ஜென்மங்களில் பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

அவர் இன்று கல்வித் துறையில் இருந்து ஓய்வு பெற்றிருக்கலாம். அவருக்கு மணி விழா எடுக்கிறோம். ஆனால் எனக்கு எப்போதும் போல அவர் அம்மா தான். இந்த ஜென்மத்தில் அவருடனான உறவு இன்னும் பல தசாப்தங்களுக்குத் தொடர வேண்டும். அடுத்து இங்கு பிறப்புகள் இருந்தால் அதிலும் அவரின் மகனாகப் பிறக்கின்ற வரம் வேண்டும். இதனாலும் இச் சந்தர்ப்பத்தில் அவரைப் பற்றி அதிகம் எழுத விரும்பவில்லை. அவர் நூறு ஆண்டு வாழ வேண்டும் என்று, மணி விழாக்களில் உபசாரத்திற்காகச் சொல்வது போல் அன்றி, உண்மையாகவே விரும்புகிறேன். பிரார்த்திக் கிறேன். தளிர் நடை நடந்த பருவத்தில் எவ்வளவு தூரம் அவர் எனக்குத் தேவைப்பட்டாரோ அவ்வளவு இன்றைக்கும் அவர் எனக்குத் தேவையாகத் தான் இருக்கிறார்.

பிறந்த நாள் வாழ்த்துகள் அம்மா! நூறாண்டு வாழுங்கள் அம்மா!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலுருவில் தொகுக்கப்படாத கட்டுரைகள்

21. வௌவால்கள் – 29.11.90 முரசொலி
22. சிலந்திவலை – 25.4.91 முரசொலி
23. போர்க் காலத்தில் உளநல விருத்தி அவசியம் – 30.12.91 முரசொலி
24. "கோலங்கள் ஐந்து" நாடக நூலின் பதிப்புரை – 1993
25. எதனால் இன்னமும் பெண்ணடிமை பற்றிப் பேச வேண்டி இருக்கிறது? – 04.10.94 தினகரன்
26. அழகியல் உணர்வும் ஆளுமையும் – மல்லிகை யூன் 95
27. மனக்குறை மாற வழி – அமரர் சுப்பையா இராசையா நினைவுமலர் – 1996
28. "இறைபணிச் செம்மல் விநாயகரத்தினம்" – 7.12.97 தினக்குரல்
29. "சிறியன சிந்தியாத நன் மனத்தன்" – ஆசிரியர் திரு.சி.செல்லத்துரை அவர்களின் நினைவு மலர் – 1997
30. "நினைவுகளில் வாழ்வாள்" – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை பழைய மாணவி அ.யசோதா நினைவுமலர் – 1998
31. விழிசைச் சிவத்தின் இறை மணி மாலை – பதிப்புரை 1999
32. லக்ஸ்மன் சத்திய மூர்த்தியின் மிருதங்க அரங்கேற்ற ஆசிச் செய்தி – அரங்கேற்ற மலர் – 2000
33. நூல்மதிப்புரை – திரு.கணேசலிங்கக் குருக்கள் பதிப்பித்த திருவாதவூரடிகள் புராணம் நூலில் – 2001
34. "மகாஜன சிற்பியின் தலைமைத்துவப் பொற்காலத்தில் கல்லூரியின் சமூக மயமாக்கல் பணிகள்" – பாவலர் துரையப்பா பிள்ளை நினைவுப் பேருரை வெளியீடு – 2002
35. இரசிகர் மனதில் பூத்திருக்கும் வரதர் – வரதர் பவளவிழாமலர் – 2002
36. Value of Education for a succesful life - சத்திய சாயி வித்தியாலயம் பரிசளிப்பு விழா மலர் – 2004
37. முன்னுரை – திரு.பொ.கனக சபாபதியின் "மாறன் மணிக்கதைகள் II" – 2004
38. ஞானச்சுடர் நூறு – ஞானச் சுடர் – 2006
39. அணிந்துரை – புலவர் ம.பார்வதி நாதசிவத்தின் "மானம் காத்த மறக்குடி வேந்தன்" – 2006 யூலை
40. "நம் முற்றத்துப் பூக்காடு" – திரு.ஆ.கனகசபை நினைவு மலர் – 2006
41. கவிஞர் சோ.ப வின் நினைவுச் சுவடுகள் ஒரு பார்வை – மல்லிகை யூன் 2007
42. பதிப்புரை – இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு – பாகம் I – பண்டிதர்.சி.அப்புத்துரை – 2007
43. ஒரு வேகம் கொண்டு பணி சூழ்வம் – "நமசிவாயம்" – திரு.இ.நமசிவாயம் நினைவு மலர் – 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. இதய நோய்கள் – திரு.பு.கண்ணபிரான் நினைவு மலர் – 2008
45. விழிப்புல வலுவிழந்தோருக்கான உதவிகளும் சீர்மியமும் – செல்வி.அ.சின்னத்தம்பி நினைவு மலர் – வாழ்வகம் – 2008
46. முதுமையின் சவால்களும் வரப்பிரசாதங்களும் – முதுசொம் – வடமாகாகண சமூக நலத்துறைத்திணைக்கள வெளியீடு – 2008
47. வாழ்த்துச் செய்தி – மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை – நூற்றாண்டு விழாமலர் – 2008
48. பதிப்புரை – இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு 2ம் பாகம் – பண்டிதர்.சி.அப்புத்துரை எழுதியது – 2008
49. பெண்களின் உளநலம் – சமானம் – வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் வெளியீடு – 2008
50. அணிந்துரை – தாட்சாயணியின் "தூரப் போகும் நாரைகள்" சிறுகதைத் தொகுதி – 2008
51. வெளியீட்டுரை – திரு.பொ.கனகசபாபதியின், "மனம் எங்கே போகிறது?" – 2008
52. எனக்குப் பிடித்த என்கதை – செங்கதிர் – 2009 மார்ச்
53. "அநு.வை.நா என்ற அருமை மனிதர்" – இலக்கிய வித்தகர் அநு.வை.நா பற்றிய நூல் – 2009
54. வெளியீட்டுரை – பண்டிதர்.ந.கடம்பேஸ்வரனின் "தீந்தேன்" சிறுவர் பாடல்கள் – 2009
55. வாசிப்பு ஒரு சிகிச்சையாகும் – சேமமடு நூலகம் செய்திமடல் – 2009
56. முன்னுரை – ஆனந்தியின் "துருவ சஞ்சாரம்" – சிறுகதைத் தொகுதி – 2009
57. அனர்த்தங்களில் பெண்கள் – வடக்கு மகாணக் கலாசாரத்திணைக் களம் வெளியிட்ட பெண்கள் தினமலர் – 2009
58. முதுமைக்குத் தயாராதல் – "பண் சுமந்த பாடல்" – வைத்திய நிபுணர் –பூ.லக்ஷ்மன் அவர்களின் தாயாரது நினைவு மலர் – 2010
59. "சொப்பனமாகிப் போச்சு" – திருமதி.நகுலேஸ்வரி நமசிவாயம் நினைவு மலர் – 2010

(அட்டவணை முழுமை பெறவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்த்தப்பட்ட உரைகள் சில

1. 15.2.82 – மனித சொரூபங்கள் சிறுகதைத் தொகுதி வெளியீடு – மகாஜனக் கல்லூரி – ஏற்புரை
2. 25.2.84 – முரண்பாடுகளின் அறுவடை சிறுகதைத் தொகுதி வெளியீடு மகாஜனக் கல்லூரி – ஏற்புரை
3. 2.10.84 – இந்திராகாந்தி அஞ்சலி உரை – விழிசிட்டி புளியடிவைரவர் கோயில் முன்றில்
4. 3.10.84 – இந்திராகாந்தி – அஞ்சலி உரை
   1. கீரிமலை கடற்கரை
   2. பன்னாலை சனசமூகநிலையம்
   3. கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலை முன்றில்
5. 5.10.84 – இந்திரா காந்தி அஞ்சலி உரை – மகாஜனாக் கல்லூரி
6. 25.12.84 – கொல்லங்கலட்டிச் சைவ வித்தியாசலையில் பாலர் வகுப்புப் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர் உரை
7. 6.1.85 – பன்னாலை சிவபூதவராயர் கோயில் – ஆருத்திராதரிசனம் "சமய வாழ்வில் பெண்கள்"
8. 7.1.85 – திருமதி.அரியராஜாவின் பிரியாவிடை வைபவ உரை
9. 26.1.85 – 'அறிமுகவிழா' நூல் வெளியீட்டில் – பதிலுரை
10. 30.1.85 – மகாஜனக் கல்லூரி மாணவர் ஒன்று கூடல் – "மனிதர்களின் விலங்குக் குணங்கள்"
11. 18.3.85 – வகுப்பு 11 A மாணவர் ஏற்பாடு செய்த 'நன்றி விழா'வில் விசேட உரை – மகாஜனா
12. 20.3.85 – மகாஜனாக் கல்லூரி மாணவர் ஒன்று கூடல் – "தன்னம்பிக்கை"
13. 29.4.85 – கொழும்பில் 'அறிமுகவிழா' நூல் வெளியீடு – பதிலுரை
14. 1.5.85 – மயிலங்கூடல் வயிரவர் கோயில் – "துயரம் வரும் நேரம்"
15. 12.5.85 – பொற்கலந்தம்பை வயிரவர் கோயில் – "அஞ்சுவது யாதொன்றும் இல்லை"
16. 13.5.85 – அளவெட்டி வடக்கு அ.மி.த.க பாடசாலை – "நாமார்க்கும் குடியல்லோம்"
17. 31.5.85 – மகாஜனா மாணவர் ஒன்று கூடல் – டாக்டர் கருணானந்தனின் பேச்சுக்கான நன்றியுரை
18. 9.685 – புலவர்.ம.பார்வதி நாதசிவம் அவர்களின் "இரண்டு வரம் வேண்டும்" நூல் வெளியீட்டு விழா – விமர்சன உரை
19. 19.6.85 – மகாஜனா – திருமதி.தயாகுணரட்ணம், திரு.ஸ்ரீநடராஜா ஆகியோரின் பிரியாவிடை வைபவ உரை.
20. 27.6.85 – பன்னாலை சேர் கனகசபை வித்தியாசலை – "பாடசாலை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சூழல்"
21. 18.7.88 – பலாலி ஆசிரியர் கலாசாலையில் நடந்த "இலக்கியச் செல்வர்" அறிமுக நிகழ்வு – பதிலுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. 26.7.85 – திரு.செல்லத்துரை அவர்களின் பிரியாவிடை வைபவ உரை

23. 9.8.85 – கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் – "உள்ளத்தால் பொய்யாதொழுகல்"

24. 8.10.85 – வட்டு இந்துக் கல்லூரி இலக்கியக் கருத்தரங்கு – "சமகாலப் பிரச்சினைகளில் பெண்களின் கலை இலக்கியப் பங்களிப்பு"

25. 17.10.85 – அளவெட்டி அழ கொல்லைப் பிள்ளையார் – "அறிவியல் நோக்கில் சக்தி வழிபாடு"

26. 19.10.85 – குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபம் – 'அறிமுகவிழா' நூல் அறிமுகம் – ஏற்புரை

27. 21.10.85 – தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் – "சக்தி வழிபாடு"

28. 22.10.85 – காலை – 1. குரும்பசிட்டி பொன் பரமானந்தர் வித்தியாசலை – "கல்வித் தெய்வம்"
மாலை – 2. கருகம்பனை கவுணாவத்தை வைரவர் கோயில் "தேவி நோன்பு"
– 3. மயிலங்கூடல் வைரவர் கோயில் "சக்தி வழிபாடு"

29. 23.10.85 – அளவெட்டி அருணோதயக் கல்லூரி – "சக்தி மகத்துவம்"

30. 27.10.85 – விழிசிட்டி கூட்டுறவுச் சங்கம் – முகாமையாளர் பிரியாவிடைப் பேச்சு

31. 30.10.85 – குரும்பசிட்டி மதி அக்கடமி தினம் – "அறிவியல் நோக்கில் சக்தி வழிபாடு"

32. 6.11.85 – மகாஜனாக்கல்லூரி – சாரணர் தின உரை

33. 6.1.86 – மகாஜனாக் கல்லூரி – மாணவர் ஒன்று கூடல் உரை

34. 14.1.86 – 1. கீரிமலை சிவநெறிக் கழகத்தில் நா.சுப்பிரமணியன் அவர்களுக்குப் பாராட்டுரை
2. குரும்பசிட்டி மதி அக்கடமி – "பொங்கல் ஒரு பண்பாட்டு நோக்கு"

35. 14.2.86 – கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்கம் நடத்திய "உயிர்ப்புகள்" சிறுகதைத் தொகுதி – மதிப்பீட்டு நிகழ்வு – ஆய்வுரை

36. 8.3.86 – 1. கும்பளாவளைப் பிள்ளையார் கோயில் – சிவராத்திரிப்பட்டி மன்றம் "சமயத்தின் நோக்கம் இறைவழிபாடா? மக்கள் நலனா?"
2. கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் – இறைவழிபாடு

37. 29.6.86 – யாழ் இலக்கிய வட்டம் நடத்திய கோகிலா மகேந்திரனின் "இரு நூல்கள்" அறிமுக நிகழ்வு – நல்லூர் இந்து விடுதி மண்டபம் – பதிலுரை

38. 20.9.86 – கோகிலா மகேந்திரனின் "இரு நூல்கள்" விமர்சன அரங்கு – இளவாலை மெய்கண்டான் ம.வி – பதிலுரை

39. 21.9.86 – மகவமும் மாவை கலை இலக்கிய ஆர்வலரும் இணைந்து நடத்திய எழுத்தாளர் 'தசம்' நினைவஞ்சலி நிகழ்வு – வீமன்காமம் ம.வி – அஞ்சலி உரை

40. 25.1.87 – நெல்லை.க.பேரனின் 'சத்தியங்கள்' சிறுகதைத் தொகுதி வெளியீட்டுவிழா கட்டை வேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்க மண்டபம் – ஆய்வுரை

41. 9.2.87 – மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் சார்பில் "சமூக மேம்பாடும் விழுமியங்களும்" கருத்தரங்கு – யூனியன் கல்லூரி மண்டபம் – தலைமையுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. 12.2.87 – சோமகாந்தனின் 'ஆகுதி' சிறுகதைத் தொகுதி வெளியீடு – ஆய்வுரை
43. 20.2.87 – இளவாலை மெய்கண்டான் ம.வி – விஞ்ஞானகணித தினம் – "விஞ்ஞானம் கற்றல்" உரை
44. 21.2.87 – நெல்லை.க.பேரனின் 'சத்தியங்கள்' சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா – நல்லூர் இந்து விடுதி – அறிமுக உரை
45. 3.3.87 – முரசொலி குறுநாவல் போட்டி – பரிசளிப்பு நிகழ்வு – பரிசு பெறுநர் சார்பில் உரை
46. 19.387 – காங்கேயன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு.பொ.சிவஞான சுந்தரம் சேவைநலன் பாராட்டு விழா – இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மண்டபம் – அம்பனை வலயம் சார்பில் பாராட்டுரை
47. 28.6.87 – அ.செ.மு வின் மனித மாடு அறிமுகவிழா – அளவெட்டி மகாஜன சபை மண்டபம் – சிறப்புரை
48. 21.1.89 – மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை மணிவிழா "விதியை மதியால் வெல்லலாம்" – பட்டிமன்ற உரை
49. 17.9.89 – குரும்பசிட்டி சன்மார்க்க சபை – மாதாந்த இலக்கியக் கருத்தரங்கு 'திசை', 'ஈழநாடு' பத்திரிகைகளில் வெளிவந்த கவிதைகள், கதைகள்
50. 19.1.90 – தமிழில் எழுதும் பெண் எழுத்தாளர் கருத்தரங்கு – கல்கிசை – விசேட உரை
51. 17.3.90 – கலை இலக்கியக் களம் நடத்திய "நாடகச் சிந்தனைகள்" நிகழ்வு – தலைமையுரை
52. 6.5.90 – சித்திரமேழி ஞான வைரவர் கோயில் – "சைவம் காத்த மங்கையர்"
53. 16.6.91 – வட்டு இந்து வாலிபர் சங்கம் நடத்தும் இந்து சமயக் கருத்தரங்கு – விசேட உரை
54. 4.10.91 – வட்டு திருஞான சம்பந்தர் வித்தியாசலை – "சமயமும் விஞ்ஞானமும்"
55. 5.10.91 – தெல்லிப்பழை துர்க்காதேவி பெண்கள் தொண்டர் சபையின் 10வது ஆண்டு நிறைவுவிழா – பிரதம விருந்தினர் உரை
56. 18.10.92 – "தேடலும் பதித்தலும்" – அநு.வை.நாகராஜனின் நூல் வெளியீட்டு விழா – யாழ்.இந்துக் கல்லூரி கருத்துரை
57. 14.1.93 – சங்க நாதத்தின் தைப் பொங்கல் கருத்தரங்கு – இணுவில் மத்திய கல்லூரி மண்டபம் – தலைமையுரை
58. 29.5.93 – யாழ் பல்கலைக்கழகம் நடத்திய 'கற்கை நெறியாக அரங்கு' என்ற கருத்தாடல் – 'சிறுவர் நாடகத் தயாரிப்பு' உரை
59. 12.9.93 – அநு.வை.நாகராஜனின் மணிவிழா – இணுவில் மத்தியகல்லூரி – வரவேற்புரை
60. 12.11.93 – கனகரத்தினம் ம.ம.வி. – 'அறிவியல்கதிர்' வெளியீடு – ஆய்வுரை
61. 17.12.93 – சைவசமய ஆரம்ப ஆசிரியர் கருத்தரங்கு – இராமநாதன் கல்லூரி 'அபிநயத்துடன் கற்பித்தல்' – கருத்துரை
62. 18.12.93 – சன்மார்க்க சபை மணிவிழா – இரசிகமணி இலக்கியச் சந்திப்பு – நாவலர் மண்டபம் – "அநுபவம் பேசுகிறது" – சிறப்புரை
63. 25.3.94 – பேராசிரியர். அ.துரைராஜா அவர்களுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் வழங்கிய பிரியாவிடையில் – சிறப்புரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. 27.3.94 – யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் பேராசிரியர். அ.துரைராஜா அவர்களுக்கு சேவைநலன் பாராட்டு விழா – யாழ்.இந்துக் கல்லூரி – சிறப்புரை

65. 30.4.94 – கலாநிதி.நா.சுப்பிரமணியனின் இலக்கியச் சிந்தனை மரபு – அறிமுகவிழா இராமநாதன் கல்லூரி மண்டபம் – பல்கோணப் பார்வை உரை

66. 23.5.94 – திருமறைக் கலாமன்றம் நடத்திய தமிழ் விழா – நாவலர் மண்டபம் "கவிதை பற்றிப் பேசுவோம்"

67. 3.9.94 – நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நடத்தும் சைவ சித்தாந்த ஒழுகலாறுகள் பயிற்சி வகுப்பு – "கடவுள் வழிபாடு"

68. 17.9.94 – தொலைக்கல்வி நிலையம் மருதனார் மடம் நடத்திய "மதிப்பீடு" மலர் வெளியீட்டில் மதிப்பீட்டுரை

69. 9.11.94 – ஸ்கந்த வரோதயக் கல்லூரி – உயர்தர மாணவர் ஒன்றியத்தில் விசேட உரை

70. 2.7.95 – தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை – 48வது ஆண்டு விழாவும் நூல் வெளியிடும் – காசி விநாயகர் தேவஸ்தானம் – நூல் அறிமுக உரை

71. 18.10.95 – இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய்ப் பிரிவு நடத்திய ஊடகவியலாளர் பயிற்சி நெறியில் – "பத்திரிகைகளில் மக்கள் பங்களிப்பு"

72. 22.10.95 – வே.அம்பிகைபாகனின், "கலாகேசரியும் தேர்ச்சிற்பக்கலையும்" நூல் வெளியீடு – கொக்குவில் இந்துக் கல்லூரி – மதிப்பீட்டுரை

73. 2.2.97 – தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபை பொன்விழா – இணுவில் கண்ணகி அம்மன் கோயில் – நூல் அறிமுக உரை

74. 14.4.97 – கலை இலக்கியக் களக் கருத்தரங்கு – இராமநாதன் கல்லூரி மண்டபம் "உளவியலில் ஆளுமை"

75. 12.9.97 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை சொந்த இடம் சென்ற முதல்நாள் – மாணவர் ஆசிரியர் மத்தியில் தலைமையுரை

76. 4.10.97 – மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலையில் நாடகவிழா – கௌரவ விருந்தினர் உரை

77. 18.10.97 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடத்திய வாழ்வு ஒருவலைப் பந்தாட்டம் சிறுகதைத் தொகுதி அறிமுகவிழா – இராமநாதன் கல்லூரி மண்டபம் – ஏற்புரை

78. 2.11.97 – இணுவில் மத்திய கல்லூரி மாணவர்களின் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீட்டுவிழா – சிறப்புரை

79. 29.9.95 – உலகப் பெண்கள் மகாநாடு பற்றிய கருத்தரங்கு – பாரதிகலா மன்ற மண்டபம் இருபாலை – "மாநாட்டு அனுபவங்கள்"

80. 5.2.98 – யோகேஸ்வரி சிவப்பிரகாசத்தின் 'உணர்வின் நிழல்கள்' சிறுகதைத் தொகுதி அறிமுக விழா – ஆய்வுரை

81. 8.2.98 – வலி தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும் வடபிரதேச நல்லொழுக்கச் சம்மேளனமும் இணைந்து நடத்தும் கிராமிய மாலை அபிவிருத்திக் கருத்தரங்கு இராமநாதன் கல்லூரி – விசேட உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. 8.2.98 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை புதிய மண்டபத் திறப்பு விழா – தலைமையுரை

83. 12.3.98 – அகவொளி நிலையம் நடத்தும் கருத்தரங்கு "துணை தேடுதலில் பெற்றோரின் பங்கு" – விசேட உரை

84. 27.3.98 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி – தலைமையுரை

85. 7.8.98 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடத்தும் சைவப்புலவர்.சு.செல்லத்துரை அவர்களின் மணிவிழாவும் அரங்கக் கலைஞர் ஐவர் நூல் வெளியீடும் – இளவாலை மெய்கண்டான் ம.வி. – தலைமையுரை

86. 8.8.98 – துரையரின் "தெருவிளக்கு" நூல் வெளியீடு – சுன்னாகம் நூலக மண்டபம் – வெளியீட்டுரை.

87. 8.8.98 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் – தலைமையுரை

88. 19.8.98 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம் தரும் "தனி நடிப்பு" கலை நிகழ்வு – தலைமையுரை

89. 13.9.98 – சுகவாழ்வு நிலையம் நடத்தும் கருத்தரங்கு – "உளவிளையாட்டுகள்" – விசேட உரை

90. 17.9.98 – கொக்குவில் லயன்ஸ் கழகம் நடத்தும் தலைமைத்துவக் கருத்தரங்கு – கொக்குவில் இந்துக் கல்லூரி – விரிவுரை

91. 6.12.98 – அ.செ.மு நினைவஞ்சலிக் கூட்டம் – கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபம் – இரங்கலுரை

92. 12.10.98 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசலை நடத்தும் கலை நுகர்வு வேளை "வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்" நூல் சாகித்திய விருது பெற்றமை தொடர்பான தேநீர்விருந்து – ஏற்புரை

93. 4.3.98 – "தமிழ்ப் பெண்களின் கண்ணோட்டத்தில் பெண்ணியம்" கருத்தரங்கு – பல்கலைக் கழகக் கைலாசபதி அரங்கு – விமர்சன உரை

94. 7.2.98 – யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை ஏற்பாடு செய்த கவிதைக் களம் நிகழ்வு – முகாமைத்துவ மண்டபம் – "கவிதை அநுபவநிலை"

95. 2.10.98 – மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் சமூக ஒருமைப் பாட்டுக்கான கல்விக் கருத்தரங்கு – "முரண்பாடுகளுக்கான காரணிகள்" – அளவெட்டி அருணோதயக் கல்லூரி – விசேட உரை

96. 30.1.99 – தெல்லிப்பழை கலை இலக்கியக் களம் நடத்தும் சோ.ப.வின் 'வடக்கிருத்தல்' கவிதைத் தொகுதி அநுபவ நிகழ்வு – இணுவில் மத்திய கல்லூரி மண்டபம் – தலைமையுரை

97. 18.2.99 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை – இல்ல மெய்வல்லுநர் போட்டி – தலைமையுரை

98. 12.5.99 – ஸ்கந்தவரோதயக் கல்லூரி – கணித விஞ்ஞான மன்றம் – 'விவரணி' சஞ்சிகை வெளியீட்டுவிழா – நூல் ஆய்வுரை

99. 28.5.99 – இலங்கை அதிபர் சேவைப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்பு – யூனியன் கல்லூரி மண்டபம் – விரிவுரை

100. 20.6.99 – குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்திய ஏ.ரி.பொ அவர்களின் பாராட்டு விழாவும் தனிநடிப்பும் போட்டிப் பரிசளிப்பு விழாவும், இராமநாதன் கல்லூரி மண்டம் – பிரதம விருந்தினர் உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101. 7.7.99 – இணுவில் மத்திய கல்லூரி, கல்லூரித் தினமும் பரிசளிப்பு விழாவும் – கல்லூரி கலை அரங்கம் – சிறப்பு விருந்தினர் உரை.

102. 10.7.99 – அதிபர் சேவை ஆள்சேர்ப்பு பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு – யாழ். இந்துக் கல்லூரி மண்டபம் – விரிவுரை

103. 4.7.99 – வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாஜமும், சுன்னாகம், பனை, தென்னை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்திய கிராமிய அபிவிருத்திக் கருத்தரங்கு, இராமநாதன் கல்லூரி மண்டபம் – விரிவுரை

104. 9.8.99 – வலி.வடக்கு பிரதேச மக்கள் நடத்திய கலாபூஷணம் விருது பெற்றோருக்கான பாராட்டு விழா – மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை – வாழ்த்துரை

105. 19.11.99 – கவிஞர் சோ.ப மணிவிழா – பலாலி ஆசிரியர் கலாசாலை மண்டபம் கருத்துரை

106. 23.11.99 – யூனியன் கல்லூரி வர்த்தக மன்றத்தின் 'வணிக தீபம்' வெளியீட்டுவிழா கல்லூரி மண்டபம் – சிறப்பு விருந்தினர் உரை

107. 31.12.99 – வலிகாமம் கல்வி வலய நலன்புரி மன்றம் நடத்திய "வடக்குக் கிழக்கு மாகாண இலக்கியப் பரிசை வென்றமைக்கான பாராட்டு விழா – ஏற்புரை

108. 8.1.00 – சிவத்தமிழ்ச் செல்வி பவளவிழா – நல்லூர் துர்க்கா மணிமண்டபம் – தங்கத் தலைவி நூல் வெளியீடு – வெளியீட்டுரை

109. 16.1.00 – 'எங்கே நிம்மதி' நூல் வெளியீட்டுவிழா – பெண்கள் கல்வி நிறுவன ஆய்வு மண்டபம், கொழும்பு – ஏற்புரை

110. 16.1.00 – பெண் எழுத்தாளர் ஊடக வியலாளர் கருத்தரங்கு – பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு மண்டபம், அஸ்கொட் அவெனியூ – கொழும்பு – 05 கருத்துரை

111. 20.1.00 – புலோலியூர்.ஆ.இரத்தின வேலோனின் 'புதிய சகத்திரப்புலர்வின் முன் ஈழத்துச் சிறுகதைகள்' நூல் வெளியீடு – வெள்ளவத்தை – தலைமையுரை

112. 30.1.00 – 'கிரேக்கத்தின் தொல் சீர் அரங்கு' வெளியீட்டு விழா – இராமநாதன் கல்லூரி மண்டபம் – ஏற்புரை

113. 26.2.00 – தெல்லிப்பழை, கலை இலக்கியக் களம் நடத்தும் 'எங்கே நிம்மதி?' நூல் அறிமுகவிழா – யூனியன் கல்லூரி மண்டபம் – ஏற்புரை

114. 8.3.00 – கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மண்டபம் –சர்வதேச மகளிர் தினம் – கலாசாலை மண்டபம் – பிரதம விருந்தினர் உரை

115. 10.7.00 – கசின்.க.சிவகுருநாதன் பாராட்டுவிழா – மல்லிகைப் பந்தல் ஏற்பாடு – பம்பலப்பிட்டி அரசினர் தொடர்மாடி – கருத்துரை

116. 16.7.00 – மல்லிகைப் பந்தல் ஏற்பாட்டில் அமரர் கனக செந்திநாதன் ஞாபகார்த்தக் கலந்துரையாடல் – மல்லிகை மண்டபம் – தொடக்கவுரை

117. 20.8.00 – ஆரம்பக் கல்வி ஆசிரியருக்கான வலுவூட்டல் கருத்தரங்கு – ஆசிரியர் நிலையம், மானிப்பாய் – விரிவுரை

118. 1.9.00 – நவாலியூர் நா.செல்லத்துரையின் சின்னவனா, பெரியவனா நூல் வெளியீட்டு விழா – நவாலி வை.எம்.சீ.ஏ மண்டபம் – கருத்துரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119. 5.11.00 – 24.11.00 – விழிப்புல வலுவிழந்தோருக்குக் கற்பிக்கும் ஆசிரியர் பயிற்சி நெறி – இராமநாதன் கல்லூரி – கருத்துரை

120. 10.12.00 – குரும்பசிட்டி சன்மார்க்க சபை நடத்தும் தனிநடிப்புப் போட்டிப் பரிசளிப்பு விழா – யூனியன் கல்லூரி – விசேடவிருந்தினர் உரை

121. 7.1.01 – சிவத்தமிழ்ச் செல்வி. பிறந்தநாள் அறக் கொடை விழா – துர்க்கா தேவஸ்தானம் – வாழ்த்துரை

122. 20.1.01 – மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வும் – சிறப்பு விருந்தினர் உரை

123. 6.1.01 – தெல்லிப்பழை பல.நோ.கூ. சங்கம் வறுமைக் கோட்டிற்குக் கீழ்ப்பட்ட குடும்பப் பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு – கௌரவ விருந்தினர் உரை

124. 10.2.01 – வீமன் காமம் ம.வி, காங்கேயன் துறை ம.வி – வருடாந்த இல்லமெய் வல்லுநர் போட்டி – இராமநாதன் கல்லூரி மைதானம் – பிரதம விருந்தினர் உரை

125. 20.2.01 – குட்டியப்புலம் அ.த.க.பாடசாலை – இல்ல மெய்வல்லுநர் போட்டி – முதன்மை விருந்தினர் உரை

126. 25.2.01 – விஞ்ஞானக் கதைகள் வெளியீட்டு விழா – ஸ்கந்தவரோதயக் கல்லூரி – ஏற்புரை

127. 9.3.01 – தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை விசேட உரைச்சித்திரம் – "என்ன புண்ணியம் செய்தனை?"

128. 10.3.01 – யூனிசெப் ஆதரவுடன் சுகவாழ்வு நிலையம் நடத்தும் மகளிர்தினவிழா – யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி அரங்கு – தலைமையுரை

129. 11.3.01 – பட்டப்பின் டிப்ளோமா மாணவர்களின் 'ஆசிரியர்' சஞ்சிகை வெளியீட்டு விழா – மானிப்பாய் இந்துக் கல்லூரி – மதிப்பீட்டுரை

130. 11.3.01 – புலவர்.ம.பார்வதி நாதசிவத்தின் "பசிப்பிணி மருத்துவன்" நூல் வெளியீட்டு விழா – யாழ் இந்துக் கல்லூரி – ஆய்வுரை

131. 18.3.01 – ஈழகேசரி கதைகள் அறிமுக விழாவும் படைப்பாளிகள் கௌரவிப்பும் எழுத்தாளர் ஒன்றிய மண்டபம், யாழ்ப்பாணம் – மதிப்புரை

132. 20.4.01 – வட்டு மத்திய கல்லூரி – பவளவிழா மலர் – ஆய்வுரை

133. 26.5.01 – தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசலை – பரிசளிப்பு விழா – முதன்மை விருந்தினர் உரை

134. 16.6.01 – அளவெட்டி அருணோதயக் கல்லூரி – பழைய மாணவர் சங்கக் கனடாக்கிளை வெளியிடும் "பூச் சொரியும் பொன்னொச்சி" மலர் வெளியீடு – ஆய்வுரை

135. 19.6.01 – யாழ் மத்திய கல்லூரி – தமிழ் விழா – பிரதம விருந்தினர் உரை

136. 23.6.01 – திருமதி.திலகநாயகம் போலின் 'மழலை அமுதம்' நூல் வெளியீடு – பல்கலைக் கழகக் கைலாசபதி அரங்கு – ஆய்வுரை

137. 30.6.01 – தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்க மண்டபம் – கூட்டுறவுத் தீபம் மலர் வெளியீடு – பாராட்டுரை

138. 30.6.01 – கிறிஸ்தவ சமய சமூக ஆய்வு மன்றம் நடத்தும் கருத்தரங்கு – "இலங்கைத் தமிழ்ப் பெண்களின் பிரச்சினைகளும் தீர்க்கும் வழிகளும்" – விசேட உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139. 1.7.01 – மகிழ்ச்சிகரமான கற்றல் – நூல் அறிமுகவிழா – இந்து மகளிர் கல்லூரி மண்டபம் – ஆய்வுரை

140. 5.7.01 – மானிப்பாய் மெமோரியல் கல்லூரி – 165வது ஆண்டு விழா மலர் வெளியீடு ஆய்வுரை

141. 16.7.01 – யாழ்.சென் ஜோன்ஸ் கல்லூரி தமிழ் விழா – பிரதம விருந்தினர் உரை

142. 30.9.01 – தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் திருவாதவூரடிகள் புராணம் வெளியீட்டுவிழா – அறிமுக உரை

143. 29.11.01 – யாழ்.இந்து பழைய மாணவர் சங்கம் – முழுநிலா நாள் கருத்தரங்கு "உணர்வுகளைக் கையாளுதலும் உறுதியான நடத்தையும்" விசேட உரை

144. 16.12.01 – இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கோப்பாய்ப்பிரிவு நடத்தும் பத்திரிகையாளர் பயிற்சி நெறி – ஆரம்பவிழா – கோப்பாய் ம.வி – சிறப்பு விருந்தினர் உரை

145. 25.12.01 – தேவி பரமலிங்கத்தின் 'அணிதிரளும் சிறு அலைகள்' வெளியீட்டு விழா – நாவலர் கலாசார மண்டபம் – ஆய்வுரை

146. 10.1.02 – 'புதுமை லோலன் சிறுகதைகள்' வெளியீட்டுவிழா – தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபம் – மதிப்புரை

147. 7.5.01 – யாழ்.திருமறைக்கலா மன்றம் – முத்தமிழ்விழா – மூன்றாம் நாள் – தலைமையுரை

148. 1.2.02 – சங்கானை சிவப்பிரகாச ம.வி – பரிசளிப்பு விழா – நிறுவுனர் நினைவுரை

149. 10.2.02 – லண்டன் சிவயோகம் இந்து அறக் கட்டளை நிறுவன உதவியுடன் அமைந்த அன்னையர் குடியிருப்பு இல்லங்கள் – திறப்பு விழா – கந்தரோடை – வாழ்த்துரை

150. 27.2.02 – வலிதெற்கு சனசமூக நிலையங்களின் சமாசமும், லீட்ஸ் நிறுவனமும் இணைந்து நடத்தும் சமூக அபிவிருத்திக் கருத்தரங்கு – யூனியன் கல்லூரி "எமது கிராமிய சமூகங்களின் உள ஆரோக்கியம்" – விசேட உரை

151. 3.3.02 – க.ஸ்ரீகணேசனின் நிதர்சனத்தின் புத்திரர்கள் நூல் வெளியீடு – இணுவில் மத்திய கல்லூரி – ஆய்வுரை

152. 7.3.02 – சந்நிதியான் ஆச்சிரம மண்டபம் – "அன்பினில் விளைந்த ஆரமுது" உரை

153. 9.3.02 – சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆரம்பப் பிரிவு – இல்ல மெய்வல்லுநர் போட்டி – பிரதம விருந்தினர் உரை

154. 24.3.02 – சோலைக்குயில் அவைக் காற்றுக் களத்தின் 12வது ஆண்டு விழாவும் குயில்கள் நூல் வெளியீடும் – இராமநாதன் கல்லூரி – அரங்க நிறைவுரை

155. 3.4.02 – யாழ்.விஞ்ஞான சங்கத்தின் கருத்தரங்குத் தொடர் – "நெருக்கமான உறவுகளை உருவாக்கி வளர்ப்பதில் ஏற்படும் பிரச்சினைகள்" – ஆய்வுக் கட்டுரை

156. 6.4.02 – வலி தெற்குப் பிரதேச சபை – முத்தமிழ் விழா – இராமநாதன் கல்லூரி – சிறப்பு விருந்தினர் உரை

157. 21.4.02 – சு.வே யின் பாற்காவடி சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா – நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபம் – மதிப்புரை

158. 10.6.02 – கியூடெக் 'உயிர்ப்பூட்டல்' பாசறை – மருதனார் மடம் "எமது ஆற்றல்களை இனம் கண்டு வெளிப்படுத்துவோம்" – விசேட உரை

159. 24.6.02 – மகாஜனக் கல்லூரி – நிறுவியவர் நினைவு தினம் – நினைவுப் பேருரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

160. 17.1.03 – தேசிய கலை இலக்கியப் பேரவையின் "கந்தன் கருணை" வெளியீட்டு விழா – நெல்லியடி ம.ம.வி – நூல் ஆய்வுரை

161. 1.2.03 – வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெறும் தமிழ் இலக்கியக் கருத்தரங்கு. மாலை அமர்வில் – "நாடகவளர்ச்சி" – கருத்துரை

162. 22.3.03 – ஏழாலை சைவ மகாஜன வித்தியாசாலை – சிறுவர் பூங்கா திறப்பு விழா – பிரதம விருத்தினர் உரை

163. 15.5.03 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் – கலைப்பேரரசு.ஏ.ரி.பி 75வது ஆண்டு பிறந்தநாள் ஒன்று கூடலும் அரங்கக் கலையில் ஐம்பதாண்டு நூல் வெளியீடும் – ஏ.ரி.பி இல்லம் நல்லூர் – வெளியீட்டுரை

164. 27.3.03 – மலர் சின்னையாவின் "விழித்தெழுவோம்" சிறுவர் சிறுகதை வெளியீட்டு விழா – கோப்பாய் ம.வி.ஆய்வுரை

165. 4.7.03 – சித்தன் கேணி ஸ்ரீகணேச வித்தியாசாலை – பரிசளிப்பு விழா – நிறுவியவர் நினைவுப் பேருரை

166. 13.7.03 – யாழ்.பிரம்மகுமாரிகள் ராஜயோக நிலையம் நடத்தும் கருத்தரங்கு – நாவலர் மண்டபம் – தலைமையுரை

167. 16.7.03 – வட்டு மேற்கு அ.மி.த.க பாடசாலை – மெய்வல்லுநர் போட்டி – பிரதம விருந்தினர் உரை

168. 25.7.03 – யாழ்.பல்கலைக் கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையமும் யுனெஸ்கோவும் இணைந்து நடத்தும் ஊடகவியலாளர் பயிற்சித்திட்டம் – பல்கலைக் கழகப் புவியியற்றுறை மண்டபம் – "தமிழ்ப் பத்திரிகைகளில் பெண்கள் சித்திரிப்பு"

169. 2.8.03 – மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் கருத்தரங்கு – "சமூக அபிவிருத்தியில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள்"

170. 28.10.03 – மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை பரிசளிப்பு விழா – சிறப்பு விருந்தினர் உரை

171. 6.3.04 – முகங்களும் மூடிகளும் வெளியீட்டுவிழா – இராமநாதன் கல்லூரி – நூலாசிரியர் உரை

172. 1.9.04 – திருமதி.நகுலா சிவநாதனின் "முனைப்புடன் ஏமு" நூல் வெளியீட்டு விழா – பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங்கு – வெளியீட்டுரை

173. 4.10.04 – முகமாலை சேகரின் "கொட்டுக்கடப்பு" சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா, யாழ் பல்கலைக் கழகக் கைலாசபதி அரங்கு – தலைமையுரை

174. 1.10.04 – வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவைநடத்தும் கலாசார விழா முதல்நாள் நிகழ்வு – சிறப்பு விருந்தினர் உரை

175. 30.10.04 – நூலக வாரத்தை முன்னிட்டு சிறந்த பாடசாலை நூலகங்களைக் கௌரவிக்கும் நிகழ்வு – இராமநாதன் கல்லூரி – தலைமையுரை

176. 20.2.05 – உளவளத்துணை ஆசிரியர் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு – பல்கலைக் கழகக் கைலாசபதி அரங்கு – விசேட விருத்தினர் உரை

177. 20.3.05 – சுகவாழ்வு நிலையத்தால் நடத்தப்பட்ட மகளிர் தினம் – கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி – சிறப்பு விருந்தினர் உரை

178. 6.4.05 – யாழ் விஞ்ஞான சங்கத்தின் 13வது வருடாந்த மகாநாடு; பல்கலைக்கழகம் – சிறப்புரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179. 25.4.05 – வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவன சார்பில் நடந்த பேராசிரியர் அனில் குமார் ஆன்மிக உரை; இந்து மகளிர் கல்லூரி மண்டபம் – நன்றியுரை

180. 13.5.05 – வலிகாமம் வலய உளவளத்துணை ஆசிரியர் சந்திப்பு – இராமநாதன் கல்லூரி –கருத்துரை

181. 15.6.05 – இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்திய சுகாதாரமும் சமூக உளவிலும் திட்டத்தில் பயிற்சி பெற்ற இரண்டாம் குழு ஆசிரியர் கலந்துரையாடல் நிகழ்வு – பிரதம பயிற்றுவிப்பாளர் உரை

182. 14.7.05 – அகில இலங்கை இந்து மாமன்றப் பொன்விழாவும் மாநாடும் – தேசிய கல்வியற் கல்லூரி மண்டபம் "இந்து நேர்த்திக் கடன்களும் உளவியலும்" – ஆய்வுரை

183. 27.10.05 – அராலி இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா – முதன்மை விருந்தினர் உரை

184. 26.7.05 – கொழும்புத் துறை இ.ம.வி தமிழ்த்தின விழா – சிறப்பு விருந்தினர் உரை

185. 18.9.05 – பன்னாலை சேர் கனக சபை அ.த.க பாடசாலை 150வது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் – சிறப்பு விருந்தினர் உரை

186. 16.7.05 – அகில இலங்கை இந்து மாமன்றமும் யாழ் தேசிய கல்வியியல் கல்லூரியும் இணைந்து நடத்திய இந்து மகாநாடு – "இந்து நேர்த்திக் கடன்களும் உளவியலும்" ஆய்வுக் கட்டுரை வாசிப்பு

187. 28.10.05 – சர்வதேச கல்வியகம், ஜப்பான் ஆசிரிய சங்கம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியவை இணைந்து நடத்திய ஆசிரிய உளநள உதவிப் பயிற்சி – கோப்பாய் ஆசிரிய கலாசாலை சான்றிதழ் வழங்கும் நிகழ்வு – பிரதம பயிற்றுவிப்பாளர் உரை

188. 21.2.06 – டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கமும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்திய "பாடசாலைகளில் சுகாதாரமும் உளநலமும்" நிகழ்வின் ஓராண்டு நிறைவு விழா – நாவற்குழி ம.வி – பிரதம பயிற்றுவிப்பாளர் உரை

189. 9.3.06 – அகவிழி சஞ்சிகையின் அனுசரணையுடன் வாசிப்பு விழிப்புணர்வு வாரமும் கண்காட்சியும் – இணுவில் மத்திய கல்லூரி – "படைப்பாக்க அநுபவம்" விசேட உரை

190. 11.4.06 – கவிஞர். சோ.ப வின் நினைவுச் சுவடுகள் கவிதை நூல் வெளியீடு – நாவலர் கலாசார மண்டபம் – ஆய்வுரை

191. 16.4.06 – பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம் நடத்தும் நாடகவிழா – இந்து மகளிர் கல்லூரி – கௌரவ விருந்தினர் உரை

192. 21.4.06 – "உள சமூகப் பணியில் வெளிப்பாட்டு முறைமைகள்" என்ற தலைப்பில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்திய களப்பயிற்சி – யாழ் பொது நூலகக் கேட்போர் கூடம் – தலைமையுரை

193. 29.10.06 – புலவர்.ம.பார்வதி நாதசிவத்தின் "மானம் காத்த மறக்குடி வேந்தன்" – கவிதை நூல் வெளியீட்டுவிழா – இராமநாதன் கல்லூரி மண்டபம் – வெளியீட்டுரை

194. 28.2.07 – டாக்டர்.எஸ்.சிவதாஸின் "நலமுடன்" நூல் அறிமுகவிழா – கொழும்பு தமிழ்ச் சங்கம் – விமர்சன உரை

195. 11.3.07 – கொழும்பு தமிழ்ச் சங்கக் கல்விக் குழு நடத்திய சர்வதேசப் பெண்கள் தினவிழா – மூன்றாம் அமர்வுக்கான தலைமையுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196. 24.3.07 – பவானி சிவகுமாரனின் 'மரம் வைத்தவன்' சிறுகதைத் தொகுதி வெளியீடு – கொழும்பு தமிழ்ச் சங்கம் – ஆய்வுரை

197. 28.4.07 – தாயகம் வாசகர் அநுபவ அரங்கு – கொழும்பு தமிழ்ச் சங்கம் – தலைமையுரை

198. 2.5.07 – பண்டிதர்.சி.அப்புத்துரையின் ஈழத்துத் தமிழ்ப்புலவர் வரலாறு பாகம் – I வெளியீட்டுவிழா – கொழும்பு தமிழ்ச் சங்கம் – மதிப்புரை

199. 20.5.07 – கவிஞர் துரையரின் இந்து தர்மத்தில் பத்துகள் வெளியீட்டு விழா – கொழும்பு தமிழ்ச் சங்கம் – நிறைவுரை

200. 3.6.07 – கம்பன் விழா – இராம கிருஷ்ண மண்டபம் –தொடக்கவுரை

201. 3.6.07 – வேல் அமுதனின் திருமண ஆற்றுப்படுத்துநர் அநுபவங்கள் நூல் வெளியீடு – தமிழ்ச் சங்க மண்டபம் – ஆய்வுரை

202. 23.6.07 – மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் நிறுவுநர் நினைவு தினம் – கொழும்பு தமிழ்ச் சங்கம் – நிறுவுனர் நினைவுரை

203. 27.6.07 – டொமினிக் ஜீவாவின் எண்பதாவது பிறந்ததின விழா – கொழும்பு தமிழ்ச் சங்கம் – தலைமையுரை

204. 13.7.07 – சமுத்தானாவின் உளவியல் கருத்தரங்கு – கருத்துரை

205. 10.8.07 – உளநல மேம்பாட்டினூடு கற்றல் பெறுபேற்றை உயர்த்தல் புலோலி மெ.மி.த.க பாடசாலை – கருத்தரங்கில் – பிரதம விருந்தினர் உரை

206. 18.8.07 – தென்கிழக்குப் பல்கலைக் கழகம் நடத்தும் 'உளவளத்துணை டிப்ளோமா பயிற்சி ஆரம்ப நிகழ்வு' பொரளை நகரோதய நிலையம் – தளர்வுப் பயிற்சி நெறிப்படுத்தல் உரை

207. 7.10.07 – சைவப்புலவர்.சு.செல்லத்துரையின் அரங்கப் படையல் நூல் வெளியீடு – கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபம் – ஆய்வுரை

208. 19.10.07 – கொழும்பு புனித அந்தோனியார் ஆண்கள் ம.வி கொழும்பு – 13, வாணிவிழா – சிறப்பு விருந்தினர் உரை

209. 28.10.07 – பா.மகாலிங்க சிவத்தின் ம.வே.திருஞானசம்பந்த பிள்ளை பற்றிய நூல் வெளியீடு – கொழும்பு தமிழ்ச் சங்கம் – விமர்சன உரை

210. 1.11.07 – வனாத்த முல்லை றோ.க.த.க.வித்தியாசாலை கொழும்பு – 08 – 93வது ஆண்டு விழாவும் கலைவிழாவும் – பிரதம அதிதி உரை

211. 17.11.07 – எந்தையும் தாயும் நாடகக் கலைஞர்கள் பாராட்டு விழா – கொழும்பு தமிழ்ச்சங்கம் – "உள ஆரோக்கியத்தில் நாடகம்" – சிறப்புரை

212. 1.12.07 – சிரிக்கும் கோடையில் சிலிர்க்கும் பனிநாடு – சோமகாந்தனின் நூல் வெளியீடு – கொழும்பு தமிழ்ச் சங்கம் – விமர்சன உரை

213. 2.12.07 – இலங்கைக் கலைஞர் வட்டத்தின் கலைச் சங்கமம் நிகழ்வு – கொழும்பு தமிழ்ச் சங்கம் – "இலங்கைக் கலைஞர்கள்" சிறப்புரை

214. 15.12.07 – குறமகளின், "யாழ்ப்பாண சமூகத்தில் பெண்கல்வி" நூல் அறிமுகவிழா கொழும்பு தமிழ்ச் சங்கம் – ஆய்வுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

215. 3.11.07 – மனோரஞ்சிதன் நினைவாக மனோலயம் நூல் வெளியீடு – கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபம், சிறப்புரை, "மனோலயம் பற்றி மனோரீதியாக"

216. 27.1.08 – 'கயிலையின் சிறுகதைகள்' நூல் வெளியீடு – கொழும்பு தமிழ்ச்சங்கம் – கருத்துரை

217. 3.2.08 – 'வெற்றிகரமான இலக்கை அடைதல்' – பயிற்சிப்பட்டறை – SSKC மண்டபம் – விரிவுரை

218. 9.2.08 – கவிஞர் இதயராசனின் 'மீறல்கள்' வெளியீடு – கொழும்புத் தமிழ்ச் சங்கம் – கருத்துரை

219. 24.2.08 – முரண்பாடுகளைக் கையாளுதல் ஒருநாள் பயிற்சிப்பட்டறை – SSKC விரிவுரை மண்டபம் – வெள்ளவத்தை – விரிவுரை

220. 6.3.08 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடத்திய திரு.பொ.கனகசபாபதியின் 'மனம் எங்கே போகிறது', 'திறவு கோல்' ஆகிய நூல்களின் வெளியீட்டுவிழா – கொழும்பு தமிழ்ச்சங்கம் – நன்றியுரை

221. 9.3.08 – லசாவியன் மையம், மோதரவில் நடைபெற்ற குழந்தை உளவியல் தொடர்பான கருத்தரங்கு – விரிவுரை

222. 6.4.08 – டாக்டர்.எம்.கே.முருகானந்தன் அவர்களின் மணிவிழா நிகழ்வு – பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன மண்டபம் – கொழும்பு – வாழ்த்துரை

223. 31.5.08 – இலங்கையர் கோனின் வெள்ளிப்பாதசரம் மூன்றாம் மீள்பதிப்பு அறிமுகவிழா கொழும்பு தமிழ்ச் சங்கம் – ஆய்வுரை

224. 14.6.08 – கொழும்பு தமிழ்ச்சங்க நாடகவிழா – "சிகிச்சையாகும் அரங்கு" – விசேட உரை

225. 15.6.08 – திருமதி.பவானி மகாதேவனின் மணிவிழா – வெள்ளவத்தை – வாழ்த்துரை

226. 4.9.08 – மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – முன்னாள் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு – தமிழ்ச் சங்கம் – தலைமையுரை

227. 13.9.08 – விவேகானந்த சபையின் ஏற்பாட்டில் சிவத்தமிழ்ச் செல்வி உருவப்படத் திரை நீக்கல் வைபவம் – கொழும்பு விவேகானந்த சபை மண்டபம் – நினைவுரை

228. 20.9.08 – கனக செந்தி கதாவிருது பெற்ற சிறுகதைகள் வெளியீட்டு விழா – கொழும்பு தமிழ்ச் சங்கம் – ஆய்வுரை

229. 21.9.08 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் – 'மனம் எனும் தோணி' நூல் வெளியீடு, 'புத்துணர்ச்சிப் பூங்கா' இறுவட்டு வெளியீடு – கொழும்பு தமிழ்ச் சங்கம் – ஏற்புரை

230. 29.10.08 – நல்லாயன் கன்னியர் மடம் பெண்கள் கல்லூரி – கொட்டாஞ்சேனை கலாசார நிகழ்வு – பிரதம விருந்தினர் உரை

231. 1.11.08 – மகாஜனக் கல்லூரி, பழைய மாணவர் சங்கம் – ஜெயரத்தினம் நினைவு தினம் – தமிழ்ச் சங்கம் – தலைமையுரை

232. 2.12.08 – ஊரெழு வேலனின் அறுபதில் அறுபது சக எண்பது நூல் அறிமுகவிழா தமிழ்ச் சங்கம் – கருத்துரை

233. 7.12.08 – மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் – மாதாந்தக் கருத்தரங்கு – தமிழ்ச் சங்க மண்டபம் – தலைமையுரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

234. 13.12.08 – இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய முகாமைத்துவ உதவியாளர் பயிற்சி நெறி – திணைக்கள மண்டபம் – கொழும்பு – 4 "பொதுமக்கள் உறவும் தொடர்பாடலும்" – விரிவுரை

235. 22.12.08 – கிளாநெற் சேவை வழங்குநர் நடத்திய 3ம் ஆண்டு நிறைவு விழா எல்பின்ஸ்ரன் தியேட்டர் – மருதானை – கௌரவ அதிதி உரை

236. 28.12.08 – பண்டிதர். சி.அப்புத்துரை அவர்களின் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஈழத்துத் தமிழ்ப் புலவர் வரலாறு நூல் அறிமுகவிழா – கொழும்பு தமிழ்ச் சங்கம் – நன்றியுரை

237. 6.1.09 – "சந்தோஷமும் அடிப்படை உளவளத்துணையும்" கருத்தரங்கு – ஜீனியஸ் வைத்திய சாலை – அக்கரைப்பற்று கருத்துரை

238. 5.1.09 – "நெருக்கீட்டை எதிர் கொள்ளல்" – தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை – விரிவுரை

239. 14.1.09 – மகவம் சந்திப்பும், பரத நாட்டியம் வினாவிடைத் தொகுதி நூல் அறிமுகமும் – தமிழ்ச் சங்கம் – அறிமுக உரை

240. 17.2.09 – வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு நடத்தும் நூல்கள் அறிமுகவிழா – தமிழ்ச் சங்கம் – விமர்சன உரை

241. 21.2.09 – இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் அன்ரன் செல்வகுமாரின் "நசரேயர் இயேசு ஒரு காவிய நாயகன்" நூல் வெளியீடு – சென்லோறன்ஸ் தேவாலய மண்டபம் வெள்ளவத்தை – ஆய்வுரை

242. 5.3.09 – நல்லாயன் பெண்கள் ம.வி – கொட்டாஞ்சேனை – மாணவர் தலைவிகள் சின்னஞ் சூட்டு வைபவம் – பிரதம விருந்தினர் உரை

243. 15.3.09 – மகாஜனா பழைய மாணவர் சங்கம் நடத்திய 'குழந்தைக் கவிதைகள்' நூல் வெளியீட்டுவிழா – அறிமுக உரை

244. 7.4.09 – பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி – மாணவர் தலைவர்களுக்கான விசேட கருத்தரங்கு – விரிவுரை

245. 11.4.09 – தகவமும் மல்லிகைப் பந்தலும் இணைந்து நடத்திய பரனின், "நினைவழியா நாட்கள்" நூல் அறிமுகம் தமிழ்ச்சங்கம் – கருத்துரை

246. 26.4.09 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் நடத்திய கி.மகேந்திரராஜாவின் அகவை அறுபது நிறைவு நிகழ்வும் சீர்மியச் சிறுகதைகள் நூல் வெளியீடும் – கொழும்பு தமிழ்ச் சங்கம் – நன்றியுரை

247. 16.5.09 – பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி – தமிழ் இலக்கிய மன்றக் கலைவிழா – சிறப்பு அதிதி உரை

248. 23.5.09 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடத்திய அநு.வை.நாகராஜனின் அகவை எழுபத்தைந்து நிறைவு நிகழ்வும் நூல் வெளியீடும் – தமிழ்ச் சங்கம் – வரவேற்புரை

249. 3.7.09 – கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் 'படித்ததும் பிடித்ததும்' நிகழ்வு. டேவிட் டி.பேன்ஸின் "நன்றாய் இருப்பதாய் உணர்தல்" – விசேட உரை

250. 12.7.09 – குமரன் புத்தக இல்லமும் ஞானம் சஞ்சிகையும் இணைந்து நடத்திய கலாநிதி.நா.சுப்பிரமணியனின் "ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்" நூல் அறிமுகம் தமிழ்ச் சங்கம் – விமர்சன உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251. 18.7.09 – சிவத்தமிழ்ச் செல்வி முதலாமாண்டு நினைவு நிகழ்வும் நூல் அறிமுகமும் தமிழ்ச் சங்கம் – விசேட உரை

252. 10.8.09 – ஆனந்தியின் 'துருவ சங்காரம்' நூல் வெளியீட்டு விழா – தமிழ்ச் சங்கம் ஆய்வுரை

253. 29.8.09 – பண்டிதர்.ந.கடம் பேஸ்வரனின் "தீந்தேன்" நூல் மற்றும் இறுவட்டு வெளியீடு – தமிழ்ச் சங்கம் – நயப்புரை

254. 23.9.09 – கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் அறிவோர் ஒன்று கூடல் 'பெற்றோரியம்' சிறப்புரை

255. 4.10.09 – இராஜேஸ்வரி ஜெகானந்த குருவின் "இந்துமதம் விரதங்கள் விழாக்கள்" நூல் வெளியீட்டுவிழா – தமிழ்ச் சங்கம் – சிறப்புரை

256. 25.10.09 – கலாநிதி.நா.தணிகாசலபிள்ளையின் பணிநயப்பு விழாவும் நூல்கள் வெளியீட்டு விழாவும் – தமிழ்ச் சங்கம் – அறிமுக உரை

257. 6.11.09 – வவுனியா விபுலானந்தக் கல்லூரியின் 'விபுலம்' அரங்கியற் கலைக் கழகம் வெளியிட்ட 'பள்ளிக்கூடம்' குறும்பட வெளியீடு – தமிழ்ச் சங்க மண்டபம் நயவுரை

258. 13.11.09 – தர்காநகர் தேசிய கல்வியியல் கல்லூரி 'ஏணி' சஞ்சிகை வெளியீடும் நாடக விழாவும் – பிரதம அதிதி உரை

259. 29.11.09 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடத்திய விழிசைச்சிவம் 10ம் ஆண்டு நினைவுதின மலர் வெளியீடும், மாற்று வலுவுடையோர் தினமும் – தமிழ்ச் சங்கம் – மலராசிரியர் உரை

260. 7.2.10 – தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடத்திய மேல் மாகாண மாணவருக்கிடையேயான சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பும், சிறுகதைப்பட்டறையும். தமிழ்ச் சங்கம் – அறிமுக உரை

261. 14.2.10 – வெள்ளவத்தை இந்து சமய கலாசார வளர்ச்சிப் பணிமன்றத்தின் அனுசரணையுடன் "மூன்று நாடகங்கள்" அறிமுகவிழா தமிழ்ச் சங்கம் – வாழ்த்துரை

262. 20.2.10 – சிவ.மகாலிங்கம் எழுதிய 'ஞானதீபம்' நூல் அறிமுகவிழா, தமிழ்ச்சங்கம் – அறிமுக உரை

263. 28.3.10 – புலோலியூர்.ஆ.இரத்தின வேலோன் எழுதிய அண்மைக்கால அறுவடைகள் II நூல் வெளியீடு – பெண்கள் கல்வி ஆய்வு நிறுவன மண்டபம் – தலைமையுரை

264. 4.4.10 – டாக்டர்.எஸ்.சிவதாஸ் தொகுத்த "வானைக் காட்டுங்கள் சிறகுவிரிக்க" கவிதைத் தொகுதி அறிமுகவிழா – தமிழ்ச்சங்கம் – கருத்துரை

265. 23.5.10 – 'உள்ளம் பெருங்கோயில்' அறிமுகவிழா – இராமநாதன் கல்லூரி மருதனார் மடம் – ஏற்புரை

266. 20.6.10 – ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்க ஏற்பாட்டில் ஆசிரியருக்கான கருத்தரங்கு – பம்பலப்பிட்டி இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி – "மாணவர் அடைவுமட்டமும் உளநலமும்" சிறப்புரை

267. 28.8.10 – 'தகவம்' நடத்திய 'சிறுகதை'ப் பரிசளிப்பு விழா – தமிழ்ச் சங்கம் – சிறப்புரை

268. 12.9.10 – இந்து சமய கலை கலாசார வளர்ச்சிப் பணிமன்றம் நடத்தும் "இனிய மாலைப் பொழுது" – வாழ்த்துரை

269. 19.9.10 – கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசனின் ஈழத்து இலக்கிய உலகு விமர்சனக் கட்டுரைகள் – அறிமுக நிகழ்வு – தமிழ்ச் சங்கம் – விமர்சன உரை

(அட்டவணை முழுமைபெறவில்லை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org